
கலைஞரின்
கடிதங்கள்



16

31.05.1986 - முதல்
06.03.1987 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 16

31.05.1986 - 06.03.1987

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம் & அறிவாலயம்
சென்னை-18

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**

CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்

© உரிமை :

பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

42223

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE

© RIGHTS :

PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
தகவல் தொழில்நுட்ப அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”
“படமும் பாடமும்”

"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1413. உண்மைக்கு என்றும் உண்டாம் உயர்வு!	31-05-1986	23
1414. திசை திருப்பும் படலம் - 1	18-06-1986	29
1415. திசை திருப்பும் படலம் - 2	19-06-1986	34
1416. திசை திருப்பும் படலம் - 3	20-06-1986	40
1417. திசை திருப்பும் படலம் - 4	21-06-1986	45
1418. ஈரோடு புறப்பட இப்போதே தயாராகுக!	24-06-1986	51
1419. கொடிப்படை அசைய கொள்கைக் குன்றே! வா!	28-06-1986	55
1420. ஜனதா கட்சியின் நல்ல நண்பர்களுக்காக!	16-07-1986	59
1421. மக்கள் பொறுமை இழக்கத் தொடங்கிவிட்டார்கள்!	17-07-1986	65
1422. மான்குட்டிகளை விழுங்க வரும் மலைப்பாம்பு!	18-07-1986	71
1423. இந்து - எக்ஸ்பிரஸ் ஏடுகளின் விஷமம்!	19-07-1986	77
1424. வறட்சி; கடுமையாகிறது! கவலை தருகிறது!	20-07-1986	81

1425. குற்றக் கூண்டில் நிற்பது யார்?	21-07-1986	85
1426. கோமாளி ராஜ்யத்தில் எல்லாமே குழப்பம் தான்!	22-07-1986	94
1427. ஜூலை 27 - தலைமை நிர்வாகக்குழு கூடுகிறது!	24-07-1986	102
1428. தஞ்சையே பாலைவனமாகிறதென்றால்...?	26-07-1986	106
1429. உள்ளாட்சிகளின் உரிமைகள் பறிப்பு!	27-07-1986	110
1430. சிட்னஸ் நதியில் ஒரு சிங்கார பவனி!	29-07-1986	116
1431. ஆகஸ்டு 6, 7, 8 - அறப்போர் முதற்கட்டம்!	30-07-1986	120
1432. மதுரை மாநகருக்கு வருகிறேன்!	31-07-1986	124
1433. ஏன் சிரித்தனர்? எதற்குச் சிரித்தனர்?	01-08-1986	129
1434. அறவழியில் ஆகஸ்டு 6, 7, 8 நாட்கள்!	02-08-1986	134
1435. கடமையைச் செய்திடுக கண்மணியே!	05-08-1986	138
1436. எதிர்க்கட்சிகளுக்குரிய ஜனநாயகக் கடமை!	06-08-1986	143
1437. சிறைக் கோட்டங்கள் நிரம்பி வழியட்டும்!	07-08-1986	147
1438. சென்னை - மதுரை - கோவைப் பேரணிகள்!	08-08-1986	149
1439. விகடன் தலையங்கமும் - ஒரு வேண்டுகோளும்!	09-08-1986	152

1440. களத்தில் நிற்கும் உன்னைக் காண வருகிறேன்!	13-08-1986	159
1441. கண்ணீர் விட்டு வளர்த்த பயிர் கருகுவதோ?	15-08-1986	164
1442. உன்னிடம் சினங்கொள்ளும் உரிமை எனக்கு இல்லையா?	17-08-1986	168
1443. வெற்றிப் பயிர் விளைத்திட முடியும்!	22-08-1986	172
1444. முப்பெரு விழாக்கள் - முரசுகள் ஒலிக்கட்டும்!	05-09-1986	175
1445. நந்தவனம்; நாசவனமாவது - யாராலே?	19-09-1986	180
1446. நமது குருதி கொண்டே எழுதிடுவோம்; எழுக இன்றே!	24-09-1986	184
1447. கொள்ளையோ கொள்ளை; கோடி கோடியாய் கொள்ளை!	02-10-1986	189
1448. அந்நாளே இந்நாள்; இந்நாளே அந்நாள்!	05-10-1986	193
1449. இருப்பது ஒரு உயிர்; அது போகப் போவதும் ஒரு முறை!	07-10-1986	200
1450. திரிசூலம் பேச்சும்; தெளிவான விபரங்களும்!	08-10-1986	208
1451. அண்ணா வழி! அரிவாள் தூக்கும் வழியல்ல!	12-10-1986	214
1452. மாமியார் உடைத்தால் மண் சட்டி; மருமகள் உடைத்தால்?...	13-10-1986	219
1453. காவற்பெண்டு போல் களிப்புறும் கழகம்!	18-10-1986	226
1454. இந்தியா என்றால் என்ன?	20-10-1986	231

1455. அடியேன் அழைக்கின்றேன் இன்று!	21-10-1986	234
1456. மறக்க முடியாத மணிவாசகமன்றோ?	22-10-1986	240
1457. மேற்கு வங்க முதல்வரும் - தமிழக முதல்வரும்!	23-10-1986	246
1458. இதற்கென்ன விளக்கம் அளிப்பார் எம்.ஜி.ஆர்.!	24-10-1986	249
1459. தமிழ் வாழும் காலமெல்லாம் நமது பெயரும் வாழ...!	25-10-1986	253
1460. வேறு வழியில்லையே! என்ன செய்வது?	27-10-1986	256
1461. ஆணையிட்டு ஆர்த்தெழுந்திடுவோம்!	28-10-1986	261
1462. இனமானப் போருக்கு எழுக! எழுகவே!	01-11-1986	267
1463. புறநானூற்றுச் சரிதம் படைக்க புறப்படுக கோவைக்கு!	03-11-1986	270
1464. சங்கம் முழங்க சந்திப்போம் கோவையில்!	04-11-1986	274
1465. இரு நாட்கள்; வாழ்வின் திருநாட்கள்!	05-11-1986	280
1466. காஷ்மீர் கதையை கவனப்படுத்துகிறேன்!	06-11-1986	284
1467. தமிழக இ.காங்கிரஸ் மிரட்டுகிறது!	12-11-1986	289
1468. ஊக்கமூட்டும் அறப்போர்ப் படைக்கலன்!	13-11-1986	295

1469. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!	16-11-1986	301
1470. வாழ்த்தும் - ஒரு முக்கிய விளக்கமும்!	17-11-1986	309
1471. படங்கள்! அவை வழங்கும் பாடங்கள்!	20-11-1986	314
1472. என் கண்களில் ஒத்திக் கொள்கிறேன்!	22-11-1986	320
1473. அண்ணன், நம்மை வளர்த்த விதம் எண்ணிடுவோம்!	23-11-1986	326
1474. சோவியத் கவிதைகள் கூறும் சுவைமிகு பயணம்!	24-11-1986	330
1475. வெற்றிக் கட்டத்தை எட்டும் வரையில் விடாது போரிடுவோம்!	30-11-1986	334
1476. இரண்டு பாண்டியர்கள் - இரண்டு தீர்ப்புகள்!	04-12-1986	342
1477. நீயிருக்கிறாய்; உன் நெஞ்சில் நானிருக்கிறேன்; என் நெஞ்சில் அண்ணன் இருக்கிறார் - என்ற உறுதியுடன் தான் களம் செல்கிறேன்!	08-12-1986	346
1478. கல்லறைகளில் கண்ணீர் மலர்கள்!	10-02-1987	349
1479. அழைப்பு ஏற்றிடுக! அணிவகுத்திட ஆவன செய்திடுக!	13-02-1987	353
1480. நாடு முழுதும் நடக்கட்டும் பேரணிகள்!	15-02-1987	360
1481. தமிழ்த்தாயின் போர்க்கோலம்!	16-02-1987	364

1482. ஒடிந்த மன நிலையில் வரைந்திடும் மடலிது!	25-02-1987	367
1483. துயர் துடைக்கத் துணை நிற்போம்; வாரீர்!	27-02-1987	371
1484. சிங்கள ஜெயவர்த்தனே சிரித்து மகிழ்வார்!	28-02-1987	375
1485. கவர்னர் உரை; ஒரு கண்ணோட்டம் 1 குன்றம் சிறுத்துக் குப்பை மேடானது!	01-03-1987	379
1486. கவர்னர் உரை; ஒரு கண்ணோட்டம் 2 மயங்க வைக்கும் மாயாஜால வித்தை!	02-03-1987	384
1487. எத்தனை பட்ஜெட் வந்து என்ன பயன்?	03-03-1987	388
1488. பொறுப்போடு கடமையாற்றும் பொன்னான நேரம் குறையலாமோ?	04-03-1987	393
1489. மத உணர்வும்; மாநில உரிமை உணர்வும்!	06-03-1987	396

1416. உண்மைக்கு என்றும் உண்டாம் உயர்வு!

உடன்பிறப்பே,

ஒரு வாரத்துக்குமுன்பு, இலங்கை யாழ்ப்பாணத்தில் சிங்கள ராணுவத்தின் முப்படைத் தாக்குதலால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்றும், தமிழ்ப்பகுதிகளில் இருந்து மக்கள் காடுகளை நோக்கி ஓடி ஒளிகிறார்கள் என்றும் செய்திகள் வரத் தொடங்கியவுடன் - தமிழ் ஈழத்துத் தலைவர்களும், போராளிகளும் என்னைச் சந்தித்து நிலைமைகளை எடுத்து விளக்கியதைத் தொடர்ந்து, கடந்த 24.5.86 அன்று விடுத்த அறிக்கையில் மே 31, சனிக்கிழமையன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் தமிழகத்தில் முழு அடைப்பு நடைபெறுமென்றும் - கறுப்புச் சின்னம் அணிதல் - கண்டன ஊர்வலம் நடத்துதல் - பொதுக்கூட்டம் நடத்துதல் - ஆகியவற்றின் மூலமும் - முழுஅடைப்பு மூலமும், இலங்கைத் தமிழரைப் பாதுகாப்பதில் மெத்தனம் காட்டுகிற இந்திய அரசுக்குத் தமிழ்நாட்டு மக்களின் உணர்வை வெளிப்படுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அது குறித்து ஆளுங்கட்சி ஏடுகள், அதன் ஆதரவு ஏடுகள், நாம் நடத்தும் முழு அடைப்பு ஒரு நாடகமென்றும் - உள்ளூர் அரிப்பை சொறிந்து விடும் செயல் என்றும் - வக்கணை பேசின!

மே 31, அறிவிக்கப்பட்டது ஏன்? என்பது குறித்து எவ்வளவு பணிவோடும் அன்போடும் என்னால் விளக்க முடியுமோ அவ்வளவு விளக்கமாக எழுதினேன்! பேசினேன்! வேண்டுகோள் விடுத்தேன்!

உண்மைக்கு என்றும் உண்டாம் உயர்வு என்பதற்கேற்ப - இன்று மே 31 இல் தமிழ்நாடு முழுதும் முழு அடைப்பு!

கடைகள் இல்லை.

பேருந்துகள் ஓடமாட்டா.

ரயில்களும் ரத்து.

விமானங்களும் பறக்காது.

அதுவும், ஒரு அடையாளபூர்வமாக காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் என்று நமது முதல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு!

அதனால்தான் முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், நாங்கள் நடத்தும் முழுஅடைப்பின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொண்டு காலதாமதமாகவாவது இப்படியொரு முடிவை அறிவிப்பதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன் என ஏடுகளுக்கு அறிக்கை விடுத்துள்ளேன்.

அத்துடன், 24.5.86 இல் விடுத்த வேண்டுகோளை உடனடியாக உணர்வுபூர்வமாக வரவேற்று, முழுஅடைப்புக்கு ஆதரவு தந்து, கலந்து கொள்ளவும் முன்வந்த திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக், பாரதீய ஜனதா கட்சி, லோக்தளம், தமிழ்நாடு குடியரசு கட்சி, இந்துஸ்தான் தேசிய முன்னணி, ஆகிய கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு - ஆங்காங்கு இன்றைய முழுஅடைப்புக்கான ஏற்பாடுகளைக் கவனித்து, எத்தகைய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படினும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்த உடன்பிறப்புகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

முதல்வரின் அனைத்துக்கட்சிக் கூட்டம் 29.5.86 இல் நடந்து முடிந்த பிறகு - முடிவுகளை விளக்கி அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் நிருபர்களிடம் பேசியிருக்கிறார்.

அந்த நிருபர் பேட்டியில் பண்ருட்டி ராமச்சந்திரனிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வியும், அதற்கு அவர் அளித்துள்ள பதிலும் அவரது மேதாவிலாசத்துக்கு ஒரு சான்றாகவே அமைந்துள்ளது.

நிருபர் கேள்வி :- இந்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்தர் என்ற நிலையில் இருந்து மாற வேண்டும் எனத் தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்து தெரிவித்துள்ளாரே! அது பற்றி உங்கள் முடிவு என்ன?

அமைச்சர் பதில் :- இலங்கை அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அதுலத் முதலி, எப்படியாவது இந்தியாவை இந்தப் பிரச்சினையில் மத்தியஸ்த நிலையில் இருந்து மாற்ற வேண்டும் என்றுதான் யோசனைகள் சொல்லுகிறார். ஆகவே தி.மு.க. தலைவர் சொல்வது போல செய்வது இலங்கைத் தமிழர் நலனுக்கு ஏற்றது அல்ல!

உடன்பிறப்பே! ஒரு திருமண நிகழ்ச்சியில் பண்ருட்டி ராமச்சந்திரனை வைத்துக் கொண்டு நமது ஆற்காடு வீராசாமி, அ.தி.மு.க. அமைச்சரவையிலேயே இவர் ஒருவர்தான் விபரம் தெரிந்தவர் என்று சொன்னாலும் சொன்னார். உடனே வந்து விட்டது ஆபத்து!

என்னைப்பார்த்தா விபரம் தெரிந்தவர் என விளம்பினாய்? என்று கேட்காமல் கேட்கிறார் பண்ருட்டி ராமச்சந்திரன்!

முதலில் அந்த விபரமான அமைச்சர் மதுரை மாநாட்டு தீர்மானத்து வாசகத்தைப் படித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா இப்போது காட்டி வரும் அசட்டையான போக்கைக் கைவிட வேண்டும். இந்தப் பிரச்சினையை இந்தியா, ஒரு மத்தியஸ்த நாடு என்ற முறையில் அணுக வேண்டாமென்றும், இலங்கைத் தமிழர்கள் தலைவிதியுடன் நெருக்கமாகவும், ஆழமாகவும் தொடர்பு கொண்ட நாடு என்ற முறையில் அணுக வேண்டு மென்றும் .....

உடன்பிறப்பே! இப்படிதான் தொடருகிறது மதுரை டெசோ மாநாட்டுத் தீர்மானம்!

இதைப்புரிந்து கொள்ளாமல் அமைச்சர், நம்மை அதுலத் முதலியுடன் ஒப்பிட்டுவிட்டார். பாவம்!

எல்லாம் வீராசாமியால் வந்த வினை! நான் யார் என்பது காலப்போக்கில் தெரியும் என்று அமைச்சர் அன்றைய திருமண விழாவில் தனது அறிவாற்றல் குறித்து முரசறைந்தார் அல்லவா? மறுநாளே தெரிந்துவிட்டது! இவர் யார் என்று - இப்படியொரு பதிலை அளித்ததின் மூலம்!

இந்திய அரசே! இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நீ மூன்றாவது ஆளாக நின்று மத்தியஸ்தம் செய்து கொண்டிருப்பது

சரியல்ல! இதை இந்தியாவின் பிரச்சினையாகவே எடுத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையில் தொடர்பு கொண்ட நாடு என்ற முறையில் அணுக வேண்டும் என்பது இலங்கைத் தமிழருக்கு வலுவும் நலனும் சேர்க்கிற கருத்தே தவிர, இதைப்போய் அதுலத் முதலியின் கருத்துடன் எப்படி ஒப்பிடுவது?

இதோ கல்கி ஏடு தலையங்கத்தில் அழகாகக் குறிப்பிட்டுள்ளதே:-

மத்திய அரசு, தன்னை யாரோ மூன்றாவது மனிதர் போலவும் - யாரோ இரு தரப்பினருக்கிடையே உள்ள பூசலைத் தீர்த்து வைக்க மத்தியஸ்தம் செய்வது போலவும் நடந்து கொள்கிற போக்கை இனியேனும் கைவிடட்டும்!

ஜூன் முதல் தேதியிட்ட கல்கி இதழ் தலையங்கத்தில் உள்ள ஆழமான வாசகம் இது!

அவ்வளவு ஏன்? பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களுக்கு நெருக்கமாக உள்ள மக்கள்குரல் நாளேட்டில்கூட 18.5.86 அன்று எழுதப்பட்டுள்ள ஒரு கட்டுரையில்,

மகளே உன் சமர்த்து, என்று புதுடெல்லி இதுகாறும் செயல்பட்டது. இப்போது நிலைமை மாறிவிட்டது. மத்தியஸ்தம் செய்வதோடு நில்லாமல் நியாயத்தைச் சொல்லவும், அதை அமல் நடத்தவும் ஒரு கட்டாயம் ராஜீவ் காந்திக்கு ஏற்பட்டாகிவிட்டது

என்று திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் அமைச்சரோ, மத்தியஸ்தர் நிலைகூடாது என்று கூறுவது அதுலத் முதலியின் கருத்து - என்று நிருபர் பேட்டியில் பிளந்து கட்டுகிறார்.

மதுரையில் அகில இந்தியத் தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் -

கல்கியின் தலையங்கம் - மக்கள்குரலின் கட்டுரை - இவை எல்லாமே அதுலத் முதலியின் கருத்தைப் போன்றதுதான் என அமைச்சர் வாதிடுகிறார் போலும்!

அந்தத் திருமண விழா வாழ்த்துரையில், ஆற்காடு வீராசாமிக்கு பதில் அளிப்பது போல் அமைச்சர் பேசும்போது, படிப்பு வேறு - அறிவு வேறு, படிப்புக்கும் அறிவுக்கும் அவ்வளவு சம்பந்தம் இருக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதை அவரே, 29.5.86 பிற்பகலில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் மூலம் நிரூபித்திருக்கிறார் என்றே எண்ணிட வேண்டியுள்ளது.

உடன்பிறப்பே,

தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முதல்வர் கூட்டும் அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்கு வராததையும் - இந்தக் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தனியாகப் போராட்டம் - நடத்துவதையும் அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டம் குறை கூறியுள்ளதாக ஏடுகளில் படித்தேன்.

டெசோ இயக்கம், தனித்தமிழ் ஈழம் என்ற குறிக்கோளுக்கு ஆதரவு தருகிற இயக்கமெனினும் - அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தித் திணித்து ஏற்றுக் கொள்ளச் சொல்வதில்லை!

ஆனால், எம்.ஜி.ஆருக்கு தனித்தமிழ் ஈழம் என்பது ஏற்புடைய கொள்கை அல்ல! அவரோ, அந்த அவரது கருத்தை அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் வலியுறுத்தும்போது தமிழ் ஈழம் பற்றி வேண்டுமானால் பேசாமல் இருக்கலாமே தவிர, அந்தக்கூட்டத்தில் தமிழ் ஈழம் என்பதற்கு எதிரான கருத்தை எங்களால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

கடந்த 3.5.86 அன்று நடந்த முதல்வரின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ஒன்றுபட்ட இலங்கை - எனமுடிவு எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட நடவடிக்கை அறிக்கை, தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தனி ஈழம் பெற வேண்டும் என்ற கருத்து ஜெயவர்த்தனாவின் கரத்தை பலப்படுத்து மேயன்றி பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது என்றும் அந்த கடந்த கூட்டநடவடிக்கை அறிக்கை கூறுகிறது.

தமிழ் ஈழநாடு கொள்கைக்கு சாதகமாகப் பேச முடியாவிட்டாலும், பாதகமாகவாவது பேசாமலிருக்கிற - முடிவு எடுக்காமலிருக்கிற - ஒரு இடத்துக்குத் தான் நாம் செல்ல முடியுமே தவிர,

தமிழ் ஈழம் என்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்து கூறப்படும் இடத்துக்கு நாமும்சென்று - எப்படி ஒப்புதல் வழங்க முடியும்?

உடன்பிறப்பே, இது குறித்து விளக்கமாக நேற்றைய 30.5.86 - மதுரை மாநாட்டுத் தீர்மானம் - ஓர் எடுத்துக்காட்டு என்ற தலைப்புள்ள கடிதத்தில் எழுதியுள்ளேன். நீயும் மீண்டும் படித்துப் பார்! படிக்காமல் இருப்போர்க்கும் படித்துக்காட்டு!

இறுதியாக எனது வேண்டுகோள் - இன்றைய முழு அடைப்பு - கண்டன ஊர்வலம் - பொதுக்கூட்டம் - அனைத்தும் அமைதியாக நடைபெற, வெற்றிகரமாக நடைபெற, முன்னால் நின்று பணியாற்று! உண்மைக்கு என்றும் உண்டாம் உயர்வு!

அன்புடன்

மு.க.

31-05-1986

1417. திசை திருப்பும் படலம் - 1

உடன்பிறப்பே,

ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கடுமையாக சர்ச்சை நடந்து கொண்டிருக்கும்போது அந்த சர்ச்சைக்குக் காரணமாயிருக்கிற நபர், தன்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டு - அதனால் தனக்கு வர இருக்கும் சரிவு - இவற்றிலிருந்து மீள்வதற்காக - சர்ச்சை நடக்கும் அந்த இடத்திலிருந்தவாறு அய்யோ! பாம்பு, பாம்பு! என்று கூச்சலிடுவான்! விவாதிக்கப்படும் பிரச்சினையை விட்டுவிட்டுக் கூடியிருப்போர் எங்கே? எங்கே? என்று அலறித்துடித்து எழுந்திடுவர்! சிதறிடுவர்! சிலர், கம்புகள் கழிகளைத் தூக்கிடுவர்! அதோ! அங்கே! அங்கே! என்று ஏதோ பொந்துகளை - சந்துகளை - மரத்தை - மாடத்தை - அந்த எத்தன் காட்டுவான்! உண்மையில் பாம்பு வந்தால் தானே!

ஏதோ அந்த நேரத்திற்கு - திசை திருப்பும் முயற்சியில் எத்தன் வெற்றி பெற்று, தன்னைப்பற்றிய கடும் சர்ச்சை, ஒத்திப்போடப்பட்டு தற்காலிக நிம்மதி பெற்றுக் கொள்வான்!

ஒருமுறை பாம்பு! என பயமுறுத்தி திசை திருப்புவான்! அடுத்தமுறை ஆகா! தேள்கொட்டி விட்டது, கடுக்கிறது! எனத்துள்ளிக் குதித்துத் திசை திருப்புவான்! இன்னொரு முறை தீ! தீ! எனக்கதறி, முன்கூட்டி அவனே ஒரு வைக்கோற் போரில் வைத்த தீயைக் காட்டித் திசை திருப்புவான்!

அந்தத் திறமைசாலிக்குச் சற்றும் குறைந்தவரல்லர் நமது எம்.ஜி.ஆர்., என்பது மட்டுமல்ல - அந்தத் திறமைசாலிகளைப்போல ஆயிரம் திறமைசாலிகளைத் திணற அடிக்கக் கூடிய அற்புத திசை திருப்பும் ஜாலங்களைக் கற்றவருங்கூட!

கடந்த மூன்று நான்கு மாதங்களில் அவர் கையாண்ட திசைதிருப்பும் காரியங்களைச் சற்றுக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் கூறுவதன் உண்மை உனக்குத் தெளிவாகவே புரியும்!

கட்சிச் சின்னங்கள் வழங்கப்பட்டு, மக்கள் சட்டசபைத் தேர்தல் போல நேரடியாகவே வாக்களித்து நகராட்சித் தலைவர்களை, ஒன்றியத் தலைவர்களை, பேரூராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தி.மு.கழகமும், தோழமைக் கட்சிகளும் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றவுடன் அ.தி.மு.க.வுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி குறித்து விவாதிக்க அ.தி.மு.க. பொதுக்குழு என்ற ஒன்று சென்னையில் கூட்டப்பட்டது.

அந்தப் பொதுக்குழு குறித்து தினமணி இதழ், முதல் பக்கச் செய்தியாக கட்சி, ஆட்சி மட்டங்களில் விரைவில் மாற்றம் செய்யப் பொதுக்குழு யோசனை என்று கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருந்தது.

தினமணி 30.3.86 சென்னை இதழில் வெளிவந்த முதல்பக்கத்து மற்றொரு செய்தி, பின்வருமாறு:-

அமைச்சர்களைத் தவிர செயற்குழு அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு படிவம் பாரம் கொடுக்கப்படும். அந்தப் படிவத்தைச் செயற்குழு அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்டு, அவர்களின் பெயர், முழுவிலாசம், மாவட்டம் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து, அதில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குத் தெளிவாகப் பதில் எழுத வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள எந்த ஒரு அமைச்சர் மீதாவது குற்றம், குறை காண்கிறீர்களா, புகார் உள்ளதா, எப்படிப்பட்ட புகார் அது? அந்த அமைச்சருடைய பணி அல்லது சாதனை குறித்துக் குறை ஏதும் காண்கிறீர்களா? அந்தக் குறை அல்லது சாதனையின் தன்மை அல்லது கடுமை என்ன என்பதை எழுதி கையெழுத்திட வேண்டும். இதற்காக ஒரு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. படிவங்களைச் செயற்குழு அங்கத்தினர்கள் பூர்த்தி செய்து அந்தப் பெட்டியில் போட வேண்டும். அந்தப் பெட்டி பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டிருக்கும். முதலமைச்சருடைய நேரடிப் பார்வை, கண்காணிப்பில் அந்தப் பெட்டி இருக்கும். எம்.ஜி.ஆரே அப்பெட்டியைத் திறந்து, ஒவ்வொரு படிவமாக எடுத்து சோதனை செய்து அமைச்சர்களுடைய பணி, சாதனை குறித்துச் செயற்குழு அங்கத்தினர்களின் கருத்து அறிந்து முடிவு செய்வார் என்று செயற்குழுக் கூட்ட முடிவில் கழகத்தின் பொதுச்செயலாளர் எஸ். ராகவானந்தம் அறிவித்தார்.

அதன்படி ஒவ்வொரு செயற்குழு அங்கத்தினருக்கும் படிவம் கொடுக்கப்பட்டது. அமைச்சர்களின் பணி, சாதனை பற்றியதாக இது இருந்ததால் அமைச்சர்களைத் தவிர, கூட்டத்தில் கலந்து கொண்ட எல்லா செயற்குழு அங்கத்தினர்களுக்கும் இப்படிவம் வழங்கப்பட்டது.

அமைச்சரவைச் சகாக்களுடைய பணி, திறமை, சாதனை குறித்தும் அவர்கள் மீது குறிப்பிட்ட புகார் அல்லது குற்றச்சாட்டு உள்ளதா என்பதை நன்கு தெரிந்து கொள்வதற்கு இந்த கருத்தறியும் வாக்கெடுப்பை செயற்குழுக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். நடத்தினார்.

இதுதான் தினமணியிலும் மற்ற ஏடுகளிலும் வந்த செய்தியாகும்!

இப்படியொரு புகார்பெட்டி வைத்து வாக்கெடுப்பு நடந்த பிறகு - எம்.ஜி.ஆரின் ஆணையை சிரமேல் தாங்கி நடமாடும் பல்கலைக் கழகமாம் நாவலர் நெடுஞ்செழியனார் அவர்கள், பதினொரு அமைச்சர்களும், அமைச்சர்கள் மட்டுமின்றி சர்ச்சைக்கிடமான நிலையில் உள்ள சில மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் ஆகியவர்களை மாற்றி அமைப்பதென்றும், எம்.ஜி.ஆர். முடிவு செய்துள்ளதாக பொதுக்குழுவில் அறிவித்ததாக 31.3.86 சென்னை தினமணி முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது.

புகார் பட்டியல் எண்ணி முடிக்கப்பட்டு பதினோருபேரை அமைச்சர் பதவியிலிருந்து கட்சிப் பணிக்கு அனுப்புவது என அறிவிக்கப்பட்ட அதே நாளில் சென்னை தண்டையார்பேட்டையில் எம்.ஜி.ஆர். நடத்திய எட்டுநிமிட மலைப்பிரசங்கத்தில்? ஊழல் செய்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் எவ்வளவு பெரிய பதவி வகித்தாலும் அவர்களைத் தூக்கி எறிய நான் தயங்க மாட்டேன் என்று பிரகடனம் செய்ததாக ஏடுகள் பிரமாண்டமாக செய்திகள் வெளியிட்டன.

அந்தப் பொதுக்கூட்டப் பேச்சு பற்றியும் பொதுக்குழு பற்றியும் - அ.தி.மு.க. ஆதரவு ஏடான தினத்தந்தி 31.3.86 சென்னைப் பதிப்பில் முதல் பக்கத்து செய்தி விமர்சனத்தில்,

அமைச்சர்கள் மீது புகார்கள் இருந்தால், அதைப்பற்றி ஒரு பாரத்தில் எழுதி, தன் முன் வைக்கப்பட்ட பெட்டியில் போடும்படி, பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். அறிவித்தது தெரிந்ததே.

அதன்படி பலர் எழுதிப் போட்டார்கள்!

இந்த மனுக்களை இன்னும் ஒரு வாரத்தில் எம்.ஜி.ஆர். பரிசீலனை செய்து அதன் மீது முடிவு எடுப்பார் என்று தெரிகிறது.

மந்திரிசபை மாற்றம் இன்னும் ஒரு வாரத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சட்டமன்றப் பேரவை, மேலவைகளில் அந்தப் பதினோரு அமைச்சர்கள் யார்? என்ற வினாக்கணைகள் தொடுக்கப்பட்டபோது, நாவலர் அவர்கள் - அ.தி.மு.க. அமைச்சர்களைப் பதவியிலிருந்து விடுவிப்பது, குற்றச்சாட்டு அடிப்படையில் அல்ல, கட்சிப்பணிகளுக்காகத்தான் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என விளக்கமளித்ததோடு - நாவலரும்கூட அமைச்சர் பதவியிலிருந்து விலகி முழுநேரக் கட்சிப் பணியில் ஈடுபடத் தயாராக இருப்பதாகக் கூட்டங்களிலும், பேட்டிகளிலும் அறிவித்தார்.

இந்தக் கால கட்டத்தில் அ.தி.மு.க. பொதுக்குழு நடந்து முடிந்த ஏழு நாட்களில் தனது இலாகா தனக்குத் தெரியாமலே மாற்றப்பட்டதைக் கண்டு மனமுடைந்த அமைச்சர் கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள், அமைச்சர் பதவியிலிருந்து விலகி அதற்காகத் தந்த விளக்கத்தில்,

சமீபத்தில் நடந்த பொதுக்குழுக் கூட்டத்தின் முடிவில் 11 அமைச்சர்கள் விலக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் எனது இலாகா மாற்றப்பட்டால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்று கேட்ட கிருஷ்ணசாமி, மக்களிடம் தவறான எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையிலேயே இலாகா மாற்றம் குறித்து தமக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அமைச்சர் பொறுப்பிலிருந்து விலக முடிவு செய்ததாக தெரிவித்தார்.

என்று தினமணி சென்னை 11.4.86 இதழில் செய்தி வெளியானது.

இந்த விளக்கத்திலிருந்து பதினொரு மந்திரிகளும் அவர்கள் மீது அ.தி.மு.க. பொதுக்குழுவில் கூறப்பட்ட ஊழல்கள், புகார்களின் பேரில்தான் நீக்கப்பட இருக்கிறார்கள் என்பதும்,

இத்தகையச் சூழலில் தனது இலாகாவைப் பறித்ததானது - தானும் அந்தப் பதினொரு பேரில் ஒருவனோ என்ற தவறான கருத்தை மக்களிடம் உருவாக்கி விடும் என கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்ததும் ஒன்றோடொன்று மோதாத இணைந்த கருத்தாகவே அமைந்திருக்கும் போது, பதினொரு பேரும் கட்சிப் பணிகளுக்காகவே விடுவிக்கப்படுவார்கள் என நாவலர் கூறியது, முழுப்பூசணியை இலைச்சோற்றில் மறைக்கிற தந்திரமாகத்தானே ஆகிவிட்டது!

இதனூடே டெல்லி சென்று திரும்பிய எம்.ஜி.ஆர். அவர்களை நிருபர்கள் பேட்டி காணுகிறார்கள். அந்தப் பேட்டியில் பட்ஜெட் தொடர் கூட்டம் முடிவுற்ற பிறகு பதினொரு அமைச்சர்கள் பதவியிலிருந்து விடுவிக்கப் படுவார்கள் என்று எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகத் தெரிவித்த செய்தி 10.4.86 அன்றைய தினம் சென்னை பதிப்பு எல்லா இதழ்களிலும் வெளிவந்தது. பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்து சுமார் ஒரு மாதமாகிறது!

மார்ச் இறுதியில் அ.தி.மு.க. பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு, பதினொரு மந்திரிகள் விடுவிக்கப்படுவார்கள் என்பது - மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதம் இன்று 17.6.86 வரையில் நடைமுறைக்கு வரவில்லை! ஏன்? என்ன காரணம்?

மந்திரி பதவியைத் துறந்து கட்சிப் பணிக்குச் செல்ல ஆர்வமில்லை என்று அந்த பதினொரு அமைச்சர்களும் சொல்லிவிட்டார்களா?

மற்றவை, அடுத்த கடிதத்தில்; தொடரும்!

அன்புடன்

மு.க.

18-06-1986

1418. திசை திருப்பும் படலம் - 2

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் மார்ச் 30ஆம் தேதி அ.தி.மு.க. பொதுக்குழுவில் அமைச்சர்கள் மீது கூறப்பட்ட புகார்களைப் புகார்ப்பெட்டியில் இருந்து எடுத்துப் படித்துப் பார்த்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், சற்று நாகரிகமான ? மொழியில் பதினொரு அமைச்சர்கள் கட்சிப் பணிக்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என அறிவித்து மாதங்கள் சுமாராக நான்கு ஆகியும் கூட, இன்னும் அந்தப் பதினொரு அமைச்சர்களும் பதவியைத் துறந்தோ - அல்லது பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டோ கட்சிப் பணிக்குச் செல்லும் ஆர்வத்தைக் காட்டாமல் இருக்கிறார்களே, அது ஏன்? என்று ஒரு கேள்வியை எழுப்பி - மற்றவை இன்றைய கடிதத்தில் தொடரும் என குறிப்பிட்டிருந்தேன்!

பதினொரு அமைச்சர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்கள் தானாகவே பதவியைத் துறக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது என்னவோ உண்மை என்கிறார்கள்!

அப்படி வலியுறுத்தப்பட்ட போது, அந்தப் பதினொரு அமைச்சர்களும் - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உட்பட மற்ற எல்லா அமைச்சர்கள் மீதும் உள்ள லஞ்ச ஊழல் குற்றங்களுக்கான ஆதாரங்களை செராக்ஸ் பிரதி எடுத்து எம்.ஜி.ஆரிடம் காட்டி - எங்கள் காலை மிதித்தால் உங்கள் தலையை மிதிப்போம் என்று எச்சரிக்கை செய்து மிரட்டியிருக்கிறார்கள் என்றும் நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன.

எனவே பதினொரு மந்திரிகள் விலக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு - உள்ளாட்சி மன்றத் தேர்தல் நேரத்தில், மூன்றே ஆண்டுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களுக்கு முப்பது லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பைப் போல ஆடிக்காற்றுப் பஞ்சாகப் பறந்து சிதறிப் போயிற்று!

எப்படியோ அ.தி.மு.க.வுக்கு உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியைப் பத்து நாட்கள் மக்கள் மறந்து விட்டு, மந்திரிகளை விலக்குதல் பற்றியே பேசத் தொடங்கி விட்டார்கள் அல்லவா?

எந்த அமைச்சராக இருக்கும்? அவராக இருக்குமோ? இவராக இருக்குமோ? இப்படியல்லவா திண்ணைக்குத் திண்ணைப் பேச்சு கிளம்பிற்று!

பினாமி பெயரில் பல தியேட்டர்கள் கட்டியிருக்கிறாரே! அவரைத்தான் தூக்கி எறிவார்கள்! இப்படிச் சிலர் யூகித்தனர்!

அம்மா கோஷ்டி ஆட்களுக்கு ஆபத்தில்லை! இப்படிச் சில அ.தி.மு.க. பிரமுகர்கள் பெருமூச்சு!

சில அமைச்சர்கள், தி.மு.க.வையும், கருணாநிதியையும் நாராச நடையில் வசை மாரிப் பொழிவதைப் பார்த்தால் - எம்.ஜி.ஆரிடம் நல்ல பெயர் வாங்கி - பதவி துறந்து கட்சிப் பணியாற்றிடப் போகாமல் தப்பித்துக் கொள்ளக் கையாளும் தந்திரம் போல் தெரிகிறதே! இவ்வாறு பத்திரிகை படிக்குமிடங்களில் விமர்சிப்போர் பலர்!

இவ்விதமாக - உள்ளாட்சிமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆரின் தோல்வியை மறைக்க இந்தத் திசை திருப்பல் படலம் நடைபெற்றது!

இப்போது மக்கள், மாயையில் மூழ்கிக் கிடக்கவில்லை! திசை திருப்பல் நடைபெறுகிறது என்பதை நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இருபது மேலவை உறுப்பினர்களில் பெரும் பாலான இடங்கள் தி.மு.க.வுக்கும், அதன் தோழமைக் கட்சிகளுக்குந்தான் கிடைக்குமென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல உணர்ந்துவிட்ட எம்.ஜி.ஆர்., திடீரென மேலவையைக் கலைக்க இந்தியப் பிரதமரிடம் மூப்பனார் கூற்றுப்படி அனுமதி பெற்றுக் கொண்டுவந்து - மேலவைக் கலைப்புத் தீர்மானத்தைப் பேரவையில் நிறைவேற்றி முடித்துவிட்டார்!

மேலவை தேவையில்லை - கலைக்கலாம் என்று தீர்மானத்திற்கு ஆதரவளித்த கட்சிகள்கூட, எம்.ஜி.ஆர். திடீரென

மேலவையைக் கலைப்பதில் மறைந்துகிடக்கும் உள்நோக்கத்தை ஊரறியக் கண்டித்துப் பேசினர்! அறிக்கைகள் வெளியிட்டனர்!

கலையுலகத் தாரகையொருவரைக் கவர்னர் மூலம் பரிந்துரைச் செய்து எம்.ஜி.ஆர். மேலவை உறுப்பினராக நியமிக்கச் செய்தார். அந்த அம்மையார் ஏற்கெனவே வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் மஞ்சள் கடுதாசி கொடுத்து விட்ட திவால் என்பதைச் சுட்டிக் காட்டி கோபால் என்பவர் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கின் உண்மையைத் தகர்க்க முடியாமல் உடனடியாக எம்.ஜி.ஆரின் முயற்சியால் அந்த அம்மையார் வாங்கிய கடன் பத்துலட்ச ரூபாயும் ஒரேநாளில் திருப்பித்தரப்பட்டு திவால் என்ற பட்டத்தை நீதிமன்றத்தில் ரத்து செய்கிறார்கள்.

கவர்னர் திகைக்கிறார்! கை பிசைகிறார்! ஊரும் உலகமும் நகைக்கிறது! மஞ்சள் கடுதாசி கொடுத்து விட்ட ஒரு நடிகைக்குத் திடீரென்று பத்துலட்ச ரூபாய் எங்கிருந்து பறந்து வந்தது? இந்தக் கேள்வி விசுவரூபம் எடுத்து, வருமானவரி இலாகாவின் வாயிற்படி ஏறித் தாண்டவமாடத் தொடங்கி விடுகிறது! தர்பாருக்கு வரும் முதல்வர் உள்ளிட்ட எல்லா அமைச்சர்களுக்கும் தலைதொங்கிப் போகிறது! சட்டி சுட்டதடா! கைவிட்டதடா! என்று அந்த அம்மையாரும் எப்படியோ தனது பத்துலட்சம் கடன் தீர்ந்தது என்ற பரவசத்தோடு - கவர்னர் கொடுத்த நாமினேஷன் பதவியைத் தூக்கி வீசி எறிந்து விடுகிறார்!

தமிழகத்தில் ஆட்சி நடக்கிறதா? இல்லை, ஏதாவது கோமாளிக்கூத்து நடக்கிறதா? இவ்வாறு இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் பேசப்பட்டது!

பார்த்தார் எம்.ஜி.ஆர்.! தன்னைப் பற்றிக் கடுமையான சர்ச்சை நடக்கும்போது, தேள்! தேள்! பாம்பு! பாம்பு! தீ! தீ! என்று கூச்சலிட்டுத் திசை திருப்பும் திறமைசாலி பற்றி நேற்றைய கடிதத்தில் கூறியிருந்தேனல்லவா - அவனையே வெல்லும் பாணியில் செயல்படத் தொடங்கினார்!

அதுதான் உடன்பிறப்பே! மேலவைக் கலைப்பு என்ற செய்தி! உடனடியாகக் கலைப்பு, எல்லாமே!

மேலவையே கலைக்கப்படுகிறது என்றதும் - திவால் நடிகை - மஞ்சள் கடுதாசி - பத்துலட்சம் ரூபாய் - கவர்னர் நியமனம் - இந்தப் பேச்சுக்கள் எல்லாம் மாறிப் போய்,

அடடா - ஏ.எல். முதலியார் இருந்த சபை ஆயிற்றே! முத்துலட்சுமி ரெட்டி இருந்த சபை ஆயிற்றே! மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா, இவர்கள் எல்லாம் இருந்த சபை ஆயிற்றே!

இப்படியல்லவா விவாதங்கள் வீதியோரங்களில் திசை திரும்பி விடுகின்றன!

ஆனால் எத்தனை நாளைக்கு? எம்.ஜி.ஆர். நினைப்பது போல - திட்டமிடுவதுபோல - நீண்ட நாளைக்கு இந்தத் திசை திருப்பும் வேலை தாங்குவதில்லை இப்போது!

இதோ! மக்களிடம் எடுத்துச் சொல்லி உடன்பிறப்பே - உன் பணியினைப் பரவலாகத் தொடரவும், குறிப்பாகக் கழகச் சொற்பொழிவாளர்கள் மேடைகளில் பயன்படுத்திக் கொள்ளவும் மற்றொரு விவகாரம்!

1986 பிப்ரவரி 24ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசின் உள்துறை இலாகா Home Dept. ரகசியச் சுற்றறிக்கையொன்று எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த அறிக்கையை அனுப்புகிறவர் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். ஸ்பெஷல் கமிஷனர் அண்ட் செகரட்டரி டு கவர்ன்மெண்ட் என்பவராவார்.

"I am directed to state that in certain instances where the signature of the Hon'ble Chief Minister has been forged and letters recommending appointments, transfers and grant of financial assistance, had been issued to certain heads of Departments and Government undertakings issuing fake letter head of the Chief Minister with state emblum, have come to light."

அதாவது முதலமைச்சரின் கையெழுத்தைப் போலப் போலி போர்ஜரி கையெழுத்திட்டு, வேலைகளுக்கான சிபாரிசுக் கடிதங்களும், அலுவலர்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுதல் செய்யும் குறிப்புகளும், நிதி உதவி மானியங்கள் தருவது பற்றிய பரிந்துரைகளும் அரசு இலாகாக்கள் சிலவற்றின் தலைமையகங்களுக்கும், அரசுச்சார்புடைய நிறுவனங்களுக்கும் அரசாங்க சின்னம் பொறிக்கப்பட்ட முதலமைச்சரின் போலியான லெட்டர் பேடுகளில் அனுப்பப்பட்டுள்ள செயல்கள் அம்பல மாகியுள்ளன

எனக்குறிப்பிட்டு இந்த விஷயத்தில் எல்லா அதிகாரிகளும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அந்தச் சுற்றறிக்கை கூறுகிறது.

இந்தச் சுற்றறிக்கையை நான் சில பொதுக்கூட்டங்களில் படித்துக்காட்டினேன். அந்தச் செய்தி, ஏடுகளிலும் வெளிவந்தது.

ஒருவன் போர்ஜரி கையெழுத்துப் போட்டு இப்படியொரு மோசடி செய்ததாகவே இருக்கட்டும் - அதனை இதுவரையில் அரசு அதிகாரிகள், இலாகாக்களின் தலைமை அதிகாரிகள் எப்படி நம்பினார்கள்?

எனவே, இந்த போர்ஜரி மோசடிக்கு முன்னரே, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தனது கையெழுத்திட்டு - வேலை வாய்ப்பு சிபாரிசுக் கடிதங்கள், அலுவலர்களை Transfer மாறுதல் செய்யும் ஆணைகள், நிதி உதவி மானியம் ஆகியவற்றை அந்த அதிகாரிகளுக்குக் கடிதம் மூலம் தெரிவிப்பது கடந்த பத்தாண்டு காலமாக இந்த ஆட்சியில் வழக்கத்திலிருந்து வருகிறது என்பது தானே உண்மை!

அப்படிக் கடிதங்கள் அனுப்பப்பட்ட காரணத்தினால் தானே, யாரோ ஒரு மோசடிக்காரன் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு முதலமைச்சர் போல கையெழுத் திட்டும் கடிதம் அனுப்பியிருக்கிறான்?

அதிலும் State Emblem அரசாங்கச் சின்னம் ஒன்றை லெட்டர் பேடில், குறிப்பாக முதலமைச்சருக்குரிய அரசாங்க சின்னத்தைப் பொறித்துக் கொள்வதென்றால் அது சாதாரண காரியமா?

எனவே, எம்.ஜி.ஆர். அவர்களைச் சுற்றியிருப்பவர்கள்தான் எம்.ஜி.ஆரைப் போல கையெழுத்திட்டு இந்த மாதிரிச் செயலில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

அல்லது எம்.ஜி.ஆர். அவர்களே, சில தவறான காரியங்களுக்குத் தனது கையெழுத்தைப் போட்டு விட்டு - சிக்கிக் கொள்ளக் கூடும் எனத் தெரிந்தவுடன், எல்லாமே போர்ஜரி போலிக் கையெழுத்துகள் என ஒரு நாடகத்தை இப்போது நடத்த முன் வந்திருக்கக்கூடும்!

உள்துறை இலாகா Home Dept.வின் சுற்றறிக்கையின்படி - ஒவ்வொரு அதிகாரியும் ஒவ்வொரு நாளும் எம்.ஜி.ஆரிடமிருந்து வருகிற கடிதங்கள், பைல்கள் எல்லாவற்றையும் இனிமேல் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்து - போலிக் கையெழுத்தா

அல்லது சரியான கையெழுத்தா எனக் கண்டுபிடிக்கத்தானே நேரம் சரியாக இருக்கும்?

ஒரு முதலமைச்சர், ஒரு அதிகாரிக்கு - வேலைக்கு சிபாரிசு செய்தோ - ஒருவரை வேலைமாற்றம் செய்யச் சொல்லியோ - நிதியுதவி மானியம் குறித்தோ லெட்டர் பேடில் கடிதம் எழுதி அனுப்புகிற வழக்கம் - இந்த ஆட்சியைத் தவிர, வேறு எந்த ஆட்சியிலாவது இருந்தது உண்டா?

இந்த ஆட்சியில் அந்த வழக்கம் இல்லையென்றால் - அதிகாரிகள் அப்படி வருகிற கடிதங்களைக் கண்டவுடனேயே, சந்தேகப்பட்டு - அவர்களே ஓ! இது முதலமைச்சர் எழுதியதில்லை! அவர் எழுதும் வழக்கமில்லை என்று விழிப்புடன் காரியமாற்றியிருப்பார்களே!

இப்படியெல்லாம் விஷயம் தெரிந்தவர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது!

தமிழக அரசின் நிர்வாகம், எப்படியெல்லாம் நிலை குலைந்துவிட்டது என்று தெளிவுடையோர் வேதனைப் பட்டனர்!

போர்ஜரி கையெழுத்தில் ஒரு ராஜ்யம் நடக்கிறதா? என்று விழிகளை அகல விரித்தவாறு - மாநில முன்னேற்றத்தில் அக்கறை கொண்டோர் வியப்புத் தெரிவித்து வாட்டமுற்றனர்!

இந்த விபரீதம் வெகுவாக அம்பலத்திற்கு வந்துவிட்டதைத் திசை திருப்ப எம்.ஜி.ஆர். பெயரில் ஒரு விளம்பரம்!

தமிழ், ஆங்கில தினசரிகள் அனைத்திலும் டாக்டர் எம்.ஜி.ஆர். அறிவிப்பு என்ற பெயரில் வந்த விளம்பரம், திசை திருப்பப் பயன்பட்டதா? அல்லது மக்களைத் திகைக்க வைத்திடப் பயன்பட்டதா? அதுகுறித்து அடுத்த கடிதத்தில்!

அன்புடன்

மு.க.

19-06-1986

1419. திசை திருப்பும் படலம் - 3

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெயரில் வெளிவந்த விளம்பரமொன்றைக் குறிப்பிட்டிருந்தேனல்லவா! அது, இதுதான்:-

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுக்கும் முக்கிய அறிவிப்பு!

அரசு நிர்வாகத்தில் சம்பந்தமில்லாத யாருடைய தலையீட்டையும், குறுக்கீட்டையும் நான் எப்போதும் விரும்புவதில்லை.

எனது மனைவியாகவே இருந்தாலும் அல்லது எனது உறவினர் என்று சொல்லிக் கொள்பவராகவே இருந்தாலும் அவர்களுக்கும் இது பொருந்தும்.

அமைச்சர்களே ஆனாலும் சரி, தலைமைச் செயலாளர், அரசு உயர் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகள், யாராக இருந்தாலும் சரி என்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து நடக்க வேண்டும் - அன்பன் எம்.ஜி.இராமச்சந்திரன்.

13.6.86-ல் ஏடுகள் பலவற்றில் வெளியிடப்பட்ட விளம்பரம் இப்படியொரு புரியாத புதிராக அமைந்தது!

நான்கு மாதங்களுக்கு முன்புதான் அரசாங்கத்தின் மிக முக்கிய இலாகாவான உள்துறை இலாகாவின் செயலாளர் வெங்கட்ராமன் அவர்கள், முதலமைச்சரின் லெட்டர்பேடு - அரசாங்க எம்ப்ளம் - இவற்றையெல்லாம் பயன்படுத்தி முதலமைச்சரைப்போல போர்ஜரி கையெழுத்திட்டு வேலைக்கு அமர்த்த சிபாரிசுகள், அலுவலர் இடமாற்றங்கள், நிதியுதவி மானிய ஆணைகள் போன்ற பல மோசடிகள் நடைபெறுவதாக அதிகாரிகளுக்கெல்லாம்

சுற்றறிக்கை அனுப்புகிறார். இப்போது, முதலமைச்சர் பெயராலேயே வெளியிடப்பட்டுள்ள விளம்பரங்களில்,

எனது மனைவியாகவே இருந்தாலும் - உற்றார் உறவினர் என்று சொல்லிக் கொள்பவராக இருந்தாலும் - அரசு நிர்வாகத்தில் தலையிடுவதை நான் விரும்புவதில்லை

என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடப்படுகிறது.

1977-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர்., ஒன்பது ஆண்டுக்குப் பிறகு திடீரென இப்படியொரு விளம்பரம் வெளியிடவேண்டிய அவசியம் என்ன?

உள்துறை செயலாளர் Home Secretary அவர்கள் வெளியிட்டச் சுற்றறிக்கையில் காணப்படும் போர்ஜரி கையெழுத்துகளை இப்போது 13.6.86 விளம்பரத்தில் சுட்டிக் காட்டப்படும் நபர்கள்தான் பயன்படுத்தி, அரசு நிர்வாகத்தில் தலையிட்டிருக்கிறார்களா?

முதலமைச்சருக்கே தெரியாமல் - பல கோப்புகள் பட்டுவாடா செய்யப்படுகின்றன என்பதும், முதலமைச்சருக்கே தெரியாமல் - பல அலுவலர்கள் மாற்றப்படுகிறார்கள் என்பதும், முதலமைச்சருக்கே தெரியாமல் நிதி சம்பந்தப்பட்ட, நிர்வாக சம்பந்தப்பட்ட பல முக்கிய முடிவுகள் யார் தலையீடு காரணமாகவோ எடுக்கப்படுகின்றன என்பதும் - வெறும் வதந்திகளல்ல, வெளிச்சத்துக்கு வந்துவிட்ட உண்மைகள் என்றல்லவா, இந்த விளம்பரம் சொல்லாமல் சொல்லுகிறது!

அமைச்சர்கள், தலைமைச்செயலாளர், அரசு உயர் அதிகாரிகள், ஏனைய அதிகாரிகள் யாராக இருந்தாலும் முதலமைச்சருடைய அபிப்பிராயத்தை அறிந்தே நடக்க வேண்டுமென - விளம்பரத்தின் வாயிலாக ஆணையிடப் படுகிறது!

அப்படியானால் இந்தப் பத்தாண்டு காலத்தில், அமைச்சர்களோ - தலைமைச் செயலாளர் உள்ளிட்ட மற்ற அதிகாரிகளோ, முதலமைச்சரின் அபிப்பிராயத்தை அறிந்து நடக்க வில்லையா?

இதுவரையில் மனைவியோ, உறவினரோ அரசு நிர்வாகத்தில் குறுக்கிடவில்லை - இப்போது தான் சில காலமாகக் குறுக்கிடுகிறார்கள். எனவே இந்த விளம்பரம்

வேண்டியிருந்தது என முதலமைச்சர் விளக்கமளிப்பாரேயானால் இந்த மாநிலத்தின் சாதாரணக் குடிமகனின் கேள்விக்கு அவர் சரியான பதில் ஒன்றைத் தந்தாக வேண்டும்!

உங்கள் மனைவியோ அல்லது உறவினரோ குறுக்கிட்டு, தலையீடு செய்த அந்த நிர்வாக சம்பந்தமான விவகாரங்கள் என்ன? அதனால் ஏற்பட்ட விளைவு யாது? அந்த விளைவுக்கு முதலமைச்சராகிய நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா? அப்படி அரசு நிர்வாகத்தில், உங்களிடமுள்ள உறவு காரணமாகவோ, அல்லது மனைவி என்ற உரிமை காரணமாகவோ தலையிட்டுக் குளறுபடி செய்திருப் பார்களேயானால் - அவர்கள் மீது நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

வரிசெலுத்தும் சாதாரணக் குடிமகனின் இந்தக் கேள்விக்கு, விளம்பரத்தின் மூலம் தன்னைப் புனிதர் எனக் காட்டிக் கொள்ள முயற்சி செய்து - திசை திருப்பும் முதலமைச்சரின் பதில் என்ன?

அதிகாரிகள் யாராயிருந்தாலும் முதலமைச்சருடைய அபிப்பிராயத்தை அறிந்துதான் நடக்க வேண்டும் என்றால் - எந்தெந்த விவகாரங்களில்?

சாராயக் கடை ஏலம் போடும் போது - ஒரு லட்சத்துக்குக் கேட்டவருக்கு விடுவதா? அல்லது ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கேட்டவருக்கு விடுவதா? என்ற இந்தச் சங்கதியைக் கூட ஒரு அதிகாரி, முதலமைச்சருக்கு டிரங்கால் செய்து கேட்டுக் கொண்ட பிறகு தான் முடிவு செய்ய வேண்டுமா? அப்படி டிரங்கால் மூலமாகவாவது தொடர்புகொள்ள முதலமைச்சர் கிடைப்பாரா?

ஒரு ஊரில் தீப்பற்றுகிறது! வீடுகள் நெருப்பின் நாக்குகளால் வளைக்கப்படுகின்றன! தீயணைக்கும் வண்டிகளைக் கொண்டு செல்லலாமா? வேண்டாமா? என்பதற்கும் முதல்வரின் அபிப்பிராயம் என்ன என்பதை அவ்வப்போது அறிந்துதான் அதிகாரிகள் நடக்க வேண்டுமா?

அரசு நிர்வாகத்தில் மனைவியோ, அல்லது உறவினரோ தலையிட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, அவர்களுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, விளம்பரம் போட்டுத் திசை திருப்பிவிடலாம் என்று எம்.ஜி.ஆர். எண்ணுவது, இந்த

மாநில மக்களை எவ்வளவு மட்டமாகக் கணக்குப் போட்டு வைத்திருக்கிறார் என்பதைத்தானே காட்டுகிறது?

எம்.ஜி.ஆர். ஆட்சியில் யாரோ எவரோ போர்ஜரிக் கையெழுத்துப் போட்டு மோசடி செய்வதாக மக்களை நம்பவைக்கப் பார்க்கிறார்களே? அ.தி.மு.க. அமைச்சர்களில் ஒருவரே போர்ஜரி கையெழுத்துப் போட்டு, அது சட்டசபை வரையில் சிரிப்பாய்ச் சிரிக்கவில்லையா?

தேனி முத்துத்தேவன்பட்டியில் என் மகன் அழகிரி நூறு ஏக்கரா தோட்டம் வாங்கியிருப்பதாகவும், அதை நிரூபிக்காவிட்டால், தனது பதவியை ராஜினாமா செய்வதாகவும் பேரவையில் அறைகூவல் விடுத்து - தனது குற்றச்சாட்டை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லாத நிலையில் அந்த அமைச்சர் அழகிரி பெயரை போர்ஜரி செய்து கையெழுத்திட்டு ஒரு போலிப்பத்திரத்தை சபாநாயகரிடமும், பேரவையில் உள்ள கட்சித் தலைவர்களிடமும் உண்மைப் பத்திரம் போலக் காட்டி, அது முழுக்க முழுக்க போர்ஜரி என்று கண்டுபிடிக்கப்பட்டு, இவ்வளவு நடந்த பிறகும் அந்த அமைச்சர் மீது, புனிதர் வேடமிடும் எம்.ஜி.ஆர். அப்போது எடுத்த நடவடிக்கை என்ன? தொடர்ந்து அமைச்சராக இருந்தார்! 1984-ல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அ.தி.மு.க. சார்பில் சென்றமர்ந்தார்!

இதுதான் புனிதர் எம்.ஜி.ஆர். அந்தப் போர்ஜரிப் பேர்வழி மீது எடுத்த நடவடிக்கை!

இப்போது முதலமைச்சரின் கையெழுத்தையே போர்ஜரி செய்கிற கூட்டம் அவரைச் சுற்றிலும் உறவுமுறையோடு இருப்பதாக அரசாங்கமே சுற்றறிக்கை விடுக்கிறது - விளம்பரமும் செய்கிறது!

உண்மையிலேயே போர்ஜரி கையெழுத்து மோசடி நடைபெறுகிறதா?

அல்லது - சிக்கிக் கொண்ட சில விவகாரங்களில், போடப்பட்டுள்ள கையெழுத்துகள் போர்ஜரி என்று இப்போது பூசிமெழுகப்படுகிறதா?

இதற்கான விளக்கத்தையும் நாடு, ஆவலுடன் எதிர்பார்க்கிறது!

தலைமைச் செயலாளர், அரசின் உயர் அதிகாரிகள் போலீஸ் அதிகாரிகள் உட்பட அனைவருமே முதலமைச்சரின் அபிப்பிராயம்

என்பதை ஒரு மூலையிலே தள்ளிவிட்டு, முதல்வரின் மனைவியார், உறவினர்கள் அரசாங்க நிர்வாகத்தில் குறுக்கிட்டுத் தலையீடு செய்து தமிழக அரசின் நிர்வாகத்தையே களங்கப்படுத்துவதற்கு உதவியாக இருக்கிறார்கள் - இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த விளம்பரத்தை விட வேறு என்ன சாட்சி வேண்டும்?

எத்தனையோ இமாலயத் தவறுகள் நடந்திருக்கின்றன! அந்தத் தவறுகள் எல்லாம் தன் தலையில் விழுந்து விடுமே என்கிற இயல்பான பயத்தின் காரணமாக - எந்தத் தவறுகள் - ஊழல்கள் - மோசடிகள் - எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டாலும், அப்போது, தன்னைத் தப்புவித்துக் கொள்ளத்தான் போர்ஜரி கையெழுத்துப் பற்றிய சுற்றறிக்கை - புனிதரைப் போலக் காட்டிக்கொள்ளும் விளம்பரம் - ஆகியவற்றின் வாயிலாக, மேலும் ஒரு திசை திருப்பும் படலம் நடத்தப்பட்டுள்ளது!

இனியும் இத்தகைய திசை திருப்பல்களைக் கண்டு தமிழக மக்கள் ஏமாறப் போகிறார்களா?

காலம், உடனடியாக இல்லாவிட்டாலும் உரிய நேரத்தில் பதில் சொல்லத்தான் போகிறது.

அன்புடன்

மு.க.

20-06-1986

1420. திசை திருப்பும் படலம் - 4

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். அவர்களின் திசை திருப்பும் படலம் குறித்து மூன்று கடிதங்களை உனக்கு எழுதிக் கொண்டிருக்கும் போதே நான்காவது ஒரு கடிதமும் நான் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

அண்ணா அவர்களுக்குத் தெருக்கூத்துகள் பார்ப்ப தென்றால் அதிலே ஒரு தனி ரசனை உண்டு! வெளியூர்களில் பொதுக் கூட்டங்களை முடித்துக் கொண்டு காரில் பயணம் செய்யும்போது வழியில் எந்த ஊரிலாவது கூத்து நடந்தால், தொலைவில் காரை நிறுத்திவிட்டு - மிகுந்த ஆவலுடன் அந்தக் கூத்து கண்டு களிப்பார். அண்ணா அவர்களுடன் காரில் நெடுந்தொலைவு - பலமுறை பயணம் செய்கின்ற பேறுபெற்றதின் காரணமாக, நானும் அண்ணா அவர்களுடன் சேர்ந்து அத்தகைய தெருக்கூத்து காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறேன்.

மிக வேடிக்கையாக இருக்கும்! அல்லி அரசாணி என்று கூத்து நடக்கும். அல்லி தர்பாரில் நகர் நலம் பற்றி விசாரணை நடக்கும். ஒற்றர்வேடம் போட்ட ஒருவர் ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து அல்லி ராணியிடம் புகார் கூறுவார் - அம்மணீ! நமது முனிசிபாலிடி எலக்ட்ரிக் விளக்குகள் எல்லாம் ஒன்றுகூட எரியவில்லை என்று!

அல்லிராணி காலத்தில் முனிசிபாலிடி ஏது? எலக்ட்ரிக் விளக்குதான் ஏது? ஒற்றரின் நகைச்சுவையை நினைத்து மக்கள் விலாநோகச் சிரிப்பார்கள்.

தினைப்புனம் காக்கும் வள்ளி, தனது பாங்கியிடம் - என்னடி மணி பத்தரையாகப் போகிறது இன்னும் என் முருகனைக் காணவில்லையே என்று தனது ரிஸ்ட்வாட்ச்சைக் கவலையுடன் பார்ப்பாள்!

உடனே பாங்கி, முருகன் வருகிற வழியில் எங்காவது, சினிமா தியேட்டரில் நுழைந்திருப்பான். வந்துவிடுவான் கவலைப்படாதே! எனப் பதில் கூறித் தேற்றிடுவாள்!

இத்தகைய தெருக்கூத்துத் தொடர்களில் ஒன்று, நானும் நண்பர்கள் சிலரும் என்றோ ஒரு நாள் கண்டது, இன்றும் நினைவில் உள்ளது!

கூத்தின் இடையிடையே கோமாளி வருகிறான். அவனது நகைச்சுவை வெடிகளே அந்தத் தெருக்கூத்துக்குத் தெம்பூட்டிக் கொண்டிருந்தன. இதோ அந்தச் சில வசனங்கள் - அப்படியே அல்ல! அந்தக் கருத்துகள் மட்டுமே!

ஆகா எனதருமைச் சேவகர்காள்... இந்தத் தேசத்தை ஆளும் மகாராஜாவாகிய நான்... எனக்கொரு சந்தேகம்! நான்தானே மகாராஜா?

ஆமாம் பிரபூ... நீங்களேதான் எங்களுக்கு மகாராஜா!

மறந்துபோனால் அடிக்கடி இப்படி ஞாபகப்படுத்துங்கள்... என் அந்தப்புரத்தில் அடிக்கடி மகாராணி வந்து தலையிடுகிறாள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

என்ன மகாராஜா இது? அந்தப்புரத்தில் மகாராணி தலையிடாமல் வேறு யார் தலையிடுவார்கள்?

அடே! நான் அந்தப்புரம் என்றா சொன்னேன்? க்ஷமிக்கவும்! அரசாங்க நிர்வாகத்தில் என்று சொல்ல வேண்டியதை அவசரத்தில் அப்படிச் சொல்லி விட்டேன்... அந்தப்புரத்தில் யார் வேண்டுமானாலும் தலையிடட்டும்...

உத்திரவு மகாராஜா!

ஒரு முக்கியமான விஷயம்!... நான் தூங்கும் போதெல்லாம் எவனோ வந்து என் தொடையில் கயிறு திரித்துக் கொண்டு போகிறான்!

நிஜமா? இது நிஜமா? என்ன மகாராஜா! இப்படியும் நடக்குமா?

நடக்கிறதடா! என் தொடையில் திரித்த கயிறுகளை கடைகளில் தொங்கவிட்டு விற்கிறார்களடா! என் கண்ணாலே பார்த்தேன்!

இந்த மோசடியை எப்படித் தடுப்பது மகாராஜா?

என் தொடையில் கயிறு திரிப்பதை என்னால் தடுக்க முடியாது! ஏனெனில் நான்தான் தூங்கிக் கொண்டிருப்பேனே! அதனால் கடைக்கு எந்தக்கயிறு வியாபாரத்துக்கு வந்தாலும் - அது உண்மையான கயிறுதானா? அல்லது நான் தூங்கும்போது என் தொடையில் திரித்ததா என்று தெரிந்து - தெளிந்து - புரிந்து - உணர்ந்து - அதன்பிறகே அந்தக் கயிறு வியாபாரத்தை அனுமதிக்க வேண்டும்!

அப்படியே செய்கிறோம் மகாராஜா!

இன்னொரு முக்கியத்திலும் முக்கியமான விஷயம்! எனக்கு ஒரு வருஷ காலமாகத் திடீர் திடீர் என்று மூளை வேலை செய்யாமல் ஸ்தம்பித்துப் போகிறதல்லவா?

ஆமாம் மகாராஜா - அந்தக் கொடுமையைப் பார்க்க எங்கள் கண்கள் கூசுகின்றன!

ஒருநாள் தர்பாரிலேயே அப்படி வந்துவிட்டதால் இந்தத் தரணிக்கே தெரிந்து விட்டது! பயப்படாதீர்கள் பலமுறை அப்படி எனக்கு, இப்போதெல்லாம் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கிறது - என் ராணியோ ராஜப்பிரதானிகளோ அது குறித்துக் கவலைப்படுவதில்லை... அவர்களுக்குத் தெரியும் இது அடிக்கடி வருமென்று!

சரி மகாராஜா! விஷயம் தெரிந்து விட்டதால் இனி நாங்களும் பயப்படமாட்டோம் மகாராஜா! எப்படியோ நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும் மகாராஜா!

வாழுகிறேன்! வாழுகிறேன்! நான் சொல்வதைக் கேளுங்கள் சேவகர்களே!... என் மூளை சில நேரங்களில் ஸ்தம்பித்து நின்று போகும் போதெல்லாம் - என் நெற்றியில் யாரோ பட்டை நாமம் போட்டு விடுகிறார்கள்!

இல்லையே! விபூதிதானே பூசியிருக்கிறீர்கள் மகாராஜா!

முட்டாள்களே! இப்போது என் மூளை வேலை செய்கிறது - அதனால் நானே விபூதி பூசியிருக்கிறேன். என் மூளை off ஆப் ஆகியிருக்கிற நேரமாகப் பார்த்து என் பக்கத்திலிருப்பவர்களே என் நெற்றியில் நாமம் போட்டு கரும்புள்ளி வேறு குத்தி விடுகிறார்களடா?

அய்யோ - அப்படியா? இந்த வேதனைக்கு என்ன செய்யலாம்?

ஒன்றும் செய்ய முடியாது! என் நெற்றியில் நாமம் இருக்கும்போதெல்லாம், நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்!

என்ன செய்ய வேண்டும் மகாராஜா!

நமது மகாராஜாவின் நெற்றியிலே இருப்பது அவரே போட்டுக் கொண்ட நாமம் அல்ல! அவர் மூளையானது off ஆப் ஆகியிருக்கும் போது, யாரோ போட்டு விடுகிறார்கள். தயவு செய்து மகாராஜாவின் நாமத்தையும், கரும்புள்ளியையும் பார்த்து யாரும் கேலி செய்யாதீர்கள் என்று தெருவுக்குத் தெரு பறையறிவித்துச் செய்தியைப் பரப்புங்கள்!

அதைவிட வேறொரு தந்திரம் செய்து, கேலி பேசுவோர் வாய்களை மூடிவிட்டால் என்ன மகாராஜா?

என்ன தந்திரம்? என்ன தந்திரம்? சொல்ல உனக்குக் கொடுத்தேன் சுதந்திரம்! சொல்! சொல்! உடனே சொல்!

நமது தேசத்துப்பிரஜைகள் பெரும்பாலோர் - பெரும்பாலான நேரம் தூங்கிக்கொண்டும், மூளை off ஆப் ஆகிய நிலையிலும்தான் இருக்கிறார்கள். அந்த நேரம் பார்த்து அவர்கள் எல்லோருடைய நெற்றியிலும் பட்டை நாமங்களைப் போட்டு, கரும்புள்ளிகளையும் குத்திவிட்டால் பிறகு அவர்கள் மகாராஜாவாகிய தங்களைக் கேலி செய்ய முடியாதல்லவா?

சபாஷ்! சபாஷ்! நல்ல யோசனை! இதோ இந்த ஜனங்கள் எல்லாமே மூளையற்ற முண்டங்கள்! தூங்கு மூஞ்சிகள்! தொடங்குங்கள் இவர்களுக்கு கரும்புள்ளிகுத்தி, நாமம் சாத்தும் வேலையை!

உடன்பிறப்பே! தெருக்கூத்தில் அந்தக் கோமாளி இப்படி மகாராஜாவைப் போல் தன்னைப் பாவித்துக் கொண்டு பேசிய போது, கூத்து பார்க்கக் கூடியிருந்த மக்களை நோக்கிக் கைகளை நீட்டி, இதோ இந்த ஜனங்கள் மூளையற்ற முண்டங்கள்! தூங்கு மூஞ்சிகள்! என்று சொன்னதுதான் தாமதம் - ரசிகமகா ஜனங்கள் அனைவரும் ஆத்திரம் பொங்க எழுந்து விட்டனர்! ஆகா! யாரைப் பார்த்து சொன்னாய்? என்று வரிந்து கட்டிக்கொண்டு தெருக்கூத்து மேடைக்குள் திபுதிபுவெனப் புகுந்து விட்டனர்! ஒரே அமளி!

நமக்கேன் வம்பு என்று தெருவில் நின்று கூத்து பார்த்த நாங்கள் காரில் ஏறிப் புறப்பட்டு விட்டோம்!

உடன்பிறப்பே, இந்தப் பழைய தெருக்கூத்து நிகழ்ச்சி யெல்லாம் இப்போது ஏன் நினைவுக்கு வந்தது எனக்கேட்பாய்!

வேறொன்றுமில்லை! இன்றைக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெயரில் வெளிவந்துள்ள - மற்றொரு முக்கிய அறிவிப்பு விளம்பரத்தை ஏடுகளில் கண்டேன். அதைக் கண்டவுடன் நினைவுக்கு வந்த தெருக்கூத்துக் காட்சிகளும், வசனங்களும் உனக்கும், பிறருக்கும் தெரியட்டுமேயென்று எழுதியுள்ளேன். அவ்வளவுதான்!

இதோ! இன்று வந்த விளம்பரம் :-

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் முக்கிய அறிவிப்பு!

முதலமைச்சர் அலுவலகத்தில் 'Personal and Confidential Wing' என்று தனியாக எவ்வித அமைப்பும் இல்லை. ஆனால் முதலமைச்சர் அலுவலகத்தில் அப்படி ஒரு அமைப்பு இருப்பது போல கடிதங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றின் மூலம் சில அலுவலகங்களுக்குப் போலி உத்தரவுகளை அனுப்புவதாக எனக்குத் தகவல்கள் வந்துள்ளன.

எனது அலுவலகத்திலிருந்துக் கடிதங்கள் மூலம் ஏதாவது உத்தரவு வந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீண்டும் எனது அலுவலகத்துடனோ அல்லது என்னுடனோ தொடர்பு கொண்டு சரிபார்த்துக் கொள்வது அவசியம்.

இதனை அனைத்து அலுவலர்களும் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

சென்னை

19.6.86

எம்.ஜி. இராமச்சந்திரன்

இப்படி, தானே தனது அலுவலகத்தில் திட்டமிட்டுச் செய்த தவறுகளை யார் மீதோ தூக்கிப்போட இந்த விளம்பரங்கள் எனும் திசை திருப்பும் படலங்களா?

அல்லது தூங்கும் போது கயிறு திரிக்கும் காரியங்களா? கரும்புள்ளி வைத்து நாமம் போடும் வேலைகளா?

அப்படிக் கயிறு திரித்தவர்கள், கரும்புள்ளி குத்தியவர்கள், நாமம் போட்டவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? விபரங்கள் யாவை?

இதனை விளக்க மாநில அரசும் - விளக்க மறுத்தால், விவகாரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வர மத்திய அரசும் கடமைப்பட்டுள்ளன என்பதை மட்டும் சுட்டிக்காட்டுவது, இன்றுள்ள அரசியல் அமைப்பில் பொறுப்புடையோரின் செயலாகும்!

அந்தப் பொறுப்பு உணர்ந்து எழுதப்பட்டவைகளே இக் கடிதங்கள்!

அன்புடன்

மு.க.

21-06-1986

1421. ஈரோடு புறப்பட இப்போதே தயாராகுக!

உடன்பிறப்பே,

தேர்தல் நேரத்திலே எம்.ஜி.ஆர். அவர்களால் அள்ளி வீசப்படும் வாக்குறுதிகளை நம்பி, தங்கள் வாழ்வில் புதிய ஒளி பிறக்கப்போகிறது என்ற உறுதியான எதிர்ப்பார்ப்போடு அவரது கட்சிக்கு வாக்களித்த தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களும் - விவசாயத் தொழிலாளர்களும் இப்போது படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல!

வறட்சியாலும் - புயல்மழையாலும் மாறிமாறிப் பாதிக்கப்பட்ட விவசாயச் சமுதாயத்தை மேலும் மேலும் கசக்கிப்பிழிகிற வகையிலே எம்.ஜி.ஆர். அரசு, அராஜக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வாய்ச்சொல்லில் வீரரடி! வஞ்சனைகள் செய்வாரடி! என்ற பாரதியின் கவிதை வரிகளுக்கு எடுத்துக்காட்டான நபர்களாக, தேர்தல் நேரத்து வாக்குறுதிகளையெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டு இந்த அரசினர் விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளிகளையும் வேதனைப் பள்ளத்தில் தள்ளியதைச் சுட்டிக்காட்டி, கடந்த பதினாறாம் தேதியன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியும் அறிவித்தவாறு விவசாயிகளின் கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டம் நடத்தியுள்ளன. அந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், அக்கட்சிகளின் முன்னணித் தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

அதற்கிடையே ஜூன் நாலாம்தேதி சென்னையில் நம்முடைய கழகத்தின் பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். அரசின், விவசாயிகள் விரோதப் போக்கை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியதோடு - ஜூன் 29ஆம் நாள் ஈரோடு நகரில்

தி.மு.க. மாநில விவசாயிகள் மாநாட்டையும் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

நமது மாநில விவசாயிகள் மாநாட்டு அறிவிப்பும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளின் போராட்ட அறிவிப்பும் - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் விவசாயிகள் விரோதப் போக்கு எனும் விபரீதச் செயலுக்கு விடப்பட்ட அறைகூவலாக அமைந்த காரணத்தால் - அவசர அவசரமாகத் தனது பைக்குள் இருந்த ஒரு நண்பரை எடுத்து, தனக்கு முன்னால் உள்ள நாற்காலியில் உட்கார வைத்து - விவசாயிகள் பிரச்சினையைப் பற்றி அவருடன் வெகுவாக விவாதித்தது போல ஒரு நாடகம் நடத்தி,

இனி ஜப்திகள் நிறுத்தப்படும்

என்ற ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்! தனக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டால் போதும், விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதி எக்கேடு கெட்டால் என்ன? என்ற மிராசு மனப்பான்மையுடன், அந்த பாக்கெட் நண்பரும், தனது பரவசத்தை வெளிப்படுத்தி - நடத்துவதில்லை என்ற முடிவோடு அறிவிக்கப்பட்டப் போராட்டத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்துவிட்டு, தன்னை நிறுத்திக் கொள்ளவேண்டிய இடத்தில் நிறுத்திக் கொண்டுவிட்டார்.

இப்படியொன்று நடக்கப்போகிறது என்ற செய்தியை உள்ளாட்சிமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் நான் வெளியிட்டபோது, அந்த நண்பர் என்மீது சீறிப்பாய்ந்து சினந்தது உண்டு! எதற்காக அந்தச் சீற்றம்?

இவனுக்கு எப்படி அதற்குள் தெரிந்தது இந்த உண்மை? என்ற சீற்றம்தான்!

அந்த மர்மத்தைத் திரை போட்டு மறைத்துவிட முயன்று, தனது கட்சிப் பிரமுகர்களையெல்லாம் நம்புமாறு பேசினார்! அறிக்கைகள் விடுத்தார்!

இப்போது அறிவித்த போராட்டத்தை முன்கூட்டியே பேசிமுடித்த ஒரு சந்திப்புக்குப் பிறகு நிறுத்திவிட்டதுமல்லாமல் - கோட்டைச் சந்திப்புகள், தோட்டத்துச் சந்திப்புகளாகவும் மாறிவிட்டன!

அய்யோ! பாவம் - இவரை நம்பிய விவசாயி! ஆமாம் - ஏர் உழவன், ஏமாளி உழவனாகி விட்டான்!

அந்தச் சந்திப்பு நாடகத்தில் அறிவித்தபடி ஜப்திகள் நிறுத்தப்பட்டதா?

அதுகுறித்து என்னை வெளியூரில் நிருபர்கள் கேட்ட போது, இனிமேல் ஜப்திகள் நிறுத்தப்படும் என்பது கண்துடைப்பு! ஏனெனில் பெரும்பகுதி ஜப்திகள் முடிந்து விட்டன! எனவே இதுவரை ஜப்தி செய்யப்பட்ட பொருள்களை, உரியவர்களுக்குத் திருப்பித் தரவேண்டும் என்று பதில் அளித்தேன்.

மீண்டும் எம்.ஜி.ஆர். பெயரில் ஒரு அறிவிப்பு வந்தது. ஜப்தி செய்யப்பட்ட பொருள்கள் திருப்பித் தரப்படுமென்று!

பிறகு அதற்கோர் விளக்கம், வழக்கம்போல!

உழவுக்கான பொருள்கள் மட்டுமே திருப்பித் தரப்படுமென்று!

அப்படியானால் - விவசாயிகளின் வீடுகளில் அதிகாரிகள் புடைசூழ, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, கைப்பற்றப்பட்ட பண்டபாத்திரங்கள், பிற பொருள்களின் கதி என்ன?

இதோ! ஈரோட்டு மாநாட்டு அலுவலகத்திற்கு வந்து குவியும் கடிதங்களில் ஒன்று!

1. பாலகிருஷ்ணபிள்ளை என்ற விவசாயியின் வீட்டிலிருந்து,

   ஃ மணிலா மூட்டைகள் ஐந்து அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பு ரூபாய் 250

   ஃ ஓரியண்ட் மின்விசிறி அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பு ரூபாய் 150

   இவை 1207 ரூபாய் கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டவை!

2. பெருமாள் நாயுடு என்ற விவசாயியின் வீட்டிலிருந்து;

   ஃ பித்தளைத் தவலை அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பு ரூபாய் 25

   ஃ நெல்மூட்டைகள் பத்து அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பு ரூபாய் 750

   ஃ ஓரியண்ட் மின்விசிறி அதிகாரிகள் குறிப்பிட்ட மதிப்பு 75 ரூபாய்

   இவை 4318 ரூபாய் கடனுக்காக ஜப்தி செய்யப் பட்டவை!

3. த.மு. நாராயணசாமி நாயுடு என்ற விவசாயியின் வீட்டிலிருந்து;

ஃ நெல் மூட்டை 2

ஃ மின்விசிறி 1

ஃ பித்தளைக்குடம் 1

இவை 5680 ரூபாய் கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டவை!

இதுபோல ஈரோடு விவசாயிகள் மாநில மாநாட்டு அலுவலகத்துக்கு - ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து - அந்தந்த மாவட்டங்களுக்குரிய பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன!

மாநாட்டுக்கு முதல் நாள் 28 ஆம் தேதியன்று மாவட்டங்களிலிருந்து கழகச் சார்புடைய விவசாய அணிகளின் பிரதிநிதிகள், மாவட்டச் செயலாளர்கள் கலந்து பேசி - மாநில முழுதுமுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்துத் தீர்மானங்களை தொகுத்து வடிவமைக்க இருக்கின்றனர்!

பண்டபாத்திரங்கள் மட்டுமின்றி, வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் பெயர்க்கப்பட்ட நிகழ்ச்சிகளும் உண்டு!

தேர்தல் வாக்குறுதிக்கு மாறாக இவ்வாறு தரப்படும் தொல்லைகள் மட்டுமின்றி - எண்ணற்ற துன்பதுயரங்களில் இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயத் தொழிலாளர்களும் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அனைத்தையும் குறித்து முடிவுகள் எடுத்து - செயலில் இறங்கிட, ஈரோடு மாநாடு கூடுகிறது!

மாநில அளவில் நடைபெறும் அந்த மாநாட்டுப் பேரணியிலும், மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்று - எல்லா வகையிலும் மாநாடு வெற்றிகரமாக அமைய ஒவ்வொரு மாவட்டம், ஒன்றியம், சிற்றூர் பேரூர்களிலிருந்து ஈரோடு நோக்கிப் புறப்பட இப்போதே தயாராகுக!

அன்புடன்

மு.க.

24-06-1986

1422. கொடிப்படை அசைய கொள்கைக் குன்றே! வா!

உடன்பிறப்பே,

பார் முழுதும் ஏர் முனையிலே; உழவன் பாட்டிலே கொண்டாட்டம் போடுது! என்ற உண்மையைப் பாடலாகத் தந்த உடுமலை நாராயணக்கவிராயர் தோன்றிய கொங்குச் சீமையிலே - பாமரனுக்கு - பட்டிக்காட்டானுக்கு - மாடுமேய்ப்பவனுக்கு - உழுபவனுக்கு - எதற்காகப் படிப்பு? சுட்டுப் போட்டாலும் அந்தக் கூட்டத்துக்குப் படிப்பு வராது என்ற ஆணவக்குரலை எதிர்த்து எரிமலைக் கனலைக் கொட்டியவாறு எழுந்து நின்று மனிதரில் அவனுமோர் மனிதனே! மண்ணன்று என மார்தட்டிப் பகுத்தறிவுச் சுடரைக் கையிலேந்தி வெளிச்சம் காட்டிய தன்மானத்தந்தை பெரியார் பிறந்த ஈரோடு நகரத்திலே - அவரது பாசறையில் பயின்று காஞ்சிக்கல்லூரியில் முறையாகத் தேறியுள்ள நம் மறவர் படையின் அணிவகுப்பு நடைபெறுகிறது, இத்திங்கள் 29ஆம் நாள்!

ஞாயிறன்று பிற்பகல் கழகத்தின் விவசாய அணியினர் நடத்துகின்ற மாபெரும் உழவர் பேரணி!

இப்போதே மாநில முழுவதிலும் பல ஊர்களில் இருந்து தகவல்கள்!

வண்டி வாகனங்கள் தயார்! பயணப்பட்டு விட்டோம்! ஏர்க்கலப்பை ஏந்தியவாறு நூற்றுக்கணக்கானோர் ஊர்வலத்தில் நடந்து வருவோம்! டிராக்டர்களில், லாரிகளில் உழவர் பெருங்குடியின் ஆடவர், பெண்டிர் அனைவருமே ஈரோடு நகரில் அணிவகுப்போம்! ஓட்டு வேட்டையாடுவதற்காக, வானத்தையே கீறி வழிகாட்டப் போவதாகவும் - மணலைக் கயிறாகத் திரிக்கப் போவதாகவும் - வாக்குறுதிகளை அள்ளி வீசிய ஆட்சியாளர்கள் அவற்றையெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்களாக ஆக்கிவிட்ட

நிலையுணர்ந்து விழிப்புற்ற விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், லட்சக்கணக்கில் ஈரோடு நகரின் வீதிகளிலே எழுச்சிப் பேரணி நடத்திடுவோம்!

இச் செய்திகள், எல்லாத் திசைகளில் இருந்தும் வந்திடும்போது என் மகிழ்ச்சிக்கோர் அளவில்லை!

பேரணியைத் தொடர்ந்து மாலையில் நடைபெறும் மாநாட்டில் உழவர்குரல் ஓங்கி ஒலித்திட இருக்கிறது!

வேளாண்துறையின் பல்வேறு அம்சங்களை விபரமாகப் புரிந்து விரல் நுனியில் வைத்துள்ளவரும் - அவற்றுக்கென குரல்கொடுத்து வருபவருமான எனது உடன்பிறப்பு, விவசாய அணிச் செயலாளர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியின் தலைமையில் உழவர் வாழ்வில் ஒளிவிளக்கேற்றும் வகையில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட இருக்கின்றன!

நன்செய் மட்டுமின்றி புன்செய் நிலப்பகுதிகளில் வாழும் விவசாயிகளின் பிரச்சினை குறித்து தெளிவாக உணர்ந்தவரே மாநாட்டின் திறப்பாளர் எனது மற்றொரு உடன்பிறப்பான கண்ணப்பன்!

விவசாயிகள் வேறு, விவசாயத் தொழிலாளர் வேறு என்றில்லாமல் - அந்தத் தொழிலாளர்களின் வியர்வைக்கு மதிப்பளிக்கவும், அவர்கள் கோரிக்கைகளுக்காகப் போராடவும் தயங்காத தம்பி கோ.சி. மணி தான் மாநாட்டில் கொடியினை ஏற்றி வைக்கிறார்!

உழவர் குடியினரின் பிரச்சினைகளை நம்மால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும் என்று நாம் இறுமாப்பு கொள்ளாமல் - மாநாட்டில் நாம் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப் படுத்தவும், செயல்வடிவம் கொடுக்கவும், ஒருமுனையில் நின்று போராடவும் - மாநாட்டுக்குப் பிறகு நமது தோழமைக் கட்சித் தலைவர்களுடன் நானும், நமது பொதுச்செயலாளரும், கழகத்தின் விவசாய அணிப் பிரிவினரும் கலந்துபேச இருக்கிறோம்!

அந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட இருக்கும் முடிவுகளுக்கு, இறுதிவடிவம் கொடுத்திட ஈரோடு மாநாட்டில் வழங்கப்படும் கருத்துகள் மெத்தவும் பயன்படும்!

மாநாட்டுக்கு முதல்நாள் 28-ந் தேதியன்று பல்வேறு மாவட்டங்களில் இருந்துவரும் விவசாயப் பிரதிநிதிகள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை எடுத்துவிளக்கி, தீர்மான வரைவுகளைத் தயாரித்திடுவர்!

29-ந் தேதி காலையில் தீர்மானங்கள் முழு வடிவம் பெறும்!

மாலை மாநாட்டில் அந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் விரிவுரைகள்! விளக்கவுரைகள்! வேலைத் திட்ட அறிவிப்புகள்!

உடன்பிறப்பே! நமது விவசாய அணி மாநில அளவில் ஈரோடு நகரில் நடத்தும் இந்த மாநாட்டுக்கும் - அரசு சார்பில், அமைச்சர்கள், ஓரிருவர் மூலம் - எத்தனையோ இடையூறுகள் விளைக்கப்படுகின்றன!

இதோ இந்தக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கும் போதுகூட - மாநாட்டையும் பேரணியையும் குந்தகப்படுத்திட, குதர்க்கம் பல புரிகின்றனர் கோலேந்திகள் என்ற செய்தியைத் தொலைபேசி வாயிலாக மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் என்.கே.கே. பெரியசாமி அவர்களும், மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் எனக்குத் தெரிவிக்கின்றனர். அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கும், காவல்துறையினருக்கும் நிலைமைகளை அறிவித்து - எல்லாவகையிலும் அமைதி காத்திடவும், சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படவும் ஆவன செய்யுங்கள் என்று; எனக்குத் தகவல் அறிவித்தவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

உடன்பிறப்பே! காரிருள்தான் சூரியனை வழிமறிப்ப துண்டா? கடமையாற்றக் கண்ணியம் தவறாமல் காலைக் கதிரென எழுந்து வருக!

தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரிப்போம் - என்ற புரட்சி கவிஞரின் கவிதைக்கு இலக்கணமாவோம்!

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறுதேக்கிய நல்வாய்க்காலும், நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத் தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள்? எனக்

கேட்டப் பாவேந்தரின் வீறு கொண்ட முழக்கத்திற்கு விடை கண்டு, வினைபுரிய வீரர் பட்டாளம் தயார் என ஈரோடு நகரில் சூளுரைப்போம்!

வா! வா! கொடிப்படை அசையக் கொள்கைக் குன்றே வா! துடிப்புடன் செயலாற்ற என் தூய உடன்பிறப்பே, பகுத்தறிவு முழக்கிய பகலவன் திருநகருக்கு வா! அண்ணா வழியில் அயராது உழைக்கும் அடலேறே வா! வா!

அன்புடன்

மு.க.

28-06-1986

1423. ஜனதா கட்சியின் நல்ல நண்பர்களுக்காக!

உடன்பிறப்பே,

நெருக்கடிநிலை காலத்தில் தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்த இந்திரா கட்சியுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வதற்காக ஜனதா உறவை தி.மு.க. துண்டித்துக் கொண்டதே, அது துரோகமில்லையா?

இப்படியொரு கேள்வியை நண்பர் சோ அவர்களின் துக்ளக் இதழில் - ஒரு கட்டுரையாளர் எழுப்பியுள்ளார்.

ஜனதா கட்சியில் உள்ள முன்னணி நண்பர்களும், செயல்வீரர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சில விபரங்களை இந்தக் கடிதa வாயிலாக நான் வரிசைப்படுத்தி எழுதிட விரும்புகிறேன்.

நெருக்கடி நிலையும் - மிசா சட்டமும் செயல்பட்டபோது அதனை எதிர்த்து முதன் முதலில் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியது தி.மு.கழகம் தான்!

ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டே எமர்ஜன்சியை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்ல - இன்றைய பல ஜனதா தலைவர்களுக்கு அன்று புகலிடம் தரப்பட்டதும் தமிழ்நாட்டில்தான்!

இதனை ஜனதா தலைவர்கள் பலர் பொதுக் கூட்டங்களிலேயே குறிப்பிட்டு தி.மு.க.வுக்கும், தி.மு.க. ஆட்சிக்கும் நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

எமர்ஜன்சியை எதிர்த்து தி.மு.க. ஆட்சி ராஜினாமா செய்துவிடுவது என முடிவெடுக்கலாம் என்ற ஒரு கருத்தை நான் கொண்டிருந்தபோது நீலம் சஞ்சீவிரெட்டி அவர்களும்,

பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், என்னைத்தடுத்து இந்தியாவில் இப்போது தமிழ்நாட்டில்தான் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிகிறது. ஆட்சியைவிட்டு விலகி அதையும் கெடுத்துவிடாதே! என்று அறிவுரை கூறினர்.

ஜெயபிரகாஷ்நாராயண் அவர்களுக்கு தி.மு.க. ஆட்சியில் வரவேற்பளித்தது - அவரைக் கொண்டு ராஜாஜி நினைவகத்தை, திறந்து வைக்கும் விழா நடத்தியது - இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல காமராஜ் நினைவிடத்து மண்டப முகப்பில் இராட்டை சின்னத்தைப் பெரிய அளவில் அமைத்தது - எமர்ஜன்சி எதிர்ப்புத் தீர்மானத்தைத் தி.மு.க. திரும்பப் பெற வேண்டுமென்று மிரட்டியும் அதற்குப் பணியமறுத்தது - ஆகிய காரணங்களால் ஆட்சி கலைக்கப்பட்டுக் கழகத்தினர் மிசாக் கொடுமைக்கு ஆளாகினர்.

கழகத்தினருடன் பழைய காங்கிரஸ்காரர்கள் அவர்களில் பலர் இன்று ஜனதா என்ற பெயரில் இயங்குபவர்கள் மிசாக் கைதிகளாக அடைக்கப்பட்டனர்.

1977-ல் எமர்ஜன்சி முடிவுற்று - பொதுத் தேர்தலை இந்திரா காந்தி அம்மையார் அறிவித்தார்.

தி.மு.க. - ஜனதா தேர்தலில் இடஒதுக்கீடு செய்து கொண்டு இருகட்சிகளும் உருவாக்கிய உடன்பாட்டின்படி தேர்தல் களத்தில் இறங்கின.

இடஒதுக்கீட்டில் சில சிக்கல்கள் தோன்றியபோது திரு. சஞ்சீவரெட்டி அவர்கள் சென்னையிலேயே வந்து தங்கிக்கொண்டு உடன்பாடு சுமுகமாக முடியப் பெரிதும் பாடுபட்டார்.

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியில் தம்பி முரசொலி மாறன் நிற்பது என கழகம் முடிவெடுத்து, தேர்தல் பணிகளும் ஆரம்பமாகி விட்ட சூழலில், மத்திய சென்னையில் திரு.பா. ராமச்சந்திரன் ஜனதா சார்பில் நிற்க வேண்டுமென்று வலியுறுத்தினார். கழக அமைப்புகள் அதற்கு உடன்படவில்லை. பா.ரா.வும் பிடிவாதமாக இருந்தார். மாறன் போட்டியிட வேண்டுமென்பதற்காக ஒரு உடன்பாடு முறிந்து விடக்கூடாது என்று கருதி, மாறனை மத்திய சென்னைத் தொகுதியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு செய்யப்பட்டது.

மத்திய சென்னைத் தொகுதியில் போட்டியிட்ட பா.ரா. அவர்களுக்கு, அவர் திடீரெனத் தேவையெனக் கேட்டதன் பேரில் தலைமைக் கழகம் இரண்டு லட்சரூபாய் ஜனதா கட்சிக்காகக் கடனாகவும் அளித்தது.

மத்திய சென்னையில் வெற்றிபெற்ற திரு. பா.ரா. அவர்கள் மத்திய அமைச்சரானார். அமைச்சரான ஒரு வாரகாலத்திலேயே அந்தக் கடனைக் கூட கழகத்திற்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

பொதுவாகத் தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வும், ஜனதாவும் வாக்குகளைப் பொறுத்தவரையில் கணிசமாகப் பெற்றிருந்தும்கூட, ஆசைத்தம்பி, குமரி அனந்தன், பா. ராமச்சந்திரன், தண்டாயுதபாணி ஆகிய நால்வர் மட்டுமே அந்தக் கூட்டணி சார்பாக வெற்றிபெற முடிந்தது.

அடுத்த சில மாதங்களில் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் வந்தபோது, ஜனதா கட்சி, தி.மு.க.வுடன் உடன்பாடு கொள்ள மறுத்துவிட்டது.

தனித்து நின்ற தி.மு.க. ஐம்பது இடங்களில் வெற்றி பெற்றது. ஜனதா 10 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும், தி.மு.க.வும், ஜனதாவும் பெற்ற வாக்குகளைக் கூட்டிப் பார்த்தபோது நூற்றி இருபது இடங்களுக்கு மேல் அந்த அணி அமைந்திருந்தால் வெற்றி பெற்றிருக்கமுடியும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

தமிழ்நாட்டில் ஜனதா கட்சித் தலைமை, தி.மு.க.வை, தீண்டத்தகாதவர்களைப் போலக் கருதி புறக்கணித்து விட்டது என்பதற்காக மத்திய ஜனதா ஆட்சியுடனோ, ஜனதா கட்சியுடனோ தி.மு.க. பகையை பாராட்டவில்லை.

ரேபரேலி தொகுதியில் தோல்வி அடைந்திருந்த திருமதி இந்திரா காந்தியை கர்நாடக மாநில சிக்மகளூர் இடைத்தேர்தலில் தேவராஜ் அர்ஸ் அவர்கள் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டார். இந்திராவை எதிர்த்து ஜனதா சார்பில் வீரேந்திர பட்டீல் போட்டியிட்டார். சிக்மகளூர் தொகுதியில் உள்ள தமிழர்

பகுதிகளில் ஜனதாவுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய நான் அழைக்கப்பட்டேன். சென்றிருந்தேன். ஜனதாவை ஆதரித்து கர்நாடக மாநில தி.மு.க. பணியாற்றியது.

சிக்மகளூர் தேர்தலில் வெற்றி பெற்ற இந்திரா காந்தி அவர்களைப் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற்றிய ஜனதா அரசின் போக்கினை, ஜனநாயக விரோதமானது எனக் கழகச் சார்பில் நான் அறிவித்தேன்.

ஜனநாயக விரோதம் என்பதற்காகத்தான் எமர்ஜன்சியை கழகம் எதிர்த்தது!

அதே ஜனநாயக விரோதச் செயலை, இந்திரா காந்தியைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கியதின் மூலம் ஜனதா அரசு செய்ததை எங்ஙனம் ஏற்றிட இயலும்?

பிரதமர் மொரார்ஜி தமிழகம் வந்த போது இந்தி எதிர்ப்பு செத்துப் போன குதிரை என்று வர்ணித்தார்.

அந்தப் பேச்சை கழகம் கடுமையாகக் கண்டித்தது. நானும் மொரார்ஜியின் கூற்றை மறுத்து அறிக்கை விடுத்தேன்.

புதுவை மாநிலத்தைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்றார் மொரார்ஜி!

இந்தக் கருத்துகளையெல்லாம் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். ஆதரித்தே பேட்டிகள் அளித்தார்.

ஆனால் கழகம் என்றும் போல் கொள்கை ரீதியாக மொரார்ஜியின் கருத்தை எதிர்த்து முழங்கியது.

பின்னர், இரண்டு ஆண்டு காலத்துக்குள் ஜனதா கட்சிக்குள் ஏற்பட்ட குடுமி பிடிச் சண்டையின் காரணமாக, அவர்களே மிகப்பெரும்பான்மை பலம் பெற்றிருந்த தங்களது ஆட்சியைக் கவிழ்த்துக் கொண்டார்கள்.

பின்னர் 1980-ல் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வந்தது.

சரண்சிங் தலைமையிலிருந்த ஜனதா கட்சியின் தலைவர்கள் - அமைச்சர்கள் - பிஜூ பட்நாயக் போன்றவர்கள் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒன்றாக இணைந்து தேர்தலில் தங்களை ஆதரிக்க வேண்டுமெனக் கோரினர்.

காபந்து அரசின் மத்திய அமைச்சராக இருந்த பிஜூ பட்நாயக் அவர்கள் சென்னைக்கு வந்து என்னையும், எம்.ஜி.ஆரையும் ஒரு பொது இடத்தில் சந்திக்க வைத்துப் பேசினார்.

அந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெறாமல் போனதற்கான விபரங்களை ஏற்கெனவே விரிவாக விளக்கி அறிவித்திருக்கிறேன்.

இதற்கிடையே இந்திரா அம்மையார் 1975-ல் எமர்ஜன்சி பிரகடனம் செய்தது தவறு என ஒப்புக் கொண்டு, அப்போது நடந்த அடக்கு முறைகளுக்கு வெளிப்படையாகவே மன்னிப்புக் கேட்டு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் தி.மு.க.வுடன் பேச்சு வார்த்தைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதிலே ஒரு முக்கியமான விஷயம், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கூட்டணியுடன் ஜனதாவும் உடன்பாடு கொள்ளத் தயாராக இருந்ததும், பேச்சுவார்த்தை நடத்தியதும் தான்!

திரு. பா.ரா. அவர்களே முன்னின்று அந்தப் பேச்சு வார்த்தையை நடத்தினார். நாடாளுமன்றத்தில் ஏழு தொகுதிகள் வரை ஜனதாக் கட்சிக்கு ஒதுக்குவதற்கு கழகமும், இந்திரா காங்கிரசும் ஒத்துக் கொண்டன. ஆனால் பா.ரா. அவர்கள் பத்து தொகுதிகளுக்குக் குறையக் கூடாது என வலியுறுத்தினார்.

ஜனதாவை தமிழ்நாட்டில் மட்டும் நமது அணியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று முதலில் கருத்தறிவித்த இந்திரா காந்தி அம்மையார் பிறகு என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு - ஜனதாவுடன் உடன்பாடு குறித்து மறுபரிசீலனை செய்வது நலம் எனக் கூறினார்!

இத்தகைய ஒரு முரண்பாடான கூட்டணியை தொடக்கத்திலேயே நானும் விரும்பாத காரணத்தால் ஏழு இடத்துக்குமேல் தர இயலாது எனக்கூறி - ஜனதா இல்லாமலே, தி.மு.க., இந்திரா காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் கொண்ட அணி தேர்தல் களத்தில் இறங்கியது.

அந்தத் தேர்தலில் 1980 புதுவை உள்ளிட்ட நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ்

இருபத்தி இரண்டு இடங்களிலும், தி.மு.க. பதினாறு இடங்களிலும், அ.தி.மு.க. இரண்டே இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றன!

உடன்பிறப்பே! இந்த உண்மைகள் எல்லாம் தெரியாத காரணத்தினாலோ - அல்லது தெரிந்தும், தெரியாததுபோல நடிக்கிற காரணத்தாலோ - இந்திரா காங்கிரசுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வதற்காக ஜனதா உறவை தி.மு.க. துண்டித்துக் கொண்ட துரோகத்தைச் செய்தது என சோ அவர்களின் துக்ளக் இதழ் கட்டுரையாளர் எழுதியிருக்கிறார் என்பது மட்டும் தெளிவாகிறது!

அன்புடன்

மு.க.

16-07-1986

1424. மக்கள் பொறுமை இழக்கத் தொடங்கிவிட்டார்கள்!

உடன்பிறப்பே,

கருணாநிதிக்கு எம்.ஜி.ஆர். பதில் என்ற தலைப்பில் எம்.ஜி.ஆர். பெயரால் ஒரு அறிக்கை சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

தி.மு.கழக அமைப்புகளில் தொண்டர் அணிகள் உருவாக்க வேண்டும் என்று நான் ஒரத்தநாட்டில் பேசியதினால்தான், எம்.ஜி.ஆர்., அவரது கட்சிக்காரர்களைக் கத்தி வைத்துக் கொள்ளச் சொல்லி மதுரை மாநாட்டில் பேசியதாக ஒரு அறிக்கை பத்திரிகைகளுக்குப் படித்துக் காட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இன்று எம்.ஜி.ஆர். பெயரில் வந்துள்ள அறிக்கையிலும் அப்படித்தான் காரணம் கூறப்படுகிறது.

எம்.ஜி.ஆரை மட்டும் கண்டித்தால் போதாது - கருணாநிதியையும் கண்டித்தால்தான் மன எரிச்சல் அடங்கும் என்ற விதத்தில் எக்ஸ்பிரஸ் போன்ற சில பத்திரிகைகாரர்கள் எனது ஒரத்தநாடு பேச்சைத் தங்களால் எந்த அளவுக்கு திரித்துக்கூற முடியுமோ அந்த அளவுக்குத் திரித்துக்கூற முயற்சிக்கிறார்கள். PRIVATE ARMY தனி இராணுவம் அமைக்க வேண்டும் என நான் பேசியதாக எக்ஸ்பிரஸ் ஏடு, செய்தி வெளியிட்டதோடு - அவ்வாறே தலையங்கமும் எழுதியுள்ளது வியப்பாக உள்ளது.

மதுரை ரசிகர் மன்ற மாநாட்டில் பேசிய ஒரு அமைச்சர் கருணாநிதி ராணுவம் அமைக்கச் சொல்கிறார் என்று ஒரு அடிப்படையற்ற பொய்யைச் சொல்லி, அதற்காக தி.மு.க.வைத் தடை செய்ய வேண்டுமென்று குதர்க்கமாகக் கூறியதை எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகள் அப்படியே நம்பிக்கொண்டு, கண்டனத் தலையங்கம் தீட்டுவது கழகத்தின்பாலுள்ள காழ்ப்புணர்வையே எடுத்துக் காட்டுகிறது.

படை, பாசறை, போர்வாள், ஈட்டிமுனை, போராட்டம், களம் இவைகள் எல்லாம் அரசியல் மேடைகளில் பயன்படுத்தப்படும்போது அவற்றுக்கு நேரடியாகப் பொருள் கொண்டு திசை திருப்புவது பெருந்தன்மையும் நாகரிகமுமான அரசியல் ஆகாது!

விவசாயப் பிரச்சினைக்காக - ஆசிரியர் பிரச்சினைக்காக - தொழிலாளர் பிரச்சினைக்காக - அலுவலர் பிரச்சினைக்காக - போராட்டம் நடத்துவோம் என்று தொடர்புடைய இயக்கங்கள் அறிவித்தால் அப்போது போராட்டம் என்ற அந்தச் சொல்லுக்கு Agitation அஜிடேஷன் என்றுதான் அர்த்தமே தவிர; War யுத்தம் என்று அர்த்தம் கொள்கிறவர்கள் யாருமிருக்க முடியாது!

போர்வாளே! புறப்படு மாநாட்டுக்கு! என அழைத்தால் - கைப்பிடியுள்ள நீண்ட கத்தியே! மாநாட்டுக்குவா! என்று யாரும் பொருள் கொள்ள மாட்டார்கள்!

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? என்று மனோன்மணியத்திலுள்ள வீரவாசகத்தை அண்ணா அவர்கள் அடிக்கடி கழக மாநாடுகளில் - பொதுக் கூட்டங்களில் பயன்படுத்துவார்.

அவர் படை என்று குறிப்பிட்டது கழகத்தின் தொண்டர் களையே தவிர, ARMY அதாவது ராணுவத்தையல்ல!

களம் காண்போம் வா தம்பீ! என அண்ணா பலமுறை அழைத்தது, அமைதி வழியிலான அறப் போர்க்களத்தைத் தானே தவிர - War Field எனப்படும் பீரங்கிகள் முழங்கும் யுத்தகளத்தையல்ல!

தொண்டர் அணி - தொண்டர் படை - அமைதி அணி - இவைகள் ஒரத்தநாடுப் பெருவிழாவில், என்னால் முதன்முதலாகக் கூறப்பட்ட சொற்றொடர்கள் அல்ல!

தொண்டர் அணிகள் - தொண்டர் படைகள் இவையெல்லாம் எல்லாக் கட்சிகளிலும் இருக்கின்றன!

எம்.ஜி.ஆர். கட்சியினர்கூட கோபாலபுரம் - மாநகராட்சி மன்ற மைதானத்தில் ஐநூறு அல்லது அறுநூறு பேர் சீருடை அணிந்து தொண்டர் பணிக்கான பயிற்சிகளைப்பெற்று - அது குறித்த செய்திகள், படங்கள் ஏடுகளில் அப்போதே வெளிவந்துள்ளன.

பல ஆண்டுகாலமாக எத்தனையோ கட்சி மாநாடுகளில் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் - மாநாட்டு செயலாளர் - மாநாட்டுத் தொண்டர் படைத்தலைவர் என்றெல்லாம் செய்திகள் விளம்பரங்கள் வந்ததும் உண்டு. இப்போதும் வந்து கொண்டிருக்கின்றன.

1940ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவாரூரில் நடைபெற்ற S.I.L.F. தென்னிந்திய நலஉரிமைச் சங்க நீதிக்கட்சி மாநாட்டில் திரு. டி.எஸ். ராசகோபால், திரு. வி.எஸ்.பி. யாகூப் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட தொண்டர் படையில் நான் ஒரு தொண்டராக இருந்து பணியாற்றியிருக்கிறேன்.

எனவே படை என்பது ARMY ஆகாது அரசியல் கட்சிகளில்!

எவ்வாறு EXPRESS எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்பது துரித ரயில் பத்திரிகை என்ற நேரடி மொழிபெயர்ப்புக்கு உள்ளாகாதோ அவ்வாறுதான் படை என்று கழகத்தினரோ, மற்ற கட்சியினரோ தொண்டர் படையைக் கூறும் போது ARMY இராணுவம் என்று ஆகிவிடாது!

பொறுப்பற்ற முறையில் இராணுவம் அமைக்க வேண்டுமென நான் சொன்னதாக, பொறுப்பற்ற முறையில் எழுதுவதும், பேசுவதும் முறையல்ல! பத்திரிகை தர்மம் அல்ல! அரசியல் நெறியுமல்ல!

கழக மாநாடுகள் அனைத்திலுமே அண்ணா அவர்கள் பேசும்போது கழகத் தொண்டர்கள் ராணுவ உடை அணியாதச் சிப்பாய்களாகச் செயல்பட வேண்டுமென்று பலமுறை கூறியது, கட்டுப்பாடு - ஒழுங்கு இவைகளைப் போற்றி - பொது நிகழ்ச்சிகளில் அமைதி காத்திட வேண்டுமென்பதற்காகத் தானே தவிர, ராணுவம் அமைத்து செயல்டுவோம் என்ற நோக்கத்தில் அல்ல!

நான் செல்லும் நிகழ்ச்சிகள், வரவேற்புகள், கொடியேற்று விழாக்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் இவற்றில் என்ன தான் சில பத்திரிகைக்காரர்கள் இருட்டடிப்பு செய்தாலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள்.

அவ்வாறே ஓரத்தநாட்டில் பேரணி, பொதுக்கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் பெருந்திரளாக மக்கள் குழுமியிருந்தனர்.

முன்னின்று கழக உடன்பிறப்புகளுடன் பணியாற்றி விழாவைப் பெரும் சிறப்புடன் நடத்திய தம்பி எல். கணேசன், எஸ்.பி.யிடம் கேட்டிருந்தும்கூட இந்தக் கூட்டத்தின் பாதுகாப்புக்குப் போலீசார் அனுப்பப் படவில்லையெனக் கூறினார்.

மக்கள், அலை மோதிடும் கடலெனக் காட்சி தந்தனர். கழகத்தினர் அவர்களைக் கட்டுப்படுத்தி ஒழுங்குற உட்கார வைக்கப் பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

அந்தக் கூட்டத்தில்தான் நான் பேசும் போது குறிப்பிட்டேன். எங்களைப் பாதுகாக்க மேடையைச் சுற்றிப் போலீசார் நிற்கவேண்டுமென நான் கேட்கவில்லை. குழுமியிருக்கும் மக்கள் கலைந்து செல்லும் போது எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்பட்டுவிடாமலிருக்க - போலீசார் போதுமான அளவுக்கு இருக்க வேண்டாமா? முதலமைச்சர் போலீசாரை மிரட்டி, என் கூட்டங்களுக்குப் போகக்கூடாது என்று கூறியிருக்கிறார். எனவே போதுமான அளவுக்கு போலீசார் வரமாட்டார்கள், நம்முடைய கழக அமைப்புகளில் தொண்டர் அணிகளைத் தயார் செய்து - அந்தத் தொண்டர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளாமல் - அதே சமயம், சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அமளி நடத்தும் சமூக விரோதிகளை அடையாளம் காட்டுகிற அமைதி அணியாகச் செயல்பட வேண்டுமென சொன்னேன்.

அமைதி அணி - தொண்டர் படை - இவற்றுக்கு இந்தக் கழகம் அல்லது அரசியல் கட்சிகள் கொண்டுள்ள அர்த்தத்தை அனர்த்தமாக்கிக் கொண்டு, அமைச்சர்களும், முதலமைச்சரும்தான் பேசுகிறார்கள் என்றால் எக்ஸ்பிரஸ் போன்ற இதழாளர்களும் அதேவிதம் விமர்சிப்பது வேதனைக்குரியதாகும்!

எம்.ஜி.ஆர். ஏதோ மதுரை மாநாட்டில் தனது கட்சியினர் கத்தி வைத்துக் கொள்ள வேண்டுமெனப் பேசியதாக வந்துள்ள செய்தியால் நாடு பரபரப்பு அடைந்துள்ளது!

ஆனால் உண்மை என்னவென்றால், அவர் சொல்லாமலே அவரது கட்சிக்காரர்கள் - ஏன்? எம்.எல்.ஏ.க்களே கூட கத்தியைவிட வலுவான - கூர்மையான ஆயுதங்களை ஏந்திக்கொண்டு எம்.எல்.ஏ. விடுதியிலேயே அட்டகாசம் செய்ததும் - அரசுத் தோட்டத்திற்குள்ளேயே தம்பி ரகுமான்கான் எம்.எல்.ஏ. வீட்டில்

புகுந்து அரிவாளுடன் பாய்ந்ததும் - இன்னோரன்ன அதிதீவிர வன்முறைச் செயலில் ஈடுபட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள்.

1972ஐ தனது கட்சியினருக்கு எம்.ஜி.ஆர். நினைவு படுத்துவது ஏன் தெரியுமா?

1972-ல் தான் - அவரது கட்சியினர் ராமநாதபுரத்தில் அமைச்சர் மன்னை கூட்டத்தில் கற்களையும், சோடா புட்டிகளையும் வீசி மன்னை அவர்களின் தலையில் பலத்த காயம் ஏற்படுத்தினர்.

மதுராந்தகத்தில் நான் பேசிய கூட்டத்தில், கல்லெறிந்து பெருங்கலவரம் செய்ததும் 1972-ல் தான்!

திருத்தணிக் கூட்டத்துக்குச் சென்ற வேழவேந்தனின் காரைக்கொளுத்தி, அடியோடு அந்தக் காரை சாம்பலாக்கியதும் 1972-ல் தான்!

எம்.ஜி.ஆர். படத்தை ஒட்டிக்கொண்டுதான் செல்ல வேண்டுமென பஸ்களையும், லாரிகளையும் வழிமறித்து - அதனை மறுக்கின்ற டிரைவர்களையும் தாக்கி, லாரிகள் பஸ்களை அடித்து நொறுக்கியதும், தீவைத்ததும் 1972-ல் தான்!

இப்படி எண்ணற்ற வன்முறைகளை அன்றைக்கு எம்.ஜி.ஆரின் கட்சியினர் செய்தனர்.

அதையே இப்போதும் திரும்பச் செய்திட வேண்டுமென எம்.ஜி.ஆர். தூண்டுகிறார்!

அதனால்தான் இந்தக் கத்திப் பேச்சு!

அண்ணா பெயரால் கட்சி! அண்ணா அரசு இதுவெனப் போலி விளம்பரங்கள்!

ஆனால், கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு! என்ற அண்ணாவின் அறிவுரையை மட்டும் காலில் போட்டு மிதிப்பார்களாம்!

பாவம்! எம்.ஜி.ஆர். ஆத்திரத்தில் இந்த முடிவு எடுத்துள்ளார்!

மதுரையில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடந்த அதே ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பந்தல் போட்டு ரசிகர் மன்ற மாநாடு!

மாநாட்டுப் பந்தலே, அந்த மைதானத்தில் பாதியளவு தான்!

அந்தப் பந்தலில் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட கூட்டம்!

ஆனால் நமது மாநாட்டிலோ - ரேஸ்கோர்ஸ் மைதானம் நிரம்பி வழிந்து, மதுரையே மக்கள் வெள்ளத்தால் குலுங்கியது!

ரசிகர் மாநாட்டில் லாரிகள், பஸ்கள், ஏராளம்! அதனால் போக்குவரத்து சங்கடம்! மக்கள் கூட்டம் எதிர்பார்த்தபடி இல்லை! வந்த கூட்டமும் தானாக வந்ததல்ல!

எனவே ஆத்திரத்தில் கத்தினார்! கத்திக் கத்தி - இறுதியாக ஆளுக்கொரு கத்தியை எடுத்துக்கொள்க என்று ஆணையிட்டுவிட்டார்!

இனி, இந்த உருட்டல் மிரட்டல் எல்லாம் எடுபடாது!

மக்கள் பொறுமையிழக்கத் தொடங்கி விட்டார்கள்.

அன்புடன்

மு.க.

17-07-1986

1425. மான்குட்டிகளை விழுங்க வரும் மலைப்பாம்பு!

உடன்பிறப்பே,

எல்லாத் துறைகளிலும் பேதங்கள் ஒழிக்கப்பட்டு - சமத்துவ நிலை உருவாக வேண்டுமானால் ஓட்டப் பந்தயத்தில் பலவீனமானவர்களை முன்னுக்கு நிறுத்திப் பலமுடையோரைப் பின்னுக்கு நிறுத்திப் போட்டியை அமைப்பது போல, பலநூறு ஆண்டுகளாக எல்லா வகையிலும் வலுவிழந்து கிடக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சாதாரண சாமான்ய மக்கள் பெரும்பான்மையாக நிறைந்துள்ள கிராமப்புறங்களில் கல்வி, வேலை வாய்ப்புக்களுக்கான முன்னுரிமையும், இடஒதுக்கீடு முறையும், தரம் உயர்வும் புறக்கணிக்கப்படலாகாது என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கொண்டு - அதற்கு விபத்து வரும் வேளைகளில் எல்லாம் போர்க்குரல் கொடுப்பதில் சற்றும் தயங்காமல் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டு வருகிறது.

புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் மத்திய அரசு, மாரீச மான் வடிவமெடுத்துக் கொண்டு கல்வித்துறையின் முழுமையான வாய்ப்புகள் அனைத்தையும் - ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருசில நூறு பிள்ளைகள் மட்டுமே பெற்று முற்றிலும் புதிதான ஒரு உயர்வாழ்க்கத்தைப் படைத்திடும் மோசடிக்கு வித்திடும் திட்டத்துடன் வித்தாரம் பேசிக்கொண்டிருக்கிறது.

புதிய கல்விக் கொள்கையின் புத்திர பாக்கியங்களில் ஒன்றாகத்தான் நவோதயா எனும் திருநாமத்துடன் மாதிரிப்பள்ளியொன்று மாவட்டந்தோறும் குதிக்கப் போகிறதாம்!

இரண்டுகோடி ரூபாயை மத்திய அரசு இந்த மாதிரிப் பள்ளிக்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் செலவழிக்கப்போகிறது!

கிராமங்களில் மட்டுமல்ல, ஏன் நகரங்களில்கூட, கூரையில்லாத பள்ளிக் கட்டிடங்கள் - சுவரில்லாத பள்ளிக் கொட்டகைகள் - போதுமான ஆசிரியர்கள் இல்லாத

நிலை - மாட்டுத் தொழுவங்கள், மரத்தடிகள் இவைகளே கல்விக்கூடங்களாகச் சத்துணவு மையங்களாகச் செயல்படும் கொடுமை - இன்னமும் களையப்படவில்லை!

கும்பிக்குக் கஞ்சியில்லை; கொண்டைக்குப் பூ கேட்கிறது என்பது போல பெரும்பாலான வசதியற்ற மக்கள் வீட்டுப்பிள்ளைகள் இலட்சக்கணக்கானோர், தரமான கல்வி வாய்ப்பைப் பெறக்கூடிய சூழல் அமையாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது, மத்திய அரசு - அந்த சீர்குலைவைப் போக்குவதற்கு முன்வராமல், இரண்டு கோடி ரூபாயை ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்விக் கூடங்கள், கல்வித் தரம் உயர்வதற்கும் அதன் காரணமாக எல்லாப் பிள்ளைகளும் நிறைவான கல்வி வாய்ப்பைப் பெறுவதற்கும் செலவிட மனமில்லாமல், மாதிரிப் பள்ளிகளுக்கு மட்டுமே வாரியிறைத்து ஒரு புதிய ஜாதியை ஆண்டவனின் உச்சந்தலை மேல் உற்பத்தியான ஜாதியென்று சிருஷ்டி செய்ய முனைவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பது மட்டுமல்ல, எதிர்க்கப்படக்கூடியதுமாகும்!

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உத்திரப் பிரதேசம், பீஹார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இந்தி படித்தவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புகள் பெருகி வழிவது போலவும் - அப்படிப் பொங்கி வழிகிற வேலைவாய்ப்புகளை இந்தி படிக்காமல் நமது மாநிலத்துப் பிள்ளைகள் கோட்டை விட்டு விடக்கூடாது என்பது போலவும் இந்த மாதிரிப் பள்ளிக்காக வாதாடும் வக்கீல்கள் ஒரு மாய்மாலக் கருத்தைத் தூவுகிறார்கள்.

இந்தி ஆதிக்கத்தின் திருட்டுத் தலையை உள்ளே நுழைப்பதற்காகத்தான் - முதலில் மாதிரிப்பள்ளி எனும் காலை விட்டுப் பார்க்கிறார்கள் இந்தக் கன்னக்கோல் போர்வழிகள் என்பதை உணர்ந்துதான் நம்முடைய கழகத்தின் சார்பில் ஜூலை 13, 14, 15 ஆகிய நாட்களில் தமிழக முழுவதும் இந்த மாதிரிப் பள்ளிகளை எதிர்த்துக் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆங்காங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி, இந்தி ஆதிக்கத்துக்கும் - கல்வித்துறையில் ஏற்கெனவே தாண்டவமாடும் பேதாபேதங்கள் போதாதென்று இப்போது மத்திய அரசாங்கமே, மாநில அரசின் துணையோடு அந்தப் பேதங்களை மேலும் வளர்ப்பதற்கும் - தங்களது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

திராவிடர் கழகம் இந்த மாதிரிப்பள்ளிகளின் சதித்திட்டத்தை மக்களுக்கு விளக்கி, அறப்போர் ஒன்றை நடத்தியிருக்கிறது.

அண்மையில் மதுரையில் எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு நடைபெற்றது. நண்பர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் அந்த மாநாட்டில் கூறியபடி - அ.தி.மு.க. என்பது உடல்; எம்.ஜி.ஆர். மன்றம் என்பது உயிர் - எனவே உயிர் போன்ற உயர்ந்த அந்த மாநாடு; அரசாங்கமே முன்னின்று நடத்திய மாநாடு மட்டுமல்ல - அரசாங்க நிகழ்ச்சி போலவே முதலமைச்சரால் அறிவிப்புகளும் வெளியிடப்பட்ட மாநாடாகும்!

விவசாயிகளுக்கு அபராத வட்டி ரத்து செய்யப்படும் என்று உத்திரவிடப்பட்ட அதே நிகழ்ச்சியில், அதே முதலமைச்சர் அவரது கட்சியினரைக் கத்தி வைத்துக் கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார் என்றால் இரண்டுமே அரசாங்க அறிவிப்புகள்தானே! அத்துடன் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தும் - இந்திய ஒருமைப்பாட்டைப் பேணிடும் பாடத்திட்டங்களை வகுத்திட வேண்டுமெனக்கூறும் மத்திய அரசின் கல்விக் கொள்கையை வரவேற்றும் வாசகங்கள் அமைக்கப்பட்டு புதிய கல்விக் கொள்கைக்கு ஆதரவு என்று தலைப்பும் தரப்பட்டுள்ளது. எனவே இதுவும் எம்.ஜி.ஆர். மன்றம் என்ற உயிரின் சார்பாக - அதாவது தமிழக எம்.ஜி.ஆர். அரசின் சார்பாக பிரகடனப் படுத்தப்பட்ட கொள்கைதான்!

இந்தி பயிற்சி மொழி என்பதை மட்டும் அகற்றினால் போதும் - மற்றபடி மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை எம்.ஜி.ஆர். அரசு வரவேற்கிறது என்பது தீர்மானத்தின் தாத்பர்யம்.

கல்வித்துறை - வேளாண்மைத்துறை போன்ற மாநில உரிமைகளை மத்திய அரசு எடுத்துக் கொள்வதைக் கவலைதரும் காரியம் என்று மதுரை எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு தீர்மானம் வடிக்கும் போது கூட, இதனால் பிரிவினை சக்திகள் வலுப்பெற்றுவிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதாகச் சமாதானம் சொல்லி, மறைமுகமாக மத்திய அரசின் மன்னிப்பைக் கோருவதை எளிதாகவே எல்லோரும் புரிந்து கொள்ள முடிகிறது.

மத்திய அரசின் புதிய கல்வித் திட்டத்தை நாம் எதிர்ப்பதற்கு இந்தி ஆதிக்கம் மேலோங்கும் என்பது மட்டும் காரணமல்ல!

ஜூலை 13, 14, 15 ஆகிய நாட்களில் நாம் நடத்திய கண்டனக் கூட்டங்களின் தலைப்பே, இந்தியைத் திணிக்கும், ஏழை எளியோரைப் புறக்கணிக்கும் புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் பொதுக் கூட்டம் என்பதேயாகும்.

இந்திய ஒருமைப்பாட்டைப் பேணிடும் பாடத் திட்டங்களை வகுத்திட வேண்டுமெனக் கூறும் மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு வரவேற்கிறது

என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது!

இதோ வடக்கத்தியர்கள் தயாரித்த ஏழாம் வகுப்புக்கான பொதுவான பாடத்திட்டம் இந்தியாவின் இடைக்கால வரலாறு என்பது நூலின் பெயர்! இந்த வரலாற்று நூலில் எவை எவை அடங்கியுள்ளன என்பதற்கு முதல்பக்கத்தில் ஒரு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதோ அந்த அட்டவணை:-

1 The Rajput Period, 2 Life during the Rajput Period, 3 South India during the Rajput Age, 4 The Arabs in India, 5 Mahmud Ghaznavi, 6 Mohammad Ghori, 7 The Slaves Sultans, 8 Khalji Dynasty, 9 The Tughluq Dynasty, 10 The Sayyads and the Lodhis, 11 Life under the Sultans, 12 Muslim Kingdoms of South India, 13 Vijayanagar Kingdom, 14 Bhakti Movement, 15 The Mughals come to India, 16 Humayun the King, 17 The Suri Dynasty, 18 Akbar the Great, 19 Jahangir the Just, 20 Shahjahan the Builder, 21 Aurangzeb Alamgir, 22 The Marathas, 23 The Sikhs, 24 Life under the Mughhals, 25 Fall of the Mughal Empire.

அந்த அட்டவணையில் உள்ள இருபத்தி ஐந்து தலைப்புகளில் ராஜபுத்திரர்கள், ராஜபுத்திரர் காலத்து தென்னிந்தியர், இந்தியாவில் அராபியர்கள், மராத்தியர், சீக்கியர், மொகலாயர் என்றெல்லாம் இருக்கிறதே அல்லாமல் ராஜராஜசோழன், ராஜேந்திரசோழன், பல்லவ மன்னர்கள் என்றெல்லாம் தலைப்புகள் உண்டா? இல்லை! அவர்களைப் பற்றி புத்தகத்தில் எங்கோ சந்து பொந்துகளில் இரண்டொரு பகுதிகள், அவ்வளவுதான்!

பக்தி இயக்கம் என்பதிலேகூட பெரும்பாலும் வடக்கத்தியர்கள் படங்கள், பெயர்கள்தான் இந்த ஏழாம் வகுப்பு ஆங்கிலப் புத்தகத்திலே இடம் பெற்றிருக்கின்றன!

ஓநாயிடம் போய் வயலின் இசையை எதிர்பார்ப்பது போல - ஒருமைப்பாடு என்ற பெயரால் தமிழர் வரலாறு, கலாச்சாரம், மொழி, நாமும் ஒரு தேசிய இனம் என்ற உணர்வு, அனைத்தையும் ஒழிக்கத் திட்டமிடும் மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியினர் வரவேற்பு கூறித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

மாதிரிப்பள்ளிகள் ஆறாம் வகுப்பிலிருந்துதான் தொடங்குமென்றும் - முதல் இரண்டு ஆண்டுகள் வரையில் மாநில மொழியே பயிற்சி மொழியாக இருக்குமென்றும் - எட்டாம் வகுப்பிலிருந்து இந்தியைப் பயிற்சி மொழியாகக்கொள்ளும் தவிர்க்க இயலாத நிலைமை ஏற்படுமென்றும் தெளிவாகத் தெரிகிற காரணத்தால் - சுமார் ஐம்பது ஆண்டுக் காலமாக இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர்க் களத்தில் நிற்கும் நாம் - இந்த மாதிரிப்பள்ளித் திட்டத்தை எதிர்க்கிறோம்!

அடுத்ததாக - ஒருமைப்பாடு என்ற பெயரால் நமது தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரம், மொழி, இலக்கியம், வரலாறு, இனஉணர்வு எனும் மான்குட்டிகளை விழுங்கும் மலைப்பாம்பாகவே மத்திய அரசின் புதிய கல்வித்திட்டம் ஊர்ந்து வருவதால் அதனை நாம் எதிர்க்கிறோம்!

ஏற்கெனவே கல்வித்துறையில் இருக்கின்ற பேதங்களால் முடக்கப்பட்டுக் கிடக்கிறவர்களை, கைதூக்கி விட்டுக் கரையேற்றுவதற்கு மாறாக - அவர்களை மேலும் ஆழ்குழியில் தள்ளிவிட்டு - அறிவுத்துறை வாய்ப்புகளை மேட்டுக்குடியினர் சிலருக்கே வாரித்தருவதற்கு வழிவகுக்கும் மாதிரிப்பள்ளிகளை நாம் எதிர்க்கிறோம்!

மாநில அரசின் கல்விக் கூடங்கள் பாழ்பட்டுக் கிடப்பதையும் - தரம் தாழ்ந்து கிடப்பதையும் சீர்படுத்த மாவட்டந்தோறும் இரண்டு கோடி ரூபாயை மாநில அரசின் மூலம் வழங்கிட வேண்டுமேயல்லாமல், மாதிரிப்பள்ளிகளின் மூலம் மத்திய அரசு மேலும் ஒரு உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறிப்பதினால் இந்த மாதிரிப்பள்ளிகளை நாம் எதிர்க்கிறோம்!

மன்ற மாநாடு கூட்டியவர்களில் சிலருக்கு இந்த நிலைமைகள் புரியுமெனினும் - கூடிய மன்றத்து ரசிகர்களுக்கு இதெல்லாம்

புரியாது என்ற நம்பிக்கையில் எம்.ஜி.ஆரின் கருத்துகள் தீர்மானமாகியுள்ளன!

பாவம்! முதலில் ஒருசில அமைச்சர்கள் மாதிரிப் பள்ளிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துப் பார்த்தார்கள்!

இனிமேல் வாயடைத்துப் போய்விடுவார்கள்!

தப்பித்தவறி வாய் திறந்தால் - மன்றத்து ரசிகர்களின் கைகளில் உள்ள கத்திகள் அவர்களது வாயைக் கிழித்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்!

உடன்பிறப்பே, 1937-1938 ஆம் ஆண்டு முதல் மொழிப்போர்க்களத்தில் நின்று அடக்குமுறைகளை ஏற்ற வரலாறு திராவிட இயக்கத்திற்கு உண்டு!

மத்தியில் உள்ளவர்களின் ஆதிக்கம் மொழி உருவிலே வந்தாலும் - மாநில உரிமைகளைப் பறிக்கும் அதிகாரக்குவிப்பு என்ற வடிவிலே வந்தாலும் - நமது கலாச்சாரம், வரலாறு, இலக்கியம், இனஉணர்வு ஆகியவற்றை ஒழிக்க ஒருமைப்பாடு என்ற வெள்ளாட்டுத் தோல் போர்த்திய வேங்கையென ஒளிந்து ஒளிந்து வந்தாலும் - ஓட்டைக்குடிசைப் பிள்ளைகளைப் பெற்றோரும் தருகிற வரிப்பணம் கொண்டு மேட்டுக் குடிப்பிள்ளைகளுக்குக் கோடிக்கணக்கில் செலவழிக்கிற முதலாளித்துவ மனப்பான்மைக்கு நவோதயா எனும் முகமூடி போட்டுக்கொண்டு வந்தாலும் -

அதனைத் தடுத்து நிறுத்தும் அறப்போரில் தி.மு.கழகம், முன்வைத்த காலைப் பின்வைக்கப்போவதில்லை!

ஜனநாயகத்தைக் காத்திட ஆட்சியையே 1976-ல் விலையாகக் கொடுத்த சரித்திரம் நமக்கு உண்டு!

அந்தக் கொள்கை உறுதிப் பின்னணியோடு நமது போர்க்கொடியை உயர்த்திப் பிடிப்போம்!

அன்புடன்

மு.க.

18-07-1986

1426. இந்து - எக்ஸ்பிரஸ் ஏடுகளின் விஷமம்!

உடன்பிறப்பே,

ஆளுக்கொரு கத்திவைத்துக் கொள்ளுங்கள் என ஆளுங்கட்சிக்காரர்களுக்கு நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், முதலமைச்சர் பதவியில் இருப்பதைக்கூட மறந்துவிட்டு ஆணையிட்டார் அல்லவா! அந்த வன்முறைப் பேச்சை எதிர்த்து எல்லாக்கட்சித் தலைவர்களுமே மறுப்புக்கருத்து தெரிவித்தவுடன், இந்து, எக்ஸ்பிரஸ் ஆகிய ஆங்கிலப் பத்திரிகையாளர்கள் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு - எம்.ஜி.ஆர். அவர்களின் பெயருக்கு ஒருதுளி மாசுமருவும் வந்துவிடக்கூடாது என்ற துடிப்போடு - தி.மு.க. தலைவர் கருணாநிதி, தனது தொண்டர்களை ARMY இராணுவம் அமைக்கச் சொன்னதையொட்டி முதலமைச்சரும் தனது தொண்டர்களைக் கத்தி வைத்துக்கொள்ளச் சொல்லியுள்ளார். இரண்டுமே தவறானது. திரும்பப்பெற வேண்டிய பேச்சுக்கள் என்று தலையங்கங்களை தீட்டி மகிழ்ந்தன.

கடந்த ஒன்பதாம் தேதியன்று நான் ஓரத்தநாட்டில் கலந்துகொண்ட கூட்டத்திற்குப் போலீஸ் மிகமிகக் குறைந்த எண்ணிக்கையினரே வந்தது குறித்துச் சுட்டிக்காட்டி - கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கில் குழுமிடும் பொதுமக்களுக்குப் பாதுகாப்பாக கழகத் தொண்டர் அணியினை ஆங்காங்கு அமைத்திடல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன்.

போலீசார் வரவில்லை என்பதற்காகத் தொண்டர் அணியினர் எவரும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் - சட்டத்தைக் கையிலெடுத்து அமளி விளைவிக்கிற சமூக விரோதிகளை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டுமென்றும் தெளிவாகத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தேன்.

தொண்டர் அணி - தொண்டர் படை - என்ற சொற்றொடர்கள் பல ஆண்டு காலமாக பல அரசியல் கட்சிகளால் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கான ஆதாரங்களையும், அரசியல் கட்சிகள் தொண்டர் படை என்று கூறுவது ARMY இராணுவம் என ஆகாது எனவும் Volunteer Corps என்பதே தொண்டர் படை எனவும் விளக்கி முரசொலியில் 17.7.86 கடிதத்தில் விரிவாக எழுதியிருந்தேன்.

ஒரத்தநாடு பேரணி - பொதுக்கூட்டப் பேச்சும் அதனைத் திரித்துக்கூறிய அ.தி.மு.க. அமைச்சர் ஒருவருக்காக நான் அளித்த தொடர்ச்சியான விளக்கங்களும் தமிழ் நாளேடுகள் அனைத்திலும் வெளிவந்துள்ளன.

பொது நிகழ்ச்சிகளில் பாதுகாப்புக்காக அமைதி அணியாகக் கழகத் தொண்டர் படை அமைக்கவேண்டும் என்பதற்கும் - முதலமைச்சர், தனது கட்சியினர் அனைவரும் ஆளுக்கொரு கத்தி வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கும் - இருக்கின்ற வேறுபாட்டை வேண்டுமென்றே திட்டமிட்டு இந்துவும், எக்ஸ்பிரசும் மறைத்துத் தலையங்கம் தீட்டி விஷத்தைக் கக்குவது அவைகளிடம் நாம் எதிர்பார்க்கக்கூடியது தான் எனினும், நமது மறுப்பைத் தெரிவிக்க வேண்டியது கடமையாகும்.

தமிழ் நாளேடுகளைப் படிப்பது தமது தரத்துக்கு குறைவானது என இந்து, எக்ஸ்பிரஸ் ஆசிரியர்கள் எண்ணி, அவற்றைப் படிக்காமல் விட்டிருந்தாலுங் கூட - அந்தப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் என்னைப் பேட்டி கண்ட போது தொண்டர் படை - அமைதி அணி என்றால் என்ன என்பதை விளக்கியிருக்கிறேனே? அதைக் கூடவா அந்த நிருபர்கள், அந்தப் பத்திரிகையாளர்களின் ஆசிரியர் குழுக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லவில்லை?

ஏற்கெனவே சென்னை, நெல்லை, திருச்சி, சேலம், மதுரை போன்ற மாவட்டங்களில் கழகத்திற்குத் தொண்டர் படைகள் இருக்கின்றன. அந்தத் தொண்டர் படையினர் கழக நிகழ்ச்சிகளில் அமைதி காக்கும் பொறுப்பை ஏற்றும் பணியாற்றி வருகின்றனர். அதே போல் மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைதி காக்கும் அணிகளை உருவாக்க வேண்டுமென்றுதான் ஒரத்தநாட்டில் பேசினேன்.

நான் கலந்து கொள்ளும் கழக நிகழ்ச்சிகள், கழகத் தலைவர்கள் கலந்து கொள்ளும் பேரணிகள், மாநாடுகள் ஆகியவற்றுக்குப் போலீசார் அனுப்பப்படுவதில்லையென்றும் - ஓரிரு இடங்களில் பத்துப் பேர் காவலர்கள் அனுப்பப் பட்டாலுங்கூட, அந்த அளவுக்கு ஏன் அனுப்பினாய்? என்று அதிகாரிகள் மிரட்டப்படுகிறார்கள் என்றும் ஒரு மாத காலமாக நாம் பேசியும் எழுதியும் வருகிறோம்.

அதையெல்லாம் தங்களது கடைக்கண்ணால் கூட கண்டுகொள்ள விரும்பாத இந்துவும், எக்ஸ்பிரசும் - இப்போது எம்.ஜி.ஆரைக் காப்பாற்ற ஓடோடி வந்து அவர் மட்டும் தவறு செய்யவில்லை, கருணாநிதி பேசியதும் தவறுதான் என்று என் மீது வீண்பழியொன்றை வீசிட முனைவது விஷமமா? அல்லது வழக்கம் போல் விஷமா?

ARMY - இராணுவம் - என்று நான் சொல்லாத ஒரு வார்த்தையை சொல்லியதாகக் கற்பனை செய்து கொண்டு ஒரு அமைச்சர் மதுரை மாநாட்டில் தி.மு.க.வைத் தடை செய்ய வேண்டுமென்றார்.

அதைப் பிடித்துக்கொண்டு இந்துவும், எக்ஸ்பிரசும் - கருணாநிதி தொண்டர் படை என்று சொன்னது ARMY - இராணுவத்தைத்தான் என எழுதித் தீர்த்து எரிச்சலைக் கொட்டுவது, நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நச்சு மனப்பான்மையே ஆகும்!

களம் காண வாரீர்! என்றால் அரசியல் அரங்கில் War Field யுத்தகளம் என்று பொருள் அல்ல!

அதுபோல தொண்டர் படை என்ற சொற்றொடருக்கு ARMY இராணுவம் என்று அர்த்தமல்ல என்று பல சான்றுகளுடன் விளக்கியும் தொண்டர் படை என்றால் ARMY இராணுவம்தான் என சாதிப்பவர்களைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

இந்துவும், எக்ஸ்பிரசும் போகிற போக்கைப் பார்த்தால் யாராவது படைமருந்து விளம்பரம் செய்தால் கூட ARMY MEDICINE இராணுவ மருந்து என நேரிடையாக மொழி பெயர்த்துக் கொண்டு அவஸ்தைப்பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தொண்டர் படை அமைப்புக்கள் இல்லாத எந்தவொரு கட்சியையாவது இந்துவோ, எக்ஸ்பிரசோ காட்ட முடியுமா?

தொண்டர்கள் இல்லாத கட்சிகள் சில இருக்கலாம். நான் கேட்பது தொண்டர்கள் உள்ள கட்சிகளைப் பற்றியது!

"We would urge the Chief Minister and the President of the D.M.K. to withdraw their call to arms and help restore decency to the State politics and administration"

எனக் குறிப்பிட்டு முடித்திருந்தது!

ஆயுதமேந்தச் சொல்லியதை முதலமைச்சரும், தி.மு.க. தலைவரும் வாபஸ் பெற்று மாநில அரசியலிலும் நிர்வாகத்திலும் கண்ணியத்தை உருவாக்க உதவிட வலியுறுத்துகிறோம் என்பது அதன் தமிழாக்கமாகும்!

ஆயுதமேந்தச் சொன்னவர் ஆளுகிற முதலமைச்சர்! அமைதி அணி அமைத்து பொது நிகழ்ச்சிகளில் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளாமல் பணியாற்றி ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாத்திடுமாறு சொன்னவன் நான்!

வாபஸ் வாங்க வேண்டியது முதலமைச்சரின் கத்திப்பேச்சே தவிர - கருணாநிதியின் அமைதி அணி அமைக்கும் பேச்சையல்ல!

நான் ஆயுதம் ஏந்தச் சொன்னதாக திட்டமிட்டுப் பொய்யை வேண்டுமென்றே எழுதியுள்ள இந்து ஏடு தான், அந்த வாசகத்தைத் திரும்பப் பெற வேண்டும்! அல்லது திருத்தமாவது உடனடியாகத் தக்க இடத்தில், தக்க விதத்தில் இந்து இதழில் வெளியிட வேண்டும்!

இல்லையேல் இட்டுக்கட்டி இழிமொழி கூறி என்மீது திட்டமிட்டு அவதூறு கூறியமைக்காக, இத்தகைய ஏடுகளின்மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அனபுடன்

மு.க.

19-07-1986

1427. வறட்சி; கடுமையாகிறது!
கவலை தருகிறது!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி, மாநாடுகள், பொதுக் கூட்டங்கள், விவசாயப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், இத்தனையும் நடத்தியான பிறகு - இப்போதுதான் தமிழக அமைச்சரவை கூடிப்பேசி, அரசின் தலைமைச் செயலாளர் திருவாளர் அந்தோணி அவர்கள் தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை கடுமையாகிறது - கவலைதரக் கூடிய வகையில் உள்ளது. வறட்சி நிவாரணத் திட்டம் குறித்து வறட்சி நிவாரணக் கமிஷனர் திரு. அரிபாஸ்கரிடம் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பது போன்ற செய்திகளைப் பத்திரிகையாளர்களுக்குக் கூறியுள்ளார்.

ஜப்திகள் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் செய்து முடித்த பிறகு - ஜப்திகள் நிறுத்தப்படும் என்று எம்.ஜி.ஆர். ஒரு அறிவிப்பு விடுத்தார்.

ஜப்திகள் நிறுத்தப்படும் என அறிவித்தால் போதாது - ஜப்தி செய்யப்பட்ட உழவடைப் பொருள்கள் மட்டுமல்லாமல் ஜப்தி செய்யப்பட்ட வீட்டுக் கதவுகள், ஜன்னல்கள், தவலைகள், சொம்புகள், மின்விசிறி போன்றவைகளையும், பசுக்கள், கன்றுகள், ஆடுகள், ஆட்டுக்குட்டிகள் முதலியவைகளையும் விவசாயிகளுக்குத் திருப்பித் தரவேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் சார்பாகக் குரல் எழுப்பினோம்.

உழவுக்குத் தேவையான பொருள்கள் தவிர - மற்றும் ஜப்தி செய்யப்பட்ட எந்தப் பொருள்களும் திருப்பித் தரப்படமாட்டாது என கூட்டுறவுத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தது ஏடுகளில் வெளிவந்துள்ளது.

பருவமழை தவறியதால் பாசனத்திற்கான தண்ணீர் இல்லை - கர்நாடகத்தின் பிடிவாதத்தால் காவிரியிலும் நியாயமாக விடப்பட வேண்டிய தண்ணீர் விடப்படவில்லை - பாசனம் பாதிக்கப்பட்டது மட்டுமல்ல, குடிதண்ணீர் இல்லாத கொடுமையும் சேர்ந்து கொண்டது இப்போது!

கடந்த கூட்டத் தொடரில் மேலவையில் நான் பேசிய பொழுது மத்திய தணிக்கைக் குழுவினர் வெளியிட்ட அறிக்கைக் குறிப்பின்படி 1981 முதல் 1985 வரையிலான ஆண்டுகளில் குடிநீருக்காக ஒதுக்கப்பட்ட எண்பது கோடி ரூபாயில் அறுபத்திமூன்று கோடி ரூபாய் செலவழிக்கப்படவேயில்லை என்பதை எடுத்துக் காட்டினேன்.

இப்போது குடிநீருக்காகப் பல்வேறு முயற்சிகளை அவசரமாகச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனினும், அந்த எண்பது கோடிரூபாய் முழுமையாகச் செலவிடப்பட்டிருந்தால் - ஓரளவு குடிநீர் வசதி பெற்ற சூழ்நிலை பலபகுதிகளில் முன்னரே அமைந்திருக்கக் கூடும்.

கிராமப்பகுதிகளில் குறிப்பிட்ட பல பணிகளுக்காக மத்திய அரசு ஐம்பது சதவிகிதம் தொகை வழங்கும் போதெல்லாம் - அதற்கு ஈடாக ஐம்பது சதவிகிதம் தொகையினை அத்துடன் இணைத்து அந்தப் பணிகளைச் செய்திட முன்வராத மாநில அரசு, கடந்த பத்தாண்டு காலமாக உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தில் பெரும் ஊழலும் புரிந்துள்ள காரணத்தால் - இப்போது பெருகிவரும் வறட்சியின் தாக்குதலை ஓரளவுகூடத் தாங்கி நிற்கும் சக்தியைப் பெற முடியாமல் கிராமப்பகுதி மக்கள் தவிக்கிறார்கள்.

ஜூலை மாதமோ - ஆகஸ்டு முதல் வாரத்திலோ நல்ல மழை பொழியவில்லையென்றால் வறட்சியின் கடுமை, மேலும் அதிகமாகக் கூடும்!

தஞ்சை மாவட்டமும் இன்றுள்ள நிலை பாலைவனம் போலத்தான் ஆகிக்கொண்டு வருகிறதென்றால், மற்ற மாவட்டங்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. இருநூற்றிஐம்பது குழாய்க் கிணறுகளைத் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப் போவதாகக் கூறியிருப்பதுகூட கடலில் பெருங்காயம் கரைக்கும் கதைதான்!

தஞ்சை மாவட்டத்தில் பிரச்சினை எதுவுமில்லை என்று தலைமைச் செயலர் அந்தோணி அவர்கள் கூறியிருப்பது வெந்தபுண்ணில் வேல் நுழைப்பது போல் உள்ளது.

குறுவைப் பயிருக்குத் தண்ணீர் இல்லை. அதனால் குறுவை போட முடியாது என்று கூறுகிற அரசின் தலைமைச் செயலாளர்தான், தஞ்சை மாவட்டத்தில் பிரச்சினை எதுவுமில்லை என்று அடித்துச் சொல்லியிருக்கிறார்.

குறுவைச் சாகுபடியில்லாத நிலையிலும் - கிருஷ்ணராஜசாகரில் குறைந்த அளவுநீர் இருந்தால் அது முழுமையாகத் தமிழகத்திற்குத் திறந்து விடப்பட வேண்டுமென்ற ஒப்பந்த ஷரத்துக்கு மாறாக கர்நாடக அரசு நடந்துகொள்வதால், காவிரி நீர் கிடைக்காத நிலையிலும் - லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் தஞ்சைத் தரணியில் வேலையிழந்து வாடுகிறார்கள் என்பது கூடவா இந்த அரசுக்கும் பிரச்சினையாகத் தெரியவில்லை?

பருவம் தவறியதால் ஏற்பட்டுள்ள பாதகங்களை யாரும் உணராமல் இல்லை! ஆனால் எடுக்கப்பட வேண்டிய நிவாரண முயற்சிகளைப் பற்றிக் கவலைப்படாமல் - பத்தாண்டு சாதனை விழா, கத்திப்பிரசங்கம் இவற்றிலேயே ஒரு அரசு, காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பதா?

வடமாநிலங்களில் உள்ள - ஏன்? தமிழ் மாநிலம் தவிர்த்த மற்ற மாநிலங்களிலே உள்ள ஆங்கிலப் பிரபல ஏடுகள், தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். அரசு, செயல்படாத அரசாக இருப்பதையும் - தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்றே தெரியாமல் தமிழ்மக்கள் மீது சவாரி செய்கிற அரசாக இருப்பதையும் - ஊழல் நிறைந்த அரசாக இருப்பதையும் - தன்னைச் சுற்றியிருப்போர் எவரையும் கட்டுப்படுத்த முடியாத சிக்கலில் முதலமைச்சராக இருப்பவர் ஒரு பொம்மையாகச் சுழன்று கொண்டிருப்பதையும் தொடர்ந்து சுட்டிக்காட்டி எழுதி வருகின்றன.

இந்தக்கால கட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கான திட்டங்கள் எதுவும் - தமிழக அரசின் எஞ்சியிருக்கிற நிர்வாக இயந்திரத்தின் திறமையினால் நடைபெறத் தொடங்கினாலும், மத்திய அரசு உதவிகள் கிடைத்தாலும் - அவற்றை கிராமங்களிலும், நகரங்களிலும் மக்களுக்கு முழுமையாக போய்ச் சேர, ஆங்காங்கு

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தூய்மை உணர்வோடு பாடுபட்டாக வேண்டும். கண்காணிப்புடன் இருக்க வேண்டும்.

பத்தாண்டுகாலத் தனி அதிகாரிகளின் ஆட்சியில் பல பகுதிகளில் பகற்கொள்ளையே நடைபெற்று ஒருசில போர்ஜரி அமைச்சர்களின் பினாமி தியேட்டர்களாக - பினாமி மாளிகைகளாக - பினாமி அச்சகங்களாக - பினாமி படக் கம்பெனிகளாக வடிவமெடுத்துள்ளதைச் சாட்சிகளின்றியே ஆங்காங்கு காட்சிகளாகக் காண முடிகிறது!

எனவே, வறட்சி நிவாரணப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட - தலைமைச் செயலக அதிகாரிகளாவது விரைந்து பணியாற்ற வேண்டும்!

அதன் பயன் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குக் கிடைக்க - மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமேயல்லாது - மிக முக்கியமாக உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்களும் ஓய்வறியாது செயல்பட வேண்டும்!

நம்முடைய கழகத்தினருக்கென்று நான் தனியாகச் சொல்லவில்லை!

வறட்சியும் - அதனால் விளையும் துயரமும் அனைவரையும் கட்சி மாறுபாடின்றித் தாக்குகிறது!

எனவே, கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு துயர் துடைப்புப்பணிகள் நிறைவேற்றப்படக் கண்காணிப்புத் தேவை! கடமையுணர்வு தேவை!

அன்புடன்

மு.க.

20-07-1986

1428. குற்றக் கூண்டில் நிற்பது யார்?

உடன்பிறப்பே,

கவர்னர் பதவியென ஒன்று தேவையில்லை என்பது மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிற நம் போன்றோர் வாதமாகும்!

மாநில சுயாட்சி - அல்லது மாநிலத் தன்னாட்சி என்பது முழுமையானதாக அமைத்திட அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதுதான் நாம் எடுத்து வைக்கும் திட்டவட்டமான கருத்து!

அவ்வாறு அரசியல் சட்டம் திருத்தப்பட்டு - மத்தியில் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் செயல்படவும், மாநிலங்கள் முழுமையான சுயாட்சிதன்னாட்சித் தன்மையுடன் விளங்கிடவும் - பொதுமக்கள் கருத்தைத் திரட்டுகிற பணியில் நீண்டகாலமாக ஈடுபட்டுள்ள தி.மு.கழகம், ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில் முதல் தடவையாக - ராஜமன்னார் - லட்சுமணசாமி முதலியார் - சந்திரா ரெட்டி ஆகிய மூதறிஞர்களைக் கொண்ட குழுவை அமைத்து அவர்கள் மூலம் மத்திய - மாநில உறவு குறித்த அறிக்கையைப் பெற்று - அந்த அறிக்கையை மாறன், செழியன் குழுவினர் ஆய்ந்தறிந்து தந்த விரிவாக்கத்தின் அடிப்படையில் கழகம் விவாதித்து, அதன் பின்னர் கழக அமைச்சரவையில் கலந்துரையாடி - தமிழக சட்டப்பேரவையில் 1974 ஆம் ஆண்டு மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி அல்லது மாநிலத் தன்னாட்சி என்ற கருத்தையே ஏற்கவில்லை என்று உண்மைக்கு மாறாக அன்று சட்டப்பேரவையில் வாதாடிய அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், தீர்மானம் நிறைவேறும் போது வெளிநடப்புச்

செய்தனர் என்பது வரலாறு எனினும், இப்போது அண்மைக் காலமாக - அதே அ.தி.மு.க.வினரும் நிதிநிலை அறிக்கை படிக்கும் போது மாநில சுயாட்சி அல்லது மாநில தன்னாட்சியை State Autonomy ஆதரித்துச் சுட்டிக் காட்டுகின்றனர். ஒருமுறை மேலவையில் நிதியமைச்சர் நாவலர் எனக்கு விடையளிக்கும்போது; முதல்வர் எம்.ஜி.ஆர். - மாநில சுயாட்சி என்றால் பிரிவினை என எண்ணிக் கொண்டிருந்ததாகவும், சுயாட்சி என்பதோ, தன்னாட்சி என்பதோ தனியாட்சி அல்ல என அவருக்குத் தன்நாவலர் விளக்கமளித்த பிறகு இப்போது ஏற்றுக் கொண்டதாகவும் ஒரு கருத்தை வெளியிட்டார்.

மாநில சுயாட்சிக் கொள்கை, அரசியல் சட்டம் திருத்தப்பட்டு வெற்றி பெறும் வரையில் - இப்போதுள்ள அரசியல் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் ஆட்சியில் இருப்போர் நடந்துகொள்ள வேண்டும்.

இப்போதுள்ள அரசியல் சட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கவர்னர் இருப்பார். அந்த கவர்னரிடம்தான் எல்லா நிர்வாக அதிகாரங்களும் இருக்கும்.

கவர்னர் தனது உசிதம் போல் பணியாற்றக் கூடிய அதிகாரங்கள் Discretionary Powers அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கின்றன.

இப்படி உசிதம்போல் பணியாற்றக் கூடிய விஷயங்கள் தவிர, மற்ற காரியங்களில் கவர்னருக்கு உதவுவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், முதலமைச்சர் தலைமையில் ஒரு அமைச்சரவை இருக்கும்.

கவர்னர் கையில் மாநில அரசின் அனைத்து நிர்வாகங்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சர்களும், அதிகாரிகளும் நிர்வாக இயந்திரத்தை இயக்கினாலும், அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் கவர்னர் பெயரால் எடுக்கப்படுவதாகத் தான் கருதப்படுகிறது.

கவர்னர் கையெழுத்துப் போடாத அரசாணைகளுக்கும், கவர்னர் எடுக்காத நிர்வாக நடவடிக்கைகளுக்கும் கவர்னர்தான் சொந்தக்காரர். அதாவது, அரசியல் சட்டப்படி அந்த உத்தரவுகள் அனைத்தும் கவர்னர் பெயரால் பிறப்பிக்கப்பட்டதாகத்தான் பொருள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையை விட - ஒரு நியமனப் பதவியாளரான கவர்னர் இத்தகைய சர்வாதிகாரங்களைப் படைத்தவராக இருத்தலாகாது - எனவே அந்தப் பதவியே தேவையில்லை என்பதே மாநில சுயாட்சிக் கொள்கையில் உண்மையான நம்பிக்கையுள்ள நம்மைப் போன்றோர் கருத்து!

ஆனால் அந்தக் கவர்னர் என்ற பதவியிருக்கும் வரையில் - அரசியல் சட்டத்தின்படி ஒரு மாநில முதலமைச்சர் - அவர் தலைமையிலுள்ள அமைச்சரவை அரசியல் சட்ட வரையறைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

கவர்னரும், மாநில நிர்வாகத்தில் அமைச்சரவையில் ஆலோசனையைப் பெற்று இயங்கிட வேண்டும் என்ற நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு - உசிதம்போல் பணியாற்றக் கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தலாம் என்ற அளவுக்கு எல்லை மீறிப் போய்விடக்கூடாது.

அப்படி போனதற்கு அண்மைக் கால உதாரணமாக ஆந்திர கவர்னர் ராம்லால் என்பவர் - பாஸ்கரராவ் என்பவரின் பேச்சைக் கேட்டு, என்.டி. ராமராவை பதவி விலக்கியதும், அதனால் ஏற்பட்ட எதிரிடை விளைவுகளுமே விளங்குகின்றது என்பதை யாரும் மறந்து விட இயலாது!

இது காறும் நான் இக்கடிதத்தில் கூறியுள்ளதை நினைவில் வைத்துக் கொண்டு - தமிழ்நாட்டைச் சற்றுக்கூர்ந்து பார்ப்போம்!

இங்குள்ள கவர்னர் குரானா அவர்கள், டெல்லியின் கருத்துப்படி எந்த அளவுக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆருடன் ஒத்துப்போக முடியுமோ, அந்த அளவுக்கு ஒத்துப்போகக் கூடியவர் என்பதை 1984 பொதுத்தேர்தல் நேரத்தில் நிரூபித்தவர்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமலே வேட்புமனு தாக்கல் செய்தது செல்லாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற தெளிவான சமாச்சாரம் எனினும், அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரியொருவரைக் கொண்டே, பேசவே முடியாத நிலையில் இருந்த எம்.ஜி.ஆர். உறுதிமொழியை வாய்விட்டுப் பேசி எடுத்துக் கொண்டதாக பொய்கூற வைத்தனர்.

எம்.ஜி.ஆருக்கு அமெரிக்காவில் சிகிச்சை செய்த பிரபல டாக்டர் பிரிட்மென் அவர்கள், அப்போதைய நிலையில் எம்.ஜி.ஆர். பேச இயலாத நிலையில் இருந்ததை நிருபர் பேட்டியொன்றில் தெரிவித்து, அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்ததையும் நாடு மறந்துவிடவில்லை.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராகப் பதவியேற்ற போதும் - பதவிப் பிரமாணம் செய்து வைத்தபோது கவர்னர் எவ்வளவு ஒத்துழைத்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ரகசிய அறை - அங்கே ஐந்தாறு பேர்கள் மட்டுமே இருந்தனர் - நிருபர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை - டி.வி. நிலைய ஒளிப்பதிவாளர்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டனர் - ஒலிப்பதிவாளரோ, ஒலிப்பதிவுக் கருவிகளோ அனுமதிக்கப்படவில்லை - ஒரு மௌன நாடகக்காட்சி மக்களுக்கு டி.வி. மூலம் காட்டப்பட்டது!

அதேசமயம், டெல்லியில் ராஜீவ் காந்தி அமைச்சரவை பதவியேற்றதும் - புதுவையில் பரூக் அமைச்சரவை பதவியேற்றதும் - ஒளி, ஒலியுடன் டி.வி. பெட்டிகளில் காட்டப்பட்டன.

எனவே - இங்கு, கவர்னர் குரானா அவர்களின் ஒத்துழைப்புடன் - எம்.ஜி.ஆர். அவர்கள் பதவிப் பிரமாணத்துக்குரிய வாசகங்களை உச்சரிக்காமலே - உச்சரிக்காத உண்மை ஊருக்குத் தெரியக் கூடாதென்று - ஒலிபெருக்கியில்லாமலே, அந்த உற்சவத்தை ? ஓரிரு நிமிடங்களில் முடித்துக் கொண்டனர்.

இதெல்லாம் இரண்டாண்டுகளுக்கு முன் நடந்த கதைகள் எனினும் - பரிசுத்தமான பிரதமர் ஆட்சியில் - கண்டிப்பான குணம் கொண்ட கவர்னர் ஒருவரின் மேற்பார்வையில் - தமிழக அரசியலில் ஏறிவிட்ட களங்க மிகு நிகழ்ச்சிகள் என்பதை வரலாறு சொல்லிக் கொண்டுதானிருக்கும்!

இதற்கிடையே - பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமன விவகாரத்தில் கவர்னர் கருத்தை ஏற்பதற்கில்லையென்று கல்வி அமைச்சர் அரங்கநாயகம் வீர உரைகளை ஆற்றி, அதற்கு ஆதாரமாகச் சட்டங்களையும் - முன் மாதிரிகளையும் எடுத்து வைத்துப் போர் முழக்கம் செய்தார்.

இரண்டொரு நாட்களில் கவர்னர் சொல்வதே சரி என்று இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு தண்டனிட்டுத் தலைகுனிந்து - கவர்னர் கூறிய பெயரையே துணைவேந்தர் பதவிக்கு ஏற்றுக் கொள்வதாகக் கூறி சரணடைந்தது!

அமைச்சரவை ஆலோசனையைக் கவர்னர் புறக்கணிக்கக் கூடாது என்று மேற்கு வங்கத்து அரசைப் போலவோ - ஆந்திர மாநில அரசைப் போலவோ - உறுதியாக நிற்க இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசினால் முடியவில்லை!

முடியாததற்குக் காரணம், முதலமைச்சரின் பதவிப் பிரமாணம் போன்ற விஷயங்களில் டெல்லியும் - சென்னை ராஜ்பவனமும், நியாயத்துக்கும் - ஏன்? விதிகளுக்கு மாறாக எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்ததும் - இப்போதும் கொடுத்து வருவதும்தான்!

ஆனாலும் இவ்வளவு நீக்குப்போக்கிற்கு இடையே Adjustment கவர்னர் - முதலமைச்சர் ஆகிய இருவரும் எழுதிக் கொண்டுள்ள கடிதங்கள்; India Today இந்தியா டுடே என்ற பிரபலமான ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்துள்ளதைப் படிக்கும் போது - தமிழ்நாட்டு நிலவரம் - நிர்வாகம் - அனைத்தும் எந்த அளவுக்குக் கழுதை மேயும் குட்டிச் சுவராக ஆகிவிட்டது என்பது நாடறிந்த உண்மையாகி விட்டது.

இந்த ஆண்டு மே மாதம் இருபதாம் தேதியிட்டு கவர்னர் குரானா அவர்கள், முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு எழுதிய கடிதத்தில்:-

"Of late I find that I learn about major Policy decisions mainly through the News Papers. Unfortunately I have been kept in the dark.

அதாவது, அண்மைக்காலமாக தமிழக அரசின் கொள்கை முடிவுகள் குறித்து நான் செய்தித்தாள்கள் வாயிலாகத்தான் அறிகிறேன். அவை எனக்குத் தெரிவிக்கப்படாமல் துரதிர்ஷ்டவசமாக நான் இருட்டில் தள்ளப்பட்டிருக்கிறேன்.

என்று கவர்னர், தனது கண்டனத்தைக் கவலையாகத் தெரிவித்துள்ளார்.

டெல்லியும் - ராஜ்பவனும் - ராமாவரமும் சேர்ந்து தமிழக மக்களை இருட்டில் தள்ளியிருப்பது வேறு விஷயம்.

இப்போது ராஜ்பவனமே இருட்டில் தள்ளப்பட்டிருப்பதாகக் கவர்னரே அங்கலாய்க்கிறார்!

மின் வெட்டினால் விளைந்த இருட்டல்ல! அரசின் முக்கியமான கொள்கை முடிவுகளைக்கூட பத்திரிகை வாங்கி வரச் சொல்லிப் படித்துத்தான் கவர்னரே தெரிந்துகொள்ள முடிகிறது என்கிறார்.

1985 அக்டோபரில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் எனக்கு 1986 மார்ச்சில்தான் வந்தன!

1985 டிசம்பர் மாதம் 3-ந்தேதி நடந்த அமைச்சரவைக் கூட்டம் ஒன்றைத் தவிர 1986 மார்ச் 11-ந்தேதி நடந்த பட்ஜெட் பரிசீலனை அமைச்சரவைக் கூட்டம் வரையில் - அமைச்சரவைக் கூட்டங்களே நடந்ததாக ஏதும் தெரியவில்லை.

அண்மையில் எடுக்கப்பட்ட கொள்கைமுடிவு எதுவும் நடவடிக்கை விதிகள் இரண்டாம் தொகுப்பு 16வது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கொள்கை முடிவுகள் அமைச்சரவையில் விவாதிக்கப் பட வேண்டும். அரசியல் சட்டம் 167 1ம் ஷரத்தின் படி அந்த நடவடிக்கை குறிப்புகள் மினிட்ஸ் எனக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

உடன்பிறப்பே! கவர்னர், எம்.ஜி.ஆருக்கு எழுதிய கடிதத்தில் இத்தனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலவைக் கலைப்பு போன்ற முக்கியமான கொள்கை முடிவுகள் கூட அமைச்சரவையில் எடுக்கப்படவில்லையென்று பரவலாகப் பேசப்படுகிற உண்மையைக் கவர்னரின் கடிதம் மேலும் உறுதிப்படுத்துகிறது.

கவர்னரின் மடலுக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பத்து நாட்கள் கழித்து பதில் எழுதுகிறார்.

என்ன எழுதுகிறார் தெரியுமா? இதையெல்லாம் உங்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றா? இதனால்தான்

கவர்னர் பதவியே தேவையா என்பது குறித்து யோசிக்கிறோம் என்றா?

அல்லது, சட்ட முறைப்படி - விதிகளின்படி எல்லாமே தங்களுக்கு அறிவிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன என்று எழுதினாரா?

அமைச்சரவை கூடித்தான் முக்கியமான கொள்கை முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்று எழுதினாரா?

இல்லை, உடன்பிறப்பே - இல்லை! பிறகு என்ன எழுதினார்?

நடவடிக்கை விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படியும் செயல்முறை விதிகளின்படியும்தான் எல்லாம் நடக்கின்றன என்றே நான் எண்ணியிருந்தேன்.

எண்ணியிருந்தாராம்! எல்லாம் சரியாக நடக்கின்றன என எண்ணியிருந்தாராம்! ஒன்பது ஆண்டு முதலமைச்சராக இருப்பவர், எல்லாம் சரியாக நடக்கிறதா? என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள அக்கறையின்றி, எல்லாம் சரியாக நடக்கின்றன என்றே எண்ணியிருந்தாராம்!

தெருக்கூத்திலே வரும் மகாராஜாகூட மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழைபொழிகிறதா? என்று விசாரித்து எல்லாம் சரியாக நடக்கிறதா? என்று அறிந்து கொள்வதாக ஒரு காட்சி வரும்!

இந்த எம்.ஜி.ஆர். மகாராஜாவோ, அரசின் காரியங்கள் எல்லாம் விதிமுறைப்படியும், செயல்முறை விதிகளின்படியும் நடக்கின்றன என்றே எண்ணியிருந்தாராம்!

அதுமட்டுமா? இதோ இந்தத் தவறுக்கெல்லாம் காரணம் யார் எனக் குறிப்பிட்டு - பழியைத்தூக்கி யார்மீது போடுகிறார் பார்!

இந்த மாதிரியான விவகாரங்களில் மாநில அரசின் தலைமைச் செயலாளர் அந்தோணி எனக்கு உரிய முறையில் ஆலோசனைகள் கூறியிருக்கும் பட்சத்தில், இந்தக் குறைகளைத் தவிர்த்திருக்கலாம்.

எம்.ஜி.ஆர். கவர்னருக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தின் முக்கியமான பகுதி இதுதான்!

தலைமைச் செயலாளர் அந்தோணி இந்த மாதிரி விவகாரங்களில் தனக்கு உரியமுறையில் ஆலோசனை கூறவில்லையென்று அந்தோணி அவர்களைக் குற்றக் கூண்டில் ஏற்றியுள்ளார் முதலமைச்சர்!

இதற்கு தலைமைச் செயலர் அந்தோணி சொல்லும் பதில் என்ன?

குற்றத்தை ஒப்புக்கொள்ளப் போகிறாரா? அல்லது குற்றம் புரிந்தது எம்.ஜி.ஆர்.தான் என்று அவரை நோக்கிச் சுட்டுவிரல் காட்டப் போகிறாரா?

ஒரு முறை சட்டசபையில் இஸ்மாயில் கமிஷனின் அறிக்கை என்னவாயிற்று எனக்கேட்டோம்.

கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவரிடமிருந்து இன்னமும் திரும்பி வரவில்லை என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பதில் அளித்தார்.

மறுநாள் கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் - முதலமைச்சர் அப்படிச் சொன்னதை மறுத்து, இஸ்மாயில் கமிஷன் அறிக்கை தனக்கு அனுப்பி வைக்கப்படவே இல்லை - என்றார்.

அடுத்த நாள் நான் சட்டசபையில் முதலமைச்சரிடம் அது குறித்து விளக்கம் கேட்டேன்.

பொய்கூறிச் சிக்கிக் கொண்ட முதலமைச்சர், அந்த நேரம் தப்பித்துக் கொள்வதற்காக - நான் அனுப்பச் சொன்னதை அதிகாரிகள் அனுப்பவில்லை. அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதுவரை எந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க வில்லை.

அதே போலத்தான் இப்போதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தலைமைச் செயலர் அந்தோணி மீது பழி போடுகிறாரா?

இல்லையென்றால் தலைமைச் செயலர் அந்தோணி அவர்கள், தான் செய்த தவறுக்குத் தனக்கு வழங்கிக் கொள்ள இருக்கும் தண்டனை என்ன?

அமைச்சரவை கூட்டம் Cabinet Meeting கூட்ட வேண்டியது முதலமைச்சரின் கடமையாக இருக்க - அந்தக்கூட்டங்கள்

கூட்டப்பெற்று கொள்கை முடிவுகள் எடுக்கப்படவில்லை என்ற கவர்னரின் குற்றச்சாட்டுக்கு, அதையும் தனக்கு தலைமைச் செயலர் உரியமுறையில் ஆலோசனை கூறாததினால் ஏற்பட்ட தவறு என்று முதல்வர் சமாளிக்கிறாரா?

உரிய முறையில் ஆலோசனைகள் கூறாமல் சட்டவிதிமுறைகளுக்கும், செயல்முறை விதிகளுக்கும் மாறாக முதலமைச்சரை நடக்க வைத்து - கவர்னரையும் இருட்டில் தள்ளியதாகக் கூறப்படுவது உண்மையானால் தலைமைச் செயலர்மீது முதலமைச்சர் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

நாடு ஆவலுடன் எதிர்பார்க்கிறது!

அன்புடன்

மு.க.

21-07-1986

1429. கோமாளி ராஜ்யத்தில் எல்லாமே குழப்பம் தான்!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருவாளர் அந்தோணி அவர்கள், திடீரென அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டு மாநிலத் திட்டக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது ஒன்றும் புதிதல்ல! ஏற்கெனவே கருணாநிதி ஆட்சிக் காலத்திலேகூட தலைமைச் செயலாளர் ராயப்பா அவர்கள் திடீரென மாற்றப்பட்டுத் திட்டக் குழுவுக்கு அனுப்பப்பட்டார் என்று தினமணி குறிப்பு எழுதி - இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இது குறித்துக் கடிதத்தின் இறுதியில் விளக்கமளிக்கிறேன்.

கடந்த சில மாதங்களாகவே தமிழ்நாடு அல்லாத மற்ற மாநிலங்களில் இருந்து வெளிவரும் வார ஏடுகள் - நாளேடுகள் - டில்லி, பம்பாய், ஐதராபாத், போன்ற பெரு நகரங்களில் இருந்து வெளியிடப்பட்டு, இந்தியா முழுமையும் விரிவாகப் பரவுகிற ஏடுகள் - நமது மாநிலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் சீரழிந்து கொண்டிருக்கிற நிர்வாகம் குறித்தும் - ஊழல்கள் முடை நாற்றம் வீசத் தொடங்கி விட்டது குறித்தும் - எம்.ஜி.ஆருக்கு, அவரது அமைச்சரவைச் சகாக்களையோ - கட்சியினரையோ கட்டுப்படுத்தும் உறுதியும் திடமும் அறவே அற்றுப்போய் ஒரு கலகலத்துவிட்ட நிலைமை மறைக்க முடியாத அளவுக்கு ஏற்பட்டுவிட்டது குறித்தும் தலையங்கங்கள், கட்டுரைகள் தீட்டியுள்ளனவே - அவற்றில் சிலவற்றை மட்டும் உன் நினைவுக் குறிப்புக்காக இங்கே தொகுத்துத் தருகிறேன்.

ஆட்சி நடத்தும் திறனை இழந்துவிட்ட ஒரு கட்சி, தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து இழைத்து வரும் தீமைகளை மத்திய அரசு, கண்டு கொள்ளாமலும், கேட்டுக் கொள்ளாமலும்

இருக்கிறது. எம்.ஜி.ஆரின் அரண்மனையைச் சேர்ந்த இரு பெண்மணிகளுக்கிடையிலான ஆதிக்கப் போட்டியின் விளைவாக தலைமைச் செயலாளரான டி.வி. அந்தோணி, உச்சநீதிமன்றத்திடம் சுப்ரீம் கோர்ட் வசமாக மாட்டிக் கொள்ள நேர்ந்தது. நீதிமன்றத்தின் ஆணையையும் மீறி கொடைக்கானல் துணை கலெக்டர் குர்னிகால்சிங் ஐ.ஏ.எஸ்.சை தலைமைச் செயலாளர் இடமாற்றம் செய்தார். அந்த மலைப்பகுதியில் கொத்தடிமை முறை இல்லையென்று அரசு தரப்பில் கூறப்பட்டது பற்றி விசாரணை முடியும் வரையில் குர்னிகால்சிங் ஐ.ஏ.எஸ்.சை மாற்றக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்திரவிட்டிருந்தது. நீதிமன்ற உத்திரவை மீறியதற்காக தலைமைச் செயலாளர் இருபத்திநாலு மணி நேரத்திற்குள் மன்னிப்புக் கேட்கவேண்டும் என சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஜூன் 25-ந் தேதியே உத்தரவிட்டனர். தமிழ்நாட்டு அரசின் செயலாளர்கள் வேலைகளைக் காப்பாற்றிக் கொண்டு, வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டுமானால் மேற்கூறிய இரு ஆதிக்க பீடங்களிடமிருந்தும் ஆணைகளையேற்று நிறைவேற்றி வைக்கத் தயாராக இருக்க வேண்டும். கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில் தங்கள் உத்தியோக கவுரவத்தையும் - நோ்மையையும் பெரிதென மதித்த மூத்த அதிகாரிகள் ஒன்று வெளிமாநிலங்களை நாடிப் போயிருக்கிறார்கள் அல்லது பெரும் கவர்ச்சிகரமான தமது உத்யோகங்களை விட்டே ராஜினாமா செய்திருக்கிறார்கள். முதலமைச்சரின் ஒப்புதல் வாக்குமூல விளம்பரங்கள் வெளியாகியதையும் - உள்துறை இலாகா சுற்றறிக்கை விடுத்ததையும் அடுத்து நிர்வாகமே முழுமையாகச் சீர்குலைந்து எம்.ஜி.ஆரின் செல்வாக்கும், அதிகாரமும்கூட ஒரேயடியாகச் சரிந்து விட்டது.

டெல்லியிலிருந்து வெளிவரும் ஸ்டேட்ஸ்மன் எனும் ஆங்கில ஏட்டில் 3.7.86-ல் வெளிவந்துள்ள கட்டுரை இது! முழுக் கட்டுரையும் முரசொலியில் மொழி பெயர்க்கப்பட்டு வந்துள்ளது! சில பகுதிகளை மட்டுமே இப்போது இக்கடிதத்தில் எடுத்துக்காட்டியுள்ளேன்.

திவால் நிலையிலிருந்து விடுபடாத ஒருவரை ஒரு நடிகை சட்டமன்ற மேலவைக்கு நியமனம் செய்ய முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனே பரிந்துரை செய்துவிட்டு, பிறகு ஒரே வாரத்துக்குள் சட்டமன்ற மேலவையையே ஒழித்தது போன்ற பகுத்தறிவுக்கு ஒவ்வாத பல காரியங்கள் அண்மைக்காலத்தில் நடந்திருப்பதைப்

பார்த்தால், 1984 தேர்தலுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டின் முதலமைச்சரான போது மருத்துவ ரீதியில் அவர் அந்தத் தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்ற எண்ணத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே உள்ளது. இப்போது சரமாரியாக வரத் தொடங்கியுள்ள சிறுபிள்ளைத்தனமான விளம்பரங்களைப் பார்த்தால் இந்தக் கோமாளித்தனம் எல்லைமீறிப் போய் விட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. தற்போதைய ஆட்சியினால் தமிழ்நாடு மேலும் சீரழியாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க இதுவே தருணமாகும்.

ஐதராபாத்திலிருந்து வெளிவரும் நியூஸ்டைம் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்துள்ள தலையங்கத்தின் ஒரு சில பகுதிகளே இவைகள். முழுமையான மொழிபெயர்ப்பு முரசொலியில் ஜூன் இறுதி வாரவாக்கில் வெளியிடப்பட்டுள்ளது.

அதே நியூஸ்டைம் ஏட்டில் ஜூன் 21ஆம் நாள் எழுதப் பட்ட ஒரு கட்டுரையில் பின்வருமாறு ஒரு முத்தாய்ப்பு வைக்கப்பட்டுள்ளது. அது என்ன?

உடல் நலம் கெட்டுள்ள முதலமைச்சரால் அரசு அலுவல்களைத் தொடர்ந்து கவனிக்க முடியாமல் போய்விட்ட நிலையில் ஒரு சிறு அதிகாரக்கும்பல், ரகசியப் போலீசார், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் நீங்கலாக வேறு யாரும் அணுக முடியாத நிலையில் அவருடைய உத்தரவுகளில் பல நிறைவேற்றப்படுவதில்லையென பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இதோ பம்பாயிலிருந்து வெளிவரும் இல்லஸ்ட்ரேடட் வீக்லி எனும் ஆங்கில வாரப் பத்திரிகை - ஜூன் 13-19 தேதியிட்ட இதழில் என்ன எழுதியுள்ளது? அது இதோ:-

மே 22-ந் தேதியன்று தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஒரு பரபரப்பான கடிதத்தை வெளியிட்டு தமிழ் நாட்டில் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது என்பதற்கு இதுவே முடிவான சான்றாகும் என்றார். உள்துறை செயலாளர் எழுதிய கடிதமாகும் அது. அந்தக் கடிதம் மட்டுமன்றி, ஜூன் மாதம் எம்.ஜி.ஆர். வெளியிட்ட இரண்டு விளம்பரங்களும் தமிழ் நாட்டில் அதிகாரவர்க்கத்தின் திண்டாட்டத்தை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. அதிகார லகானை பிடிப்பதற்கு அடியோடு லாயக்கற்றவராகி விட்ட ஒரு முதலமைச்சரை அதிகாரிகள் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

இன்னொரு புறத்தில் அ.தி.மு.க.விலுள்ள இரு முகாம்களுக்கிடையே கம்பி மேல் நடக்கும் சர்க்கஸ் சாகசத்தை செய்ய வேண்டியிருக்கிறது. லஞ்ச ஊழல் புகார்கள் பெருகி விட்டன. திருத்த முடியாத அளவுக்கு அரசின் புகழ் கெட்டுப் போயிருக்கிறது.

உடன்பிறப்பே! பழம்பெருமை வாய்ந்த வார இதழ் இல்லஸ்ட்ரேட் வீக்லியின் கட்டுரையில் சில பகுதிகள் மட்டுமே இவை!

இதோ - ஜூலை 12 தேதியிட்ட பிளிட்ஸ் ஆங்கில இதழ் எழுதியிருப்பதையும் பார்! அவற்றில் சில வரிகள்:-

உள்ளாட்சித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றதையடுத்து அண்மையில் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலிலும் தி.மு.கழகம் வெற்றி பெற்றுள்ளது. சுமார் பதினோராண்டு இடைவெளிக்குப் பிறகு தி.மு.க.வின் செல்வாக்கு மென்மேலும் வளரத் தொடங்கியுள்ளது. சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழ்நாடு குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை நிலவுவதாகத் தோன்றிய போதிலும் புயலுக்கு முன்னால் நிலவும் அமைதியே அது! தனது கட்சியும், தமிழ் மாநிலமும் கெட்டுக் குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கும்போது எம்.ஜி.ஆர். வீடியோவில் சினிமாக்கள் பார்த்துக் கொண்டும் கம்ப்யூட்டர்களில் விளையாட்டுகள் விளையாடிக் கொண்டும் இருக்கிறார்.

பிளிட்ஸ் ஏடு, தமிழ் நாட்டின் தலைவிதி எப்படியாகி விட்டது என்பதைச் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கெட்டுக் குட்டிச்சுவராகி விட்டது என்ற சொற்றொடர் ஒன்றின் வாயிலாகவே தெளிவாக்கி விட்டிருக்கிறது. மேலும் பார்!

எம்.ஜி.ஆர். அரசின் சாதனைகள் பொறிக்கப்பட்டத் தூண்களை மாவட்ட தலைநகர்களில் அமைக்க உத்தேசித்துள்ளார்கள். இதற்கென ஆகும் செலவு பற்றிக் கவலையில்லை. ஏனெனில் இங்கு கட்சிக்கும் அரசுக்கும் எந்தவித பேதமும் இல்லாமல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு எக்னாமிக்ஸ் டைம்ஸ் என்ற ஆங்கில ஏடு விமர்சித்து ஒரு கட்டுரையே தீட்டியுள்ளது. இன்னும் பார்!

அடுத்து இந்துஸ்தான் டைம்ஸ் 16.7.86 அன்று தலையங்கத்தில் வந்துள்ளதைப் படித்துப்பார்.

அது வருமாறு:-

1984 அக்டோபரில் பக்கவாதம் ஸ்டிரோக் ஏற்பட்ட பிறகு முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனின் உடல்நிலை எப்படி ஆகிவிட்டது என்பது யாரும் கண்கூடாகத் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயமே. ஆனால், தற்காப்புக்காக மட்டுமின்றி, எதிரிகளைத் தண்டிப்பதற்காகவும் கத்தி ஏந்துமாறு அவர், தனது ரசிகர் மன்றங்களின் 15 லட்சம் உறுப்பினர்களுக்கு, ஞாயிறு அன்று மதுரையில் ஆணையிட்டிருப்பதைப் பார்க்கும்போது அவரது மனநிலை குறித்தும், எவருக்கும் கடுமையான சந்தேகங்கள் ஏற்படவே செய்யும். எம்.ஜி.ஆர். முதலமைச்சராகி, ஒன்பதாண்டுகள் பதவியில் இருந்தபின், நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. அவருடைய கூட்டங்களுக்கு மக்கள் கூட்டம் வருவது குறைந்துவிட்டது. திரைப்படமொன்று நீண்டநாள் ஓடியபிறகு மக்கள் கூட்டம் எப்படிப் படிப்படியாகக் குறைந்துவிடுமோ, அப்படியே எம்.ஜி.ஆர். விசிறிகளிடம் அவரது செல்வாக்கும் குறைந்து விட்டது. உண்மையிலேயே எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு மிகமோசமாகப் பின்னடைந்துவிட்டது. ஊழலை ஒழிப்பேன் என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றிய எம்.ஜி.ஆரைப் பற்றி அப்போது இருந்து வந்த ஒரு மாயையான மரியாதையை, கடந்த ஆறு ஆண்டுகளில் அவரது அமைச்சரவையைப் பற்றிச் சரமாரியாக எழுந்துள்ள ஊழல் புகார்கள் விழுங்கி விட்டன.

இப்படி எழுதியிருப்பது ஜூலை மாத இந்தியா டுடே என்ற ஆங்கில இதழாகும்!

இந்த இதழிலேதான், கவர்னர் குரானாவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் கடந்த மே - ஜூன் மாதங்களில் நடைபெற்ற கடிதங்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டன, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு!

பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டதற்காக, என்மீது திருட்டுக் குற்ற வழக்கு! இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

இப்போது கவர்னர் - முதலமைச்சர் ரகசியக் கடிதப் போக்குவரத்து விவகாரத்தை வெளியிட்ட இந்தியா டுடே மீது எம்.ஜி.ஆர். என்ன வழக்குப் போடுவாரோ?

ஒருவேளை, இந்தியா டுடே பத்திரிகையை விட்டு விட்டு - அதில் வந்த செய்தியை மொழி பெயர்த்து வெளியிட்ட முரசொலியின் மீது வழக்குப் போட்டாலும் போடுவார்!

உடல் நலிவின் காரணமாக எந்தச் சிந்தனையில் தடுமாற்றம் ஏற்பட்டாலும், அவருக்கு சேடிஸ்ட் குரூரச் சிந்தனையில் தடுமாற்றம் ஏற்படவில்லையல்லவா?

கவர்னர் குரானா, எம்.ஜி.ஆருக்கு எழுதிய கடிதம் மே மாதம் இருபதாம் தேதி! அதற்கு பத்து நாள் கழித்து பதில் எழுதிய எம்.ஜி.ஆர். அமைச்சரவையைக் கூட்டிக் கொள்கை முடிவுகள் எடுக்காததற்கும் - அமைச்சரவையை அடிக்கடி கூட்டாததற்கும் கூட தலைமைச் செயலர் அந்தோணிதான் பொறுப்பு எனப் பழியைத்தூக்கி அவர்மீது போட்டார்.

தலைமைச் செயலாளர் அந்தோணி அவர்கள் வேறு பல தவறுகளுக்குப் பொறுப்பு என்பதும் - அவரே ஒரு முதலமைச்சர் போல பாவலா பண்ணிக் கொண்டார் என்பதும் - மறுக்க முடியாத உண்மைகள்! கப்பல் வாங்க ஜப்பான் சென்ற முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தன்னுடன் தொலைபேசி மூலமாக அரைமணி நேரம் உரத்தகுரலில் தெளிவாகப் பேசினார் என்றும், காவிரிப் பிரச்சினை குறித்தும், தொழிலாளர், ஆசிரியர் பிரச்சினை குறித்தும் அக்கறையுடன் விசாரித்தார் என்றும் அண்டப் புளுகுகளை அவிழ்த்து விட்டவர்தான் இந்த அந்தோணி!

அவர் அந்தப் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருப்பது கவலைதரக் கூடியதோ - அதிர்ச்சிதரக் கூடியதோ அல்ல!

ஆனால், கவர்னர் சுட்டிக்காட்டிய எல்லா தவறுகளுக்கும் அந்தோணிதான் பொறுப்பு என்பதை குற்றச்சாட்டாக ஆக்கிக் கவர்னருக்கு பதில் எழுதிய எம்.ஜி.ஆர். அவர்கள், மே 20-ந் தேதியன்று கவர்னர் எழுதிய கடிதத்துக்கு அறுபதுநாள் கழித்து ஜூலை 20-ந் தேதி அந்தோணி மீது இத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால் என்ன காரணம்?

கடிதப் போக்குவரத்து வெளியே தெரியாது - எனவே பிரச்சினையை வழக்கம் போல் மூடி மறைத்து, அந்தோணியார் மூலமே ஆட்சி நடத்தலாம் - அவரும் தனக்கு எல்லா விதத்திலும் முறைகேடாகக் கூட ஒத்துப் போவார் என்றே எம்.ஜி.ஆர். எண்ணியிருந்தார்.

ஆனால் அவர் நினைத்ததற்கு மாறாக இந்தியா டுடே இதழில் கவர்னர் - எம்.ஜி.ஆர் கடிதப் போக்குவரத்து ரகசியம் வெளியாகி விட்டது. அது ஜூலை 20-ந்தேதி சென்னைப் பதிப்பு முரசொலி இதழிலும் பிரசுரிக்கப்பட்டு விட்டது.

அடுத்த சிலமணி நேரத்திற்கெல்லாம் எம்.ஜி.ஆரும், சட்ட அமைச்சரும், சட்டத்துறைச் செயலாளரும் கவர்னரை சந்திக்க ஓடுகிறார்கள்.

ஏன் தெரியுமா? கவர்னரிடம் வறட்சி நிலவரம் குறித்து விவாதிக்க ஓடினார்களாம்! இப்படி ஏடுகளில் செய்திகள் தரப்பட்டன!

தென்னை மரத்தில் ஏறிய திருடன் பிடிபட்டவுடன், புல் பிடுங்க ஏறினேன் என்று சொன்னதாக ஒரு வேடிக்கை கதை உண்டல்லவா?

அதுபோல - முதலமைச்சர், கவர்னருடன் வறட்சி நிலவரம் குறித்து விவாதிக்க, வருவாய்த்துறை அமைச்சரையோ, பாசன அமைச்சரையோ, நிதி அமைச்சரையோ, விவசாய அமைச்சரையோ அழைத்துச் செல்லவில்லை! சட்ட அமைச்சர் சென்றுள்ளார் முதல்வருடன் - கவர்னரிடம் வறட்சி பற்றிக் கலந்து பேச!

வறட்சி நிவாரணக் கமிஷனர் - அதன் தொடர்பான அதிகாரிகள் - தலைமைச் செயலாளர் யாருமே செல்லவில்லை; வறட்சிபற்றி கவர்னருடன் விவாதிக்க! சட்டத்துறைச் செயலாளர் மட்டுமே செல்கிறார்!

அதாவது தென்னை மரத்தில் புல்பிடுங்க ஏறியிருக்கிறார்கள்!

கவர்னரின் கண்டனக் கடிதம் - அது பகிரங்கமாகிவிட்ட நிலைமை - கவர்னருக்கு எழுதிய பதிலில் தலைமைச் செயலாளர் மீது பழிபோட்டது ஊருக்குத் தெரியாது என்ற நம்பிக்கை - இந்த அடிப்படையில் அந்தோணி மீது கை வைக்காமல் அறுபது நாட்கள் காலத்தை ஓட்டிவிட்ட எம்.ஜி.ஆருக்கு - இந்தியா டுடே ஏடு, ரகசியங்களை அம்பலமாக்கிய பிறகு கவர்னரிடம் ஓடுவதும், அந்தோணியை பதவி நீக்கி வேறு பதவிக்கு மாற்றுவதும் தவிர, வேறுவழியில்லாமல் போய்விட்டது!

இந்த இக்கட்டான சூழ்நிலைதான் எம்.ஜி.ஆர். எடுத்துள்ள இந்த முடிவுக்குக் காரணம்!

தி.மு.க. அறக்கட்டளை

1971 - பொதுத் தேர்தல் முடிந்தவுடன் திரு. ராயப்பா அவர்களைத் தலைமைச் செயலாளர் பொறுப்பிலேயிருந்து மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவராக நியமித்ததற்கும் - இப்போது அந்தோணி, தலைமைச் செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு - எம்.ஜி.ஆர். வகித்துவந்த மாநிலத் திட்டக்குழுத் தலைவர் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளதற்கும் முடிச்சுபோடுவதற்கு எந்த முகாந்தரமும் இல்லை!

இது விஷயமே வேறு! கவர்னர் கடிதத்தின் எதிரொலி இது! எம்.ஜி.ஆர். தப்பித்துக் கொள்ள அந்தோணி அவர்கள் பலிகடா ஆக்கப்பட்டுள்ளார்! அவருக்கும் இது தேவையானது தான்!

இந்த உத்தியோக மாற்ற முடிவின் காரணமாக - தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரழிவு, ஒரு எள் முனையளவுகூட தடுத்து நிறுத்தப்படப் போவதில்லை!

புதிய தலைமைச் செயலாளர் என்னதான் பொறுப்புடன் செயல்பட முனைந்தாலும் - கோமாளி ராஜ்யத்தில் எல்லாமே குதர்க்கமாகவும், குழப்பமாகவும்தானே இருக்கமுடியும்!

அன்புடன்

மு.க.

22-07-1986

42223

கி 894-8116
கருணா.16

1430. ஜூலை 27 -
தலைமை நிர்வாகக்குழு கூடுகிறது!

உடன்பிறப்பே,

உள்ளாட்சிமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட தோல்வி - பட்டதாரி தொகுதி, ஆசிரியர் தொகுதித் தேர்தல்களில் எம்.ஜி.ஆர். கட்சியினர்க்கு ஒரு இடம்கூடக் கிடைக்காத அளவுக்கு வீழ்ச்சி - மேலவை உறுப்பினர் நியமனத்தில் ஏற்பட்ட கேவலம் - மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடிக்க நடத்திய சதித் திட்டத்திற்கு கிடைத்த பதிலடி - மேலவையைக் கலைக்க அமைச்சரவைக் கூட்டத்திலே கூட விவாதிக்காமல் சாடிஸ்ட் மனப்பான்மையுடன் செயல்பட்ட விவகாரம் அம்பலத்திற்கு வந்ததால் ஏற்பட்ட விகாரம் - குறுவை சாகுபடிக்குக் கூட காவிரித் தண்ணீரை உரிய நேரத்தில் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளாததால் எதிர்க்கட்சிகள் அனைத்துமே சாட்டுகிற குற்றச்சாட்டு - ஜப்தியே நடத்த மாட்டோம் என்ற தேர்தல் கால வாக்குறுதிக்கு மாறாக ஜப்திக் கொடுமைகள் புரிந்து அதனால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதைப்பு - உணவு, குடிநீருக்கு வழியின்றி தமிழகத்தில் மிகப் பெரும்பகுதி நிலப்பரப்பில் வறட்சியினால் மக்கள் படும் துன்பதுயரம் - முதலமைச்சர் பெயரால் போர்ஜரி கையெழுத்து என்றும், மனைவியும் உற்றார் உறவினரும் அரசு நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்றும், முதலமைச்சர் இலாகாவிலேயே முதலமைச்சருக்குத் தெரியாமல் ஒரு ரகசியப்பிரிவு செயல்படுகிறது என்றும் - அசிங்கமும், ஆபத்தும் நிறைந்த அறிக்கைகளும், விளம்பரங்களும் செய்யப்பட்டதால் இந்திய நாடு முழுவதும் ஏற்பட்ட பரபரப்பு மிகுந்த வெட்கக்கேடு - இவற்றையெல்லாம் மறைக்கலாமென்று பத்தாண்டுச் சாதனை விழா நடத்தினால் அதிலும் மாபெரும் தோல்வி - தனது உரிமையுடைய மனைவியையே இழித்துப் பேசி, இவர்

எம்.ஜி.ஆரின் மனைவியே அல்ல என்று சென்ற ஆண்டு அறிக்கை விட்ட கொள்கை பரப்புச் செல்வியை கோபுரத்தில் ஏற்றிடும் கோமாளித்தனமான முயற்சிக்குத் தனது கட்சிக்குள்ளேயே புகைந்து கொண்டிருக்கும் வெறுப்பு - இத்தனையையும் மறைத்து, அரசியல் வட்டாரங்களையும், பொதுமக்களையும், தனது கட்சிக்காரர்களையும் திசை திருப்பத்தான் ஆளுங்கட்சியினர் ஆளுக்கொரு கத்தி வைத்துக் கொள்க என்று மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆர். ஆணையிட்டார்.

அந்தக் கத்திப் பேச்சினால் ஏற்படும் விபரீதம் குறித்து - கழகம் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உள்ள பொறுப்பு மிகுந்த எல்லாக்கட்சிகளின் தலைவர்களுமே கடுங்கண்டனம் தெரிவித்தனர்.

ஆனால், ஊழலில் மூழ்கித் திளைத்து அந்த உளைச்சேற்றில் சிக்கிக் கொண்டிருக்கும் சில அமைச்சர்களும் - சில ஆளுங்கட்சிப் பிரமுகர்களும் - மற்ற கட்சித் தலைவர்களுக்கு விளக்கமோ, மறுப்போ சொல்ல முன்வராமல் முண்டா தட்டிக் கொண்டு - நம்மீது சீறிப்பாய்ந்து சினந்து குதிக்கிறார்கள்.

இதோ எம்.ஜி.ஆர். கத்தி தூக்கச் சொன்னதின் விளைவு - மாநில முழுதும் வன்முறை தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது!

காவல்துறையோ கைகட்டி வேடிக்கை பார்க்கிறது - அல்லது வன்முறைக்கு ஆளாகியோர் மீது வழக்கு தொடுத்திடப் பாய்கிறது!

கத்தி வழங்கும் விழாவொன்றே நடைபெறப் போகிறதாம் - அமைச்சர் ஒருவரே அவரது கட்சியினருக்குக் கத்திகளை வழங்குகிறாராம். அந்த நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்த காங்கிரசார் தயங்க மாட்டார்கள் என்று, மூப்பனார் அவர்கள் முன்னிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் தங்கபாலு அவர்கள் தடந்தோள் தட்டி அறிவித்திருக்கிறார். சிவாஜி மன்றத் தளபதி சண்முகம் அவர்களும் இந்தக் கத்திப் பேச்சை எதிர்த்து நாள்தோறும் முழங்கி வருகிறார்.

கழகமும், கழகத்தின் தோழமைக் கட்சிகளும் வேண்டாம் இந்த விபரீத உத்திரவு! என முதலமைச்சருக்கு வழங்க வேண்டிய எச்சரிக்கையை வழங்கி விட்டன!

ஆனால் என்ன நடக்கிறது இப்போது? இதோ தினமணி சென்னைப்பதிப்பு 23-ந்தேதி வந்துள்ள செய்திப்படி -

மதுரையில் கத்தியால் குத்தி வில்லாபுரத்தில் மூன்று கொலைகள் செய்ததாகக் கைது செய்யப்பட்ட முனியாண்டி என்பவர் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். முனியாண்டி கையில் எம்.ஜி.ஆர். உருவப்படமும், அ.இ.அ.தி.மு.க. கொடியும் பச்சை குத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

உடன்பிறப்பே, இது தினமணி வெளியிட்ட செய்தி! அந்தக் கத்திகுத்து முனியாண்டி எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவரேதான் என்பது மட்டுமல்ல - அவரால் கத்தி கொண்டு கொலை செய்யப்பட்டவர்களில்; பரசுராமன் என்பவர் ஒரு பொரிகடலை வியாபாரி - இராமன் என்பவர் தியேட்டர் தொழிலாளி - பாஸ்கரன் என்பவர் ஈயப்பட்டறைத் தொழிலாளி! முனியாண்டியின் கத்திக்குத்துக்கு ஆளாகி, படுகாயமுற்று மருத்துவமனையில் கிடப்பவர் வெள்ளைச்சாமி என்ற அரிசிக்கடை உரிமையாளர்!

மன்னார்குடியிலோ - கத்தியைத் தூக்கிக் கொண்டு கடைகளைச் சூறையாடினர்! தியேட்டர்களை உடைத்தனர்! அமளி துமளி தாங்க முடியவில்லை!

தங்களின் கத்திக்குத் தப்பியோடிய தி.மு.கழகத்தினரைப் பிடிக்க முடியாமல் - தங்கள் கத்திக்குத் தீனி தேட, சென்னை பெரம்பூரில் ஒரு போலீஸ்காரரையே அ.தி.மு.க. அருளாட்சியாளர்கள் சரமாரியாகக் குத்திச் சாய்த்தனர் என்று, இன்று கூடச் செய்தி வந்துள்ளது.

அங்கிங்கெனாதபடி எங்கும் இந்த வன்முறைகள் தொடர் நிகழ்ச்சிகளாகின்றன!

அரசு அலுவலர் போராட்டமானாலும் - ஆசிரியர் போராட்டமானாலும் - அவற்றை நேருக்குநேர் பொது மக்களைக் கொண்டு சந்திப்பேன் என்று அறைகூவல் விட்டு, அவர்கள்மீது தனது கட்சிக் குண்டர் பட்டாளத்தை எம்.ஜி.ஆர். ஏவிவிட்ட சம்பவங்களை நாடு மறந்துவிடவில்லை!

இப்போது, பகிரங்கமாகவே முதலமைச்சர் அறிவித்து விட்டார் - கத்தி தூக்கிடுக என்று!

இந்தக் கத்திகளையும் சமாளித்துக் கொண்டு - இப்போது நடைபெறும் காட்டுமிராண்டி காலத்துத் தர்பாரின் மோசடிகளையும்

அம்பலப்படுத்தி - தமிழ்நாட்டு மக்கள் அன்றாடம்படும் அல்லல்கள் நீங்கிடவும், நிர்வாகச் சீர்கேட்டை எடுத்துக்காட்டி அதில் விழுந்துள்ள எண்ணற்ற ஓட்டைகளை அடைத்திடவும், வறட்சியால் வாடும் தமிழக மக்களின் வாட்டம் போக்கிடவும் - ஜனநாயகக் கோட்பாட்டில் அக்கறையுள்ள எல்லாக் கட்சிகளுக்கும், வேலை நிறைய இருப்பதாகவே நான் கருதுகிறேன்!

நீயும் அப்படித்தான் கருதிடுவாய்! தமிழக மக்கள் படுந்துயரம் - ஆட்சியின் அலங்கோலம் - நாம் எடுத்திடவேண்டிய நிலை - இவை குறித்தெல்லாம் கலந்து பேசிடத்தான் வருகிற 27-ந் தேதி சென்னையில் கழகத்தின் தலைமை நிர்வாகக்குழு கூடுகிறது.

அந்தக்குழுவில் எடுக்கப்படும் முடிவுகளைச் செயல்படுத்த - உடன்பிறப்புகள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும்!

அன்புடன்

மு.க.

24-07-1986

1431. தஞ்சையே பாலைவனமாகிறதென்றால்...?

உடன்பிறப்பே,

தஞ்சை மாவட்டத்திலிருந்து இன்று வந்துள்ள செய்திகள்! முரசொலியோ நானோ தரும் செய்திகள் என்றால் இங்குள்ள மாண்புமிகுகள் சிலர் எரிமலைக் குழம்பினைக் கக்குவர்! இழிமொழிப் புயலெனப் புறப்படுவர்!

ஜூலை 25 சென்னை தினமணி ஏழாம்பக்கத்தில் வந்த செய்தியினை அப்படியே தருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கடும்வறட்சி. ஆடு மாடுகள் குறைந்த விலையில் விற்பனை.

இதுதான் செய்திக்குத் தலைப்பு! இதோ தினமணியில் வந்த செய்தியை ஒரு எழுத்துக்கூட மாற்றாமல் இந்தக் கடிதத்தில் இணைத்திடுகிறேன்.

தஞ்சாவூர், ஜூலை 24 -

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி காரணமாக குறுவை சாகுபடி பற்றிய நிச்சயமற்ற நிலை, பாசனத்துக்கு போதிய நிலத்தடி நீர் இல்லாமை, குடிநீருக்கும் தட்டுப்பாடு நிலவுவது ஆகியவை காரணமாகப் பயங்கர நிலைமை உருவாகியுள்ளது.

சிறிய, நடுத்தர விவசாயிகள் ஆடுமாடுகளையும், தட்டுமுட்டு சாமான்களையும் குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருப்பதாகவும், விவசாயத் தொழிலாளர்கள் திருச்சி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களுக்கும், கேரள மாநிலத்துக்கும் கூட்டம் கூட்டமாக வேலை தேடிச் சென்றுகொண்டிருப்பதாகவும் தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

நிலத்தடி நீர்மட்டம் மிகவும் கீழே போய் விட்டது. எனவே, பெரும்பாலும் திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம்,

மயிலாடுதுறை, சீர்காழி, மன்னார்குடி போன்ற இடங்களில் வசிக்கும் பெரிய மிராசுதார்கள்கூட தங்கள் பம்பு செட்டுக்களைப் பயன்படுத்திக் குறுவைச் சாகுபடியை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. தங்களுக்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியில்தான் அவர்கள் குறுவை பயிரிட்டுள்ளனர்.

அன்றாட ஜீவிதத்துக்காக பல சிறிய, நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களை விற்று விட்டனர். அல்லது அடகு வைத்துள்ளனர் என்று கடந்த சில நாட்களாக பல கிராமங்களுக்குச் சென்று பார்த்து வந்த எமது நிருபர் தெரிவிக்கிறார். முத்துப்பேட்டை பகுதி கிராமங்களில் சாதாரணமாக 2500 ரூபாய்க்கு மேல் விலை போகக் கூடிய உழவு மாடுகள் வெறும் 500 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. நிலங்களை அடமானம் வைப்பதும் மாவட்டத்தில் இப்பொழுது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகளுக்கு அன்றாட உயிர் வாழ்க்கையே கஷ்டமாகி விட்டது. அத்துடன் வைக்கோல் கிடைக்காததாலும் ஆடுமாடுகளை விவசாயிகள் விற்று வருகிறார்கள் என்று திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ.வான பி. உத்திராபதி கூறினார்.

தஞ்சை மாவட்டத்தில் மொத்த விவசாயத் தொழிலாளர்களில் கால்வாசிப்பேர், அதாவது சுமார் இரண்டரை லட்சம்பேர், அண்டை மாவட்டங்களுக்கோ அல்லது கேரளத்திற்கோ வேலை தேடிச்சென்று விட்டதாக எமது நிருபர் நடத்திய ஒரு ஆய்விலிருந்து தெரிய வருகிறது. கட்டுமான வேலைகள் மற்றும் இதர பணிகளில் குறைந்த கூலிக்கு வேலை செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டம் முழுவதும் பெரும்பாலான கிணறுகள், குளங்கள் வற்றி விட்டன. நிலத்தடி நீர் மட்டமும் இறங்கி விட்டது. இதனால் கடுமையான குடிநீர் தட்டுப் பாடு ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மூலம் சில இடங்களில் விதைக்கப்பட்ட குறுவை நாற்றுகள் மற்றும் நடவு செய்யப்பட்ட பயிர்கள் வாடத் தொடங்கியுள்ளன. நீடாமங்கலம், கும்பகோணம் பகுதிகளில் சாலை ஓரங்களிலிருந்தே இதைப் பார்க்க முடிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாக 4.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்வது வழக்கம். இந்த ஆண்டு 50 ஆயிரம்

ஏக்கரில் குறுவை பயிரிடப்பட்டால் அதிசயம். இதுவரையில் 30 ஆயிரம் ஏக்கரில் நடவு நடந்துள்ளதாக விவசாயத் துறை இணை டைரக்டர் சுல்தான் மொகிதீன் கூறினார். சில இடங்களில் பயிர்கள் வாடத்தொடங்கியுள்ளன.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக வட்டாரத்திற்கு பத்து லட்சம் ரூபாய் வீதம் மாவட்டத்தில் உள்ள 34 வட்டாரத்திற்கும் நிதி ஒதுக்குமாறு மாநில அரசை தஞ்சை கலெக்டர் டி.ஆர். ராமசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

நெற்களஞ்சியமான தஞ்சையில் அரிசி விலை கடுமையாக உயர்ந்து விட்டதால், விவசாயத் தொழிலாளர்களும், இதர ஏழை மக்களும் படும்பாடு பரிதாபமாக இருக்கிறது. பெரும்பாலான பகுதிகளில் அரிசி விலை கிலோ 4 ரூபாய் முதல் 4.50 ரூபாய் வரை விற்கிறது.

உடன்பிறப்பே! நன்செய் குலுங்கும் தஞ்சை - சோழவளநாடு சோறுடைத்து - என்றெல்லாம் புகழப்பட்ட அந்தப் பகுதி இத்தகைய அல்லலுக்கு உட்பட்டுள்ளது என்றால் மற்ற மாவட்டங்கள் குறித்து விபரமும் தேவையா?

வேலை தேடி வேறு மாவட்டங்களுக்கும் கூட விவசாயத் தொழிலாளர்கள் ஓடுகிறார்கள் என்றால் - உழவு மாடுகளை ஆறு மடங்கு ஏழு மடங்குக் குறைவான விலைக்கு விவசாயிகள் விற்கிறார்கள் என்றால் - நிலங்களை அடமானம் வைப்பது நித்ய நிகழ்ச்சிகள் ஆகிவிட்டதென்றால் - தட்டுமுட்டுச் சாமான்களை விற்றுப் பசியாறும் நிலைமை ஏற்பட்டு விட்டதென்றால் - அதற்கும் அரிசி விலை யானை விலை, குதிரை விலை என ஏறுகிறது என்றால் - அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் வெள்ளிச் செங்கோல் - தங்கத்தால் கோட்டை - சாதனைத் தூண் திட்டம் - பத்தாண்டு விழா - கத்தி கபடா பேச்சு - எனக் காலத்தை ஓட்டிக் கொண்டு கதை பேசிக் கொண்டிருக்கும் இந்த எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பற்றி என்னதான் சொல்வது?

டெல்லியில் மாநிலங்களவையில் இந்த மாதம் 18-ந் தேதியன்று தம்பி முரசொலி மாறன் ஒரு கேள்வியை எழுப்புகிறார்.

1984-85, 1985-86 ஆகிய இரு நடப்பு ஆண்டுகளுக்கும் எந்தெந்த மாநிலங்கள் வறட்சி நிவாரண உதவி கேட்டுள்ளன என்று பட்டியல் ஒன்றை அறிவித்துள்ளீர்கள். ஆனால்

அந்தப் பட்டியலில் தமிழ்நாடு எவ்வளவு கேட்டது? எவ்வளவு கொடுத்தீர்கள்? என்ற பகுதி காலியிடமாக விடப்பட்டிருக்கிறதே - நான் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வறட்சி குறித்து தமிழ்நாடு அரசிடமிருந்து முறையீடோ, கடிதமோ வந்ததா? வந்தும் நீங்கள் கவனிக்கவில்லையா?

மாறனின் இந்தக் கேள்விக்கு மத்திய துணை அமைச்சர் மக்வானா அளித்த பதில் என்ன தெரியுமா?

வறட்சி குறித்துத் தமிழக அரசிடமிருந்து இன்று வரை எந்தத் தகவலும் வரவில்லை!

இந்தப் பதிலைக் கேட்ட பின்னர் அதிர்ச்சியடைந்த அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர், சென்னைத் தமிழக அரசு தலைமைச் செயலகத்துக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

இனிமேல்தான் அனுப்பப் போகிறோம் என்று சாவதானமாக இங்குள்ள சர்க்கார் சார்பில் அந்த உறுப்பினருக்கு பதில் அளிக்கப்பட்டது!

இந்த அழகில் இங்கே வறட்சி நிவாரண கமிஷனர் ஒருவர்!

இது போதாது என்று டெல்லியில் தமிழக அரசுப் பிரதிநிதி ஒருவர்!

அந்தப் பிரதிநிதிகள் இதுவரை யாருமே தமிழ்நாட்டு திட்டங்களுக்காக ஒரு துரும்பைக் கூட அசைத்ததில்லை!

அவர்கள் பேச்சுகள், அறிக்கைகள் என்னமோ - மிகப் பிரமாதம்!

தஞ்சையே பாலைவனமாகிவிட்டது - தமிழ்நாட்டின் மற்ற பகுதி நிலவரங்களை அறிந்திடவும் - அரசின் தூக்கத்தை கலைத்து - கைத்தாங்கலாகத் தூக்கி நிறுத்தியாவது அரசின் கடமைகளைச் செய்திட வைக்க நமது பணிகள், நாம் நமது நிர்வாகக் குழுவில் எடுக்கும் முடிவுகள் - பயன்பட வேண்டுமல்லவா?

தக்கது செய்திட, கலந்துரையாடிட - தவறாது வந்திடுக தலைமைக்கழக நிர்வாகக் குழுவினர்!

அன்புடன்

மு.க.

26-07-1986

1432. உள்ளாட்சிகளின் உரிமைகள் பறிப்பு!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தோற்றாலும் தோற்றது - அதுவும் நகராட்சி மன்றத் தேர்தலில் மிக மோசமான தோல்வியைப் பெற்றாலும் பெற்றது - ஏ! அப்பா! நெருப்பை மிதித்தது போல நித்தநித்தம் ஒரு உத்தரவு! எல்லா உத்தரவுகளுமே உள்ளாட்சிமன்ற உரிமைகளைப் பறித்துக் கொள்கிற உத்தரவுகள்தான்! உள்ளாட்சி தலைவர்களுக்கும் பக்கத்தில் நாற்காலி போட்டு எம்.எல்.ஏ.க்கள் உட்கார வைக்கப்பட வேண்டுமாம்! உள்ளாட்சி மன்றக் கூட்டங்களுக்கு எம்.எல்.ஏ.க்கள் சென்று உறுப்பினர்களுடன் அமர்ந்து நடவடிக்கைகளைக் கவனிப்பதில் - அல்லது அதிகாரப்பூர்வமற்ற முறையில் ஊர் அல்லது நகர் நன்மைக்காக யோசனைகள் கூறுவதில் - ஆட்சேபணை எதுவும் இல்லை.

ஆனால், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர், அவரது பொறுப்புக்கும் பணிக்கும் உட்பட்ட ஒரு அமைப்பின் அளவில், அவருக்குரிய உரிமைகளுடன் - உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து ஜனநாயக முறையில் செயல்படுவதைத் தடுக்கும் வகையில் - சட்டமன்றம் என்ற ஒரு அமைப்புக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எம்.எல்.ஏ.வை சரிசமமாக நாற்காலி போட்டு உட்கார வைக்க வேண்டும், ஒவ்வொரு கௌன்சில் கூட்டத்துக்கும் என்பது எப்படி முறையானதாக இருக்க முடியும்?

ஒன்றியத்தை - நகரத்தை விட - சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி பெரியது என்றால், சட்டமன்றத் தொகுதியைவிட நாடாளுமன்றத் தொகுதி பெரியது என்பதற்காக - மத்தியில் உள்ள அமைச்சர் ஒருவரோ, இருவரோ - சட்டசபை நடக்கும்போது முதலமைச்சருக்குப் பக்கத்தில் சபையில் சரிசமமாக அமர்வதற்கு இனிப் புதிய ஆணைகள் பிறப்பிக்கப்படலாம் அல்லவா?

எம்.பி.க்கள் கூட, சட்டசபைக்கு அனுமதிக்கப்பட்டு, எம்.எல்.ஏ.க்களுடன் கலந்து உட்காரலாம் அல்லவா? அவர்களும் விவாதங்களில் குறுக்கிட்டுப் பேசலாம் அல்லவா?

ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கூட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் சென்று ஊராட்சித் தலைவருடன் சரிசமமாக உட்கார உரிமையும் இனி அளிக்கப்படலாம் அல்லவா?

இப்படியெல்லாம் ஐயப்பாடுகள் எழுகிற அளவுக்கும், கோரிக்கைகள் கிளம்புகிற அளவுக்கும் இந்த அரசின் புதிய உத்தரவு வழிவகுக்கத்தான் போகிறது!

துணைத்தலைவர் தேர்தல்களை நடத்தக்கூட உள்ளாட்சி மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு உரிமையில்லையென புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவற்றையும் அதிகாரிகளே நடத்தக்கூடிய நிலைமை!

ஒன்றிரண்டு துணைத்தலைவர் தேர்தலில் தவறு நடந்துவிட்டதாம் - அதனால் இப்படியொரு ஆணையென்று அமைச்சர் அடித்துப் பேசுகிறார்.

பொதுத்தேர்தலில் வடமாநிலங்கள் சிலவற்றில் பூத்கேப்சர் வாக்குச்சாவடிகள் ஆக்ரமிக்கப்படுதல் - இன்னமும் கூட நடைபெறுகிறது - அதற்காக, அந்த வன்முறைகளைத் தடுக்க வேண்டுமேயல்லாது இனிப் பொதுத்தேர்தலே வேண்டாமென்று மத்திய அரசு ஒரு ஆணை பிறப்பித்து விடுவதா?

எந்தத்தவறு நடந்தாலும் நடவடிக்கை எடுத்து அதனைச் சட்ட ரீதியாகச் சரிசெய்ய வேண்டுமேயல்லாது - நேர்மாறாக ஜனநாயக அமைப்பின் உரிமைகளையே சீர்குலைப்பது என்ன நியாயம்?

ஒரு அதிகாரி, ஒரு மாவட்டத்தில் காலை பத்து மணி தொடங்கி, இரவு எட்டுமணி வரையில் சுமார் பத்துபனிரெண்டு ஒன்றியங்களில் துணைத்தலைவர் தேர்தலை நடத்திவைப்பார் என அறிவிப்பு! முடிகிற காரியமா? தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இரவு 10 மணிக்கு என்று விளம்பரப்படுத்தப்படுகிற ஊர்களில் விடியற்காலை ஆறு மணியளவில் சொற்பொழிவாளர் போய்ச்சேர்ந்து நடைபெறுவது போலவே, பல இடங்களில் துணைத்தலைவர் தேர்தலுக்காக விடிய விடிய உறுப்பினர்கள் காத்துக்கிடந்திருக்கிறார்கள். இதெல்லாம் என்ன அலங்கோலம்?

பல ஆண்டுகாலம் நகராட்சி மன்ற அனுபவத்தில் பழுத்து முதிர்ந்துள்ள விழுப்புரம் பெரியவர் சண்முகம் அவர்கள், இப்போதும் அதே நகராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவர் தேர்தல் நடந்தபோது, அவருக்கே வாக்களிக்க உரிமையில்லையென்று கூறிவிட்டார்கள். இதேநிலை விருதுநகர் நகராட்சித் தலைவருக்கும் ஏற்பட்டது! இத்தனைக்கும் துணைத்தலைவர் தேர்தலில் தலைவருக்கு ஓட்டுரிமை உண்டு என்று அமைச்சர், சட்டசபையில் அறிவித்திருந்தார். அப்படியொரு ஆணை இன்னும் வந்து சேரவில்லை என அதிகாரி கைவிரித்தார். தோல்வியடைந்த ஆத்திரத்தில் என்னென்ன திருக்கூத்துக்கள்!

பெரியவர் சண்முகம், விழுப்புரம் நகர் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் அரசின் தூண்டுதலால் அதிகாரிகளும் - ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் - மிகவும் தொல்லை கொடுப்பதாக வேதனைப்படுகிறார்.

இதோ ஒரு இளைஞர் - தம்பி வாலாஜா அசேன்! அவர் வாலாஜாவின் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்றுள்ளார்!

துடிப்புடனும் - ஆர்வத்துடனும் - அதே சமயம் பொறுப்பு மிகுந்த அமைதியுடனும் - அவர் ஆற்றிடும் பணிகளை நாளேடுகள், வார ஏடுகள் பல பாராட்டி எழுதியும் உள்ளன.

இதோ - அவர் தலைவராயிருக்கும் நகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றை ஜூனியர் விகடன் ஏடு, விரிவாக எழுதியுள்ளது. அதன் சில பகுதிகளை உன் போன்ற உடன்பிறப்புகள் படித்து, மற்றவர்களுக்கும் விளக்கினால் உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகள், இந்த தேர்தலுக்குப் பிறகு எப்படியெல்லாம் பறிக்கப்பட்டு - பழிவாங்கப்படுகின்றன என்பது பரவலாக மக்களுக்குப் புரியும்.

ஜூனியர் விகடன் எழுதுவதாவது:-

வடாற்காடு மாவட்ட நிகழ்ச்சிகள் சிலவற்றில் உள்ளாட்சித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் நல்லுசாமி இருவரும் கலந்துகொள்ளப் போகிறார்கள் என்பது தெரிந்ததும், வாலாஜா நகராட்சி சார்பில் அவர்களுக்கு ஒரு வரவேற்பு விழா நடத்த முடிவு செய்யப்படுகிறது. உள்ளாட்சித் தேர்தல் முடிந்தபிறகு அமைச்சர்களுக்கு வரவேற்பு அளிக்கும் முதல் நகராட்சி வாலாஜா தான். அதிலும் இது தி.மு.க.

வெற்றி பெற்ற நகராட்சி என்பதால், விழாவில் அரசியல் வாடையே கூடாது என்று ஏகமனதாக முடிவெடுக்கப்படுகிறது.

முன்னுரை பேசிய நகராட்சித் தலைவர் ஜெ. அசேன்,

நகராட்சிக்கு வருவாய் இல்லை. 36 லட்சத்தில் வாலாஜா நகராட்சி அனுப்பிய பிரபோஸல் அனுமதிக்கப்பட வேண்டும். பாக்கிபணம் கட்டினால் தான் டியூப் லைட் போடுவேன் என்ற மனநிலை மாறி, மின்சார இலாகா மூலமாக வாலாஜாவுக்கு விளக்கு வசதி செய்ய வேண்டும். அரசு தாய் என்றால் நகராட்சிகள் குழந்தைகள். இதில் வாலாஜா நகராட்சி ஒரு நோஞ்சான் பிள்ளை. அரசு இந்தக் குழந்தையை முதலில் கவனிக்க வேண்டும் என்றெல்லாம் பேசினார்.

பிறகு பேச எழுந்தார் ப.உ. சண்முகம். பத்தே பத்து நிமிடம் நேர்வழியில் போன அவர் பேச்சை, பிறகு அரசியல் ஆக்கிரமித்துக் கொண்டது.

வாலாஜாவை விட மோசமான நகராட்சிகள் ஏராளம்... யாருக்கு முதலில் உதவி செய்வது என்று இப்போதுதான் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். மாட்டு வண்டியைக் கூடவா மந்திரி ரிப்பேர் செய்ய முடியும்? இந்த நிலையில் அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டதாகச் சிலர் கூப்பாடு போடுகிறார்கள், ஊர்வலம் நடத்துகிறார்கள். ஜூலை நாலாம் தேதி கவர்னரிடம் தி.மு.க. கொடுத்த மனு

என்றெல்லாம் தி.மு.க.வைத் தாக்கியவர், திருவண்ணாமலை கமிஷனர் சஸ்பெண்ட் விவகாரத்தை இழுத்துப்போட்டுக் கொண்டார். பிறகு மின்சார இலாகா சேர்மன் விஜயராகவன் கண்டிப்பானவர், சத்யா ஸ்டூடியோ விவகாரத்திலேயே கண்டிப்பாயிருந்தவர் என்று முழங்கினார்!

முன்னுரையில் சாதாரணமாகப் பேசிய நகராட்சித் தலைவர் அசேன், முடிவுரையில் பின்னுரையில் சீரியஸானார். நகராட்சியின் அதிகாரத்தைப் பறிக்கவில்லை என்கிறார் அமைச்சர். அவர் கூறியதை ஏற்க முடியாது என்பதற்கு ஒரு உதாரணம் - அரசு ஆணைகள் முதலில் நகராட்சி ஆணையர் கைக்குச் செல்வது! முன்பெல்லாம் ஜி.ஓ. சேர்மனுக்கு வந்துதான் கமிஷனருக்குப் போகும். இப்போது கடிதங்கள் முதலில் கமிஷனருக்குப் போவதால், அது சேர்மனுக்குத் தெரியாமல் மறைக்கப்பட

வாய்ப்புண்டு, இது அதிகாரப் பறிப்பில்லையா? என்று அசேன் பேசிக் கொண்டிருக்கையில் திடீரென்று ப.உ. சண்முகம் எழுந்தார் முகம் சிவந்து ஆவேசமாக -

அரசு ஆணை இப்போதல்ல. என் காலத்திலிருந்தே கமிஷனருக்குத்தான் முதலில் போகும் என்று சொல்லிவிட்டு சட்டென்று அமர்ந்து கொண்டார்.

அசேன் அதே தீவிரத்துடன் பதில் தந்தார். இல்லை ஆங்கிலேயர் காலத்திலிருந்தே எந்தக் கடிதமும் முதலில் நகராட்சித் தலைவருக்குத்தான் வரும். இதை நான் நிரூபிக்கத் தயார் என்றபடி தன் பக்கத்திலிருந்த மானேஜரிடம் சில பைல்களைக் கொண்டுவரச் சொல்கிறார். சட்டென்று எழுந்த ப.உ.ச. இதற்கு மேல் நான் விவாதம் நடத்த விரும்பவில்லை என்றபடி மேடையைவிட்டுக் கோபமாக இறங்கினார். கொஞ்ச நேரம் ஒன்றும் புரியாமல் அமர்ந்திருந்த அமைச்சர் நல்லுசாமியும், எம்.எல்.ஏ. கதிர்வேலுவும் ஓடிப்போய் அமைச்சரை சமாதானப்படுத்த முயல்கிறார்கள்.

தேசியகீதம் இசைப்பதற்கு முன் மந்திரிகள் மேடையைவிட்டு இறங்குகிறார்களே என்று அவசர அவசரமாக நன்றியுரை படிக்கப்படுகிறது. சமாதானப்படுத்த வந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. மீது மந்திரி வார்த்தைகளை வீசுகிறார். போய்யா! பெரிய வரவேற்பு விழா! என்னை அவமானப்படுத்தணும்னே இங்கே கூட்டிக்கிட்டு வந்தியா? என்கிறார் குரலை உயர்த்தி. கையிலிருந்த மூன்று எலுமிச்சம் பழங்களை மாறிமாறிக் கசக்கியபடி ப.உ.ச. இருக்க, குழப்பத்தின் நடுவில் தேசியகீதம் ஆரம்பமாகிறது. நடந்து செல்ல முற்பட்ட மந்திரிகளும், எம்.எல்.ஏ.வும் நடுரோட்டில் நின்று விடுகிறார்கள். மேடையில் ஒண்டிக்கட்டையாய் இருப்பது அசேன் மட்டுமே!

இரண்டு நாள் கழித்து மீண்டும் வாலாஜா போனோம்.

1956 முதல் 1959 வரையிலும் மீண்டும் 1961லிருந்து 1967 வரையிலும் வாலாஜா முனிசிபல் சேர்மனாயிருந்த சி.ஏ. வரதராசனைச் சந்தித்தோம். எப்போதும் ஜி.ஓ. மற்றும் கடிதங்கள் முதலில் சேர்மனுக்குத்தான் வரும். முதலில் கமிஷனருக்குப் போனால் பலவகைகளில் பாதகமாகிவிடும். இத்தனை நாட்கள் நகராட்சித் தலைவர்கள் இல்லை என்பதால் கமிஷனருக்கு

அனுப்பினார்கள். சரி. இனி சேர்மன் வந்த பிறகு சேர்மனுக்குத்தானே அனுப்பப்பட வேண்டும் என்கிறார்.

1940லிருந்து 1942 வரை வாலாஜா சேர்மனாக இருந்த எஸ்.வி. சுந்தர்ராம ஐயரும் அதையே சொல்கிறார். எங்கள் காலத்தில் கடிதங்கள் சேர்மன் மூலம்தான் கமிஷனருக்கு வரும். மந்திரி சொல்வது சரியல்ல, அவர் கோபித்துக் கொண்டதும் நியாயம் இல்லை என்பது இவர் கருத்து.

உடன்பிறப்பே,

23.7.86 ஜூனியர் விகடன் நிருபர் எழுதியுள்ள இந்த விபரங்கள், ஜி.ஓ.க்கள் எனப்படும் அரசு ஆணைகள் அடங்கிய தபால்களைக் கூட உள்ளாட்சித் தலைவர்களின் முகவரிக்கு அனுப்ப கூடாது என்ற அளவுக்கு அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன என்பதை உணர்த்துகிறதா இல்லையா?

அரசாணைகள் மற்றும் கடிதங்கள் - தலைவருக்கு அனுப்பப்படாமல், கமிஷனருக்கு அனுப்பப்படுவதாக அசேன் கூறினார். அப்படி இனி நடைபெறாமல் பார்த்துக் கொள்கிறேன்.

என்று பதில் அளிக்க வேண்டிய பொறுப்புள்ள அமைச்சர் பாயும் புலியாக மாறி - அந்த விழாவையே அமளிதுமளியாக்கிவிட்டு வந்திருக்கிறார் என்றால், உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதித்தே தீருவதென இந்த அரசும் - அரசின் தலைமைப் பொறுப்பில் உள்ள முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களும் முடிவெடுத்து விட்டார்கள் என்றே திட்டவட்டமாகத் தெரிகிறதல்லவா?

இதுபோன்ற ஜனநாயக விரோதப்போக்கு ஒன்றிரண்டல்ல! ஏராளம்! ஏராளம்! அனைத்தையும் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டியது மிகமிக அவசியம்!

அன்புடன்

மு.க.

27-07-1986

1433. சிட்னஸ் நதியில்
ஒரு சிங்கார பவனி!

உடன்பிறப்பே,

ஷேக்ஸ்பியரின் ஆண்டனி அண்ட் கிளியோபாட்ரா எழுத்தோவியத்தில் பேரழகி கிளியோபாட்ரா சிட்னஸ் நதியில் பவனிவரும் காட்சி குறித்த வர்ணனையொன்றை எப்போதோ படித்த நினைவு! எனினும் மறக்க இயலாத நினைவு! இந்த வயதிலா? என்று கேட்காதே! ஷேக்ஸ்பியரின் எழுத்தழகைத்தான் குறிப்பிடுகிறேன்.

சீசரைத் தன் சிரிப்பு முத்தாரத்திற்காகத் தவங்கிடக்க வைத்த கிளியோபாட்ரா, ஆண்டனியைத் தனது அந்தப்புரத்தில் சுற்றிச்சுற்றி வரச் செய்த அந்த இன்ப மோகினி, சிட்னஸ் நதியில் பவனி வருகிறாளாம்! பொன்னாலான படகு! வெள்ளித்துடுப்புகள்! மணங்கமழும் மலர் மாரி! படகைச் சுற்றிச்சுழலும் காற்றும் கூட காதல் வயப்பட்டு திணறியதாம்! இளம் வெப்பங்கூட கிளியோவின் கன்னங்களில் பட்டு - சிவந்து விடுமோ என ஐயுற்று, அவ்வாறு நேர்ந்து விடாதிருக்க பக்கத்தில் நின்று பணியாளர்கள் வண்ண விசிறிகளால் வீசுகின்றார்களாம்! ஆனால் விசித்திரம் - விசிறியிலிருந்து பட்ட காற்றின் காரணமாக, அந்த அரசியின் கன்னங்கள் சிவப்பாகி விட்டனவாம்!

என்ன! திடீரென சிட்னஸ் நதியில் நடந்த கிளியோவின் படகுப்பவனி காணச் சென்று விட்டாய் எனக் குறும்புத் தனமாக நீ என்னை விழியால் கேட்பது புரிகிறது உடன்பிறப்பே!

ஜூலை 27 ஆம் தேதியிட்ட ஆனந்த விகடன் இதழ் படித்துக் கொண்டிருந்தேன்!

அரியனை அனுமன் தாங்க...
அங்கதன் உடைவாள் ஏந்த...

என்ற கம்பராமாயண வரிகள் என் கண்ணில் பட்டன! விகடனில் எது குறித்த விமர்சனத்திற்காக இந்த இராமாயண வரிகளை எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள் என்று கவனித்துப் படித்தேன்!

ஷேக்ஸ்பியர் காட்டும் சிட்னஸ் படகுப் பவனி போல - மதுரையில் ஜூலை மாதத்தில் ஒரு பவனி நடைபெற்றிருக்கிறது!

பவனியின் முக்கிய கதாபாத்திரத்திற்கு திடீரென ஒரு நெருக்கடி! பவனியில் வந்த பிரஜைகளுக்கு ஆசி வழங்க வேண்டும். ஆனால் அதற்குத் தேவையான ஒலிபெருக்கியும் ஹாரன் எனப்படும் குழாயும் அங்கில்லை! எங்கிருந்தோ எப்படியோ கொண்டு வந்தார்கள்!

ஒலிபெருக்கி மைக்கைக் கையில் வைத்துக் கொண்டு - முக்கிய கதாபாத்திரம் பேசிட முயன்றும் கூட, கூடியிருந்தோர் செவிகளுக்கு எட்டவில்லை!

உடனே அமைச்சர் சௌந்தரராசன் என்பவர் ஒரு ஹாரன் குழாயைத் தூக்கித் தோளிலே வைத்துக் கொண்டு - ஸ்ரீரங்கத்திலே என்னவோ பிடித்துக் கொண்டு நிற்பது என்பார்களே - அப்படி நின்றார்! அவரும் ஸ்ரீரங்கத்துக் காரர்தான்!

அந்த அற்புதக் காட்சியைத்தான் ஆனந்த விகடன்

அரியனை அனுமன் தாங்க...
அங்கதன் உடைவாள் ஏந்த...

என்ற கம்பராமாயண வரிகளை நினைவூட்டி, தனக்கு வந்த அடங்காத சிரிப்பை நம்மையும் பங்கு போட்டுக் கொள்ளுமாறு சொல்லியிருக்கிறது!

அமைச்சர் நிலையே இப்படியென்றால் அதிகாரிகள் நிலையைக் கேட்கவா வேண்டும்!

விகடனுக்கு கம்பராமாயண வரிகள் நினைவுக்கு வந்தன! அதனால் அனுமாரும் அங்கதனும் ஓர் உருவாகி அமைச்சர் வடிவில் காட்சி தந்ததை எழுத்தில் வடித்துள்ளது. எனக்கோ, சிட்னஸ் நதி படகுப்பவனியில் பணியாளர்கள், வண்ண விசிறி கொண்டு வீசிய காட்சி நினைவுக்கு வந்தது!

அவர்களாவது பணியாளர்கள்! இவர்கள் அமைச்சர் களாயிற்றே!

ஆனந்த விகடன், அரியனை அனுமன்தாங்க - அங்கதன் உடைவாள் ஏந்த... என வேடிக்கையாக எழுதினாலும் எவ்வளவு வேதனையை வெளிப்படுத்தியுள்ளது என்பது புரிகிறதல்லவா?

கிடைத்த பதவி பறிபோகாமலிருக்க - எந்தெந்த நேரத்திற்கு, யார்யாருக்கு, எது எதைத் தாங்க வேண்டுமோ, அது அதைத் தாங்கி நிற்கவும் தோளில் சுமந்து, தூக்கிப் பிடித்து நிற்கவும் அமைச்சர்களுக்குத்தான் தலையில் எழுதியிருக்கின்றது என்றால் - அதிகாரிகளும் கூட, அதிலும் போலீஸ் அதிகாரிகளும் கூட - அகில உலக எம்.ஜி.ஆர். மன்ற ரசிகர்களாகி விட்டார்களே!

நானோ, முரசொலியோ, தினகரனோ சொன்னால் அல்லது எழுதினால் அ.தி.மு.க.வினருக்குக் கண்களில் அக்கினி கிளம்புகிறது!

இதோ! ஆனந்த விகடன் அதே இதழில் அதே கட்டுரை எப்படி ஆரம்பமாகிறது என்பதைப் பார்!

மன்ற மறவர்களே! சீறிவரும் சிறுத்தைகளே! நமது புரட்சித் தலைவர் அவர்களின் போர்ப்படையே! பின்னால் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறது. மாநாட்டுப் பந்தலுக்கு விரைந்து செல்லும்படி வேண்டுகிறோம். இதோ நம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் நமது மன்ற மறவர்களைப் பார்வையிடுகிறார்! மைக்கில் பேசியது யாராயிருக்கும் என்று நினைக்கிறீர்களா? சீருடையுடன் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தவாறு ஒரு இன்ஸ்பெக்டர் முழங்கிய முழக்கம்தான் இது.

இது அப்படியே ஆனந்த விகடன் வாசகம் தான்! மதுரை எம்.ஜி.ஆர். மன்ற மாநாட்டு ஊர்வலத்துக்குப் போலீஸ் பாதுகாப்பு தேவைதான்! நம்முடைய கழக மாநாடுகள், பேரணிகளில் போலீசார் வந்திருக்கிறார்களா? - என்று பூதக்கண்ணாடி போட்டுத் தான் பார்க்க வேண்டும்!

ஆனால் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற மாநாட்டுக்கு - முப்படைத் தளபதிகள் வரவேண்டுமென்று அழைத்திருந்தால்கூட ஒருவேளை, இந்த நாடு போகிற போக்கில் டெல்லியிலிருந்து அனுப்பியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஆனால் தமிழ் நாட்டில் உள்ள உச்சிமட்ட போலீஸ் அதிகாரிகள் அனைவரும் - பல்லாயிரக்கணக்கான போலீசாரும் - மதுரை ரசிகர் மாநாட்டில்தான் இருந்தார்கள்!

அவர்களிலே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தவாறே ஒலிபெருக்கி மூலம் - மன்ற மறவர்களே! என விளித்து, எம்.ஜி.ஆர். கட்சித் தொண்டராகவே முழக்கமிட்டிருக்கிறார்.

சிட்னஸ் நதியில் ஒரு சிங்காரப்படகு பவனி!

வண்ண விசிறி வீசிட எண்ணற்ற பணியாளர்கள்!

மதுரை வீதியில், ரசிக மகா ராஜ்ஜியத்தின் ரம்மியமான பவனி!

ஒலிபெருக்கி ஹாரனைத் தூக்கவும் - ஒலிபெருக்கி மூலம் முழக்கவும் - அமைச்சர்கள்! போலீஸ் அதிகாரிகள்!

நாடு, நாசமாய் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையா?

எண்ணிப்பார்! இந்த இழிவு போக்கிட இயன்றதைச் செய்து மக்களுக்கு விளக்கமளித்திடு! அவர்களை விழிப்புறச் செய்!

அன்புடன்

மு.க.

29-07-1986

1434. ஆகஸ்டு 6, 7, 8 - அறப்போர் முதற்கட்டம்!

உடன்பிறப்பே,

தலைமைக்கழக நிர்வாகக்குழு எடுத்துள்ள முடிவுகளை ஏடுகளில் படித்திருப்பாய்! எந்த ஒரு முடிவையும் அண்ணா கற்பித்த அறவழியில் - அமைதிவழியில் - நிறைவேற்றிக் காட்டக்கூடிய ஆற்றல் மிகவுண்டு உனக்கு என்பதை நானறியாதவனல்ல!

ஆகஸ்டு திங்கள் ஆறு - ஏழு - எட்டு ஆகிய மூன்று நாட்களும் பட்டிதொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையிலே உடன்பிறப்புகளின் சைக்கிள் பேரணி அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவலாக நடைபெற வேண்டும்.

நமது நிர்வாகக்குழுவில் எடுத்துள்ள முடிவுகள் பலவற்றை ஒத்த முடிவுகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகள் தங்கள் செயற்குழுக்களில் எடுத்து அவர்களும் ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்களில் சைக்கிள் பேரணிகளை நடத்துகின்றனர்.

ஆகஸ்டு 8 ஆம் நாளன்று - தஞ்சை, திருச்சி, மாவட்டங்களுக்கும் - சிதம்பரம் பகுதிக்கும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் காவிரித் தண்ணீரைப் பெற்றுத் தராததற்கும், விவசாயத் தொழிலாளருக்கு வேலை வாய்ப்புத் திட்டங்களையோ, நிவாரண உதவிகளையோ வழங்காததற்கும் அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்து வட்டாட்சி அலுவலகங்களின் முன்னால் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள், சிதம்பரம் வட்டம் ஆகிய பகுதிகளில் மட்டும் மறியல் அறப்போரில் கழகம் ஈடுபடுவதைப் போலவே இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் ஈடுபடுவதாக அக்கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளார்கள்!

பொதுவாகத் தமிழகம் முழுதும் வேகவேகமாகத் தாக்கிடும் வறட்சி குறித்தும் - வறட்சி நிவாரணப் பணிகளில் எம்.ஜி.ஆர்.

அரசு, விரைவு காட்டவில்லை என்பது குறித்தும் - நம்முடைய கழகமும், கழகத்தின் தோழமைக் கட்சிகள் மட்டுமல்ல, காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த நண்பர் மாரிமுத்து போன்றவர்களே - பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்து விட்டு, அரசின் வறட்சி நிவாரணப் பணிகள் தேவைக்கு ஏற்ற அளவு இல்லை என்பதையும், இன்னும் முறையாகத் தொடங்கப்படவேயில்லை என்பதையும் அறிக்கை வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். நாம் சொன்னால் நடுங்கா நாக்கழகர்களாகச் சில அமைச்சர்கள் நரகல் நடையழகு காட்டி நம்மை அர்ச்சிக்கிறார்கள். அவர்களது தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சியே - வறட்சி நிவாரணப் பணியில் எம்.ஜி.ஆர். அரசின் மெத்தனம் குறித்தும், உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகளைப் பறித்துள்ள ஜனநாயக விரோதப்போக்கு குறித்தும் விமர்சிக்கிற அளவுக்கு, தமிழகம் சீர்குலைந்து கிடப்பதை அந்த அமைச்சர்களுக்கு மனச்சாட்சியிருந்தால் மறுத்திட இயலாது!

உடன்பிறப்பே! அமைச்சர்களோ - அல்லது ஆளுங்கட்சியின் அவசரக் குடுக்கைகளோ - ஆப்பசைத்த கதைக்கு இலக்கணமாகி விட்ட பிறகு, கைபிசைந்து நிற்கும் சாகசச் சந்தர்ப்பவாதிகளோ - எதை வேண்டுமானாலும் பேசட்டும். அது குறித்துக் கவலை கொள்ளாமல் நமது தலைமை நிர்வாகக்குழு எடுத்துள்ள முடிவுகளை ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய மூன்று நாட்களிலும் நிறைவேற்றிட ஆயத்தமாகிடுக! கண்டனக் கூட்டங்கள் நடத்தி முழங்கிடு!

மாவட்டக் கழகக் கூட்டங்கள் கூட்டப்பட்டு விட்டனவா? ஒன்றியக் கழகக் கூட்டங்கள் எப்போது கூட்டப்படப் போகின்றன? எல்லா அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்களில் சைக்கிள் பேரணி அதையொட்டிய விளக்கக் கூட்டங்கள் - எங்கெங்கே? எவ்வாறு? நடத்துவதெனத் திட்டமிடப்பட்டு விட்டதா?

வறண்டு கிடக்கும் பூமிகள்! அங்கே வாடிக்கிடக்கும் ஏழை எளியமக்கள்! விவசாயிகள்! விவசாயத் தொழிலாளர்கள்!

உங்களுக்காக வாதாடவும், போராடவும்தான் இதோ எங்கள் கொடிகள் பறக்கின்றன!

எங்கள் சைக்கிள் பயணம், உல்லாசத்திற்காக அல்ல - உங்கள் குமுறலை ஊராள்பவருக்கு எடுத்துச் சொல்வதற்காக!

காய்ந்துள்ள கழனிகள் - கருகிடும் மரஞ்செடிகள் - கண்ணீரும் கம்பலையுமாக மக்கள் - கிராமாந்திரப் பகுதிகளில் வாடி வதங்கிடும் காட்சியினை மாற்றிட, இடருற்றுத் தவிப்போரின் இன்னல் களைந்திட - நாங்களும் எங்கள் தோழமைக்கட்சியினரும் எப்போதும் உங்களுடன் இருப்போம் என்பதை விளக்கித் தைரியம் கூறவே - செயலில் காட்டவே - ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்கள்!

அது நாம் எடுத்துள்ள முடிவுகளை நிறைவேற்ற மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தும் முதற்கட்டப் போராட்டம்!

சைக்கிள் பேரணியில் நம்முடைய கழக உடன்பிறப்புகள் ஒலித்திட வேண்டிய முழக்கங்களின் கருத்துகளை தொகுத்தளித்திருக்கின்றேன்! முழக்கமிடுவதற்கு ஏற்ற வண்ணம் - கண்ணியம் குறையாமல் மாற்றியமைத்துக் கொள்ளும் திறமை, கருத்துச் சிதையாமல் மாற்றியமைத்துக் கொள்ளும் திறமை, உனக்கு உண்டல்லவா! அந்த நம்பிக்கையோடு அவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்!

மத்திய அரசே! மத்திய அரசே!

புதிய கல்விக் கொள்கை என்ற போர்வையில் இந்தியைப் புகுத்தாதே! தமிழரை இரண்டாம் தரக் குடி மக்களாக ஆக்காதே!

மரத்தடியில் பல்லாயிரம் ஏழைப் பள்ளிக்கூடங்கள் என்ற நிலையை மாற்ற மனமின்றி - மாதிரிப் பள்ளி என்ற பெயரால் ஒரு சிலருக்கு மட்டும் அரசாங்கப் பணத்தைக் கோடி கோடியாகக் கொட்டி அழாதே!

காவிரிப் பிரச்சினையில் கவனம் செலுத்திட மறுக்காதே! தமிழகத்தைக் கண்ணீரில் மிதக்க விடாதே!

தொலைக்காட்சி, வானொலியை ஆளுங்கட்சிப் பிரச்சார சாதனம் ஆக்காதே! எதிர்க்கட்சிச் செய்திகளை இருட்டடிப்புச் செய்யாதே!

மாநில அரசே! மாநில அரசே!

வறட்சி நிவாரணப்பணிகளில் மெத்தனம் காட்டாதே! விவசாயிகளின் வேதனையைப் பெருக்காதே!

வேலைவாய்ப்புத் திட்டங்களில் தாமதம் செய்யாதே! விவசாயத் தொழிலாளர்களைப் பட்டினி போடாதே!

1435. மதுரை மாநகருக்கு வருகிறேன்!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு இரண்டாம்நாள் சனிக்கிழமையன்று மதுரையிலே சில முக்கியமான நிகழ்ச்சிகள்! அவற்றில் கலந்துகொள்ள வருகிறேன்!

இடைத்தேர்தல்கள் இரண்டு வருகிறதல்லவா! நெல்லை - அருப்புக்கோட்டை!

தி.மு.கழகம் அந்தத் தொகுதிகளில் நடைபெறும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து என்னுடைய தனிப்பட்ட கருத்தை சில திங்களுக்கு முன்பு நெல்லையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் அறிவித்தேன்!

இடைத்தேர்தல் என்றால் எந்தவொரு ஆட்சியிலும் - அந்தத் தொகுதியில் உள்ள மக்களின் ஒரு சில தேவைகள், தேர்தல் தேதி - வேட்பு மனு தாக்கல் போன்ற தேர்தல் கமிஷன் அறிவிப்புக்கு முன்பு ஓரளவு நிறைவேற்றப்படுவதுண்டு!

ஆனால் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தேர்தல் அறிவிப்புக்கு முன்பும் சரி - தேர்தல் அறிவித்து வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தபிறகும் சரி - விதிமுறைகளைக் காலில் போட்டு மிதித்துக்கொண்டே, அதிகாரிகளை இஷ்டத்துக்கு பந்தாடுவது - புதிய சாலைகள், பள்ளிகள், சுகாதார நிலையங்கள் அமைப்பது - அல்லது கல்நாட்டு விழாக்கள் செய்து திட்டங்களைத் தொடங்குவது - அரசு விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதிலே புதிய புதிய அறிவிப்புகளைச் செய்வது - இன்னபிறச் சலுகைகளை தேர்தல் விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக வழங்குவது என்பன போன்றவை எல்லைமீறிப் போய்விட்டன!

உப்பிலியாபுரம் இடைத்தேர்தலின்போது அறுபது துளைக்கிணறுகளை ஒரு வாரகாலத்திற்குள் போர்க்கால நடவடிக்கைபோல அமைத்திட வேண்டுமென கோட்டையி

லிருந்து உத்திரவு பறந்து - திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர், தனக்குக்கீழுள்ள உப்பிலியாபுரம் தொகுதியைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்து எழுதிய கடிதங்களை பிளாக் செய்தே பத்திரிகைகளில் வெளியிட்டோம்.

தலைமைத் தேர்தல் கமிஷனுக்கே அனுப்பி வைத்தோம். தேர்தல் கமிஷன் என்ன செய்துவிட்டது? எதுவும் செய்ய இயலாத நிலையில் திகைத்து நின்றது. அவ்வளவுதான்!

செய்யாறு தொகுதியில் இடைத்தேர்தலுக்கென இருபதுக்கு மேற்பட்ட ரூட் பஸ்கள்! அறுபதுக்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள்! குடிநீர் வாரியமே அங்கு டேரா அடித்து முகாம் போட்டிருந்த காட்சியைப் பல ஏடுகள் படம் பிடித்துப் பிரசுரித்தன! கலெக்டரே ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளர் போலச் செயல்பட்டார்! ஆம்! அவர் வடஆற்காடு உள்ளாட்சி ஒன்றியங்களுக்கு ஒரே நாளில் நூற்றி நாற்பத்து மூன்று பேரை - ஒரே உத்தரவுத்தாளில் குறிப்பிட்டு நாமினேஷன் செய்தவரல்லவா? அவர் என்ன செய்வார் பாவம்!

கோட்டையிலிருந்து 143 ஆளுங்கட்சிக்காரர்களின் பெயர்ப்பட்டியல் ஒரே உத்தரவாகடைப் செய்து அனுப்பப்படுகிறது! அந்த நபர்களில் நாலைந்து பேர் வாக்காளர் பட்டியலில் கூட இடம் பெற்றவர்கள் அல்லர்! மாவட்ட ஆட்சித்தலைவர் என்ன செய்ய முடியும்? மாண்புகளின் ஆணையைச் சிரமேல் தாங்கி அவர்களையும் சேர்த்து, 143 பேர் கொண்ட நாமினேஷன் பட்டியலை ஒரு உத்தரவாகக் கையெழுத்திட்டு அனுப்புகிறார். மனச்சாட்சியும் நேர்மையுமுள்ள துணிவுமிக்க அதிகாரிகளாக இருந்தால் இப்படியொரு பட்டியலில் ஒரே மூச்சில் கையெழுத்திட முடியாதென மறுக்கவும் கூடும்.

ஆனால் மறுநாள் - என்ன விதமான தண்டனை கிடைக்குமோ இடிஅமீன் ஆட்சியிலே, என்ற நடுக்கமல்லவா? பல அதிகாரிகளுக்கு!

கொள்ளையடிப்பதில் கூட்டுச் சேரவேண்டும் - அல்லது மரியாதையாக உத்தியோகத்தை ராஜினாமா செய்ய வேண்டும் - இதைத் தவிர இந்த ஆட்சியிலே வேறு வழியே இல்லை! என்ற கருத்தை ஸ்டேட்ஸ்மென் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு அதிகாரி கூறியதாக அண்மையில் வெளியிட்டிருந்தார்கள் அல்லவா?

அரசாங்க இடத்தில் அரசாங்க விழாவாக ஆளுங்கட்சிக்காரர் வீட்டுத் திருமணத்தையே அதிகாரிகள் மற்றும் ஆயிரக்கணக்கான போலீசார் புடைசூழ - லாரிகளில் தொகுதி மக்களை ஆளுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்து அழைத்து வந்து செய்யாறு தொகுதியில் நடத்தினார்களே? எதிர்க்கட்சியினரும் - ஏடுகள் பலவும் கண்டிக்கின்றனரே என்று அரசினர், நாணமுற்றார்களா என்ன?

கோபுரச்சின்ன விளம்பரங்களைக் கோடி கோடி ரூபாய்க்குக் கொடுத்தே தமிழ்நாட்டில் பல பத்திரிகைகளின் வாயில் கொழுக்கட்டைத் திணித்து விட்டோம் அல்லது அவைகளின் கைகளில் ஜால்ராவைக் கொடுத்துவிட்டோம் என்ற துணிச்சலில், தட்டிக்கேட்போர் யாருமில்லை என்ற நம்பிக்கையில் எம்.ஜி.ஆர். அரசு இருக்கிறது! - இடைத்தேர்தலில் வாக்காளர்களில் ஒரு பகுதியினரும், இந்த நேரத்திலாவது இந்தச் சாக்கில் வந்தது வரட்டும் என்ற எண்ணத்தில் இருந்து விடுகிறார்கள்.

இதையெல்லாம் கருதித்தான் - இடைத்தேர்தலில் கழகம் போட்டியிடுவது குறித்து யோசிக்க வேண்டியிருக்கிறது என்றும், எனினும் இறுதிமுடிவு எடுக்கும் அதிகாரம் கழகத்தின் நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக்குழு போன்றவைகளுக்குத்தான் உண்டு என்றும் நெல்லைச் செய்தியாளர் கூட்டத்தில் அறிவித் திருந்தேன்.

அவ்வாறே, சென்னையில் 27-ந் தேதியன்று தலைமை நிர்வாகக்குழு கூடிக் கலந்துரையாடியது!

நிர்வாகக்குழுவின் கருத்துப்படி, ஆகஸ்டு இரண்டாம்நாள் மதுரை நகரில் - நெல்லை, மதுரை, மதுரை அண்ணா, மதுரை மாநகர், ராமநாதபுரம், பசும்பொன் காமராசர், குமரி மாவட்டங்களின் கழகப் பொறுப்பாளர்களுடன் கலந்து பேசும் நிகழ்ச்சியொன்று ஏற்பாடாகியுள்ளது. அமைப்புச் செயலாளர்களில் ஒருவரான தென்னரசு அவர்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்கிறார்.

நிர்வாகக் குழுவின் ஆலோசனைப்படி, அந்த மாவட்டங்களின் பொறுப்பாளர்களுடன் விவாதிக்கும் வாய்ப்பைப் பெற்று - எடுக்கப்படும் முடிவை, மதுரையில் மாலையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிவிக்க இருக்கிறேன்!

காலையில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் தாவூது அவர்களும், நண்பர் சங்கரலிங்கம் அவர்களும் மற்றும் கழகச் செயல்வீரர்களும் அரிய முயற்சி எடுத்து, கழக அலுவலகத்துக்கென அமைத்துள்ள கட்டிடத்தைத் திறந்து வைக்கிறேன்.

தன்மான இயக்கத் தளபதிகளில் ஒருவரும், கழக ஆட்சிக்காலத்தில் மதுரை மாநகராட்சியின் முதல் மேயராக அமர்ந்தவருமான நண்பர் முத்து அவர்களின் பெயர் அந்தக் கட்டிடத்துக்குச் சூட்டப்பட வேண்டுமென்ற எனது விருப்பத்தை மாநகர் மாவட்ட உடன்பிறப்புகள் ஏற்றுக்கொண்டனர்!

கழக ஆட்சிக்காலத்தில் மதுரை மாநகரில் கட்டப்பட்ட இரண்டு மேம்பாலங்களுக்கு பெயரிடும் போது - ஒன்றுக்கு பசும்பொன் தேவர் அவர்களின் பெயரும், மற்றொன்றுக்கு மேயர் முத்து பாலம் என்ற பெயரும் சூட்டி மகிழ்ந்தேன்!

அடுத்துவந்த ஆட்சியாளர்கள் உயிரோடிருப்போர் பெயர் கூடாது என அறிவித்து மேயர் முத்து பாலம் எனும் பெயரை அகற்றினர். எந்த ஆட்சியாளர்கள்? பெண்கள் பல்கலைக் கழகத்துக்கு உயிரோடிருக்கும் அன்னை தெரசாவின் பெயரையும் - ஆலந்தூர் நகராட்சிக் கட்டிடத்துக்கு உயிரோடிருக்கும் நண்பர் மோகனரங்கம் பெயரையும் சூட்டிய - அறிவித்த ஆட்சியாளர்கள்தான்!

இடைக்காலத்தில் சிலகாலம் முத்து அவர்கள் கழகத்தில் இல்லையெனினும் - இறுதிக்காலத்தில் கழக உறுப்பினராக இல்லாமலே, பெரியார், அண்ணா கொள்கைகளில் தனக்குள்ள உறுதியை தைரியமாக வெளிப்படுத்தியே வந்தார்!

அது குறித்தெல்லாம் நிறையப் பேசவேண்டும். ஆகஸ்டு இரண்டாம் நாள் காலை கட்டிடத் திறப்பு விழாவின்போது அந்தப் பசுமையான நினைவுகளை உடன்பிறப்பே! உன்னோடு பகிர்ந்து கொள்கிறேன்!

மதுரையில் முதல் நிகழ்ச்சியாக - மதுரைப் புறநகர் மாவட்டச் செயலாளர் பொன்.முத்துராமலிங்கம் அவர்களும் மற்றும் கழக உடன்பிறப்புகள், இளைஞரணித்தம்பிகள் முயற்சியில், கஞ்சித்தொட்டி தொடக்க நிகழ்ச்சி - மதுரைக் கருகே விரகனூரில் நடைபெறுகிறது!

வறட்சிக் கொடுமையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆங்காங்கு நமது உடன்பிறப்புகள், மாவட்டச் செயலாளருடன் தொடர்பு கொண்டு ஏழை எளியவர்களின் பசி, பட்டினி, போக்கிட இயன்ற அளவு கஞ்சித் தொட்டிகள் வாயிலாகவோ - வேறு வகையிலோ - செயல்பட வேண்டுமென நிர்வாகக்குழு முடிவெடுத்துள்ளதை நீ அறிவாய்!

அதில் மதுரை விரகனூர் முந்திக் கொண்டுள்ளது!

இப்படிப் பல்வேறு முக்கியப் பணிகளை, உன்போன்ற உடன்பிறப்புகளின் கட்டுப்பாடு காக்கும் கடமை உணர்வுடன் ஒன்றிக்கலந்து நிறைவேற்றிட - மதுரை மாநகருக்கு வருகிறேன்!

உடன்பிறப்பே, உன்னை அங்கு வந்து சந்திக்கிறேன்!

அன்புடன்

மு.க.

31-07-1986

1436. ஏன் சிரித்தனர்? எதற்குச் சிரித்தனர்?

உடன்பிறப்பே,

பொதுநலன்கள் - நாட்டின் பந்தோபஸ்து - பொதுஒழுங்கு - கண்ணியம் அல்லது தார்மீகநெறி போன்ற சொற்கள் அர்த்தமற்றவைகள் அல்ல! அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் மீது நியாயமான கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சபை உறுப்பினர்களும், அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் போதும் இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அன்னை இந்திராகாந்தி படுகொலை குறித்து விசாரணை நடத்திய தாக்கர் கமிஷன் அறிக்கையை நாடாளுமன்ற அவையில் வைக்கவோ - வெளியிடவோ முடியாதென மத்திய அரசு எடுத்துள்ள நிலைக்கு ஏற்ப கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை அறிமுகப்படுத்தி ஆதரித்துப்பேசிய உள்நாட்டுப்பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் திரு. சிதம்பரம் குறிப்பிட்ட வாசகங்களே மேலே இருப்பவை.

மசோதாவை எதிர்த்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

அமைச்சர் ஆற்றிய உரையில் இழையோடிய பொது நலன்கள் - நாட்டின் பந்தோபஸ்து - பொது ஒழுங்கு - கண்ணியம் அல்லது தார்மீக நெறி போன்ற சொற்களுக்கோ அல்லது அந்தச் சொற்கள் தரும் விளக்கத்திற்கோ நாம் என்றைக்கும் மாறுபட்டவர்கள் அல்ல!

இந்தச் சொற்கள் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றவை மட்டுமல்ல, பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும்போது அமைச்சர்களும் உறுப்பினர்களும் பயன்படுத்துகிற சொற்கள் என்பதையும் மத்தியத் துணை அமைச்சர் சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

திரு. சிதம்பரத்தின் வாசகத்தை அப்படியே ஒரு மத்திய அரசுக்கு மட்டுமன்றி - மாநில அரசுகளுக்கும் பொருத்திப் பார்க்கலாம் அல்லவா? ஏனெனில் அரசியல் சட்டம் என்பது மத்திய, மாநில அரசுகளுக்குச் சேர்த்துத்தானே!

அப்படியானால் - இந்த மாநிலத்தில், அதாவது நமது தமிழ்நாட்டில், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளதாக மத்திய துணை அமைச்சர் திரு. சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ள பொதுநலனோ, நாட்டின் பந்தோபஸ்தோ, பொது ஒழுங்கோ, கண்ணியம் அல்லது தார்மீக நெறியோ - இங்குள்ள முதலமைச்சரால் மதிக்கப்படுகின்றனவா என்பதற்குக் கிடைக்கின்ற சரியான பதில் என்ன?

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுக்கொரு கத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்று ஒரு முதலமைச்சர் - அதிலும் சட்டம் ஒழுங்கு அமைதியைக் காத்திடப் பொறுப்புள்ள போலீஸ் இலாகாவைக் கையில் வைத்துள்ள ஒரு முதலமைச்சர் - திரு. சிதம்பரம் குறிப்பிடும் பொதுநலன் - நாட்டின் பந்தோபஸ்து - பொதுஒழுங்கு - கண்ணியம் அல்லது தார்மீக நெறியை அரசியல் சட்டத்திற்கேற்பக் கடைப்பிடிக்கிறார் என்று எவராவது வாதிட முடியுமா?

அப்படிச் சொன்னது யார்? எந்தச் சூழ்நிலையில்? எதற்காக கத்தி பயன்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னார்?

இவற்றை ஆராய்ந்தால் - முதல்வரின் மனநிலை குறித்தே சந்தேகம் எழுகிறது என்று கல்கி ஏடு மட்டுமல்ல, வடமாநில ஆங்கில ஏடுகளின் தலையங்கங்கள் மட்டுமல்ல, இங்குள்ள இந்திரா காங்கிரஸ் முன்னோடித் தலைவர்கள் பலரும் கூட வெளிப்படையாகக் குறிப்பிடுவது உண்மையென்றே நிரூபிக்கப்படக் கூடிய நிலையன்றோ ஏற்படுகிறது!

மனநிலை சரியில்லாமலும் ஒரு பெரும் பொறுப்பில் இருக்கக் கூடாது! அது சரியாகவே இருந்து - தனது பொறுப்பை மறந்து, பொதுநலனுக்கும், பொது ஒழுங்கிற்கும், கண்ணியம் அல்லது தார்மீக நெறிக்கும் அரசியல் சட்டம் அளித்துள்ள முக்கியத்துவத்தை மீறி, போலீசார் உங்களைக் காப்பாற்ற மாட்டார்கள், எனவே ஆளுங்கட்சிக்காரர்கள் ஆளுக்கொரு கத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்று ஒருவர் பேசுவாரேயானால் - அவர் முதலமைச்சராக அந்தப் பெரும் பொறுப்பில் இருக்கத் தகுதியிழந்தவராகிறார்!

திரு. சிதம்பரம் சுட்டிக் காட்டியுள்ளது போல - பொது நலம், பொதுஒழுங்கு, நாட்டின் பந்தோபஸ்து, கண்ணியம் அல்லது தார்மீக நெறி - ஆகிய சொற்களைப் பயன்படுத்தித்தான் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள் என்கிறபோது, அப்படி எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத்தை ஒரு முதலமைச்சரே மீறி நடந்து கொள்ளலாமா?

இதைச் சொன்னால் சிதம்பரம் போன்றவர்கள் உரக்கச் சிரித்தபடி வெளியே தெரியும்படி கேட்காவிட்டாலும்; உள்ளத்துக்குள் கேட்டுக்கொண்டே - எம்.ஜி.ஆர். எங்கே, எப்போது பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்? அப்படியொரு செய்தி வந்ததே தவிர - அவர் ஒன்றும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை - பதவிதான் எடுத்துக் கொண்டார் - பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிலையில் அப்போது அவர் இல்லையே - இதுகூட உனக்குத் தெரியாதா? என்று என்னைப் பார்த்தும் கேட்கக் கூடும்!

அவர்களுக்குத் தெரிந்தது எனக்குத் தெரியும். தெளிவுள்ளோர் அனைவருக்கும் தெரியும்.

வேட்புமனு நேரத்தில் உறுதி மொழியோ - பதவியேற்ற நேரத்தில் பிரமாணமோ எடுத்துக் கொள்ளாத ஒருவரை - அவையெல்லாம் எடுத்துக் கொண்டார் என்ற பொய்யுரை,

பொதுநலன்
பொது ஒழுங்கு
கண்ணியம்
தார்மீக நெறி

என்ற சொற்றொடர்களுடன் சொந்தம் கொண்டாட உரிமை பெற்ற ஒன்றா? என்பதை நடு நிலையில் உள்ளவர்கள் தான் நாட்டுக்குக் கூற வேண்டும்!

இந்த பொது நலன்
பொது ஒழுங்கு
கண்ணியம்
தார்மீக நெறி

எனப்படும் அரசியல் சட்டத்தில் ஒளிவிடும் சொற்றொடர்கள், அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரியைக்

கட்டுப்படுத்த முடியாதவைகளா? அல்லது தமிழக ஆளுநரையோ, சபாநாயகரையோ கட்டுப்படுத்த இயலாதவைகளா?

இந்த அரிய பெரிய புனிதமான சொற்றொடர்களை மீறித்தானே எம்.ஜி.ஆரின் உறுதிமொழி, பதவிப் பிரமாணம் போன்றவற்றில் பொறுப்பில் உள்ள அவர்கள் செயல்பட்டிருக் கிறார்கள்!

வளைந்து கொடுக்கிறவர் என்பதற்காக அரசியல் சட்டத்தின் அதி அற்புதமானதும், தூய்மை வாய்ந்ததுமான - இந்த சொற்றொடர்களின் கழுத்துகளையும் வளைந்து நெரித்து விடுவது முறையாமோ? அழகாமோ? தார்மீக நெறிதானோ?

நிற்க - விசாரணைக்கமிஷன் விவகாரத்துக்கு வருவோம்!

அன்னை இந்திரா கொலை குறித்த தாக்கர் கமிஷன் அறிக்கையை வெளியிட்டால் வெவ்வேறு கோஷ்டிகள், தங்களுக்கேற்றபடி திரித்து விளக்கம் கூறக்கூடும். எனவே, அதை வெளியிடுவதில்லையென அரசு முடிவு செய்துள்ளது என்று திரு. சிதம்பரம் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இந்த எண்ணம், தாக்கர் கமிஷனை அமைப்பதற்கு முன்பே ஏற்பட்டிருந்து, அப்படியொரு விசாரணைக் கமிஷனே அமைக்காமல் இருந்திருக்கலாம் அல்லவா?

விசாரணைக் கமிஷனை அமைத்து - விசாரணை நடைபெற்று - அதன் அறிக்கையை வெளியிட மறுக்கும்போது மட்டும், வெவ்வேறு விதமாக விளக்கங்களை, வியாக்யானங்களை அதற்கு யாரும் அளிக்க மாட்டார்களா?

தாக்கர் கமிஷன் அறிக்கையை வெளியிடக் கூடாது என்பதற்காகவே விசாரணைக் கமிஷன் சட்டத்தைத் திருத்தி - அவசரச் சட்டம் கொண்டு வந்து, அதனை நாடாளுமன்றத்தில் மசோதாவாகக் கொணர்ந்து நிறைவேற்றிடும் போதுதான் என்னமோ தெரியவில்லை! ஏதோ மறைக்கப்படுகிறது என்ற குழப்பமான நிலையும் - அதன் தொடர்பான வதந்திகளும் கிளம்பிடக்கூடும் என்பதை ஏனோ மத்திய அரசு உணரவில்லை!

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கடுமையாக விவாதம் நடந்தபோது, ஒரு உறுப்பினர் இந்தக் கமிஷன் அறிக்கையை

1437. அறவழியில் ஆகஸ்டு 6, 7, 8 நாட்கள்!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு 6
ஆகஸ்டு 7
ஆகஸ்டு 8

இந்த மூன்று நாட்களும் மாநில முழுதும் சைக்கிள் பேரணிகளை நடத்தியும், மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தும் தீர்மானங்களை விளக்கிட ஆங்காங்கு கூட்டங்களை நடத்தியும் மக்கள் இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும்,

திருச்சி, தஞ்சை, சிதம்பரம் வட்டாரம் போன்ற காவிரிப் பாசனப் பகுதிகளில்

ஆகஸ்டு 8

காலை முதல் வட்ட ஆட்சி அலுவலகங்களின் முன்னால் மறியல் அறப்போரில் ஈடுபடுவதென்றும் - கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

மறியல் நடைபெறுகிற மாவட்டங்களான தஞ்சை, திருச்சியிலும் - சிதம்பரம் வட்டாரத்திலும்,

ஆகஸ்டு 6

ஆகஸ்டு 7

இரு நாட்களும் சைக்கிள் பேரணியும் - விளக்கக் கூட்டங்களும் உண்டு!

ஆகஸ்டு 8

மறியல் அறப்போர் நடைபெற வேண்டும்!

இவை தவிர, மாநிலத்தில் பிறபகுதிகளில் 6, 7, 8 ஆகிய மூன்று நாட்களும் பட்டி தொட்டிகள் முதல் பட்டினங்கள் வரையில் சைக்கிள் பேரணிகள் - விளக்கக் கூட்டங்கள்!

தலைமைக் கழக நிர்வாகக் குழுவில் நாம் வலியுறுத்தும் கருத்துகள் - கோரிக்கைகள் எவை எவையென்பதை ஏற்கெனவே ஏடுகளில் படித்திருக்கிறாய்!

எந்தக் கருத்தமைந்த முழக்கங்கள் சைக்கிள் பேரணிகளில் ஒலிக்கப்படல் வேண்டுமென்பதையும் கடிதவாயிலாகத் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி - நிர்வாகக் குழுக்களின் தீர்மானங்களும் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

தொலைக்காட்சி, வானொலி, மற்றும் ஏடுகளில் செய்திகள் என்ற அளவில் அரசின் வறட்சி நிவாரண அறிவிப்புகள் அனைத்தும் ஏட்டுச் சுரைக்காய்களாக இருக்கின்றனவே தவிர, எந்த இடத்திலும் முறையான செயல்பாடுகள் எதுவுமில்லை!

இந்தச் செயலற்ற நிலைகுறித்துப் பல்வேறு மாவட்டங் களிலுமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

இடைத்தேர்தல் நடக்க இருக்கும் நெல்லை, அருப்புக் கோட்டை தொகுதிகளில் மட்டும் அமைச்சர்கள் படையெடுப்பும் - அவசர அவசரமாக நிவாரணப் பணிகள், குடிநீர்த் திட்டங்கள், சுகாதார நிலையங்கள், பள்ளிகள், அறுபது எழுபது என்று புதிய பஸ் ரூட்கள் - எல்லாமே போர்க்கால வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

வேறு மாநில ஏடுகள் மட்டுமன்றி, தமிழகத்தில் உள்ள தமிழ் மற்றும் ஆங்கில ஏடுகள்கூட - இனியும் இந்த அநியாயங்களைப் பொறுத்திருக்க முடியாது என்ற நிலைபெற்று, பேனாக்களைத் தூக்கத் தொடங்கியுள்ளன!

அமைச்சர் பெருமக்களுக்கோ, ஆத்திரம் தொண்டையை அடைக்கிறது! அல்லது அப்படி அடைப்பது போல எம்.ஜி.ஆருக்குக் காட்டிக் கொள்கிறார்கள்! அதனால் என்னையும், கழகத்தையும் அவர்கள் அர்ச்சனை செய்யாத நேரமில்லை!

தடித்த நாக்கு இயல்பாகவே அவர்களில் சிலருக்கு!

வேறு சிலர், அதனை இரவல் வாங்கிப் பொருத்திக்கொண்டு கடுமொழி கூறுகிறார்கள்!

ஆகஸ்டு 6, 7, 8, ஆகிய நாட்களில் நடைபெறும் சைக்கிள் பேரணிகளையும் - தஞ்சை, திருச்சி, சிதம்பரம் வட்டாரப்

பகுதிகளில் 8-ந் தேதி நடைபெறும் மறியல் அறப்போரையும் குறித்து ஒரு அமைச்சர்,

இது அறப்போரல்ல
அக்கப் போர்!

என்று கேலி பேசியிருக்கிறார். பல கோடி ரூபாய் வரியை வசூலிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருந்தும் கூட - அதற்குமாறாக ஸ்டீல் ரீரோலிங் மில் அதிபர்களிடம் சில கோடிகளைத் தன் பையில் போடுமாறு கேட்டுக்கொண்டு, அரசுக்கு வரவேண்டிய பல கோடி ரூபாய் வரி வருமானத்தை வஜா செய்து கொடுத்த அந்த அமைச்சரின் அக்கப் போர் எல்லாம் அரசின் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் வாயிலாகவே அம்பலத்துக்கு வந்த செய்தி அனைவரும் அறிந்த ரகசியமென்பதை அந்த அமைச்சர் மறந்து விட்டார் போலும்!

அவரைப் பற்றி ஆங்கில ஏடொன்றில் வந்த ஆதாரங்கள் நிறைந்த குற்றச்சாட்டுகளை முரசொலி மொழிபெயர்த்து வெளியிட்டது! அவரது மாவட்டத்திலேயே பல்லாயிரக்கணக்கில் துண்டுப்பிரசுரங்களாக அவை அச்சியற்றப்பட்டு விநியோகிக்கப்பட்டன!

ஆகா! ஊகு! வழக்குப்போடுவேன் என்று துள்ளிக் குதித்தார்! பிறகு மூச்சுப் பேச்சையே காணோம். அவர் சொல்கிறார் 6, 7, 8-ல் நடக்கப்போவது அறப்போர் அல்ல - அக்கப் போர் என்று!

இன்னொரு அமைச்சர் - குனிந்த பார்வைக்காரர்! குள்ளநரிக் குணத்துக்குத் தனியுரிமை கொண்டாடும் குடிலர்!

அவர் என்னைப் பட்டுப்போன மரம் என்று வர்ணிக்கிறார்!

பாவம்! பழுத்த மரங்களை நோக்கியே பறந்து பழக்கப்பட்ட பறவை அது!

நான் பட்டுப்போன மரமா? அல்லவா என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை!

வறட்சிக் கொடுமையால் காய்ந்து, உலர்ந்து, பட்டுப் போய்விட்ட ஏழை எளியோர் - விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் - இவர்கள் வாழ்வு மீண்டும் துளிர்விடச் செய்ய வேண்டிய முயற்சியன்றோ தேவை இப்போது!

மத்திய - மாநில அரசுகளை வலியுறுத்தி - நாம் எழுப்புகிற கண்டனங்களில் உள்ள உண்மைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்பத் தங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு - மக்கள் பணியாற்றுவதற்குப் பதிலாக,

எதிர்க்கட்சிகள் தமக்குரிய ஜனநாயகக் கடமைகளைச் செய்யவே கூடாது என்றும் - அப்படிச் செய்தால்,

அக்கப்போர்
பட்டமரம்
விபரீத புத்தி
வெட்டப்படவேண்டிய மரம்

என்றும் அமைச்சர்கள் ஆங்காரம் கொப்பளிக்கப் பேசுவார்களாம்!

உடன்பிறப்பே! அவர்களுக்கு வேறு என்னதான் வேலையிருக்கிறது - இந்த வேலையாவது செய்து கொண்டிருக்கட்டுமே!

இந்த வேலையும் செய்யாவிட்டால் இப்போது இருக்கிற வேலையும் போய்விடும் அவர்களுக்கு!

எனவே, பாவம் பிழைத்துப் போகட்டும்! பழுத்த மரத்தை நாடும் பறவைகள்! அக்கப்போர் பேர்வழிகள்!

நமது பணி - முறையாக, அமைதியாக, முன்னரே அறிவித்துவிட்டு அறவழியில், ஆகஸ்டு 6, 7, 8 நாட்களில் நடைபெற - தொடங்கிடுக முயற்சிகளை!

அன்புடன்
மு.க.

02-08-1986

1438. கடமையைச் செய்திடுக கண்மணியே!

உடன்பிறப்பே,

நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் தலைமைக் கழக நிர்வாகக்குழுக் கூட்டத்திலும் - தென்பகுதி மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்ட மதுரை ஆலோசனைக் கூட்டத்திலும் எடுத்துரைத்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டு நான் ஏற்கெனவே நெல்லை நிருபர்கள் பேட்டியின் போது அறிவித்த கருத்தை மாற்றிக்கொண்டேன்.

மதுரைப் பொதுக்கூட்டத்தில் நெல்லை, அருப்புக் கோட்டை இடைத்தேர்தல்கள் குறித்துக் கழகம் எடுத்த முடிவினை அறிவிப்பதற்கு முன்பு - எனது உரையில் குறிப்பிட்ட முக்கியமான பகுதிகள் சிலவற்றை இந்தக் கடிதத வாயிலாகவும் மீண்டும் நினைவூட்டுகிறேன்.

இந்த ஆட்சியில் இடைத்தேர்தல் என்றால் தேர்தல் அறிவிப்புகள் நோட்டிபிகேஷன் முறைப்படி வெளியான நாளில் இருந்துகூட, தேர்தல் விதிகள், நெறிகள் பற்றிக் கவலைப்படாமல் அதிகாரிகளை மாற்றுவதும் - அரசு இயந்திரத்தை ஆளுங்கட்சி வேட்பாளரின் தேர்தல் பணிக்காக முடுக்கிவிடுவதும் - அவசர அவசரமாக மின்விளக்குகள் - சாலைகள் - பஸ்ரூட்கள் - சுகாதார நிலையங்கள் - பள்ளிக்கூடங்கள் - பல்வேறு வாக்குறுதிகள் - சலுகைகள் வழங்குதல் - போன்ற காரியங்களில் எல்லையற்று ஈடுபடுவதும் வாடிக்கையாகிவிட்ட காரணத்தினால்தான் இடைத்தேர்தல்களில் ஈடுபடுவதா? வேண்டாமா? என்பது குறித்து எனது ஐயப்பாட்டை வெளியிட்டு - இறுதியாக நமது ஜனநாயக அமைப்பான கழகம் அமைப்புரீதியாக எடுக்கும் முடிவே செயல்படுத்தப்படுமென்றும் தெரிவித்திருந்தேன்.

இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிடாததற்கு முன்னுதாரணங்கள் இல்லாமல் இல்லை!

1971 பொதுத்தேர்தலுக்குப் பிறகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைத் தமிழகத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட வைப்பதற்குப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி விரும்பினார்.

கோவை பொதுக்குழுக் கூட்டத்திலிருந்த என்னிடம் டெல்லியிலிருந்து பிரதமர் இந்திரா அம்மையார் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

கரூர் எம்.பி.யும், கிருஷ்ணகிரி எம்.பி.யும் ராஜினாமா கடிதம் கொடுத்து, அந்தத் தொகுதிகளில் ஒன்றில் சி. சுப்பிரமணியம் நிற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள். எந்தத் தொகுதி சரியாகப்படுகிறது?

என்று அம்மையார் என்னைக் கேட்டார். எந்தத் தொகுதியானாலும் சரிதான் என்று நான் பதில் அளித்தேன். பிறகு சி.எஸ். அவர்கள், கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் நின்றார். தேர்தல் பிரச்சாரத் தொடக்கக் கூட்டத்திலேயே திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், நான் கலைஞரின் வேட்பாளர். அவர் என் பெயரை முன்மொழிந்தவுடனேயே நான் வெற்றி பெற்று விட்டதாக அர்த்தம்! என்று சொன்னது பசுமையாக நினைவில் இருக்கக் கூடிய ஒன்று!

கிருஷ்ணகிரி நாடாளுமன்ற இடைத் தேர்தலை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அப்போது பெருந்தலைவர் காமராஜரும் - மூதறிஞர் ராஜாஜியும் ஒன்றாக அணி அமைத்து 1971 பொதுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும் கூட - இடங்கள் அதிகம் பெறவில்லையே தவிர, கணிசமான வாக்குகளை அந்த அணி பெற்றிருந்தது!

அப்படியிருந்தும் கூட கிருஷ்ணகிரி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி இருவரும் இணைந்த அந்த அணியின் சார்பிலோ - அல்லது ஸ்தாபன காங்கிரஸ் சார்பிலோ அந்தத் தொகுதியில் வேட்பாளர் யாரையும் நிறுத்தவில்லை. ஒரு சுயேச்சை வேட்பாளர்தான் நின்றார்.

மற்றுமொரு உதாரணம், இடைத்தேர்தலில் நாம் நிற்கத் தயங்குகிறோம் என்று நம்மைக் கேலியும் கிண்டலும் செய்கிறார்களே! அ.தி.மு.க. நண்பர்கள் - அவர்களுக்கு 1980 பொதுத் தேர்தலுக்குப் பிறகு முகவை திருப்பத்தூர்த் தொகுதி இடைத்தேர்தல் நினைவுக்கு வரவில்லையா என்ன?

1980-ல் திருப்பத்தூரில் இ.காங்கிரஸ் வேட்பாளர் வால்மீகி அவர்கள் தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்றார். சில மாதங்களுக்குப் பிறகு அவர் காலமாகி விடவே அங்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தி.மு.க. ஆதரவுடன் இ.காங்கிரஸ் வெற்றி பெற்ற இடம் என்பதால் தி.மு.கழகம் அங்கு நிறுத்தப்பட்ட இ.காங்கிரஸ் வேட்பாளர் அருணகிரி அவர்களை ஆதரிப்பதென முடிவெடுத்தது. அ.தி.மு.க. அந்த இடைத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என அறிவித்து இ.காங்கிரஸ் வேட்பாளரை வலுவில் சென்று ஆதரித்தது.

இடைத் தேர்தல்களில் போட்டியிடாமல் ஒதுங்கியிருந்ததற்கும் - போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொண்டு வலுவில் சென்று ஆதரித்ததற்கும் இந்த இரண்டு உதாரணங்கள்!

இடைத் தேர்தலில் தோல்வி அடைந்து விடுவதாலேயே, பொதுத் தேர்தலில் ஒரு எதிர்க்கட்சி அணி வெற்றிபெற முடியாமற் போய்விடும் என்பதும் சரியான வாதமல்ல என்பதற்கு எடுத்துக்காட்டும் உண்டு!

1965-ல் இந்தி எதிர்ப்புப் போரில் தமிழகமே புரட்சி எரிமலையாக வெடித்தது! துப்பாக்கிப் பிரயோகத்தில் எத்தனையோ உயிர்கள் பலியாயின! ரயில் பெட்டிகள் எரிந்தன! நாடே ரணகளமாயிற்று! மாணவர்கள் மடிந்தனர்! மாநிலமே ஸ்தம்பித்தது! பல்லாயிரவர் சிறையில்!

அதற்கு அடுத்து நடந்த தர்மபுரி இடைத்தேர்தலில் - காங்கிரஸ் கட்சிதான் வென்றது! தி.மு.க. தோல்வியடைய நேரிட்டது!

எனினும் அந்தத் தோல்வி 1967-ல் பொதுத் தேர்தலை பாதிக்கவில்லை. தி.மு.கழக ஆட்சி அண்ணாவின் தலைமையில் அமைந்தது!

இடைத் தேர்தல்களில் இந்த ஆட்சியில் அண்ணா நகரிலும் - மயிலாடுதுறையிலும் நாம் வெற்றி வாகை சூடிய நிகழ்ச்சிகளும் உண்டு!

அண்மைக் காலத்தில் நடந்த செய்யாறு இடைத் தேர்தலில் - கழகம் தோல்வியுற்றது!

தமிழக அரசாங்கமே அந்தத் தொகுதியில் முகாமிட்டு ஆளுங்கட்சி வெற்றிக்காக பாடுபட்டது!

செய்யாறு நகரத்திலேயே நம்முடைய கழகத்திற்குக் குறைவான வாக்குகளே கிடைத்தன.

ஆனால் அடுத்து நடைபெற்ற செய்யாறு நகராட்சி மன்றத் தேர்தலில் கழக வேட்பாளரே வெற்றி வாகை சூடி, இன்று நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இத்தனையும் தலைமை நிர்வாகக்குழுவிலும் - மதுரையில் நடந்த மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டு,

எத்துணை இன்னல்கள், இடையூறுகள், விதிமுறைகளுக்கு விரோதமான செயல்கள் ஆளுங்கட்சியினரால் உருவாக்கப் பட்டாலும் - ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து விலகிச் செல்வது கூடாது என்ற கருத்தே வலுப்பெற்றிருந்த காரணத்தாலும் - நமது தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் இதே கருத்தை எடுத்துரைத்ததாலும் -

நெல்லை
அருப்புக்கோட்டை

இரு தொகுதிகளிலும் கழகம் போட்டியிடுவதென முடிவெடுக்கப்பட்டு,

வேட்பாளர்கள் பெயர்களையும் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவித்துள்ளார்.

உடன்பிறப்பே! உன்னையும் உன்போன்ற உடன்பிறப்புகளையும் மீறிய நிலையில் எந்த முடிவும் எடுத்துப் பழக்கப்பட்டவர்கள் அல்ல நானும் பேராசிரியரும்!

உன்போன்றோர் முடிவுக்கே கட்டுப்பட்டு விட்டோம்!

இப்போது உன் கடமையுணர்வு அதிகமாகிறது என்பதை நான் நினைவுபடுத்தத் தேவையில்லை!

அருப்புக்கோட்டை, நெல்லை இடைத்தேர்தலில் நிற்குமாறு கூறியும் - நிற்பதாக அறிவித்த பிறகு மகிழ்ச்சி தெரிவித்தும் - மதுரையில் கழக உடன்பிறப்புகள் தங்களால் இயன்ற தேர்தல் நிதி உதவியாக நாலாயிரத்து அறுநூற்றி எண்பத்து மூன்று ரூபாய்

என்னிடம் தனித் தனியாக வழங்கியுள்ளார்கள்! அந்த விபரம் இன்று முரசொலியில் வெளியிடப்பட்டுள்ளது!

சுவரொட்டி அச்சிடுவது - ஒட்டுவதற்குப் பசை தயாரிப்பது - கொடிகள் தோரணங்கள் கட்டுவது போன்ற தேர்தல் பிரச்சார செலவினங்கள் அனைத்துக்கும் உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

எத்தனை எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் என் உடன்பிறப்புகள்! தேர்தலில் நின்றுதான் தீர வேண்டுமென்று!

அவர்களுக்குக் கட்டுப்பட்டு எடுக்கப்பட்டுள்ள முடிவல்லவா இது!

நிர்வாகக்குழுவில் மாவட்டச் செயலாளர்கள் அளித்துள்ள வாக்குறுதிகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டாமா?

அஃதன்னியில் ஒவ்வொரு உடன்பிறப்பும் - சாதிக்பாட்சா - பொருளாளர் - தி.மு.க. தலைமைக் கழகம், அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை என்ற முகவரிக்கு இன்று முதல் தங்களால் இயன்ற தேர்தல் நிதியை மணியார்டர் வாயிலாக அனுப்பி உதவிட வேண்டும்!

அன்றும் சரி! இன்றும் சரி! என்றும் சரி! எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? யாரிடத்திலே சென்று கேட்பேன்! கேட்கும் போதெல்லாம் முகஞ்சுளிக்காமல் பாசம் பொழிய - அன்பு பொங்க - அள்ளித் தருகிற நீ இருக்கும் போது என்ன கவலை?

இருப்பினும் - வறட்சியால் மாநிலமே துவண்டு கிடக்கும் போது, உன்னிடம் கையேந்துவதற்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது! வேறு வழியில்லை - வேறு வழியையும் நாடுவதில்லை! என்ன செய்ய!

உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்! உனது ஓய்வறியா உழைப்பு - உன்னாலியன்ற அளவுக்கு உடனடியாகப் பொருளாளர் முகவரிக்கு அனுப்புகிற தேர்தல் நிதி! இவற்றை நம்பித்தான் கழகம் களத்தில் இறங்கியிருக்கிறது! கடமையைத் தயங்காமல் செய்திடுக கண்மணியே!

அன்புடன்

மு.க.

05-08-1986

1439. எதிர்க்கட்சிகளுக்குரிய ஜனநாயகக் கடமை!

உடன்பிறப்பே,

திருச்சியிலிருந்து தினமணி செய்தியாளர் அளித்துள்ள செய்தியொன்றுக்கு சென்னை தினமணியில் பின்வருமாறு தலைப்பு தரப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தகவல்.

அப்பாடா! பரவாயில்லை - இந்த அரசும் சற்று அசைந்து கொடுத்திருக்கிறதே என்ற மன ஆறுதலுடன் செய்தியைப் படிக்க ஆரம்பித்தால் தொடக்க வாசகமே ஏமாற்றமளிக்கக் கூடியதாக இருக்கிறது.

தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலைமைக்கு ஏற்றவாறு பெரிய அளவில் வறட்சிப் பணிகள் ஆரம்பமாகவில்லை என்றாலும்கூட, இது சம்பந்தமாக தமிழக அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அதிகார வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதான் தினமணியின் தொடக்க வாசகம்!

பெரிய அளவில் வறட்சிப் பணிகள் ஆரம்பமாகவில்லை என்பது தினமணிச் செய்தியாளர் நேரடி அனுபவத்தின் மூலம் தருகிற உண்மையான தகவல்.

ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விட்டதாக அதிகார வட்டம் தெரிவிக்கிறது என்றுதான் செய்தியாளர் குறிப்பிடுகிறாரே தவிர, தமிழகத்தில் நிலவும் நிலைமைக்கு ஏற்ப பெரிய அளவில் வறட்சி நிவாரணப் பணிகள் ஆரம்பமாகவில்லை

என்பதை மெத்த ஆதங்கத்துடன் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஆட்சியாளர் கண்களுக்கு இப்போது நெல்லைத் தொகுதியும் - அருப்புக்கோட்டைத் தொகுதியும் தான் கடுமையான வறட்சிப் பகுதிகளாகத் தெரியும்! அங்குதான் வாயுவேகத்தில் - மனோவேகத்தில் அரசு இயந்திரங்கள் பறந்து பறந்து பணிகளைத் தொடங்கிடும்!

மற்ற பகுதிகளில் வழக்கம் போல் ஆமை வேகம் அல்லது நத்தை வேகம்தான்.

மழையின்றி நீரின்றி ஏரி குளங்கள் வறண்டு கிடக்கும் போது, அந்தப் பாதகங்களையும் சாதகமாக்கிக் கொண்டு - ஏரி குளங்களில் தூர் எடுக்கும் கரைகளை உயர்த்தியும் - வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதன் வாயிலாக வேலை வாய்ப்புகளை அளித்தும் துயர்துடைப்புப் பணிகளை முன்கூட்டியே தொடங்கி முடித்திருந்தால் மழைபெய்யும் போது ஏரிகுளங்களின் கொள்ளளவு அதிகமாகி, தேக்கப்படும் நீர் எதிர்காலத்துக்குப் பயன்படும்.

அத்தகைய முன் எச்சரிக்கைப் பணிகள் எதுவும் இந்த அரசில் நடைபெறவில்லை என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

கடந்த பல மாதங்களாகவே வறட்சியின் கடுமை குறித்து தமிழகத்தில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் எம்.ஜி.ஆர். அரசுக்கு எச்சரித்தும்கூட, ஜப்தி நடவடிக்கைகளை வேகமாக ஆக்குவதிலேயே அரசினர் முனைப்பாக இருந்தனர்.

வெடித்த போராட்டங்கள் - வெடிக்க இருந்த போராட்டங்கள் இவற்றை எண்ணி, இறுதியாக இனி ஜப்தி நடக்காது என அறிவிக்கப்பட்டது. ஆனால் ஜப்தி செய்யப்பட்ட பண்டபாத்திரங்கள், கதவுகள், ஜன்னல்கள் இத்யாதி இத்யாதி, விவசாயப் பாட்டாளிகளுக்கு திருப்பித் தரப்படவில்லை. பின்னர் ஆடி அசைந்து - வறட்சி மாவட்டங்களின் பட்டியல் ஒன்று அறிவிக்கப்பட்டது!

பட்டியல் அறிவிக்கப்பட்டதே தவிர, துயர் துடைப்புப் பணிகளில் விரைவு காட்டப்படவில்லை!

தமிழக வறட்சி குறித்த விபர அறிக்கையே ஜூலை மாதக் கடைசியில் தான் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் வட்டாரத்திலிருந்து செய்திகள் பத்திரிகைகளுக்குத் தரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வறட்சி நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திட மாநில அரசை வலியுறுத்திடும் பொறுப்பு, எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

அரசினருக்கு - வறட்சிப்பணிகள் பற்றிக் கவலை கொள்வதை விட, தி.மு.கழகமும் தோழமைக் கட்சிகளும் வெற்றி பெற்றுள்ள உள்ளாட்சி மன்றங்களில் எப்படியெல்லாம் இடையூறு விளைவிக்கலாம் என்பதிலேயே மிகவும் கவலை!

உள்ளாட்சி மன்றங்களில் பெரும்பான்மையான இடங்கள் ஆளுங்கட்சிக்குக் கிடைக்காத காரணத்தினாலேயே, உள்ளாட்சிமன்ற உரிமைகள் அனைத்தையும் பறித்துவிட அரசின் ஆணைகள் அடுக்கடுக்காக வந்துகொண்டுள்ளன!

இந்த ஜனநாயக விரோதச் செயலைக் கண்டிக்கவும் எதிர்க்கட்சிகளுக்குக் கடமையுண்டு!

காவிரிப் பிரச்சினையில் நல்ல தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதால் உருவாகும் சீரழிவு மட்டுமல்ல, தற்காலிகமாகவாவது தஞ்சை, திருச்சி, சிதம்பரம் பகுதிகளுக்குக் கர்நாடகத்திலிருந்து உரிய நேரத்தில் தண்ணீரை பெற்றுத்தந்திருந்தால், குறுவை சாகுபடிக்கு இவ்வளவு பெரிய குந்தகம் ஏற்படாமல் ஓரளவு விவசாயிகளுடையவும், விவசாயத் தொழிலாளிகளுடையவும் வேதனையைத் தடுத்திருக்க முடியும்!

அதனைச் செய்யத் தவறிய அரசினை எதிர்க்கட்சிகள் கண்டித்துக் குரல் எழுப்பாமல் இருந்திடல் இயலுமோ?

மரத்தடிப்பள்ளிகள் - மாளிகைப்பள்ளிகள் என அரசாங்கமே இரு வர்க்கங்களைப் பள்ளிகளிலும் உருவாக்கிட, எல்லா மக்களின் வரிப்பணத்தையும் செலவிடத் துணிவதையும், அதன் மூலம் இந்தி ஆதிக்கத்தை நுழையவிட வஞ்சகவலை விரிப்பதையும் எவ்வாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

சென்னை, மதுரை, கோவை மாநகராட்சித் தேர்தல்களை ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லியே தள்ளிப்போடுவதையும்

- அவ்வாறே கூட்டுறவுத்துறை தேர்தல்களையும் நடத்தாமல் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதையும் எவ்வாறு அனுமதிக்க முடியும்?

வன்முறைகள் நிகழாமல் - சட்டம், ஒழுங்கு அமைதியைக் காத்திட பொறுப்புள்ள ஒரு முதலமைச்சரே - காவல்துறையினரின் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு - அல்லது தனது இஷ்டம் போல்தான், நியாயத்துக்கு விரோதமாக நடக்க வேண்டுமென்று ஆணையிட்டு விட்டு, கத்தி வைத்துக் கொள்க என்று தனது கட்சிக்காரர்களுக்கு உத்தரவிடுவதை எதிர்க்கட்சிகள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? கண்டிப்பது கடமையல்லவா?

எதிர்க்கட்சிச் செய்திகளை திரித்தும், மறைத்தும், இருட்டடிப்பு செய்தும் பாரபட்சமாக செயல்படும் ஆளுங்கட்சி ஊதுகுழல்களான வானொலி, தொலைக்காட்சிகளின் மக்கள் விரோதப் போக்கை எவ்வளவு காலம்தான் அனுமதிக்க முடியும்?

இவற்றையெல்லாம் மக்களுக்கு விளக்க - மக்கள் இயக்கத்தைத் திரட்ட -சைக்கிள் பேரணிகள் நடத்த - கண்டனக் கூட்டங்கள் நிகழ்த்த - மறியல் அறப்போரில் ஈடுபட ஏற்கெனவே ஆகஸ்டு 6, 7, 8 என நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மறியல் அறப்போர் நடைபெறும் மாவட்டங்களும், இடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்களில் அமைதியான முறையில் - அறவழியில் எதிர்க்கட்சிகளுக்குரிய ஜனநாயகக் கடமையை ஆற்றிட வேண்டுகிறேன்.

அன்புடன்

மு.க.

06-08-1986

1440. சிறைக் கோட்டங்கள் நிரம்பி வழியட்டும்!

உடன்பிறப்பே,

எட்டாம் தேதி தி.மு.க.வும், தோழமைக்கட்சிகளும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காவிரித் தண்ணீர் உரிய நேரத்தில் கிடைக்காமல் கண்ணீர் விடும் நிலையை சுட்டிக் காட்டி, மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துவதற்காக மறியல் அறப்போரில் ஈடுபட இருப்பதை ஒட்டி, இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஆயிரக்கணக்கானவர்கள், கழகத்தினரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், காமராசர் காங்கிரஸ் கட்சியினரும் முன் கூட்டியே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அடக்குமுறை மிரட்டலுக்குப் பயந்தவர்கள் அல்ல, இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவோர் என்பதை அரசுக்கு உணர்த்துகிற வகையிலும் - அதே சமயம், நமது மறியல் போராட்டம் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், சிதம்பரம் வட்டாரம் ஆகிய பகுதிகளில் மட்டுமே வட்ட ஆட்சியர் அலுவலகங்களின் முன்னால் அமைதியான முறையில் நடைபெறக்கூடியது என்பதை நாட்டுக்கு உணர்த்துகின்ற வகையிலும் அமைந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது கோரிக்கைகள் முழக்கங்களாக ஒலித்திட வேண்டுமேயல்லாமல், யாரையும் புண்படுத்தக்கூடிய - இழிவுபடுத்தக்கூடிய - கண்ணியமற்ற சொற்கள் துளியும் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கத்தி வைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு மாநில முதலமைச்சரே, தனது கட்சியினருக்குக் கட்டளையிட்டுள்ள இந்த வேளையில் நடைபெறுகிற இந்த மறியல் அறப் போராட்டத்தில் ஆளுங்கட்சியினர் மீண்டும் மன்னார் குடிகளை ஆங்காங்கு உருவாக்கிடவும் - அதன் விளைவுகளை நம்மவர் மீது பழியாகப் போடவும் திட்டமிட்டுச் செயல்படக்கூடும்! கத்திகள் வரின், நமது நெஞ்சங்களைக் கேடயங்களாக்கிக் கொண்டு தாங்கிக் கொள்ள வேண்டுமே தவிர - தாக்கிட முனைதல் கூடாது!

ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டுவது கூட கோழைத்தனம் என்ற புறநானூற்று வரிகளுக்குச் சொந்தக் காரர்கள் தான் வீரமிக்கவர் என்பது இலக்கணமாயினும்; இப்போதெல்லாம் அரசியல் களத்தில் வீரம் என்பது அடக்குமுறைகளை - அராஜகச்சேட்டைகளை - தாங்கிடும் தியாகத்தையே குறிப்பிடுவதாகும் என்பதை மறந்து விடாமல் மறியல் அறப்போர்க்களத்தில் நமது உடன்பிறப்புகளும், தோழமைக்கட்சிகளின் அன்புக்குரிய செயல்வீரர்களும் ஆகஸ்டு 8 அன்று ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கத்தியால் எங்களைக் குத்த முடியும், ஆனால் குத்தக் குத்த கூர் மழுங்கும்.

கத்தி எடுத்தவன் கத்தியால் அழிவான் என்னும் பொன்மொழி நினைவிருக்கட்டும்.

கத்தியைத் தீட்டாதே - புத்தியைத் தீட்டு என்று நான் கூறியதை மறந்திடாதே!

குத்துகிறவர்கள் குத்தட்டும்! சாகத் துணிந்தவர்கள் சாகிறோம்!

உங்கள் கத்திகள் மழுங்கிய பிறகு கத்தியோடு நிற்பவர்களை எதிர்த்து எங்களில் மீதமுள்ளோர் கண்களில் அனல் கிளம்பும் - அது பயங்கரமானது!

இவ்வாறு அண்ணா சொன்னதை இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு;

எடுத்த கடமையை
எழுச்சியுடன் நிறைவேற்றிட
அறவழியில்
அமைதிவழியில்
மறியல் அறப்போர்
ஆகஸ்டு 8ஆம் நாள்

சீரிய முறையில் செம்மையாக நடக்கட்டும்! சிறைக் கோட்டங்கள் நிரம்பி வழியட்டும்! சிரித்த முகத்துடன் அடக்குமுறைகளைச் சந்திப்போம்!

அன்புடன்

மு.க.

07-08-1986

1441. சென்னை - மதுரை - கோவைப் பேரணிகள்!

உடன்பிறப்பே,

சென்னை, மதுரை, கோவை மாநகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும், அதுவும் உடனடியாக!

என்று வலியுறுத்தி ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்களில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பேரணிகளை நடத்திக் கொண்டிருக்கும் போதே,

இப்போது இந்த மாநகராட்சிகளின் தேர்தல் நடை பெறாது என்றும் - மற்ற மாநிலங்களில் உள்ள மாநகராட்சிச் சட்டங்களில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் பார்த்து நமது சட்டத்தில் சேர்த்த பிறகே தேர்தல் நடத்த உத்தேசித்துள்ளோம் என்றும் - பிற மாநில மாநகராட்சிச் சட்டங்களை இனிமேல்தான் வரவழைக்க வேண்டும் என்றும் - அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் கூறிவிட்டதாக ஏடுகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

எம்.ஜி.ஆர்.ஆட்சி பொறுப்பேற்று ஒன்பது ஆண்டுகள் ஆகியும் கூட - பத்தாண்டு சாதனை விழாக்கள் பகட்டோடு - பளபளப்போடு - பந்தாக்களோடு - பல இடங்களில் கொண்டாடியும் கூட - இதுவரையில் மற்ற மாநிலங்களில் மாநகராட்சிச் சட்டங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளவோ - அந்தச் சட்டங்களை வரவழைத்துப் பார்க்கவோ - ஆள வந்தவர்களுக்கு நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை என்பது வேடிக்கையான வேதனைதான்!

மற்ற மாநிலத்து மாநகராட்சிச் சட்டங்களை இந்த மாநில அரசு வரவழைத்துப் பார்ப்பதற்கு, மத்திய அரசின் அனுமதி ஏதாவது பெற வேண்டுமா என்ன?

அப்படிப்பெற்றுத்தான் தீரவேண்டுமென்று நிலைமையிருந்து - அதற்கான அனுமதியை இன்னமும் மத்திய அரசு வழங்காமல் தயக்கம் காட்டுகிறதா?

அப்படியே தயக்கம் காட்டினாலும் கூட, இந்த ஒன்பது ஆண்டுகளில் டெல்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதிகள் அமைச்சருக்குரிய சகல அந்தஸ்துகளுடனும் மூன்று நான்குபேர் மாறிவிட்டார்களே! அவர்களாவது டெல்லி செக்ரட்ரியேட்டில் இது குறித்து வலியுறுத்தி வாதிட்டிருக்கக் கூடாதா?

கொக்கு பிடிப்பதற்கு வெண்ணெய் தேடிக் கொண்டிருக் கிறேன் என்றானாம் ஒருவன்!

எதற்காக வெண்ணெய்? என்றான் இன்னொருவன்!

கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து விட்டால் - அது வெயிலில் சூடுபட்டு உருகி கொக்கின் கண்ணை மறைத்து விடும் - அப்போது கொக்கைச் சுலபமாகப் பிடித்து விடலாம் என்றானாம் அவன்!

வெண்ணெய் மோரில் அல்லவா எடுக்க வேண்டும்! பாலை இரவில் புரைக்குத்தி வைத்தால் தானே அது தயிராகி மோராகும்! பால் வேண்டுமென்றால் பசுமாடு வேண்டுமே!

இப்படியெல்லாம் ஆராய்ச்சி நீண்டது! ஆக ஒரு முடிவுக்கு வந்தார்கள். பசுமாடு ஒன்று வாங்கினால்தான் - பால்கறந்து, தயிராக்கி, மோராக்கி, வெண்ணெய் எடுத்து - அதைக் கொக்கின் தலையில் வைத்துப் பிடிக்க முடியுமென்று!

பசுமாடு தயாரா? இப்படியொரு கேள்வி எழுந்தபோது - இல்லை இனிமேல் தான் வாங்க வேண்டும் என்றான் அவன்!

அதாவது தமிழ்நாட்டில் மாநகராட்சித் தேர்தலை நடத்த சட்டம் திருத்தவேண்டும் - அதற்கு மற்ற மாநில மாநகராட்சிச் சட்டங்களைப் பார்க்கவேண்டும் - பசுமாடு இன்னும் வாங்காததைப்போல, மற்ற மாநில மாநகராட்சிச் சட்டங்களை இன்னும் வரவழைத்துப் பார்க்கவில்லை என்ற ரீதியில் பதில் அளிக்கப்பட்டுவிட்டது!

உள்ளாட்சித் தேர்தல்களை ஏன் குறித்த தேதியில் நடத்தவில்லை? என்று கேட்டபோது, வாக்காளர் பட்டியல்கள்

கூட்டுறவு அச்சகங்களுக்கு மட்டுமே அச்சியற்றக் கொடுப்பதென கொள்கை முடிவு எடுத்து அவ்வாறு கொடுத்துள்ளோம். தனியார் அச்சகத்துக்குத் தரவில்லை. அதனால்தான் தாமதம்!

என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார். எல்லா பத்திரிகைகளிலும் அந்த பதில் வெளிவந்தது.

கொள்கை என்று சொன்னதெல்லாம் தவறு. கூட்டுறவு அச்சகத்துக்கு மட்டுமின்றி பல தனியார் அச்சகங்களுக்கும் உள்ளாட்சிமன்ற வாக்காளர் பட்டியல் அச்சிலேற்றத் தரப்பட்டுள்ளது என்று கூறி, அதற்கான ஆதாரங்களை அள்ளிப் போட்டதும், அமைச்சர் அவர்கள், தவறாகச் சொல்லி விட்டேன் என்று ஒப்புக்கொண்டார்!

இப்படிப் பல சாக்குப்போக்குகள் கூறப்பட்டு - இறுதியாக ஒருவிதமான உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்தன!

இப்போது சென்னை, மதுரை, கோவை, மாநகராட்சி களுக்கு தேர்தலை உடனடியாக நடத்தாமலிருக்க ஏதேதோ காரணங்களைத் தேடிப்பிடித்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசின் சார்பில் அமைச்சர் கூறியுள்ள இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இன்று - சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் - நடைபெறும் நமது எழுச்சிமிக்கதும் - அறவழிகொண்டதுமான - சைக்கிள் பேரணிகள் நிரூபித்துக் காட்டட்டும்.

அன்புடன்

மு.க.

08-08-1986

1442. விகடன் தலையங்கமும் - ஒரு வேண்டுகோளும்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் நிலவும் சில சூழ்நிலைகளைப் பற்றி மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது திருநெல்வேலியிலும், அருப்புக்கோட்டையிலும் இடைத்தேர்தல் வருகிறது.

என்ற தொடக்க வாசகத்துடன் ஆனந்த விகடன் இந்த வாரம் ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது.

ஜனநாயகத்தில் சர்வ சாதாரணமாக ஏற்படக்கூடிய தேர்தல் தோல்வி என்கிற விஷயத்தை அலர்ஜியாகக் கருதும் கட்சி அ.தி.மு.க.! ஆகவே இந்த இரண்டு இடைத்தேர்தலிலும் வெற்றி ஒன்றே அதன் குறியாக இருக்கும். தனது எல்லாவிதப் பலங்களுடனும் ஆளுங்கட்சி தேர்தலில் குதிக்கப் போகிறது. மந்திரிகள், அரசு அதிகாரிகள் கவனமெல்லாம் இந்த இரண்டு தொகுதிகளில் மட்டுமே திருப்பப்படும் என்று 10.8.86 எனத் தேதியிட்டு வந்துள்ள ஆனந்த விகடன் வெளியிட்டுள்ள இதே கருத்தை முரசொலியில் 6.8.86 அன்று நான் எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளேன்.

ஆட்சியாளர் கண்களுக்கு இப்போது நெல்லைத் தொகுதியும் அருப்புக்கோட்டைத் தொகுதியும் தான் கடுமையான வறட்சிப் பகுதிகளாகத் தெரியும். அங்குதான் வாயு வேகத்தில் - மனோவேகத்தில் அரசு இயந்திரங்கள் பறந்து பறந்து பணிகளைத் தொடங்கிடும்.

எனவே, நான் எழுதியது போன்றோ - அல்லது விகடன் தலையங்கத்தில் சுட்டிக்காட்டுவதைப் போன்றோ, இனிமேல்தான் தொடங்கிடும் என்பதற்கோ - அல்லது திருப்பப்படும் என்பதற்கோ - சிறிதும் இடமின்றி, அரசாங்க இயந்திரங்களையும்,

அதிகாரிகளையும், மற்றும் தேர்தல் விதிமுறைகளுக்கு மாறான பல செயல்களையும் அ.தி.மு.க. அரசினர் இரு தொகுதிகளிலும் இப்போது தாராளமாக நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

வறட்சியால் பெருவாரியான மக்கள் கண்ணீர் வடிக்கும் போது இந்த இடைத் தேர்தல்கள் ஆடம்பரமாக - ஏதோ திருவிழா போல நடத்தப்படுவது முறையற்றது, ஆளுங்கட்சியும் சரி, எதிர்க்கட்சியும் சரி பணத்தை வாரி இறைத்துத் தேர்தல் வேலைகளைச் செய்தால் மக்கள் அதைப் பொறுப்பான செயலாகக் கருதமாட்டார்கள்.

தமிழ்நாட்டில் ஆங்கில ஏடானாலும், தமிழ் ஏடானாலும் - ஆளுங்கட்சியை விமர்சிக்கும் போது, அதன் குறைகளைக் குற்றங்களைச் சுட்டிக்காட்டும்போது எதிர்க்கட்சிகள் மீதும் ஒரு இடிஇடித்து விட்டுப் போகாவிட்டால் அவைகளுக்கு மனஆறுதல் இருக்காது! அந்த முறைப்படிதான், விகடன் இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியைப் போல எதிர்க்கட்சியும் பணத்தை வாரியிறைத்துத் தேர்தல் வேலை செய்யும் என்பதைப் போலக் கோடிட்டுக் காட்டுகிறது!

உடன்பிறப்பே, ஓய்வறியா உழைப்பைக் கொடு! உன்னாலியன்ற தேர்தல் நிதியைக் கொடு! என உன் முன்னால் கையேந்தி நின்று கொண்டிருக்கிறது கழகம்! ஆம், விகடன் கூறுகிற எதிர்க்கட்சி!

கடந்த கால இடைத் தேர்தல்களில் விகடன் அல்லது விகடனைப் போன்ற தரம் வாய்ந்த ஏடுகள் தனது நிருபர்கள் வாயிலாக இடைத் தேர்தல் பணிகள் குறித்த விமர்சனக் கட்டுரைத் தீட்டிய பொழுதெல்லாம் - களத்தில் தி.மு.க. நிற்பது போலவே தெரியவில்லை என்றும், எங்கு நோக்கினும் அ.தி.மு.க. சுவரொட்டிகள் - பதாகைகள் - கொடிகள் - தேர்தல் சின்னங்கள் - லாரிகள் - பஸ்கள் - இவை மூலம் ஊர்வல விளம்பரங்கள் - இவற்றின் முன்னே தி.மு.க.வின் தேர்தல் பணிகள் கடலில் கரைத்த பெருங்காயம் போல இருக்கின்றன என்றும் - இதே வார்த்தைகள் இல்லாவிடினும், இதே கருத்தை வெளியிட்டதை நாமும் மறந்து விடவில்லை! நாடும் மறந்து விடவில்லை!

எனவே, இப்போதும் விகடன் எழுதியுள்ள தலையங் கத்தையே பொறுப்புணர்வுடன் எழுதிய தலையங்கமாகக் கருதி, நமது உடன்பிறப்புகள் இடைத்தேர்தல் நடைபெறும்

இரண்டு தொகுதிகளிலும் பணபலத்தை நம்பாமல் - தேர்தலில் நியாயமாகத் தேவைப்படும் செலவினங்களுக்கு மட்டும் துண்டேந்தி, உண்டியல் குலுக்கி, தேர்தல் நிதியினைத் திரட்டிக்கொண்டு - உழைப்பைத் தந்து ஜனநாயகக் கடமையை ஆற்றிட வேண்டுமென்றும் - அவ்வாறே ஆற்றிடுவர் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.

இந்த இரண்டு தொகுதிகளில் நடக்கும் பலப்பரீட்சையால், மாநிலம் முழுக்க உள்ள வறட்சி நிலைமை புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாது.

இதுவும் விகடன், தனது தலையங்கத்தில் எச்சரிக்கையாக விடுத்துள்ள உயரிய கருத்து ஆகும்!

வறட்சி நிலைமை பலமாத காலமாகப் புறக்கணிக்கப் படுவதை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மாநில அரசுக்கு சுட்டிக்காட்டத் தவறவில்லை. வறட்சி நிவாரணங்கள் எந்தவகையில் எல்லாம் அமைய வேண்டுமென யோசனைகளைச் சொல்லவும் தவறவில்லை. அரசு, வறட்சிப் பணிகளைத் தொடங்கிடும் போது ஆங்காங்கு வெற்றி பெற்றுப் பொறுப்பேற்றுள்ள நகராட்சி, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் கட்சிவேறுபாடுகளை மறந்து துயர்துடைப்புப்பணிகளை உன்னிப்பாகவும், விரைந்தும் கவனிக்க வேண்டுமென்றும் நான் எழுதிய கடிதம், முரசொலியிலும், தினகரனிலும், சில ஊர் மாலைமுரசு இதழ்களிலும் முழுமையாகவே வெளிவந்துள்ளன.

வறட்சி நிலைமை புறக்கணிக்கப்பட்டதால் தான் ஜூலை மாதம் இருபத்தி இரண்டாம் தேதி வரையிலே மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு, வறட்சி விபரம் குறித்த எந்த அறிக்கையும் அனுப்பி வைக்கவில்லை.

எல்லா மாநிலங்கள் குறித்தும் அறிக்கை வைத்த மத்திய அமைச்சரைப் பார்த்து மாநிலங்களவையில் தம்பி முரசொலி மாறன், தமிழ்நாட்டைப் பற்றி எதுவுமே இல்லையே - அங்கிருந்து வறட்சி குறித்து ஒன்றும் கேட்கவில்லையா? அல்லது அவர்கள் கேட்டும் நீங்கள் கொடுக்கவில்லையா? என வினவிய போது - விடையளித்த மத்திய அமைச்சர் அவர்கள், இதுவரையில் தமிழ்நாட்டிலிருந்து வறட்சி குறித்து விவர அறிக்கை வரவில்லை என அறிவித்தார்! இது நடந்தது ஜூலை 18-ந் தேதி, மாநிலங்களவையில்!

அதற்குப் பிறகுதான் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தின் தூக்கம் கலைந்து, அறிக்கை தயாரிக்கப் புறப்பட்டது!

வறட்சி நிலைமை புறக்கணிக்கப்படக் கூடாது என்பதில் அக்கறை கொண்டுள்ள காரணத்தினால்தான் - தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் முடிவெடுத்து அந்தக் கட்சிகளின் தலைமைகள் அறிவித்தவாறு அரசின் கவனத்தை வறட்சிப்பணிகளின் பக்கம் வேகமாகத் திரும்பச் செய்யும் முயற்சியாக மாநில முழுவதும் ஆகஸ்டு 6, 7, 8 ஆகிய நாட்களில் பட்டிதொட்டியெங்கும் அமைதியான முறையில் - ஆனால் எழுச்சி மிகுந்த சைக்கிள் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. தஞ்சை, திருச்சி, தெ.ஆ. மாவட்டங்களில் மறியல் அறப்போர் ஆகஸ்டு 8-ல் நடைபெற்றுள்ளன.

இடைத் தேர்தலே குறிக்கோள் என்று எண்ணியிருந்தால் - இந்தச் சமயத்தில் இத்தகைய மாநிலந் தழுவிய பேரணிகளையும், மறியல் அறப்போராட்டத்தையும் எதிர்க்கட்சிகள் நடத்தியிருக்கமாட்டா!

மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுப்பதும் - வாதிடுவதும் - அறப்போர்க் களம் புகுவதும் - அடக்கு முறைகளை, ஏற்பதும் எப்படி ஜனநாயக கடமையோ, அஃதே போல் இடைத் தேர்தலில் ஆளுங்கட்சியை தேர்தல் களத்தில் சந்திப்பதும் ஜனநாயகக் கடமைதான் என்பதை நான் தயங்கிய நிலையிலுங்கூட சுட்டிக்காட்டிக் கழகத்தின் ஜனநாயக அமைப்பு இடைத் தேர்தல்களில் தோழமைக் கட்சிகளின் துணையோடு கழக வேட்பாளர்கள் இருவரை நிறுத்தி வைத்துள்ளது.

இருவேட்பாளர்களின் வெற்றிக்காக ஜனநாயக முறையில் - உழைப்பை நல்கி உறுதுணை நிற்கும் கழக உடன்பிறப்புகளுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வார்டு பிளாக், தமிழ்நாடு குடியரசுக்கட்சி, மக்கள் கட்சி ஆகிய தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களுக்கும் - வறட்சி நிலையைப் புறக்கணித்து மக்களைத் திசை திருப்பும் செயல்முறைகளிலும், பேச்சுக்களிலும் ஈடுபடும் இந்த அரசின் ஜனநாயக விரோதப் போக்கை அம்பலப்படுத்தும் கடமையுணர்வு நிச்சயமாக உண்டு!

முதலமைச்சரின் கத்திப் பேச்சை எதிர்த்து எழுதும் ஏடுகள் சில, தி.மு.கழகம் தொண்டர் படை குறித்து ஏதாவது சொல்லா விட்டால் மனநிம்மதி பெறுவதில்லை!

படை என்றால் இராணுவம் தான், ARMY தான் - தொண்டர் படை என்றால் தி.மு.க. இராணுவம் தான் என இன்னமும் சில ஏடுகள் தாங்கள் முதலில் செய்த தவறுக்கு சப்பைக்கட்டு போடப் பார்க்கின்றன!

களம் என்று தனியே சொல்லும்போது War Field என்று, அதாவது யுத்தகளம் என்று பொருள் வருவதுண்டு!

அந்தச் சொல்லையே தேர்தலுடன் இணைத்து தேர்தல் களம் என்கிறபோது, அரசியல் ரீதியாக அதற்குப் பொருள் மாறிவிடுகிறது!

படை என்ற சொல்லும் தொண்டர் எனும் சொல்லுடன் சேர்ந்து தொண்டர் படை என வரும்பொழுது Volunteer Corps கட்சித் தொண்டர்களின் அணி என்றுதான் பொருள்!

இந்தப் படை போதுமா?

இன்னும் கொஞ்சம் வேணுமா?

இந்த முழக்கம், எத்தனையோ ஆண்டுகளாகப் பல கட்சிகளின் ஊர்வலங்களில் எழுப்பப்பட்டு வருகிறது - அந்தப் படை என்ற சொல்லுக்கு ராணுவம் என்று பொருளா? அல்ல! அல்ல!

பொது நிகழ்ச்சிகளில் அமைதி, கட்டுப்பாடு காத்திட தொண்டர்படைகள் எத்தனையோ கட்சிகளில் உண்டு!

ஆனால் முதலமைச்சர் கத்தி வைத்துக் கொள் என்று பேசியதை மட்டும் தனித்துக் கண்டிக்க மனமில்லாமல் - நம்மீதும் கொஞ்சம் சேறுவாரி வீச சிலர் முயன்று பார்க்கிறார்கள்.

அப்படியொரு அசூயை எண்ணம் இல்லாவிடினும் ஆனந்தவிகடன், தனது தலையங்கத்தில் ஒரு பொதுவான கருத்துப்போல தனது நல்லெண்ணத்தை வெளியிட்டு நாட்டு நிலைக்காக வேதனையைக் கொட்டியுள்ளது.

ஆளுக்கொரு கத்தியோடு திரியும் ஆளுங்கட்சிக்கும் - தொண்டர்படை அமைக்கும் எதிர்க்கட்சிக்கும் மோதல்களும், அடிதடிகளும் நடக்கக்கூடிய பரிதாப அரசியல் நிலைமை உருவாகியிருக்கிறது.

விகடனின் தலையங்கத்தில் காணப்படும் இந்த வாசகமும் முற்றிலும் சரியானதல்ல!

ஆளுங்கட்சி கத்தியோடு திரிகிறது

சரி! மிகச்சரி! கத்திவைத்துக் கொள்க என முதலமைச்சரே ஆணையிடுகிறார்! அதன்பிறகு அமைச்சர்களுக்குக் கத்தி வழங்கும் விழாக்கள் நடத்தப்படுகின்றன! அமைச்சர்கள்! என்னவோ தங்களுக்கு செக்யூரிட்டி போலீசாரே இல்லாதது போலவே இந்தக் கத்தியை தற்காப்புக்குப் பயன்படுத்துவோம் எனக் கர்ச்சனை செய்கிறார்கள்!

நமது கூட்டங்களுக்குப் போதுமான அளவுக்குப் போலீசார் வருவதில்லை. எனவே சென்னை, நெல்லை, சேலம், திருச்சி, மதுரை மாவட்டங்களில் உள்ளது போல, பொது நிகழ்ச்சிகளில் அமைதி, கட்டுப்பாடு காத்திடத் தொண்டர் அணிகளை ஆங்காங்கு அமைத்திடுக! அதற்காக அந்தத் தொண்டர்கள் யாரும் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ளக் கூடாது! அமைதி வழியில் - அறவழியில் - வன்முறையற்ற வழியில் - தொண்டர்படைகள் இயங்க வேண்டும்.

எனத் தஞ்சை மாவட்ட கழக அமைப்புகளையும், மற்ற மாவட்ட அமைப்புகளையும் கேட்டுக்கொண்டு ஒரத்த நாட்டில் நான் பேசியதற்கும் - முதலமைச்சரின் கத்திப் பேச்சுக்கும் முடிச்சு போடுகிறார்களே, அதுதான் விந்தையானது! விசித்திரமானது!

ஆளுங்கட்சி கத்தியுடனும், எதிர்க்கட்சி தொண்டர் படையுடனும் நின்று அடிதடியில் இறங்குகின்றன எனக் குறிப்பிடும் விகடனின் மேலான கவனத்திற்குப் பின்வரும் செய்தியை வைத்திட விரும்புகிறேன்.

சமூக சேவகரும், மக்கள் நலனுக்காக நீதிமன்றங்களில் வழக்குத் தொடருபவரும் - அண்மையில் ஒரு திவால் நடிகையை மேலவைக்கு நியமனம் செய்ததை எதிர்த்து வழக்காடி வென்றவருமான டி. கோபாலன் அவர்களை, உயர்நீதி மன்றத்து வாசலிலேயே கத்தியால் குத்தி விட்டனர். கொலை செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்ட இந்தக் கத்திக் குத்தில் கோபாலன் காயங்களுடன் தப்பிப் பிழைத்துக் கொண்டார். இவர், சில அமைச்சர்கள் மீதும் வழக்கு தொடர்ந்துள்ளார். ஒரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தனக்கு விரோதியாக இருக்கிறார் என்றும் தனது

புகாரில் அவர் குறிப்பிட்டுள்ளார். சில நாட்களுக்கு முன்பு இவரது வழக்கறிஞர் சுந்தரம் என்பவர் கத்தியால் குத்தப்பட்டார்.

எனவே, இப்படிப் பலசெய்திகள்! உயர்நீதிமன்ற வாசலில் கத்திக்குத்துக்கு ஆளான கோபாலன் அவர்கள், எந்தக் கட்சித் தொண்டர் படையைச் சேர்ந்தவருமல்ல! வக்கீல் சுந்தரமும் - எந்தக் கட்சியிலும் இருப்பவரல்ல!

ஆளுங்கட்சியின் அநியாயங்களைக் கண்டித்து கணைகளைத் தொடுக்கும் போது - எதிர்க்கட்சிகளின் பொறுப்புணர்வைச் சுட்டிக்காட்ட விகடன் போன்ற ஏடுகளுக்கு உரிமையுண்டு!

அவற்றையேற்றுச் செயலாற்ற எதிர்க்கட்சிகளுக்கும் கடமையுண்டு!

அந்தக் கடமையுணர்வுடன், நான் விகடன் போன்ற ஏடுகளுக்குக் கூறுவது - நியாய வாதங்களை ஏற்றுக்கொள்ள என்றைக்கும் தி.மு.கழகம் தயாராக இருக்கிறது! அதன்படிச் செயல்படவும் தயங்காது! அதே சமயம் வலிந்து தேடிப்பிடித்து எம்மீது மாசு கற்பிக்க முனைய வேண்டாம் என்பது தான்!

அன்புடன்

மு.க.

09-08-1986

1443. களத்தில் நிற்கும் உன்னைக் காண வருகிறேன்!

உடன்பிறப்பே,

வறட்சி நிலவரம் கடுமையாக இருந்த போதிலும் கூட, நெல்லைத் தொகுதியில் குடிநீர்ப் பஞ்சம் கிடையாது. ஆனால், இங்கும் நூற்றி ஐம்பது ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க தனியாரிடம் டெண்டர் கேட்டு அந்தக் கிணறுகளைக் கழிவறைகளின் பக்கத்திலேயே தோண்டுகிறார்கள்.

நெல்லைத் தொகுதி இடைத் தேர்தல் வேட்பாளரான அமைச்சர் வீரப்பன் அவர்கள் வாக்கு கேட்கப் போகும்போது அவரைச் சூழ்ந்து செய்தித் துறை வாகனங்களும், அதிகாரிகளும், செய்தித் துறை புகைப்படக்காரர்களும் அணிவகுத்திருக்கிறார்கள்.

நெல்லை, அருப்புக்கோட்டை இரு தொகுதிகளிலுமே அதிகாரிகள் அங்கிருந்து பந்தாடப்பட்டு மாற்றப்பட்டுள்ளனர் அவசர அவசரமாக! தேதிகளில் தில்லுமுல்லு செய்யப்பட்டு!

இரு தொகுதிகளிலும் - அடடா! என்ன அவசரமாக சாலைகள் முளைக்கின்றன!

இருண்டு கிடந்த கிராமங்களில் எரியாமல் அழுது கொண்டிருந்த மின்சார விளக்குகள் திடீரென கோடி சூரியப் பிரகாசம் கொட்டுகின்றன!

சட்டத்தை மீறித் தெருக்களில் ஆளுங்கட்சியினர் இலவச சினிமாப் படம் காட்ட ஏற்பாடுகள்!

பஸ் வழித் தடங்கள் அலாவுதீன் அற்புத தீபம் கதையில் வருவதைப் போல் அடுக்கடுக்காக அறிவிக்கப்படுகின்றன!

செல்வாக்குள்ள முக்கிய பிரமுகர்களிடம் அரசு இலாகாக்களின் அதிகாரிகளே சென்று அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு இரு தொகுதிகளிலும் ஆதரவு திரட்டுகின்றனர்.

அருப்புக்கோட்டை தொகுதி நரிக்குடியில் நமது கூட்டம்! அதற்கு வெளியூர் மக்கள் யாரும் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் திட்டமிட்டு அருப்புக்கோட்டை வழியாக வரும் எல்லா பஸ்களையும் - தனியார் பஸ்கள் உள்ளிட்ட - அனைத்து பஸ்களையும் அதிகாரிகளைவிட்டும், அமைச்சரே நேரில் மிரட்டியும் தடுத்துவிட்டார்! அதையும் மீறி நரிக்குடி ஒன்றியத்து மக்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து குழுமினர்.

ஆசை காட்டல்
அச்சுறுத்தல்
வெள்ளிப்பணக்குவியல்
அள்ளித்தரும் கரன்சி நோட்டுகள்
அதிகார துஷ்பிரயோகம்
அரசு இயந்திரங்களை
ஆளுங்கட்சியின் தேர்தல் இயந்திரமாகச்
செயல்படுத்தல்

இவற்றில் பயந்திடும் - அல்லது பல்லைக்காட்டும் - பந்தா கண்டு மயங்கிடும் - சந்தர்ப்பவாதிகள் - இரு தொகுதிகளிலும் சிலர் இருந்திடத்தான் செய்கின்றனர்.

இவற்றையெல்லாம் எதிர்பார்த்துத்தான் இடைத் தேர்தலில் கழகம் நிற்பது குறித்த எனது தயக்கத்தை முதலில் வெளிப்படுத்தினேன்.

நின்றே தீரவேண்டுமென நீ ஆணையிட்டாய்! ஜனநாயகக் கடமையெனத் தட்டிக் கழிப்பது முறையல்ல என்று ஏடுகள் சில அறிவுரை கூறின!

உன்னையும், உன் உறுதிமிகு சொற்களையும் நம்பித் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள கழகம் இரு தொகுதிகளிலுமே வெற்றி வாய்ப்புக்கான சூழ்நிலை இருப்பதை உணர்கிறது!

உழைப்பைத் தருவதற்கு உன்னைப் போன்ற உடன் பிறப்புகள் - இளைஞர் அணித் தம்பிமார்கள் எறும்புகள் என சுறுசுறுப்புக் காட்டுவதை இரு தொகுதிகளிலும் காண்கிறேன்.

அவர்கள் தேனீக்களெனப் பறந்து வாக்குகளையும் சேகரிக்க வேண்டுமல்லவா?

இறக்கையில்லாத தேனீக்களைப் பறக்கவிட முடியுமா? பறந்திட முயன்றாலும் அதன் உணர்வு மதிக்கப்படுமேயன்றி உபயோகமாக இருக்குமா?

ஒரு சிங்கிள் டீயைச் சாப்பிட்டுவிட்டு தேனீக்களைப் போல திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் வேலை செய்தார்கள் தேர்தலில்! என்று பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் அந்தக் காலத்திலேயே பாராட்டியபோது, எதிரில் அமர்ந்திருந்த என் உள்ளம் எப்படிப் பூரிப்பால் பொங்கி வழிந்தது தெரியுமா?

அந்த அயராத உழைப்பைத்தான் உன்னிடம் எதிர் பார்க்கிறேன்!

ஆனால் ஒரு சிங்கிள் டீ ஆயிரக்கணக்கான தொண்டர் களாம் என் அருமை உடன்பிறப்புகளுக்கு! அதுவும், இரண்டு தொகுதிகளில் வாங்கித் தருவதற்குக் கூட உன்னிடம் தானே உண்டியல் ஏந்தி வரவேண்டியுள்ளது.

இரு தொகுதி இடைத்தேர்தல் செலவுக்கும் - பொதுவான கழக வளர்ச்சி மற்றும் பிரச்சார வசதிகளுக்கும் சென்னை மாவட்டக் கழகம் தருவதாக வாக்களித்துள்ள தொகைக்காக தெருத்தெருவாக கழகக் கண்மணிகள், உண்டியல் ஏந்தி வசூலில் ஈடுபட்டுள்ளனர்.

இடைத்தேர்தலில் நிற்கத்தான் வேண்டுமென நிர்வாகக்குழுவில் வலியுறுத்திய மாவட்டச் செயலாளர்கள் ஆகஸ்டு 6, 7, 8 மாநிலம் தழுவிய பேரணிகளையும், மறியல் போராட்டத்தையும் முடித்துவிட்டு இப்போதுதான் வசூலுக்கே புறப்பட்டுள்ளனர்.

முதல் தவணையாக மதுரை நகர் மாவட்ட கழகச் செயலாளர் நண்பர் தாவூது பத்தாயிர ரூபாயும் - பெரியார் மாவட்ட வடக்குப் பகுதிச் செயலாளர் நண்பர் என்.கே.கே. பெரியசாமி ஐயாயிர ரூபாயும் தந்துள்ளனர்.

ஒருநாள் திருப்பரங்குன்ற ஒன்றியப் பெருந்தலைவர் நண்பர் அக்கினிராசு, என்னிடமும் பேராசிரியரிடமும் - நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் நன்கொடை தருமாறு வற்புறுத்துங்களேன் என்றார்.

நாங்கள் அவரிடம் கழக நகராட்சித் தலைவர்களோ, ஒன்றியப் பெருந்தலைவர்களோ அவர்களாக அவர்களது சொந்தப்

பணத்தை தேர்தல் நிதியாகவும் - கழக வளர்ச்சி நிதியாகவும் தரவேண்டுமே தவிர, அந்தப் பதவியைப் பயன்படுத்தி வசூலித்து தரக் கூடாது என்று கூறியதோடு - நீங்கள் அப்படி உங்கள் சொந்தப் பணத்திலிருந்து நிதியினை வழங்கி மற்றவர்களுக்கு வழி காட்டுங்கள் என்றோம்!

சரி என்றார்! இப்போது நான் நெல்லை, அருப்புக் கோட்டை தொகுதிகளுக்குச் சென்றிருந்த போது, மதுரையில் என்னிடம் ஐயாயிர ரூபாய்க்கான டிராப்ட் ஒன்றை நிதியாக அக்கினிராசு வழங்கினார்.

நண்பர் அக்கினிராசு வழி காட்டியிருக்கிறார்! அவர் வழியை - அதாவது நானும், பேராசிரியரும் கண்டிப்பாகச் சொன்ன வழியை யாரையும் வற்புறுத்தாத வழியை, மற்றவர்களும் பின்பற்றலாம்!

மீண்டும் 18-ந் தேதி நெல்லைக்கும், 19-ந் தேதி அருப்புக் கோட்டைக்கும் செல்கிறேன். தேர்தல் களத்தில் யார் யார் எந்தெந்தப் பகுதியில் அங்கு இங்கு என்று அலையாமல் - அதே சமயம், அவர்களுக்கு வகுத்தளித்த பணியை அவர்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலிருந்து ஓய்வின்றி, உறக்கமின்றி நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை நேரில் அறிந்து கொள்ளவும் இந்த இரண்டு நாட்களும் எனக்குப் பயன்படுமல்லவா?

ஆஜர் காட்டிவிட்டு யாரும் போய்விடக்கூடாது!

எந்தத் தொகுதிக்கு எந்த மாவட்டச் செயலாளர் - அல்லது பொறுப்பாளர் எனத் தலைமைக் கழகம் குறிப்பிட்டுள்ளதோ, அங்கே 18, 19 ஆகிய தேதிகளில் நான் வரும்போது அவர்கள் இருக்க வேண்டும். ஆம், அன்று முதல் அங்கே பணியைத் தொடங்கிட வேண்டும்! வரும்போதே வாக்குறுதி அளித்தபடி கழகத் தேர்தல் பணி - பிரச்சாரப் பணிக்கான - நிதியினை என்னிடம் வழங்கிட வேண்டும்.

மாவட்டத்திலிருந்து மற்ற முக்கியமான செயல்வீரர்கள் பிறகு வந்தால்கூடப் பரவாயில்லை - மாவட்ட நிர்வாகிகள் அதாவது, செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் 17-ந் தேதிக்கு முன்பே தொகுதிகளில் முகாமிட்டு 18-ந் தேதி வருகிற என்னைச் சந்திக்க வேண்டும், நிதியோடு! ஆம், அது முக்கியம்! மறந்து விட வேண்டாம்!

போஸ்டர் அடிக்கக் கூட பணம் இல்லை தலைமைக் கழகத்தில்!

அண்ணா அறிவாலயம் வேறு கட்டிக் கொண்டிருக்கிறோம் ஆயிரம் தொல்லைகளுக்கிடையே!

ஒவ்வொரு பொதுக்குழுவிலும் கழகத்தின் தேர்ந்தெடுக்கப் பட்ட தணிக்கைக் குழுவினர் தணிக்கை செய்து தரும் கணக்குகளைப் பார்க்கிற உன்போன்ற உடன்பிறப்புகளுக்குத் தெரியாத விஷயமா இது?

எனவே, உன்னையே நம்பியுள்ள கழகத்திற்கு நீ ஆற்றவேண்டிய கடமையை - இந்த முக்கியமான நேரத்தில் வழங்க வேண்டிய நிதியைக் குறித்து, இன்னும் நான் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை!

எந்த நிலையிலும் நமது கடமையைத் தூய்மையாக ஆற்றிட - பயணத்தைத் தொடருவோம், மக்களுக்காக! நாட்டுக்காக! நாம் போற்றும் ஜனநாயகத்துக்காக!

அன்புடன்

மு.க.

13-08-1986

1444. கண்ணீர் விட்டு வளர்த்த பயிர் கருகுவதோ?

உடன்பிறப்பே,

செங்குருதி நீர்தேக்கி - ஆயிரக்கணக்கானோர் உயிரை விதைத்து - தியாகமெனும் பரம்படித்துப் பண்படுத்தப்பட்ட நிலத்தில் விளைவிக்கப்பட்ட சுதந்திரப் பயிர், களைகளுக் கிடையிலேயும் - பூச்சித் தாக்குதல் - நோய் ஆக்ரமிப்பு - வேலி தாண்டிவரும் மாடுகள் - இவைகளுக்கிடையிலேயும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு இந்திய மக்களின் சுவாசக் காற்றில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருக்கிறது எனினும், பல கோடிப் பாமர, பாட்டாளிகள், ஏழை, எளியோர், எலும்பும் தேய்ந்தோர் இந்த நாட்டுக்குரியவர்களாகவே இருப்பதால் அவர்கள் விடும் பெருமூச்சின் வெப்பக் காற்றில் பெரும்பகுதிப் பயிரின் அங்கம் சுருகிக் கொண்டே தானிருக்கிறது!

இரவில் கிடைத்தது சுதந்திரம்! இன்னும் விடியவில்லையே - என்று குமரி முனையில் எழுகிற கூக்குரல் விந்தியத்தைத்தாண்டி - இமயத்திலும் எதிரொலித்துக் கொண்டுதானேயிருக்கிறதே!

முப்பத்தியொன்பது ஆண்டுக் காலச் சுதந்திர இந்தியாவில் - வறுமைக்கோடு என்பது வழித்தடத்தில் அசையாது நிற்கும் எருமைமாடு போலன்றோ அழியாது வளர்கிறது! வளர்ந்து கொண்டே இருக்கிறது!

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற பாரதியின் கனவு, தேர்தல் காலத்திலே வாக்குப்பதிவு செய்யும் அந்த ஒரே ஒரு நாள்தானே பலித்திடக் காண முடிகிறது.

அன்றுதானே அந்த மன்னர்கள் வாக்குச்சாவடிகளுக்கு ராஜபாட்டை போடப்பட்டு - ரத, கஜ, துரக, பதாதிகளுடன்,

வெண்சாமரம் ஆலவட்டங்கள் சுழல பவனி வரமுடிகிறது! அன்று மகாராஜா! மற்ற நாட்கள் எல்லாம் மரத்தடி மகாராஜாக்கள்தானே! குடிசை வாழ் கொற்றவர்கள்தானே! பசியையும், பிணியையும் பட்டமாகச் சூட்டிக்கொண்டு நடைபாதைகளில் ராஜ்யபரிபாலம் செய்பவர்கள்தானே!

கோட்டை கொத்தளங்கள் - மாடமாளிகைகள் - வானைத் தொடுமளவுக்கு வளர்கின்றன ஒரு சிலருக்கு!

குடிசைகளும் பூமிக்குள் சமாதியாகின்றன, பல கோடி ஏழைகளுக்கு!

வறுமையின் ஆட்சித்திறனே, இந்த முப்பத்தியொன்பது ஆண்டுகாலச் சுதந்திரத்தில் நாம் பெற்ற பயன்!

வறுமையுடன் போட்டி போட்டுக் கொண்டு வன் முறையின் பேயாட்டம் வேறு ஓயவே இல்லை!

வந்தது விடுதலை என மகிழ்ந்தோம்! அந்த மகிழ்ச்சியை நீடிக்கவிடாமல் விடுதலை வாங்கித் தந்தவரின் தலையையே கொய்துவிட்டது வன்முறை!

ஆம்! அண்ணல் காந்தியடிகளாரைத் துப்பாக்கிக் குண்டுகளால் அர்ச்சித்து தனது வன்முறைப் பாணி காணிக்கையைச் செலுத்தினான் ஒரு கயவன்!

அந்தச் செய்தி கேட்டு இனிப்பு வழங்கியவர்கள் சிலபேர், பின்னர் காங்கிரஸ் இயக்கத்தின் உற்சவ விக்கிரகங்களாக ஜோடிக்கப்பட்டு உலா வந்த நிகழ்ச்சிகளும் உண்டு!

பழைய இந்தியாவின் பரப்பளவுக்குள் சுதந்திரம் பெற்ற நாடுகளில், இங்கே இந்தியாவில் காந்தியடிகள்! பாகிஸ்தானில் லியாகத் அலிகான்! அதன் பிடியிலிருந்து விடுபட்ட பங்களாதேஷில் முஜிபுர் ரகுமான்!

சுதந்திர தேவிக்குப் புதிய விடுதலை நாடுகள் படைத்த வன்முறை விருந்து! அந்த விருந்து அருந்திட சுதந்திர தேவி, கை அசைக்கவில்லை! கண்ணீரையே கொட்டினாள்!

உலக முழுதுமே - பல நாடுகளில் ஜனநாயகத் தத்துவத்தின் சிலாக்கியம் பற்றிப் பேசப்படுகிற இந்த நாட்களிலும் வன்முறை வெறியாட்டங்கள் நின்றபாடில்லை!

அதிகாரத்தைக் கைப்பற்ற - ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள - எதிர்ப்பு சக்தியை ஒழித்துவிட - கொடுவாள் தூக்கப் படுவதும், துப்பாக்கிகள் வெடிப்பதும் எந்த நேரத்திலும் எதிர்பார்க்கக்கூடிய செய்திகளாகிவிட்டன!

வினையாக விதைக்கப்பட்ட பிந்தரன்வாலே, பின்னர் வினையாகவே வந்துசேர நேரிட்டது விதைத்தவர்களுக்கு எதிராகவே!

சண்டிகார் பிரச்சினையில் காட்டப்பட்ட சண்டித்தனம் காரணமாக அன்பு, அமைதி இவற்றைப் போதித்த குருநானக் உலவிய பூமியில், ஆலயங்களே இராணுவ தளவாடக் கிடங்குகளாயின!

எதற்கு எது காரணம்? என்ற ஆய்வுக்கே இடமின்றி - விசுவரூபம் எடுத்துவிட்ட பிரச்சினையைச் சமாளிக்க, இந்திய ஒருமைப்பாட்டைக் காத்திட வேறு வழி தோன்றாத நிலையில் - எல்லா வழிகளும் அடைபட்டு விட்ட சூழலில் - கடும் நடவடிக்கை எழுந்தது.

அமிர்தசரஸ் ஆலயம் அமர்க்களமானது. ஆம் - டெல்லியிலிருந்து பஞ்சாப் செல்லும் வழியில் தானே குருக்ஷேத்திர பூமிகூட இருக்கிறது! பஞ்சாப் மாநிலத்தில்தானே ஜாலியன் வாலாபாக் கூட நடந்தது!

அதைத் தொடர்ந்து இந்திய தீபகற்பமே கண்ணீரில் மிதக்கிறது என நான் அன்று கூறினேனே! அம்மவோ - அன்றுதான் அன்னை இந்திரா காந்தியின் படுகொலைச் செய்தி, நம் செவிகளைத் துளைத்து - சிந்தையை செயலிழக்கச் செய்தது!

அந்தப் புயலுக்குப் பிறகு அமைதி தோன்றுமென எதிர் பார்த்ததற்குப் பதிலாக - பூகம்பங்களன்றோ புறப்படுகின்றன!

பஞ்சாபிலும் - டெல்லியிலும் எத்தனை எத்தனை படுகொலைகள்!

சமரசத்தாளில் கையெழுத்திட்ட லோங்கோவால் பிணமாக்கப்பட்டார்!

இதோ - நம் இதயத்தில் விழுந்த இடியாக, முன்னாள் தலைமைத் தளபதி வைத்யா படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்!

பஞ்சாப் பிரச்சினை, இரு தரப்பிலும் தண்ணீர் கொட்டி அணைக்கப்படுவதற்குப் பதிலாக எண்ணெய் ஊற்றி எரிய விடப்படுகிறது!

கடமையைச் செய்த - கட்டளையை நிறைவேற்றிய - நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துத் தளநாயகனாகப் பொறுப் பேற்றிருந்த - வைத்யாவின் முடிவு, சகிக்க முடியாதது!

இன்னும் சிலர் குறி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள்!

செய்திகள் அல்ல! செந்தேள் இருதயத் தசையிலேயே கொட்டுவதுபோல இருக்கிறது! சீறிடும் நாகம் மூளை நரம்பிலேயே வேகமாக விஷப்பல்லைப் பதிப்பது போன்ற நிலையை ஏற்படுத்துகிறது!

பேச்சுவார்த்தைகள் - மனம்விட்டுக் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டிய விவகாரம்!

பேசித் தீர்க்கப்பட்ட பிரச்சினையில் குழப்பத்தை வீண்குதர்க்கத்தை ஏற்படுத்தியது யார்?

நினைத்துப் பார்க்க வேண்டிய உண்மைகள்! அலட்சியப்படுத்தக்கூடிய அற்ப விஷயங்கள் அல்ல!

முப்பத்தியொன்பது ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் வளம் பெருகவில்லை! வாட்டம் நிறைந்துள்ளது!

வறுமை தொலையவில்லை! மாறாக - எப்பக்கம் திரும்பினும் ஏழ்மை கொல்லுகிறது!

இந்தத் தொல்லையினூடே சுதந்திரப் பயிர்! நோய் நொடிகள், பூச்சித் தாக்குதலுக்கிடையே உயிரைப் பிடித்துக் கொண்டு வாழத்துடித்துக் கொண்டிருக்கும்போதுதான் - வன்முறையின் கொடிய நகம் பதித்த முரட்டுக்கால்கள் கொண்ட விலங்கின சுபாவங்கள், வேலி தாண்டிப் பயிரை மிதித்துத் துவைத்து நாசமாக்கவும் முற்பட்டுள்ளன!

இதற்கு உரிய பரிகாரம் தேடிட இந்த நாளில் உறுதி எடுத்துக்கொள்வதே, இந்த நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

அன்புடன்

மு.க.

15-08-1986

1445. உன்னிடம் சினங்கொள்ளும் உரிமை எனக்கு இல்லையா?

உடன்பிறப்பே,

இன்று நெல்லை - அருப்புக்கோட்டை தொகுதிகளுக்குப் புறப்படுகிறேன். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே இந்த இடைத் தேர்தலில் என்று எண்ணியிருந்த என்னை, நீ தைரியம் கொடுத்து - நம்பிக்கையூட்டி - அதிகார துஷ்பிரயோகம், அரசு இயந்திரங்களின் அத்துமீறிய தேர்தல் பணிகள், அமைச்சர்களின் உருட்டல் மிரட்டல்கள் இவற்றுக்கிடையே கழகமும், தோழமைக் கட்சிகளும் ஜனநாயகக் கடமையைத் தட்டிக் கழிக்கக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் களத்தில் இறக்கி விட்டுவிட்டாய்!

ஓய்வு தேவையில்லையென எனக்கு உபதேசித்த நீயும் ஓய்வு கொள்ளாமல் உழைத்தால்தானே உற்றபயனை எய்திட முடியும்!

எப்படி உழைக்கிறாய் எனப் பார்க்கத்தான் இந்த - 18, 19 தேதிகளில் இரு தொகுதிகளின் பக்கமும் வருகிறேன்.

எங்கள் மாவட்டக் கழகச் சார்பில் இவ்வளவு தொகை தருகிறோம் என்று வாக்களித்தச் செயலாளர்களும் - பொறுப்பாளர்களும் இந்த இரு நாட்களில் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளதை என்கையில் தரும் நிதியில் மட்டும் காட்டினால் போதாது! இன்ன பகுதியிலிருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற விபரத்தையும் எனக்கு அறிவிக்க வேண்டும்.

நேற்று தர்மபுரி மாவட்டப் பொறுப்பாளர் நண்பர் சின்னசாமி அவர்கள் நிர்வாகக்குழுவில் அளித்த உறுதிக்கேற்ப பத்தாயிர ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்தார்.

சேலம் மாவட்டச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் பதினைந்தாயிரத்தைக் கொடுத்து விட்டு, மற்றும் எந்தெந்த

நகரங்கள், ஒன்றியங்களில் இருந்து நிதிவரவேண்டியுள்ளது என்ற பட்டியலையும் என்னிடம் விவரித்துள்ளார்.

இக்கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது செங்கை அண்ணா மாவட்டச் செயலாளர் நண்பர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் வந்து அந்த மாவட்டத்தில் வசூலான தேர்தல் நிதி ஐம்பதாயிரத்தை அளித்ததோடு, இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் நிதி திரட்டும் பணி தொடங்கப்படவில்லை என்பதையும் அவருக்கேயுரியக் கோபத்துடன் எடுத்துக் கூறினார்.

சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி டி.ஆர். பாலுவின் முயற்சியால் - பகுதிதோறும் கழக நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் - சில பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் உண்டியல் எடுத்து நிதி வசூல் செய்துள்ளனர். விறுவிறுப்புடன் செயல்பட்ட பகுதிகளும் உண்டு! அப்படிச் செயல்படாத பகுதிகள் எவை என்பதை முரசொலியில் வெளிவரும் நிதிவசூல் பட்டியலே விளக்கிடும்!

மாநகரப் பகுதிகளானாலும் - வட்டங்கள், வார்டுகள், டிவிஷன்கள் எதுவானாலும், அது போலவே நகரங்கள், ஒன்றியங்கள், கிளைகள் எதுவானாலும் எப்படிச் செயல்படுகின்றன என்பதற்கும் - செம்மையாகச் செயல்படாவிடின் அவற்றை ஒழுங்குபடுத்தி உழைப்போர் வசம் பொறுப்பினை ஒப்படைக்கவும், இதுபோன்ற இன்றியமையாப் பணிகளில் அவர்கள் காட்டும் அக்கறை எவ்வளவு என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதனைத் தலைமைக் கழகம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

மாவட்டச் செயலாளர்கள் அல்லது மாவட்டப் பொறுப்பாளர்கள், தாங்களும் இந்த அக்கறையும், ஆர்வமும் கொள்வதுடன் - மாவட்டத்திலுள்ள கழக அமைப்புக்களோடு தொடர்பு கொண்டு, நிலை விளக்கங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

அருப்புக்கோட்டையிலிருந்து அமைப்புச் செயலாளர் தென்னரசு, தொலைபேசி மூலம் துளைத்தெடுக்கிறார் - அதுபோல நெல்லையிலிருந்து தேர்தல் பணிச்செயலாளர் தம்பி கோபால்சாமி காலையில், மாலையில், இரவில் தூக்கம் கூட இன்றித் தொலைபேசியில் கேட்கிறார் - என்ன? பணமா? கரன்சி கத்தைகளா? இல்லை, உடன்பிறப்பே இல்லை!

வேட்பாளர் பெயர் அச்சடித்த சுவரொட்டி இன்னும் வரவில்லையே! உதயசூரியன் சின்னம் பதித்த பதாகைகள் எதுவும் இன்னமும் அனுப்பி வைக்கவில்லையே! இதுதான் அவர்கள் முறையீடு! எனக்குக் கோபம்கூட வருகிறது! அடக்கிக் கொள்கிறேன்!

இந்த நெருக்கடியெல்லாம் தெரிந்துதான் இடைத் தேர்தலில் தயக்கம் காட்டினேன். இப்போது புரிகிறதா? ஏன் என்று!

சுவரொட்டியாயினும் - பதாகைகளாயினும் - கொடிகளாயினும் - ஆளுங்கட்சியினரைப் போல் மலை மலையாய்க் கொண்டுவந்து குவிக்க முடியாவிடினும், பொன்வைக்குமிடத்தில் பூ வைப்பது போல - ஓரளவாவது தேர்தலுக்குத் தேவைப்படுவதுதான்!

உடன்பிறப்புக்கள், உன் போன்றோர் அளிக்கும் நிதியைக் கொண்டுதான் அவ்வப்போது அந்தச் செலவுகளைக் கவனிக்க முடிகிறது!

சுவரொட்டி, பதாகைகள் இல்லாமலே - சுவர்களில் உரியோர் அனுமதி பெற்று சுண்ணம் கொண்டோ, கரித்துண்டு கொண்டோ, வசதிப்பட்டால் வண்ணம் கொண்டோ, கழகக் கண்மணிகளாம் என் உடன்பிறப்புகள், தமது கரங்கொண்டு எழுதும் உதயசூரியன் சின்னங்கள் - ஏ.எல். சுப்பிரமணியம், வே. தங்கப்பாண்டியன் - எனும் வேட்பாளர் பெயர்களைக் காணும் போதுதான், என் ஆருயிர் உடன்பிறப்புகளின் - ஆற்றல்மிகு உடன்பிறப்புகளின் தொண்டுள்ளம் கொண்ட உடன்பிறப்புகளின் - ஒளியுமிழ் விழிகள் கொண்ட அன்பு முகங்கள் என்னை நோக்கிப் புன்னகை புரிவதாகத் தோன்றுகின்றன!

பணியாற்றிய அந்தக் கரங்களுக்குப் பல்லாயிரம் முத்தங்கள் கொடுத்திடத் துடிக்கின்றன! இந்த உடன்பிறப்பின் உதடுகள்!

அராஜகம்!
அச்சுறுத்தல்!
அதிகாரவர்க்க உறுமல்!
பணம்!
பதவி!
பவிசு!
பயங்கர அடக்குமுறை!

இத்தனையையும் சந்தித்து இன்னல்மிகு வழியிலே இலட்சியப் பயணம் நடத்தும் நமக்கு, நாம் கற்க வேண்டிய ஜனநாயகக் கடமையில் நம்மால் ஒரு குறை ஏற்பட்டது என்ற நிலைவராமல் ஒவ்வொரு உடன்பிறப்பும் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?

அந்தக் கடமையைத்தான் நினைவூட்டுகிறேன். சற்றுக் கடுமை தென்பட்டாலும் கனிவு குழைத்ததே இந்த நினைவூட்டல் என்பதை நீ புரிந்து கொள்ள மாட்டாயா என்ன?

உன்னிடம் சினம் கொள்ள - அதுவும் ஒரு நொடியில் மறைந்துபோகும் சினம்கொள்ள - உடன்பிறப்பே, எனக்கு உரிமை இல்லையா என்ன?

அன்புடன்

மு.க.

17-08-1986

1446. வெற்றிப் பயிர் விளைத்திட முடியும்!

உடன்பிறப்பே,

இத்திங்கள் பதினெட்டு, பத்தொன்பது தேதிகளில் முறையே நெல்லைத் தொகுதிக்கும், அருப்புக்கோட்டைத் தொகுதிக்கும் நான் சென்றது பயனுள்ளதாக இருந்தது. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டதை மட்டும் குறிப்பிடவில்லை. மாவட்டச் செயலாளர்கள் பலரைச் சந்திக்க முடிந்தது. இவ்வளவுதான் எங்களால் முடிந்தது என்று அவர்களும், மற்றும் ஒரு சில கழக நிர்வாகிகளும் தேர்தல் நிதியை என்னிடம் வழங்கினர்.

இடைத் தேர்தலில் நிற்கவேண்டுமென்று தலைமை நிர்வாகக்குழுவில் முடிவெடுத்த போது அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்ட அந்தத் தொகையில் இன்னும் பாதியளவு கூட வந்து சேரவில்லையென்றாலும் - வந்துள்ள தொகை, தேர்தல் பிரச்சார செலவுகளுக்கோ, தலைமைக் கழகச் சார்பில் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் அச்சிடுவதற்கோ, கொடிகள், தோரணங்கள், பதாகைகள் தயாரித்து கட்டுவதற்கோ போதுமானதல்ல என்றாலும் - இந்தத் தொகையினைத் திரட்ட எடுத்துக் கொண்ட அக்கறையையும், ஆர்வத்தையும் பாராட்டத்தான் வேண்டும்.

தேர்தல் நிதி தந்திருந்தாலும் - தரஇயலாத நிலையிருந்தாலும் - உழைப்பையாவது வழங்கிட உடனடியாக முன்வர வேண்டுமென்று உன்போன்ற உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் ஏதோ வந்தோம் - இருந்தோம் - தலைவர்கள் கண்களில் பட்டுவிட்டோம் என்று மனதிருப்தியோடு கடமையை ஆற்றுகிற யாரும் உண்மையில் தொண்டு செய்தவர்களாக மாட்டார்கள்.

தொகுதியில் முக்கிய பகுதிகளில் முகாமிட்டு தேர்தல் பணியாற்றும் திறன் பெற்ற பல உடன்பிறப்புகள், நகராட்சித் தலைவர்களாக - ஒன்றியப் பெருந்தலைவர்களாக - பேரூராட்சி, ஊராட்சித் தலைவர்களாக பதவிப்பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டதால் அவர்களால் தமது நகரங்களையோ - ஒன்றியங்களையோ விட்டுவிட்டு வருவது சற்றுசிரமம்தான்! ஊரில் எவ்வளவோ பணிகள் அவர்களுக்கு! இந்தப் பதவியினால் வரும் தொல்லையே இதுதான்!

ஆனால் ஒன்று! தாங்கள் இந்தப் பொறுப்புக்கு வர, எத்தனை செயல்வீரர்கள், தொண்டர்கள், வியர்வை சிந்திப் பாடுபட்டார்கள். உறக்கம் கொள்ளாது, ஓய்வு பாராது உழைத்தார்கள் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் கழகத்தின் ஒவ்வொரு கட்டப்பணியிலும் தமது பங்கும் இருக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படும்! ஊக்கம் பிறக்கும்! உழைக்கத் தோன்றும்!

உரிமையின் காரணமாக - கண்டிப்புடன் சில வாசகங்கள் எனது கடிதத்தில் இடம் பெற்று விடுகின்றன!

எனக்காக என்றால் இவ்வளவு தூரம் எழுதமாட்டேன்! இயக்கத்துக்காக என்கிறபோது, தலைமைப் பொறுப்பில் இருக்கிற எனக்கு இது போன்ற நிலைமைகளைச் சுட்டிக்காட்டும் கடமை இருக்கிறதல்லவா?

இடைத்தேர்தல் நடைபெறும் இருதொகுதிகளிலும் தங்குமிடவசதிகள் இல்லைதான்! அருப்புக்கோட்டைத் தொகுதியிலிருந்து மதுரை வர வேண்டும் - நெல்லையிலோ தங்கும் விடுதிகள் குறைவுதான்!

ஆனால் இருதொகுதிகளிலும் தங்குவதற்கு வீடுகள், திருமண மண்டபங்கள் சிலவற்றை ஏற்பாடு செய்துள்ளார்கள். அங்கேயே இருந்து கொண்டு - வசதிகளைச் சிலநாட்களுக்கு பொருட்படுத்தாமல் - தொகுதியை விட்டு வராமல் - பணியாற்றும் பக்குவம் பெற்றவர்கள் மட்டும் போனால் போதுமானது!

மீண்டும் சொல்லுகிறேன், ஆஜர் பட்டியலில் தங்கள் பெயரை மார்க் செய்துவிட்டுப் போகிறவர்களால் எதுவும் ஆகாது!

முறைப்படுத்தப்பட்டு - அவரவர்களுக்கும் பணிகள் வகுக்கப்பட்டு - தங்களுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை, நாளைக்கு என்றோ - பிறகு என்றோ தள்ளிப் போடாமல்

செம்மையாகச் செய்து முடிக்கும் திறனும் - அதற்கேற்ற மனமும் தேவை!

இயல்புகள், கட்டாயத்தின் காரணமாக மாற்றப்படக் கூடியவை அல்ல! அவர்களாகவே சிந்தித்துப் பார்த்து பலன் விளைக்கும் காரியங்கள் கழகத்துக்கு எதுவென உணர்ந்து செயல்படுவதில் தான் சிறப்பு உள்ளது!

இரு தொகுதிகளிலும் - இப்போது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் இல்லாத குறை ஒன்றுதான்!

அதிகாரிகள் புடை சூழ, அமைச்சர்கள் ஓட்டு வேட்டையாடு கிறார்கள்! அரசு வாகனங்கள் அச்சம், நாணம் எதுவுமின்றி தேர்தல் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன!

கரன்சிகள் மழையாகப் பொழிகின்றன! வாக்குறுதிகளும் அவ்வாறே வாரி வழங்கப்படுகின்றன!

ஆலயங்களில் அடித்த கொள்ளை - அதிலும் தேக்கும் அழியாக் குன்றங்கள் பலவற்றில் அவை அழிக்கப்பட்டதால் குவிந்த பணம் - நெல்லைத் தொகுதியில் ஆளுங்கட்சிக்கு தண்ணீர்பட்ட பாடாகச் செலவிடப்படுகிறது!

அருப்புக்கோட்டையிலோ, கூட்டுறவுத் துறையில் மூட்டை மூட்டையாகச் சம்பாதித்ததில் ஒரு பகுதி, கரைத்து விடப்படுகிறது!

அதிகார வெறி - அராஜகச்சேட்டை - கோடிக்கணக்கில் செலவிடப்படும் பணம் - இத்தனையும் மீறிய நிலையில் மக்கள் சக்தியைத் திரட்டும் பணியில் நமது உடன்பிறப்புகளும் - தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புகளும் ஈடுபட்டுள்ளனர்.

அந்த மக்கள் சக்தியைப் பெருக்கிட, மேலும் உறுதியோடும் - ஊக்கத்தோடும் - ஓய்வறியா உழைப்பைத் தந்து - ஓடியாடிப் பாடுபட்டால் வெற்றிப்பயிரை விளைத்திட முடியும்!

இந்த வேண்டுகோளை உனக்கு விடுத்து, இன்று மீண்டும் புறப்படுகிறேன் - இரு தொகுதிகளுக்கும்!

அன்புடன்

மு.க.

22-08-1986

1447. முப்பெரு விழாக்கள் - முரசுகள் ஒலிக்கட்டும்!

உடன்பிறப்பே,

நம்மையெல்லாம் தலைமைதாங்கி வழி நடத்திச் சென்ற அண்ணாவின் பிறந்தநாள் - அந்த அண்ணனும், நாமும் எந்தத்தலைவரின் கீழ் அணிவகுத்துப் பொது வாழ்வைத் தொடங்கினோமோ, அந்தத் தன்மான இயக்கத்தலைவர் பெரியாரின் பிறந்தநாள் - இவ்விரு நாட்களுடன் இந்தியத் திருநாட்டின் தென்பகுதியில் தீபச்சுடராய் ஒளிவிட்டவாறு ஜனநாயகத்தைக் காத்து நிற்கும் இலட்சிய இயக்கமாம் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாள் - மூன்றும் இணைந்த முப்பெரும் விழா! கடந்த ஆண்டுகளைப் போன்றே இந்த ஆண்டும் நாடு முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரைகள் வரையில் கொண்டாடப்படுதல் வேண்டும்!

முப்பெரும்விழா எடுக்க நீ தயாராகியிருப்பாய் என்பது எனக்குத் தெரிந்தாலும்கூட, என்னிடமிருந்து ஏன் இன்னும் கடிதம் வரவில்லை என நீ, நினைத்துப்பார்த்து - ஓ! இடைத்தேர்தல் முடிவுகளால் சற்றுத் தளர்ச்சியோ? என முடிவுகட்டி, நீயும் சோர்ந்து விடக்கூடாதல்லவா?

1957-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுக்குப் பிறகு அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய மடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :-

வாட்போரில் ஈடுபட்ட இருவீரர்களில் வென்றான் ஒருவன், வீழ்ந்தான் மற்றவன் என்றால் - வென்றவன் வீரமரபு அறிந்தவனாக இருந்தால், வீழ்ந்தவனை கேலி செய்யமாட்டான். வீழ்ந்து விட்டான் இம்முறை எனினும், அவன் நல்ல திறமை பெற்றிருக்கிறான்.

மிகமிகக் கஷ்டப்பட்ட பிறகே அவனை வீழ்த்த முடிந்தது என எண்ணிக் கொள்வான். அப்படியில்லாமல் இடிஇடியெனச் சிரித்து, ஏடா! மூடா! என்னிடமா போரிடத் துணிந்தாய்? என் வாள் வீச்சுக்கு முன்பு நீ எம்மாத்திரம்? பிழைத்தோடிப் போ! இனி உன் கரத்தால் கத்தியைத் தொடாதே! என்று கடுமொழியைச் செருக்குடன், வென்றவன் பேசுகிறான் என்றால் அவன் வீரமரபு அறியாதவன் என்றே விவேகிகள் கூறுவர்.

இத்தகைய அண்ணாவின் எழுத்தோவிய வாசகங்களை இதயத்தில் என்றும் பசுமையாகப் பதித்துக் கொண்டிருப் பதால்தான் எனக்கு விரக்தியோ - சோகமோ - தமிழ்ச் சமுதாயத்துக்குத் தொண்டாற்றும் இலட்சியப் பயணத்தில் எதிர்ப்படும் தடைகள் கண்டு தயக்கமோ - என்றைக்கும் ஏற்பட்டதில்லை!

கைமாறு எதுவும் கருதிடாமல் கடமையைச் செய்கிறோம் என்ற உணர்வுடன் நடைபெறுவதே உண்மையான மக்கட்பணி எனப் பெரியார் அவர்கள் போதித்த ஆரம்பக்கல்வி, அறஞ்செய விரும்பு என்ற ஆத்திச்சூடி எப்படி மறவாமல் மனப்பாடமாகியிருக்கிறதோ அப்படியே மனதில் ஆழமாகப் பதிந்து தான் இருக்கிறது!

பத்தாண்டு காலமாக சமுதாயத் துறையில் பழுதடைந்து வருகிற பகுத்தறிவுக் கொள்கைகள் - அண்ணாவின் கொள்கை, அரசியலில் மாநில சுயாட்சியே அல்ல என்று வாதிடப்பட்டு அதனை மூடி மறைக்க நடைபெற்றச் சூதுத் திட்டங்கள் - பொருளாதாரப் புரட்சியென்பதே கம்யூனிசமும், கேப்டலிசமும், சோஷலிசமும் ஒன்றாகப் பிசையப்பட்ட அண்ணாயிசம்தான் என்ற அர்த்தமற்ற கேலிக்குரிய விளக்கங்கள் - இவற்றால் மீண்டும் பின்னோக்கிப் போய்விட்ட தமிழக எழுச்சியை - மறுபடியும் தொடக்கத்திலிருந்து முயன்று தூக்கி நிறுத்தவேண்டிய பணியல்லவா நமக்குத் தவிர்க்க முடியாததாகி விட்டது!

இப்படியொரு கற்பனை செய்து பார்! இராஜராஜசோழன் தஞ்சையில் பிரகதீஸ்வரர் ஆலயம் அமைத்தான்! ஆலயத்தின் கோபுரம் மிக உயரமாக அமைந்திட வேண்டுமென ஆசை கொண்டான்! கோபுர உச்சியில் ஒரு பெருங்கல்லை ஏற்றி அதன் மீது கலசங்கள் வைத்திடுவதென ஏற்பாடு!

அந்தப் பெருங்கல்லைக் கோபுர உச்சியில் உருட்டிக் கொண்டு போய்ச் சேர்க்க - நீண்ட தொலைவுக்கு சாரம் அமைக்க

வேண்டியிருந்தது. அப்படி உருவாக்கப்பட்ட சாரம் ஆரம்பமான இடத்துக்கு சாரப்பள்ளம் என்றே கூட பெயர் வழங்கலாயிற்று!

கோபுர உச்சியில் ஏற்றிட அந்தப் பெருங்கல்லை உருட்டிக் கொண்டு சாரத்தின் மீது போகும் போது மேலே சென்ற பெருங்கல், கட கடவென உருண்டு சுமார் ஐம்பது அடி தொலைவு கீழ்நோக்கி வந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொள்! அதற்காக, அந்தப் பெருங்கல்லைக் கோபுர உச்சியிலேற்றும் முயற்சியைக் கைவிட்டிருந்தால் கம்பீரமான கோபுரத்தையும் - கவின் மிகு கலசங்களையும் கண்டு வியந்திடும் வாய்ப்பு நமக்குக் கிட்டியிருக்குமா?

சாரத்திலேற்றிக் கொண்டிருக்கும் போது - கீழ்நோக்கி வந்து விட்ட பெருங்கல்லை, மீண்டும் உச்சிக்குக் கொண்டு செல்லும் பணி - மறுபடியும் ஒரு தொடக்கப்பணி போலவே அமைய நேரிடுகிறது!

அய்யாவும், அண்ணாவும், நம்முடைய கழகமும் மெத்தச் சிரமப்பட்டு உருவாக்கிய, எழுச்சி மிகு தமிழகம், சாரத்திலேற்றப்பட்ட பெருங்கல், சருக்கிக் கொண்டு கீழே வந்தது போல - அரசியல் - சமுதாய - பொருளாதாரத் துறையில் கீழ் நோக்கிப் போய்விட்ட காரணத்தால், இந்த பத்தாண்டு காலச் சருக்கலைச் சரிசெய்து - சமத்துவ - சமதர்ம - பகுத்தறிவுக் கொள்கைகள் உச்சியில் ஏற்றப்பட்டு இனம், மொழி, இவற்றின் உரிமைகள் காக்கும் உணர்வுக் கலசங்கள் ஒளிவிடும் காட்சியினைக் காண கடும்உழைப்பு தேவையே தவிர, அது ஒன்றும் கைகூடாமல் போய்விடுகிற காரியமல்ல!

எந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபடுகிறோமோ, அந்தச் சமுதாயமே நம்மைப் புறக்கணிக்கக்கூடும்!

கோபுர உச்சியில் ஏற்றத்தானே கல்லைக் கொண்டு போகிறார்கள்! அது உருண்டு வருகிற போது ஒரு சிலருக்குக் காயமும் விளைவித்துவிடுகிறது! அதற்காக அந்தச் சிலர் கல்லின்மீது காய்ந்து விழமுடியுமா? தாங்கள் ஆற்றிய பணிமுறைகளில் ஏதோ தவறு இருக்கிறது என்று கருதி அதனைத் திருத்திக் கொண்டு மேலும் முயற்சியில் ஈடுபடத்தானே செய்வர்!

நான் வளர்ந்த திருவாரூரில் என் பள்ளிப் பருவ காலத்தில் மணியம்மை என்ற பொதுநல சேவகி ஒருவர்! வயதானவர்! கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்! அவர் வீட்டில் ஒரு மான் வளர்த்தார்! மான்தான் வளர்த்தார், புலியல்ல - சிங்கமல்ல! அன்புடன் வளர்த்தார் அதனை! குட்டியாக இருந்த மான் கொழுகொழுவென வளர்ந்து கொம்பு நிமிர்த்திக்கொண்டு வீட்டில் உலவியது!

வழக்கம்போல் ஒருநாள் அந்த அம்மையார் சமூகப் பணிகளை ஆற்றிவிட்டு வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தார்! மனைக்குள் நுழைந்ததுதான் தாமதம், மான் அந்த மூதாட்டி மீது பாய்ந்தது! கொம்புகளால் வயிற்றைக் குத்தியது! குடல்கள் கிழிந்து வெளியே சிதறின! தன்னை வளர்த்த தாயை, மான், ஒரு நொடியில் வீழ்த்திப் பிணமாக்கி விட்டது!

மங்கையின் சாயலுக்கு மானை ஒப்பிடுவதுண்டு! மான் செய்த கொடுமை இது!

அதற்காக மானினத்தையே அழித்துவிடுவதென்றோ - அல்லது மான்களைப் புறக்கணிப்பதென்றோ - முடிவெடுப்பது மடமையன்றோ?

இடைத்தேர்தலில் நெல்லைத் தொகுதி மானூர் ஒன்றியத்தில் கழகம் குறைவான வாக்குகளைப் பெற்றதைக் கேள்விப்பட்டபோது, இந்த மான் பற்றிய உண்மை நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்ததால் இதனைக் குறிப்பிட்டேன்!

எனவே என்கடன் பணி செய்து கிடப்பதே! எனும் தூயஉள்ளத்துடன் ஒவ்வொரு உடன்பிறப்பும் உறுதி எடுத்துக்கொண்டு பயணத்தைத் தொடரவேண்டும்!

திருந்தவில்லையே இன்னும் இந்தச் சமுதாயம்! என்று ஆதங்கப்பட்டுச் சோர்வடைவதற்கு மாறாக - திருத்தும் பணியில் நாம் இன்னும் முழுத்திறமை பெறவில்லையெனக் கருதி, அத்திறமையை வளர்த்துக் கொள்ள முனைதல் வேண்டும்!

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளிலும், செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளிலும், கழகம் பிறந்த நாளிலும் - நாம் தொடங்கி நாடு முழுதும் நடத்துகிற முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் இந்த முனைப்பை நமக்கு ஏற்படுத்தட்டும்!

முப்பெரும்விழா தொடர்பாகக் கொடிகளை ஏற்றுக!
கொள்கைகளை முழக்குக!

ஏழை எளியோருக்கு உணவு வழங்கிடுக!
படிப்பகங்களைத் திறந்திடுக!

பட்டிதொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையிலே - ஆடம்பர அலங்கார விழாக்கள் அல்ல! அறிவு மணம் கமழ்கின்ற எழுச்சி விழாக்களாக - மக்கள் தெளிவு பெறுகின்ற எளிய - இனிய விழாக்களாக, முப்பெருவிழாக்கள் தொடங்கிட இன்றே ஒலிக்கட்டும் முரசுகள்!

அன்புடன்

மு.க.

05-09-1986

1448. நந்தவனம்;
நாசவனமாவது - யாராலே?

உடன்பிறப்பே,

காலைவிட்டு ஆழம்பார்த்தும் - தலையை நீட்டியும், குட்டு விழுந்தவுடன் தலையை இழுத்துக் கொண்டு தமிழகத்தில் என்றாவது ஒருநாள் தனது ஆதிக்கத்தின் முரட்டுப் பாதங்களைப் பதித்து விட வேண்டுமென்று பாரதமாதாவின் மீது சத்தியம் செய்து விட்டு பதுங்கிப் பாயும் இந்தித் திணிப்பு மாய்மாலத்தில் அதிகாரச் சிலந்தி வலையில் சிக்க மாட்டோம் என்று சூளுரைத்துச் சுடர் முகம் தூக்கி இளைஞர், மாணவர், எழுந்து விட்டனர் புயலாய்! சூறாவளியாய்! பூகம்பமாய்!

இந்தி வாரம் கொண்டாடுக என்ற ஆணைகள் தமிழகத்து வீதிகளில் காலில் மிதிபடுகின்றன!

இந்தியை வலியுறுத்திப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஏழு அம்ச அறிக்கை எரிநெருப்பில் தூக்கி எறியப்பட்டு, அதன் கருஞ்சாம்பல் காற்றில் பறக்கிறது!

தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்! எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்! என்று தன்மான முரசொலிக்கும் தமிழர்களுக்கு மத்தியில் - அந்தத் தமிழர்களுடைய நாட்டில் - ஒருமைப்பாடு பற்றிப் பேசும் ஒதியமிலார்கள் சிலர், தமிழ்ப் பெயர்ப் பலகைகளை கழற்றித் தூக்கி எறிந்தார்கள் என்றால் மத்தியில் இருந்து வந்த குழுவினர் என்ற மமதையைத் தவிர வேறென்ன காரணமாக இருக்க முடியும்!

ஒருமைப்பாட்டில் உண்மையான நம்பிக்கை வைத்துத்தான் அண்ணா காலத்திலேயே - அதாவது இருபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு

வெளிநாட்டுறவு, பாதுகாப்பு, கரன்சி போன்ற சில முக்கியமானதும் தேவையானதுமான அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு, மாநிலங்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு உட்பட்ட சுயாட்சியுடன் விளங்க வேண்டுமென்ற கொள்கையை தி.மு.க. வலியுறுத்தி வருவது மட்டுமல்ல, மாநில சுயாட்சித் தீர்மானத்தை தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதே 1974ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் நிறைவேற்றியும் இருக்கிறது!

ஆனால், மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் அமருவோர் - மாநில உணர்வுகளை மதிக்காமல், மேலும் மேலும் மாநில அதிகாரங்களை விழுங்கி வயிறு வீங்கி நிற்கிற நிலைமைதான் நாளும் தொடர்ந்தவாறு இருக்கிறது!

இந்தியாவை ஒரே நாடு என்று நிலைநாட்டப் பார்க்கிறார்களாம்! அதற்காகத்தான் இந்தியைக் கயிறாகப் பயன்படுத்தி ஒருமைப்பாடு என்ற பார்சலைக் கட்டுகிறார்களாம்!

முதலில் மொழியால் தமிழன் - அடுத்து இனத்தால் திராவிடன் - அடுத்து நாட்டினால் இந்தியன் - யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பழந்தமிழ்ச் சங்க இலக்கியப் பாடலின்படி உலகத்து மக்களுக்கெல்லாம் உறவினன் - இதுவே நமது அழுத்தம் திருத்தமான கருத்து! முழக்கம்! பலமுறை எடுத்து விளக்கப்பட்ட உண்மை!

நீ தமிழனாகவும் இருக்கலாம், ஆனால் இரண்டாம் தரக் குடிமகனாகத்தான் இருக்க வேண்டும், அதற்கு ஒரேவழி இந்தியைத் தூக்கிச் சுமப்பது தான் என்றால் - நான் தமிழனாக மட்டும் இருந்து விட்டுப்போகிறேன் போ! என்று கூறவேண்டிய தவிர்க்க முடியாதக் கட்டாயத்துக்கு இன்று தமிழர்களைப் பிடரியைப் பிடித்துத் தள்ளுபவர்கள் யார்?

சிறிதும் ஒருமைப்பாடு காக்க வேண்டுமென்ற சிந்தனையிருக்குமேயானால் - வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்ற நிலையை நீர்மேல் எழுத்தாக்க முனைவரோ மத்தியில் இருப்போர்?

பல மலர்கள் - பல மணமுள்ள மலர்கள் - பல வண்ண முள்ள மலர்கள் இருப்பதுதான் நந்தவனம்!

ஒருவகை மணமுள்ள - ஒருவித நிறமுள்ள மலரே தான் இருக்க வேண்டுமென்று, மலர்ச் செடிகள், கொடிகள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தி ஒரே பெருங்குழியில் நட்டு வளர்த்திட முயன்றால் அது நந்தவனமாக இருக்காது! நாசவனமாகத்தான் மாறும்!

நாடாளுகிறவர்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன!

முதல்வேலை, வேலையில்லாமல் சாலையோரத்திலே திரிகிறார்களே - மக்கள் தொகையில் பெரும்பகுதியினர், அவர்களைக் கவனிக்கலாம்!

சாதிபேதச் சழக்கால் - மதவாத பேதங்களால் - அல்லலுறும் சமுதாயத்தில் சமத்துவச் சுடர் விளக்கை ஏற்றி வைக்கின்றப் பணியை வாய்ச்சொல் அருளி நடத்துவதற்குப் பதிலாக செயல் மூலம் நடத்திட முன் வரலாம்!

பாதிக்கு மேற்பட்ட மக்கள் தொகையினர், வறுமைக் கோட்டுக்குக் கீழே உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடைப்பிணங்களாக நகர்வலம் - ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அரவணைக்க நடவடிக்கைகளை ஆராயலாம்! அவசரமாகச் செயல்படலாம்!

இந்தி பேசும் மாநிலங்களான உத்திரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் போன்றவற்றிலேயே இந்தி படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்போர் தொகை புற்றீசல் போல புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது, கூரையேறிக் குருவி பிடிக்க முடியாதவன், வானத்தைக்கீறி வழிகாட்டப் போகிறேன் என்று புளுகுவதைப் போல -

தமிழர்களே! தமிழர்களே! இந்தி படியுங்கள்!
வேலை கிடைக்கும்!

என்று இந்தி வெறியர்களும், அந்த வெறியர்களுக்கு வெண்சாமரம் வீசும் வீணர்களும் புறப்படுகிறார்கள் என்றால் - பளபளப்பான கிண்ணத்தில் ஊற்றித்தரப்படும் அந்த பாஷாணத்தைப் பருகிடத் தமிழர்கள் முன்வர வேண்டுமோ?

தமிழன் ஏமாந்தகாலத்தில் ஏற்றங் கொண்டோன் புலிவேஷம் போடுகின்றானே! இன்னமுமா தமிழன், தனது தொடையில் கயிறு திரிப்பதைச் சகித்துக்கொள்வான்?

பொறுத்தது போதும்! பொங்கி எழுக! என்ற போர்க்குரல் - இன்று மீண்டும் கேட்கிறது!

கிளம்பிற்றுக்காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்

என்ற புரட்சிக்கவிஞரின் எழுச்சிக் கீதம் எங்கணும் கேட்கிறது!

இந்தியாவின் அடிமை விலங்கை ஒடிக்கத் துடித்து நின்றது, இந்திக்கு எங்களை அடிமையாக்கத்தான் என்றால் - இந்தியாவுக்குள் இன்னொரு விடுதலைப் போராட்டத்தை வெற்றிலை பாக்கு வைத்து இந்தி வெறியர்கள் அழைக்கிறார்கள் என்று தான் பொருள்!

தேவையற்றதும் - தேசத்தைப் பலவீனமாக்குவதும் - உண்மையான தேசிய உணர்வுக்கு உலை வைப்பதுமான - தீயகாரியத்தைச் செய்தே தீருவோம், திரும்பப்பெற மாட்டோம் எனத் திமிர்வாதம் செய்வது நாட்டு ஒற்றுமையில் நாட்டம் கொண்டோரின் செயலாக இருக்கமுடியாது!

புயல் வீசத் தொடங்கி விட்டது, தமிழ்நாட்டில்!

இந்தப் புயல் வலுக்கு முன்பு, புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பு - மத்தியில் ஆளுகின்ற ராஜீவ் காந்திக்கு உரியது!

பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் போகிறாரா? அல்லது பொல்லாத இந்தித் திணிப்பை உடனடியாகக் கைவிடப் போகிறாரா?

புயல் வீசத் தொடங்கி விட்டது! அது வலுக்கும் முன்பு வளைந்து கொடுக்க வேண்டும்!

இல்லையேல் இந்தி ஆதிக்க சக்தி உடைந்து நொறுங்கிவிடும். அத்துடன் இந்தியாவின் ஒருமைப்பாடு கூட!

இந்திய ஒருமைப்பாட்டில் கழகத்துக்குள்ள நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நல்லெண்ண எச்சரிக்கை!

அன்புடன்

மு.க.

19-09-1986

1449. நமது குருதி கொண்டே எழுதிடுவோம்; எழுக இன்றே!

உடன்பிறப்பே,

இந்தி ஆதிக்க எதிர்ப்புக்குரல் தமிழகத்தில் அங்கிங் கெனாதபடி எங்கெங்கும்!

தங்களின் எதிர்காலமும், தமிழ்நாட்டின் எதிர்காலமும் பாதிக்கப்பட்டு, தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகி விட நேரிடும் என்ற நியாயமான அச்சத்தின் காரணமாக - மாணவர்கள் போர் முரசு கொட்டுகின்றனர்!

இந்தி வார அறிவிப்பும் - அதனைத் தொடர்ந்து இந்தி ஆதிக்கத்தைப் பரப்பவும், பலப்படுத்தவும் சில கட்டளைகளும் வெளிவந்தவுடனேயே, அதனால் நேர இருக்கும் ஆபத்தையும் - தமிழகம் எரிமலையாக மாறும் என்பதையும் மத்திய அரசுக்கு மணியடித்துத் தெரிவித்தவர்கள் தமிழ்நாட்டிலேயுள்ள காங்கிரஸ் தலைவர்கள்தான்!

ஆனால் அவர்கள், தாங்கள் எடுத்த நிலையில் உறுதியாக நிற்கமுடியாமல் - டெல்லியின் நெற்றிக்கண் பார்வை பட்டு அடங்கிப் போய்விட்டதுமல்லாமல், இந்தித் திணிப்பு உத்திரவை வாபஸ் வாங்க வேண்டுமென்று முழக்கமிடுகிறவர்கள் மீதும் காய்ந்து விழுகிறார்கள்! கடுஞ்சொல் வீசுகிறார்கள்! எமர்ஜென்சி கொண்டு வந்து இந்தியைத் திணிப்போம் என்று அறைகூவல் விடுகிறார்கள்! - எமர்ஜென்சியை எதிர்த்து நெருப்பாற்றில் நீச்சலடித்தவர்கள் நாம் என்பதை அவர்கள் அறிந்தும் அறியாதவர்கள் போலப் பேசுகிறார்கள்!

அவர்கள்தான் அப்படியென்றால், இங்கேயிருக்கிற எம்.ஜி.ஆர். அவர்களின் அரசோ - இந்தியை எதிர்ப்பதற்குத் தங்களுக்கு மட்டுமே உரிமையென்பதுபோல, ஐம்பதாண்டு காலமாக இந்தி

எதிர்ப்புக் களத்தில் நிற்கிற திராவிடர் இயக்கத்தை இழித்தும் பழித்தும் பேசுகிற வேலையில் ஈடுபட்டுள்ளது.

கோவையில் என்னை நிருபர்கள் சந்தித்தபோது மாநில அமைச்சர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து பேசுகிறார்கள். ஆனால் தூத்துக்குடியில் போலீசார், இந்தி எதிர்ப்பு மாணவர்களை சுடுமணலில் தள்ளி உருட்டியிருக்கிறார்களே! என்று கேட்டனர். அதற்கு நான், அமைச்சர்கள் பேசுவதற்கும், போலீசார் செயலுக்கும் பெரிய முரண்பாடு இருக்கிறது என்று பதில் அளித்தேன்.

இதைப் பொறுமையுடன் படித்து - சிந்தித்து கோவை நிருபர்கள் தெரிவித்தது போலத் தூத்துக்குடியில் மாணவர்களைப் போலீசார் சுடுமணலில் உருட்டியது உண்மைதானா என்பதை அறிந்து - உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதற்குப் பதிலாக அமைச்சர் அரங்கநாயகம் இந்தி எதிர்ப்பை தி.மு.க. அரசியலுக்கு ஆதாயமாக்கிக் கொள்ளப் பார்க்கிறது என்று அங்கலாய்த்திருக்கிறார்.

அரங்கநாயகம் கூறியிருப்பது போல எந்தவொரு கிளர்ச்சியிலும் சட்டம் ஒழுங்கு அமைதியைக் காத்திடக் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத்தான் நேரிடும்! எடுக்கத்தான் வேண்டும்!

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதாகக் கூறிக் கொண்டு - மாணவ மணிகளைச் சுடுமணலில் தள்ளி உருட்டியெடுப்பதும், அவர்கள் ஏற்றியக் கருப்புக் கொடிகளை கிழித்தெறிவதும், என்ன நியாயம்? போலீசாரே வன்முறையைத் தூண்டிவிடக் காரணமாக இருந்து விடக்கூடாது என்பது கூடவா கல்வி அமைச்சர் அரங்கநாயகத்துக்குப் புரியவில்லை!

இந்தி எதிர்ப்பில் தி.மு.கழகம், அரசியல் ஆதாயம் தேடப்பார்க்கிறதாம்! அமைச்சர் சொல்லுகிறார்!

இந்தி எதிர்ப்புப் போரில் பெரியார் களம்புகுந்த போதும் - அண்ணா படைத் தலைமையேற்ற போதும் - இராஜாஜி இந்தி ஆதிக்கத்திற்கு மறுப்புக்குரல் கொடுத்த போதும் - அன்றிருந்த அமைச்சர் பெருமக்கள் இப்படித்தான் அரசியல் ஆதாயம் என்ற அஸ்திரத்தை விட்டுப் பார்த்தார்கள்! அரங்கநாயகமும் இப்போது அமைச்சரல்லவா? அதனால், தி.மு.க. இந்தியை எதிர்ப்பது அரசியல் ஆதாயத்துக்கு என்கிறார்!

தி.மு.க.வும், கருணாநிதியும் இந்தியை எதிர்க்கவில்லை. அ.தி.மு.க. அரசை எதிர்ப்பதே அதன் நோக்கம் என்று ஒரு புதிய கண்டுபிடிப்பையும் அரங்கநாயகம் வெளியிட்டுள்ளார்.

பொள்ளாச்சி பொதுக் கூட்டத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு நாளையொட்டி நான் பேசியதை முழுமையாக அவர் படித்துப் பார்த்தாலோ - அல்லது ஒலிப்பதிவு நாடா வாயிலாகக் கேட்டுப் பார்த்தாலோ - இவ்வண்ணம் அவசரமும், ஆத்திரமும் நிறைந்ததும், அறிவு முதிர்ச்சியற்றதுமான பதில்களைத் திருச்சி நிருபர்களுக்கு மத்தியில் கூறியிருக்கமாட்டார்!

தமிழ்நாட்டில் இத்தகைய அமைச்சர்களின் பேச்சுக்களுக்கும் - பேட்டிகளுக்கும் பிறகு தான் தி.மு.கழகம், இவர்களைப் பற்றி இந்திப் பிரச்சினையில் இணைத்துப் பேசவேண்டிய சூழலே ஏற்படுகிறது.

இதோ! அ.தி.மு.க. அமைச்சரவையில் அவர்களுக்குள்ளேயே எத்தனை முரண்பாடுகள்!

இந்தி வார அறிக்கையை இந்த மேடையிலேயே எரித்து சாம்பலாக்கி, காலில் போட்டு மிதிப்பேன் என்கிறார் அமைச்சர் காளிமுத்து!

இந்தித் திணிப்பைக் கண்டித்து அ.தி.மு.க. போராட்டம் நடத்தாது! என்று திட்டவட்டமாக கூறுகிறார் அமைச்சர் அரங்கநாயகம்!

மத்திய அமைச்சர் பூட்டாசிங்கின் அறிக்கை தெளிவாக வந்துவிட்டது. எனவே, இந்தி எதிர்ப்புப் போராட்டம் இனி தொடர வேண்டிய அவசியமில்லை என்று சேலத்தில் அமைச்சர் வீரப்பன் நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கிறார்.

அதே நாளில் திருச்சியில் நிருபர்களை சந்தித்த அமைச்சர் பொன்னையன், பூட்டாசிங் அளித்துள்ள உறுதிமொழியில் அர்த்தமேயில்லையென்றும், மத்திய செய்தித்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கை வாபஸ் பெறப்படாமல் பூட்டாசிங் அவர்கள் அறிக்கை கொடுப்பதில் பயன் இல்லையென்றும் கூறியிருக்கிறார்.

இந்த இரண்டு செய்தியும் ஏடுகளில் ஒரே பக்கத்தில் அருகருகே வெளியிடப்பட்டுள்ளன!

ஓட்டையை அடைக்க ஒருவரேபோதும்! அது போல இந்தித் திணிப்பை தடுக்க முதல்வர் எம்.ஜி.ஆர். மட்டுமே போதும். எனவே, மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டாம் என்று அமைச்சர் சவுந்தரராசன் அறிவுரை கூறியுள்ளார் கமுதியில் என்று பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது!

ஆனால் அடுத்தநாள் இராமநாதபுரத்தில் பேசிய அமைச்சர் காளிமுத்து, இந்தி என்ற ஏணியைப் பாடையாக மாற்றிக் காட்டவேண்டிய பொறுப்பு தமிழ் மாணவர்களுக்கு உண்டு! இந்தியைத் தொடர்ந்து திணித்தால் மீண்டும் திராவிடநாடு கோரிக்கை வெடிக்கும். பூட்டாசிங் அறிக்கை நோயைவிட வைத்தியம் பயங்கரமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது எனத் தீப்பொறி கிளம்ப கர்ஜித்துள்ளார்.

இந்தியில் மட்டுமல்ல, இலங்கைப் பிரச்சினையில் கூட இப்படித்தான் இந்த அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துகளை உதிர்த்து வந்தனர்.

தமிழ்ஈழம் என்பதை நாங்கள் ஆதரிக்கவில்லையென்று ஐ.நா. மன்றக் குழுவொன்றின் கூட்டத்தில் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் திட்டவட்டமாகக் கூறினார்! முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் தமிழ் ஈழக் கொள்கையை ஆதரிக்க இயலாது என்றே தெரிவித்தார்! அமைச்சர் வீரப்பனும் அதையேதான் மேடைகளில் முழங்கினார்! ஆனால் அமைச்சர் காளிமுத்துவோ, தமிழ்ஈழத்தை எதிர்ப்பவர்கள் தமிழனுக்குப் பிறந்தவர்களேயல்ல என்று மேடைகளில் பேசியது மட்டுமல்ல - அந்தப்பேச்சை நூலாகவும் வெளியிட்டார்! அந்த நூலின் அந்தப்பகுதியை நான் மேலவையிலேயே ஒருமுறை படித்துக் காண்பித்திருக்கிறேன்!

எனவே, உடன்பிறப்பே! இவர்கள் எப்போதும் இப்படித்தான்! அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு என்பார்கள். ஆனால், எந்தப் பிரச்சினையிலும் முரண்பாடான கருத்துகளையே ஒருவருக்கொருவர் வெளியிடுவார்கள்!

அவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை - நமது கவலையெல்லாம் தமிழ்மகன், இரண்டாம் தரக்குடிமகனாக ஆகிவிடாமல் தடுத்திட நமது வாழ்நாளில் நாம் ஆற்றிட வேண்டிய பணி குறித்தும் - அமைத்திட வேண்டிய களம் குறித்தும்தான் இருந்திடல் வேண்டும்!

அதுபற்றிக் கலந்துரையாடி முடிவு எடுத்திடவே, கழகத்தின் செயற்குழு செப்டம்பர் 27-ல் கூடுகிறது!

செந்தமிழுக்கு ஒரு தீமை வந்த பின்னும்

இந்தத்தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?

எனக்கேட்ட புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளை தமிழ்நாட்டு மண்ணில் நமது குருதி கொண்டே எழுதிடுவோம்! எழுந்திடுக! இன்றே எழுந்திடுக!

அன்புடன்

மு.க.

24-09-1986

1450. கொள்ளையோ கொள்ளை; கோடி கோடியாய் கொள்ளை!

உடன்பிறப்பே,

இன்னும் சிலகாலம் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி, தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்றால் தமிழ்நாடே கடற்கோள் எதுவும் ஏற்படாமல் - பூகம்பம் எதுவும் தோன்றாமல் - எரிமலைகள் பொங்கி வழியாமல் - இவற்றையெல்லாம் விட மிகக் கொடுமையான லஞ்ச ஊழலில் மூழ்கிப் போய்விடும் என்பதைத் திண்ணமாகச் சொல்லமுடியும்.

மண்சுவரைக் கரையான் புற்றெடுத்து அரித்துப் பாழாக்குவது போல எதைத் தொட்டாலும் லஞ்சம்! லஞ்சம்! ஊழல்! ஊழல்!

கப்பல் போரத்திலே அடித்த கொள்ளை கணக்கிலடங்காது!

சாராய பாட்லிங் விலை நிர்ணயித்துக் கொடுத்ததிலே ஆண்டுதோறும் இருபத்திநான்கு கோடி ரூபாய் சாராய அதிபர்களிடம் லஞ்சம்!

ஸ்டீல் ரீரோலிங் மில் அதிபர்களுக்கு பல கோடி ரூபாய் வரிவஜா செய்துகொடுத்து அதில் சில கோடி ரூபாய் லஞ்சம்!

ஆரண்யங்களில் சந்தனமரங்கள் உட்பட சகல மரங்களும் இல்லை!

ஆலயங்களிலோ ஆபரணங்கள், சிலைகள் அனுதினமும் கொள்ளை!

கூட்டுறவுத் துறையிலோ கொள்ளையோ கொள்ளை!

வாரியங்கள் வேறு; முப்பதுக்குமேல் - அனைத்தும் தங்கள் வீட்டுக் காரியங்களையே கவனித்துக் கொண்டு குவிக்கின்றன!

அண்மையில் நடைபெற்ற அநியாயங்கள் சிலவற்றை ஒன்றன்பின் ஒன்றாக உனக்கும் தெரிவித்து, உறக்கத்திலிருந்து

இன்னும் எழ மறுக்கிற அப்பாவித் தமிழர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதோ... ஒரு செய்தி! இப்படியும் நடக்குமா என்று மூக்கிலே விரலைவைத்து வியப்படையக்கூடிய செய்தி!

தி.மு.க. ஆட்சியில் காரைக்குடியில் ஒரு கோடியே முப்பது லட்ச ரூபாய் மூலதனத்தில் தமிழ்நாடு கெமிகல் பிளாண்ட் என்ற பெயரில் கூட்டுத் துறையில் Joint Sector ஒரு தொழில் தொடங்கப்பட்டது.

அது இயக்கத் தொடங்கிய காலகட்டத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது.

1977 இல் எம்.ஜி.ஆர். ஆட்சி வந்தது! வந்ததும் வராததுமாக அந்த கெமிகல் தொழிற்சாலையில் கூட்டாளியாக இருந்த திரு. அனந்தசாமி அவர்கள் மீது வேண்டுமென்றே குற்றம் சுமத்தி அவரைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தார் எம்.ஜி.ஆர்.!

திரு. அனந்தசாமி அவர்கள் இந்திரா காங்கிரஸ்காரர். இந்திரா காந்தி அம்மையாருக்கு மிக வேண்டியவரும்கூட! ஜனதா ஆட்சி மத்தியில் இருந்த காரணத்தால் - தேர்தல் நேரத்தில் மொரார்ஜி தேசாயை லஞ்சம் வாங்கியவர் என்று குறிப்பிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள் மொரார்ஜி பிரதமரானதும் அதற்காக மன்னிப்புக் கேட்டு ஜனதா ஆட்சிக்கு நண்பராகிவிட்ட நேரமது!

அவையிலேயே திரு. அனந்தசாமி மீது பயங்கர மோசடிக் குற்றச்சாட்டுகள் இருப்பதால் அவர் மீது வழக்கு போடப்பட்டிருப்பதாகவும் - முதலாளிகளை அடக்கி ஒடுக்கும் புரட்சித் தலைவர் தன்னைத் தவிர யாருமில்லை என்பது போலவும் - வீராவேசமாகப் பேசினார். பொதுக்கூட்டத்திலும் பேசினார்!

1977க்குப் பிறகு 1980 வந்தது! அன்னை இந்திரா மீண்டும் பிரதமரானார்! திரு.அனந்தசாமி அவர்கள் மீது போட்ட வழக்கை எம்.ஜி.ஆர். அரசு, வாபஸ் வாங்கிக்கொண்டது! அனந்தசாமி அவர்களுக்குச் சேரவேண்டிய பணமும் கொடுக்கப்பட்டு - சொல்லப்போனால் ஒரு லட்ச ரூபாய் அதிகமாகவே கொடுக்கப்பட்டு, அந்தத் தமிழ்நாடு கெமிகல் பிராஜக்ட்டை சுமார் 53 சதவிகிதம் ஷேர் - அதாவது ஒரு கோடியே பத்துலட்ச ரூபாய்க்கு அரசு சார்புடைய டிட்கோ நிறுவனம் நிர்வகிக்கத் தொடங்கியது.

இப்போதைய அந்த தொழிற்சாலையின் மூலதனம் ஒரு கோடியே தொண்ணூறு லட்ச ரூபாய்!

53 சதவிகித பங்கு எடுத்துக்கொண்டு நிர்வகிக்கும் டிட்கோவுக்கு ஆண்டு ஒன்றுக்கு இப்போது கிடைத்து வருகிற லாபம் ஒரு கோடி ரூபாய்!

தமிழ்நாட்டிலேயே இப்போதுள்ள அரசுச் சார்புடைய நிறுவனங்களின் தொழில்களைவிட அதிக லாபகரமானது இந்த கெமிகல் தொழிற்சாலை தான்!

கழக ஆட்சியில் எட்டு கோடி ரூபாய் அளவில் தொடங்கப்பட்டது இந்தத் திட்டம்! இப்போது தொடங்குவதெனில் முப்பது கோடி ரூபாய் ஆகும்!

அரசுச் சார்புடைய டிட்கோ நிறுவனத்துக்கு - 1 கோடியே 10 லட்சரூபாய் மதிப்புள்ள பங்குகளுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் தருகிற இந்த தொழிற்சாலையை தனியாருக்கு விற்று விட எம்.ஜி.ஆர். அரசு முடிவு செய்து - பினாமியாக சிலரை ஏற்பாடு செய்து, அவர்களையெல்லாம் பத்து ரூபாய் பங்கினை முப்பது ரூபாய்க்கும், நாற்பது ரூபாய்க்கும் கேட்கச் செய்து - நாற்பத்திஐந்து ரூபாய்க்கு தனியார் ஒருவருக்கு விற்பதற்கு உத்திரவிடப்பட்டுள்ளதாகச் செய்தி!

பத்து ரூபாய் பங்கின் மார்க்கெட் மதிப்பு எண்பது ரூபாய் அல்லது தொண்ணூறு ரூபாய் என்று இருக்கிற இந்தச் சூழலில் - அரசு சார்புடைய நிறுவனமான டிட்கோ - தனது ஒரு லட்சத்து பத்தாயிரம் ஷேர்களையும் அந்தத் தனியாருக்கு நான்கு கோடியே சொச்சம் ரூபாய்க்கு விற்கிறது!

மார்க்கெட்டில் உள்ள ஷேர் மதிப்பின்படி விற்பதாக இருந்தால், ஏறத்தாழ பத்துகோடி ரூபாய் வரையில் கிடைத்திருக்கும்.

பத்துகோடி ரூபாய்க்கு பதிலாக தனியாருக்கு நாலு கோடிக்கு தந்திடுவதால் - அந்தத் தனியார், தோட்டத்துக்குக் காணிக்கையாக சுமார் இரண்டு கோடியை செலுத்துகிறார்.

வாங்கியது நாலு கோடிக்கு! கறைபடாத கரத்துக்கு இரண்டு கோடி காணிக்கை! ஆக மொத்தம் ஆறு கோடி போனால் - அந்தத் தனியாருக்கு நாலு கோடி எடுத்த எடுப்பில் ஆதாயம்!

அதுமட்டுமல்ல! அந்த தொழில் திட்டத்தோடு இவர்கள் ஆட்சியில்! மெக்னீஷீயம் மெட்டல் பிராஜக்ட் என்ற ஒரு தொழிலையும் தமிழ்நாடு கெமிகல் தொழிற்சாலையுடன் இணைத்துத் தொடங்கினார்கள். அந்தத் திட்டம் பாதியில் நிற்கிறது! அது லாபகரமானதும் அல்ல!

தனியாரிடம் விற்கும் போது அந்தத் திட்டத்தையும் இணைத்து விற்காமல் - லாபம் வராமல் பாதியில் நிற்கிற திட்டத்தை இவர்கள் வைத்துக்கொண்டு - லாபம் வரக்கூடிய தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலையை பாதி விலைக்கும் குறைவாக ஒரு தனி நபருக்கு விற்கிறார்கள் என்றால் - இந்தக் கொள்ளையை எங்கே போய்ச் சொல்வது?

தனியார்துறைத் தொழில்களைப் பொதுத்துறையாக ஆக்குகிற சமதர்மம் பேசப்படுகிற இந்நாளில் - அரசு சார்புடைய நிறுவனத்துக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய தொழிற்சாலையை, தனியார் ஒருவருக்கு, அதுவும் மிகக்குறைந்த விலையில் கொடுத்து அந்த பேரத்தில் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு லஞ்சம் பெற்றுக்கொள்கிற ஒருவரைத்தான் புத்தர் என்றும், புனிதர் என்றும் இன்னமும் போற்றிக் கொண்டிருக்கிற பாமரரும், இவர்களது செயலைக் கண்டும் காணாமல் மறைமுகமாக ஊக்கப்படுத்துகிற பரிசுத்தவான்களும் மிஸ்டர் கிளீன் இந்த நாட்டில் இருக்கிறார்கள்!

அண்மையில் நிகழும் அநியாயங்களில் இது ஒன்று! இன்னும் வரும் அடுத்தடுத்து!

அன்புடன்

மு.க.

02-10-1986

1451. அந்நாளே இந்நாள்; இந்நாளே அந்நாள்!

உடன்பிறப்பே,

இதோ நமது அண்ணன் பேசுகிறார், கேள்! இது தமிழ் உணர்வு அற்றவர்களுக்குத் தேள்! நமக்கெல்லாம் தேன்! தேன்!

எங்கே பேசுகிறார் தெரியுமா? நீதி மன்றத்தில் உடன்பிறப்பே! நீதிமன்றத்தில்!

ஆம், தண்டனை நிச்சயம் கிடைக்கப் போகிறது என்று தெரிந்துதான் பேசுகிறார்!

என்ன தண்டனை என்பது தெரிந்தே அந்தக் காரியத்தில் ஈடுபட்ட காஞ்சித் தலைவனின் வீரஉரை - விளக்க உரை - இனமானப் பேருரை - மொழிகாக்கும் தீர உரை! நம் செவிகளுக்குப் போர் முரசமாய், சிந்தைக்கு அமுதமாய் அல்லவா இருக்கிறது! இன்றைக்கும் அப்படித்தானே இருக்கிறது!

அந்த வெண்கலநாதம் ஒலிக்கத் தொடங்கி விட்டது, கேட்போம் வா!

நடுவர் அவர்களே! இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது பல பெரியவர்கள் தெரிவித்ததுபோல அநீதியானது. இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதியை அவமதிப்புக்கு உள்ளாக்குவது, அதிலும் ஈராயிரம் ஆண்டுகளாக ஒரு உயர் தனிச் செம்மொழிக்கு உரியவர்கள் வாழும் தமிழ் நாட்டுக்குப் பெரிய அவமதிப்பு என்று நாங்கள் மனதார நம்புகிறோம்.

மொழிகளிலே எம்மொழி, மற்ற எந்த மொழியைவிட சிறப்புடையது என்று ஒப்பிட்டு உண்மை உணர்வது ஒருபுறமிருக்க, ஒருபகுதி மக்களுக்கு மட்டுமே தாய்மொழியாக உள்ள ஒரு மொழியை, இந்தியாவின் எல்லா பகுதி மக்களுக்கும் சேர்த்து ஒரே ஆட்சிமொழியாக ஆக்கி விடுவது கொடுங்கோன்மை என்றும், அதன் விளைவாக, இந்தியாவின் ஒருபகுதிக்கு நிரந்தரமான சலுகையும், உயர்வும் ஏற்பட்டு, மற்ற பகுதிகள்

இருட்டறையில் தள்ளப்பட்டுப் போய்விடும் என்றும் நாங்கள் திட்டவட்டமாக எண்ணுகிறோம். முழுவளர்ச்சி பெறாததும், மற்ற தேசிய மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போதும் தனிச்சலுகை பெறுவதற்கு எந்தவிதத் தகுதியும் பெற்றிராததுமாகிய இந்தியை ஆட்சி மொழியாக்குவது தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாழ்படுத்திவிடும் என்றும், சான்றோர் பலரும் இதனைத் தான் இந்திமொழி ஏகாதிபத்தியம் என்றும் இடித்துரைத்துள்ளனர்.

மொழி வல்லுநர்கள், சட்ட நுணுக்கம் கற்ற விற்பன்னர்கள், புகழ்மிக்க ஆட்சிமன்ற உறுப்பினர்கள், கற்றறிவாளர்களாக உள்ள அரசியல் தலைவர்கள், அறவழி அரசு நடத்தும் பேரறிவாளர்கள், நிர்வாகத் துறையில் நிரம்பப் பயிற்சி பெற்றவர்கள் எனும் இத்தகு திறத்தினரெல்லாம், ஆளுங்கட்சி மொழி விஷயமாக மேற்கொள்ளும் அநீதியான போக்கைக் கைவிட்டு விடவேண்டும் என்று அறிவுறுத்திப் பார்த்தார்கள். பல மாநாடுகளிலும், ஆய்வாளர்கள் அரங்கிலும், இந்தியை ஒரே ஆட்சி மொழியாக ஆக்குவது என்பது நினைத்துப் பார்க்கவே முடியாத கேடு என்பதையும், நடைமுறைக்கு ஒத்துவராது என்பதையும் அதன் விளைவாக இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதிகளில் இந்தத் தலைமுறைக்கும், எதிர்காலத் தலைமுறைக்கும் அளவிட முடியாத கேடு ஏற்படும் என்பதையும் எடுத்துக்காட்டப்பட்டது.

இத்தகைய முறையீடுகள் யாவற்றுக்கும் ஆட்சியிலிருப் போர் கேளாக் காதினராய், வாதங்களை துச்சமென்று ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஆளும்கட்சியைச் சார்ந்த பேச்சு வல்லுநர்களான சில பாராளுமன்ற உறுப்பினர்களின் கனிவுரைகூட கேட்பாரற்றதாகிவிட்டது.

மற்றவர் கருத்தறிந்து மதிப்பளிப்பது, பரிவு காட்டுவது, சிறுபான்மையர் உரிமைகளுக்கு மதிப்பளிப்பது என்ற தன்மைகள் மக்களாட்சி முறை வெற்றி நடைபோடவும், அறநெறி நிற்கவும் தேவைப்படும் பண்புகளாகும்.

ஆளுங் கட்சியின் முரட்டுப் பிடிவாதம், இந்த பண்புகளை அவர்கள் மதிக்கவில்லை, மேற்கொள்ள விரும்பவில்லை என்பதை மெய்ப்பிக்கிறது. அறநெறி அரசு நடத்தும் பெருநிலைக்கு உரியோர் மேற்கொள்ள வேண்டிய பண்புடன், இந்திய முதல் அமைச்சர் பண்டித நேரு அவர்கள், பாராளுமன்றத்தில் பலமுறையும், சீனப்

பகைவர்கள் நுழைந்த காலையும், கொடுத்த வாக்குறுதியும் பலனற்று, பொருளற்றுப் போய்விட்டதுடன் - எவரிடம் இருந்து அந்த ஏற்றமிகு வாக்குறுதி பிறந்ததோ அவராலேயே கைவிடப்பட்ட கொடுமையும் நேரிட்டு விட்டது.

அவருடைய வாக்குறுதிதான் கருமேகத்துக்கிடையே காணப்படும் மின் ஒளிபோல் இருந்து வந்தது. நாளாக ஆக, மின் ஒளி மறைந்து போய் விட்டது. கருமேகங்கள் மேலும் மிரட்டும் நிலை ஏற்பட்டு விட்டிருக்கிறது.

கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடிய விதத்திலும், இந்தி பேசாத மக்கள் மீது அவர்களது உரிமை, உள்ளுணர்வு, சிந்தனை ஆகியவற்றைப் பாழாக்கக் கூடிய முறையிலும் இந்தியைத் திணிக்க பயங்கர முயற்சிவெடித்து, வெடித்து வெளிக்கிளம்பும் சூழ்நிலை உள்ளது.

சட்டத்தின் பிடியில் எங்களை ஒப்படைக்கு முன்பு, அருள்கூர்ந்து தாங்கள் எமது செயலுக்குப் பின்னணியாக அமைந்துள்ள சூழ்நிலை முழுவதையும் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மக்களாட்சி முறையில் ஆளவந்தார்கள் புகுத்தும் அநீதியான திட்டங்களை விழிப்புணர்ச்சியுடன் கண்டறிந்து, உள்ள உரத்துடன் எதிர்க்க ஆற்றல் பெற்ற எதிர்ப்புச்சக்தி இல்லாது போய் விடுமானால் மக்களாட்சிமுறை கேலிக்கூத்தாகி, இறுதியில் கொடுங்கோன்மையிலும் கேடுகெட்டதாகிப் போகும்.

இந்தத் தூய நோக்குடனேயே திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு அறப்போர் துவங்கத் திட்டமிட்டது - தக்கக் காரணம் இருப்பதால்தான் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவதை, அறப்போரில் ஒரு பகுதியாக்கிக் கொண்டது. எத்தனையோ சட்டங்கள் உள்ளன. சட்டங்களை மீறுவது என்பதிலேயும் எத்தனையோ வகைகள் உள்ளன. ஏதாகிலும் ஒரு சட்டத்தை நான் மீறுவதன் மூலம், பொதுமக்களுடைய உயிருக்கோ, உரிமைக்கோ, வாழ்வுக்கோ, அமைதிக்கோ, ஒழுக்கத்துக்கோ, அழிவோ, சிதைவோ, கேடோ, குலைவோ, அதிர்ச்சியோ, தளர்ச்சியோ ஏற்படுமானால், நான் சட்டத்தை மீறுவதற்கு வெட்கப்படுவேன்; வேதனைப்படுவேன். ஆனால், சட்டத்திற்கு உட்பட்டதோ, அல்லவோ நான் ஒரு தூய

நோக்கத்துக்காக ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம், மக்கள் தொண்டு எனும் மாண்புமிகு பணிபுரிய இயலும் என்று மனதார நம்பிச் செயலில் ஈடுபடும்போது, குற்றவாளி அல்ல என்று கூறிக் கொள்ள உரிமை பெறுகிறேன்.

தமிழக மக்களுக்கு, மொழித்துறையில் வர இருக்கும் ஆபத்து மிகப்பெரும் அளவினது. எனவே, இதனை நீக்க எவர் செய்திடும் தொண்டும் போதுமானது என்று திருப்திப்படுவதற்கில்லை. தமிழகத்திற்கு வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்துள்ள அனைவரும், தமது மனச்சாட்சியின்படி செயல்பட்டாக வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம், எப்போதும் தன் கொள்கைகள், நேரான நடவடிக்கைகள், திட்டங்கள் செயல்முறைகள் ஆகிய அனைத்தையும் வெளிப்படையாக மக்கள் முன்வைத்து வருவதை முறையாக கொண்டிருக்கிறது.

அதனிடம் மறைவில் கூடி திட்டம் வகுப்பது, திட்டத்தை மூடி மறைப்பது போன்ற பழக்கம் கிடையாது.

அது போலவே, தேசிய அவமதிப்பும் செய்வதனால் ஒருவருக்கும் இலாபமில்லை. அத்தகைய செயலில் ஈடுபடுவோருக்கு நஷ்டம்தான் ஏற்படும்.

நாட்டு மக்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள். நாட்டில் ஒரு பகுதி, பிற பகுதியின் மீது ஆதிக்கம் செலுத்தாது என்பதை சொல்லளவிலே மட்டுமல்ல, செயல் வடிவிலேயும் மெய்ப்பித்துக் காட்டுவதின் மூலமாகத்தான் தேசிய கௌரவம் நிலை நாட்டப்பட முடியும்.

அரசியல் சட்டத்தில் 17-வது பிரிவு நடைமுறையாக்கப்பட்டு விடுமேயானால், நான் நிச்சயமாக நம்புகிறேன், தேசத்தில் ஒரு பகுதி, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, மதிப்பிழக்கும். ஒரு பகுதி மதிப்பிழப்பதின் காரணமாக, தேசிய அவமதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் விஷயத்தில் தவறான போக்கை மேற்கொள்வதின் மூலம், இந்தி பேசாத மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கி, அதன்மூலம் தேசிய அவமதிப்பைத் தேடுகிறார்கள் என்பதை இந்திமொழி விஷயத்தில்

பிடிவாதப் போக்குக்காட்டும் ஆளவந்தார்களுக்கு உணர்த்தவே 17-வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம்.

இந்திய அரசியல் சட்டத்தில் 17-வது பிரிவு தான் உள்ளபடி தேசிய அவமதிப்பு ஏற்படுத்தி வைக்கிறது.

அத்தகைய கேட்டினை எதிர்த்து நிற்பது, மேலான செயல் என்ற தூய நம்பிக்கையுடன், எங்கள் மனச்சாட்சியின்படியும், ஒவ்வொருவரும் பெற்றிருக்கிற - போற்றிப்பேண வேண்டிய இயற்கை நீதி உணர்வு காரணமாகவும், நாங்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஒரு பகுதியாக அரசியல் சட்டம் 17-வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம். ஆகையினால் நாங்கள் தேசிய அவமதிப்பு செய்யும் குற்றம் செய்ய முற்பட்டோம் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறோம்.

உடன்பிறப்பே! 1963ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் நாளன்று சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் அண்ணா அவர்கள் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாக்குமூலம் இது! அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்த திட்டமிட்டதாக அண்ணா அவர்கள் மீதும், பெரியவர் டி.எம். பார்த்தசாரதி, டி.கே.பொன்னுவேலு, வி. வெங்கா, கே.பி. சுந்தரம் ஆகியோர்மீதும் தொடரப்பட்ட வழக்கில்தான் இந்த மொழியுரிமை முழக்கத்தை - தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் சதியை முறியடித்திடக் கொட்டிய முரசத்தை, எழும்பூர் நீதிமன்றம் மட்டுமல்ல! இந்தியத் திருநாடே கேட்கும் வாய்ப்பினைப் பெற்றது!

அளித்த உறுதியைக் காப்பதில் நாணயமானவரான பண்டித நேரு அவர்களாலேயே தனது வாக்குறுதியைக் காப்பாற்ற இயலாத நிலை ஏற்பட்டதை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார் என்றால் - இன்றுள்ளவர்கள் போக்கு என்ன என்பதை நடைமுறையில் காணமுடிகிறதல்லவா?

இந்தி ஆதிக்கத்தைப் பரப்பும் பணி எல்லாத்துறையிலும் வேகமாக நடைபெறுகிறது என்கிறபோது - அந்த ஆதிக்கத்தை எதிர்க்கும் கனலும் இன்றைக்கும் அணையாமலேதான் இருக்கிறது என்பதையும் - அரசுக்கொலுவிருப்போர் யாராயினும் அதனை நனைத்து அணைத்திட எவ்வகையில் முயன்றாலும் அதற்கெனப் பயன்படுத்தும் நீரையும் நெருப்பாக்கிக் கொண்டு கனல் மூண்டெழும் - அனல் கிளம்பும் - அண்ணா வழியில் அறப்போர் நடந்தே தீரும் என்பது தானே நம்முடைய கழகம் இன்று எடுத்துள்ள நிலை!

நவம்பர் திங்கள் 8 - 9 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெறும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு பற்றியும் - நவம்பர் 17ஆம் நாள் அரசியல் சட்டத்தில் ஆட்சிமொழி இந்தியென வலியுறுத்தும் 17வது பிரிவைக் கொளுத்தும் நமது போராட்டம் பற்றியும் சிந்தித்தவாறு நேற்று இரவு நீண்டநேரம் உறக்கமின்றி இருந்தேன்.

மொழிப்போர் பற்றியும் - இந்தி ஆதிக்கத்தால் விளையும் கேடுபாடுகள் பற்றியும் - பெரியாரும், அண்ணாவும், தமிழறிஞர்கள் பலரும் மற்றும் இந்திய நாட்டு மேதைகள் சிலரும் எழுதியுள்ள ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அப்போது மறைந்த பெரியவர் டி.எம். பார்த்தசாரதி தொகுத்தளித்த தி.மு.க. வரலாறு எனும் ஏடு என் கையில் கிடைத்தது!

தொடக்கத்திலிருந்து படித்துக் கொண்டேயிருந்தேன். இரவு மணி மூன்றையும் தாண்டிவிட்டது!

அப்போது மின்னல் போல ஒரு கேள்வி என் இதயத்தில் எழுந்தது!

வருகிற நவம்பர் திங்கள் 17ஆம் நாள் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்துவதாக இப்போது முடிவெடுத்துள்ளோமே! 1963ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவை எந்த நாளில் கொளுத்துவதென அறிவித்தார்! என்பது தான் அந்தக் கேள்வி!

இறுதிப் பகுதியில்தான் நான் தேடியது கிடைத்தது.

1963 அக்டோபர் 13ஆம் நாள் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் போராட்டக் குழுவினர் அளித்த களம்புகு வீரர்களின் பட்டியலைப் பெற்றுக் கொண்ட அண்ணா அவர்கள் பின்வருமாறு பேசினார்.

போராட்டத்தின் முதல்கட்டமாக அரசியல் சட்டத்தில் உள்ள மொழிப்பிரிவான 17வது பிரிவை பகிரங்கமாக அறிவித்துவிட்டுப் பொது இடத்தில் கொளுத்துகிற நிகழ்ச்சி நடைபெறும். நானே அந்தக் காரியத்தை முதலில் செய்ய முடிவு செய்துவிட்டேன். ஆகவே நவம்பர் 17ஆம் நாள் அரசியல் சட்டம் 17வது மொழிப்பிரிவை நானும் நண்பர்கள் டி.எம். பார்த்தசாரதி, டி.கே. பொன்னுவேலு, வி. வெங்கா, கே.பி. சுந்தரம் ஆகியவர்கள் கொண்ட ஐவர் அணி மாலை 4 மணிக்கு அறிவகத்திலிருந்து

புறப்பட்டு கடற்கரை சென்று அங்கு முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்குகிறது!

உடன்பிறப்பே! அண்ணாவின் இந்த அறிவிப்பைப் படித்தவுடன் - தி.மு.க. வரலாறு எனும் அந்தப் புத்தகத்தை மெய்மறந்து முத்தமிட்டேன். பிறகு உறங்கவே இல்லை. விடிந்ததும் விடியாததுமாக இதனை உனக்குக் கடிதமாக எழுதி என் மகிழ்ச்சியில் பங்கு பெற உனக்கும் வாய்ப்பளிக்க முனைந்தேன்!

நவம்பர் 17 அன்று அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைச் சென்னையில் கொளுத்துவதற்காக நவம்பர் 16 அன்று காஞ்சியிலிருந்து நண்பர்களுடன் புறப்பட்ட அண்ணாவை வழியிலேயே கைது செய்து வழக்குப் போட்டனர் என்பதும் அந்த வரலாற்று ஏடு தரும் குறிப்புதான்!

அன்று அண்ணன் அறிவித்த அறப்போர் நாளும் இன்று நாம் அறிவித்துள்ள அறப்போர் நாளும் எப்படிப் பொருந்தி அமைந்துவிட்டன பார்த்தாயா?

இனிய உடன்பிறப்பே! இன்னும் இடையிலே முப்பது நாற்பது நாட்கள்தான்!

வட்டந்தோறும் மாவட்டங்களில் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்தும் அறப்போர் வீரர்களின் பட்டியல் தயாராகட்டும்!

நீண்டகாலம் போராடித் தீரவேண்டிய பிரச்சினை! எதிர்காலத்து இளைய தலைமுறைக்காக, தமிழன் இரண்டாம் தரக்குடிமகனாக ஆகிவிடாமல் இருப்பதற்காக நடத்தவேண்டிய உரிமைப் போராட்டம்! எனவே நீண்டகால தியாகத்துக்கு நம்மை ஒப்படைக்க வேண்டிய கடமை உணர்வு நம்மை அழைக்கிறது!

நவம்பர் 17 - கடந்த கால நமது வரலாற்றிலும் - எதிர்கால வரலாற்றிலும் இடம் பெறுகிற எழுச்சி நாள்! நமது களம்புகுகாதையை உலகுக்கு உணர்த்துகிற திருநாள்! அந்நாளே இந்நாள்! இந்நாளே அந்நாள்! அண்ணா அறிவித்த நாள்!

அன்புடன்

மு.க.

05-10-1986

1452. இருப்பது ஒரு உயிர்; அது போகப் போவதும் ஒரு முறை!

உடன்பிறப்பே,

கொள்ளையடிப்பதைத் தொழிலாகவும், கொலை செய்வதை பொழுது போக்காகவும் கொண்டு - ஆடவர், பெண்டிர், மழலைக் குழந்தைகள் பலரது மண்டையோடுகளை மாலையாக அணிந்து கொண்டு திரிந்த பூலான்தேவியின் மீது நூற்றுக்கணக்கான வழக்குகள் உத்திரப் பிரதேசத்தில் இருந்தபோதிலும் - அந்த ரத்தவெறி கொண்டவளைத் தனது பாதுகாப்பில் மத்திய பிரதேசத்தில் வைத்துக்கொண்டு, உத்திர பிரதேச அரசின் கோரிக்கையை உதறியெறிந்துவிட்டவரும் - சட்டம், ஒழுங்கு, அமைதியைப்பற்றி வாய்கிழியப் பேசிக் கொண்டிருப்பவருமான இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் அர்ஜுன்சிங் என்பவர் இந்தத் தடவை தனது தமிழக விஜயத்தின்போது தி.மு.கழகத்தை வெகுவாக மிரட்டியிருக்கிறார்!

பொல்லாத அரக்கி எனப் பெயரெடுத்த பூலான்தேவியை வழக்குகளிலே இருந்து பாதுகாத்து, வசதியோடு வாழவைப்பாராம்!

தமிழர்க்கு வந்துள்ள தீங்கினைத் துடைக்க - இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணா வழி நின்று அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்துவதாகக் கழகம் முடிவெடுத்தால் அது சட்டத்தை மதிக்காத செயலாம்!

ஆகா! ஊஹூம்!! அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதா? என்று ஆர்ப்பரிக்கிறார்! புஜம் தட்டுகிறார்! தேசத்துரோகம் என்கிறார்! தீப்பொறி வீசுகிறார்!

அரசியல் சட்டத்தின் 17வது மொழிப்பிரிவைக் கொளுத்துவது தேச விரோதமாகாது என்பதற்கான விளக்கங்களை 1963ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் நாள் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள்

தனது வாக்கு மூலத்தின் வாயிலாக எடுத்துக் காட்டி முழங்கியதை அர்ஜுன்சிங் அவர்கள் படித்திருக்க வாய்ப்பில்லை!

என்செய்வது, உடன்பிறப்பே! அர்ஜுன்சிங் அதைப் படிக்கவில்லையென்பது சரி! ஆனால் அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறவர்களும் அதைப் படிக்காத காரணத்தினால்தானே - அண்ணா பெயரால் நடக்கும் அவர்களது பத்திரிகையில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துச் செய்தியாக,

புனிதமான அரசியல் சட்டத்தை

எரித்தால் தி.மு.கழகம்

தேர்தலில் நிற்கத் தடைவரும்!

அர்ஜுன்சிங் தகவல்!

என்று வெளியிட்டு, தனது மகிழ்ச்சியையும், எல்லை கடந்த உற்சாகத்தையும், பல்லை நறநறவென்று கடித்தவாறு வெளியிட்டிருக்கிறார்கள்!

அடடா! அர்ஜுன்சிங், அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால் ஏற்படும் ஆபத்துக்களை தி.மு.கழகத்திற்கு எடுத்துக்காட்டி எச்சரித்திருப்பது எம்.ஜி.ஆர். அவர்களை நிறுவனராகக் கொண்ட அவரது கட்சிப் பத்திரிகைக்கு எவ்வளவு கொண்டாட்டமாக இருக்கிறது பார்த்தாயா?

உடன்பிறப்பே! உனக்கு நினைவிருக்கிறதா - தந்தை பெரியார் அவர்கள் ஒருமுறை இந்திய தேசியக்கொடி எரிக்கப் போவதாக அறிவித்தார்! அப்போது தேசியக்கொடியை எரித்தால் எரிப்பவர்களைத் தண்டிக்கும் ஒரு புதிய சட்டத்தைத் தமிழ்நாடு சட்டப்பேரவையில் காங்கிரஸ் அமைச்சரவை கொண்டு வந்தது!

பெரியாரை விட்டு நாம் பிரிந்திருந்த காலம் அது!

நன்றாக மாட்டிக் கொண்டார் பெரியார் என்று, நம்நாடு இதழிலோ, திராவிட நாடு இதழிலோ, முரசொலி இதழிலோ செய்தி வெளியிட்டு நாம் மகிழ்ந்திடவில்லை!

மாறாக என்ன நடந்தது தெரியுமா? சட்டப் பேரவையில் அந்த புதிய சட்டத்தை எதிர்த்து பேரறிஞர் அண்ணா அவர்கள் விரிவுரையாற்றினார்! பெரியாரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவரைச் சந்தித்துப் பேசுங்கள் என்று அன்றைய முதல்வர்

காமராஜர் அவர்களை அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டாரே தவிர - திராவிடர் கழகத்திற்கும் தி.மு.கழகத்திற்குமுள்ள வேறுபாடு காரணமாக - திராவிடர் கழகத்துக்கு, எதிராகக் கொண்டுவந்த அந்தச் சட்டம் சிலாக்கியமானது என்று அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை!

அந்த அண்ணன்தான் இந்தி ஆதிக்கம், நேருவின் உறுதிமொழி என்ற அணையையும் தாண்டித் தமிழகத்தை அழித்திட முனைந்தபோது - 1963 நவம்பர் 17ஆம் நாளன்று அரசியல் சட்டத்தின் 17வது ஆட்சி மொழிப் பிரிவைக் கொளுத்துவோம் என அறிவித்துக் களம்புகுந்தார்! ஆறுமாதத் தண்டனை ஏற்றார்!

அந்த அண்ணாவின் பெயரைத் தங்கள் கட்சிக்கு வைத்துக்கொண்டு - எல்லா வகையிலும் அண்ணாவின் கொள்கைக்குப் புறம்பாக நடந்து கொள்கிறவர்கள், கடைசியாக அண்ணாவின் மொழிக்கொள்கையையும் சேலத்தில் அமைச்சர் ஒருவர் உடைத்த சிதறு தேங்காய் போல உடைத்துவிட்டார்கள் என்பதற்கு அடையாளமாகத்தானே - அர்ஜுன்சிங், தி.மு.கழகம் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது தேசத்துரோகம் என்று கூறியதும் துள்ளிக்குதித்து, துந்துபி முழங்கி - அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால் தி.மு.க.வுக்கு தேர்தலில் நிற்கவே தடைவரும் என்று கும்மியடிக்கவும் தொடங்கி விட்டார்கள் பார்த்தாயா?

கல்வியைப் பொதுப் பட்டியலில் இணைத்துக் கொண்டு மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கிற மத்திய அரசை நாம் கண்டிக்கிறோம் - மாநிலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சிதானே நடைபெறுகிறது என்பதற்காக மாநில உரிமை பறிபோனால் என்னவென்று நாம் சும்மா இருக்கவில்லை! அடிப்படைக் கொள்கைகளுக்கு ஊனம் விளைவிக்கப்படும் பொழுது எம்.ஜி.ஆர். அரசுக்குத்தானே உரிமை பறி போகிறது என்று நாம் கருதிடவில்லை. அதற்கு மாறாக, நமது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரான நடவடிக்கையென்று கூறி மத்திய அரசைக் கண்டிக்கிறோம்!

காவிரிப் பிரச்சினையில் கர்நாடகத்தின் பிடிவாதத்தையோ - மத்திய அரசின் அலட்சியத்தையோ நாம் பாராட்டிப் புகழ்ந்து கொண்டு, மாநில அரசுக்குச் சங்கடம் விளைக்க எள் முனையளவும்

என்றைக்கும் எண்ணியதில்லை! எம்.ஜி.ஆர். அரசுதானே என்பதற்காகக் காவிரியில் நமது தமிழகத்திற்குரிய உரிமைகளை விட்டுத் தரலாம் என ஏடெடுத்து எழுதியதில்லை! கர்நாடகம் பக்கம் நியாயம் கற்பித்ததுமில்லை! மத்திய அரசு காட்டும் அலட்சியம் சரிதான் என வாதித்ததில்லை!

ஆனால் இவர்களோ, 1974 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அண்ணாவின் கொள்கையான மாநில சுயாட்சித் தீர்மானத்தை நாம் கொண்டு வந்த போதே அதனை எதிர்த்தவர்கள்! ராஜமன்னார் குழுவின் அறிக்கையைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போடுங்கள் என்று பேசியவர்கள்!

காவிரிப் பிரச்சினையில் கூட கர்நாடக அமைச்சர்கள், தமிழக தி.மு.க. அரசைக் குறை கூறினால் அதனைத் தமது ஏடுகளில் எடுப்பாக செய்தி வெளியிட்டு மகிழ்ந்தவர்கள்!

அதனால்தான் நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று - ஓரிரு வாரங்களுக்கு முன்பு கூட சட்ட அமைச்சர் பொன்னையன் அவர்களும், வேறு சில அமைச்சர்களும் ஆணித்தரமாகக் கூறியதைக் கூட மறந்துவிட்டு - அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வமான ஏடு - அதுவும் அண்ணாவின் பெயரைச் சூடிக்கொண்டிருக்கிற ஏடு - எட்டு காலம் தலைப்பிட்டு நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்கும் கோரிக்கைக்காக போராட்டக் களத்தில் இறங்கிடும் அண்ணாவின் தி.மு.கழகத்தை அர்ஜுன்சிங் என்பவரின் பேச்சை வைத்துக் கொண்டு மிரட்டிப் பார்க்கிறது!

இந்த அழகில் அமைச்சர் காளிமுத்து அவர்கள், இந்தி எதிர்ப்புப் போரில் தி.மு.க. - தி.க. - அ.தி.மு.க. - ஆகிய மூன்று கட்சிகளும் திரிசூலமாக இருந்து போரிடுவோம் வாரீர் என அழைத்து ஒரு கூட்டத்தில் பேசியதாக இரண்டொரு நாட்களுக்குமுன் செய்தி கண்டேன்!

இந்தி எதிர்ப்பு ஆகட்டும் - மாநில சுயாட்சிக் கொள்கையாகட்டும் - அல்லது அண்ணாவின் சமத்துவ, சமதர்ம, பகுத்தறிவுக் கொள்கைகளாகட்டும் இவற்றில் அண்ணாவின் உணர்வுகளைக் கொண்டிருக்கின்ற ஒரு சிலர் அ.தி.மு.க.வில் இருக்கிறார்கள் என்றாலும் - மேலிடம், அதாவது அவர்களது

கட்சியின் மேலிடம் - மென்னியைப் பிடித்து இறுக்கும் போது, பாவம் எழுந்தகுரல் எப்படியோ அடங்கித்தான் போய்விடுகிறது! இது பல நிகழ்ச்சிகளில் இந்த நாடு கண்ட உண்மையல்லவா?

அரசியல் சட்டத்தின் 17-வது மொழிப் பிரிவை தீவைத்துக் கொளுத்துவது தேசத் துரோகத்துக்கு இணையானதுதான் என்று இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் அர்ஜுன்சிங் என்பார் கூறியதை எடுத்து வைத்துக் கொண்டு - அப்படியானால் தி.மு.க. தேர்தலிலும் நிற்கமுடியாது என்று வியாக்கியானம் - விரிவுரை - பதவுரை - பொழிப்புரை எழுதிச் செய்தி வெளியிடுகிற அ.தி.மு.க. ஏடுகளாகட்டும் - அல்லது அப்படிப் பேசியிருந்தால் அர்ஜுன்சிங் அவர்களேயாகட்டும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வது நல்லது!

பிரிவினைக் கொள்கையை வலியுறுத்துவதினால் தேர்தலில் நிற்க முடியாது என்று ஒரு சட்டத்தை முன்பு மத்திய அரசு கொண்டு வந்தது!

இப்போது இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தாலோ, எதிர்த்துப் போர்க்குரல் கொடுத்தாலோ - தேர்தலில் நிற்க முடியாமல் சட்டம் கொண்டு வருவோம் என்றால், இந்தி ஆதிக்கத்தை மட்டும் எதிர்ப்பதற்கு பதிலாக பிரிவினையையே கேட்டுவிடலாமே? இரண்டுக்கும் தண்டனை ஒன்றுதானே! என்கின்ற எண்ணம் ஏற்பட்டுவிடுமல்லவா?

பிரிவினை கேட்டாலும் தேர்தலில் நிற்க முடியாது. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தாலும் தேர்தலில் நிற்க முடியாது - பிரிவினை கேட்டால் எந்தச் சட்டம் கொட்டுமோ அதே சட்டம்தான் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தாலும் கொட்டும் என்றால் - அப்படியொரு சட்டம்; பிரிவினைத் தடைச் சட்டத்தைப் போல இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கும் கொண்டு வரப்படுமேயானால்,

ஒட்டிக் கொண்டு உரிமை கேட்பதைவிட, வெட்டிக்கொண்டு எங்கள் உரிமைகளை நாங்களே நிலை நாட்டிக் கொள்கிறோம்.

என்பது போன்ற ஒரு தூண்டுதல் உணர்வைத் தான் - அர்ஜுன்சிங்கின் பேச்சும், அதற்குச் செய்யப்படும் வியாக்யானங்களும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை!

இந்தியாவின் ஒருமைப்பாட்டை இந்தி ஆதிக்கத்தின் வெறி மயக்கத்தால் சீர்குலைத்து விடாதீர்கள் என்பதுதான் நமது வாதம்!

சுதந்திரநாளைத் துக்க நாளாகக் கொண்டாடிய மேற்கு வங்கத்துக் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் பி.சி. ராய் அதோ மனக்கண்ணில் தெரிகிறார்!

அவர் அர்ஜுன்சிங்கைப் போன்றவரல்ல! அலகாபாத் பெருமகன் நேருவுடனும், அண்ணல் காந்தியடிகளுடனும் நாட்டு விடுதலைக்குப் பலமுறை சிறைக் கொட்டடியில் சீரழிந்தவர்! அவர்தான் தனது மாநில உரிமைக்காகக் குரல் எழுப்பி - சுதந்திர நாளையே துக்க நாளாக அறிவித்து, மாநிலத் தலைநகரையும் கவர்னர் மாளிகையையும் இருளில் மூழ்கச் செய்தவர்!

அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவான 17வது பிரிவை அராபிக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென 1965ஆம் ஆண்டு முழங்கியவர் - சுயராஜ்யா ஏட்டில் எழுதியவர் மூதறிஞர் ராஜாஜி!

தமிழ்நாட்டில் பழைய காங்கிரஸ் தியாகிகள் யாரையாவது தேடிப்பிடித்து அவர்களிடம் விசாரித்தால் மூதறிஞர் ராஜாஜி அவர்களைப்பற்றி அர்ஜுன் சிங் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும்!

இந்தியை எங்கள் மீது திணிக்கும் தேசியத்தை அள்ளித் தெருவிலே போடு என முழக்கியவர் பெரியார்!

இந்தியை ஆட்சி மொழி எனக் கூறிடும் இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவை 1963 நவம்பர் 17ஆம் நாள் தீயிட்டுக் கொளுத்தச் சொல்லி - தானும் கொளுத்த முற்பட்டவர்தான் - 1967-ல் தமிழக முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் அண்ணா!

அசாம் மாநிலத்தில் அரசியல் சட்டத்தைக் கொளுத்திக் கிளர்ச்சி செய்த மாணவர்கள்தான் இன்று அந்த மாநிலத்தின் அமைச்சர்கள். அவர்களோடுதான் மத்திய அரசு ஒப்பந்தம் செய்து கொண்டது!

இந்த வரலாறுகளைப் படித்தது தி.மு.க.! வரலாறுகளை உணர்ந்தது தி.மு.க.! வரலாற்றையே உருவாக்குவது தி.மு.க.!

வரட்டுக் கூச்சல் கண்டு வளைந்து, நெளிந்து எதிர்காலத் தமிழனை இரண்டாம்தரக் குடிமகனாக்கும் கொடுமைக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைத்திட முன்வரவே வராது!

தன்னைத்தானே தியாகத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டு - இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை அறவழியில் நடத்திட முனைந்துள்ள கழகத்தின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசியோ - அச்சுறுத்தியோ - அடக்கி ஒடுக்கிவிடலாமென அர்ஜுன்சிங்குகள் எண்ணுவார்களேயானால் - எமர்ஜன்சியையே சந்தித்த இயக்கம் தி.மு.க. என்பதை அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்!

ஆறிலும் சாவுதான்! நூறிலும் சாவுதான்! ஆனது ஆகட்டுமே!

என்று 1937-1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பொழுது திருவாரூர்ப் பாவலர் பாலசுந்தரம் அவர்கள் பாடிய பாடல், இன்னும் என் நெஞ்சைவிட்டும் அகலவில்லை!

உண்மையான தமிழ்க்குருதி சுழன்றோடும் யாருடைய நெஞ்சைவிட்டும் அகலவே அகலாது!

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி

எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?

புரட்சிக் கவிஞரின் இந்த வீரவரிகளுக்கு இலக்கணமாக நமது தமிழர்சேனை கிளம்பத்தான் போகிறது.

தாளமுத்து! நடராசா! என்றொலித்தவாறு தடியடிகளையும், துப்பாக்கி ரவைகளையும் மலர்ச் செண்டுகளாகத் தாங்கி, இந்தியை எதிர்த்துத் தடந்தோள் குலுக்கியவர்களின் பரம்பரை பட்டொழிந்து போய்விடவில்லை!

அற்றைநாள் இந்தி எதிர்ப்புப் போரில் ஆர்த்தெழுந்த சிங்கம் அழகிரி அண்ணனை நினைக்கிறோம்!

மூவலூர் மூதாட்டியை எண்ணுகிறோம்!

பெல்லாரி சிறையில் பெரியார் வதைபட்டதை மறந்திடவில்லை!

மொழிப் போரில் நமது ஆருயிர் அண்ணன் - காஞ்சிமன்னன் - அரசியல் சட்ட மொழிப் பிரிவுக்குத் தீயிடுவது தேச விரோதமல்ல என கர்ச்சனை செய்ததுதான் இன்றைக்கும் நமக்குக் களமுரசு!

எத்தனை பிணங்கள்! எத்தனை தீக்குளிப்புகள்! எத்தனை பேர் சிறைக் கோட்டங்களில் சித்ரவதையேற்றனர்! இன்றும் இந்தி வெறியர் ஆதிக்கம் ஓயவில்லையென்றால், அண்ணா சொன்னதுபோல -

இருப்பது ஒரு உயிர் - அது போகப்
போவதும் ஒரு முறை - அது இந்த நல்ல
காரியத்துக்காகப் போகட்டுமே!

அன்புடன்

மு.க.

07-10-1986

1453. திரிசூலம் பேச்சும்; தெளிவான விபரங்களும்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க.வின் செயற்குழு அவசரமாகக் கூடியது. கட்சியின் பொதுச்செயலாளர் பொறுப்பை எம்.ஜி.ஆர். அவர்களே எடுத்துக்கொண்டு, துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பை டாக்டர் அண்டே அவர்களுக்குத் தருவதாக அறிவித்துவிட்டார். இப்படிச் செய்திகள் வந்திருக்கின்றன.

கழகத்தின் உடன்பிறப்பான உனக்கு இது வியப்பான செய்தியாக இருக்கலாம்! பொதுக்குழுதானே ஒரு கட்சியின் பெரிய அமைப்பு! அந்த அமைப்பில் தானே கட்சியின் தலைமைப் பொறுப்பில் யார் இருப்பது என்பது தேர்வு செய்யப்படுவது முறை! கட்சியின் சட்ட திட்டங்களை உருவாக்கவும், அதில் மாற்றம் அல்லது திருத்தம் செய்யவும், கட்சியின் தலைவரையோ, பொதுச்செயலாளரையோ, பொருளாளரையோ மற்றும் முக்கிய குழு உறுப்பினர்களையோ தேர்ந்தெடுக்கும் பணியை ஆற்றிடவும் பொதுக்குழுதானே சகல உரிமைகளையும் பெற்றது; அங்ஙனமிருக்க, செயற்குழுவில் எப்படி ஒரு கட்சியின் தலைமை நிர்வாகிகள் இன்னார் என்று தனிப்பட்ட ஒருவர் அறிவிக்க முடியும் என்று உனக்கு ஏற்படும் ஐயப்பாட்டையும், ஆச்சரியத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது!

நீ, நம்முடைய தி.மு.கழகத்தை நினைத்துக் கொண்டு இப்படியெல்லாம் குழப்பிக் கொள்கிறாய்! அண்ணா அவர்கள் மறைந்தபிறகு அண்ணா அவர்கள் வகித்த பொதுச்செயலாளர் பதவியை யார் வகிப்பது என்ற கேள்வி எழுந்தது! நானா? அல்லது நாவலரா? என்ற நிலையில் - நாவலரைப் பொதுச்செயலாளர் தேர்தலில் தோற்கடித்து அவரை இயக்கத்தைவிட்டே ஒதுக்கிவிட பலரும் எண்ணிச் செயல்பட்ட போது - மதுரை முத்து, மன்னை, அன்பில், அரங்கண்ணல் ஆகியோருடன்

நானும், பேராசிரியரும், என்.வி. என்.னும் கலந்து பேசி பின்னர் அவர்கள் விருப்பம்போல் நானே நாவலருடன் பேசி கழகத்தின் ஒற்றுமையைக் குலைக்க முனைவோருக்கு எள்முனையும் இடம்தரலாகாது என முடிவெடுத்து - கழகத் தலைவர் எனும் ஒரு புதிய பொறுப்பை உருவாக்கி - அதையும் பொதுக்குழுவின் சம்மதத்துடன் கழகச் சட்டதிட்டத்தில் இணைத்து, அதன் பிறகு மறுநாள் 27.7.1969 அன்று என்.வி.என். அவர்களைத் தேர்தல் ஆணையாளராகக் கொண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் தலைவர் பொறுப்புக்கு நானும், பொதுச்செயலாளர் பொறுப்புக்கு நாவலரும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். பொருளாளர் பொறுப்புக்கு நண்பர் எம்.ஜி.ஆர். வேட்புமனு தாக்கல் செய்தார். அதே பொருளாளர் பொறுப்புக்கு துறைமுகப் பகுதி செல்வராசன் அவர்களும் வேட்புமனு தாக்கல் செய்தார். பிறகு செல்வராசன் அவர்களிடம் வேட்பு மனுவைத் திரும்பப் பெறுமாறு நானும், மற்றவர்களும் கேட்டுக் கொண்டு - பொருளாளர் பதவிக்கு நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொதுக்குழுவில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பொதுக்குழுவும், தலைமை நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சியும் சென்னை ஏ.வி.எம். ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது!

அண்ணா காலத்தில் கழகத்தின் முக்கியமான தலைமை நிர்வாகிகள் தேர்தல், கழகச் சட்ட திட்ட திருத்தங்கள், மாற்றங்கள், கொள்கை முடிவுகள் அனைத்துமே எப்படிப் பொதுக்குழுவின் ஒப்புதலைப் பெற்றே ஜனநாயக ரீதியில் அமைந்திருந்ததோ அதே முறையை அணுவும் பிசகாமல் தி.மு.கழகம் இன்றளவும் கடைப்பிடித்து வருகிற காரணத்தால் - உனக்கு அ.தி.மு.க.வின் செயற்குழு கூட்டமும், முடிவுகளும் ஆச்சரியத்தைத் தரக்கூடும்!

பொதுச்செயலாளர் தேர்தல் - என்று செயற்குழுவில் அஜண்டா கூட முன்னரே அறிவிக்கப்படாமல், செயற்குழு கூட்டப்பட்டு, எம்.ஜி.ஆர். அவர்களே பொதுச்செயலாளர் என அறிவிக்கப்பட்டாகி விட்டது!

எம்.ஜி.ஆர். விரும்பினால் அவர் தான் கட்சியில் பொதுச் செயலாளர்! அதில் இரண்டு வித கருத்துக்கு இடமேயில்லை! இருந்தாலும், கட்சியின் பெரிய அமைப்பான பொதுக்குழுவை

இந்த அளவு அலட்சியப்படுத்தியிருக்க வேண்டியதில்லை என்று கூட உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் எண்ணிடக் கூடும்!

முறையாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு கிளைகள், ஒன்றியங்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்டக் கழகங்களில் இருந்து தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி, கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்குத் தணிக்கைக்குழு, ஆட்சிமன்றக்குழு போன்ற குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்குகிற நம்முடைய கழகத்தை நினைத்துக் கொண்டு அ.தி.மு.க. ஜனநாயகத்தை பார்க்காதே!

அங்கு மாவட்ட அளவிலே கூட தேர்தல்கள் நடைபெறுவதில்லை. அப்படியே தப்பித்தவறி நடைபெற்றாலும் அந்தத் தேர்தல் முடிவுகள் பலவற்றை எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொள்வதில்லை. அந்தக்கட்சிக்கென்று சட்ட திட்டங்களை நமது நாஞ்சிலார் அங்கிருக்கும் பொழுது எழுதி அது பத்திரிகையில் வெளிவந்ததோடு சரி! அது புத்தக வடிவில் வெளிவந்ததா அல்லது அந்த சட்டதிட்டங்களின்படி அந்தக் கட்சி இயங்குகிறதா என்பதெல்லாம் அந்தக் கட்சியிலிருப்பவர்களே கூட கவலைப்படாத விவகாரங்களாகும்!

1972ல் அந்தக் கட்சி தொடங்கியது முதல் இதுவரையில் பொதுச்செயலாளர் பதவியே நியமனப் பதவி தான் என்றால் அங்கே கட்சி ஜனநாயகத்திற்கு என்ன வேலை? சட்டதிட்டம் எதற்கு? பொதுக்குழுதான் எதற்கு?

பொதுச்செயலாளர் பதவி என்பது கழகத்தின் அடித்தளத்திலேயிருந்து மேல் மட்டம் வரையில் தேவைக்கேற்ற முடிவுகளை வரையறுக்கப்பட்ட சட்டதிட்டபடி எடுக்கக்கூடிய சகல அதிகாரங்களையும் பெற்றுள்ள ஒரு முக்கியமான பதவி! இன்றும் நம்முடைய கழகத்தில் அப்படித்தான் அந்தப் பதவிக்குரிய பொறுப்புக்களும், பணிகளும் இருக்கின்றன.

அந்தப் பதவியே அ.தி.மு.க.வில் பந்தாடப்படும்போது - ஜனநாயகமாவது! மண்ணாங்கட்டியாவது!

உடன்பிறப்பே! இவையனைத்தும் அவர்களது உட்கட்சி விவகாரங்கள் - நமக்குத் தேவையில்லாதது! இங்கேயிருக்கும்போது

ஜனநாயகம் பற்றி மலைப்பிரசங்கம் செய்தவர்கள் அங்கே போய்விட்ட பிறகு - சப்தநாடிகளும் அடங்கி ஒரு நியமனக் கட்சியை அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டதற்குக் காரணம் நித்யகண்டமாக இருக்கிற பதவிகள் நீடித்தால் போதுமென்கிற பிரார்த்தனையே யன்றி வேறென்னவாக இருக்கமுடியும் என்பதை மட்டும் அவர்களது மனச்சாட்சிக்கு சுட்டிக்காட்டினால் போதுமென்பதற்காகவே இத்தனை எழுத நேரிட்டது!

அ.தி.மு.க. செயற்குழுவில் ஒரு முக்கியமான விஷயம் காரசாரமாகவும் கடுமையாகவும் விவாதிக்கப்பட்டதாக தினமணி ஏட்டில் செய்தி வந்துள்ளது! பி.டி.ஐ. செய்தி நிறுவனம்கூட தெரிவித்துள்ளது!

அமைச்சர்கள் - கட்சி நிர்வாகிகள், எம்.ஜி.ஆர். அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த போது ஒருவரையொருவர் குற்றம்சாட்டி வெளிப்படையாகப் பேசியதை வைத்து விவாதம் சூடாக நடைபெற்றிருக்கிறது! அதிலும் நாம் கவனம் செலுத்திட வேண்டிய அவசியமில்லை!

ஆனால் முக்கியமான செய்தி ஒன்று, தினமணியில் வெளிவந்துள்ள சாரத்தை அப்படியே தருகிறேன்.

அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகள் பங்காளிகள்! சொத்துக்காக சண்டையிருப்பது நியாயம்! ஆனால் தமிழுக்கே ஆபத்து என்ற நிலைவரும் போது, இந்தி அரக்கியை வீழ்த்த அ.தி.மு.க., தி.மு.க., தி.க. ஆகிய மூன்று கட்சிகளும் தமிழன்னையின் கையிலுள்ள திரிசூலம்போல் செயல்பட வேண்டும் என்று அமைச்சர் காளிமுத்து பேசியிருந்ததற்குக் கொள்கை பரப்புச் செயலாளர் செயற்குழுவில் ஆட்சேபம் தெரிவிக்க - அதற்கு விளக்கமளித்த அமைச்சர் காளிமுத்து, தமிழ் நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் தி.மு.க.தான் முனைப்பாக உள்ளதாகவும், அ.இ.அ.தி.மு.க.வோ, எம்.ஜி.ஆர். கட்சியோ இந்தித் திணிப்பை எதிர்க்கவில்லை என்ற மாயையை தி.மு.க. தோற்றுவிக்கப் பார்க்கிறதென்றும், கருணாநிதியின் இந்தப் பிரச்சாரத்தின் கூர்முனையை மழுங்கச் செய்யவே சில கருத்துகளை வெளியிட்டதாகவும் கூறினார்.

உடன்பிறப்பே! நான்கூட உன்னைப் போலத்தான் தம்பி காளிமுத்து அன்றைக்கு அரசியல் சட்டம் கொளுத்திய அதே உணர்வுடன் மேடையில் நின்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து

திரிசூலமாக இருந்து போரிடுவோம் வாரீர்! என அழைக்கிறார் என நம்பினேன்! ஆனால் மண் பானையை மலைப் பாறையில் போட்டு உடைத்ததைப் போல அவர்களது கட்சி செயற்குழுவில் அவரது உள்நோக்கம் என்ன என்பதைப் போட்டு உடைத்துக் காட்டிவிட்டார்! இந்தித் திணிப்பை எதிர்த்துக் கழகம் காண இருக்கும் களச் செய்தியும், அது குறித்த பிரச்சாரமும் - அ.தி.மு.க.வைச் சங்கடத்தில் ஆழ்த்துவதாகத் தோற்றமளிப்பதால் - கழகத்தின் பிரச்சாரத்தில் கூர்முனையை மழுங்கச் செய்வதற்காகவே பங்காளிப் பேச்சும் - திரிசூலப் பேச்சும் பேசியதாக அவரே அவரது கட்சிச் செயற்குழுவில் வாக்குமூலம் கொடுத்து விட்டார்!

தம்பி காளிமுத்து போன்றவர்கள் விரும்பினால் கூட திரிசூலமாக இருந்து இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க எம்.ஜி.ஆரோ, அ.தி.மு.க.வில் உள்ளவர்களோ முன்வரமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, தனது திரிசூலப் பேச்சுக்குப் புதிய விளக்கத்தைக் காளிமுத்து தந்துவிட்டார்!

ஆனால் ஒன்று! அதே செயற்குழுவில்,

முதலமைச்சர் பணித்தால் அரசமைப்புச் சட்டத்தின் மொழிப்பிரிவை தி.மு.க.வினர் கொளுத்துவதற்கு முன்பு, நானே கொளுத்தி சிறைசெல்லவும் தயாராக இருக்கிறேன். பதவியை நாடிக் கட்சிக்கு வந்தவன் நானல்ல!

என்றும் வீர முழக்கமிட்டிருக்கிறார் தம்பி!

தினமணியில் வந்துள்ள இந்தச் செய்தியையும் சேர்த்துப்படிக்கும் போது, மகிழ்ச்சி பொங்கிடத்தான் செய்கிறது!

ஆனால் - முதலமைச்சர் பணித்தால் என்று முழக்கத்தைத் தொடங்கியுள்ளாரே அதைக் காணும்பொழுது, முதலமைச்சராவது பணித்தலாவது - அவர் பணித்தால்தானே இவர் அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவைக் கொளுத்துவார் - என்ற ஆயாசமும் ஏற்படத்தான் செய்கிறது!

செயற்குழுவில் காளிமுத்து குறிப்பிட்டதில் ஒன்றைப் பாராட்டத்தான் வேண்டும். இந்திரா காங்கிரஸ் துணைத்தலைவர் அர்ஜுன்சிங் என்பவர் தமிழகம் வந்து கோவையில் கொட்டி முழக்கினாரே! அரசியல் சட்ட மொழிப் பிரிவைக் கொளுத்தினால் அது தேசத் துரோகமென்று - அதற்கு எட்டு கலம் தலைப்பிட்டு

அ.தி.மு.க. ஏடு புனிதமான அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் தி.மு.க.வுக்கு தேர்தலில் நிற்கத் தடை வரும் என்று குதூகலித்ததே - அந்தக் கருத்துகளுக்கு மாறான கருத்தை அ.தி.மு.க. அமைச்சராக உள்ள காளிமுத்து, அவரது கட்சிச் செயற்குழுவில் அழுத்தம் திருத்தமாக வெளியிட்டு, அரசியல் சட்ட மொழிப் பிரிவைக் கொளுத்துவதற்கு அவரது தலைவரிடம் அனுமதி கேட்டிருக்கிறார் என்பது பாராட்டத்தக்க செய்திதான்!

எனினும் திரிசூலம் பேச்சு, திசை திருப்பும் பேச்சே தவிர இதயத்திலிருந்து வந்ததல்ல என்று காளிமுத்து அவர்கள் செயற்குழுவில் குறிப்பிட்டு, அவர் மேடையில் ஆற்றும் உரைகளுக்கு ஒரு உள் நோக்கம் இருக்கிறது - அனைத்தும் உள்ளத்திலிருந்து எழுவதல்ல என்ற உண்மையையும் ஊரறியச் செய்துவிட்டார்!

அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தால் நாட்டுக்குக் கிடைத்த தெளிவான விபரங்கள் இவை!

அன்புடன்

மு.க.

08-10-1986

1454. அண்ணா வழி!
அரிவாள் தூக்கும் வழியல்ல!

உடன்பிறப்பே,

கழகம் நடத்த இருக்கிற இந்தி ஆதிக்க எதிர்ப்பு போராட்டத்தைக் கேலி செய்து - குமுதம் வார இதழ் ஒரு சித்திரம் வரைந்து வெளியிட்டுள்ளது.

இந்தித் திணிப்பு என்னும் நோய் தீர்க்க திரு. மூப்பனார் அவர்கள் கலுவத்தில் மூலிகை அறைக்கிறாராம்! அந்தக் கலுவத்துக்கு ராஜீவின் வாக்குறுதி என்று பெயர் சூட்டியுள்ளது குமுதம்! குமுதம் கேலிச் சித்திரத்தில் மூப்பனாருக்கு சித்த வைத்தியர் வேடம்!

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே இந்தித் திணிப்பு நோயைத் தீர்க்க ஊசி போடுவதற்கு குழாயில் மருந்தை எடுத்துக்கொண்டு தயாராகி விட்டார்! அந்த ஊசிக்குச் சட்டத் திருத்தம் என்று குறிப்பு எழுதியுள்ளது குமுதம்! அந்தக் கேலிச் சித்திரத்தில் எம்.ஜி.ஆருக்கு டாக்டர் வேடம்!

அதேவரிசையில் மூன்றாவதாக எனது படம்! பட்டாக்கத்தியொன்றைப் பாறையில் தீட்டிக் கொண்டிருக்கிறேனாம்! அந்தச் செயலுக்குப் பெயர் சட்ட எரிப்பு என எழுதிக்காட்டுகிறது குமுதம்!

எப்படியோ இந்தித் திணிப்பு என்பது மருத்துவம் செய்து அகற்றப்பட வேண்டிய கொடிய நோய் என்பதைக் குமுதம், தனது கேலிப்படத்தின் வாயிலாகத் தெளிவாக்கியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்!

மூன்று மருத்துவமுறைகளைச் சுட்டிக்காட்டுகிற குமுதம் இதழ், மூலிகை - ஊசி - என இரண்டு முறைகளைக் கூறியபிறகு, மூன்றாவதாக அறுவை சிகிச்சை என்ற முறையைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்குப்பதிலாக என்னை,

சித்த வைத்தியராகவோ அல்லது டாக்டராகவோ சித்தரிக்காதது மாத்திரமல்ல - அறுவை சிகிச்சை செய்யும் சர்ஜன் ஆகவும் சித்தரிக்காமல் பட்டாக்கத்தி பைரவன் என்று சித்தரிக்கிறது!

அரசியல் சட்டத்தின் 17வது ஆட்சி மொழிப் பகுதியை நவம்பர் 17-ந் தேதி கொளுத்தப் போகிறோம் எனக் கழகம் அறிவித்திருப்பது, குமுதத்திற்கு, ஏதோ கொலைவாளினை எடுப்பதுபோல் தெரிகிறது! அல்லது அப்படித் தமிழ் மக்களை, திசை திருப்பக் குமுதம் விரும்புகிறது!

கொலைவாளினை எடடா! மிகக்

கொடியோர் செயல் அறவே!

என்ற புரட்சிக்கவிஞரின் பாடலை இளமைக் காலந்தொட்டு மனப்பாடம் செய்து கொண்டவன் நான்! கொலைவாளை எடுப்பது, கொடியோரைக் கொல்ல அல்ல - கொடியோரின் செயல்களை வீழ்த்தவே! என்ற பாவேந்தரின் கருத்தைப் பல முறையும் நான் மட்டுமல்ல, நாவலர் நம்முடைய கழகத்திலிருந்த போதும் விளக்கியிருக்கிறார்!

மூலிகை தருதல் - ஊசி குத்துதல் - அறுவை சிகிச்சை செய்தல் - என்ற மூன்று முறைகள் நோய் தீர்த்திட உள்ளன என விளக்க வந்த குமுதம், திடீரென வழுக்கி விழுந்து, என் கையிலே பட்டாக்கத்தியைக் கொடுத்துப் பாறையிலே தீட்டச் செய்கிற கேலி அந்த வார இதழுக்கு இந்திரா காங்கிரஸ் மீதும், எம்.ஜி.ஆர். மீதும் இருக்கிற வாஞ்சைமிகு விசுவாசத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டுகிறது அல்லவா?

இந்தித் திணிப்பு நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் ராஜீவ் உறுதிமொழி என்ற மூலிகை மட்டும் போதாது. அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற எம்.ஜி.ஆரின் ஊசியும் தேவை என்பதைக் குமுதம், தெரிந்தோ தெரியாமலோ தெளிவாக்கியுள்ளது!

ராஜீவின் உறுதிமொழியல்ல, நேருவின் உறுதி மொழியின் சாராம்சம் திட்டவட்டமாக அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டுமென்றுதான் தி.மு.கழகம் அண்ணா காலத்திலிருந்தே போராடி வருகிறது! குமுதம் திடீரென்று கண்டுபிடித்த இன்ஜெக்ஷன் அல்ல அது!

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற, அறுவை சிகிச்சை! மூலிகைகளால் தீரமுடியாத அளவுக்கு முற்றிவிட்ட வியாதி! அறுவை சிகிச்சைக்கு முன்னேற்பாடாக மயக்கம் தந்து வலி தெரியாமல் இருக்க ஊசி போடுகிற காரியம் தேவையே தவிர, மயக்க ஊசியிலேயே நோயைக் குணப்படுத்திட இயலாது!

அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய அளவுக்கு நோய், ஆபத்தான கட்டத்தை அடைந்து விட்டது என்பதற்காகத்தான் அண்ணா 1963-ல் கையில் ஆபரேஷன் கத்தியை எடுத்தார்! அதுதான் அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவு எரிப்பு!

ஆபரேஷன் கத்தி, நோயாளிக்கு ஆளைக் கொல்லும் கத்திபோல் தெரிந்தால் அது சிகிச்சை செய்வோரின் குற்றமல்ல! அல்லது நோயாளி எப்படியாவது சாகவேண்டுமென விரும்பி, அடுத்த வீட்டுக்காரன் - நோயாளியிடத்திலே - அறுவை சிகிச்சை செய்யவரும் மருத்துவரைப்பற்றி ஏதாவது அவதூறு கூறி சிகிச்சையைத் தவிர்த்து - தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முனைந்திருக்க வேண்டும்!

ஒரு ஆபரேஷனுடன் தீராத நோய்கள் எத்தனையோ உண்டு!

இரண்டு, மூன்று ஆபரேஷன்கள் தேவைப்படுவதும் உண்டு!

1963-ல் அண்ணா நடத்திய ஆபரேஷனுக்குப் பிறகு - சற்று தணிந்திருந்த நோய், மீண்டும் தலைதூக்கியுள்ள இந்தச் சமயத்தில் மூலிகை போதுமென்கிறார் மூப்பனார்! ஊசி போட்டால் போதுமென்கிறார் எம்.ஜி.ஆர்.! ஊசி ஊசி என்று வாயால் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது! தீர்மானம் போட்டிருப்பது பிசிஷியன் கருத்து! அதனைச் செயல்படுத்தப் போராட்டம் என்ற அறுவை சிகிச்சைக்கு முற்படுவது சர்ஜனின் பணி!

அந்த சர்ஜன் கையில் உள்ள அறுவை சிகிச்சைக் கத்தியைத்தான், ஆளைக்கொல்லும் வெட்டரிவாள் - வாங்கரிவாள் போல உருவகப்படுத்தி மகிழ்கிறது குமுதம்!

1963-ல் அண்ணா அவர்கள் அரசியல் சட்டம் கொளுத்தும் போராட்டமாம், அறுவை சிகிச்சைக்குக் கத்தியைக் கையில் எடுத்தபோது அன்றிருந்த காங்கிரசாட்சியில் இப்படித்தான் குமுதத்தைப் போல அந்த நோய் தீர்க்கும் கத்தியை

பட்டாக்கத்தியென வர்ணித்து அண்ணா மீது குற்றம் சாட்டினர்!

நீங்கள் ஐவரும் சார்ந்துள்ள தி.மு.கழகம், அது மேற்கொண்டுள்ள கொள்கைக்கிணங்க இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாவதை எதிர்க்கின்றது. அக்கொள்கை அடிப்படையில் அண்ணாதுரை, டி.எம். பார்த்தசாரதி, பொன்னுவேலு, வெங்கா, சுந்தரம் ஆகிய ஐவரும் மற்றும் சிலருடன் ஒன்று சேர்ந்து 12.10.1963 முதல் 16.11.1963 வரையில் சதியில் ஈடுபட்டனர். இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி திணிக்கப்படுவது பற்றி தங்கள் அதிருப்தியை தெரிவிப்பதற்கு அறிகுறியாக இந்திய அரசியல் சட்டம் 17வது பிரிவைச் சட்டவிரோதமாகக் கொளுத்துவதற்குத் திட்டமிட்டார்கள். இது 1957ஆம் ஆண்டு தேசிய அவமதிப்பு தடைச் சட்டத்தின் 5வது பிரிவுப்படி 1957ஆம் ஆண்டு 14வது சென்னை சட்டம் தண்டனைக்குரிய குற்றமாகும். மேற்கண்ட சதித்திட்டம் நிறைவேறும் பொருட்டு இவர்கள் சென்னையில் 2.11.63 அன்று தண்டையார்பேட்டை சஞ்சீவராயன் கோவில் தெருவிலும், 12.11.63 அன்று திருவட்டீஸ்வரன்பேட்டை நாகப்பையர் வீதியிலும் - அதே 12.11.63 அன்று செம்பியம் அகரத்திலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார்கள். அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்த ஆதரவு தேடினார்கள். ஆகவே பீனல்கோடு 120பி பிரிவின்படி 1957ஆம் ஆண்டு தேசிய அவமதிப்பு சட்டத்தின் 5வது பிரிவுப்படியும் குற்றம் புரிந்தவர்களாவார்கள், என்று உங்கள் ஐவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

காங்கிரஸ் அரசின் போலீசார் தொடர்ந்த சதி வழக்கு - தேசிய அவமதிப்பு வழக்கு - இவற்றின் அடிப்படையில் போலீசார் தயாரித்தளித்த குற்றச்சாட்டை 1963 நவம்பர் 29ஆம் நாள் எழும்பூர் நீதிமன்ற நடுவர், அண்ணா அவர்களுக்கும் மற்றும் நால்வருக்கும் படித்துக் காட்டிய பகுதியே மேலேயிருப்பது!

அரசியல் சட்டத்தை அண்ணா அவர்கள் கொளுத்த முற்பட்டது சதித் திட்டம் என்றது காங்கிரசாட்சி!

அதையேதான் இப்போது நம்மைத் தாக்கிட - குமுதம் ஏடு, படமாகப் போட்டுக் காட்டுகிறது!

அரசியல் சட்டத்தின் ஆட்சி மொழிப்பகுதியை - எதிர்காலத் தமிழனின் நன்மைக்காக, அவன் நாசமாய்ப்போகாமல் தடுப்பதற்காக, நாதியற்றவனாக ஆகாமலிருப்பதற்காக - இப்போது நாம் கொளுத்தப் போவது சதியென்று கூறப்படுமேயானால் - சரி! அதனையே தொடர்ந்து செய்வோம்!

அண்ணா வழி, ஆளைத்தீர்த்துக்கட்டும் அரிவாள் தூக்கும் வழியல்ல!

நமது வழி, அண்ணா வழி! குமுதங்களின் குதர்க்கங்களால் நமது வழி மாறிவிடாது! தயாராவோம், நவம்பர் 17க்கு!

அன்புடன்

மு.க.

12-10-1986

1455. மாமியார் உடைத்தால் மண் சட்டி; மருமகள் உடைத்தால்?...

உடன்பிறப்பே,

இந்தி, ஏகாதிபத்தியம் செலுத்த, பாரத நாட்டின் மற்றமொழிகள் அதற்கு அடிபணிந்து கிடக்க, அம்மொழிகளைப் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்படுவதை யார் சகித்தாலும் தமிழன் சகித்துக்கொள்ள மாட்டான்! எச்சரிக்கிறோம்! இந்தியாவிலும் படிப்படியாக ஒரு இலங்கைப் பிரச்சினையை உருவாக்காதீர்கள்!

இதைப்படிக்கும் போது நானோ அல்லது நமது பேராசிரியர் அவர்களோ அல்லது நமது கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரோ - தமிழகத்துப் பொதுமேடையில் நின்று குழுமியிருந்த தமிழ் சாதி மக்களின் முன்னிலையில் மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமருக்கும், இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்கும், இந்தி வெறியர்களுக்கும் விடுத்த எச்சரிக்கை என்றுதானே நீ எண்ணுகிறாய்!

இல்லை, உடன்பிறப்பே இல்லை! இது, நாம் விடுத்த எச்சரிக்கையாக இருந்தால் - ஏ, அப்பா இந்நேரம், பார்த்தீர்களா? பழைய பிரிவினை வாதத்தை மீண்டும் கிளப்புகிறார்கள்! ஒற்றுமைக்கு உலை வைக்கிறார்கள்! தேசியத்துக்குத் தீமூட்டுகிறார்கள்! ஒருமைப்பாட்டை உருக்குலைக்க விரும்புகிறார்கள்! என்றெல்லாம் காங்கிரஸ் முகாம்களிலே மட்டுமல்ல, அண்ணா பெயரால் கட்சி வைத்துள்ளவர்களின் கூடாரத்திலேயிருந்து கூட கூச்சல் கிளம்பி - இதோ பாரீர்! ஆதாரம் - தெளிவான ஆதாரம் - இந்தியாவிலும் படிப்படியாக ஒரு இலங்கைப் பிரச்சினையை உருவாக்காதீர்கள் என்றால் என்ன பொருள்? இலங்கையில் தனித்தமிழ் ஈழம் கேட்பது போல இந்தியாவிலும் தனித்தமிழ் நாடு கேட்போம் என்பதுதானே இதில் மறைந்து கிடக்கும் பொருள்? என்றெல்லாம் வினாக்குறிகளை

விண்ணுக்கும் மண்ணுக்குமாக வில்லாக உயர்த்தி, வளைத்து நம்மீது கணை தொடுத்திருப்பார்கள்!

இப்போதே இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமென்ற உண்மையான நல்லெண்ணமிருப்பின் இந்தி ஆதிக்கத்தைப் பரப்பி எம்மை இரண்டாந்தர குடிமக்களாக்காதீர்கள் என்று நாம் கூறுவதே, பிரிவினை முழக்கம் என வியாக்கியானம் செய்கிற வித்தகர்கள் உண்டே நாட்டில்! விஷத்தில் இதயத்தை நனைத்துக் கொண்டு, வேண்டாததைப் பேசியே நம்மை வெறுப்புக்கு ஆளாக்க வேண்டுமென்று, உதட்டில் மட்டும் இந்தியா ஒற்றுமை எனும் தேனைத் தடவிக் கொண்டு தி.மு.க. பிரிவினையைத் தூண்டுகிறது எனத் தில்லுமுல்லு திருகுதாளம் புரிவோருக்கு, கடிதத்தின் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ள வாசகம், கழகத்தவருடையது என்றால் - பாயசம் பருகியதைப் போல இருக்கும். நம்மீது பாய்வதற்குக் காரணம் கிடைத்துவிட்டதென்று!

15.6.1986 தேதியிட்ட கல்கி இதழில் வெளிவந்துள்ள தலையங்கத்தின் இறுதிப் பகுதியையே இங்கு கோடிட்டுக் குறித்துக் காட்டியுள்ளேன்.

தமிழ் மக்களின் குமுறலை - கொந்தளிப்பை - வெளிப்படுத்த கல்கிக்குள்ள உரிமையையும், கடமையையும் உணர்ந்து - அதே நேரத்தில் இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கையையும், அக்கறையையும் நிலைநாட்டி - எழுதப்பட்டுள்ள எச்சரிக்கைத் தலையங்கம் அது!

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்திற்கு மேலாகவே - இந்திய அரசின் ஆட்சிமொழிக் கொள்கையை, குறிப்பாக, இந்தியை ஆதிக்கம் செலுத்தவிட்டு, தமிழ்நாட்டு மக்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கிட முனையும் இந்தி வெறியர்களின் சூழ்ச்சியைக் கடுமையாக எதிர்த்து வருகிற ஏடு கல்கியாகும்!

கழகத்திற்கும் - கல்கி ஏடு நடத்துவோருக்கும் எத்தனையோ விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, மத்திய அரசின் ஆட்சிமொழி விவகாரத்தில் இரு கருத்துக்கு இடமின்றி - இந்தி ஆதிக்கத்தால் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆகிவிடுவார்கள் என்பதிலும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதிலும் ஒரே விதமான கொள்கை தான்!

ஆனால் உடன்பிறப்பே, நமது நாட்டில் சிலர் இருக்கிறார்கள்! கடல் நீர் ஆவியாக மாறி மழையாகப் பொழிகிறது எனக் கழகத்தவர் சொன்னால் போதும் - யார் சொன்னது? அதெல்லாமில்லை! மழை நீர் நிரம்பித்தான் கடலே உருவானது! என்று மறுப்புரை பகரக் கூடியவர்கள்!

அத்தகையோர் தி.மு.கழகம் எதைச் சொன்னாலும், செய்தாலும் - அதனை விரசமாக அல்லது விஷமமாக - விமர்சிப்பதையே வேலையாகக் கொண்டிருப்பவர்கள்!

சில ஏடுகள் வார ஏடுகளாக வெளிவந்து பரபரப்புடன் விற்பனையாகின்றன அல்லவா? அந்த ஏடுகளில் அ.தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை, ஊழல்களை, ஊர்தோறும் நடைபெறும் அநியாயங்களையெல்லாம் சுட்டிக்காட்டும் போதே - தி.மு.க.வையும் இவர்களென்ன யோக்யதையாம்! என்று ஒரு தட்டுத்தட்டி விடுகிற போக்கைக் காண முடிகிறதல்லவா? காரணம் என்ன தெரியுமா? அவர்களது உள்நோக்கம் - பெரியார் வழியில், அண்ணா வழியில் உண்மையான திராவிட இயக்கமாக அரசியல் அரங்கில் உயிரோட்டத்துடன் இயங்குகிற தி.மு.க.வையும் - ஒரே கல்லில் அடித்து - வீழ்த்தி அழித்து ஒழித்து விடவேண்டும் என்பதுதான்!

அ.தி.மு.க. மீது தவறு கூறும்போது, தி.மு.க. மீதும் ஏதாவது ஒரு தவறினைக் கூறியாக வேண்டும்! இல்லையேல் அந்த இதழாளர்களுக்கு மண்டை வெடித்து விடும்!

தி.மு.க. ஆட்சி நடைபெற்ற காலத்தில் ஒருசில தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டபோது - எப்படி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டன என்பதையும், இப்போதுகூட நகராட்சி, ஒன்றிய, பேரூராட்சி நிர்வாகங்களில், தி.மு.க. தலைமை நோ்மைக்குச் சிறிதும் ஊனம் வராமல் கழகத்தவர் மீது எவ்வாறெல்லாம் நடவடிக்கை எடுக்கிறது என்பதையும் நீ அறிவாய்! நாடறியும்!

கழகம் ஆட்சியில் இருந்த போது சென்னை மாநகராட்சி குறித்த ஒரு குற்றச்சாட்டினைப் பேரவையில் எதிர்க்கட்சியினர் பூர்வாங்கமாகக் குறிப்பிட்டபோது, உடனடியாக மாநகராட்சி மன்றத்தைக் கலைப்பதாக அறிவித்து - மேயர், முன்னாள் மேயர்கள், உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டு வழக்கும் தொடரப்பட்டது! கழக நிர்வாகத்திலிருந்த மாநகராட்சி மன்றம்! கழக அரசு எடுத்த நடவடிக்கை! அதுகுறித்துக் கூட

ஒரு ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி அண்மையில் எழுதிய அவரது வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையில் மாநகராட்சி மன்ற வழக்கில் அந்நாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் எந்தத் தலையீடுமின்றி எங்களைச் சுதந்திரமாக இயங்க விட்டார் என சுட்டிக்காட்டியிருந்தார்!

சில குற்றச்சாட்டுகள் பேரவையில் கூறப்பட்டதையொட்டி, அதில் பூர்வாங்க ஆதாரங்கள் இருந்த காரணத்தால், கழக ஆட்சியில் அமைச்சர்கள் இரண்டு மூன்று பேர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட வரலாறும் உண்டு!

தஞ்சைத் தரணியில் எனது ஆருயிர் நண்பராக இருந்த ஒருவர், வங்கித் தலைவராக இருந்தவர் - தவறிழைத்தார் என்பதற்கான தகவல் வந்தவுடன் அவர் கைது! அவர்மீது வழக்கு! தண்டனை!

நெருங்கிய உற்ற உறவினர் ஒருவர், அதிகாரியொருவர் துணையுடன் நிலமொன்றைப் பட்டா செய்து கொண்ட செய்தி அறிந்து - அந்த அதிகாரிமீதும் கடும் நடவடிக்கை, நிலப்பட்டாவும் உறவினரிடமிருந்து ரத்து செய்யப்பட்டது!

இப்படித் தவறு கண்ட இடத்து அமைச்சர்கள், ஆருயிர் நண்பர்கள், உற்றார் உறவினர், கழகத்தினர் என்று பார்க்காது உரிய நடவடிக்கை எடுத்த ஆட்சியாகத்தான் கழக ஆட்சி இருந்தது!

ஆனால் நம்மைப் பார்த்தாலே அலர்ஜியாக இருப்பவர்களுக்கு, நமது ஆட்சிக் காலத்தில் தவறு செய்தமைக்காக - தவறு செய்தோர் மீது நாம் எடுத்த நடவடிக்கையில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட எடுக்க நினைக்காமல் - தவறு புரிவோரைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு, தானும் தவறு புரிந்து கொண்டிருக்கிற அ.தி.மு.க. ஆட்சியெனிலோ அதிரசம் சாப்பிட்டது போல் இனிக்கிறது! இல்லையேல் அ.தி.மு.க.வுடன் நம்மையும் இணைத்துப்பேசி ஆத்மசாந்தி அடைந்து கொள்கிறார்கள்!

இப்போது பாரேன்! ஒரு நகரசபைத் தலைவர், நகரசபையில் முறைப்படி தீர்மானம் நிறைவேற்றாமல் நகர் நலம் என்ற பெயரால் லட்சக்கணக்கில் வசூல் செய்ய முடிவு செய்து, நிதி திரட்டும் பணியைத் தொடங்கி விட்டார்! நகரசபைக் கணக்கில் பணத்தை வங்கியில் போடவும் இல்லை! நகராட்சி ஆணையருக்கு அதில் எந்த பொறுப்பும் தரப்படவில்லை! இது நகராட்சி விதிமுறைகளுக்கு உகந்ததல்ல!

இதை நாம் கண்டு கொள்ளாமலே இருந்திருந்தால் - உடனே எழுத ஆரம்பித்திருப்பார்கள், கடலூர் நகராட்சியில் ஊழல்! நகராட்சியில் அதிகாரப்பூர்வமாகத் தீர்மானம் போடாமலே நகர்நலம் என்ற பெயரால் வசூல் கொள்ளை! என்று பக்கம்பக்கமாக!

ஆனால் நடந்தது என்ன? அந்த நகராட்சித் தலைவர் நல்லவராகக் கூட இருக்கலாம் - நாணயமானவராகக் கூட இருக்கலாம் - எனினும் நகர மக்கள் நலனுக்காக நகராட்சிப் பெயரைப் பயன்படுத்தி நிதி வசூலிக்கும்போது, அந்த நிதியை நகராட்சியின் சார்பில் வங்கியில் செலுத்தி - நகராட்சி ஆணையர் மூலம் விதிமுறைப்படி செலவு செய்ய வேண்டுமென்று அந்த நகராட்சித் தலைவரை நானும், பேராசிரியரும் நேரில் அழைத்து அறிவுரை கூறி அனுப்பினோம். எழுத்து மூலமும் தலைமையின் கருத்து அவருக்கு அறிவிக்கப்பட்டது! சரியென்று ஒப்புக்கொண்டு போனவர் அதன்படி செய்யவில்லை! பலமுறை வலியுறுத்தியும் அவர் தனது போக்கின்படி நடந்து கொண்டதால் வேறு வழியின்றிக் கழகத்திலிருந்து விலக்கி விட்டோம் அவரை!

இதில் சில ஏடுகள், அந்த நகராட்சித் தலைவருக்காக வாதாடுகின்றன! நகராட்சி விதிமுறைகளுக்கு மாறாக நன்கொடை வசூல் செய்து நகராட்சியில் தீர்மானம் எதுவும் அதிகாரப்பூர்வமாக நிறைவேற்றாமலே செயல்படுவது ஊழல் இல்லையாம்! ஒருமுறைக்கு இருமுறை, ஏன் பலமுறை அறிவுரை கூறியும் அதனை ஏற்காமல் செயல்பட்ட அந்த நகராட்சித் தலைவரைக் கட்சியைவிட்டு விலக்கியதுதான் ஊழலாம்! இப்படி எழுதுகின்றன பரபரப்பு ஏடுகள்! என்ன நியாயம் பார்த்தாயா?

உதகமண்டலத்தை ஊட்டி என்றே பெயர் மாற்ற வேண்டுமென்று அங்குள்ள கழக நகராட்சித் தலைவர் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியதை நான் கண்டித்து அறிக்கை விடுத்தேன். பிறமொழிப் பெயர்கள் தமிழில் மாற்றப்படவேண்டுமென்று விரும்புகின்ற இயக்கம், இன்னும் சொல்லப்போனால் டால்மியாபுரம் எனும் பெயரைக் கல்லக்குடி எனத் தமிழில் மாற்ற வேண்டுமென்பதற்காகப் பெரும் போராட்டம் நடத்திய இயக்கம் - உதகமண்டலம் என்பதை ஊட்டி என மாற்ற வேண்டுமென்று கூறுவதை எப்படி ஏற்க முடியும்?

உடனே சில ஏடுகள், அந்த நகராட்சித் தலைவருக்காகப் பரிந்து பேசிக்கொண்டு ஊட்டி என்றே இருக்க வேண்டுமென

- அந்தத் தலைவரைத் தி.மு.க. தலைமைக்கு எதிராகத் தூண்டிவிடவும் - அதில் ஏதோ தி.மு.க. தலைமை பெரும் ஊழல் புரிவதாக எழுதவும் தலைப்பட்டுள்ளன!

ஏன் இவற்றை, இப்போது மொழிப் பிரச்சினையோடு தொடர்புபடுத்தி எழுதுகிறேன் என்றால் - கடலூரில் மக்கள் நல நிதி திரட்டுவது நகராட்சியின் அதிகாரப்பூர்வமானதாக இருக்க வேண்டுமென்று நாம் கூறினால் - நேர்மையைப் பற்றி நாங்கள்தான் கவலைப்படுவோம்! நீ கவலைப்படக்கூடாது! என்கிறார்கள் இதழாளர்கள் சிலர்!

உதகை என்ற தமிழ் எழுத்துகளே ஒளி விடட்டும்! ஊட்டி என்ற சொல் வேண்டாமெனில், தமிழ்ப் பற்று எங்களுக்கே உரியது - நீ அது பற்றிப் பேசுதல் பாபம்! என்கின்றனர் அதே இதழாளர்கள்!

ஆகவே, எதையும் தி.மு.க. சொன்னால் அது, அவர்களுக்கே ஏற்புடையதாக இருப்பினும் அதைக் கேவலமாக விமர்சிப்பது அவர்களது பழக்கமாகி விட்டது!

இந்தி ஆதிக்கத்தை நாம் எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறோம் என்பதற்காக - நேருவின் உறுதி மொழி அரசியல் சட்டத்தில் இடம் பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள அ.தி.மு.க.வினர்கூட, அவர்களது பத்திரிகையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை எவ்வளவு இழித்தும், பழித்தும் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள் பார்த்தாயா?

இந்தி ஏகாதிபத்தியம் செலுத்த முற்பட்டால், இங்கேயும் ஒரு இலங்கைப் பிரச்சினை உருவாகிவிடும்!

என்று கல்கி நல்ல எண்ணத்துடன் எச்சரித்துள்ளதைத்தான் நாமும் பல நேரங்களில் சுட்டிக் காட்டுகிறோம்!

ஆனால் அதனைப் பிரிவினையென்றும், ஒருமைப் பாட்டுக்கு விரோதமென்றும் கொட்டை எழுத்துகளில் செய்தி பிரசுரிக்கும் ஏடுகள் நமது தி.மு.கழகத்தின் மீது கொண்டுள்ள ஆத்திரத்தின் அடையாளச் சின்னங்களாகத்தானே விளங்குகின்றன!

இலங்கைப் பிரச்சினை எப்படி உருவானது? ஏன் உருவானது? அது எப்படி வலுப்பெற்றது?

இந்த வினாக்களுக்கு விடையினை இதோ 1964 ஜனவரி 3ஆம் நாளிட்ட தினமணி இதழ் தலையங்கம் மூலமாகத் தருகிறது பார்!

இலங்கை சர்க்கார் சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருந்து வரும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர். தமிழ்மொழி இரண்டாந்தர அந்தஸ்தைப் பெறுவதும், தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக இருந்திட நிர்ப்பந்திக்கப்படுவதும், எதிர்காலத்தில் பல தொல்லைகளை விளைவிக்கும். தமிழர் வாழும் பகுதிகள் தனியாகப் பிரிந்துவிட வேண்டுமென்ற கோரிக்கை இந்த அநீதியின் காரணமாக வலுவடையவே செய்யும்.

தினமணி தான் எழுதுகிறது உடன்பிறப்பே இப்படி! ஆனால் இது 1964-ல்!

மொழிப் பிரச்சினை முற்றினால் தனிநாடு கோரிக்கை வலுவடையும் என எச்சரித்தது தினமணி! 1964-ல்!

அதன் ஆருடப்படியே தமிழ்ஈழம் கோரிக்கை வலுவடைந்து விட்டது!

தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கிடுவதை சகிக்க முடியாது! எனவே இந்தியாவிலும் ஒரு இலங்கைப் பிரச்சினையை படிப்படியாக உருவாக்காதீர்கள்!

என 1986-ல் எச்சரித்துள்ளது கல்கி! நல்ல நோக்கத்துடன்!

ஆனால் இதே எச்சரிக்கையை நாம் வழங்கிடும் போது - ஆளவந்தார்கள், ஆதிக்கக்காரர்கள் - அலர்ஜியுடையோர் - நம்மைப் பிரிவினைவாதிகள் எனச் சீறிவிழுகிறார்கள்!

மொழிப்பிரச்சினை மட்டுமல்ல, எதிலுமே அந்த அவர்களுக்கு ஒப்புதலான கருத்தாக இருந்தாலும் கூட - அதனை திசைதிருப்பவே முனைவர் என்பதற்கே இக்கடிதத்தின் இடையே கடலூரையும் உதகையையும்கூட உதாரணத்துக்கு இழுக்க வேண்டியிருந்தது!

என் செய்வது, மாமியார் உடைத்தால் மண் சட்டி! மருமகள் உடைத்தால் பொன் சட்டி! என்பது பழமொழியல்லவா?

அன்புடன்

மு.க.

13-10-1986

1456. காவற்பெண்டு போல் களிப்புறும் கழகம்!

உடன்பிறப்பே,

கழக மாவட்டச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாநில அமைப்பாளர்களின் கூட்டம் அக்டோபர் 15ஆம் நாள் மாலை 4 மணி அளவில் கூடி ஏறத்தாழ மூன்றரை மணி நேரம் விவாதித்து - நவம்பர் 8, 9 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெற இருக்கும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநில மாநாடு குறித்தும், நவம்பர் 17-ல் தொடங்கும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு முதற்கட்டப் போராட்டம் குறித்தும் சீரிய முடிவுகளை எடுத்துள்ளது.

அந்த விபரங்கள் தமிழக நாளேடுகளில் வெளி வந்துள்ளன. விளம்பரம் பெறுவதற்காகவே தங்களை ஆளுங்கட்சியிடம் விற்றுவிட்ட ஒரு சில ஏடுகளைத் தவிர, மற்ற ஏடுகள் அனைத்தும் நாம் நடத்த இருக்கிற இந்தி எதிர்ப்புப் போராட்டச் செய்திகளை பத்திரிகா தர்மம் எனும் பண்பாட்டுக்கேற்ப வெளியிட்டுள்ளன. அண்ணாவின் பெயரைச் சொல்லி அவர் பெயராலேயே கட்சி வைத்துக் கொண்டுள்ள ஆளுங்கட்சி ஏடுகளோ; அண்ணாவை அணு அணுவாகச் சித்ரவதைச் செய்வது போல இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையே கேலி செய்தும், இதனால் இந்தியாவின் ஒருமைப்பாடு கெட்டுவிடுமென்றும், தேசிய விரோதமான செயலில் தி.மு.க. ஈடுபடுகிறதென்றும் கண்டனக் கணைகளை வீசி எழுதியும், சித்திரங்கள் தீட்டியும் - இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கண்டித்து விடப்படும் ஒரு சிலரது அறிக்கைகளைப் பெரிதாக வெளியிட்டு அகமகிழ்ந்தும் - தங்களுக்கும் அண்ணாவின் லட்சியங்களுக்கும் எள்முனையளவும் தொடர்பில்லை என்பதைக் காட்டிக் கொள்கின்றன.

அ.தி.மு.க. கூடாரத்தில் இந்தி எதிர்ப்பு என்பதே கேலிக்குரிய ஒன்றாகவும் - கண்டிக்கப்படக் கூடிய ஒன்றாகவும் - அதன் தலைமையினால் கருதப்படுகிற காரணத்தினால்தான், அக்கட்சியின் பொதுச்செயலாளராகத் தன்னைத் தானே

நியமித்துக் கொண்ட எம்.ஜி.ஆர். அவர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை யூஸ்லெஸ் என்று வர்ணித்திருக்கிறார்.

6.10.86ஆம் நாளன்றுதான் சென்னை மாநகரில் அ.தி.மு.க.வின் செயற்குழு கூடி, நேரு உறுதிமொழி காப்பாற்றப்படும் என்று ராஜீவ்காந்தி உறுதியளித்திருப்பதாக இவர்களே சொல்லிக் கொண்டு, அதற்காக ராஜீவ் காந்திக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, அடுத்து, நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்றும் மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சுமார் ஒருவாரகாலத்தில், ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளரும், முதலமைச்சருமான எம்.ஜி.ஆர். நிருபர்களைச் சந்தித்த போது, நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம் பெற வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. ராஜீவின் உறுதிமொழியே போதுமானது என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தங்கள் கட்சியின் பொதுச்செயலாளரும் - அறப் போர்க்களங்கள் பலகண்ட? புரட்சித் தலைவருமான - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், தங்களை இப்படிக் காலைவாரி விடுவார் என்று தெரியாமல் - அந்தக்கட்சியில் இன்னமும் திராவிட பாரம்பரிய உணர்வோடு ஒட்டிக் கொண்டிருக்கிற அமைச்சர் காளிமுத்து, ஆலடி அருணா போன்றவர்கள் நெல்லையில் ஒரு இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தி, இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகப் போர்முரசு கொட்டியிருக்கிறார்கள். அந்த மாநாட்டில் அவர்கள் பேசியுள்ளதை ஏடுகளில் படிக்கப் படிக்க நெஞ்சம் இனிக்கத்தான் செய்கிறது!

இனித்திடும் நெஞ்சில், ஒரு ஏக்க உணர்வு கூட! கூர் மழுங்காத இந்தக் கணைகள் - விரலற்றோர் கையில் தொங்கிடும் வில்லில் பூட்டப்படாமல் அம்புக் கூட்டில் வீணாகின்றனவே என்று!

என் செய்வது! அவர்களே விரும்பி ஏற்றுக் கொண்ட இடம்! எனவேதான் அவர்தம் முழக்கங்கள், அங்கு எழும் குழப்பங்களுக்கிடையே ஈளைகட்டியோர் இருமலைப் போல ஆகி விடுகின்றன! அதனை மதிப்போர் இல்லை! கேட்போர்

இல்லை! உண்மையைச் சொன்னால் அதனை வெறுப்பாரே அங்கு மிகுதி!

இந்தி எதிர்ப்புப் போராட்டக்களத்தில் சாகின்ற தகுதி எனக்குக் கிடைக்க வேண்டும் என்கிற எண்ணத்தை நான் பெறுகிறேன். சட்டத்தை எரித்தவர்கள் தேர்தலில் நிற்கலாமா என்ற கேள்விக் குறிகள் எழுகிறபொழுது, நான் சட்டத்தை எரித்து விட்டுத்தான் அமைச்சராக இருக்கிறேன் என்பது மட்டுமல்ல, சட்டத்தை எரித்ததாலேயே நான் அமைச்சராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியை நம்மீது திணிப்பதைப் புரிந்து கொள்ளாத வகையில், ஈரத்துணியைப் போட்டுக் கழுத்தை அறுப்பது போல திணிக்கிறார்கள்.

இது அக்டோபர் 12 - நெல்லை மாநாட்டில் அமைச்சர் காளிமுத்து பேசியது!

இன்னும் கூட வேகமாக அந்த மாநாட்டில் காளிமுத்து பேசிய வாசகம் ஒன்றுண்டு!

காசியிலே இந்துமதத் தலைவர்கள் ஒன்று கூடி இந்தி மொழிக்குத் தனிச்சிறப்பு சேர்க்க வேண்டுமென்றும், உருது மொழியை ஒழித்துக் கட்ட வேண்டுமென்றும் பேச ஆரம்பித்ததின் விளைவுதான் பாகிஸ்தான் தனி நாடாக ஆனது! பிரிந்த பாகிஸ்தானில் வங்காளமொழி புறக்கணிக்கப்பட்டதால்தான் வங்காளத்தை தாய்மொழியாகக் கொண்டவர்கள், தனிநாடு கேட்டு பங்களாதேஷ் உருவாயிற்று! பாகிஸ்தான் கேட்பதற்கு முன்பே திராவிடஸ்தான் கேட்ட பரம்பரை திராவிட இயக்கப் பரம்பரை!

அதே நெல்லை மாநாட்டில் அமைச்சர் காளிமுத்து புரிந்த கர்ச்சனைதான் இதுவும்!

இந்தி எதிர்ப்பு இயக்கம் அரசியல் லாபத்துக்காக நடத்தப்படுகிற இயக்கம் என்று கூறுவது, தேசியவாதிகளின் பிதற்றல்!

இதுவும் நெல்லை மாநாட்டில் ஆலடி அருணா தந்த பதில்! அரசியல் ஆதாயம் தேடிகள் என இந்தி எதிர்ப்பாளரை இழித்துப் பேசும் அரைவேக்காடுகளுக்கு!

ஆலடி அருணா அத்துடன் நிற்கவில்லை. அரசியல் சட்டத்தை திருத்தவேகூடாது என்றும் - நேருவின் உறுதிமொழியை

அரசியல் சட்டத்தில் இணைக்கத் தேவையில்லையென்றும் - வக்கணை பேசுகிற ஒரு சில தேசியவாதிகளுக்கும், ஏன், அவருடைய கட்சியிலேயே அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை மறந்துவிட்டு எழுதியும் - பேசியும் - பேட்டி கொடுத்தும் குழப்புகிற தலைவர்களுக்கும் சுடச்சுட பதில் ஒன்றை அளித்திருக்கிறார் அந்த மாநாட்டில்!

அரசியல் லாபத்திற்காக இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நடத்தவில்லை! தமிழ் காக்க, தமிழ் இனம் காக்கவே இந்த இயக்கம் நடத்தப்படுகிறது! இன்றுள்ள அரசியல் சட்டத்தை முழுமையாகக் காஷ்மீர் மாநிலத்தில் அமல் செய்ய முடியுமா? தற்போது அமைக்கப்பட்ட மிசோராம் மாநிலத்தில் அமல் செய்யமுடியுமா? அந்த மாநில மக்கள் மத்திய அரசின் அனுமதியின்றி சீனாவுடன் வியாபாரம் செய்யலாம். இந்தச் சலுகை மற்ற மாநிலங்களுக்கு உண்டா? அந்த மாநிலங்களுக்குச் சில சலுகைகள், விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருப்பதுபோல நாங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் இணைக்கவேண்டும்.

இப்படிச் சங்கநாதம் செய்துள்ள ஆலடி அருணா, ராஜீவின் வாக்குறுதியே போதுமானது என சப்பைக் கட்டு கட்டுகிறவர்களுக்கும் சவுக்கடி கொடுக்கத் தவறவில்லை!

இந்தி எதிர்ப்பு எரிமலையாகும் சந்தர்ப்பங்களில் அதன் வேகத்தைத் தணிப்பதற்கும், திசை திருப்புவதற்கும் வாக்குறுதி தரப்படுகிறது, உண்மையில் மத்திய அரசு, இந்தியை ஆட்சிமொழியாக அமல் செய்வதில் உறுதியாக இருக்கிறது. எனவே விளைவுகளைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் நாம் துணிவுடன் போராடியாக வேண்டும்.

இதுவும் நெல்லை மாநாட்டில் ஆலடி அருணா கொட்டிய முரசுதான்!

இத்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல அந்த மாநாட்டில் அமைச்சர் காளிமுத்துவும், ஆலடி அருணாவும் - இந்தி எதிர்ப்புப் போர் குறித்து முழக்கிவிட்டு இறுதியாக,

எட்டப்பர்களே! விலகி நில்லுங்கள்! இலட்சியவாதிகளே! அணிவகுத்து வாருங்கள்!

என்று எக்காளக் குரல் கொடுத்திருக்கிறார்கள்!

இந்த நெல்லை மாநாடும் - அதில் அருணாவும், காளிமுத்தும் ஆற்றிய உரைகளும் - தி.மு.கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போர்முனையின் கூர் மழுங்கச் செய்வதற்காக என்று அவர்கள் இருவரும் இப்போது கூறமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் அவர்களது வீரம்செறிந்த மொழிகளை இந்தக் கடித வாயிலாக என் மனத்திலும் பதிய வைத்துக் கொண்டு உடன்பிறப்பே! உன் மனத்திலும் பதிய வைக்கின்றேன்!

உன் மகன் எங்கே போயினன்? எனக்கேட்ட போது அவன் போன இடம் போர்க்களத்தில் எந்த இடமோ தெரியாது! ஆனால் அந்தப் புலியிருந்த குகை இதோ! எனத் தனது வயிற்றைக் காட்டினாள் காவற்பெண்டு எனும் புறநானூற்றுத் தாய்! எனப் படித்திருக்கிறோம் அல்லவா?

அந்தக் காவற்பெண்டுபோலத் தனது வயிற்றைத் தடவிப் பார்த்து களிப்படைகிறது கழகம்! காளிமுத்து, அருணா போன்றவர்களின் இந்தி எதிர்ப்பு உரை கேட்டு!

அன்புடன்

மு.க.

18-10-1986

1457. இந்தியா என்றால் என்ன?

உடன்பிறப்பே,

ரஷ்ய நாட்டில் ஒரு சிற்றூர்! அந்த ஊரின் அழகிய குன்றமொன்றில் வெள்ளை நிறத்திலான இல்லமொன்று இருந்தது! ஒருநாள் ஒரு சிறுவன் அந்தக் குன்றை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவனுக்கெதிரே நெடிய நீலச் சட்டையணிந்த ஒரு மனிதர் வந்தார்! சிறுவன் அந்த மனிதரைப் பார்த்து, அதோ அந்த வீட்டில்தானே லெனின் வாழ்கிறார்? என்று கேட்டான். அந்த மனிதர் ஆமாம் தம்பி! அவருக்கென்ன வந்தது? என்று கேட்டார். ஓ! உமக்கு அவரைத் தெரியாதா? அவரை எல்லோரும் நேசிக்கிறார்கள். அவரைக் காண வேண்டுமென்றுதான் நான் போகிறேன் என்றான் சிறுவன்! உடனே அந்த மனிதர், அப்படியா? போய் வா! என்று சொல்லிவிட்டு வேறுதிசையில் சென்று விட்டார்!

அப்போது சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பெண் அவனைப் பார்த்து, நீ லெனினுடன் என்ன பேசிக் கொண்டிருந்தாய்? என்று வியப்புடன் கேட்டாள்!

அவளைக்காட்டிலும் அதிக வியப்படைந்த அந்த இளைஞன், அவரா லெனின்? என்று விழிகளை அகலவிரித்துக் கொண்டு - அவர் பின்னாலேயே தொடர்ந்து ஓடிப்போய்ப் பார்த்து, அவர் விரைந்து சென்றுவிட்ட காரணத்தால் ஏமாற்றத்துடன் திரும்பினான்!

இவ்வாறு மாவீரன் லெனின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி உண்டு என்பர்!

இந்த நிகழ்ச்சிக் கதை, இப்போது ஏன் என் நினைவுக்கு வந்தது என்று கேட்கிறாயா?

லெனினைத் தன் எதிரே பார்த்துக் கொண்டிருக்கும் போதே, லெனின் யார் என்பது தெரியாமல் அந்த இளைஞன், அவரிடமே அவரைப் பற்றி வினவிக் கொண்டிருக்கிறான்.

லெனினுக்கு நேராக நின்று கொண்டே லெனினைத் தேடிய சிறுவனைப்போல - இன்றைக்குச் சிலபேர், இந்தியாவில் இருந்துகொண்டே இந்தியாவைத் தேடுகிறார்கள்!

நான் குறிப்பிட்ட லெனின் பற்றிய நிகழ்ச்சியில், சிறுவனிடம் லெனின் சொன்னாராம் - லெனின் என்னைப் போன்றேயிருப்பார்! அவருக்கும் எனக்கும் வித்தியாசமே இல்லை! என்று!

ஆனால் சிறுவனோ அதை நம்பமறுத்து, இல்லை! இல்லை! லெனின் மிகவும் உயரமான மனிதர்! உம்மைப் போல நீலநிற சட்டை அணிந்திருக்க மாட்டார்! கறுப்பு அங்கிதான் அணிந்திருப்பார்! என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டானாம்!

இந்தியாவில் இருந்து கொண்டே இந்தியாவைத் தேடுபவர்களும் - இந்தியா என்றால் இப்படித்தான் இருக்கும் - இருக்க வேண்டும் - என்று தங்கள் மனம் போல சித்தரித்துக் கொண்டு இந்தியாவைத் தேடும் போதுதான், லெனினுக்கு நேராகவே நின்று கொண்டு - லெனின் என்றால் இப்படித்தான் இருப்பார் என்று கற்பனை செய்து கொண்டு, உண்மையான லெனினைக் காணத் தவறிய சிறுவன் நமது நினைவுக்கு வருகிறான்!

இந்தியா என்றால் குமரிமுனை முதல் இமய உச்சி வரையில் ஒரே கலாச்சாரம்! ஒரே மொழி! ஒரே இனமக்கள்! இதற்குப் பெயர்தான் இந்தியா! அதைத்தான் தேடுகிறேன்! என்போரிடம், இல்லை அய்யா இல்லை! இந்தியா என்பது பல இன, பல மொழி, பல கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் வாழுகிற நாடு! என்று எவ்வளவு தான் உரைத்தாலும் - இந்தியாவைப் பற்றி தங்கள் மனம் போன போக்கில் ஒரு கருத்துக் கொண்டிருப்பவர்கள் - இந்தியாவே மனித உருக்கொண்டு எதிரே வந்து நின்று, இன மொழி பண்பாடுகள் எனும் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காண விழையும் நான்தான் இந்தியா என்று அடித்துச் சொன்னால்கூட ஏற்றிட மறுத்திடுவர்!

ஆட்சி மொழி இந்தி! அவியலாகப் பட்ட கலாச்சாரம்! இவற்றை ஏற்றுக்கொண்ட இந்திய மக்கள் வாழும் இடமே இந்தியா!

நீர் லெனின் அல்ல! அவர் மிக உயரமானவர்! கறுப்பு அங்கி அணிந்திருப்பார் என்று தனது மனத்தில் வரித்துக் கொண்ட உருவத்தையே போற்றியவாறு - உண்மையான லெனினுடன் உரையாடி மகிழத் தவறி விட்ட அந்தச் சிறுவனைப் போலவே

- இந்தியாவுக்கென்று இவர்களே சில இலக்கணங்களை மேலே கோடிட்டுக் காட்டியதுபோல வகுத்துக் கொண்டு, உண்மை இந்தியாவைக் காணத் தவறி விடுகிறார்கள்!

அதனால் தான், தமிழ் நாட்டில் தமிழன் தனது இனம், மொழி, பண்பாடு இவைகளை அழித்துக் கொள்ளவும் - இந்தி மொழிக்காரனுக்கு அடிமையாக இரண்டாந்தர குடிமகனாக ஆகவும் - ஒப்புக் கொள்ள முடியாதென மறுத்து, அதற்கேற்ப அரசியல் சட்டம் இந்தி மொழி ஆதிக்கத்தை விலக்கிக் கொள்ளும் வண்ணம் திருத்தப்பட வேண்டுமெனக் கோருகிறான்!

இந்தியா என்றால் என்ன என்பதை உணர்ந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள், இந்தி ஆதிக்கத்துக்குக் கோல் வழங்கும் அரசியல் சட்டத்து மொழிப்பிரிவின் அப்பகுதியைத் தூக்கி அரபிக் கடலில் எறிய வேண்டுமென்றார்!

லெனின் கதையில் வரும் சாலையோரத்துப் பெண்மணிக்கு லெனினைத் தெரிந்ததுபோல - ராஜாஜிக்கு இந்தியாவைத் தெரியும்!

இந்தியாவின்மீது பற்று கொண்டவர்களில் ஒருவர் நண்பர் ப. சிதம்பரம் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. லெனின் மீது பற்றுக்கொண்ட இளைஞனைப் போல! ஆனால் அவருக்கு இந்தியா எது? என்றுதான் தெரியவில்லை. ரஷ்யச் சிறுவனுக்கு லெனின் யார் என்று தெரியாதது போல!

அதனால்தான், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று அண்ணா வழியில், அந்தச் சட்டத்தில் இந்திதான் இந்தியாவின் அரசாங்க மொழி என்ற பகுதியைக் கொளுத்தி, நமது கோரிக்கையை வலியுறுத்துவது இந்திய தேசப் பற்றுக்கு விரோதமாக அவருக்குத் தெரிகிறது!

பாவம்! அவர் பாராளுமன்றத்திலேயே சொன்னவர் - ஒருமனிதன் தலைகீழாக நின்றால் எதிரேயுள்ள எல்லாமே தலைகீழாகத் தெரியுமென்று!

ஒருவேளை அவருக்கு மட்டும் அப்படித் தெரிகிறது போலும்!

எது எப்படித் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் - இந்தியா என்பது எது? என்பது அவருக்கும், அவரைப்போலவே கழகத்தின்மீது காய்ந்துவிழும் காங்கிரசாருக்கும் தெரிவது நல்லது!

அன்புடன்

மு.க.

20-10-1986

1458. அடியேன் அழைக்கின்றேன் இன்று!

உடன்பிறப்பே,

அரசியல் சட்டம் 17வது பிரிவை நாம் துச்சமாக மதிக்கிறோம் - கால் தூசாகக் கருதுகிறோம் என்பதை நாம் நமது போராட்டத்தின் மூலம் எடுத்துக்காட்டியாக வேண்டும்.

நமக்குப் பிடிக்காததை ஒழிக்க மூன்று காரியங்கள் செய்யலாம். ஒன்று - அதைக் கிழித்தெறியலாம். அதுமிகவும் அழுக்காக இருந்தால் குழி தோண்டிப் புதைக்கலாம்.

இந்த இரண்டும் செய்தால் மற்றவர்களுக்குத் தெரியாது. ஆகையால் தீயிட்டுக் கொளுத்துவதுதான் மூன்றாவது காரியம்.

எனவே, ஊரும் உலகமும் அறிய கொளுத்திக் காட்டுவதைத் தவிர வேறு காரியமில்லை. எனவே போராட்டத்தின் முதல் கட்டமாக அரசியல் சட்டத்தில் உள்ள மொழிப்பிரிவான 17வது பிரிவை - பகிரங்கமாக அறிவித்து விட்டுப் பொது இடத்தில் கொளுத்துகிற நிகழ்ச்சி நடைபெறும்.

என்ன! போராட்டம் நெருங்குகிற காரணத்தால் கடிதத்தில் கடுமையான நடை தொடங்கிவிட்டதோ என நீ எண்ணிடுவாய்! இந்தக் கருணாநிதியைப் பார்த்தீர்களா? கடிதம் என்ற பெயரால்!

கிழித்தெறிக!

குழிதோண்டிப் புதைத்திடுக!

தீயிட்டுக் கொளுத்திடுக!

என்ற சொற்களை வீசி, அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் உள்ள இந்தி ஆட்சிமொழியெனும் பகுதியை எதிர்த்து நடத்தும் போராட்டத்தை மிக வேகமாக ஊக்கப்படுத்துகிறான் என்று காங்கிரஸ் நண்பர்கள் அறிக்கைகள் விடக்கூடும்!

அண்ணாவையே புரிந்து கொள்ளாமல் அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறவர்களுக்கு சிலர் தவிர இ.காங்கிரசாரின் அந்த அறிக்கைகள் அதிரசம் போல் இனித்திடலாம். அவற்றை அவர்களின் கட்சி ஏடுகளில் வெளியிட்டு மகிழலாம்!

ஆனால், ஒன்று உடன்பிறப்பே - உனக்குச் சொல்லிவிடுகிறேன்! இந்தக் கடிதத்தின் தொடக்கத்தில் நான் கோடிட்டுக் குறித்துள்ள வாசகங்கள் என்னுடையவை அல்ல!

14.10.63 சென்னைப் பதிப்பு நம்நாடு இதழைப் புரட்டிப் பார்த்தால் இந்த வாசகங்களுக்கு சொந்தக்காரர் யார் என்று புரியும் உனக்கு!

சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா அறிவிப்பும் வேண்டுகோளும் என்ற தலைப்பிட்டு வந்துள்ள முதல்பக்க அறிக்கையிலேதான் இந்த வாசகங்கள் போர் முரசமாக ஒலிக்கின்றன!

அந்த அறிக்கையின் இறுதிப் பகுதியில், நானே முதலில் அந்த காரியத்தை நவம்பர் 17ஆம் நாள் மாலை 4 மணிக்கு, அறிவகத்திலிருந்து புறப்பட்டுச் சென்று கடற்கரையில் செய்யப் போகிறேன் என்றும் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

அறிவித்தவாறு போராட்டத்தில் ஈடுபட வந்த போதுதான் அண்ணா அவர்கள் கைது செய்யப்பட்டு, அரசியல் சட்டம் 17வது பிரிவைக் கொளுத்த - சென்னையிலும் வேறு பல ஊர்களிலும் பொதுக்கூட்டங்கள் போட்டு - சதித்திட்டம் வகுத்தார் என்று குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டு, அந்த சதிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று பெரியவர் டி.எம். பார்த்தசாரதி, டி.கே. பொன்னுவேல், வெங்கா, சுந்தரம் ஆகியோரையும் கூண்டிலே ஏற்றி - அண்ணா உள்ளிட்ட ஐவருக்கும் ஆறுமாத தண்டனை வழங்கிட வழிவகுத்தது அன்றிருந்த காங்கிரசாட்சி!

அண்ணா அறிவித்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் குறித்து அப்போது ஆளவந்தார்களாக இருந்த காங்கிரசார் எப்படியெல்லாம் விமர்சனம் செய்தார்களோ, அதிலே சிறிதும்

மாற்றமின்றி இப்போதுள்ள தமிழக ஆளுங்கட்சியினரும் ஒரு சிலர் தவிர நாம் அறிவித்துள்ள இந்தி ஆதிக்க எதிர்ப்புப்போராட்டம் குறித்து விமர்சனம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள்!

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொள்வதுபோல - அண்ணா வழியில் கருணாநிதியும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்கிறார் என்பதாக ஒரு அமைச்சர் கேலி பேசியிருக்கிறார்!

போராட்டம் - அடக்குமுறை - சிறைச்சாலை - தியாகம் என்றெல்லாம் அவற்றின் பக்கமே தலைவைத்துப் படுக்காமல், எடுத்த எடுப்பிலேயே பதவிச் சிம்மாசனத்தில் ஏறிக்கொண்டவர்களுக்கு போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் அதன் தன்மை, தேவை இவற்றை அறியாமல் - அவற்றை நடத்துகிறவர்களின் மீது சேறுவாரி வீசுகிற செயலில் ஈடுபடத்தான் தோன்றும்!

நாம்தான் பதவிக்குப் பல் இளித்துக் கிடக்கிறோம் - இருப்பதை இழக்காமல் இருக்க எப்படியும் வாழ்வது என முடிவுகட்டி, மூதேவியைக்கூட மகாலட்சுமி என வர்ணித்துக் கொண்டு காலத்தை ஓட்டுகிறோம். அவர்களாவது ஏதோ அண்ணாவின் கொள்கை, லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு அடி, உதைபட்டு அடக்குமுறைகளையேற்றுக்கொண்டு - கடும்சோதனைகள் வரினும் கவலையில்லையெனக் காரியமாற்றுகிறார்களே என உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டாவது கிடக்கலாம் அந்தப் பதவியாளர்கள்!

பாவம்! அவர்களால் அதுவும் முடியவில்லை! அதனால்தான் அவர்கள் நமது போராட்டத்தை எதிர்த்துப் பேசுகிற பேச்சுக்களைப் பார்த்தால் - இதே வேகத்தில் போனால் இன்னும் சில மாதங்களில், நாங்கள் வெறும் தி.மு.க. அல்ல! அகில இந்திய அ.தி.மு.க.வாக்கும்! அதனால் இந்தி மொழி இந்திய அரசின் ஆட்சிமொழியாக இருப்பதை எங்கள் கட்சி வரவேற்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அக்டோபர் 6ஆம் நாள் ராஜீவ் காந்தியின் உறுதி மொழியைப் பாராட்டிவிட்டு, அத்துடன் நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இணைக்க வேண்டுமெனத் தனது கட்சிச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு -

அதே பொதுச்செயலாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் அக்டோபர் 15-ந் தேதியன்று அந்தத் தீர்மானம் தேவையில்லை என்று கூறுகிறார் என்றால், இந்தி ஆதிக்கத்துக்கு அவர்கள் விரைவில் ஆலவட்டம் சுழற்றமாட்டார்கள் என்பது சந்தேகத்திற்குரியதா என்ன?

1965 தமிழகத்தில் நடைபெற்ற மொழிப்புரட்சிக்குப் பிறகு சற்றே பதுங்கிக் காட்டினர் இந்தி வெறியர்கள்! இந்தி திணிப்பு இல்லை என்றனர்! ஆங்கிலமும் விரும்பும் வரை நீடிக்கலாம் என்றனர்!

ஆனால் இன்றோ! மாநிலப் பட்டியலில் இருந்த கல்வித்துறையை மத்தியில் உள்ளோர் பொதுப் பட்டியலிலே இணைத்துக் கொண்டு - இஷ்டம் போல் இந்தி ஆதிக்கத்தைப் பரப்புகிறார்கள்!

நேரு உறுதிமொழி காப்பாற்றப்படும் என்று சிறிதளவு இருந்த நம்பிக்கையும் தகர்க்கப்படும் விதத்தில் எல்லாமுனைகளிலும் இந்தி ஆதிக்கத்தின் தாக்குதல் நடைபெறுகிறது!

இன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தியா என்பது இந்திக்காரர் நாடு என உலக அரங்கில் நிலைநாட்டத் துடிக்கிறார்!

அதனால்தான் அண்மையில் அவர் ஆற்றிய ஓர் உரையில், மராட்டிய மாநிலத்துக்குச் சென்றால் மாவீரன் சிவாஜி என்கிறார்கள்! மேற்குவங்கம் சென்றால் அங்கே மார்க்ஸ் பற்றி பேசுகிறார்கள்! தமிழ்நாட்டிற்குச் சென்றால் அண்ணா அண்ணா என்கிறார்கள்! என அங்கலாய்த்துக் கொண்டார்!

மொழிவழி மாநிலங்கள் பிரித்ததே தவறு என்று கண்டிப்பாகப் பேசினார்!

நாம் நினைக்கிற அளவுக்கு, எதிர்பார்க்கிற அளவுக்கு இந்தி இன்னும் பரவிடவில்லை! அந்தப் பணியை முனைப்பாகச் செய்ய வேண்டும் என்று ராஜீவ் பேசியுள்ள நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டல்ல!

படங்களில் - வானொலியில் - தொலைக்காட்சியில் - பணவிடைத்தாளில் - எங்கணும் இந்தி!

மத்திய அரசு அலுவலகங்களில் - மத்திய அரசுப் போக்குவரத்தில் - அஞ்சல்துறையில் - மத்திய அரசுச் சார்புடைய

பொது நிறுவனங்களில் - இந்தித் திணிப்பு! இந்தித் திணிப்பு! மிக வேகமாக! அதிவிரைவாக!

இரண்டொரு ஆண்டுகளாகத் தங்குதடையின்றி அந்த அழிவு வெள்ளம், தமிழக மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கச் சீறியெழுந்துள்ளது!

ஆம்! பதுங்கிய இந்தி வெறி - இப்போது நம்மீது பாயத் தொடங்கி விட்டது!

இனியும் பொறுமை காட்டினால், தமிழகத்தின் எதிர்காலம் இருண்டு விடும்!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லா விட்டாலும், தமிழ்மொழி காக்கவும், தமிழர் பண்பாடு போற்றவும், தமிழ் இலக்கியம் வளர்க்கவும், பேணவும், தமிழர் வரலாறு மங்காமல் மறையாமல் இருக்கவும், தமிழர் உரிமைகள் பறிக்கப்படாமல் போராடவும் இன்னும் ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலாகத் தி.மு.க.வின் பணி தேவைப்படுகிறது என, விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா அவர்கள் எழுப்பிய சங்கநாதம் நினைவிருக்கிறதா?

அது செவிடன் காதுச் சங்கொலியல்லவே!

அந்தச் சங்கொலியெழுப்பி அறப்போர்க்களம் காண அணிவகுப்போம்!

நவம்பர் 8, 9 ஆகிய நாட்கள் வெகு தொலைவில் இல்லை!

கோவையில் கூடுகிறோம்!

களம் புகுவோர் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டி விட்டது!

கோவையில் செயற்குழுவில் போராட்டப் பட்டியல் இறுதி வடிவம் பெறும்!

இரு நாட்கள் நடைபெறும் எழுச்சி மிகு போராட்ட மாநாட்டில் நவம்பர் 17 முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் களம்புகுவோர் - களத் தலைமையேற்போர் பட்டியல் வெளியிடப்படும்!

தயாராகுக என் தங்கமே!
தமிழகத்துச் சிங்கமே!
இப்படை தோற்கின் எப்படை
வெல்லும்? எனக்கேட்டு
இந்தி ஆதிக்கம் வீழ்த்தக்
கச்சை கட்டுவோம்!
கவசம் அணிவோம்!
களம் செல்லுவோம்!

அண்ணன் அழைத்தார் அன்று! அவர் தம்பி அடியேன் அழைக்கின்றேன் இன்று!

அன்புடன்

மு.க.

21-10-1986

1459. மறக்க முடியாத மணிவாசகமன்றோ?

உடன்பிறப்பே,

மகனுக்கோ, மகளுக்கோ, அல்லது தம்பிக்கோ, தங்கைக்கோ திருமணம் நிச்சயமாகி ஏற்பாடுகள் தொடங்கிடும்போது, திருமணத்தை நடத்திவைக்கிற குடும்பத்து மூத்த உறுப்பினர்கள், எப்படியெல்லாம் பந்தல் போடுவது - யார்யாருக்கெல்லாம் அழைப்பு அனுப்புவது - விருந்தில் எத்தனைவகைக் கறிகள் - எவ்வித பதார்த்தங்கள் - சமையலுக்கு யாருக்குச் சொல்வது - ஒலி ஒளி அமைப்பின் பொறுப்பை எவரிடத்திலே விடலாம் - வரவேற்பு நிகழ்ச்சி மாலையில் நடக்கும்போது இசைநிகழ்ச்சி எவ்வாறு இருந்திடல் வேண்டும் - அழைப்பிதழ் எந்த அச்சகத்திலே அச்சியற்றலாம் எனப்பல்வேறு காரியங்கள் குறித்து யோசித்திடுவர்! கலந்துரையாடிடுவர்!

அப்போது அவர்கள் அதற்குமுன் அதே குடும்பத்தில் மூத்த மகனுக்கோ, அல்லது மூத்த மகளுக்கோ திருமணம் நடைபெற்றிருந்தால் - அந்த விபரங்களைத் தேடியெடுத்து அந்த மணவிழாவுக்குத் தயாரிக்கப்பட்ட அழைப்பிதழ் மாதிரியைத் தேடிப்பிடித்து, சமையல் யார்? - ஒலிஒளி எவருடையது? வரவேற்பு நிகழ்ச்சி எவ்வாறு அமைந்தது? என்பன போன்றவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கம்!

உடன்பிறப்பே! நமது வீடுகளில் இத்தகைய நிகழ்ச்சிகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு - ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியை மேலும் ஏற்றமுடையதாக ஆக்கிட எண்ணுவதும், அவ்வாறே செயல்படுவதும் நடக்கின்ற ஒன்றுதானே!

அதுபோலத்தான், நவம்பர் 17 முதல் கழகம் ஈடுபட இருக்கின்ற இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்திற்கு - 1937 முதல் தமிழகத்தில் நடைபெற்று வருகிற மொழிப் போராட்ட வரலாற்றை நாம் புரட்டிப்பார்க்க வேண்டியிருக்கிறது!

இதோ சில நினைவுகள் - அந்த நினைவுகள் சரியானவைதான் என்பதற்கு யார் ஆதாரப்பூர்வமான விளக்கமளிக்க வேண்டுமோ, அவரது விளக்கங்கள்!

1959ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இந்தியப் பிரதமர் பண்டிதநேரு அவர்கள் பாராளுமன்றத்தில் பேசினார்! எதைப்பற்றி? மொழிப் பிரச்சினை குறித்து! என்ன பேசினார்?

"English would continue as an associate or additional language in the Country for an indefinite period or as long as the Non-Hindi Speaking People wanted it.

The decision as to how long it would continue as an associate language should be left to the Non-Hindi Speaking People and not to the Hindi - Speaking People."

ஆங்கிலம், இணை அல்லது துணை மொழியாக, நிர்ணயம் செய்யப்படாத காலம் வரையில் அல்லது இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரையில் நீடிக்கும்.

ஆங்கிலம் எவ்வளவு காலம் நீடிப்பது என முடிவு எடுக்கும் உரிமை இந்தி பேசாத மாநில மக்களுக்குரியதே தவிர, இந்தி பேசுகிற மக்களுக்கல்ல!

இவ்வாறு நேருபிரான் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசும் போது, தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் கனல் வீசிக் கொண்டிருந்தது.

அந்த நிலையில், 1959 செப்டம்பர் திங்கள் சென்னைக்கருகேயுள்ள பூவிருந்தவல்லியில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் நேருவின் பாராளுமன்ற உரையைப் பாராட்டி, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தி ஏகாதிபத்யத்தைப் புகுத்தி நிலை பெறச் செய்ய வடநாட்டு சர்க்கார் எடுத்துக் கொள்ளும் வஞ்சக முயற்சியை, திராவிடப் பெருங்குடி மக்கள் தீவிரமாகவும், தொடர்ந்தும் அறவழி நின்று நடத்தி வரும் கிளர்ச்சியின் விளைவாக, வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கை, பண்டித நேருவே கண்டிக்கவும், தடுத்து நிறுத்தவும் முன்வர வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது திராவிட இயக்கக் கிளர்ச்சி வெற்றிப் பாதையை நோக்கிச் செல்கிறது என்பதையே எடுத்துக் காட்டுவதாக இந்த மாநாடு கருதுவதுடன்,

பண்டித நேருவின் போக்கிலேயே ஒரு மாற்றத்தையும், இந்தி வெறியர்களின் கொட்டத்துக்கு ஒருபலமான அடிகிடைத்தது போன்ற நிலையையும் ஏற்படச்செய்ய வீரமும், தியாகமும் நிறைந்த கிளர்ச்சியில் ஈடுபட்ட திராவிடப் பெருங்குடிமக்களுக்கு இம்மாநாடு வணக்கத்தையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து, 1960ல் தம்பிக்கு எழுதிய மடலில் அண்ணா விளக்கிவிட்டு; மேலும் ஒரு தகவலை நமக்குத் தருகிறார்.

பண்டிதரின் போக்கு மாறிவிடுமோ? பேச்சை ஒரு நாள் மறுத்து விடுவாரோ? பேசி மட்டும் என்ன பலன்? சட்டம் மிரட்டியபடி இருக்கிறதே! எந்த நேரத்தில் இந்தி வந்திடுமோ, கொட்டிட! - என்ற அச்சம் கலந்த ஐயப்பாடு எழுந்தது! எனவேதான் பூவிருந்தவல்லி மாநாட்டில் வாழ்த்துரைத்ததுடன், வேறொன்றினையும் தீர்மானம் அளித்தது.

என அண்ணா சுட்டிக்காட்டுகிறார்! இதோ அந்த தீர்மானங்கள்:-

1 1965க்குப் பிறகு, இந்தி மொழியே அகில இந்திய ஆட்சி மொழியாகி, ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்ற நெருக்கடியைப் பண்டித நேருவின் வாக்குறுதி தளர்த்தியிருப்பது கண்டு இம்மாநாடு மகிழ்கிறது எனினும், பேச்சளவோடு நின்று விடாமல், பண்டித நேரு, தமது வாக்குறுதியை சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுப்பதின் மூலம் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது.

2 எந்த நேரத்திலும் தீவிரமான அறப்போர் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படக் கூடும் என்று இம்மாநாடு கருதுவதால், ஒவ்வொரு கிளைக் கழகமும், ஒவ்வொரு சிற்றூரிலும் இந்தி ஆதிக்க ஒழிப்பு அறப்போரில் ஈடுபட உறுதிக் கொண்டவர்களின் பட்டியலை தயாரித்து தலைமைக் கழகத்துக்கு அனுப்பித் தரவேண்டும்.

உடன்பிறப்பே, பூவிருந்தவல்லி மாநாட்டில் பண்டிதருக்குப் பாராட்டுத் தீர்மானமும் - நமது கழகத்தின் பட்டாளத்துக்கு ஆணையும் பிறப்பிக்கப்பட்ட - இரு செய்திகளையும் இப்பொழுது ஏன் நினைவுபடுத்துகிறேன் புரிகிறதா?

நாம் அன்று கருதியது போலவே, பண்டித நேருவினால் இந்தி வெறியர்களைச் சமாளிக்க முடியவில்லை!

மொழிப்போர் தமிழகத்தில் தொடர் கதையானது! 1963-ல் அண்ணா, அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவான 17வது பிரிவை கொளுத்திட அறிக்கை விடுத்தார்! அவரே அந்தக் காரியத்தில் ஈடுபடவும் செய்தார்! அதன் தொடர்ச்சி 1965-ல் மொழிப்புரட்சியாக எழுந்தது!

இத்தனைக்கும் பிறகு ஆட்சிமொழிச் சட்டம் வந்ததேதவிர, - அரசியல் சட்டத்தில் இந்திதான் ஆட்சிமொழியென்று அடிக்கப்பட்ட ஆணி, கழற்றப்படவில்லை!

ஆங்கிலம், இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழிக்கு அரசியல் சட்டத்தில் இடமும் அளிக்கப்படவில்லை!

எனினும் 1965 மொழிப்புரட்சியால், இந்தி வெறியர்கள் சற்று பதுங்கிக் கொண்டனர்!

அவ்வப்போது மெல்லத் தலைகாட்டினர்! 1967-ல் தமிழகப் பள்ளிகளில் இந்திக்கு இடமில்லையென முதலமைச்சர் அண்ணா அறிவித்தார்!

இந்தி வெறியரின் வெளிப்படையான திணிப்புத் தாக்குதல் சற்று ஓய்ந்திருந்தது!

ஆனால், இன்று? இந்தியாவை இந்திக்காரர்களின் நாடென உலகில் பிரகடனப்படுத்த துடியாய் துடிக்கிறார் ராஜீவ் காந்தி!

தடுக்கி விழுந்தால் இந்தி என்கிற சூழல் - பூதாகரமாய் வளர்ந்து வருகிறது!

எனவே, கழகம் மீண்டும் போர்க்கோலம் பூணுகிறது!

கழகம் களத்தில் நிற்கிறது! ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும் தனது செயற்குழுவைக் கூட்டிப் பின்வரும் தீர்மானத்தை அக்டோபர் 6ஆம் நாள் நிறைவேற்றியது!

இந்தி மொழி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வரும் என்ற பண்டித நேருவின் உறுதிமொழியை முற்றிலும் ஏற்று செயல்பட ஒப்புக் கொண்டு, முதல்வர் புரட்சித் தலைவரிடம் உறுதி அளித்து தமிழக மக்களின் அச்சத்தைப் போக்கிய பிரதமருக்கு இச்செயற்குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பண்டித நேரு தந்த உறுதிமொழியின் உண்மை நோக்கத்தை சீர்குலைக்கும் வண்ணம், மத்திய அரசாங்கத்தில் உள்ள இந்தி ஆதரவாளர்கள் இந்தித் திணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தமிழக மக்களிடையே குறிப்பாக, மாணவர் சமுதாயத்திடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைப் போக்கிட, இந்தி மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டிட பண்டித நேருவின் உறுதிமொழியை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இணைத்திடும் படி மத்திய அரசாங்கத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானத்தில் 1959ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி மாநாட்டின் சாயல் இருப்பதாக எண்ணிப் பூரிப்படைந்தேன்!

இன்றுள்ள ஆளுங்கட்சி அவ்வளவுதான் செய்ய முடியும் - அவர்களது தீர்மானத்தைச் செயல்படுத்த தி.மு.க. போர்க்களம் புகுகிறது என செய்தியாளர்களிடம் நான் தெரிவித்தேன்!

ஆனால் பத்து நாட்களுக்குள் ஆளுங்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஜி.ஆர். அவர்கள், அக்டோபர் ஆறாம் நாள் தீர்மானத்தை எடுத்துக் கவிழ்த்து விட்டார்!

ராஜீவ் காந்தியின் உறுதிமொழியே போதும் - நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச்செய்ய வேண்டியதில்லை எனும் கருத்தை செய்தியாளர்களிடம் வெளியிட்டது மட்டுமல்ல! நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெறக் கோரி, நடத்தும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் யூஸ்லெஸ் என்று இகழ்ந்துரைத்து விட்டார்!

அன்று அண்ணா, பூவிருந்தவல்லி மாநாட்டில் நேருவைப் பாராட்டி விட்டு, அதே நேரம் கழகப் பாசறையையும் தயார்படுத்தி - களம்புகுவோர் பட்டியலும் தயாராகட்டும் எனத் தீர்மானங்களை வடித்தெடுத்தார்!

பாராளுமன்றத்தில் நேரு கொடுத்த உறுதிமொழி பற்றியே அந்தச் சந்தேகம் எழுந்தது! எழுந்த சந்தேகம் சரியானதாகவும் ஆனது! அதனால் களம் அமைந்தது!

ஆனால் இன்று! ராஜீவ் காந்தி முதலமைச்சரிடம் சொன்னதாக ஒரு தகவல்! அதனை ராஜீவ் காந்தி ஏற்கவுமில்லை, மறுக்கவுமில்லை - அவ்வளவு தான்!

இதற்கே ராஜீவுக்கு ஒரு நன்றித் தீர்மானம்! பரவாயில்லை! நாமும் வரவேற்போம்!

ஆனால் அந்த உறுதிமொழியே போதுமானது - நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம் பெறக் கோரி வலியுறுத்தத் தேவையில்லை என்பதை எவ்வாறு ஏற்க இயலும்?

நேரு காலத்தைவிட - லால்பகதூர் காலத்தைவிட - இந்திரா அம்மையார் காலத்தைவிட - இன்று ராஜீவ் காந்தி காலத்தில் இந்தி ஆதிக்கம், கொடிகட்டிக் கொண்டு, கொட்டு முழக்கோடு நமது இனமான உரிமைக் கோட்டையைச் சுக்குநூறாக்க - படை கொண்டு வரும் போது பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

அறப்போரில் ஈடுபட்டு அடக்குமுறையால் நம் குருதி கொட்டப்பட்டால், அந்தக் குருதி கலந்த மண் இருக்கிறதே, தம்பி! அதை விடப் புனிதப் பொருள் வேறு இல்லை!

என அண்ணா அன்று எழுதிய வாசகத்தை மறந்திட முடியுமா?

அது தியாகப் படையினராம் தி.மு.கழகத்தினருக்கு திருவாசகமன்றோ?

மறக்கமுடியாத மணிவாசகமன்றோ?

அன்புடன்

மு.க.

22-10-1986

1460. மேற்கு வங்க முதல்வரும் - தமிழக முதல்வரும்!

உடன்பிறப்பே,

மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்கள், திருவனந்தபுரத்திலிருந்து கல்கத்தா செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் சில கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார்.

மேற்குவங்கத்தில் உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சி, அங்கே நடைபெறும் கூர்க்கா போராட்டத்தை ஆதரிக்காத நிலையில் - அங்கே சுற்றுப்பயணம் சென்ற பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், கூர்க்கா போராட்டம், தேச விரோதமானதல்ல! என்று கூறியதன் மூலம் அந்தப் போராட்டக்காரர்களை ஊக்கப்படுத்தியிருப்பது எதிர்க்கட்சி ஆளுகிற ஒரு மாநிலத்தில் ஏதாவது ஒரு தகராறை இழுத்துவிடுகிற உள்நோக்கம் கொண்டதாகும் என்பதை நமது கழகம் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறது.

அது குறித்து சென்னைச் செய்தியாளர்களுக்கு விடையளித்த ஜோதிபாசு அவர்கள், பிரதமர் உள்ளிட்ட மத்திய மந்திரிகள் அறிக்கை, போராட்டக்காரர்களுக்கு ஊக்கம் தருவதாக இருந்த போதிலும், அந்தப் போராட்டத்தை நாங்கள் சமாளித்து விடுவோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தமிழகத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இந்தி எதிர்ப்பு குறித்து மேற்குவங்க முதல்வர் அவர்கள் கூறியுள்ள கருத்து; களத்தில் நிற்போருக்கு ஒரு படைக்கலனாகவே கிடைத்திருக்கிறது எனக் கூறலாம்.

இந்தி சுற்றறிக்கை பற்றி உங்கள் கருத்து என்ன?

தேவையற்றது! தேவையில்லாதவற்றை மத்திய அரசு தொடர்ந்து செய்கிறது. தொலைக்காட்சி மூலமும் இந்தியைத்

திணிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்தி, தனிப் பெரும்பான்மை மொழியாக இருக்கலாமே தவிர, இந்தியாவின் பெரும்பான்மை மொழி அல்ல! வளர்ச்சி அடைந்த மொழியுமல்ல! இந்தியைத் திணிப்பது தவறு.

தமிழ்நாட்டில் நடைபெறும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நியாயமான கிளர்ச்சி என்றே கருதுகிறேன். தமிழ்நாடு ஆரம்பம் முதலே இந்தியை எதிர்த்து வருகிறது.

இந்தியை இங்குள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் எதிர்ப்பதாகச் சொல்கிறாரே?

அவர் ராஜீவ் காந்தியின் பின்னால் போகும் வரையில் இந்தியை எதிர்த்து எப்படிப் போராட முடியும்? இந்தித் திணிப்பை எதிர்த்து என்ன செய்யப் போகிறார் என்று அவரே சொல்லட்டுமே, பார்ப்போம்!

மேற்கு வங்கத்தில் மத்திய அரசின் மாதிரிப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளதா?

இல்லை! மாதிரிப் பள்ளி குறித்து விளக்கம் கேட்டிருக்கிறோம். இந்தியைக் கட்டாயமாக்கக் கூடாது. ஆங்கிலமும் தாய்மொழியும் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து விளக்கம் வருகிற வரையில் மாதிரிப் பள்ளி மேற்கு வங்கத்தில் தொடங்கப்பட மாட்டாது!

செய்தியாளர்களிடத்தில் தெளிவாகவும், திடமாகவும், அழுத்தம் திருத்தமாகவும், உரிமைக்குரல் கொடுத்திட ஜோதிபாசு அவர்களுக்கு இருக்கிற துணிவு, இங்குள்ள நமது முதலமைச்சருக்கு என்றைக்காவது ஏற்பட்டதுண்டா? என்பதை உடன்பிறப்பே! ஒருக்கணம் எண்ணிப்பார்!

இங்கு நடைபெறும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நியாயமானது என குரல் கொடுக்கிறார்! மேற்கு வங்கத்து முதல்வர்!

ஆனால் தமிழ்நாட்டு முதல்வரோ, இந்தக் கிளர்ச்சியை யூஸ்லெஸ் என்று இழிமொழி கூறி, ராஜீவ் காந்தியின் சபாஷுக்காக காத்துக்கிடக்கிறார்!

மத்திய மாதிரிப் பள்ளிகளை இன்றுள்ள சூழலில் மேற்கு வங்கத்தில் அமைத்திட இணக்கம் தெரிவிக்க மாட்டோம் என நெஞ்சை நிமிர்த்தி மத்திய அரசுக்கு அறிவிக்கிற ஜோதிபாசுவின் உரிமைக் குரலையும் - தமிழக முதல்வர், இதுவரையில் மாதிரிப் பள்ளிகளுக்கு எதிராகத் தனது குரலை உயர்த்தாமல் - நடுக்கத்தோடு, நாத்தழுதழுக்க ஏதோ தயவு தாட்சண்யத்துக்கு ஏங்கிக் கொண்டு மாதிரிப் பள்ளிகளைப் பற்றிக் கருத்துக் கூறுகிற நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் - தமிழகத்தை, இந்தி வெறியர்களின் காலடியில் அடமானம் வைக்க எப்போதோ முடிவு கட்டிக் கொண்டார் என்ற உண்மைதானே புரிகிறது!

உறவுக்குக் கைகொடுத்தால் என்ன? உரிமைக்குக் குரல் கொடுக்கக் கூடாதா?

1969-ல் குடியரசுத்தலைவர் தேர்தலில் இந்திரா அம்மையாருக்குக் கைகொடுத்த கட்சிகள்தான் தி.மு.க., கம்யூனிஸ்டுகள், அகாலிதளம் போன்றவை!

அதற்காக அந்தக்கட்சிகள் உரிமைக்குக் குரல் கொடுக்க மறந்த கட்சிகளா?

1971-ல் தி.மு.க., இ.காங்கிரஸ் தேர்தல் உறவு கூட இருந்தது!

அதற்காக 1975-ல் இந்திரா காந்தி கொண்டு வந்த எமர்ஜன்சியை ஆதரித்ததா தி.மு.க.?

அதனை எதிர்த்த காரணத்தால் தி.மு.க. ஏற்றுக் கொண்ட துன்பதுயரம் சோதனைகள் எத்தனை! எத்தனை!

கழக ஆட்சியையே விலையாகக் கொடுத்து எமர்ஜன்சியை எதிர்த்த பெருமை, தி.மு.க.வுக்கு உண்டு!

உறவுக்குக் கைகொடுக்கவும், உரிமைக்குரல் கொடுக்கவும் தெளிவும், திறனும் பெற்ற தி.மு.கழகம், உரிமைக்குரல் கொடுக்கும் ஜோதிபாசு போன்றவர்களின் உரையினை, இந்தக் களம்காணும் நேரத்தில் புதிய வலிவு தரும் மாமருந்தாகக் கருதி மகிழ்கிறது.

அன்புடன்

மு.க.

23-10-1986

1461. இதற்கென்ன விளக்கம் அளிப்பார் எம்.ஜி.ஆர்.!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது அமைச்சரவையிலிருந்து பத்துப்பேரை விலக்கியுள்ளார்.

ஏற்கெனவே தன்னிடம் அறிவிக்காமலே தனது இலாகாவைப் பறித்து வேறு ஒரு அமைச்சருக்குக் கொடுத்து விட்டார் என்று குற்றம் சுமத்திவிட்டு அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருந்தவருக்கு, மீண்டும் இப்போது அதே இலாகாவையும், வேறு சில இலாகாக்களையும் வட்டியும் முதலுமாகச் செலுத்தி அவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டுள்ளார் எம்.ஜி.ஆர்.!

இதுகுறித்தெல்லாம் நிருபர்கள் எனக்கு அவசரமாகத் தொலைபேசித் தொடர்பு கொண்டு எனது கருத்தென்ன என்று கேட்டபோது, இப்போது எதுவும் சொல்வதற்கில்லை என்று கூறினேன்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் மாவீரன் நெடுமாறன் அவர்கள், அமைச்சரவை மாற்றம் குறித்து அவரது கருத்தைக் கூறியுள்ளார்.

உடனே முதல்வர் எம்.ஜி.ஆர்., அதற்கொரு மறுப்பு விளக்கம் தந்து அறிக்கை விடுத்துள்ளார்.

நெடுமாறன் அவர்களை மட்டுமின்றி, நெடுமாறன் சார்ந்துள்ள அணியினரே கீழ்த்தரமான பிரச்சாரம் செய்கின்றனர், அமைச்சரவை மாற்றம் குறித்து - என்று எம்.ஜி.ஆர். தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நெடுமாறன் சார்ந்துள்ள அணியினர் என்று எம்.ஜி.ஆர். குறிப்பிடாமலே பதில் அறிக்கை விடுத்திருந்தாலும்கூட, அவரது அந்தப் பதில் அறிக்கையை விமர்சனம் செய்யக்கூடிய உரிமையும், கடமையும் நமக்கு உண்டு!

விலக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் பத்துப் பேர் குறித்த தராதரங்களையோ அல்லது இருக்கின்ற அமைச்சர்களின் தராதரங்களையோ இப்போது இந்தக் கடிதத்தில் ஆராய விரும்பவில்லை.

நெல்லை இடைத்தேர்தல் ஆகஸ்டு மாதம் நடைபெற்றது.

அதற்கு மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பே மார்ச் மாத இறுதியில் - அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஒரு பெட்டி வைக்கப்பட்டு, அந்தப் பெட்டியில் அமைச்சர்களைப் பற்றிய புகார் மனுக்களை - பொதுக்குழு உறுப்பினர்கள் போட வேண்டுமெனக் கூறப்பட்டது. பொதுக்குழு முடிவடையும் கட்டத்தில் பதினொரு அமைச்சர் விலக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவித்தார். விலக்கப்படுவதற்கான காரணம், முதலில் புகார் எனக் கூறப்பட்டு, பிறகு கட்சிப் பணிக்காக என்று திருத்தப்பட்டது!

அவ்வாறே சட்டசபையிலும் அறிவிக்கப்பட்டது!

இதற்கிடையே சட்டமன்ற மேலவையும் கலைக்கப்பட்டது!

அமைச்சர்கள் வீரப்பன், அண்டே, யூசுப் ஆகியோர் எம்.எல்.சி.க்கள் என்பதால், மேலவைக் கலைப்பையொட்டி ஆறுமாதத்திற்குள் பதவியிழக்க வேண்டியவர்களாகிறார்கள்!

திரு. வீரப்பனையும் கட்சிப் பணிக்காகவே இப்போது அமைச்சரவையிலிருந்து விலக்கியுள்ளேன் என்று எம்.ஜி.ஆர். அவர்கள், விளக்கம் தந்துள்ளார்!

மார்ச் மாதக் கடைசியிலேயே வீரப்பன் உட்பட பதினொரு மந்திரிகள் பதவி விலகி, கட்சிப்பணியாற்ற வேண்டுமென்று எம்.ஜி.ஆர். முடிவெடுத்திருந்தால் - பிறகு ஏன் ஆகஸ்டு மாதம் நெல்லை இடைத்தேர்தலில் எம்.எல்.ஏ. பதவிக்கு திரு. வீரப்பனை வேட்பாளராக எம்.ஜி.ஆர். அறிவிக்க வேண்டும்?

அண்டே போல, யூசுப் போல, வீரப்பனும் எம்.எல்.சி. என்ற காரணத்தால் பதவியிழந்து - இயல்பாகவே கட்சிப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கலாமே!

நெல்லை இடைத் தேர்தலில் போட்டியிட்ட வீரப்பன் அவர்கள், அமைச்சர் பொறுப்பில் நீடித்து அந்த மாவட்டத்துக்கே ஒன்பது அம்சத் திட்டமொன்றை நிறைவேற்றப் போவதாகத் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பேசினாரே? அப்போதெல்லாம் வீரப்பன், கட்சிப்பணிக்கு அழைத்துக் கொள்ளப்பட இருக்கிறார் என்பது வீரப்பனுக்கே தெரியாதா?

தெரிந்துமா அந்த இடைத் தேர்தலில் வெற்றி பெற - அரசாங்க இயந்திரங்கள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டன?

தெரிந்துமா அவ்வளவு பணம் அந்த இடைத்தேர்தலுக்கு செலவழிக்கப்பட்டது?

கட்சிப்பணிக்கு முக்கியமாக தேவைப்படுகிற பதினொரு அமைச்சர்களின் பட்டியலில் வீரப்பன் பெயரையும் எம்.ஜி.ஆர். இணைத்து வைத்திருந்தால், பிறகு ஏன் அவரை நெல்லை இடைத்தேர்தலில் நிற்க வைத்து அமைச்சராக நீடிக்க வழிவகுத்திருக்க வேண்டும்?

இரண்டு மாதங்கள் அமைச்சர் பதவி வகிக்க ஒரு சட்டமன்ற இடைத்தேர்தலில் அவ்வளவு கடுமையாகப் போட்டியிட்டிருக்க வேண்டுமா திரு. வீரப்பன்?

ஒருவேளை, நெல்லையில் அமைச்சர் வீரப்பன், வேட்பாளராக அறிவிக்கப்பட்டது எம்.ஜி.ஆருக்குத் தெரியாமலே நடந்துவிட்ட அதிசயமா?

ஆம், அப்படித்தான் என்றால் - நெல்லைத் தொகுதியில் வீரப்பனை ஆதரித்து எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்ய வந்தது கூட அவருக்குத் தெரியாமல் நடந்த நிகழ்ச்சிகளா?

இப்படியே கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம் அல்லவா?

இதற்கெல்லாம் எம்.ஜி.ஆர். அவர்களால் சரியான பதில் அளிக்க முடியாது!

டெல்லியில் சூத்ரதாரிகள் எம்.ஜி.ஆர். அவர்களை ஆட்டிப்படைக்கிறார்கள்!

என மாவீரன் நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் உள்ள வாசகம் நூற்றுக்கு நூறு உண்மை என்பது போலத்தான் காரியங்கள் நடைபெறுகின்றன!

இந்த உண்மையைக் காளிமுத்துவின் விரிவான அறிக்கையும் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை!

அன்புடன்

மு.க.

24-10-1986

1462. தமிழ் வாழும் காலமெல்லாம் நமது பெயரும் வாழ...!

உடன்பிறப்பே,

கோவையில் நவம்பர் 8, 9, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்த இருக்கும் அறப்போராட்டத்திற்கான மாநில மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டு விட்டன.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முதல் களப்பலியான தமிழ் வீரர்கள் தாளமுத்து, நடராசன் இருவர் பெயரால் அமையும் அரங்கத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் இரு நாட்களிலும் மாலை நேரத்தில் தொடங்க இருக்கின்றன.

முதல்நாள் பிற்பகல் இந்தி எதிர்ப்புப் போராட்டப் பேரணி கோவை நகர வீதிகள் குலுங்கிட நடைபெற இருக்கிறது.

பேரணி முடிவில் மாநாட்டுக் கொடியேற்று விழா - திறப்பு விழா - தலைமையுரையுடன் மாநாட்டுத் தொடக்கம்!

எழுச்சிமிகு இசை நிகழ்ச்சிகள்! கலை நிகழ்ச்சிகள்! தமிழ் முரசாக! தன்மானப் போர்முரசாக!

கழகத்தின் பணிகளுக்குத் துணை நிற்கும் பல்வேறு அணியினரின் களப்பரணி! ஆம்! காஞ்சித் தலைவன் வகுத்தளித்த வழியில் கழகத்தின் போர்ப்பரணி!

மறுநாள் ஞாயிறன்று காலையில் கழகத்தின் செயற்குழு கூடுகிறது!

மாவட்டந்தோறுமிருந்து - அறப்போர் வீரர்களின் பட்டியலை மாவட்டச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் மாநில அமைப்பாளர்களும் தலைமைக் கழகத்திடம் தருவர்!

களத் தலைமையேற்போர் - களம் புகுவோர் - காலத்திற்கும் தமிழ்நாட்டு வரலாற்றில் தங்கள் பெயர் நிலைத்திட, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் தங்களை இணைத்துக் கொள்வோர் யார் யார் என்ற விபரங்களை ஆராயும் செயற்குழு அது!

எந்தெந்த ஊரில் - யார் யார் தலைமையில் - எந்த நாளில் - எத்தனைபேர் அறப்போரில் ஈடுபட்டு அரசியல் சட்டத்தில் இந்திதான் ஆட்சிமொழியெனும் 17வது பிரிவில் உள்ள பகுதியைக் கொளுத்துவோர் - என்பன செயற்குழுவில் முடிவாகி, அந்த முடிவு மாலையில் தொடங்கும் மாநாட்டில் அறிவிக்கப்பட இருக்கிறது!

இனஎழுச்சி தந்த ஏந்தல் தந்தை பெரியாரின் படம், இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என முரசறைந்து, இந்தி ஆதிக்கத்தை அடியோடு வீழ்த்தும் நாளே தமிழர்க்குத் திருநாள் எனச் சங்கநாதம் செய்து, அரசியல் சட்டத்தின் 17வது பிரிவுக்குத் தீயிட ஆணையிட்ட பேரறிஞர் அண்ணாவின் படம் - வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என வீரமுழக்கமிட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படம், அடடா! தமிழ்ப் பயிரை இந்தியெனும் மாடு மேய்வதோ? என ஆர்த்தெழுந்த தமிழ் வேங்கை மறைமலையடிகளார் படம், எங்கள் இன்பத் தமிழ்மொழி வீழ்த்த இந்திச் சனியனுக்கு இங்கென்ன ஆதிக்கம்? எனக் கேட்டுச் சிலிர்த்தெழுந்த சிங்க ஏறு நாவலர் சோமசுந்தர பாரதியார் படம், பொங்கு கடலெனக் கொந்தளித்துப் பூகம்ப அதிர்ச்சியாகப் போர்ப்படை திரட்டிப் பொல்லா இந்தியின் ஆதிக்கம் நில்லாதொழிக்க நெஞ்சு நிமிர்த்திய அண்ணன் அழகிரியின் படம், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்க் குடியின் மொழிக்கொரு ஆபத்தா எனக் கேட்டுச் சீறியெழுந்த புறநானூற்றுத் தாய் மூவலூர் மூதாட்டியாரின் படம், செந்தமிழுக்கொரு தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ! என்று கதறி உயிர் நீத்த இந்தி எதிர்ப்புத் தியாகிகளின் படம் - இவையனைத்தும் மாநாட்டு அரங்கில் திறக்கப்பட இருக்கின்றன!

அமைதி வழியில் - அண்ணா வழியில் - அறப்போர் நடத்திடத் திட்டங்கள் வகுத்து முறையாகச் செயல்பட கோவையிலே செயற்குழு!

ஆர்த்தெழுந்தது பார் அண்ணா உருவாக்கிய அஞ்சா செஞ்சுடைச் சேனை! என்பதை இந்தி ஆதிக்க வெறியார்க்கு உணர்த்திட கோவையிலே பேரணி!

எந்தத் தியாகத்திற்கும் தயார் என உரைத்து - மொழி காக்க, இனம் காக்க, தமிழர் உரிமை காக்க - கோவையில் இரு நாட்கள் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநில மாநாடு!

இன்றே கோவைக்குப் புறப்படத் தயாராகிக் கொள்க உடன்பிறப்பே!

நாம் வாழும் காலத்தில் தமிழை வாழ வைத்தால் - தமிழ் வாழும் காலமுழுதும் நமது பெயர் வாழும்!

அன்புடன்

மு.க.

25-10-1986

1463. வேறு வழியில்லையே! என்ன செய்வது?

உடன்பிறப்பே,

இந்த வாரம் ஆனந்த விகடன் ஏடு, பிரச்சாரத் தீ பரவட்டும் என்ற மகுடமிட்டு ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. எதையும் நிதானத்துடன், கடுமையான சொற்பிரயோகமின்றி எடுத்துச் சொல்கிற ஏடுகளில் ஒன்று விகடன்!

சில நேரங்களில் அந்த இதழின் விமர்சனங்களில் சற்று எல்லை கடந்த கேலியும், கிண்டலும் காணப்படுவதுண்டு!

இருந்தாலும் சிந்திக்கத்தக்க கருத்துகளை வழங்கி, மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ள இதழ்களாகக் கல்கியும், விகடனும் செயல்படுவதை மறுக்க இயலாது!

கருத்து மாறுபாடுகளுக்கிடையிலேயும் - அரசியல் கண்ணியத்தோடு அந்த ஏடுகள் சில அறிவுரைகளைக் கட்டுரைகளாக்கித் தரும்போது அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாவிடினும், அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடாமல் ஏன் முடியவில்லை என்பதற்கான விளக்கங்களைத் தருவது நமது தவிர்க்கமுடியாத கடமையாகிறது.

கடந்த ஆண்டுத் தொடக்கத்தில் திராவிடர் கழகச் சார்பில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டி, நம்மையெல்லாம் கலந்துகொள்ளச் செய்து தளபதி வீரமணி தலைமையிலே கிளர்ச்சிகள் தொடங்கிய போது, அதனை ஆனந்த விகடன் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளவில்லை. தேவையில்லை என்ற நிலையிலேயே கருத்து வெளியிட்டது.

ஆனால் இந்தி ஆதிக்கத்தின் வேகம் புயல் எனக் கிளம்பி விட்டபிறகு, ஒவ்வொரு முறை இந்தித் திணிப்பு தலைகாட்டுவதும் - தமிழகம் கொதித்தெழுந்தவுடன் அடங்கிவிடுவதும், பிறகு மீண்டும் தலைகாட்டுவதும் வழக்கமாகிவிட்டது என்றே

சலித்துக்கொண்டு, தமிழகமட்டு மல்லாமல் இந்தித் திணிப்பை எதிர்த்து நாடு தழுவிய அளவுக்கு கருத்தை உருவாக்கவேண்டும்! என அழுத்தம் திருத்தமாக விகடன் வீரமுழக்கம் செய்தது!

இந்தி ஆதிக்கத்தை ஏற்று தமிழன் இரண்டாந்தரக் குடிமகனாவதை சகித்துக் கொள்ள முடியாது! இங்கேயும் ஒரு இலங்கைப் பிரச்சினை உருவாகத்தான் இந்தி திணிப்பு வழிவகுக்கும்.

என்று கல்கி ஏடு எச்சரிக்கையே விடுத்துத் தலையங்கம் எழுதியது!

அண்மையில் விகடன் எழுதிய தலையங்கத்தில் - இந்தி ஆதிக்கத்தைக் கழகம் எதிர்க்கும் அடிப்படை உணர்வையும், உண்மை நிலைமையையும் ஒப்புக் கொள்ளும் அதே நேரத்தில், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதைக் கைவிட வேண்டுமெனக் கூறியுள்ளது!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை யூஸ்லெஸ் என்று முதல்வரும் - இந்தி எதிர்ப்பாளர்களைச் சிறையில் போட்டுப் பூட்டுவோம் என்று முதல்வராவதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் கூறியிருப்பதை விகடன் ஏற்றுக் கொள்ளவில்லை!

அந்தக் கடுமொழி - சுடுமொழிகளை விகடன் ஏற்றுக் கொள்ளாத அதே நேரத்தில், அரசியல் சட்டம் கொளுத்தப்படுவதையும் விகடனால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை!

பஞ்சாப் மற்றும் வடபகுதி மாநிலங்களில் வன்முறைக் கிளர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் பெருகிக் கொண்டிருக்கும் போது அரசியல் சட்டம் கொளுத்துகிற போராட்டம் நாட்டின் பலத்தை ஊனப்படுத்துமென விகடன் கருதுகிறது! அதனை மெத்தப் பரிவோடு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது!

சீன ஆக்கிரமிப்பின் போதும், பங்களாதேஷ் போராட்டத்தின் போதும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய ஒருமைப்பாட்டுணர்வை அகிலமறியச் செய்ததையும், இந்திய அரசின் கரத்தை பலப்படுத்த அணி திரண்டதையும் விகடன் மறந்திருக்க நியாயமில்லை!

பஞ்சாப் பயங்கரங்கள் நிகழும் போது, இப்படியொரு கிளர்ச்சி தேவையா என விகடன் எண்ணிப் பார்ப்பதைப் போல இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எண்ணியிருப்பாரேயானால் - எத்தனையோ பிரச்சினைகளால் இந்தியத் திருநாடு அல்லலுற்றிருக்கும் போது - கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையிலே வை! என்பது போல இந்தி ஆதிக்கத்தை இதுதான் தக்க சமயமெனப் பரப்புவதற்கும், திணிப்பதற்கும் அவர்முன் வந்திருக்க மாட்டாரல்லவா?

நேரு, லால்பகதூர், இந்திரா காந்தி இவர்கள் காலத்தில் புகைந்து கொண்டிருந்தது - இப்போது எரிந்து பரவி, தமிழர்களின் உரிமைகளை சாம்பலாக்க முற்பட்டுவிட்டது என்கிறபோது, எப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

அரசியல் சட்டம், புனிதமானதா? இது விவாதத்துக்குரியது என்றாலும் - விகடனின் கருத்தை ஏற்று புனிதமானது என்றே வைத்துக்கொள்வோம்!

1986 நவம்பர் 17ஆம் நாளன்று கழகத்தினர் கொளுத்த இருப்பதும் - 1963-ல் நவம்பர் 17ஆம் நாள் கொளுத்துங்கள் என்று அண்ணா ஆணையிட்டதும், அரசியல் சட்டம் முழுவதையுமல்ல!

குடியாட்சி முறையை வகுத்தளித்துள்ள அரசியல் சாசனம் முழுவதையும் கொளுத்துவோம் என்பது, மக்களாட்சித் தத்துவத்துக்கே எதிரிடையானது என்பது தெரியாத ஒன்றல்ல!

அரசியல் சட்டத்தில் 17வது பாகத்தில் இந்தி தான் இந்தியாவின் ஆட்சிமொழி Official Language என்ற அந்த வாசகத்தை மட்டுமே 1963லும் கொளுத்தினோம்! இப்போதும் கொளுத்திடக் களம் அமைக்கிறோம்!

கொல்லையில் முருங்கைமரம் இருக்கிறது! சத்துள்ள கீரை தருகிறது! காய் தருகிறது! எனினும் அடிமரத்திலும், சில கிளைகளிலும் கம்பளிப்பூச்சி அடையாக ஒட்டிக்கொண்டிருக்கிறது! அதை அப்படியே விட்டுவிட்டால் மரத்தருகே செல்லும்போது உடலில் தாக்கும்! வீட்டுக்குள்ளே ஊர்ந்து வந்து படுக்கையிலும் ஒட்டிக்கொள்ளும்! அதன் ரோமம் பட்டாலே மேனி தடிக்கும்! அரிப்பு தாங்காது துடிக்க நேரிடும்!

முருங்கை மரத்தில் கம்பளிப்பூச்சி போலத்தான் அரசியல் சட்டத்தில் 17வது பாகத்தில் இந்தி ஆட்சி மொழியெனும் பகுதி அடையாக ஒட்டிக்கொண்டிருக்கிறது!

கம்பளிப்பூச்சியின் அடைமீது தீயிட்டுக் கொளுத்துவது, அதனை அழிக்கத்தானே தவிர - முருங்கை மரத்தையே அழிக்க அல்ல!

கழகம் அறிவித்துள்ள போராட்டம், இந்தி தான் இந்தியாவின் ஆட்சிமொழி என்ற பகுதியிருப்பதால், கம்பளிப் பூச்சியினால் ஏற்படும் தொல்லையைத் தவிர்க்க முயற்சியெடுப்பது போல - அந்தப் பகுதியினால் வரும் ஆபத்தைத் தடுக்கத்தான்!

அரசியல் சட்ட மொழிப் பிரிவை அராபிக் கடலிலேயே தூக்கி எறியவேண்டுமென்றார் மூதறிஞர் ராஜாஜி! வங்கக் கடல், இந்துமாக் கடல் என்றால் கூட திரும்பிவந்து விடுமோ என்ற பயத்தில்!

அரசியல் சட்டம் ஏதோ தொடக்கூடாத புனித ஏடு என்று காங்கிரசார் பேசுவதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றார் அறிஞர் அண்ணா!

அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதை அம்பேத்கார் அவர்களே, 3.9.53-ல் ஆந்திர மசோதா பற்றிய விவாதம் மாநிலங்களவையில் நடந்தபோது -

நான்தான் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கினேன் என்று சொல்கிறார்கள். நான்தான் அதை நெருப்பிலிட்டுப் பொசுக்குவதற்கும் முதன்மையானவனாக இருப்பேன் என்று முழங்கியிருக்கிறார்.

விகடன் சொல்லிவிட்டால் கேட்டுத்தான் தீரவேண்டுமா? என்ற வீராப்புடன் இதனை நான் குறிப்பிடவில்லை!

நான் மேற்கொண்ட செயல், ஆளவந்தார்களை விழிப்படையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே! இந்த வயதில் சில காகிதத்தைக் கொளுத்தி வேடிக்கை பார்க்கும் விளையாட்டை நான் மேற்கொள்ள மாட்டேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்!

இவ்வாறு 1963 டிசம்பர் 5ஆம் நாள் எழும்பூர் நீதிமன்றத்திலே அரசியல் சட்ட மொழிப் பிரிவு கொளுத்த முயன்ற வழக்கில்

குற்றம் சாட்டப்பட்டவராக நின்று அண்ணா அவர்கள் குரல் கொடுத்தார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தின் 17வது மொழிப் பிரிவுதான் உள்ளபடியே தேசிய அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய கேட்டினை எதிர்த்து இந்தி எதிர்ப்பு அறப்போரின் ஒரு பகுதியாக அதனைக் கொளுத்த முற்பட்டது தேசிய அவமதிப்புக் குற்றமல்ல!

இதுவும் எழும்பூர் நீதிமன்றத்தில் அண்ணா தந்த வாக்கு மூலத்தில் ஒருபகுதிதான்!

இத்தனையும் சொல்வது, விகடனின் அன்பான வேண்டுகோளை அலட்சியம் செய்வதற்காக அல்ல!

ஆபரேஷன் தியேட்டருக்கு அழகான குழந்தையை எடுத்துச் செல்லும்போது, எப்படியாவது குழந்தை வயிற்றில் உள்ள கட்டி அகற்றப்பட்டு குழந்தை நலம் பெற்றிட வேண்டுமென்ற ஆவல் அன்னையின் நெஞ்சில் அலைமோதினாலும், அய்யோ ஆபரேஷன் வேண்டாமே! என் வைரமணி விளக்கின் வயிற்றில் கத்தி வைக்க வேண்டாமே! என்று அந்த அன்னைக்குக் கதறத்தான் தோன்றும்.

அதே நிலைதான் ஆனந்த விகடனுக்கு! விகடனுக்கு மட்டுமல்ல, நமக்கும் கூடத்தான்!

வேறுவழியில்லையே! என்ன செய்வது? கட்டி அகற்றப்பட வேண்டுமே! அதாவது இந்தி ஆதிக்கமெனும் கட்டு குலைக்கப்பட வேண்டுமே!

அன்புடன்

மு.க.

27-10-1986

1464. ஆணையிட்டு ஆர்த்தெழுந்திடுவோம்!

உடன்பிறப்பே,

1986ஆம் ஆண்டு நிறைவெய்தும் கட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள சில இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் - இந்த ஆண்டில் இதுவரையில் யாரும் வெடிக்காத நகைச்சுவை வெடியொன்றை வெடித்துள்ளார்கள்.

தி.மு.க. ஆட்சியில் தமிழை வளர்க்கவில்லை, அவர்கள் மொழி வெறி பிடித்தவர்கள். இதுதான் அந்த முதல் தரமான நகைச்சுவை துணுக்கு!

சென்னை ராஜதானி என்றும் சென்னை மாகாணம் என்றும் மதராஸ் ஸ்டேட் என்றும் காங்கிரஸ் ஆட்சியில் இந்த நிலத்துக்குப் பெயர் இருந்தது.

இதற்குரிய பெயரான தமிழ்நாடு என்பதைச் சூட்டவேண்டுமென தி.மு.க. போராடியது. விருதுநகரில் தியாகி சங்கரலிங்கனார் உண்ணா நோன்பு இருந்து உயிரையே விட்டார். அப்போது அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சட்டப் பேரவையிலேயே சொன்னார்; மதராஸ் ஸ்டேட் என்றால்தான் வெளிநாடுகளில் தெரியும் தமிழ்நாடு என்றால் தெரியாது; எனவே அந்தப் பெயர் மாற்றம் தேவையில்லையென்று!

இன்னும் சில காங்கிரஸ் அமைச்சர்கள் ஒருபடி மேலே சென்று தமிழ்நாடு என இலக்கியங்களில் குறிப்பிடப்படவேயில்லையெனக் கூறித் தங்களின் இலக்கிய மேதாவிலாசத்தைக் காட்டிக் கொண்டனர்.

இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கிய

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவதை நாம் சுட்டிக்காட்டிய போதும்; சம்புத் தீவினுள் தமிழக மருங்கில் என மணிமேகலை குறிப்பிடுவதை நாம் சுட்டிக் காட்டிய போதும்,

அதுசரி! இலக்கியத்தில் இருக்கிறதா?

என்று அந்த இலக்கிய வித்தகர்கள் சிலர் எதிர் வினா எழுப்பியதையும் மறந்து விடுவதற்கில்லை!

தமிழ்நாடு அரசு என்ற பெயரையே சூட்டுவதற்கு மறுத்தவர்கள், அதற்கெனப் போராடியவர்களை அலட்சியப் படுத்தியவர்கள், அதற்கெனப் பட்டினி கிடந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் சவ அடக்கத்திற்குக்கூட மரியாதை தர ஒப்பாதவர்கள், அந்த சரித்திர நிகழ்ச்சிகளைத் தமிழக மக்கள் மறந்துவிட்டார்கள் எனக் கருதியன்றோ இன்றைக்கு தி.மு.க. ஆட்சியில் தமிழ் வளர்க்கப்படவில்லை என்று எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிறார்கள்!

அறிஞர் அண்ணா முதலமைச்சராகி - தமிழ்நாடு எனப்பெயர் இந்த மண்ணுக்குச் சூட்டப்பட்டதை மறந்து விட்டன்றோ, கழக ஆட்சியில் தமிழ் வளரவில்லை என்கின்றனர்!

சத்தியமேவ ஜெயதே என்ற அரசு முத்திரை வாய்மையே வெல்லும் எனக் கழக ஆட்சியில் மாற்றப்பட்டது தமிழாகத் தெரியவில்லையாம் அவர்களுக்கு!

ஆகாஷ்வாணி என்பதை வானொலி என மாற்றிடச்செய்த கழக ஆட்சியில் தமிழ் வளர்க்கப்படவில்லையாம்!

அறைகளில் நடந்து கொண்டிருந்த உலகத் தமிழ் மாநாட்டை அனைத்து நாடுகளும் அறியும் வண்ணம் முதன்முதலாக - எழுச்சியோடு நடத்திக் காட்டித் தமிழுக்குப் பெருமை சேர்த்தது இன்றுள்ள காங்கிரஸ் தலைவர்கள் சிலருக்குத் தமிழ் வளர்ச்சியாகத் தெரியவில்லையாம்!

அசெம்பிளி அங்கத்தினர், சட்டமன்ற உறுப்பினரானதும் - சபாநாயகர், பேரவைத் தலைவரானதும் - கனம் என்பது மாண்புமிகு என மாறியதும் - அக்ராசனாதிபதி, அவைத்தலைவரானதும் - கழகம், தமிழைப் பொதுமக்கள் முன்னிலையில் கொண்டு வந்த காரணத்தினால்தான் என்பதைப் பண்புள்ள காங்கிரஸ் நண்பர்கள் இதுவரையில் மறுத்ததில்லையே!

மொழிநூல் அறிஞர் தேவநேயப் பாவணரைக் கொண்டு பெருந்தமிழ்க் கருவூலமாக அகர முதலி தயாரிக்கத் தொடக்கம் செய்ததும் கழக ஆட்சியில் தானே!

அறிஞர் மு.வ. அவர்கள் தலைமையில், தமிழக வரலாறு தொல்பழங்காலந்தொட்டு எழுதப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் கழக ஆட்சியில் தானே!

ஒல்லும் வகையெல்லாம் தமிழ்வளர்க்க எனும் எண்ணமுடன் அமைக்கப்பட்டதுதானே வள்ளுவர் கோட்டம்! புதிய பூம்புகார் உருவாக்கப்பட்டு அங்கு தமிழறிஞர்கள், கருத்தாழமிக்க உரைகளை நிகழ்த்தியதை மறந்தனரோ இந்தக் காங்கிரஸ் தலைவர்கள்!

தமிழ்வளர்ச்சிக்கென பல்கலைக் கழகங்களில் ஆய்வுப் பகுதிகள் மேலும் பெருக்கப்பட்டது கழக ஆட்சியில் என்பதை அறியாரோ இவர்கள்?

சங்கீத நாடகசபா, இயல் இசை நாடகமன்றமாக்கப்பட்டு தமிழ் இசை வளர்க்க மேலும் ஊக்கமளிக்கப்பட்டது கழக ஆட்சியில்தானே! திருக்கோயில் வழிபாட்டில் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட்டது கழக ஆட்சியில் தான்!

பேருந்துகளில் எல்லாம் வள்ளுவர் படமும், வள்ளுவர் குறளும் அமைக்கப்பட்டது கழக ஆட்சியிலேதான்!

1937 முதலே இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் பரவாமல் தடுத்திடவும் - தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆகாதிருக்கவும் - அறப்போர் பல புரிந்து ஆயிரக்கணக்கானோர் சிறை புகுந்து - இன்னுயிரைப் பலர் இழந்து, தமிழ் காக்கவும் தமிழர் நலன் காக்கவும் தொடர்பணியாம் தூயபணியாற்றி வருவது தி.மு.கழகம் என்பதையும், கழக ஆட்சியில்தான் இந்தியைப் புறந்தள்ளி - இருமொழிக் கொள்கையான தமிழ், ஆங்கிலம் இரண்டேதான் என்ற நிலையை அண்ணா அவர்கள் உருவாக்கினார்கள் என்பதை, இ.காங்கிரசின் புதிய தலைவர்கள் எப்படித்தான் மறைத்திட மனம் துணிந்தனரோ?

தமிழைப் பயிற்றுமொழியாக்க விரைவான திட்டம் கழக ஆட்சியில் வகுக்கப்பட்டதையும், அதனை அன்றைக்குக் காங்கிரஸ் தலைவர்களே முன்னின்று எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தியதையும் - இந்தத் தமிழகம் மறந்திருக்குமென்று இந்தத் தலைவர்கள் எண்ணி விட்டனர் போலும்!

கிராமப்புறத்து பிள்ளைகளுக்கும் தொடக்கக்கல்வி கட்டாயம் அளிக்கப்பட வேண்டுமெனக் கர்ம வீரர் காமராஜர், சிற்றூர்களில் எல்லாம் பள்ளிகளைத் திறந்தார்.

அந்தப் பிள்ளைகள், கல்லூரிகளை நாடிப் பட்டினப்பகுதிகளுக்கு வர இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் கல்வியை முழுமையாகப் பெற முடியாமல் போய்விடக்

கூடாதென்று - கிராமங்களிலிருந்து சென்றிட வசதியாக நூற்றுக்கணக்கான புதிய கல்லூரிகளைத் தமிழக முழுவதும் பரவலாக உருவாக்கியது கழக ஆட்சியில் என்பதை இன்றைய காங்கிரசின் புதிய தலைவர்கள், முழுப் பூசணியை இலைச் சோற்றில் மறைப்பது போல் மறைத்திட முயற்சிப்பது முறைதானோ?

பழகுதற்கினியவராய் - பண்பாளராய் விளங்கிய பழம் பெரும் காங்கிரஸ் நண்பர் திரு. உ.சுப்பிரமணியம் அவர்கள், ஒன்றியத் தலைவர் ஊராட்சித் தலைவர்கள் பாராட்டு விழா ஒன்றில் சிவகெங்கைப் பகுதியில் பேசியதாக ஏடுகளில் கண்டேன்!

தி.மு.க.வினர் மொழி வெறி பிடித்தவர்கள். உலகத்தில் எங்குமே மொழி வெறி பிடித்தவர்கள் கிடையாது. தமிழ் நாட்டில் தி.மு.க.வினர்தான் மொழி வெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் தமிழை வளர்க்கவில்லை.

அடேடே! உ. சுப்பிரமணியம் அவர்களா இப்படிப் பேசியிருக்கிறார் என்று வியப்புற்றேன்!

அவர் எதையும் எதிர்பார்க்காத தேசபக்தர் ஆயிற்றே? அவருக்கென்ன திடீர் ஆசை வந்தது இப்படிப்பேச? என்று எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். புரியவில்லை!

சில ஆண்டுகளுக்கு முன்பு, கமுதியில் நமது காதர்பாட்சா வெள்ளைச்சாமி வீட்டுத் திருமணத்தில் மணமக்களை வாழ்த்திப்பேச வந்த உ. சுப்பிரமணியம் அவர்கள், மணமக்களையே மறந்துவிட்டு என்னையும், கழகத்தையும், கழக ஆட்சியையும், கழகத்திற்கும் எனக்குமுள்ள தமிழ்ப்பற்று, இனப்பற்றினையும் எப்படியெல்லாம் புகழ்ந்து, போற்றி, பாராட்டி, உரையாற்றினார் என்பதை நினைத்துப் பார்த்துக் கொண்டேன்!

உலகில் எங்குமே மொழி வெறியர்கள் இல்லை என்கிறார் அவா!

மொழிவெறியர்கள் இருக்கக்கூடாதுதான்! ஏற்றுக் கொள்கிறேன்!

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கிய கருவூலங்களைப் பெற்றதும் - கடல்கடந்து வாணிபம் நடத்தப் பயன்பட்டதும் - கடாரம் வென்றிடவும், கனகவிசயரைக் கல்சுமக்க வைத்திடவும் - ஆற்றல் பெற்றிருந்ததும் - அகம் புறமென வாழ்வை வகுத்துக் கொண்டு, ஐவகை நிலம் பிரித்து, அவனிக்கெல்லாம் நாகரிகத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்ததும் - வள்ளுவர்,

இளங்கோ போன்ற வான்புகழ்ப் புலவர் பெருமக்களைத் தந்ததுமான நமது தமிழ்மொழியைப் பிறமொழி ஆதிக்கத்திலிருந்து காப்பது, வெறியென்றால் -

உடன்பிறப்பே! ஒன்றுக்கும் ஆகாததும் - உதவாக்கரை நிலையில் உள்ளதும் - இலக்கிய வளம், இலக்கண வளமற்றதும் - இனிமேல்தான் எழுந்து நடமாட வேண்டுமென்ற சப்பாணியாக தவிப்பதுமான இந்தி மொழியை நம்மீது திணிக்க இந்தியாவிலுள்ள ஒரு சில மாநிலத்தினர் மத்திய அரசைத் துணைக்கொண்டு படையெடுப்பதற்குப் பெயர் என்னவாம்? இந்தி வெறியர்கள், இந்தியாவே தங்கள் கைக்குள் அடக்கமென ஆர்த்தெழும்போது - தமிழ்த் தியாகிகள், அதனை எதிர்த்து உயிர்விடவும் தயாராக எழுவது - வெறியென்று பகர்கின்றனரே! இது நியாயமா?

வீணர் சிலர் இதுபோல உரைத்தால், அலட்சியப் படுத்திவிடலாம்! இந்தி எதிர்ப்பு வீரர்களையே தனது சொந்தத் தம்பிகளாகப் பெற்ற உ. சுப்பிரமணியம் அவர்கள் இப்படிப் பேசும்போது, தமிழ் வீரம் மணந்த சிவகெங்கைச் சீமையிலிருந்தா இப்படியொரு குரல்? எனக் கேட்கத்தானே தோன்றுகிறது!

கிழவன் சேதுபதி - முத்துவடுகநாதன் - வேலு நாச்சியார் - மருதுபாண்டியர் - வாளுக்கு வேலி - என்று பல தென்பாண்டிச் சிங்கங்கள் உலவிய வீர நிலத்தில், இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்க காங்கிரஸ் ஆட்சியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சிவகெங்கை இராசேந்திரன் பிறந்த மண்ணில், இந்திக் களையினை பயிரிட இவர் போன்றோர் - அதுவும் அவர் வழிவந்தோர், எங்ஙனம் முன்வந்தனரோ - அறிய முடியவில்லையே!

அத்துடன் நிறுத்தினாரா அவர்! இல்லையே!

கருணாநிதி வீட்டுப்பிள்ளைகள், பேரக்குழந்தைகள் இந்தி படிக்கிறார்கள் என்றதொரு கற்பனைக் கதையையும் அல்லவா கட்டிவிட்டிருக்கிறார்!

அன்றொருநாள் காங்கிரஸ் மேடைகளில் சந்துமுனை சிந்துபாடிகள் சிலர் இருந்தனர்!

அண்ணா அவர்கள், அவர்களுக்கு தந்த அடைமொழி இது!

அவர்கள் இப்படியொரு பொய்யுரை புகன்றிருந்தால் பொறுத்துக் கொண்டிருப்பேன்!

இவரா? இத்தனை நாளும் நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர் என நான் நினைத்திருந்த இவரா! என்னை இப்படி ஏமாற்றி விட்டார்? என்பதை எண்ணி வருந்துகிறேன்!

உடன்பிறப்பே! பிரதமர் ராஜீவ் காந்தியின் பிள்ளைகள் மாஸ்கோவில் - அமெரிக்கத் தூதராலயத்தையோ அல்லது ஸ்பெயின் தூதராலயத்தையோ சேர்ந்த கல்வி நிலையத்தில் ஆங்கிலம், ஸ்பானிஷ், இத்தாலி மொழிகளைப் படிப்பதாகக் கேள்வி! முழுவிபரம் தெரியாது!

நம்மை இந்தி படிக்கச் சொல்கிறார்கள். அவர்களோ தங்கள் பிள்ளைகளை மாஸ்கோவுக்கு அனுப்பி, இத்தாலி, இங்கிலீஷ், ஸ்பானிஷ் மொழிகளைப் படிக்கச் சொல்லுகிறார்கள்! நான் கேள்விப்பட்டது சரியோ, தவறோ? தவறெனில் திருத்திக் கொள்கிறேன்! ஆனால் - உ. சுப்பிரமணியனார் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் இந்தி படிப்பதாகப் பொய் சொன்னதால், இந்தத் தகவல் என் கவனத்துக்கு வந்தது. அவ்வளவுதான்!

தமிழைக் காப்பதும், வளர்ப்பதும், தமிழையும், தமிழர் உரிமைகளையும் அழிக்கவரும் இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதும் - மொழிவெறி எனக் காங்கிரசார் அகராதி கூறுமேயானால், அந்த அகராதியை நாம் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை! ஆனால் இந்தப்பணியை, எப்பழிவரினும் தயங்காமல், தொடர்ந்து நடத்துவோம்!

தாயின் மேல் ஆணை!

தந்தை மேல் ஆணை - தூய நம்!

தமிழ்மேல் ஆணையிட்டே இதனை

உரைக்கின்றோம்!

அன்புடன்

மு.க.

28-10-1986

1465. இனமானப் போருக்கு எழுக! எழுகவே!

உடன்பிறப்பே,

கோவையில் நீயும் நானும் சந்திக்க - இன்னும் இடையிலே ஆறே நாட்கள் தான்!

படைபெருத்ததால் பார் சிறுத்ததோ? அன்றிப் பார் சிறுத்ததால் படைபெருத்ததோ? என ஐயுறும் வண்ணம் நவம்பர் எட்டாம் நாள் பிற்பகல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பேரணியை நடத்திக் காட்ட இருக்கிறாய்!

இந்தி வெறியர்களை இடியொலிகேட்ட நாகங்களாக்க இரண்டுநாள் மாநாடும் கோவையில் போர்முரசு கொட்ட இருக்கிறது!

நவம்பர் 17 முதல் நமது கழகம் நடத்த இருக்கிற அறப் போராட்டத்திற்கு மாவட்டந்தோறும் ஆயிரம், இரண்டாயிரமென வீரர்களின் பட்டியல் குவிந்து கொண்டேயிருக்கிறது.

கொஞ்சம் பொறுத்திருங்கள்! அடுத்த கட்டப் போராட்டத்திற்கு அணிவகுப்பில் உங்களுக்கு நிச்சயம் இடம் உண்டு - எனக்கூறி அமைதிப்படுத்தினாலும்கூட, நான் என்ன பதவியா கேட்கிறேன்? தேர்தலில் நிற்க இடமா கேட்கிறேன்? அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் இந்தி ஆட்சி எனும் பகுதியை எரிக்கத்தானே வாய்ப்பு கேட்கிறேன் - ஒரு திங்களோ - பல திங்களோ - அல்லது ஆண்டுக்கணக்கோ எதுவாயினும், சிறைக் கோட்டத்தில் அடைபட்டுக் கிடக்கத் தலைமையின் அனுமதியைத்தானே கேட்கிறேன். அதற்கு ஏன் இத்தனை தயக்கம்? எனச் சினந்து கொள்கிற உடன்பிறப்புகளை நேரில் காணும் போதும் - அவர்கள் எழுதியுள்ள கடிதங்கள் மூலமாக சந்திக்கும் போதும், அப்பப்பா - எவ்வளவு உணர்ச்சி! எத்துணை உத்வேகம்!

தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டையிலிருந்து நண்பர் தர்மலிங்கமும், பாபநாசத்திலிருந்து புலவர் சம்பந்தமூர்த்தியும் எனக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொள்ள ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்துள்ள போது, அந்த இரண்டு கடிதங்களையும் நான் குறிப்பிடுவதில் ஒரு தனிச்சிறப்பு இருக்கவே செய்கிறது!

தஞ்சை மாவட்டம் என்பதாலா? என்று மற்ற மாவட்ட உடன்பிறப்புகள் புன்னகை புரிவது எனக்குத் தெரியாமல் இல்லை!

காரணம் அதுவல்ல! கடிதம் எழுதியுள்ள அந்த இருவருமே அண்மையில்தான் கடும் நோயினால் தாக்குண்டு - மீண்டுள்ளார்கள்! அவர்களிடமிருந்து களம் செல்ல விரும்பும் கடிதங்கள் வருகின்றன என்றால் - என் கண்கள் குளமாகத்தானே செய்யும்!

இத்தனைக்கும் இதுவரை கழகம் நடத்திய போராட்டங்களில் ஈடுபடாதவர்கள் அல்லர் அவர்கள்! இன்னும் சொல்லப் போனால் இளம் வயது படைத்தவர்களும் அல்லர்!

ஆனால் இளமையின் துடிப்புடன் - புறநானூற்று வீரர்களைப் போல - போர் முழக்கம் செய்திடப் புறப்படுகிறோம் எனச் செய்தி அறிவிக்கிறார்கள் என்கிற போது உடல் புல்லரிக்கத்தான் செய்கிறது! உளம் பூரிப்பால் பொங்கி வழிகிறது.

ஆதிக்கக்காரர்கள் ஒருபுறம் மிரட்டுகிறார்கள்! ஆளவந்தார்களோ ஆணவத்தின் உச்சத்தில் நின்று ஆங்கிலச் சொற்களைப் பொறுக்கி எடுத்து அர்ச்சனை செய்கிறார்கள்! பெரியார் பெயரையும், அண்ணாவின் பெயரையும் பதவி சுகங்களுக்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்டு, பட்டுவிரித்த தரையிலே பாதம் பட்டால் நோகுமே - எனப்பரிவுரை, பரிதாபஉரை சிந்துகிற பஜனை பாடிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இந்திக்கு மறைமுகமாக நடை பாவாடை விரித்து - ஆலவட்டம் சுழற்றி - இந்தி ஆதிக்கத்தை நாம் எதிர்ப்பதையே ஏகடியம் செய்கிறவர்கள் ஆளுங்கட்சியென்ற மமதையிலே நம்மை ஏசியும் பேசியும் இந்தி வெறியர்களுக்கு நிரந்தர அடிமைகள் தாங்கள்தான் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள்! ஒரு பக்கமிருந்து தேசத்துரோகம் என்ற தூற்றல்! இன்னொரு பக்கமிருந்து ஒருமைப்பாட்டுக்கு விரோதம் என்ற ஓங்காரக் கூச்சல்!

சிறைக்கதவு, திறக்குமென்ற அச்சுறுத்தல்! அடக்குமுறை வீசப்படும் என்ற பயமுறுத்தல்!

இவையனைத்தையும் நீ பெற்றுள்ள தமிழின உணர்வு - தமிழ்மொழிப்பற்று இவற்றால் எதிர்த்துத் தாங்கிக் கொள்ள முடியும் என்ற நெஞ்சுறுதியோடு, உடன்பிறப்பே! நீ கோவையில் அணிவகுத்திடப் போகும் காட்சியை இப்போதே அகக்கண்ணால் பார்த்து மகிழ்கிறேன்!

கழகக் கண்மணியே! உன்னை நேரிலே காணும் போது அந்த மகிழ்ச்சி இன்னும் ஆயிரம் மடங்கு, பத்தாயிரம் மடங்கு எனப்பெருகுமல்லவோ?

கடந்த காலத்தில் எத்தனையோ மாநாடுகள் - பேரணிகள் - போராட்டங்கள் - சிறைவாசங்கள்!

இப்போது அமையும் களம்! மன்னிக்க வேண்டும் - இது அய்யாவும் அண்ணாவும் 1937ஆம் ஆண்டிலேயே அமைத்த களம்!

ஐம்பது ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிற மொழிப்போரின் மற்றொரு கட்டம்!

மங்கையொருத்தி தரும் சுகமும் - எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை

என்ற பாவேந்தனின் வரிகளை இதயத்தில் நிறுத்தி,

நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலையை, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாகக் கருதிப் போர்க்களம் காண - அமைதிப்படை அணிவகுக்க - இந்திய ஒருமைப்பாடு காக்கவேண்டுமானால் இந்தி ஆதிக்கம் வீழ்த்தப்பட்டாக வேண்டும் எனும் நல்லெண்ணக் குரல் கொடுக்க - நவம்பர் 17 முதல் தொடங்கும்,

இனமானப் போர்!
இன உரிமைப் போர்!

ஆம்! அதுதான் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர்! என்பதை உலகுக்கு உணர்த்திட உடன்பிறப்பே! கோவைக்கு வந்திடுக! குலவிளக்கே! உனைக்காணக் காத்திருப்பேன்.

அன்புடன்

மு.க.

01-11-1986

1466. புறநானூற்றுச் சரிதம் படைக்க புறப்படுக கோவைக்கு!

உடன்பிறப்பே,

அ.இ.அ.தி.மு.க. அதாவது அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தித் திணிப்பை விஞ்ஞான பூர்வமாக எதிர்க்கிறதாம். ஆனால் தி.மு.கழகம் இந்தித் திணிப்பை விளம்பரத்திற்காக எதிர்க்கிறதாம். அதனால்தான் போராட்டம் நடத்துகிறதாம்.

இப்படிக் கூறியிருக்கும் வித்தகர், வேறு யாருமல்ல - அமைச்சராக இருந்து அண்மையில் ஆளுங்கட்சியின் துணைப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் அண்டே அவர்கள்தான்.

விளம்பரம் என்றால் அவருக்கும், அவரது கட்சிக்கும் வேப்பங்காய் கடிப்பது போல!

விளம்பரங்களுக்கென்றே ஏடுகளுக்கு மட்டும் பத்துகோடி, இருபது கோடியென்று வாரி இறைத்திருக்கிற எம்.ஜி.ஆர். ஆட்சியில் இதுவரையில் அமைச்சராக அங்கம் வகித்தவர், தி.மு.கழகம் விளம்பரத்திற்காகப் போராட்டம் நடத்துகிறது என அங்கலாய்த்திருப்பது வேடிக்கையான ஒன்றாகும்!

உடன்பிறப்பே, சென்னை நகரச் சுவர்களில் வாரத்திற்கு இரண்டு முறையாவது நன்றி! நன்றி! மனிதக் கடவுள் எம்.ஜி.ஆருக்கு நன்றி! என்று கதவு அகலத்தில் சுவரொட்டிகள் எம்.ஜி.ஆரின் பெரிய அளவுப் படத்துடன் ஒட்டப்படுகின்றன.

எதற்காக நன்றி தெரியுமா? மாநகர் முழுதும் - சாக்கடைகளை அடைத்து, சாலைகளைப் புதுப்பித்து, துப்புரவு, தூய்மை இவற்றை நிலைநாட்டி - கிருஷ்ணா தண்ணீரையும் பருகிடக் கொடுத்துவிட்டார் என்பதற்காகவா நன்றி!

அல்ல! அல்ல! ஒருவருக்கு வாரியத்தலைவர் பதவி கிடைக்கும். அதற்காக ஒரு நன்றி! பல்வேறுவித வண்ணங்களில்! பல்வேறு அமைப்புகள் சார்பாக! இன்னொருவருக்கு வாரியத்தில் ஒரு உறுப்பினர் பதவி கிடைத்திருக்கும். அதற்காகப் பத்துவகை நன்றி போஸ்டர்! இப்படியெல்லாம் போடாவிட்டால் பொன்மனச்செம்மல் கொடுத்தவனே எடுத்துக் கொண்டாண்டி; என அளித்த பதவி அடுத்தநாளே அபகரிக்கப்படுமாம்!

தீபாவளியென்றால் அதற்கு எத்தனை வாரியங்களில் விளம்பரம்! வாரியங்களைப் பற்றியா? அதுதான் இல்லை! இதயதெய்வம்? எம்.ஜி.ஆரின் காலடி மண்ணைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு வாழ்த்துகிறோம் என அவரது படத்தையும் போட்டு - உச்சி முதல் உள்ளங்கால் வரையில் அவரைப் புகழ்ந்து போற்றி, பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரம்!

எந்த மாநிலத்திலாவது முதலமைச்சர்கள் தலைமைச் செயலகத்துக்குப் போவதுண்டா?

இந்த மாநிலத்தில்தானே அதிசயமாக ஒரு முதலமைச்சர், என்றாவது ஒருநாள் தலைமைச் செயலகத்துக்குப் போகிறார் - அதனால் அதற்கு ஒரு விளம்பரம்!

எந்த மாநிலத்திலாவது முதலமைச்சர் மக்களிடம் மனுக்களை பெறுவது உண்டா?

இந்த மாநிலத்தில்தானே அந்த அதிசயம் நடக்கிறது. அதனால் அதற்கு ஒரு விளம்பரம்!

எந்தக் கட்சியிலாவது பொதுச் செயலாளர் கட்சி அலுவலகம் செல்வதுண்டா? அ.தி.மு.க. கட்சியில்தானே அந்த அதிசயமும் நடைபெறுகிறது. அதனால் அதற்கு ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரம்!

விளம்பரத்துக்காக இந்த அரசும் அரசுச் சார்புடைய நிறுவனங்களும், வாரியங்களும் - இதுவரை செலவழித்த தொகை எவ்வளவு? ஆண்டுவாரியாக? என்று நான் மேல்சபையில் எழுதி அனுப்பிய கேள்விகள் - அமைச்சர்களுக்கு ஆண்டுதோறும் ஆகிய போக்குவரத்துச் செலவு என்ன? - 1976க்கு முன்பு செலவு என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கும் - மேல்சபை வினாவிடை நேரம் மௌனம் சாதித்து மட்டுமல்ல! அந்த விபரங்களைச்

சொல்லவேண்டுமே என்ற பயத்தில் அந்த வினாக்களை அங்கீகரிக்கக் கூடத்தயாராக இல்லை!

சுமார் முப்பதுக்கு மேற்பட்ட வாரியங்கள்! மேல்சபை ஒழிந்ததால் பதவியிழந்தவர்களுக்கெல்லாம் புதிதாகப் படைக்கப்பட்ட பதவிகள்! ஏறத்தாழ அவர்களுக்கும் அமைச்சர் அந்தஸ்துகள்! ரயிலில் ஏ.சி. கோச்சில் பயணம்! கார் வசதி! வீட்டு வசதி! போலீஸ் பாரா! செக்யூரிட்டி ஜீப்! இத்யாதி! இத்யாதி!

மேல்சபை இல்லாததால் ஆண்டுக்கு முப்பது லட்சரூபாய் மிச்சமென்கிறார் நிதியமைச்சர் நாவலர். மேல்சபைப் பதவியிழந்தவர்களுக்கு புதிய பதவி கொடுத்துள்ள வகையில் ஆண்டுக்கு சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகுமென்பதை நிதியமைச்சர் மறந்து விட்டார் போலும்!

வாரியங்கள் வாரந்தோறும் புரட்சித் தலைவரை வாழ்த்தி வாழ்த்தி வெளியிடும் பத்திரிகை விளம்பரங்களுக்கே - மக்களின் பணம் பல லட்சம் செலவாகிறதே!

அரசாங்க உபயோகத்துக்கு என ஒரு ஹெலிகாப்டர் வாங்கினார்கள்! ஆனால் முதலமைச்சர், இராணுவ முகாமிலிருந்து வாடகைக்கு எடுக்கிற ஹெலிகாப்டரில்தான் பயணம் செய்கிறார்! அதற்கு எத்தனை லட்சம் செலவு என்று கேட்டால் சரியான பதில் இல்லை. மழுப்புகிறார்கள்!

பனைமரத்தில் குண்டூசியைக்குத்தி குருநாதரிடம் தூக்கிவந்த நாலு புத்திசாலிகளைப்போல - ஜப்பானில் கப்பல் வாங்க பதினாலுபேர் முதலமைச்சருடன் சென்று, அங்கிருந்து அமெரிக்கா முதலிய நாடுகளுக்குப் போய்விட்டு வந்தார்கள்! அந்தச் செலவெல்லாம் வீண விரயமா? விளம்பரமா? வித்தகர் அண்டே தான் விளக்கவேண்டும்!

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுதந்திராக் கட்சி உறுப்பினராக - அல்ல, அல்ல, அ.தி.மு.க. உறுப்பினராக சட்டமன்றத்தில் முழங்கிய அண்டே அவர்கள், தமிழரசு என்ற அரசாங்கப் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு இதோ பாருங்கள், இதில் இரண்டு இடங்களில் முதலமைச்சர் கருணாநிதியின் படங்கள் வந்துள்ளன. இதெல்லாம் சுயவிளம்பரம் இல்லையா? பர்சனாலிடி கல்ட் இல்லையா? என்று தீ மிதித்தவர்போல இன்றோ! அந்தத் தமிழரசுப் பத்திரிகையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் படங்கள் இல்லாத பக்கங்களையே

பார்ப்பது அரிதாகிவிட்டது! வித்தகர் அண்டேடக்கு இது விளம்பரமாகப்படவில்லை - விஞ்ஞான ரீதியாகப்படுகிறது போலும்!

இப்படி - தடுக்கி விழுந்தால் விளம்பரம் என்ற நிலையில் - விளம்பரத்தை தவிர வேறு எதுவுமில்லாத ஒரு ஆட்சி நடக்கும்போது, கோட்டான் குயிலைப் பழித்தது போல திருவாளர் அண்டே அவர்கள் தி.மு.கழகத்தைப் பழிக்க முற்பட்டுள்ளார்.

ஒன்றை ஹண்டே ஒத்துக் கொண்டிருக்கிறார்!
இந்தித் திணிப்பை எதிர்க்கவேண்டுமென்பதை!

ஒருகாலத்தில் அவரது பாசத்துக்குரிய மேன்மைமிகு தலைவர் ராஜாஜி அவர்கள், அரசியல் சட்டத்தின் 17வது ஆட்சி மொழிப்பிரிவை அராபிக் கடலில் தூக்கி எறியச் சொன்னதை அண்டே அவர்கள் அப்போது விளம்பரப் பேச்சு என வர்ணிக்கவில்லை!

ஆனால் நமது கழகம் நடத்த இருக்கிற போராட்டத்தை விளம்பரம் என்கிறார்!

நாம் விளம்பரத்திற்காகவே போராடுவோம்!

நாடு முழுதும் நமது இந்தி ஆதிக்க எதிர்ப்பை உணர, விளம்பரம் தேவைதானே?

நானிலமும் நமது எதிர்ப்பை அறிய, விளம்பரம் தேவைதானே!

அரசியல் சட்டத்தில் இந்திதான் ஆட்சிமொழி என்ற பகுதியைக் கொளுத்தும் நெருப்பு வெளிச்சத்தில் தமிழக மக்களின் இந்தி எதிர்ப்புக்கு விளம்பரம் கிடைக்கட்டும்!

அண்ணா நடத்திய போராட்டம் அண்டே பாஷைப்படி விளம்பரத்திற்காக என்றால், நாம் நடத்துகிற போராட்டமும் விளம்பரத்திற்காகத்தான்!

விஞ்ஞானிகளாம் அவர்கள்! இந்தி வெறியர்கள் காலில் வீழ்ந்து கிடப்பதுதான் விஞ்ஞானம் என விரிவுரையாற்றுகிறார்கள் போலும்!

உடன்பிறப்பே! வீணர்கள் உரையினைப் புறந்தள்ளி, நீ புறப்பட்டு வந்திடு கோவைக்கு! புறநானூற்றுச் சரிதம் படைக்க!

அன்புடன்
மு.க.
03-11-1986

1467. சங்கம் முழங்க சந்திப்போம் கோவையில்!

உடன்பிறப்பே,

இந்திய விடுதலைப்போரின் ஒருகட்டமாக சீமைத் துணிகள் கொளுத்தப்பட்டன.

சீமைத்துணிகளே உலகத்தில் இருக்கக்கூடாது என்ற கருத்தில் அந்தக்காரியம் நடத்தப்படவில்லை.

சுதேசிகளையே பயன்படுத்தவேண்டும்! அதன் விரிவாக்கம் இந்தியாவைப் பரதேசிகள் ஆளக் கூடாது, சுதேசிகளே ஆளவேண்டும் என்பதாகும்!

கடற்கரையோரத்தில் உப்புக்காய்ச்சும் போராட்டம் நடைபெற்றது!

உப்புக்காய்ச்சும் உரிமைவேண்டும் என்பதற்காக மட்டுமே நடத்தப்பட்ட - அல்லது அந்தக் குறிக்கோளைத் தன்னகத்தே கொண்ட போராட்டமல்ல அது!

உரியவர்கள் இந்த நாட்டை ஆளவேண்டும்; அடிமைப் படுத்தியுள்ள ஆங்கிலேயர் ஆட்சி அகல வேண்டும் என்ற தாத்பர்யத்தின் அடிப்படையில்தான் உப்புச் சத்யாக்கிரகத்தை காந்தியடிகள் நடத்தினார்.

வெள்ளையனே வெளியேறு! இதற்குப் பொருள், வெள்ளைக்கார ஏகாதிபத்யம் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்பதுதானே தவிர, வெள்ளைக்காரர்கள் யாரும் இந்திய மண்ணை சுற்றுலாப் பயணிகளாகக்கூட மிதிக்கக்கூடாது என்பது அல்ல!

இந்தி எதிர்ப்பு என்பது இந்தி ஆதிக்க எதிர்ப்பே தவிர - இந்தியெனும் தனிப்பட்ட மொழி மீது எதிர்ப்பு அல்ல!

இந்தி ஒழிக! என்பது வெள்ளையனே வெளியேறு என்பது போல இந்தி ஆதிக்கமே! நீ ஒழிக! என்பதே தவிர வேறல்ல!

ஒரு மொழி அல்லது ஒரு இனம் அல்லது ஒரு நாடு - மற்றொரு மொழியின் மீது, இனத்தின் மீது, நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்திட முனையும்போது - அந்த ஆதிக்கத்தை எதிர்ப்போர், அந்த மொழியை, அந்த இனத்தை, ஏன், அந்த நாட்டு மக்களைக் கூட வெறுக்கவே முனைவர்!

ஆதிக்கம் செலுத்துவோம் - நீங்கள் ஆமைகளாய் அடங்கித்தான் கிடக்க வேண்டும் என்ற ஆணவப் பேச்சுக்குத் தலைவணங்க இணங்காதவர்கள், எல்லா நிலைகளிலும் அந்த ஆதிக்கத்தை எதிர்த்தே களத்தில் நிற்பர்!

சீமைத் துணி கொளுத்தியது - உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தியது - வெள்ளையனே வெளியேறு என முழக்கியது, வெறும் சீமைத்துணிக்கோ, வெறுப்பு உப்புக்கோ, தனிப்பட்ட ஒரு வெள்ளைக்காரனை அல்லது குடும்பத்தை வெளியேற்றுவதற்கோ அல்ல! இந்தியாவின் அடிமைத்தனம் ஒழிவதற்காகவே!

இந்தி எழுத்துகளை அழிப்பதும் - இந்திப் பலகைகளை அகற்றுவதும் - இந்தி ஒழிக என முழக்குவதும் அது போலத்தான். இந்தி ஆதிக்கத்தால் தமிழன் அடிமையாவதை, இரண்டாந்தரக் குடிமகனாவதைத் தடுப்பதற்காக!

இதைப் புரிந்து கொள்ளாமல் சிலபேர் நாம் இந்தி மொழி மீதே காழ்ப்புக் காட்டுகிறோம் எனக் கதைக்கிறார்கள்!

ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தில் முதலாளி ஒழிக! என்ற கோஷமும் விண்ணதிரக் கிளம்புகிறது!

அந்தக் கோஷத்தின் நோக்கம், முதலாளி ஸ்தானத்திலிருக்கும் ஒரு தனிப்பட்ட மனிதன் ஒழிய வேண்டும் என்பதல்ல! முதலாளித்துவ மனப்பான்மையுடன் நடத்தப்படும் செயல்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதானே! மமதை கொண்ட மனிதனையும், மமதையையும் தனியாகப் பிரித்துச் சொல்ல முடியாத பொழுது, அந்த மனிதன் பெயரைச் சொல்லியே ஒழிக! என்பது இயல்பாகிவிட்ட ஒன்று!

இந்தியையும், இந்தி ஆதிக்கத்தையும் பிரிக்க முடியாமல் இரண்டுமே ஒன்றாக ஒட்டிக்கொண்டு, நம்மீது ஆதிக்கம் செலுத்த வரும் போது இந்தியின் மீதே வெறுப்புத் தோன்றுவதற்கு வழியேற்பட்டு விடுகிறதல்லவா?

இந்தக் கட்டத்தில்தான் ஆதிக்கம் செலுத்த ஒரு மொழியைக் கருவியாகக் கொள்வோர் வெறியர்களா? அல்லது அந்த ஆதிக்கத்தை முறியடிக்க வரிந்துகட்டி நிற்போர் வெறியர்களா? என்ற கேள்விக்குச் சரியான விடை கிடைக்கிறது!

நீண்டகாலமாக இந்தி வெறியர்கள், இந்தியாவை ஹிந்தியா Hindia என ஆக்கிட எல்லா வகையிலும் முயலுகிறார்கள்.

ஆனால் அவர்களும், அவர்களுக்கு வக்காலத்து வாங்குவோரும் நம்மைப்பார்த்து வெறியர்கள் என நாக்கூசாது கூறுகிறார்கள்!

அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் - இந்தி மொழி இந்தியாவின் ஆட்சிமொழி எனக் குறிப்பிடும் பகுதியை மட்டும் எரிக்கப் போகிறோம் எனத் தெளிவாகவே அறிவித்துள்ளோம்.

இந்தியாவின் ஆட்சிமொழி இந்தி என்பது, இந்தி பேசாத மாநில மக்களின் உரிமைக்கு உலைவைப்பது என்பது இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்ட அனைவரது கருத்துமாகும்.

அந்தப் பகுதியை எரித்துவிட்டால் ஆங்கிலம் மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி என ஆகிவிடாதா எனச் சிலர் வாதிடுகின்றனர்!

இந்தியாவில் உள்ள தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழியாக ஆகும் வரையில், இந்தி பேசாத மாநில மக்களுக்குக் காலக்கெடு எதுவுமின்றி ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்ற நிலையில் உறுதிப்பாடாக இருப்பதுதான் தி.மு.கழகம்!

இந்தி பேசாத மாநில மக்களுக்கு ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழி அண்மைக்காலமாக வேகமாக மீறப்படுகிறது என்பதற்கு நூற்றுக்கணக்கானச் சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ளோம். மத்திய அரசு, இந்தியைத் திணிப்பதற்கு அடிக்கடி பிறப்பிக்கும் உத்திரவுகளை ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளோம்.

இவ்வளவுக்குப்பிறகு, இத்தனைநாள் இல்லாமல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு சங்கடம் கொடுக்கத்தான் திடீரென்று தி.மு.க. இந்தியை எதிர்க்கிறது எனச் சிலர் பேசத் தலைப்பட்டுள்ளனர்!

தி.மு.க. ஆட்சியிலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது! மாணவர்கள் களத்தில் குதித்தனர்! ரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டன! அதுகுறித்துச் சட்டப்பேரவையில் கருத்திருமன் அவர்கள் என்ன பேசினார் என்பதும், முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் என்ன பதில் சொன்னார் என்பதும், தமிழக வரலாற்றை உணர்ந்தோர் மறந்திருக்க முடியாது!

அப்போது நான் பொதுப்பணி அமைச்சர்! சென்ட்ரல் ரயில் நிலையத்தில் மாணவர்கள் போர்க்கொடி உயர்த்தினர்! ரயில்கள் நிறுத்தப்பட்டன! அங்கும் சரி, பெரம்பூர் ரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்ட இடத்திலும் சரி - நான்தான் கிளர்ச்சிக்காரர்களுக்கு நடுவிலே நின்று கொண்டு அமைதிப்படுத்தினேன்! இது இந்தி எதிர்ப்பு சர்க்கார்! எனவே இந்தி ஆதிக்கத்தை தடுத்து நிறுத்தும் - என்று உறுதியளித்தேன்; தீப்பந்தங்களோடு நின்ற இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலே!

அந்தக் கிளர்ச்சியைத் தொடர்ந்து தமிழ்நாட்டுப் பள்ளிகளிலே இந்திக்கு இடமில்லை என முதலமைச்சர் அண்ணா அறிவித்தார்!

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது என்ன செய்தது? எனக்கேட்கும் வரலாறு தெரிந்த நண்பர்களுக்கு இதைத்தவிர என்ன பதிலைக் கூறமுடியும்?

இந்தியை எதிர்க்கும் தி.மு.க.வை இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியாளர்கள், அ.தி.மு.க. ஏடுகள் - கேலி செய்வது போலவா அன்றைக்கு இந்தி எதிர்ப்பாளர்களை, தி.மு.க. ஆட்சியாளர்கள் கேலி செய்தார்கள்?

நேரு உறுதிமொழி காப்பாற்றப்படும் என மத்திய ஆட்சியாளர் உறுதியளித்தனர்! அளித்தவாறு நடந்து கொள்ளாத ஒவ்வொரு நேரத்திலும் தி.மு.க. ஆட்சி, மத்திய அரசைத் தட்டிக் கேட்கத் தவறவில்லையே!

தி.மு.க. ஆட்சியில் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை மத்திய அரசு பொதுப்பட்டியலுக்கு மாற்றிய அநியாயம்

நடைபெற்றதுண்டா? நடைபெற்றிருந்தால் அதனை தி.மு.க. ஆட்சி அனுமதித்திருக்குமா?

தி.மு.க. ஆட்சியின்போது மாடல் பள்ளி என்ற பெயரால் இந்தி ஆதிக்கத்தைப் பரப்பும் பள்ளிகள் பற்றிய பேச்சாவது உண்டா?

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதும் சரி, இல்லாத போதும் சரி - என்றைக்குமே, அதன் முழக்கம், நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச்செய்ய வேண்டும் என்பது தானே!

அக்டோபர் 6ஆம் நாள் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி விட்டு அக்டோபர் 15ஆம் நாள், ராஜீவின் உறுதிமொழியே போதும் - நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெறத் தேவையில்லை என்ற கருத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர். நிருபர்களிடம் வெளியிட்டாரே! அப்படிப்பட்ட குழப்பம் - முரண்பாடு - தி.மு.க. ஆட்சியில் உண்டா?

இன்று இந்தி ஆதிக்கம் பரப்பப்படுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகள், இந்திராகாந்தி காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் - இதேபோன்ற ஒரு போராட்டத்தை ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க. நடத்தித்தான் இருக்கும்!

எங்கேயோ ஜெயப்பிரகாசும், மொரார்ஜியும், ஜோதிர் மாயிபாசும் கைது செய்யப்பட்டு - இந்தியாவில் எமர்ஜன்சி அறிவிக்கப்பட்டபோது, எமர்ஜன்சியை ஆதரிக்கிறோம் என்று எம்.ஜி.ஆர். கொடுத்தது போல ஒரு தந்தியை நானும் அன்னை இந்திராகாந்திக்குக் கொடுத்திருந்தால், கழக ஆட்சி கலைக்கப்பட்டிருக்காது - கழகம் இத்தனை சோதனைகளை சந்தித்திருக்காது - அதுமட்டுமல்ல, ஆட்சிக் காலத்தைக்கூட 1977 வரையில் நீடித்துக் கொடுத்திருப்பார்கள்! ஆனால் ஜனநாயகத்தைக் காக்கும் போராட்டத்தில் தி.மு.க. குதித்தது! அதனால் நெருப்பாற்றில் நீந்தியது!

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கழகத்திற்கென இருக்கும் கொள்கை, கோட்பாடுகளுக்கு எதிராக யாரால் - எது நடத்தப்பட்டாலும் பதவியை ஒரு பொருட்டாக மதிக்காமல் போர்க்குரல் கொடுக்கும் வரலாறு கழகத்தின் வரலாறு!

இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியாளர் போர்க்குரல் கூடக்கொடுக்க வேண்டாம். அண்ணாவின் கொள்கையான இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கொள்கையை நிறைவேற்றக் களத்தில் நிற்கும் எங்கள் மீது காரிஉமிழாமலாவது இருக்கலாம் அல்லவா?

வெட்கக்கேடு! இவர்கள் கட்சிக்கு இந்த அழகில் அண்ணாவின் பெயர்! கொடியில் அண்ணாவின் உருவம்!

அதை நினைத்தால்தான் வேதனையாக இருக்கிறது!

இதைவிடப் பெரும் வேதனைகளைத் தாங்கிப் பழக்கப்பட்ட வேங்கை நிகர்த்த உடன்பிறப்பே!

வெங்கொடுமைச் சாக்காட்டில்

விளையாடும் தோளெங்கள்

வெற்றித் தோள்கள் எனச்

சங்கம் முழங்க,

சந்திப்போம் கோவையில்! வா! வா!! வா!!!

அன்புடன்

மு.க.

04-11-1986

1468. இரு நாட்கள்; வாழ்வின் திருநாட்கள்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்நாள், நவம்பர் 5ஆம் நாள் புதன்கிழமை!

வியாழன், வெள்ளி இரண்டு நாட்கள்தான் இடையில்!

நவம்பர் 8, 9 சனி, ஞாயிறு நாட்களில் கோவையில் உன் முகம் காண வருகிறேன். முழக்கம் கேட்க வருகிறேன். முரசடித்து நீ ஒலிக்கும் போர்ப் பரணியில் திளைத்திட வருகிறேன். முக்கடலின் சங்கமமோ என நீ நடத்த இருக்கும் பேரணியின் எழுச்சி கண்டு வாழ்த்திட வருகிறேன்!

சிற்றூர், பேரூர், ஒன்றியம், நகரம், மாவட்டம், மாநிலம் எனப் போட்டி போட்டுக்கொண்டு கோவை மாநாட்டுக்கு நீயும் உன்போல் ஆர்வம் படைத்த உடன்பிறப்புகளும் பயணப்படும் செய்திகளை அறிகிறேன். பரவசமடைகிறேன்.

இந்தி ஆதிக்கம் செலுத்துமிடமெல்லாம்! உன் கரங்கள் தூரிகை கொண்டு தார்பூசி அழித்திடும் காட்சிகள், புகைப்படங்களாக ஏடுகளில், வெளிவருவதைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைகிறேன்.

உன் வீரத்தை, எழுச்சியை, நீ படைநடத்தும் பாங்கினைக் கேலிபுரிவோர் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஆனால், அவர்களையெல்லாம் உன் அலட்சியப் புன்சிரிப்பால் வெற்றி கண்டு அடலேறு என அணி வகுத்திடும் போதுதான் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? என்று அறிஞர் அண்ணா, கம்பீரமாக நிமிர்ந்து நின்று கேட்டார்!

அப்படையின் வீரர்களும், வீராங்கனைகளும் கோவை மாநகர் வீதியிலே கொடிபிடித்துக் கொள்கை முழக்கம் செய்து வெற்றி நடைபோடுவதையும், இருநாள் மாநாடுகளிலும் கோவை சிதம்பரம் பூங்காவில் தாளமுத்து, நடராசன் அரங்கில் இந்தி ஆதிக்க

எதிர்ப்புக்கான பட்டாளத்தைப் பாரீர் என இந்திவெறியர்க்கு உணர்த்திடப்போகும் மாட்சியையும் - எண்ணி எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

மாநாட்டுக்குத் தலைமையேற்பவர், திறப்பாளர், கொடி உயர்த்துபவர் மற்றும் தலைவர்களின், தமிழறிஞர்களின், தியாக மறவர்களின் படங்களைத் திறப்பவர்கள், சிறப்புரையாற்று வோர், மாநாட்டு வரவேற்புக் குழுவினர், மாநாட்டுப் பணி பல நிகழ்த்துவோர் அனைவருமே ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனி சிறப்புக்குரியோர்!

மொழிப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் வரிசையினர் உண்டு அவர்களிலே!

ஓராண்டுக்கு மேலாகச் சிறையில் வாடிய விழுப்புண் பெற்றோர் உண்டு அவர்களிலே!

பலமுறை காராக்கிருகம் சென்றவர் உண்டு அந்தப் பட்டியலிலே!

எழுத்தால், பேச்சால், ஏடு நடத்தும் பணியினால் எத்தர்வசம் இத்தமிழகம் சிக்காதிருக்கப் பாடுபடுவோர் உண்டு அவர்களிலே!

உழைப்பால் கழகம் வளர்க்கும் உத்தமர்கள் உண்டு அந்தப் பெயர்களிலே!

அவர் உரை கேட்க - அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி காண வருகின்ற நீதான் யாராம்?

தமிழ்காக்கும் தடந்தோள் உன்னுடையது! கழகம் கட்டளையிடும் போதெல்லாம் காராக்கிரகவாசத்துக்குக் களிப்புடன் தயாராகும் நெஞ்சுறுதி உனக்கே சொந்தம்! எதிரிகளின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் தயக்கம் காட்டிப் பயணத்தைத் தாமதப்படுத்தாமல், கொள்கைக்காக கொடுப்பதற்கே இந்த உயிர் எனக் கொக்கரிக்கும் வீரத்தின் நிலைக்களம் - மானத்தின் உறைவிடம் நீ!

இப்படியொரு தமிழ்க்குலச் சேனையை விழிகளால் கண்டு வியந்து, வாழ்த்தி, மேனியெல்லாம் புல்லரிக்க மேடையில் நானும், பேராசிரியரும் மற்றும் நமது கழகத்தின் தலைவர்கள், தளபதிகள், அமர்ந்திருக்கப் போகும் அந்த இரு நாட்கள், எங்கள் வாழ்வின் திருநாட்கள் அல்லவோ?

அம்மட்டோ! அன்றொரு நாள் இந்த மண்ணின் விடுதலைக்காக மனைவி, மக்களுடன் சிறை புகுந்த சீலர் தியாகச்செம்மல் - பசுமலை பாரதி குடும்பத்தின் பைந்தமிழ் விளக்கு - தியாகி கிருஷ்ணசாமி பாரதியார் அவர்கள் கோவை மாநாட்டில் சிறப்புரை நிகழ்த்த வருகிறார். இந்தியாவின் ஆட்சிமொழி எது என்ற ஆராய்ச்சி நடைபெற்ற அரங்கத்திலேயே அன்றைக்கு அங்கம் வகித்தவர். அன்று நடந்ததையும், இன்று நடப்பதையும் எடுத்துச்சொல்ல வருகிறார்.

தென்றலெனச் சொற்கள் எடுத்து உரையாற்றினாலும் - தீயோர் செயல் அறவே தீப்பொறியாகச் செயல்படும் அன்புக்குரிய அப்துல் ஸமது அவர்கள் கோவை மாநாட்டுக்கு வருகிறார். இந்தியாவின் பொது மொழியாக இருப்பதற்குத் தகுதியுடைய மொழி தொன்மைச்சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியே என இந்தியத் தலைநகரிலேயே முழக்கமிட்ட கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் வழி நின்று அரிய கருத்துக்களைத் தரஇருக்கிறார். அவர் உரை நமது அறப்போருக்குக் கேடயமாகும் என இப்போதே உரைக்கின்றேன்!

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி, எத்தனை பட்டாளம் கூட்டிவரும்? எனக்கேட்டுப் புருவம் உயர்த்தி புலிநிகர் தமிழ்மாந்தரை ஐம்பது ஆண்டுகட்கு முன்பே போர் முனைக்கு அனுப்பி வைத்து, இந்திச் சனியனைப் புறங்கண்டு வருவீர் எனமொழிந்த தந்தை பெரியாரின் வழித்தோன்றலாக நின்று, சின்னஞ்சிறு பிராயமுதல் சிங்கமெனக்குரல் எழுப்பும் தளபதியாம் எனது இளவல் வீரமணியின் சங்கநாதம் கேட்கலாம் கோவையிலே!

இந்திய ஒருமைப்பாடு குறித்து அலட்டிக்கொள்ளவும் - அது தங்களுக்கு மட்டுமே எனச் சொந்தங் கொண்டாடவும் - நடிப்பாற்றல் மிக்க அரசியல் தலைவர்கள் சிலர் நாட்டு மக்களை ஏமாற்றப் புறப்பட்டிருக்கும் இந்நாளில், தேசியம் என்பது தமிழையும், தமிழர்களையும் இரண்டாம் தர நிலைமைக்குத் தாழ்த்துவதல்ல என ஆணித்தரமாக - அழுத்தம் திருத்தமாக - அடுக்கடுக்காக - வாதங்களை எடுத்து வைக்க வல்லவராம் மாவீரன் நெடுமாறன் அவர்களின் உரையும் உண்டு. கோவை மாநாட்டில்!

இன்று மடாதிபதி ஆயினும், அன்று தமிழகம் மொழிப் புரட்சியில் மூழ்கியிருந்த போது - கரத்தில் தமிழ்க் கொடியேந்தி, நெஞ்சுரத்தில் யார்க்கும் இளைத்தவனல்ல என நிரூபித்து - மாணவப் பருவத்திலேயே மாத்தமிழ் காத்திடப் போராடியவர், ஆம் - இன்று மதுரை ஆதீனகர்த்தர் - கொட்டியும் ஆம்பலும் போல் தமிழ்க் குலத்தின் வாழ்வு, தாழ்வு இரண்டிலும் ஒட்டிக் கிடப்பவர் தவத்திரு அருணகிரி அடிகளார் அவர்களும் கோவை மாநாட்டுக்கு வருகை தருகிறார்!

உடன்பிறப்பே! ஐம்பது ஆண்டுகால மொழிப் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயத்திலேயே என்னை இணைத்துக் கொண்டவன் என்ற முறையில், ஐம்பது ஆண்டுக்குப் பிறகும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த அறப்போரில்,

இனமாமணியே!

கழகக் கண்மணியே!

உன்னோடு இணைந்து களம் காணும் வாய்ப்பு பெற்றுள்ளேன் என்ற உணர்ச்சி பொங்கும் மகிழ்ச்சியுடன் கோவைக்கு வருக! கொள்கைக்குன்றமே! என வரவேற்கிறேன். அந்த இரு நாட்களும், வாழ்வின் திருநாட்கள் என்ற இதயத் துடிப்புடன்!

அன்புடன்

மு.க.

05-11-1986

1469. காஷ்மீர் கதையை கவனப்படுத்துகிறேன்!

உடன்பிறப்பே,

தேச விசுவாசம்
தேச விரோதம்
ஒருமைப்பாடு
பிரிவினை வாதம்

இந்த வார்த்தைகளைச் சமயத்திற்கு ஏற்றவாறு பயன் படுத்துவதில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் வல்லவர்கள்!

இந்தி ஆதிக்கத்தை நாம் எதிர்த்தால் அது தேச விரோதம் - ஒருமைப்பாட்டுக்கு எதிரான பிரிவினைவாதம்!

நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்படும் என உறுதிமொழி கொடுத்துவிட்ட பிறகு, அதை அரசியல் சட்டத்தில் இணைத்திட வேண்டுமென்பது பொருத்தமற்ற வாதம்! அதாவது தேசத்தைப் பலவீனப்படுத்துவதாகும் என்று ஒரு விளக்கத்தை இப்போது அளிக்கத் தொடங்கியுள்ளனர்.

அப்படியானால் இந்தியாவையே உறுதிமொழிகளின் அடிப்படையில் ஆட்சி புரியலாமே? அரசியல் சட்டம் என்று ஒன்று தேவையே இல்லையே - என்ற வாதமும் எழக்கூடுமல்லவா?

கைமாற்றாக வாங்குகிற கடனைத் திருப்பித் தருவதாகச் சொல்லி, இரண்டு மூன்று தவணை தவறி விடுமேயானால், எதற்கும் கடனை வாங்கியதற்கும், கொடுத்ததற்கும் சான்றாக ஒரு பத்திரம் எழுதிக் கொள்வது நல்லது என்றுதானே, ஏமாற்றத்துக்கு ஆளாகக் கூடாது என எண்ணுகிறவன் கூறுவான்!

நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்படுமென்று, அவருக்குப் பிறகு வந்த பிரதமர்கள் எல்லாம் சொல்லி - இன்றைக்கு ராஜீவ் காந்தி, அதைச் சொல்லிக் கொண்டே,

மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றிய அடிப்படையில், நவோதயா எனும் மாதிரிப் பள்ளிகள் மூலமும் - மற்றும் எல்லா வழிகளிலும் இந்தியைத் திணிக்கத் தொடங்கியுள்ளார்.

என்பதைப் புரிந்து கொண்ட நிலையிலேதான், இனியும் பொறுத்திருப்பது மதியீனம் எனக் கருதித் தமிழகம் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறது.

நவம்பர் 17 ஆம் நாள் தி.மு.கழகம் அறப்போர்க் களத்தில் - ஆம்; தன்னைத்தானே தியாக வேள்விக்கு அர்ப்பணித்துக்கொள்ளும் தளபதிகளையும், வீரர்களையும் அணிவகுத்துக் குதிக்கத் தயாராக இருக்கிறது!

இதனால் தேசமே நாசமாகிவிடுமென்றும் - பிரிவினை வாதம் தலைதூக்கி விடுமென்றும் - கடைந்தெடுத்த தேசத்துரோகச் செயலில் கழகம் ஈடுபடுகிறதென்றும் கதறுகிறார்கள்! பதறுகிறார்கள்!

தேசம் - தேசபக்தி - தேச விரோதம் - ஒருமைப்பாடு - பிரிவினை - என்ற வார்த்தைகளுக்கு இந்திரா காங்கிரஸ் அகராதியில் காலத்திற்கு ஏற்றவாறு பொருள் மாறிவிடுவது இயற்கை!

இதோ அதற்கு அண்மைக்கால எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறுகிறேன்!

இந்தியத் திருநாட்டின் இயற்கைத் தொட்டிலாம் - காஷ்மீர் மாநிலத்துக் கதையைக் கொஞ்சம் பார்ப்போம்!

காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் கட்சிக்குப் பெயர் தேசிய மாநாட்டு கட்சி! காஷ்மீர் மாநில உரிமைகளுக்காக அவர் வாதாடியபோதும் - போராடிய போதும் - தேசவிரோதி என்ற பட்டம் சூட்டப்பட்டு மாநிலத்தைவிட்டே கடத்தப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார்! தமிழ்நாட்டிலேகூட சில மாதங்கள் அவர் சிறையிருந்தார்!

பின்னர் சில உடன்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்த நிலையில் - காஷ்மீர் மாநில ஆட்சிப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அந்தப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பு, அவர் சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்து, ஒரு மணி நேரத்துக்கு மேலாக உரையாடிய

நிகழ்ச்சியும் - அப்போது அவர் எடுத்துச் சொன்ன அழுத்தம் திருத்தமான கருத்துகளும் - மாநில சுயாட்சிக் கொள்கையில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும் - இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன!

அவர் மறைவுக்குப் பிறகு, அவரது மைந்தர் பரூக் அப்துல்லா தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவராகவும் - காஷ்மீரத்து முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தும் அனைத்துக்கட்சி மாநாடுகளில் கலந்து கொண்டது மட்டுமல்ல! அவரே முன்னின்று காஷ்மீரில் மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தும் மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டில் தி.மு.கழகமும் கலந்துகொண்டது. நண்பர்கள் சாதிக், சி.டி.தண்டபாணி இருவரும் கழகத்தின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர். அந்த மாநாட்டையொட்டி, முதலமைச்சர் நண்பர் பரூக் அப்துல்லா வெளியிட்ட ஒரு நூலில் - 1974ல் தி.மு.க. ஆட்சியில், சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானம் பற்றிய பெரும் பகுதி இடம் பெற்றிருக்கிறது.

மத்திய அரசின் அதிகாரக் குவியலுக்கு எதிராக மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறார் என்பதை மனதில் வைத்து, அவர்மீது தேசவிரோதம் என்ற புகாரை எழுப்பி - அவரது கட்சியை இரண்டாகப் பிளந்து, ஒரு பிரிவுக்கு ஜி.எம். ஷாவைத் தலைவராக்கி, அவரது கட்சிக்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தருவதாகக் கூறி, பரூக் அப்துல்லாவின் ஆட்சியை மத்திய அரசு கவிழ்த்தது.

ஜி.எம்.ஷாவுக்கு ஆதரவு வழங்கி, அவரை முதலமைச்சராக்குவதற்குப் பக்கபலமாக இருந்து, திடீரென பரூக் அப்துல்லாவின் ஆட்சியைக் கவிழ்த்த இந்திரா காங்கிரஸ் தலைவர்கள்,

அந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கும், ஷாவுக்கு, இந்திரா காங்கிரஸ் ஆதரவு அளித்ததற்கும், சொன்ன காரணங்கள்:-

தேச விரோத சக்திகளுடன் பரூக் அப்துல்லா தொடர்பு கொண்டிருக்கிறார். அவர் ஒருமைப்பாட்டுக்கு விரோதி! பிரிவினைவாதி! என்பனவாகும்! ஆனால் பரூக் ஆட்சி

கவிழ்க்கப்பட்ட பிறகு நடந்தது என்ன? பரூக்கின் மைத்துனரான ஜி.எம்.ஷா, முதலில் இந்திராகாங்கிரஸ் கண்களுக்கு கடைந்தெடுத்த தேசியவாதியாகத் தென்பட்டார்! ஆனால் நாட்கள் ஓட ஓட ... அவர் மீதும் புழுதிவாரி வீசப்பட்டது!

சுதந்திர தினத்தன்று காஷ்மீரில் பல இடங்களில் பாகிஸ்தான் கொடியேற்றப்பட்டது என்கிற அளவுக்கு செய்திகள்!

அதுமட்டுமல்ல, ஜி.எம்.ஷாவின் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள்!

இதையெல்லாம் காட்டி மிரட்டி, ஷாவை பதவி விலகச் சொன்னதா காங்கிரஸ்? அதுதான் இல்லை! அதற்குமாறாக அவரை இந்திரா காங்கிரசில் சேருமாறு வற்புறுத்தினர்! அவர் இணங்கவில்லை. தேசிய மாநாடு என்ற போட்டி கட்சியின் பெயராலேயே இயங்க முடியும் என அறிவித்துவிட்டார்! மேலும் ஷாவுக்கு சில நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன! பரூக் அப்துல்லாவின் கட்சியை அடக்கி ஒடுக்கிச் சிதறிப்போகும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், காங்கிரஸ் மேலிடம் இட்ட கட்டளைகளை ஜி.எம்.ஷாவினால் நிறைவேற்ற இயலவில்லை!

எனவே - அதுவரையில் தேசபக்த சிகாமணியாகக் காங்கிரசார் பட்டியலில் இருந்த ஜி.எம்.ஷா, தேசவிரோதியென திருநாமம் சூட்டப்பட்டார்!

இதுவரையில் தேசவிரோதி - தேசவிரோத சக்திகளுடன் தொடர்பு கொண்டிருப்பவர் என்று குற்றம் சாட்டப்பட்ட பரூக் அப்துல்லா, இன்று தேசபக்தர் என ஞானஸ்தானம் செய்விக்கப் பெற்று, ஒரு மாநிலத்தில் அமைச்சரவை பதவிப் பிரமாணம் எடுக்கும் நிகழ்ச்சிக்கு முதன் முதலாக பிரதமரே நேரில் சென்று கலந்துகொள்கிற அளவுக்கு, பரூக் அப்துல்லாவுக்கு முதலமைச்சர் முடியும் சூட்டப்பெறுகிறது!

உடன்பிறப்பே, காஷ்மீர் கதையை எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால் - இந்திரா காங்கிரசார் பார்த்து ஒருவரை தேசவிரோதி என்று சொன்னால் அவர் தேசவிரோதி! அவரையே காங்கிரஸ் பக்கம் வளைத்துப் போட்டுக்கொண்டு, அவர் தேசவிசுவாசி என்று சொன்னால் அவர் தேசவிசுவாசி!

இப்படி அரசியல் தட்பவெப்பங்களுக்கு ஏற்ப - தேசபக்தி, தேச விரோதம் என்ற சொற்களுக்கு அகராதியில் பொருள்களை மாற்றிக்கொண்டிருப்பவர்கள், நாம் நடத்தும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை தேசவிரோதப் போராட்டம் என்று சொல்வார்களேயானால் -

அரசியல் தெரிந்தோர்
அனைவருக்கும்
காஷ்மீர் கதை
நினைவுக்கு வருவது
இயற்கை தானே!

தேச ஒற்றுமையைக் காத்திட - ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்திட - இந்தியா சிதறுண்டு போகாமல் இருக்க - வேற்றுமையில் ஒற்றுமை கண்டிடத்தான், இந்தி ஆதிக்கத்தை நுழைக்காதீர்கள் எனக்குரல் எழுப்புகிறோம்!

அதற்குத்தான் கோவையில் கூடுகிறோம். நவம்பர் 8, 9 நாட்களில்!

கோவைக்கு வருக என இனியும் நான் எழுதிக் கொண்டேயிருக்க வேண்டுமா? இத்தனை கடிதங்களுக்குப் பிறகும், நீ வருகிறாயா இல்லையா என்று கவனிக்காமலா இருப்பேன்!

அன்புடன்

மு.க.

06-11-1986

1470. தமிழக இ.காங்கிரஸ் மிரட்டுகிறது!

உடன்பிறப்பே,

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு அட்ஹாக் காரியக் கமிட்டிக் கூட்டம், சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றிருக்கிறது.

தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் தி.மு.க. கட்சி செயற்குழுக் கூட்டங்களை நடத்துகிறார்கள் என்பதையும், நமது கட்சி அலுவலகத்தைக் காலி செய்ய எம்.ஜி.ஆர். அரசு ஒரு காரணமாக எழுத்துமூலம் குறிப்பிட்டதை நினைவிற்கொள்க.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், 1965 இந்தி எதிர்ப்புப் போரின் போது நரவேட்டையாடி, அசையாத மலைப் பாறையென்று குல்சாரிலால் நந்தா அவர்களால் பாராட்டப்பெற்ற மரியாதைக்குரிய பக்தவத்சலனார் அவர்களும் கலந்து கொண்டதாகச் செய்தி!

சுட்டுத்தள்ளப்பட்ட ஐநூறுக்கு மேற்பட்ட பிணங்களைக் காட்டுப்பகுதிகளில் குழிதோண்டிப் புதைத்தது மாத்திரமல்ல! அந்தப் போராட்டம் குறித்த அரசாங்கக் கோப்புகள் அனைத்தையும் தீ வைத்துக் கொளுத்தி விட்டுத்தான் கோட்டையை விட்டு 1967-ல் பெரியவர் பக்தவத்சலனார் வெளியேறினார்.

அவ்வாறு அரசாங்கத்தின் முக்கிய கோப்புகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தியவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சட்டப் பேரவையில் நண்பர் ஹண்டே போன்ற சுதந்திர கட்சி உறுப்பினர்கள் கோரியபோது, அது குறித்து இந்த அவையில் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்ததே அந்தச் செயலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் மெத்தப் பெருந்தன்மையோடு அறிவித்தார்கள்.

அந்தப் பெரியவர் பக்தவத்சலனார், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஊர்வலம் வந்த மாணவர்களைச் சந்திக்க மறுத்த கதை நாடறிந்த செய்தியாகும். மறுத்தது மட்டுமல்ல! மாணவர்கள் மீது தடியடி! கண்ணீர்ப்புகை!

அவரும், மற்ற தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர்களும் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தி.மு.க. அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவில் 17-வது பாகம் இந்திதான் இந்தியாவின் அரசாங்க மொழி என்ற பகுதியை எரித்திடும் போராட்டத்தைத் தேசவிரோதச் செயல் என்று கண்டித்திருக்கிறார்கள்.

தேசவிரோதம் எது? தேச விஸ்வாசம் எது? என்பதை நிர்ணயிக்கிற சோதனைக்கருவி இந்திரா காங்கிரஸ்காரர்களின் கையில் மட்டும்தான் இருக்கிறது போலும்!

தேசவிரோதி யார்? தேசபக்தர் யார்? என அளவிட்டுக் கூறுகிற அளவுகோலும் அவர்களிடம் மட்டுமே உள்ளது போலும்!

அதனால்தானே இந்திராகாந்தி காலத்திலே காஷ்மீரில் பரூக் அப்துல்லா தேசவிரோதியெனத் தூற்றப்பட்டு பதவியிறக்கம் செய்யப்பட்டார்!

ஜி.எம்.ஷா தேசியவாதி என முடிசூட்டப்பட்டார்!

இப்போது ராஜீவ்காந்தி காலத்திலே ஷாவுக்கு தேசவிரோதிப் பட்டம்! பரூக் அப்துல்லாவுக்கு இந்திய தேச பக்தர் என்ற விருது!

உடன்பிறப்பே! நம்மை தேசவிரோதிகள் என வர்ணிக்கும் இந்திரா காங்கிரசார் கவனத்துக்கு ஒரு தகவல்! நீயும் படித்துப் பார்த்து ஊரெல்லாம் எடுத்துச் சொல்ல உதவும்!

ஜம்மு. நவ. 7 என்ற தேதியிட்ட செய்தியொன்று நவம்பர் 8ஆம் நாள் இந்து ஏட்டில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

Our Correspondent writes:

Earlier, Dr. Farooq Abdullah told newsmen that the dissolution of the State Assembly, in accordance with the recent new Indo-Kashmir accord arrived at between the Prime Minister Mr. Rajiv Gandhi and Dr. Abdullah.

இந்துவின் காஷ்மீரத்து நிருபர் எழுதுகிறார். என்ன எழுதுகிறார்? பரூக் அப்துல்லா சொன்னதாக எழுதுகிறார்! பரூக் அப்துல்லா என்ன சொன்னார்? எப்படிச் சொன்னார்?

பிரதமர் ராஜீவ்காந்திக்கும், பரூக் அப்துல்லாவுக்குமிடையே ஏற்பட்ட இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தப்படி காஷ்மீர் சட்டமன்றம் கலைக்கப்படுகிறது.

இப்படிச் சொன்னார்! எப்படிச் சொன்னார்? இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தப்படி என்று சொன்னார்!

காஷ்மீர் எங்கேயிருக்கிறது? இந்தியாவில் இருக்கிறது! ஆம்! இந்தியாவில் ஒரு மாநிலமாக இருக்கிறது என்பது தான் உண்மை!

காஷ்மீரின் மீது பாகிஸ்தான் அடிக்கடி மோப்பம் பிடிக்கிறது. நாம் அதைக் கண்டிக்கிறோம்! எதிர்க்கிறோம்!

காஷ்மீர், இந்தியாவுக்கும் வேண்டாம் - பாகிஸ்தானுக்கும் வேண்டாம் - அது தனி நாடாக இருக்கட்டுமென்று, குரங்கு ஆப்பத்தைப் பங்கிட்ட கதையாக சிலர் சமரசம் பேசுவதை நாம் ஏற்கவில்லை - ஏற்க மாட்டோம்!

ஆனால், பரூக் அப்துல்லா என்ன சொல்லுகிறார்? இந்துவின் காஷ்மீர் நிருபர் என்ன எழுதுகிறார்?

இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தம் என்று பரூக் அப்துல்லா சொன்னதாக இந்து நிருபர் எழுதுகிறார்.

இது எப்படி இருக்கிறது? இந்தோ-சீனா ஒப்பந்தம்! இந்தோ-பாகிஸ்தான் ஒப்பந்தம்! அதுபோலத்தானே இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தம் என்பதும் தொனிக்கிறது!

இந்திய ஒருமைப்பாடு - தேசியம் - இந்தியாவுக்குள்தான் காஷ்மீர் - என்பனவெல்லாம் பரூக் அப்துல்லா கட்சியுடன் தேர்தல் உடன்பாடு காணுவதற்காக எப்படியெல்லாம் வளைந்து கொடுக்கின்றன பார்த்தாயா?

இந்தியா ஒருநாடு! காஷ்மீர் ஒருநாடு! இப்படியொரு நிலையை ஏற்றுக்கொண்டால்தானே இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தம் என்று பரூக் அப்துல்லா சொன்னதை, மௌனப் புன்னகையுடன் இந்திரா காங்கிரசார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

அவரைப் பார்த்து இப்படிச் சொன்னது தேசவிரோதச் செயல் என்று இந்திரா காங்கிரஸ் கூறினால், சரிதான் போ! உன்னோடு கூட்டும் வேண்டாம்; பொரியலும் வேண்டாம்! என்று விரட்டியடித்து விடுவாரே!

அதனால் இந்தோ-காஷ்மீர் ஒப்பந்தம் என்பது தேச விரோதமல்ல என்கிற அளவுக்கு தலையசைக்கிற ஒரு முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிற இ.காங்கிரசார், அரசியல் சட்டத்தில் இந்திமொழி ஆதிக்கப்பிரிவை மட்டும் நாம் கொளுத்துவதை தேசத்துரோகம் எனக்கூறுவது விந்தை மட்டுமல்ல! வெட்கக்கேடானதும்கூட!

தமிழ்நாட்டில் கூடிய இந்திரா காங்கிரசின் அட்ஹாக் கமிட்டியின் தீர்மானத்தில், நமது கழகத்தைப் பற்றிய ஒரு கேலியான விமர்சனமும் செய்திருக்கிறார்கள்.

சரிந்து வருகிற கட்சியின் அரசியல் தேய்மானத்தைச் சரிக்கட்ட தி.மு.க. மலிவான போராட்டத்தில் இறங்கியிருக்கிறது.

இது இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு அட்ஹாக் கமிட்டி, நம்மைப்பற்றிச் செய்துள்ள ஏகடியம்!

இந்தியாவை ஆளுகின்ற ஒரு பெரிய கட்சி என பறை சாற்றிக்கொள்கிற இந்திரா காங்கிரஸ் 1984 பொதுத் தேர்தலில் இந்திரா காந்தியின் கொலையைப் பயன்படுத்திக்கொண்டு வெற்றி பெற்ற பிறகு, இடையில் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் எத்தனை இடைத்தேர்தல்களில் தோல்வியைத் தழுவியிருக்கிறது என்ற கணக்கை, அவர்களே பார்த்துக் கொள்வது நல்லது!

பஞ்சாப் மாநிலத்தைப் பறிகொடுத்து விட்டு - அசாம் மாநிலத்திலும் அடி வாங்கிவிட்டு - காஷ்மீரிலும் பரூக் அப்துல்லாவின் கருணா கடாட்சம் இல்லையேல் வெற்றிபெற இயலாது என்ற நிலையில் தேய்ந்து கொண்டிருக்கிற இந்திரா காங்கிரஸ், தி.மு.கழகம் தேய்ந்துவிட்டது எனத் தீர்மானம் மூலம் கூறுவது விலாநோகச் சிரிக்கவைக்கும் 1986ஆம் ஆண்டின் தலைசிறந்த ஜோக் ஆகும்!

தேயாத காங்கிரஸ் என்றால், மாறி மாறித் தி.மு.க.வின் தயவையும் - அ.தி.மு.க.வின் தயவையும் - நாடி அலைவது ஏன்?

இதனை நாமல்ல, இந்திரா காங்கிரசில் உள்ள துடிப்புள்ள சில நண்பர்களே அவர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

அ.தி.மு.க. தயவு இல்லாவிட்டால் தமிழ்நாட்டு தேர்தல் களத்தில் தலைகாட்ட முடியாது என்பதால்தானே - எம்.ஜி.ஆர். உறுதிமொழி எடுக்காமலே தேர்தலுக்கு வேட்புமனு அனுப்பியதையும் ஏற்றுக்கொள்ளச்செய்து, வாய்திறந்து ஒரு வார்த்தை கூட சொல்லாமலே முதலமைச்சராக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்ளவும் அனுமதித்து, தமிழ்நாட்டில் ஒரு செயலற்ற அரசு இருப்பதற்கும் தலையாட்டிக்கொண்டு, இந்திரா காங்கிரசின் மத்திய அரசு அ.தி.மு.க.வின் ஆதரவுக்காக தவம் கிடக்கிறது. இ.காங்கிரசுடன் உறவு கொள்ளாத ஒரு கட்சியின் ஆட்சி, வேறு மாநிலத்தில் நடைபெற்று - அங்கே இந்த நிலையில் ஒரு முதலமைச்சர் பதவிப் பிரமாணம் எடுக்காமலே - சட்டசபையில் பேசாமலே - வெறும் காட்சிப் பொருளாக இருப்பதை தேசத்தின் மீது அக்கறையுள்ளவர்களாக நடிக்கும் இந்திரா காங்கிரசார் அனுமதிப்பார்களா?

இறுதியாகவும், உறுதியாகவும் இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்கு உணர்த்த வேண்டியது ஒன்றே ஒன்று தான்!

அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில்

3431 The Official Language of the Union shall be Hindi in Devanagari script.

அதாவது,

3431 தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள இந்தி, இந்தியாவின் அதிகாரப்பூர்வமான அலுவலக மொழியாக இருக்க வேண்டும்.

என்ற வரிகளை அச்சடித்துப் பொது மேடைகளில் கொளுத்துவது தேசவிரோதம் எனக் கூறி, அதற்காகச் சிறைவாசம் மட்டுமல்ல, தேர்தல்களிலும் நிற்கக் கூடாது என்பது போல் மிரட்டுவீர்களேயானால்,

தனிநாடு கேட்டாலும் தேர்தலில் நிற்கக்கூடாது - நிற்கமுடியாது எனச்சட்டம் இருக்கும் போது,

அரசியல் சட்ட மொழிப் பிரிவைக் கொளுத்தினாலும் அதே மாதிரி சட்டம் வருமென்றால் - ஒருவேளை அப்படி வந்தால் -

அதற்கு ஒரேயடியாகத் தனிநாடே கேட்டு விடலாமே என்ற எண்ணம் தமிழரிடம் தோன்றி விடக்கூடும்!

எனவே, தேசவிரோதம் என்ற சொல்லால் நம்மை மிரட்டுகிறவர்கள் இதனை ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அனபுடன்

மு.க.

12-11-1986

1471. ஊக்கமூட்டும் அறப்போர்ப் படைக்கலன்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட இருக்கிறது! ஆம். அரசாங்கமே அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறது! முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெயராலேயே அந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது!

அவ்வப்போது இந்தி பேசாத மக்கள்மீது நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தியைத் திணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதானது இந்தி பேசாத மக்களுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி வருகிறது.

எம்.ஜி.ஆர். அரசு கொண்டு வருகிற தீர்மானத்தின் ஒரு பகுதி இது!

நேருவின் உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை, இந்தி பேசாத மாநில மக்களும், குறிப்பாகத் தமிழக மக்களும் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகின்றனர்.

இதுவும் எம்.ஜி.ஆர். அரசு கொண்டு வரும் தீர்மானத்தில் காணப்படும் வாசகம்தான்!

1968-ல் திருத்தப்பட்ட ஆட்சி மொழிகள் சட்டத்தின் வரைமுறைகள், வெறும் சட்ட ரீதியான தன்மை வாய்ந்தவை என்பதால், நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தினால் மட்டுமேகூட, இந்தவரைமுறைகளை எந்தச் சமயத்திலும் மாற்றிக்கொள்ள முடியும் அல்லது ரத்து செய்துவிட முடியும்; எனவே நேருவினால் அளிக்கப்பட்டு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நேருவின் உறுதிமொழிக்கு அரசமைப்புரீதியான ஒரு அங்கீகாரம் அளிப்பதின் மூலம்,

இந்தி பேசாத மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்சத்தை நீக்குவதோடு, இந்தித் திணிப்பால் அவ்வப்போது எழுகிற குழப்பம், சீர்குலைவு, கடுமையான சட்டம் ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றையும் தவிர்க்க முடியும். எனவே, ஆங்கில மொழியை இந்திய யூனியனின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருவது பற்றி அரசமைப்பு ரீதியான உத்திரவாதம் அளிப்பதற்காக, ஆட்சிமொழி தொடர்பான அரசியல் சட்டம் 17வது பகுதியை உடனடியாகவும், அவசியமாகவும் திருத்தி அமைக்கவேண்டும்.

எம்.ஜி.ஆர். அரசு கொண்டுவருகிற தீர்மானத்தில், மத்திய அரசை உடனடியாகவும், அவசியமாகவும் எனக்கோடிட்டுக்காட்டி வலியுறுத்துகிற முக்கியமான பகுதி இதுதான்!

தி.மு.க. ஆட்சியில் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது, மொழிப் பிரச்சினை குறித்து சட்டப் பேரவையில் 1968-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது பற்றியும் எம்.ஜி.ஆர். அரசின் தீர்மான வாசகம் சுட்டிக் காட்டுகிறது.

1974ஆம் ஆண்டு கழக ஆட்சியில், மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினோமல்லவா? அந்தத் தீர்மானத்திலும் நமது மொழிக்கொள்கை வலியுறுத்தப்பட்டு அழுத்தம் திருத்தமாக தெளிவாகச் சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது.

மைய அரசின் ஆட்சிமொழி, அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது விவரப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள அனைத்து மொழிகளாகவும் இருக்க வேண்டும். இந்நிலையினை எய்தும்வரை, மையஅரசு தலைமைச் செயலகம் உட்பட மைய அரசுத் துறைகளனைத்திலும், மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்புகொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்.

16.4.1974 அன்று தமிழக சட்டப்பேரவையில் நான் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தின் ஒரு பகுதி இது.

இப்போது எம்.ஜி.ஆர். அரசு கொண்டுவருகிற இந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்படுகிற நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம் பெற அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவான 17வது பகுதியை உடனடியாகவும், அவசியமாகவும்

திருத்தி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முழுமனதோடு வரவேற்றுப் பாராட்டக் கழகம் கடமைப்பட்டிருக்கிறது.

உடனடியாகவும், அவசியமாகவும் அப்படியொரு திருத்தம் அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டுமென்பதற்காகத் தான் தி.மு.கழகம், நவம்பர் 17 முதல் அறப்போர்க்களம் புகுகிறது!

அந்தப் போராட்ட விளக்கத்திற்காகத்தான் லட்சோப லட்சம் பேர் கூடிய கோவை மாநாடு நடைபெற்றது!

இந்தியாவில் உள்ள தமிழ் மொழி உள்ளிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் சமத்துவ நிலையில் மத்திய அரசின் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற அறிஞர் அண்ணாவின் கொள்கையைக் கடைப்பிடிக்கிற தி.மு.கழகம், அந்த நிலை உருவாகிற காலம் வரையில், இந்தியை ஆட்சி மொழியாகத் திணிப்பதையும், பரப்புவதையும் நிறுத்திக் கொண்டு நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச்செய்ய வழிகாணவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துகிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தவும், இந்தி ஏகாதிபத்தியம், இந்தியாவில் உருவாகாமல் தடுக்கவும் தமிழகம் முழுதும் இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் ஆட்சிமொழி இந்திதான் எனும் பகுதியை மட்டும் நவம்பர் 17ஆம் நாள் முதல் பல்வேறு ஊர்களில் மாலையில் பொதுக்கூட்டங்களில் கொளுத்துவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

கோவை மாநாட்டில் இந்தத் தீர்மானம் பல லட்சம் மக்களின் கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியதேசிய வீரரும் விடுதலைக்காக தியாகத் தழும்பு ஏற்றவருமான எல். கிருஷ்ணசாமி பாரதியார் கோவை மாநாட்டில் பேசும்போது, அழுக்கை நீக்குவதற்காக தங்கத்தைக்கூட நெருப்பிலே போடுகிறோம். அதுபோல நமக்குற்ற இழுக்கை நீக்குவதற்கு, அரசியல்சட்ட 17வது பாகத்தின் இந்திமொழி ஆட்சிமொழி என்ற பகுதிக்கு நெருப்பிடுவது தவறல்ல! சரியான செயலேயாகும் என்ற கருத்தை முழங்கினார்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் ஆற்றிய உரைகள், எழுதிய எழுத்துகள், கோவையில் கூட்டிய மாநாடு, அறிவித்துள்ள அறப்போராட்டம் இவற்றைக் குறித்து இந்திரா காங்கிரசாரும்,

அ.இ.அ.தி.மு.க. நண்பர்களும் அவர்களது ஏடுகளும் - எவ்வளவு இழிவுரைகளை நம்மீது அள்ளி வீசினர்!

இந்தி திணிப்பு இல்லை என்று ராஜீவ்காந்தி வாக்குறுதி அளித்தபிறகும், தி.மு.க.வினர் இந்தித் திணிப்பு இருப்பதாகக்கூறி போராட்டம் நடத்துவதா?

இவ்வாறு தமிழ்நாடு இ.காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தின் மூலம் கடுமையான வினா தொடுத்தது!

இதோ! இ.காங்கிரசுக்கு விடையிருப்பது போல் எம்.ஜி.ஆர்., பேரவையில் கொண்டு வருகிற தீர்மானத்திலே நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தி திணிக்கப்படுகிறது என்று தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்தி ஆதிக்கத்தின் மீது காட்டவேண்டிய ஆத்திரத்தை நம்மீது காட்டுகிற வகையில், எம்.ஜி.ஆர். அவர்களின் கட்சி ஏடான அண்ணா பத்திரிகையில்,

பிரதமர் தமிழகத்தின் உணர்வுகளை நன்கு புரிந்துகொண்டு இந்தி திணிக்கப்பட மாட்டாது என உத்திரவாதம் கொடுத்து விட்டார். எனவே மாநாடுகள், சட்ட எரிப்பு போன்ற ஸ்டண்டுகளை கருணாநிதி நடத்திக்காட்ட முற்படுவது நகைச்சுவையே தவிர உணர்வுகளின் வெளிப்பாடு என்று எவரும் கருதப் போவதில்லை.

என எழுதி, என்னையும் கழகத்தையும் இழிவுபடுத்தி நாள்தோறும் கட்டுரை தீட்டினர்.

இன்று நிலை என்ன? எம்.ஜி.ஆர். அவர்களே தீர்மானம் கொண்டு வருகிறார். சட்டமன்றத்தில்! அதாவது இந்தி திணிக்கப்படுகிறது நேரடியாகவும், மறைமுகமாகவும் என்று!

மக்கள் குரல் ஏடு, அண்ணா எனும் பத்திரிகையைப் போல இழிமொழிகளால் அர்ச்சிக்காவிட்டாலும், அந்த ஏட்டில் 11.11.86 அன்று என்ன எழுதினார்கள்!

ஆங்கிலமும் தொடர்பு மொழியாக காலாகாலத்திற்கும் நீடிக்கவேண்டுமென்பது நோக்கமாக இருந்தால், அந்த நோக்கத்திற்காகத் தேவைப்படும் அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தத்தில்,

நேருவின் உறுதிமொழிக்கு இடம் இருக்கமுடியாது. ஏனென்றால் அது, இல்லாத ஒரு தொகுதிக்கு தரப்பட்ட உறுதிமொழி.

இவ்வாறு மக்கள் குரல் ஏட்டில் வந்த அழுத்தமான கருத்துக்குப் பிறகும்,

தமிழகச் சட்டப்பேரவையில் எம்.ஜி.ஆர். அவர்களே, நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற 17வது பிரிவில் திருத்தம் கோரித் தீர்மானம் கொண்டு வருகிறார் என்பதுதான் முக்கியம்!

இவற்றுக்கெல்லாம் மேலாக இதோ! 16.10.86 சென்னை தினமணி இதழில் முதல் பக்கத்தில் வந்துள்ள செய்தியின் தலைப்பை அப்படியே இக்கடிதத்தில் பிளாக் செய்து இணைத்துள்ளேன்.

ராஜீவ் வாக்குறுதி போதும்

ஹிந்தி: நேரு உறுதிமொழிக்கு

அரசியல் சட்டத்திருத்தம்

தேவையில்லை!

-எம்.ஜி.ஆர்.

இவ்வாறு, நேரு உறுதிமொழிக்கு அரசியல் சட்டத்திருத்தம் தேவையில்லையென்று சுமார் இருபத்தி ஐந்து நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே டெல்லியிலிருந்து திரும்பியதும் சென்னை நிருபர்களுக்கு அளித்தபேட்டியில் கூறினார்.

இப்போது அவரேதான் நேரு உறுதிமொழிக்கு அரசியல் சட்டத்திருத்தம் தேவை என்று சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வருகிறார்.

அவர் நமது போராட்ட அறிவிப்பு வந்தவுடன் யூஸ்லெஸ் என்று இழித்தும், பழித்தும் பேசியிருந்தாலும், அவரை நிறுவனராகக் கொண்ட அண்ணா என்ற ஏடு, தினந்தோறும் தி.மு.கழகத்தின் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குரலைக் கொச்சைப்படுத்திக் கொண்டேயிருந்தாலும், கோவையில் நடந்த மாநாட்டுக்குக் கூட்டமே வரவில்லையென்று முழுப்பூசணிக்காயை இலைச்சோற்றிலே மறைக்க முயன்றாலும், எம்.ஜி.ஆரின் ஆதரவு ஏடுகள், நேரு உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் சேர்க்கத் தேவையில்லை எனக்கூறியதோடு, என்னையும், கழகத்தையும்

கண்டித்துக்கொண்டேயிருந்தாலும், இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சிமொழிச் சட்டப்பாதுகாப்பே போதுமானது, அரசியல் சட்டப்பாதுகாப்பு தேவையில்லை என்று தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் -

இவை அனைத்துக்கும் மாறாக இப்போது, எம்.ஜி.ஆர். அவர்களே நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வருகிறார் என்றால் -

அரசியல் சட்டம் திருத்தப்படுவதற்கு முன், அவர் தன்னைத் திருத்திக் கொண்டு விட்டார் என்றுதானே அர்த்தம்! அதுதானே உண்மை!

இப்படியொரு மாற்றம் - இப்படியொரு தீர்மானம் - திடீரென வருவதற்கு உடன்பிறப்பே! நீ கொடுத்த போர்க் குரல்தான் காரணம் என்பதை யாரே மறுப்பார்?

நம்முடைய கழகம் நடத்த இருக்கிற போராட்டம் - நமது இனமானப் பேராசிரியர் - செந்தமிழ்க்கோ - அண்ணாவின் அருமைத் தம்பி - எனது இனிய உடன்பிறப்பு - அன்பழகனார் தொடங்கி வைத்திடவும், தொடர்ந்து நடந்திடவும் - தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற இருக்கிற நேரு உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டும் என்ற தீர்மானமும் ஒரு ஊக்க உணர்வுதரும் அறப்போர்ப்படைகலனாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

மு.க.

13-11-1986

1472. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

உடன்பிறப்பே,

தராசு வார இதழில் கோவையில் நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு குறித்த செய்திகளை வெளியிட்டிருப்பதோடு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலப் பொதுச்செயலாளர் நண்பர் மாணிக்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலத் தலைவர்களில் ஒருவரான நண்பர் பரமேஸ்வரன், தமிழகத் தொழில் அமைச்சராகவும், உணவு அமைச்சராகவும் இருந்து இப்போது வீட்டுவசதி அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் திருநாவுக்கரசு ஆகியோரிடம், தி.மு.க. நடத்த இருக்கும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் குறித்த கருத்துகளையும் பெற்றுக் கட்டம் கட்டி வெளியிட்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.கழகம் இந்தி வேண்டாமென்று கூறவில்லை. இந்தியோடு ஆங்கிலமும் தேவையென்று வலியுறுத்துகிறார்கள். அதே சமயத்தில் இந்தி எழுத்துகளை அழிப்பதிலும், அரசியல் சாசனத்தை 17வது பிரிவு எரிக்கும் செயலிலும் இறங்கியிருக்கிறார்கள். இந்த முரண்பாடான போராட்டத்தால் இந்தி ஆதிக்க எரிப்பு என்ற பெயரில் தமிழ் மொழி வளர்ச்சி பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

இது இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நண்பர் மாணிக்கம் அவர்கள் தந்துள்ள கருத்தின் ஒரு பகுதியாகும்.

தி.மு.கழகம், மொழிப் பிரச்சினையில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற கருத்து என்ன என்பதை ஏனோ நண்பர் மாணிக்கம் அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்!

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வரப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மாநில சுயாட்சியும், மத்தியில் உண்மையான கூட்டாட்சியும் அமைந்திட, அரசியல் சட்டம்

திருத்தப்பட வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை அ.தி.மு.க. புறக்கணித்து வெளிநடப்பு செய்தது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவையில்லை என்று திருத்தம் கொடுத்து அந்தத் தீர்மானத்தை எதிர்த்தது. அந்தத் தீர்மானத்தில் மொழிப் பிரச்சினை குறித்து எத்தகைய கருத்து விளக்கம் அளிக்கப்பட்டிருந்ததோ - அதுதான் இன்றைக்கும் தி.மு.க.வின் மொழிக் கொள்கை என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மைய அரசின் ஆட்சிமொழி, அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது விபரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளாகவும் இருக்க வேண்டும். இந்நிலை எய்தும் வரையில் மைய அரசின் தலைமைச் செயலகம் உட்பட மைய அரசின் துறைகள் அனைத்திலும், மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். உச்சநீதி மன்றத்தில் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். உயர்நீதி மன்றம் உட்பட நீதி மன்றங்கள் அனைத்திலும் பயன்படுத்தப்படும் ஆட்சிமொழியை அந்தந்த மாநில அரசுகளே முடிவு செய்ய வேண்டும். மாநிலத்தில் உள்ள மைய அரசின் அலுவலகங்கள் பொதுமக்களுடன் அலுவல் தொடர்பு கொள்வதற்கு, ஆங்கிலத்துடன் அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியையும் பயன்படுத்த வேண்டும். மாநிலத்தில் உள்ள மைய அரசின் அலுவலகங்களால் மாநில அரசோடும், அதன் அலுவலகங்களோடும் மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்புகள் அந்த மாநிலத்தின் ஆட்சிமொழி வாயிலாகவே நடைபெற வேண்டும். மாநிலத்தில் பணிபுரியும் மைய அரசுப் பணியாளர்கள் அந்த மாநிலத்தின் ஆட்சிமொழியை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

1974ஆம் ஆண்டு கழக அரசு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானத்தில் இடம் பெற்றுள்ள மொழிக்கொள்கை இதுதான்!

இந்தக் கொள்கையிலிருந்து தி.மு.க. இப்போது இம்மியளவும் மாறுபட்டு விடவில்லை. அண்மையில் கோவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவில் உள்ள தமிழ்மொழி உள்ளிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் சமத்துவ நிலையில், மத்திய அரசின் ஆட்சி மொழியாகிட வேண்டுமென்ற அறிஞர் அண்ணாவின் கொள்கையை வலியுறுத்துகிற தி.மு.கழகம், அந்த நிலை உருவாகிற காலம் வரையில் இந்திமொழியை ஆட்சிமொழியாகத் திணிப்பதையும், பரப்புவதையும் நிறுத்திக்கொண்டு இந்தி பேசாத மாநிலமக்கள் விரும்பும்வரை ஆங்கிலமே நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழி, அரசியல் சட்டத்தில் இடம் பெறுவதற்கு வழிகாண மத்திய அரசை வலியுறுத்துவதோடு, இந்தி ஏகாதிபத்தியம் இந்தியாவில் உருவாகாமல் தடுக்கவும், தமிழக முழுதும் இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் உள்ள ஆட்சிமொழி இந்திதான் என்னும் பகுதியை மட்டும் நவம்பர் 17 முதல் பல்வேறு ஊர்களில் கொளுத்துவதென தீர்மானிக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் மையக்கருத்தையும், 1974ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் கழக அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தில் இடம் பெற்றுள்ள மொழிக் கொள்கையையும் படித்துத் தெளிந்த பிறகும்,

இந்தியோடு ஆங்கிலமும் தமிழகத்திற்குத் தேவையென்று தி.மு.க. வலியுறுத்துவது போன்ற ஒரு தவறான கருத்தை மாணிக்கம் அவர்களைப் போன்ற மரியாதைக்குரிய நண்பர்கள் திரித்து வெளியிடுவது எனக்கு மிகுந்த திகைப்பையே ஏற்படுத்துகிறது.

இந்தியோடு ஆங்கிலமும் தமிழகத்துக்கு தேவையென்பதற்கும், ஆங்கிலத்துடன் இந்தியும் தமிழகத்துக்குத் தேவையென்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை! அப்படியொரு நிலையைக் கழகம் எடுக்கவில்லை!

அனைத்து தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக ஆகும் காலம் வரையில், இந்தி பேசாத மாநில மக்களுக்கு - குறிப்பாகத் தமிழகத்துக்கு ஆங்கிலம் Official language மட்டுமே! அதாவது, மத்திய ஆட்சி மொழியெனும் தகுதியுடையதாக இருந்திட வேண்டும். அந்த நிலையை உறுதிமொழிகளால் மட்டும் கட்டிக் காத்திட மத்திய அரசாலும் இயலாத காரணத்தினால் - அல்லது மத்திய அரசு அதில் அக்கறை காட்டாத காரணத்தினால் அல்லது அதற்கு மாறாக இந்தியைத் திணிக்கவும் பரப்பவும்

முற்படுகிற காரணத்தினால் நேருவின் உறுதிமொழிக்கு உத்திரவாதமளிக்கவும், நடைமுறைப்படுத்தவும் - ஆட்சி மொழிச் சட்டம் போதாது, அரசியல் சட்டத்திலேயே திருத்தம் வேண்டும் என்று தி.மு.க. கோருகிறது!

ஏறத்தாழ இதே கருத்தை உள்ளடக்கியதும், இன்னும் சொல்லப் போனால் பெரியவர் கல்யாண சுந்தரம் அவர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் ஒரு அறிக்கையில், தமிழகத்தில் ஆளுங் கட்சியின் தற்போதைய புதிய கோரிக்கை தி.மு.க.வை விடவும் தீவிரவாதம் எனக் காட்டுவதாக இருக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிற அளவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை, 13.11.86 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஆகிய இரு கட்சிகளும் விமர்சித்த போதிலும், எதிர்த்து வாக்களிக்கவில்லை! குரல் ஓட்டுகள் மூலம் நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்திரா காங்கிரசார் மட்டுமே மறுப்புக்குரல் கொடுத்ததாக ஏடுகளில் செய்தி வெளிவந்துள்ளது. இ.காங்கிரசாரும் கூட இந்த முக்கியமான தீர்மானத்தில் வாக்கெடுப்பு டிவிஷன் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

எனவே, இந்தித்திணிப்பு கடுமையாக இருக்கிறது என்பதையும், உறுதிமொழிகளை ஒருபுறத்தில் மத்திய அரசினரும், ராஜீவ்காந்தியும் கொடுத்துக் கொண்டே இந்தியை அதிவேகமாகத் திணிக்க முற்பட்டுள்ளனர் என்பதையும், எனவே, இனியும் நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெறும் வகையில் அரசியல் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வராமல் இருப்பது பெருந்தீங்கு என்பதையும் கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் கருதுகிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது!

அப்படியொரு கோரிக்கையை வலியுறுத்த ஒருபுறத்திலே தீர்மானம் - இன்னொரு புறத்திலே போராட்டம் என்பது முரண்பாடான காரியமல்ல!

கோரிக்கைகளை வலியுறுத்த தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளுமே போராட்டம் நடத்தியுள்ள கட்சிகள் - நடத்துகிற கட்சிகள்தான் என்பதில் இருவேறு கருத்துகளுக்கே இடமில்லை!

சுதந்திரப் போராட்டத்தின்போது தண்டவாளத்தின் மீதுள்ள வெறுப்பினாலா தண்டவாளங்களைப் பெயர்த்தனர்!

அஞ்சல்நிலையங்கள் மீதுள்ள தனிப்பட்ட கோபத்தாலா அவற்றைக் கொளுத்தினர்!

வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். அதற்குத்தானே அத்தகைய கிளர்ச்சிகள் நடந்தன!

அதுபோல, இந்தி ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற - தண்டவாளம் பெயர்த்தல், தபாலாபீஸ் கொளுத்துதல், போன்ற வன்முறைகளில்கூட அல்ல அமைதியாக இந்தி எழுத்துகளை அழித்தல் என்பது, அரசியல் சட்டத்து மொழிப்பிரிவில் ஒரு பகுதியைக் கொளுத்துதல் என்பது எப்படி முரண்பட்ட செயல்களாகி விடக்கூடும்!

கோரிக்கையை வலியுறுத்த தீர்மானம் நிறைவேற்றுவதும் - அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வரவேண்டுமென்று போராட்டம் நடத்துவதும் - ஒன்றுக்கொன்று உடன்பாடான செயல்களே தவிர, நண்பர் மாணிக்கம் அவர்கள் கருதுவதுபோல முரண்பாடான செயல்கள் அல்ல. இந்தியோடு ஆங்கிலமும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற கருணாநிதியின் வாதம் தவறானது. இவ்வாறு, தராசு இதழில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்புக்குரிய நண்பர் பி.ஆர். பரமேஸ்வரன் அவர்கள் கருத்தறிவித்துள்ளார்.

ஆங்கிலம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பது எனது வாதமல்ல! கழகத்தின் கருத்துமல்ல! அதுவும் இந்தியோடு ஆங்கிலம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்றோ அல்லது ஆங்கிலம் மட்டும் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்றோ கழகம் கருதவில்லை! கழகத்தின் மொழிக்கொள்கையை, இக் கடிதத்தின் முற்பகுதியில் விளக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளேன்.

அனைத்து தேசியமொழிகளும் சமத்துவ நிலை பெற்ற மத்திய ஆட்சி மொழியாக ஆகும் காலம் வரையில், ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்ற நிலையில் நேருவின் உறுதிமொழிக் கேற்ப அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்பதுதான் கழகத்தின் தீர்மானம்!

நீடிப்பது என்பதற்கும், நிரந்தரமாக இருக்க வேண்டு மென்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நண்பர் பரமேஸ்வரன் உணராதவரல்ல.

ஆங்கிலம் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்பது கருணாநிதியின் வாதம் என மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் அவர் கருத்துக் கூறியிருப்பது, கற்பனை! இட்டுக் கட்டப்பட்ட ஒன்று! உண்மைக்குப் புறம்பானது!

இந்தித் திணிப்பு என்ற பெயரில் பிரிவினை வாதத்தை வளர்க்கிறார் கருணாநிதி.

இதுவும் பி.ஆர். பரமேஸ்வரன் தராசு இதழுக்குத் தந்துள்ள செய்திதான்!

இந்தியைத் திணித்து இந்தியாவில் பிரிவினை உணர்வை உருவாக்காதீர்கள், என்று இந்தி வெறியர்களுக்கு ஆட்பட்டுக் கிடக்கும் மத்திய அரசை நானும், கழகத் தலைவர்களும் எச்சரிப்பது எப்படிப் பிரிவினை வாதமாகுமென எனக்குத் தெரியவில்லை.

இந்தியைத் திணித்து மொழிப்பிரச்சினையினால் இந்தியாவிலும் ஒரு இலங்கைப் பிரச்சினையை உருவாக்காதீர்கள் என்று கல்கி போன்ற ஏடுகள் தலையங்கம் தீட்டியதையும், இந்தித் திணிப்பினால் தமிழர்கள் வெகுண்டுபோய் தனி நாடு கோரினாலும் வியப்பில்லை என மூதறிஞர் ராஜாஜி குறிப்பிட்டதையும் எடுத்துக்காட்டி - இந்திய ஒருமைப்பாடு காக்கும் அக்கறையுடன், இந்தியைத் திணித்து மொழி ஏகாதிபத்தியத்தை உருவாக்காதீர்கள் என்று எச்சரிப்பது, பிரிவினை வாதமாகாது! என்பது தான் மார்க்சிஸ்ட் தலைவருக்கு நான் தரும் விளக்கமாகும்.

சி.பி.எம்.க்கும், தி.மு.க.வுக்கும் உள்ள நட்புக்கு பெயர் கூட்டணி அல்ல! தேர்தல் தொகுதி பங்கீட்டு உடன்பாடு! அவ்வளவுதான்! இதில் பிளவுகள் வருவது பற்றி எங்களுக்குக் கவலையில்லை!

இதுவும் தராசு இதழில் மார்க்சிஸ்டு தலைவர் திட்ட வட்டமாகத் தீட்டியுள்ள வாசகம்!

முடிவுரையாக அவர் வழங்கியுள்ள இந்த கருத்து - சி.பி.எம். கட்சிக்கு மட்டுமல்ல, தி.மு.க.வுக்கும் பொருந்தக் கூடிய, தி.மு.க.வும் ஏற்கக் கூடிய கருத்துதான் என்பதால் அது குறித்து விமர்சிக்கவோ, விளக்கமளிக்கவோ தேவையில்லை என விடுக்கிறேன்!

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு வாஜ்பாய் போன்ற தன் கூட்டாளிகளை வைத்துத் தீர்மானம் போட்ட திரு. கருணாநிதி, அதே வாஜ்பாயைக் கூட்டி வைத்து இந்தி எதிர்ப்பு மாநாடு ஏன் போடக் கூடாது?

இப்படித் தராசு இதழில் அமைச்சர் திருநாவுக்கரசு கேட்டுள்ளார்!

இதற்குப் பதில் அளிப்பது மிக எளிதான ஒன்று! நான் கூடத் தேவையில்லை - எனது இல்லத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற செயல்மணியே பதில் அளித்து விடுவான்! தமிழ்நாடு சட்ட சபையில் ஆளுங்கட்சி கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள மொழிப் பிரச்சினை குறித்த தீர்மானத்தை விளக்கிடும் ஒரு மாநாட்டை அ.தி.மு.க. கூட்டி, அந்தத் தீர்மானத்தை ஆதரித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவரது கூட்டாளிகளான இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் ஒரே மேடையில் என்றைக்குப் பேசப் போகிறார்கள்?

என்பதுதான் செயல்மணி விடுக்கும் கேள்வியாகவும்; விளக்கமான பதிலாகவும் அமையும் அமைச்சருக்கு!

செயல்மணி, எனது நன்றியுள்ள பணியாளன் மட்டுமல்ல! விசுவாசமுள்ள கழகப் பற்றாளன் மட்டுமல்ல; கழகக் கருத்துகளை மேடையில் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவன்கூட என்பதால்தான், அந்தத் தம்பியின் பெயரைக் குறிப்பிட்டேன்.

உடன்பிறப்பே! நவம்பர் 17 அன்று நமது பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களால் தொடங்கப்பட்டு - தொடர்ந்து பல மாவட்டங்களில் நடைபெற்று, இந்த முதற் கட்டப்போரின் இறுதிக் கட்டமாக மீண்டும் சென்னையில் டிசம்பர் 17 அன்று நானும், நமது துணைப் பொதுச்செயலாளர் ஆருயிர் இளவல் நாஞ்சிலாரும் மற்றும் கழக முன்னணியினரும் ஈடுபட இருக்கும் அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் உள்ள இந்திதான் ஆட்சி மொழி என்னும் பகுதியை எரிக்கும் அறப்போராட்டம், நமது கோரிக்கையை வலியுறுத்துகிற போராட்டம்!

தமிழகச் சட்டப்பேரவையில் இரு நாட்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு விரைவில் செயல் வடிவம் கிடைக்க வலுவூட்டுகிற போராட்டம்!

தமிழ் எங்கள் உயிருக்குநேர்!

என்ற புரட்சிக்கவிஞரின் எழுச்சி மயமான உணர்ச்சி வரிக்கு வடிவம்தரும் போராட்டம்!

அந்த அறப்போர் தொடரும்! தொடர்ந்து கொண்டேயிருக்கும்!

இன்று நேற்றல்ல! ஐம்பது ஆண்டுக் காலமாக மொழிப் போர்க் களத்தில் நிற்கும் திராவிட இயக்கத்தின், உயிர் மூச்சான கொள்கை, இந்தி ஏகாதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழையும், தமிழர் உரிமைகளையும், காப்பாற்றுகிற இனமான உணர்வுக்கொள்கையாகும்!

அந்தக் கொள்கையில் வெற்றியடைய நாம் நடத்தும் அறப்போரில், கடு மொழிகள் - சுடுகணைகள் - எதிர்ப்புகள் - ஏளனங்கள் - அடக்குமுறைகள் - அனைத்தும் அடுக்கடுக்காக வரலாம்!

அண்ணா சொன்னது போல, தாளமுத்து! நடராசா! எனக் கூவிக்கொண்டே அவை அனைத்தையும் தாங்கிக் கொள்வோம்!

வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

அன்புடன்

மு.க.

16-11-1986

1473. வாழ்த்தும் - ஒரு முக்கிய விளக்கமும்!

உடன்பிறப்பே,

நவம்பர் 17 - இன்று நாம் தொடங்குகிறோம், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை!

கழகத்தின் பொதுச்செயலாளர் - தமிழ் நிலத்தின் காவல் அரணாம் தி.மு.க.வின் தீபச்சுடர் - அறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பி - செந்தமிழுக்கொரு தீமை வரின் நெஞ்சில் கனல் தேக்கி நின்றெதிர்க்கும் அடலேறு - அறுபதைக் கடந்தவர் எனினும் அன்னைத் தமிழ் காத்திடும் ஆற்றலில் - ஆர்வத்தில் - ஓர் இளைஞனின் இருதய பலத்தைப் பெற்ற ஏந்தல் - என்னுயிர் உடன்பிறப்பு! இனமானப் பேராசிரியர் அவர்கள்!

அண்ணா வழிநின்று, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை சென்னையில் தொடங்கி வைக்கிறார். அவருடன் கழகத்தின் உடன்பிறப்புகள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் அறப்போர்க்களத்துக்கு இன்று அணிவகுக்கின்றனர்.

கோவையில் நான் அறப்போர் வீரர்களின் பட்டியல் படித்தபோது, பொதுத்தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் தங்கள் பெயர் வராத போது கவலைப்படாத உடன் பிறப்புகள் பலர், இந்தப் போராட்டப் பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெறவில்லையே என துடித்துப் போயினர்.

பதினைந்தாயிரம் பெயரையும் படிக்க நேரமில்லாத காரணத்தால் இயலவில்லை, மன்னிக்க வேண்டுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் போராட்டத்திற்கு முதல்நாள் வெளியிடப்படும் அறப்போர் வீரர்களின் விரிவான பட்டியலில் எல்லாப்பெயர்களும் இடம் பெறும், அந்தப் பெயர்கள் முரசொலி, தினகரன் போன்ற ஏடுகளில் வெளிவர ஏற்பாடு செய்யப்படும்.

அறப்போர் வீரர்கள், அறப்போர்த் தலைவர்கள், தளபதிகள் - அறப்போர் ஆதரவாளர்கள் அனைவரையும் வணங்குகிறேன்! வாழ்த்துகிறேன் - அடியேனுக்கும் அந்த வாய்ப்பு உண்டு என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

அறப்போர்க்களம் புகும் கழகத்தினர்க்கு இதோ 1963ல் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்து நடத்திய இந்தி ஆதிக்க எதிர்ப்புப்போர் குறித்த சில விவரங்களைத் தர விரும்புகிறேன்.

இதனைக் கழகத்தினர் படித்து இதயத்தில் பதித்துக்கொண்டு - 1963 நிகழ்வை மையமாகக் கொண்டு, நடந்துகொள்ள வேண்டும் என எல்லா மாவட்டத்து அறப்போர் வீரர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று முதல் தி.மு.க. நடத்தும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் - அரசியல் சட்டத்தின் 17வது பாகத்தில் உள்ள இந்திதான் ஆட்சி மொழி எனும் பகுதியை எரித்ததாகவோ, அல்லது எரிக்க முற்பட்டதாகவோ கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்படுமேயானால் -

குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் எத்தகைய வாக்குமூலம் அளிக்கவேண்டுமென்பதற்கு 1963-ல் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது எப்படி நடந்து கொண்டார்? என்ன வாக்குமூலம் அளித்தார் என்பதை இங்கே நினைவூட்டுகிறேன்.

அரசியல் சட்டம் 17வது பிரிவை எரிக்க முற்பட்டதாகவும், அது தேசவிரோதச் செயல் என்றும், தேசிய அவமதிப்புத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமென்றும் நீதிபதி குறிப்பிட்டபோது,

நாங்கள் குற்றவாளிகள் அல்ல!

என்று அறிஞர் அண்ணா அவர்கள் பதில் அளித்தார்கள். அவ்வண்ணமே, பெரியவர் பார்த்தசாரதி, டி.கே.பொன்னுவேல், வெங்கா, சுந்தரம் ஆகியோரும் கூறினர்.

அதைக்கேட்ட நீதிபதி, வழக்கு விசாரணையை டிசம்பர் 5ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார். குற்றப்பத்திரிகை நகல் ஐவருக்கும்

கொடுக்கப்பட்டது. ஐவரும் மத்தியச் சிறைச்சாலையில் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

டிசம்பர் 5ஆம் தேதி எழும்பூர் நீதிமன்றத்திற்கு மீண்டும் அழைத்து வரப்பட்டபோது நீதிபதி முன்னிலையில் அண்ணா அவர்கள், தங்களது செயல் தேசிய அவமதிப்பு ஆகாது எனக் குறிப்பிட்டு, அளித்த வாக்குமூலத்தில் சில முக்கிய பகுதிகள் வருமாறு:

இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதை எதிர்ப்பது என்பது தி.மு.கழகத்தின் கொள்கை என்பதை நாங்கள் மறுக்கவில்லை. அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்துவது என்பதும் எங்கள் கட்சியின் அறப்போர்த் திட்டத்திலே ஒரு பகுதி என்பதை ஒப்புக்கொள்ள நாங்கள் தயங்கவில்லை.

நீதி நிலைக்க வேண்டும் என்பதிலும், நேர்மை அரசோச்ச வேண்டும் என்பதிலும் பற்றுக்கொண்ட எவரும் அநீதிக்கு வழிவகுக்கும் எந்தத் திட்டமானாலும், சட்டமானாலும் அதனை எதிர்த்து நிற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது எங்கள் கருத்தாகும்.

இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதியை அவமதிப்புக்கு உள்ளாக்குவது, அதிலும் ஈராயிரம் ஆண்டுகளாக ஒரு உயர்தனிச் செம்மொழிக்கு உரியவர்கள் வாழும் தமிழ்நாட்டுக்கு பெரிய அவமதிப்பு என்று நாங்கள் மனதார நம்புகிறோம்.

கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடிய விதத்திலும், இந்தி பேசாத மக்கள்மீது அவர்களது உரிமை, உள்ளுணர்வு, சிந்தனை ஆகியவற்றைப் பாழாக்கக்கூடிய முறையிலும் இந்தியைத் திணிக்கப் பயங்கரமுயற்சிகள் வெடித்து வெடித்து வெளிக்கிளம்பும் சூழ்நிலை உள்ளது.

வேறுபலர் போலவே தி.மு.கழகமும் இந்தி எதிர்ப்புக்காகத் தனது குரலை எழுப்பிப் பார்த்தது. ஆனால் ஆளவந்தாரின் பிடிவாதப்போக்கு காரணமாக, அந்த நம்பிக்கை யாவும் நொறுங்கிப் போய் விட்டன.

பாராளுமன்ற முறைகள் யாவும் கையாண்டு பார்த்துப் பலன் அளிக்காது போகுமானால் தனிப்பட்டவர்களோ, குழுவினரோ

ஆளுங்கட்சியின் கோபத்தால் கிளம்பக் கூடிய கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு மக்கள் எழுச்சி பெறத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு அநீதியை எதிர்த்து நிற்க முன்வர வேண்டியுள்ளது.

இந்தத் தூய நோக்குடனேயே திராவிட முன்னேற்றக் கழகம், இந்தி எதிர்ப்பு அறப்போர் துவக்கத் திட்டமிட்டது. தக்க காரணம் இருப்பதால் தான் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைக் கொளுத்துவதை அறப்போரில் ஒரு பகுதியாக்கிக் கொண்டது.

எத்தனையோ சட்டங்கள் உள்ளன! சட்டங்களை மீறுவது என்பதிலேயும் எத்தனையோ வகைகள் உள்ளன. ஏதாகிலும் ஒரு சட்டத்தை நான் மீறுவதின் மூலம், பொது மக்களுடைய உயிருக்கோ, உரிமைக்கோ, வாழ்வுக்கோ, அமைதிக்கோ, ஒழுக்கத்துக்கோ, அழிவோ, சிதைவோ, கேடோ, குலைவோ, அதிர்ச்சியோ, தளர்ச்சியோ ஏற்படுமானால் நான் சட்டத்தை மீறுவதற்கு வெட்கப்படுவேன். வேதனைப்படுவேன். ஆனால் சட்டத்துக்கு உட்பட்டதோ அல்லவோ, நான் ஒரு தூய நோக்கத்துக்காக ஒரு செயலில் ஈடுபடுவதின் மூலம் மக்கள் தொண்டு எனும் மாண்புமிகு பணிபுரிய இயலும் என்று மனதார நம்பிச் செயல்படும் போது குற்றவாளி அல்ல என்று கூறிக்கொள்ள உரிமை பெறுகிறேன்.

தேவையற்ற - தீது பயில்கின்ற இந்தச் சட்டம் தேசிய அவமதிப்பை தடுப்பதற்காக என்று தெரிவிக்கப் படுகிறது.

தேசிய அவமதிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் யாருக்குத்தான் எதற்காகத்தான் ஏற்படப் போகிறது?

இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவுதான் உள்ளபடி தேசிய அவமதிப்பை ஏற்படுத்தி வைக்கிறது.

அத்தகைய கேட்டினை எதிர்த்து நிற்பது மேலான செயல் என்ற தூய நம்பிக்கையுடன், எங்கள் மனச்சாட்சியின்படியும், ஒவ்வொருவரும் பெற்றிருக்கிற - போற்றிப் பேணவேண்டிய இயற்கை நீதி உணர்வு காரணமாகவும் நாங்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஒரு பகுதியாக அரசியல் சட்டம் 17வது பிரிவை கொளுத்த முற்பட்டோம். ஆகையினால், நாங்கள் தேசிய அவமதிப்புச் செய்யும் குற்றம் செய்ய முற்பட்டோம் என்ற

குற்றச்சாட்டை மறுக்கிறோம். நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறோம்.

இவ்வாறு அண்ணா வாக்குமூலம் அளித்தார்.

இந்த வழக்கில் அரசின் சார்பில் 11 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்ட அண்ணா மற்றும் நால்வர் சார்பில் சாட்சியம் எதுவும் விசாரிப்பதாக இல்லையென வழக்கறிஞர் நாராயணசாமி முதலியார் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

அதன் பிறகு டிசம்பர் 16-ந் தேதியன்று அண்ணா அவர்களுக்கும் மற்றும் நால்வருக்கும், நீதிமன்றத்தில் இந்தியன் பீனல் கோட் 120-பி விதிப்படியும், தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் 5வது விதிப்படியும் ஆறுமாத தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு கூறப்பட்டது.

உடன்பிறப்பே! இந்த அறப்போரில் நீதிமன்றங்களில் எம்முறை கடைப்பிடித்தல் வேண்டும் என்று கேட்போருக்கு, அறிஞர் அண்ணா கடைப்பிடித்த முறையே வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்பதற்காகவே இதனைத் தொகுத் தளித்துள்ளேன்.

தமிழ் வாழ்க! இந்தி ஆதிக்கம் வீழ்க!

அறப்போர் வெல்க; வெல்கவே!

அன்புடன்

மு.க.

17-11-1986

1474. படங்கள்! அவை வழங்கும் பாடங்கள்!

உடன்பிறப்பே,

நவம்பர் 13ஆம் நாளன்று எம்.ஜி.ஆர். பெயரில் அமைச்சர் பொன்னையன் முன்மொழிந்து, சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்ட மொழிப்பிரச்சினை குறித்த தீர்மானம், நம்மைப் போன்றவர்களின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டிருக்கும் போதே அந்தத் தீர்மானம்,

ஒரு கண்துடைப்பு
ஒரு ஒத்திகை
ஒரு நாடகம்
ஒரு ஏமாற்றுவேலை

என்ற உண்மை நாலே நாட்களுக்குள் நாட்டுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

டெல்லி மாநிலங்களவையில் மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர் மத்திய அரசின் சட்டத்துறை அமைச்சர் ஏ.கே. சென் அவர்களைப் பார்த்து கேட்ட கேள்வியே அதற்கு உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற சான்றாகும்.

An A.I.A.D.M.K. member sought to know if the Government had any move to empower the Election Commission to ban a political party which disrespects the Constitution.

ஒரு அரசியல் கட்சி அரசியல் சட்டத்தை அவமதிப்புக் குள்ளாக்குவது குறித்து, அந்தக் கட்சியையே தேர்தலில் நிற்க முடியாமல் தேர்தல் கமிஷன் தடைசெய்ய மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

எம்.ஜி.ஆர். கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் இந்தக் கேள்வி கேட்டதற்கான காரணத்தையும் இந்து ஏடு, பி.டி.ஐ. செய்தியாக அடைப்புக்குறியிட்டு வெளியிட்டுள்ளது.

The DMK has launched an agitation in Tamilnadu burning a

strip of the Constitution which refers to the promotion of official language of the Union protest against the Centre's `Imposition of Hindi.

இந்தியை ஆட்சிமொழியாக உயர்த்துவதற்காக மத்திய அரசு நடத்தும் இந்தி திணிப்பை எதிர்த்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவில் ஒரு பகுதியை எரிக்கின்ற போராட்டத்தை தி.மு.கழகம் நடத்திக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்து ஏட்டில் வெளிவந்துள்ள செய்தியையும் சேர்த்துப் படிக்கும்போது, மாநிலங்களவையில் எம்.ஜி.ஆர். கட்சியின் உறுப்பினர் எவ்வளவு அக்கறையுடன் இப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்பதை எளிதாகவே புரிந்துகொள்ள முடியும்!

தேர்தலில் நிற்க முடியாத அளவுக்கு தி.மு.கழகத்துக்கு தடையொன்று வராதா? என்பதில் எம்.ஜி.ஆர். அவர்கள் மிகுந்த ஆவலுடன் இருக்கிறார் போலும்!

இதைச் சொன்னால், ஆகா! நெல்லை, அருப்புக்கோட்டை இடைத்தேர்தலைப் பார்! என்று அ.தி.மு.க.வினர் சிலர் கொக்கரிப்பர்! ஆனால் அவர்களது மனச்சாட்சிக்கு, அந்த இடைத்தேர்தலில் அவர்கள் கட்சி ரீதியாகவும், அரசாங்க வாயிலாகவும் எத்தனை கோடி ரூபாய் செலவழிக்க வேண்டியிருந்தது என்பது நன்றாகவே தெரியும்!

அதனால்தான் தி.மு.க.வை, இந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை வைத்துத் தேர்தலில் நிற்க முடியாமல் செய்து விட முடியுமா? என்று டெல்லியை நோக்கி வரம் கேட்கின்றனர்!

அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியை எரிப்பது தேர்தலில் நிற்கத் தடையை ஏற்படுத்தும் என்ற ஒரு நிலை - இதுவரை இல்லாத ஒரு நிலை ஏற்படுமேயானால்,

தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான கேள்வி எழுவதை யாரும் தடுக்க முடியாது!

பிரிவினை கேட்டாலும் தேர்தலில் நிற்க முடியாது - அரசியல் சட்டத்தில் இந்தி மொழிப் பகுதியை எரித்தாலும் தேர்தலில் நிற்க முடியாது என்றால்,

அதற்கு ஒரே வழியாக, பிரிவினையே கேட்டு விட்டுப்போய்விடலாமே! என்ற கேள்விதான் அது!

அவ்வாறு மீண்டும் பிரிவினை எண்ணத்தை உருவாக்கக் கூடாது என்பதற்காகத்தான் - இந்திய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கக் கூடாது என்பதற்காகத்தான் - இந்தியைத் திணித்து, இந்தி ஏகாதிபத்தியத்தை அமைக்காதீர்கள் என்று மத்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம்!

அரசியல் சட்டத்தில் இந்தி ஆட்சிமொழி என்ற பகுதியை அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக இந்தியாவின் தேசியமொழிகள் அனைத்தும் தமிழ் உட்பட மத்திய ஆட்சி மொழியாகும் வரையில் ஆங்கிலம் நீடிக்கும்.

என்ற கருத்தமைந்த தீர்மானத்தின் அடிப்படையில் திருத்தம் செய்க! என்கிறபோது - அதற்குப் பொருள் என்ன?

எந்தப் பகுதியை அகற்றிவிட்டுத் திருத்துமாறு தீர்மானம் கொண்டு வந்தார்களோ, அந்தப் பகுதியை அகற்றுவதும் ஒன்றுதான், எரிப்பதும் ஒன்றுதான்.

1957ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து உரையாற்றினார் அறிஞர் அண்ணா!

பெரியார் அவர்கள் நடத்த இருந்த போராட்டத்துக்காகவே தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் 1957-ல் காங்கிரசாட்சியில் கொண்டுவரப்பட்டது.

தி.மு.க. தலைவரான அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடர் கழகத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அந்தத் தடைச் சட்டத்தைக் கண்டும் காணாமல் போய்விடவில்லை! எதிர்த்துப் பேசினார்!

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்துவந்து தி.மு.கழகம் கண்ட அண்ணா, காங்கிரசாட்சி கொண்டு வந்த தடைச் சட்டத்திற்கு ஆதரவு தந்து திராவிடர் கழகத்தை ஒடுக்கவேண்டுமென்று கெடுநினைப்புக் கொள்ளவில்லை!

கொள்கைத் தெளிவும் - இன உணர்வும் - இருந்த காரணத்தினால் அண்ணா அவர்கள் அன்றைக்கு திராவிடர்

கழகத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டத்தை பேரவையில் எதிர்த்து முழக்கமிட்டார்!

இத்தனைக்கும் அந்த நேரம், பெரியார் அவர்கள் காங்கிரசாட்சியையும், குறிப்பாகக் காமராசர் அவர்களையும் ஆதரித்துக் கொண்டிருந்த நேரம்!

எனினும், தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் தேவையற்றது என்பதை விளக்கிப் பேசி - எதிர்த்துக் குரல் கொடுத்து - இரட்டைக் குழல் துப்பாக்கி என்று கூறிய அந்த வார்த்தைக்குச் செயல் வடிவம் வழங்கிக் காட்டினார்!

ஆனால், இன்றோ - ஒருபுறத்திலே அரசியல் சட்டத்தைத் திருத்துமாறு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு - அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வந்திட மத்திய அரசை வலியுறுத்திக் கழகம் நடத்தும் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிற கூட்டமாக ஆளுங்கட்சிக் கூட்டம், தமிழ்நாட்டில் தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறது!

நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டுமென்று, நாங்கள்தான் தீர்மானம் போட்டுவிட்டோமே! பிறகெதற்குப் போராட்டம்.

இப்படி அ.தி.மு.க.வினரும், அவர்களின் இதயத்தைக் குளிர வைக்க எண்ணுகிற சில ஏடுகளும் - மார்தட்டிக் கொள்வதைப் பார்க்கும்போது வேடிக்கையாகவும் இருக்கிறது! வேதனையாகவும் இருக்கிறது!

இவர்கள் தமிழ்நாடு மாநில சட்டப்பேரவையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு தீர்மானம் போட்டுவிட்டால், மறுநாளே - அந்தத் தீர்மானம், தானாகவே நடைமுறைக்கு வந்துவிடுமா?

மத்திய அரசு செய்யவேண்டிய காரியமல்லவா அது?

மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை ஏற்று என்ற வாசகத்தை அந்தத் தீர்மானத்தில் இணைக்க வேண்டும் என்பதான திருத்தத்தைக்கூட நமது சட்டமன்ற உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் தானே தரவேண்டியிருந்தது!

இல்லையேல் பேரவையில் நிறைவேறினாலே - அந்தத் தீர்மானப்படி இந்தித் திணிப்பு ஒழிந்து - அரசியல் சட்டம் நேரு

உறுதிமொழிக்கேற்ப திருத்தப்பட்டதாக அர்த்தம் - என்றுதானே அ.தி.மு.க.வினர் சிலர் கருதிக்கொண்டிருந்தனர்.

அரசியல் சட்டம் திருத்தப்பட மத்திய அரசைக் கோருவதாக என்ற வாசகம் அந்த தீர்மானத்தில் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்தியதே தி.மு.க. தானே!

நிலைமை இப்படியிருக்க, பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தாலே போதும் - தி.மு.க. அறப்போர் நடத்தத் தேவையில்லை என்பது என்ன வாதமோ தெரியவில்லை!

தேசிய அவமதிப்புத் தடைச் சட்டத்தைக் காட்டி திராவிடர் கழகத்தை ஒடுக்கக் காங்கிரசாட்சி முனைந்த போது அண்ணா எதிர்த்தார், தி.மு.க. சார்பில்!

ஆனால் இன்று, அந்த தேசிய அவமதிப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி தி.மு.க.வை, ஒடுக்கி விட வழியிருக்கிறதா என்று - அண்ணாவின் பெயரால் கட்சி - அந்தக் கட்சிக்குக் கொடி - வைத்திருக்கிறவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்! அதாவது தங்களை அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள்!

அரசியல் சட்டத்தின் 17வது மொழிப் பிரிவைக் கொளுத்த முனைந்து - நாடு முழுதும் கொளுத்தச் சொல்லி அறிவித்து - கைது செய்யப்பட்டு - தேசிய அவமதிப்புத் தடைச் சட்டத்தின்படி ஆறு மாத தண்டனை பெற்ற அறிஞர் அண்ணா அவர்களின் படத்தை, கழக ஆட்சியின் போது தமிழக சட்டப் பேரவையில் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள்தான் திறந்து வைத்தார்! இப்போதும் அந்த அண்ணாவின் படம் பேரவையில் கம்பீரமாகக் காட்சி தந்த வண்ணமிருக்கிறது!

எந்தப் பெரியாரின் போராட்டத்துக்கு எதிராக தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் காங்கிரசாட்சியில் கொண்டு வரப்பட்டதோ, அந்தப் பெரியாரின் படமும் தமிழக சட்டப் பேரவையில் செம்மாந்து நின்று கொண்டுதானிருக்கிறது!

அந்தப் பெரியாரின் துணிவுடன், அண்ணாவின் வழிநின்று, அந்த அண்ணன் 1963 நவம்பர் 17 முதல் எந்த அரசியல் சட்டத்தின் 17வது பிரிவுக்குத் தீமூட்டச் சொல்லி, அவரும் களம் புகுந்தாரோ - அந்தச் செயலில் மீண்டும் ஈடுபட்டு, இந்தி ஆதிக்கத்தின் கொடுக்கை நறுக்கப் புறப்பட்டுள்ள நம்மீது

எவ்வளவு புழுதிவாரி இறைத்தாலும் - எத்தனை மிரட்டல் பாணங்களைத் தொடுத்தாலும் - நாம் ஒன்றும் முன்வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை!

அன்றைக்கொரு கடிதத்தில் குறிப்பிட்டேனே அது போல,

வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

அன்புடன்

மு.க.

20-11-1986

1475. என் கண்களில் ஒத்திக் கொள்கிறேன்!

உடன்பிறப்பே,

வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் - என்ற உள்ள உணர்வுடன் கழகத்தின் கண்மணிகள், சிறைக் கோட்டங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மடல் உன் கைக்குக் கிடைக்கும் பொழுது சிறை சென்ற உடன்பிறப்புகளின் எண்ணிக்கை சென்னை, கோவை, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் இரண்டாயிரத்தை தாண்டுகிறது.

தமிழருவி எனத்தகும் தன்மான இயக்கத் தளபதி, நமது இனமானப் பேராசிரியர் தலைமையில் தொடங்கப்பட்ட இந்த மகத்தான அறப்போர், ஏறத்தாழ ஐம்பதாண்டு கால மொழிப்போர் வரலாற்றில் மற்றுமொரு கட்டம்!

அடுத்தடுத்து பல கட்டங்களில் நமது அமைதி வழி அறப்போர் - நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டு அன்னைத் தமிழ் காத்திடவும், ஆதிக்க இந்தியின் கொட்டத்தை அடக்கிடவும் நாம் நடத்த வேண்டியிருக்கிறது.

இந்தி ஆதிக்கம் இனி இல்லை! தமிழன் இரண்டாந்தர குடிமகனாகக்கூடிய கொடுமை தடுக்கப்பட்டுவிட்டது! என்ற நிலை கண்டு நிம்மதியடைய வேண்டுமானால் - அனைத்துத் தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக ஆகும் வரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்ற அண்ணாவின் கொள்கை நிறைவேற்றப்படவேண்டும்.

அதற்கிடையே கதிர் குலுங்கும் கழனியிலே, கட்டவிழ்த்துக்கொண்ட முரட்டுக்காளை போல தமிழ் நிலத்தில் இந்தி ஏகாதிபத்தியத்தின் திணிப்பு இனித் தொடராமல்

தடுக்கப்பட, நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் முறைப்படி செய்யப்படும் திருத்தத்தின் மூலம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்தே செப்டம்பர் திங்களில் கூடிய நமது செயற்குழு நவம்பர் 17 முதல் போராட்டத்தை அறிவித்தது.

கோவையில் மாபெரும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

அறப்போர் வீரர்கள் பதினைந்தாயிரம் பேர் கலந்து கொள்வர் எனப் பட்டியல் அந்த மாநாட்டில் மாவட்ட வாரியாக வெளியிடப்பட்டது.

நவம்பர் 8, 9 ஆகிய இரு நாட்களிலும் மாநாடு நடைபெறும் வரையில் - அறப்போர் வீரர்களின் பட்டியல் வெளியிடப்படும் வரையில் - இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கழகம் களம்புகுவதைக் கேலி பேசினர் ஆளுங்கட்சியினர்!

ஆளுங்கட்சி ஏடுகள் - ஆதரவு ஏடுகள், ராஜீவ் காந்தியின் உறுதிமொழியே போதுமானது - நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்யத் தேவையில்லை என்று பக்கம் பக்கமாக எழுதின! நம்மையும் ஏசின!

அக்டோபர் 16ஆம் நாள் செய்தியாளர்களைச் சந்தித்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், ராஜீவ் காந்தியின் உறுதிமொழியே போதுமானது. அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவையில்லை என்று அடித்துச் சொன்னார். அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ஆணித்தரமாகச் சொன்னார், தி.மு.க. நடத்தும் போராட்டத்தை யூஸ்லெஸ் என்றும் வர்ணித்தார்!

கோட்டான்களின் கூச்சல் - ஆந்தைகளின் அலறல் - இவற்றால் கோகிலத்தின் குரல்வளம் குன்றிவிடாதல்லவா?

அது போலவே - கோமாளித்தனமான பேச்சுகள், குதர்க்க வாதங்கள், அனைத்தையும் மீறி கோவை மாநாடு, தமிழகத்தின் எழுச்சியைத் தர்பார்சூரர்கள் அறியும் வண்ணம் எடுத்துக் காட்டியது!

அரசியல் சட்டத் திருத்தம் தேவையில்லை - ராஜீவ் காந்தியே நேரடியாக என்னிடம் உறுதிமொழி கொடுத்து விட்டார் என்று

எம்.ஜி.ஆர். அறிக்கை விடவும், ஆமாம்! ஆமாம்! அப்போது நாங்கள் எல்லாம்கூட அருகில் இருந்தோம் - என்று தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் பக்க வாத்தியம் இசைக்கவும் - ஒரு பெரிய கூத்தே நடந்தது!

ஆனால், கோவை மாநாட்டு எழுச்சியும் - அறப் போராட்ட அறிவிப்பும் - இங்குள்ள ஆளவந்தார்களுக்குப் போதித்த பாடம், உருவாக்கிய அச்சம், இவை காரணமாக அரசின் சார்பிலே சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து தீர வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது!

எம்.ஜி.ஆருக்கு இது வாடிக்கை! இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு.க.வோ, டெசோ அமைப்போ ஒரு போராட்டத்தை அறிவிக்கிறவரையில் வாயை மூடிக் கொண்டிருப்பார்! அல்லது அந்தப் போராட்டத்தைக் கேலி செய்து கொண்டிருப்பார்! பிறகு வேறுவழியில்லாமல் அவரே சர்வ கட்சித் தலைவர்களை அழைத்துக் கூட்டம் நடத்துவார்! நாம் அறிவித்த அதே போராட்டத்தை அவரும் அரசின் சார்பாக ஆதரிப்பதாக அறிவிப்பார்!

அதுபோலத்தான், நேரு உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று - அவரது கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு - பிறகு அவரே அவரது கட்சிச் செயற்குழு தீர்மானத்தை மறுத்துப்பேசிவிட்டு - அந்தக் கருத்தை அக்டோபர் 16ஆம் நாள் செய்தியாளர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டு -

நமது அறப்போர் பேருரு எடுக்கிறது என அறிந்தவுடன், அவசர அவசரமாகச் சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வருகிறார்!

தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகிறார்கள் காங்கிரசார்!

நமது அறப்போருக்கு - நாம் எடுத்து வைத்த வாதங்களுக்கு வலுவூட்டும் வகையில்தான் தீர்மானம் அமைந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன், நமது பேராசிரியர் அவர்கள், தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு என்பது தி.மு.க.வின் குருதியோடு கலந்த கொள்கை! எனவே, ஒரு வார இதழ் எழுப்பியிருப்பதுபோல

நான் ஏற்பாடு செய்து பேராசிரியர் பேச வேண்டிய அவசியமில்லை! கழகத்தின் கொள்கையை அவர் எதிரொலித்தார்!

அந்த வார இதழ், எனது கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்த ஒரு வாசகத்தையும் திருத்தி அல்லது மாற்றி வெளியிட்டிருப்பது, அந்த இதழின் மீது எனக்குள்ள மதிப்பைக் குறைப்பதாக உள்ளது!

13.11.86 அன்று தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை... இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஆகிய இரு கட்சிகளும் விமர்சித்த போதிலும், எதிர்த்து வாக்களிக்கவில்லை! குரல் ஓட்டுகள் மூலம் நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்திரா காங்கிரசார் மட்டுமே மறுப்புக் குரல் கொடுத்ததாக ஏடுகளில் செய்தி வெளிவந்துள்ளது. இ.காங்கிரசாரும் கூட இந்த முக்கியமான தீர்மானத்தில் வாக்கெடுப்பு டிவிஷன் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்தித் திணிப்பு கடுமையாக இருக்கிறது என்பதையும், உறுதிமொழிகளை ஒருபுறத்தில் மத்திய அரசினரும், ராஜீவ் காந்தியும் கொடுத்துக்கொண்டே இந்தியை அதிவேகமாகத் திணிக்க முற்பட்டுள்ளனர் என்பதையும், எனவே, இனியும் நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெறும் வகையில், அரசியல் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவராமல் இருப்பது பெருந்தீங்கு என்பதையும் கட்சி சார்பற்ற முறையில் அனைவரும் கருதுகிறார்கள் என்பது தெளிவாகி விட்டது!

என்று நான் 16.11.86 முரசொலி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் அந்த வார இதழ்,

முரசொலியில் 16.11.86 கலைஞர் கடிதத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியே, இவ்வளவு முக்கியமான தீர்மானத்தில் ஏன் வாக்கெடுப்பு டிவிஷன் நடத்தவில்லை? என்று தனது அதிர்ச்சியை வெளிப்படையாகவே காட்டியுள்ளார் என்று கட்டுரை வெளியிட்டிருக்கிறது! வாக்கெடுப்பு டிவிஷன் வேண்டுமென்று எந்தக் கட்சியும் கோராததை, நான் பாராட்டியும் - வரவேற்றும்

எழுதியிருந்ததை - அப்படியே வாசகத்தை மாற்றி கருத்து முரண்பாட்டையே அந்த வார இதழில் உருவாக்கியிருக்கிறார்கள் பார்த்தாயா?

தீர்மானத்தை தி.மு.க.வினர் ஆதரித்தார்கள் என்பது சட்டசபைக் குறிப்புகளில் தெளிவாகப் பதிவாகாமல் இருக்க எம்.ஜி.ஆர். செய்த சாணக்கியத்தனமான ஏற்பாடுதான், வாக்கெடுப்பு நடத்தாதது.

என்பதாகவும் அந்த வார இதழ் குறிப்பிட்டு - எம்.ஜி.ஆரின் திறமையைப் புகழ்ந்திருக்கிறது!

தீர்மானத்தை ஆதரித்துப் பேராசிரியர் பேசியது சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் தெளிவாகப் பதிவாகியுள்ளது. சட்ட சபையில் தி.மு.க. சார்பில் பேசாமலே இருந்து விட்டால் கூட, தி.மு.க., இந்த மொழிக் கொள்கையில் என்ன கருத்துக் கொண்டது என்பதை, நாடே அறியும்!

அந்த வார இதழ் கட்டுரையிலிருந்து ஒன்று புரிகிறது! ஆனால் அது சரியோ தவறோ எனக்குத் தெரியாது!

வாக்கெடுப்பு டிவிஷன் வேண்டுமென்று இ.காங்கிரசார் கேட்காதது எம்.ஜி.ஆரின் ஏற்பாடு என்ற கருத்து தோன்றுகிற வகையில், அந்த வார இதழ் கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது!

எனவே, அந்த தீர்மானம் ஒரு கண் துடைப்பு - ஒரு ஒத்திகை - ஒரு ஏற்பாடு - என்று நான், ஏற்கெனவே குறிப்பிட்டது உறுதிப்படுத்தப்படுகிறது!

இல்லையேல், தீர்மானத்தையும் நிறைவேற்றி விட்டு, தி.மு.க.வையும் தடைசெய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் வரம் கேட்பார்களா?

திராவிடர் கழகத்தை தடைசெய்ய வேண்டுமென்று முன்பொருமுறை டெல்லி சென்று திருவாய் மலர்ந்தருளியவர்கள்தான் இன்றைய ஆளவந்தார்!

உடன்பிறப்பே! யார் என்ன பேசினாலும் - எதை எழுதினாலும் - அது தமிழர்க்கு, தமிழ்நாட்டுக்கு, கேடு பயப்பதாயிருப்பின் - அவற்றை ஏறெடுத்துப் பாராமல் புறக்கணித்து விட்டு, ஏறுநடை போட்டு எழுக! எழுக அறப்போருக்கு என அழைத்திடுகின்றேன்!

தனித்தனியே சந்தித்து சிறை செல்லும் உடன்பிறப்புகளை வாழ்த்தி வழியனுப்ப வாய்ப்பில்லாவிடினும்,

ஏடுகளில் வெளிவரும் அந்த உடன்பிறப்புகளின் பெயர்களைக் கண்களில் ஒத்திக்கொள்கிறேன்!

களம்புகு கண்மணிகள் அனைவரையும் - அவர்க்குத் துணை நிற்கும் தமிழின மக்களையும் வாழ்த்துகிறேன்!

அன்புடன்

மு.க.

22-11-1986

1476. அண்ணன், நம்மை வளர்த்த விதம் எண்ணிடுவோம்!

உடன்பிறப்பே,

இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் என்.எஸ்.வி. சித்தன் அவர்கள், மிகுந்த கவலையுடனும், அக்கறையுடனும் ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தேர்தலில் போட்டியிட விரும்புகிறவர்கள் அரசியல் சட்டப்படி நடப்பதாக உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும். தேர்ந்து எடுக்கப்பட்டு பதவி ஏற்கும் போதும் அரசியல் சட்டப்படி நடப்பதாக உறுதி மொழி எடுக்க வேண்டும். அப்படி எடுத்து விட்டு இப்போது அரசியல் சட்டத்தை எரித்துள்ள ஆறு சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர்களும், பதவியில் தொடர்ந்து நீடிக்கிறார்களா? அவர்களை இந்த அவைக்குள் நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

இதுதான் சித்தன் கேட்ட கேள்வி! இந்தக் கேள்வியைப் படித்துப் பார்த்த போது எனக்குச் சில நினைவுகள் - நிகழ்ச்சிகள், நெஞ்சில் நிழலாடின!

எந்தத் தொகுதியிலுமே தமிழ் நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத ஒருவர், ஒரு தொகுதியில் - யாரோ ஒருவர் பெயரைத் தன் பெயர் தான் என்று சொல்லிக் கொண்டு - சட்டமன்ற உறுப்பினர் பதவிக்காக வேட்புமனுவைத் தாக்கல் செய்து - அப்படித் தாக்கல் செய்யும்போதும் அரசியல் சட்டப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டு, அந்தத் தொகுதியில் வெற்றியும் பெற்று, அரசியல் சட்டப்படி உறுதிமொழியும் எடுத்துக்கொண்டு பதவியிலும் அமர்ந்து கொண்டாரே -

நியாயமாகப் பார்த்தால் அவர் செய்தது தவறுதான் - மோசடிதான் என்று இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தும், அவர்கள் சட்டத்தின் துணையால் அந்த மோசடியை மறைத்து விடலாமா என்று இன்னமும் முயற்சி

செய்துகொண்டிருக்கிறார்களே! மனச்சாட்சிப்படி அந்த உறுப்பினர் செய்தது அரசியல் சட்டத்துக்கு மட்டுமல்ல, அரசியல் நெறிமுறைக்கே முரணானது என்று உணர்ந்திருந்தும் அவரை இணைத்துக் கொண்டு செயல்படுகிறார்களே! காந்தியடிகள் மீது - காமராஜர் மீது ஆணையிட்டு இந்தக் காங்கிரஸ்காரர்கள், அந்த மோசடி, அரசியல் சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றுதான் எனக்கூற முன்வருவார்களா?

இந்த என் கேள்விக்கு இந்திரா காங்கிரஸ் நண்பர் சித்தன் சரியான பதில் சொல்லமாட்டார். ஆனால் -

சித்தன் அவர்களின் கேள்விக்கு நாவலர் நெடுஞ் செழியன் அவையின் முன்னவர் அவர்கள், பதில் கூறி விளக்கமளித்திருக்கிறார்.

அந்த விளக்கத்தை மெய் மறந்து, ஒரு எழுத்து விடாமல் அப்படியே படித்துப் பார்த்தேன்.

தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் தேவையற்றது. தீது பயப்பது. கொடுங்கோன்மைக்கு வழி செய்வது. நான் அந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசுவதால் - வாக்களித்ததால், அதை மீறும் உரிமையைப் பெற்றிருப்பதாக வாதிடவில்லை. அத்தகைய தவறு நான் செய்ய மாட்டேன். ஆனால் அநீதியையும், கேட்டையும் மனப்பூர்வமாகவும், தூய்மையாகவும் எதிர்த்து நின்று போரிடுவோர் மீது எத்தகைய தன்மையில் சட்டம் ஏவப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டவே இதனைச் சொல்கிறேன். அரசியல் சட்டத்தின் 17வது பிரிவுதான் உள்ளபடி தேசிய அவமதிப்பை ஏற்படுத்தி வைக்கிறது. எங்களுடைய பேச்சுகளிலும் சரி, அறிக்கைகளிலும் சரி, ஒரு இடத்திலாவது எங்கள் நோக்கம் தேசிய அவமதிப்பை ஏற்படுத்துவது என்று நாங்கள் கூறியதில்லை. இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஒரு பகுதியாக அரசியல் சட்டத்தில் 17வது பிரிவைக் கொளுத்த முற்பட்டோம். ஆகையால் நாங்கள் தேசிய அவமதிப்புச் செய்யும் குற்றம் செய்ய முற்பட்டோம் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறோம்.

உடன்பிறப்பே! இப்படி நாவலர் பேரவையில் விளக்கமளித்தார் என எண்ணுகிறாயா? ஏ, அப்பா! இப்படியொரு விளக்கம் அளித்திருந்தால் நான் மகிழ்ச்சியால் துள்ளியிருப்பேனே!

அல்லது இதோ படமாக இருக்கிறாரே எமது அண்ணன் - அந்த அண்ணா 1963-ல் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி இது! இது இன்றுள்ள ஆட்சிக்கும் ஏற்புடைய கருத்து - என்று நாவலர் கூறியிருப்பாரேயானால் - அடடே! நமது பழைய நாவலர் மீண்டும் தோன்றிவிட்டார்! தம்பி வா! தலைமையேற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம் வா! என்று திருச்சி மாநாட்டில் அண்ணாவினால் அழைக்கப்பட்ட அந்த அரிமா நாவலர் மீண்டும் தோன்றி விட்டார்! என்று உள்ளமெல்லாம் களிப்பு பொங்க உரக்கக்கூவி வாழ்த்தியிருப்போமே நாம்!

ஆனால் என்ன பதில் சொல்லியிருக்கிறார் நாவலர்?

இந்தியை எதிர்த்து அரசியல் சட்டப் பிரிவை கொளுத்தியவர்கள் மீது வழக்கு தொடரப்படும். எதிர்த்து வழக்காட அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. கோர்ட்டு என்ன தீர்ப்பு வழங்குகிறதோ, அதைப் பொறுத்துத்தான் இந்த சபை எந்த முடிவையும் எடுக்க முடியும்!

இதுதான் நாவலரின் பதில்! ஆம். உடன்பிறப்பே - இந்தி எதிர்ப்புப் போரில் அரசியல் சட்ட 17வது பிரிவைக் கொளுத்திட - அண்ணா புறப்பட்டபோது, காஞ்சிபுரத்தில் அவரது இல்லம் சென்று சென்னை வரையில் நாவலரும், நானும் அண்ணாவைப் பின் தொடர்ந்தே வந்தோமே! அப்படி அருகிலிருந்த அருமை நாவலர்தான் - பேரவையில் இன்று இப்படியொரு விளக்கத்தை அளித்துள்ளார்!

நான் தொடர்ந்து குறிப்பிடுவதுபோல - நமது பேராசிரியர் அடிக்கடிச் சுட்டிக் காட்டுவது போல - பதவி, பவிசு, அதிகாரம், ஆளம்பு, ஆட்சிக் கட்டில் இவற்றை முன் வைத்து அல்லது எதிர்பார்த்துத் தொடங்கப்பட்டதல்ல, தி.மு.கழகம்!

அப்படி நமது அண்ணன் நம்மையும் வளர்த்திடவில்லை!

தமிழ்த் தாயின் பால் குடித்து வளர்ந்தோம் - அதுவும் தன்மானமூட்டும் பால் - தருக்கர்தம் கொட்டமடக்கும் வீரப்பால்!

எனவே, நமது தடைபடாக் குருதியோட்டத்துடன் கலந்துவிட்ட மொழியுணர்வு, இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு,

எத்தகைய அடக்குமுறைகள் வரினும் மங்கிடப் போவதில்லை!

பதவிகளே கூட பறிக்கப்படினும், நாம் மண்டியிடப் போவதில்லை!

நமது அறப்போர்வாளின் கூர்முனை மழுங்கப் போவதில்லை!

ஐம்பதாண்டுகால நமது மொழிப்போர் வரலாற்றில், இப்போது தொடங்கப்பட்டுள்ள அறப்போர் - ஒரு திருப்புமுனையாக அமையப் போகிறது!

மீண்டும் கூறுகிறேன்! சுவரில் எழுதுகிறாயோ, இல்லையோ - நெஞ்சில் எழுதி வைத்துக்கொள்!

வீழ்வது நாமாக இருப்பினும்

வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

அன்புடன்

மு.க.

23-11-1986

1477. சோவியத் கவிதைகள் கூறும் சுவைமிகு பயணம்!

உடன்பிறப்பே,

சோவியத் நாட்டுக் கவிதைகள் சிலவற்றைக் கவிஞர் கோவேந்தன் அவர்கள், தமிழாக்கம் செய்து நூல் வடிவில் வெளிவந்துள்ளவைகளில் ஓரிரு கவிதைகள் என் உள்ளத்தை மிகவும் கொள்ளை கொண்டன!

ரசூல்ரசா என்ற கவிஞரின் கவிதை நால்வர் சந்தித்தோம் என்று தொடங்குகிறது.

நம்பிக்கை
ஐயம்
கவலை
நான்

இந்த நால்வர் சந்தித்தோம்!
நேரமோ நள்ளிரவு நிறைந்தது பெருமழை
காற்று உறுமிற்று.

நம்பிக்கை நவின்றது:-

மழையும் நின்றிடும், காற்றும் ஓய்ந்திடும்
இரவும் முடிவுறும், பொழுதும் விடிந்திடும்
பொன் கதிர்ப் பரிதி, முன் எழுந்திடுமே!

ஐயம் புகன்றது:-

எப்பொழுது?
மழை பனியானால்?
காற்றும் புயலானால்?
இரவும் நீடித்தால் என்ன செய்வது?

கவலை கழறிற்று:-

மழை நின்றாலும்; காற்று
அடங்கினாலும் என்ன அதனால்?
என்னுள்ளே புலம்பும் தனிமையின்
ஏக்கம்; விடியலில் விடியுமோ?
நானோ;
கேட்டுக் கொண்டிருந்தேன் -
நம்பிக்கையின் உரையினை!
ஐயத்தின் சொற்களை!
கவலையின் மொழிகளை!

விடியற்பொழுதை எதிர்பார்த்திருந்தேன். பொன்னொளி விடியல்!

எப்பொழுதாகுமோ?
என்ன கொணருமோ?
எதுவும் கேட்டிலேன்!
அமைதியாய்
நம்பிக்கையின் மெல்லொலி கேட்டேன்;
பேசுவாய்!
என்னிடம் பேசுவாய்!

உடன்பிறப்பே!

நம்பிக்கை, என்னிடம் மட்டுமே பேசு என மெல்ல ஒலிக்கிறதாம்! சந்தேகம் ஐயம் கவலை ஆகிய இரண்டு பேருடனும் பேசிப்பயனில்லை!

மழை நிற்காவிட்டால் என்ன செய்வது? வீசும் காற்று, புயலாக வெகுண்டெழுந்தால் என்ன ஆவது? இப்படிக் கற்பனை செய்வதே ஐயத்தின் வேலை!

மழை நின்றே விட்டாலும் - காற்றே ஓய்ந்து விட்டாலும், அதனால் என்ன பயன்? பொழுதே விடிந்து விட்டால் கூட என் புலம்பலுக்கு விடிவுகாலம் ஏற்படுமோ? என்பது கவலையின் கூற்று!

எங்கள் நால்வரில் ஒருவரான நம்பிக்கை மட்டுமே என்னைத் தட்டிக் கொடுத்துத் தன்னிடம் மட்டுமே பேசு என்று என் காதில் மெல்ல ஒலித்தது!

குறிக்கோளின் வெற்றியை மட்டுமே நாடிச் செல்லுகிற கொள்கை உறுதி கொண்டவனை, ஐயப்பாடுகளோ - கவலைகளோ - ஒன்றும் செய்துவிட முடியாது!

நம்பிக்கையை மட்டும் அவன் நண்பனாகக் கொள்ளும் பட்சத்தில், இறுதி வெற்றி அவன் கொண்ட கொள்கைக்கே!

இதனை, ரிம்மா கசாக்கவ எனும் மற்றொரு சோவியத் கவிஞர் எவ்வாறு உறுதிப்படுத்துகிறார் என்பதையும் பார்!

பயணம் கடியது, பயணம் இனியது,
பாதை முள்ளது செங்குத்தானது,
புயலில் சிதைபடு மரங்கள் சூழ்ந்திடும்
பொடிபடு பாறைகள் இடறும் வழியது,
பரிசும் அங்கிலை, விருதுகள் பெறுகிலை,
பரிவுறு புகழ்மொழி ஊக்கம் பெறுகிலை,
விரும்பின் அவ்வழி ஏற்றுக்கொள்குவை;
விலகலும் தொடர்தலும் உன்னைப்பொறுத்ததே!
தடைகள் பற்பல, குழிகளும் எண்ணில,
தளரா உரமும் துணிவும்கொள்வையேல்
அடையும் அவ்வழி உனக்கு மாத்துணை
ஆகும்; வெற்றிக்கு அழைத்துனைஏகுமே!

நம்பிக்கையுடன், தடைகள் பல கடந்து தளரா உள்ளத்துடன், விலகியோடும் சிலரைப் பற்றி வேதனை கொள்ளாமல் தொடர்வோரையெண்ணி மகிழ்ந்து, பொடிபடு பாறைகளில் கூடிய பயணம் மேற்கொள்ளத் தானே -

பெரியார் அழைத்தார்!
அண்ணா அணி வகுத்தார்!

அந்த அணி வகுப்பில்
நம்மை நாம் இணைத்துக்
கொண்டோம்!
நம்பிக்கையுடன் நடப்போம்!

உறுதியும், துணிவும் வெற்றியைப் பெற்றே தரும். ஒரு சிறிதும் ஐயமின்றி - கவலையின்றி தொடருவோம், கடும் பயணத்தை!

அன்புடன்

மு.க.

24-11-1986

1478. வெற்றிக் கட்டத்தை எட்டும் வரையில் விடாது போரிடுவோம்!

உடன்பிறப்பே,

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கழகம் நடத்தும் அறப்போராட்டத்தில் அரசியல் சட்டத்தைக் கேவலப்படுத்தி, தேசிய அவமதிப்புச் செய்யும் நோக்கம் நமக்குக் கிஞ்சிற்றும் இல்லை என்பதை இந்தப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே தெளிவாகக் கூறிவருகிறோம்.

அரசியல் சட்டம் 17-வது பிரிவில் 343 1ல் தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள இந்தி மொழிதான் இந்தியாவின் அதிகார பூர்வமான மொழியாக இருக்கவேண்டும் என்ற வாசகத்தை எரிப்பதின் வாயிலாக, இந்தி பேசாத மாநில மக்களுக்கு ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச்செய்யும் கோரிக்கையை வலியுறுத்தவே, அண்ணா காட்டிய வழியில், இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம்.

தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள இந்திமொழிதான் இந்தியாவின் அதிகாரப் பூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என்ற வாசகங்களைக் கொளுத்த, அரசியல் சட்டம் முழுவதையும் கொளுத்துகிற எண்ணம் கழகத்துக்கு இல்லை.

அரசியல் சட்டப் புத்தகத்தையே வாங்கி, அதிலிருந்து இந்த வாசகத்தைக் கிழித்துக் கொளுத்தும் திட்டமும் இல்லை.

1963-ல் அண்ணா காலத்தில் நூற்றுக்கணக்கானோர் இந்த எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டபோதுகூட, அரசியல் சட்டப் புத்தகங்களை விலைகொடுத்து வாங்கி - குறிப்பிட்ட அந்த வாசகத்தை கொளுத்த முற்படவில்லை! கொளுத்தவும் இல்லை!

சிறிய அளவில் மலிவுப் பதிப்பாக 1986-ல் வெளிவந்துள்ள 52 திருத்தங்களுடன் கூடிய Constitution of India என்ற அரசியல் சட்டத்தின் விலையே பதினேழு ரூபாய் என்கிறபோது; கழகம் நடத்துகிற அறப்போரில் பதினைந்தாயிரம்பேர் களம் புகுகிறார்கள் என்கிறபோது 15000X17=235000 ரூபாய்க்கு இரண்டு லட்சத்து முப்பத்தி ஐயாயிரம் அரசியல் சட்டப் புத்தகங்களை வாங்க வேண்டும்.

அதுவும் அரசியல் சட்டம் முழுவதையும் எரிப்பது நமது நோக்கமாக இல்லாமல் இந்திதான் ஆட்சிமொழி என அறிவிக்கிற வாசக அமைப்பை மட்டும் எரித்திடுவது என்று ஆரம்பகால முதலே அறிவித்து வருகிற நாம், குறிப்பிட்ட தீங்கான வாசகத்தை - திருத்தப்பட வேண்டிய வாசகத்தை - கொளுத்துவதற்கு அந்த வாசகத்தை ஒரு தாளில் எழுதியோ - அச்சியற்றியோ கொளுத்துமாறு அறிவித்திருக்கிறோம்.

ஆகா! ஊஹூ! தி.மு.க.வினர் வெறும் தாளைத்தான் எழுதிக் கொளுத்தப் போகிறார்களாம்! வீராதிவீரர்கள்! என்றெல்லாம் அரசாங்க அரண்மனையின் ஆஸ்தான மேதைகள் கேலியும், கிண்டலும் செய்கிறார்கள்.

1963-ல் அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்பு அறப்போரில் அரசியல் சட்ட 17வது பிரிவைக் கொளுத்த முற்பட்டபோதும், கழகத்தினர்க்கு அவ்வாறு ஆணையிட்டபோதும், இன்று போலவே அன்றும் தாள்களில், குறிப்பிட்ட இந்திமொழித் திணிப்புப் பகுதியை எழுதியோ, அச்சிட்டோதான் கொளுத்தப் பட்டது.

இப்போதும் அரசியல் சட்டத்தில் 17வது பிரிவில் 3431ல் உள்ள இந்திதான் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான ஆட்சிமொழி என்ற பகுதியைத் திருத்தவேண்டும், ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் வகையில் வழிகாண வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தி, அதற்காக அறப்போர் நடத்தும் நாம் - குறிப்பிட்ட அந்த வாசகத்தை மட்டும் ஒரு காகிதத்தில் குறித்துக் கொளுத்துவதுதான் நாம் அறிவித்துள்ள அறப்போர் முறையாகும்! அந்த வாசகம்தான் நமது எதிர்ப்புக்குரியதே தவிர, அரசியல் சட்டமல்ல!

யாருக்கோ பயந்துகொண்டு, அல்லது எதற்கோ அஞ்சிக்கொண்டு, காகிதத்தைத்தான் கொளுத்துகிறோம் என்று நாம் கூறவில்லை!

நவம்பர் 16-ந் தேதியன்று சென்னையில் நவம்பர் 17-ந் தேதி இந்தி எதிர்ப்புப் போரில் களம்புகுந்த பேராசிரியருக்கும், ஏனைய அறப்போர் வீரர்களுக்கும் வழியனுப்பு விழா நடந்தது. வாழ்த்துரை வழங்கிய தவத்திரு மதுரை ஆதீனகர்த்தர், இந்த எரிப்புப் போரில் சாதாரண நெருப்பு போதாது - பஞ்சாப் நெருப்பை பயன்படுத்த வேண்டும் எனப் பேசினார்!

அடுத்து பேசிய நான், நாம் நடத்துவது ஆளைக் கொளுத்துகிற போராட்டமல்ல - இது தாளைக் கொளுத்துகிற போராட்டம்தான்! அதற்குப் பஞ்சாப் நெருப்பு தேவையில்லை! என்று விளக்கமளித்தேன்.

எனவே, நவம்பர் 16-ந் தேதியே இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்ற வாசகத்தை உள்ளடக்கிய ஒரு தாளைக் கொளுத்துவதுதான் நமது போர் முறை என்பது திட்ட வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சபாநாயகர் பால்ஹென்றிப் பாண்டியன் சர்வாதிகாரமாக நடந்து கொண்டு, ஜனநாயகப் படுகொலைக்குக் கத்தி தூக்கிய பிறகு, தி.மு.கழகம், போர் முறை எதையும் மாற்றிக் கொள்ளவில்லை!

அய்யகோ! அரசியல் சட்டத்தைக் கொளுத்துகிறார்களே! இது தேச விரோத மில்லையா? என ஒரு சில திடீர்த் தேச பக்தர்கள் கூச்சல் எழுப்பிய காரணத்தாலும், அவர்கள் உருவாக்கிய குழப்பத்தில் தெளிவுபடைத்த நடுநிலையாளர்களும் கூட திகைத்து விட்ட காரணத்தாலும்தான் - நாம் தொடக்கத்திலேயே அறிவித்த போராட்டம் அரசியல் சட்டத்தை பஞ்சாபில் அகாலிதள சட்டமன்ற உறுப்பினர்களும், அக்கட்சியினரும் முழுமையாக கொளுத்தியது போல் அல்ல. எந்த வாசகம், இந்தி பேசாத மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்குமோ, அந்த வாசகத்தை மட்டுமே கொளுத்துகிற போராட்டம் என்பதை எடுத்துக் கூற வேண்டியதாயிற்று!

இதை வைத்துக் கொண்டு, பார்!பார்! தி.மு.க. பின்வாங்கிவிட்டது என்று சிலர் கெக்கலி கொட்டுவதைப் பார்த்து விஷயமறிந்தோர் விலா நோகச் சிரித்து விட்டு,

அந்த விஷமிகளை விட்டு வெகுதொலைவு விலகியே சென்றிடுவர்!

அரசியல் சட்டத்தின் மீது உறுதிமொழி எடுத்துவிட்டு, எரிப்புப் போராட்டம் நடத்துவது அந்தச் சட்டத்தை அவமதிப்பு செய்வது ஆகாதா? என்று திரும்பதிரும்ப சிலர் கேட்பதற்கும் - எழுதுவதற்கும் - அன்றைக்கே நீதிமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகப் பதில் அளித்துள்ளார்.

'சட்டத்தை உடைப்பதைத் தமது தொழிலாக, பழக்கமாக, தங்கள் சொந்த லாபத்துக்காக மேற்கொள்பவர்களுடன் எங்களையும் ஒன்றாக்கி விடக்கூடாது.'

'சட்டத்துக்கு உட்பட்டதோ அல்லவோ நான் ஒரு தூய நோக்கத்துக்காக ஒரு செயலில் ஈடுபடுவதின் மூலம் மக்கள் தொண்டு எனும் மாண்புமிகு பணிபுரிய இயலும் என மனதார நம்பி ஈடுபடும் போது குற்றவாளி அல்ல என்று கூறிக்கொள்ள உரிமை பெறுகிறேன்.'

'நாங்கள் மேற்கொண்ட செயல் ஆளவந்தார்களை விழிப்படையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே! எனவே, இந்த வயதிலே சில காகிதத்தைக் கொளுத்தி வேடிக்கை பார்க்கும் விளையாட்டை நான் மேற்கொள்ள மாட்டேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.'

'எங்களுடைய அறிக்கைகளிலும் சரி, பேச்சுக்களிலும் சரி, ஒரு இடத்திலாவது எங்கள் நோக்கம் தேசிய அவமதிப்பு ஏற்படுத்துவது என்று நாங்கள் கூறவில்லை.'

'இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவுதான் உள்ளபடி தேசிய அவமதிப்பு செய்கிறது.'

1963 டிசம்பர் 5ஆம் நாள் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் அண்ணா அவர்கள் அளித்த விளக்கங்கள்தான் உடுக்குறியிட்டுக் கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பவை!

இதற்குப் பிறகும் - இதனைப் பலமுறை எடுத்துக் காட்டிப் பேசியும், எழுதியும் ஆனபிறகும் - அண்ணாவின் பெயரை கட்சிக்கு வைத்துக் கொண்டு, அவரது படத்தைக் கொடியிலும் பொறித்துக் கொண்டு, அண்ணாவின் அரசு இது என அடிக்கடி விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். அவர்களோ,

அல்லது அவரது ரத்தத்தின் ரத்தமான சபாநாயகர் பால்ஹென்றிப் பாண்டியன் அவர்களோ, அய்யோ! இந்தித் திணிப்பை எதிர்ப்பதாகச் சொல்லி தி.மு.க.வினர் அரசியல் சட்டத்தையும், உறுதிமொழியையும் அவமதித்துவிட்டார்கள்! என்றுகூறி - ஆயிரக்கணக்கானோரைச் சிறையிலடைப்பது போதாதென்று, பேராசிரியர் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியையும் பறித்திட்டதாக அறிவிக்கிறார்கள் என்றால், பேரவையில் சபாநாயகர் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டதுபோல ஆவி என ஒன்றிருக்குமானால் - அண்ணாவின் ஆவியல்லவா இவர்களது கழுத்தைப் பிடித்து நெரிக்கும்!

டெல்லி மாநிலங்களவையில், அரசியல் சட்டப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்ட பிறகுதான் அண்ணா அவர்கள், அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவைக் கொளுத்த முற்பட்டுக் கைது செய்யப்பட்டு - வழக்கு தொடரப்பட்டு - ஆறுமாத காலம் தண்டனையும் பெற்றார்!

ராஜ்ய சபையில் அரசியல் சட்டத்தின் மீது எடுத்த உறுதிமொழியை மீறினார் என்று அண்ணாவை அங்கிருந்த ராஜ்ய சபைத்தலைவர் அதாவது குடியரசுத் துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிடவில்லை!

அண்ணாவின் மீது பிரயோகிக்கப்பட்ட அதே தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் 1957 என்மீதும் பிரயோகிக்கப்பட்டு, அதாவது தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் 5-வது பிரிவு - சென்னை 1957-ன் படி குற்றம் சாட்டப்பட்டு, மதுரையில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் அரசியல் சட்டத்தின் 17வது மொழிப் பிரிவை எரிப்பதற்கு மதுரை முத்துவையும், மற்றவர்களையும் தூண்டினேன் என்று எனக்கும், என்னுடன் என்.வி.என். அவர்களுக்கும் ஆறுமாத தண்டனை விதிக்கப்பட்டது.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அப்போது நான் சட்டமன்ற உறுப்பினர்! ஆனால் நான் அரசியல் சட்டத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டதற்கு மாறாக நடந்து கொண்டதாகக்கூறி அன்றிருந்த பெருந்தலைவர் காமராசரோ - அல்லது முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலனாரோ - அல்லது சபாநாயகர் செல்லபாண்டியனோ - என்னை சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பதவித் தகுதி இழந்ததாகக் கூறி நீக்கி விடவில்லை!

இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுத் தலைவராகவே நான்தான் அப்போது இருந்தேன் என்பதும் குறிப்பிடத் தக்கது!

இந்திப் பிரச்சினையில் கருத்து வேறுபாடு கொண்ட காங்கிரஸ் ஆட்சியாளர்களே அன்றைக்கு - அண்ணாவின் மீதும், என் மீதும் தொடுக்காத கணையை, இன்றைக்குத் தங்களையும் இந்தி ஆதிக்க எதிர்ப்பாளர்கள் என்று கூறிக் கொள்கிற அ.தி.மு.க. ஆட்சியாளர்கள், பேராசிரியர் மீதும் மற்றும் ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும் தொடுத்துள்ளார்கள் என்கிற போதுதான் மொழிப் பிரச்சினையில் இவர்கள் இரட்டைவேடம் போட்டு - ஏதோ சட்ட சபையில் மொழித் தீர்மானம் என்ற பெயரால் நாடகமாடியிருக்கிறார்கள் என்ற உண்மை நாட்டுக்கு அம்பலமாகியிருக்கிறது!

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தி.மு.கழகம், அரசியல் சட்டத்தில் உள்ள இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்று கூறும் பகுதியை எரிப்பது குறித்து குமுதம் ஏடு கூட கேள்விகள் சிலவற்றை எழுப்பி - பாண்டியன் தீர்ப்பு சரியானதாகவே தோன்றுகிறது என்று முத்தாய்ப்பு வைத்திருக்கிறதல்லவா; குமுதத்தின் கேள்விகளுக்கு, அண்ணா அவர்கள் 1963-ல் நீதிமன்றத்தில் தந்த விளக்கமும் - தேசிய அவமதிப்புத் தடைச் சட்டத்தின் கீழ் அண்ணாவுக்கும், எனக்கும் தண்டனை தரப்பட்டும் கூட, அன்றிருந்த காங்கிரசாட்சியில் சபாநாயகர் எப்படி நடந்து கொண்டார் என்ற நிலையுமே நல்லபதிலாக அமைகின்றன!

இன்னும் ஒரு முக்கியமான குறிப்புடன் இந்தக் கடிதத்தை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

1963 நவம்பர் 22-ந் தேதியன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரம் முடிந்த பிறகு, காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் நஞ்சுண்டராவ் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருப்பதாகப் பதவி ஏற்றுக்கொண்ட போது உறுதி கூறிவிட்டு, அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது என்பது முறையா? அந்தச் சட்ட எரிப்பில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஈடுபடப் போவதாகத் தெரிகிறது. இது உரிமைப் பிரச்சினையாகும்.

காங்கிரஸ் உறுப்பினர் நஞ்சுண்டராவ் இவ்வாறு கூறியதும் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் எழுந்து,

இதைப்பற்றி நான் எதுவும் கூறுவதற்கில்லை!

எனப் பதில் அளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அப்போது கூறியது பின்வருமாறு:-

இதில் உரிமைப் பிரச்சினை எதுவுமில்லை. இம்மன்றத்தைப் பொறுத்தமட்டில், இம்மன்ற நடவடிக்கைகளில் தி.மு.கழக உறுப்பினர்கள் ஒழுங்குமுறையை மீறவில்லை. கொடுத்த உறுதிமொழியையும் மீறவில்லை. ஆனால் வெளியில் வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால், அதற்குரிய சட்டங்கள் இருக்கின்றன. அச்சட்டங்களைக் கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். எனவே உரிமைப் பிரச்சினை எதுவும் இதில் எழவில்லை!

இது, அண்ணாவின் தம்பியாக நாவலர் அவர்கள் இருந்தபோது சட்டப்பேரவையில் 1963 நவம்பர் 22-ல் தந்த விளக்கம்!

ஆனால் இன்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் நாவலராக இருக்கிறபோது 1986 நவம்பர் 21-ல் பேரவையில் தந்த விளக்கமும், பிறகு தடுமாற்றத்துடன் நவம்பர் 24-ல் பேரவையில் தந்த விளக்கமும் - அடடா! அவற்றுக்கிடையே எத்தனை முரண்பாடு!

உடன்பிறப்பே! நமது போராட்டம் குறித்து இன்று மட்டுமல்ல - என்றைக்குமே திசை திருப்பியும், ஏகடியம் செய்தும் - கண்டனக் கணை வீசியும் - ஏடுகள் சில எழுதுவது வாடிக்கைதான்!

அத்தகைய ஏடுகள் பற்றி 1963 நவம்பர் திங்களில் அண்ணா அவர்கள் விடுத்த அறிக்கையில் சில பகுதிகள் வருமாறு:-

இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படும் அக்கிரமத்தை எதிர்க்க உங்கள் உள்ளம் துடிக்கிறது. ஆனால் ஆளுங்கட்சியிடம் பல்வேறு நிலைமைகளாலும், காரணங்களாலும் உங்களுக்குள்ள தொடர்பும் பாசமும் உங்களைச் செயலாற்ற விடவில்லை - உணருகிறேன்.

எனவே அதிலே ஈடுபடும் என்னையும், கழகத்தையும் எவ்வளவு ஏசினாலும் பொறுத்துக் கொள்கிறேன்.

எமது செயலை சமூகவிரோதச் செயல் என்றும், காலித்தனம் என்றும், கட்சி வளர்க்கும் கயமைத்தனமென்றும் எழுதிக்

கொண்டிருங்கள் - வேண்டாமென்று சொல்லவில்லை. அவ்விதம் எழுதுவதின் மூலம் ஆட்சியாளர்களுக்கு உம்மிடம் நம்பிக்கையும், அன்பும் ஏற்படுவதானால் மெத்த மகிழ்ச்சி!

எம்மைத் தாக்கி எழுதும்போது கூட உள்ளூர எமது முயற்சியிலே அன்பு காட்டி வருகிறீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

அந்த நம்பிக்கை துணைநிற்கும் நிலையில்தான் நான் அறப்போரில் ஈடுபடுகிறேன்.

உடன்பிறப்பே! 1963-ல் அண்ணா அவர்கள் சில இதழாளர்களுக்கு தந்த விளக்கமும், வேண்டுகோளும் இன்றும் பொருந்துகிறதல்லவா?

எனவே, என் உள்ளம் எதனைத் தூய்மையானது என்று ஏற்றுக்கொள்கிறதோ அதற்காகப் பணியாற்றித் தீருவேன் என்பதுதான் அறப்போர் நடத்துபவர் கொண்டிடும் உறுதி! அச்சம் அவர்களை அண்டாது! கேலிமொழி அவர்களைக் குழப்பாது!

என்ற அண்ணாவின் மொழியை நெஞ்சில் பதித்து நமது களம்புகு காதை, வெற்றிக்கட்டத்தை எட்டும் வரையில் விடாது போரிடுவோம்!

வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

அன்புடன்

மு.க.

30-11-1986

1479. இரண்டு பாண்டியர்கள் - இரண்டு தீர்ப்புகள்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதத்தை நீ படிக்கிறாயோ, இல்லையோ எனக்குத் தெரியாது!

ஆனால் நான் தெரிந்து கொள்ளுகிற விபரங்களையும், விளக்கங்களையும் உனக்குத் தெரிவித்துவிட வேண்டு மென்பதில் எனக்கு ஒரு ஆசை! தெரிவித்து விட்டோம் என்றால் அதிலே ஒரு மனநிம்மதி!

இந்தக் கடிதத்தை நீ படிக்கிறாயோ, இல்லையோ, எனக் குறிப்பிடுவது - அப்படி படிக்கிற இடத்தில் நீ இருக்கிறாயோ என்பதாலும், படிக்கிற அளவுக்கு உனக்கு ஓய்வில்லாமல், பதவிப்பொறுப்பு காரணமாக ஏற்றுக் கொண்டுள்ள பணிகள் உன்னைத் தடுக்கின்றனவோ என்பதாலும் அல்ல! அல்லவே அல்ல!

ஏறத்தாழ ஆறாயிரத்துக்கு மேற்பட்ட உடன்பிறப்புகள் சிறையில் என்கிறபோது - அந்த உடன்பிறப்புகளில் ஒருவராக இருக்கிற உனக்கு, என் கடிதம் படிக்க வாய்ப்பு இருக்குமோ, இருக்காதோ என்ற சந்தேகத்தினால்தான் இன்றைய கடிதத்தை இப்படித் தொடங்குகிறேன்.

பேராசிரியர் அவர்களும், அவருடன் அறப்போர் அணியினரும் 3.12.86 நேற்று நீதிமன்றத்துக்கு மத்திய சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள தேசிய அவமதிப்புத் தடுப்புச் சட்டப்பிரிவை மீறினார்கள் என்பதை நிலைநாட்டுவதற்காக - குற்றப்பத்திரிகையில் பின்வரும் கருத்துப் பொதிந்த வாசகம் ஒன்றைக் காவல்துறையின் சார்பாக இணைத்துள்ளனர்.

நாங்கள் மதிக்காத கேவலமான அரசியல் சட்டத்தை கொளுத்துவோம்.

என்று பேராசிரியரும் மற்ற அறப்போர் வீரர்களும் முழங்கினார்களாம். இப்படிக் குற்றப்பத்திரிகையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரசியல் சட்டத்தை மதிக்கிறோம். அதில் இந்திதான் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான மொழி என்ற வாசகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் அதற்குத் திருத்தம் கோரி - அதனை வலியுறுத்த அந்த வாசகத்தை எழுதிய தாளுக்கு தீயிடுகிறோம் என்று பலமுறை - 1963 அண்ணா அவர்கள் காலத்திலிருந்து சொல்லி வருகிறோம். எனினும் நாம், அரசியல் சட்டத்தை மதிக்காதவர்கள் என்பதுபோல ஒரு குற்றச்சாட்டை, அண்ணாவின் பெயரைத் தனது கட்சிக்கு வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துகிற எம்.ஜி.ஆர். சுமத்தும் போதுதான் - அவரது இந்தி ஆதிக்க எதிர்ப்பு குறித்து நமக்குச் சந்தேகமே எழுகிறது!

அந்தச் சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போலத்தான் சட்டமன்றப் பேரவையின் தலைவர் பாண்டியன் அவர்கள், பேராசிரியர் உள்ளிட்ட ஏழுபேரை அரசியல் சட்டத்தின்மீது எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்கு மாறாக நடந்து கொண்டார்கள் எனக் குற்றம் சாட்டி, அரசியல் சட்டத்துக்கும் - சட்டமன்ற விதிமுறைகளுக்கும் விரோதமாக ஒரு தீர்ப்பை வழங்கி - அந்த ஏழு பேருடைய பதவியையும் பறித்து விட்டதாக அறிவித்துள்ளார்.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள மூதறிவாளர்கள், சட்டத் துறை விற்பன்னர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் யாருமே சபாநாயகர் பாண்டியனின் இந்த சர்வாதிகாரப் போக்கையும் - அதற்கு எம்.ஜி.ஆர். தூண்டுதலாக இருந்ததையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த ஜனநாயக விரோதத் தீர்ப்பைக் கண்டித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதே போன்ற ஒரு பிரச்சினை 1963 நவம்பர் திங்கள் காங்கிரஸ் ஆட்சியின் போது சட்ட மன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்களால் எழுப்பப்பட்ட போது - எதிர்க்கட்சி தலைவராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்; சட்ட சபைக்கு வெளியே சட்டமன்ற உறுப்பினர்கள் அரசியல் சட்டப் பிரிவை கொளுத்துவதால் - இந்த சபையில்

எடுத்த உறுதிமொழியை மீறுவது ஆகாது! வெளியில் நடந்த நிகழ்ச்சிக்கு நீதிமன்றங்கள் தான் தீர்ப்பளிக்க வேண்டும். இந்தச் சபையில் உரிமைப் பிரச்சினை வராது! என்று தெளிவாகச் சொல்லியிருந்ததையும், முரசொலி கடிதத்திலும், மயிலை மாங்கொல்லைக் கூட்டத்திலும் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன். அதன் தொடர்பாக இப்போது மேலும் ஒரு ஆதாரபூர்வமான தகவலை உனக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீண்டும் 1964 மார்ச் மாதத்தில் அதே காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்கள் சட்டசபையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தபோது, அப்போதிருந்த பெரியவர் பக்தவத்சலனார் ஆட்சியில் சபாநாயகராக வீற்றிருந்த திரு. செல்லபாண்டியன் அவர்கள், அது குறித்து 1964 மார்ச் 16ஆம் நாள் வழங்கியுள்ள தீர்ப்பின் முக்கிய பகுதிகளை இதோ உன் முன் வைக்கிறேன்.

1. 1939ஆம் ஆண்டு ஒரு மாநில சட்டமன்றத்தில் மன்னர் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட காங்கிரஸ்காரர்கள், அந்த உறுதிமொழிக்கு மாறாக சுதந்திரப் போரில் ஈடுபடுவது குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது சபாநாயகர் அவர்கள், கெய்த் KEITH என்ற பேராசிரியர் ஒருவரின் கருத்தை எடுத்துக்காட்டி, ஒழுங்குப் பிரச்சினைக்கு இடமில்லை என்று முடிவு கூறியிருக்கிறார்.

2. சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் நடத்துவதாகச் சொல்லப்படும் செயல் அரசியல் சட்ட எரிப்பு அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பதவியிலிருக்க தகுதியின்மை என்ற விதிகளுக்கு உட்பட்டதல்ல.

3. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், சட்டமன்றத்தில் ஆற்றவேண்டிய கடமைகளுக்கு சம்மந்தமில்லாமல் வெளியில் ஈடுபடும் செயல்கள் குறித்து, இந்தச் சபையின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது.

4. இங்கிலாந்து பாராளுமன்றத்தில் 1952 ஜூன் 11ஆம் தேதி, பதவிப் பிரமாணம் குறித்து ஒரு உறுப்பினர் கிண்டல் செய்ததை, சபையை அவமதித்த குற்றமென்று ஒழுங்குப்பிரச்சினை எடுக்கப்பட்டபோது - அது உரிமைப்பிரச்சினைக்குரிய விஷயமல்ல என்று சபாநாயகர் தீர்ப்பளித்துள்ளார்.

5. அரசியல் சட்டத்தை எரிப்பது குற்றமென்றாலும்கூட, ஏற்கெனவே நாட்டில் உள்ள சட்டப்படி நடவடிக்கை எடுக்க உட்பட்டதே தவிர, இந்த அவையில் அது குறித்து எந்த உரிமைப்பிரச்சினை எழவும் இடமில்லை.

உடன்பிறப்பே! இப்படியொரு தீர்ப்பை தமிழ்நாட்டில் காங்கிரசு ஆட்சி நடந்த போது - அதுவும் இந்தி மொழிக்கு ஆதரவான காங்கிரஸ் ஆட்சி நடந்த போது - சபாநாயகர் செல்லபாண்டியன் அவர்கள் வழங்கியுள்ளார்.

ஆனால் இன்று?

நாங்களுந்தான் இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்று நாப்பறை கொட்டுவோர் நாடாளுகின்றார்கள்! அதுவும் அண்ணாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு!

எண்ணிப் பார்த்திடுக! நீ மட்டுமல்ல - இந்த நாட்டில் உள்ள நடுநிலையாளர்கள் அனைவரும் எண்ணிப் பார்த்திடுக! எனக்கேட்டுக் கொள்கிறேன். கருத்து வேறுபாடு - கடுமையான வாக்குவாதங்கள் - இந்தியை ஆதரிப்போர், இந்தியை எதிர்ப்போர் என இரு அணிகளின் மோதுதல்கள் இருந்த அந்தக் காலத்தில் 1963-ல் ஒரு சபாநாயகர் தமிழக சட்டமன்றத்தில் அளித்த தீர்ப்புக்கும் - இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது ஒரு சபாநாயகர் - அதேபிரச்சினை குறித்து அளித்துள்ள தீர்ப்புக்கும் உள்ள முரண்பாட்டை எண்ணிப் பார்த்திடுக!

ஒரு பிரச்சினை குறித்து தீர்ப்பு வழங்கும்போது - அந்தப் பிரச்சினையில், அந்த மன்றத்தில் முன்பு எப்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதைக்கூட சபாநாயகராக இருப்பவர், புரட்டிப் பார்த்திருக்க வேண்டாமா?

ஒரே பிரச்சினை! இரண்டு வித தீர்ப்பு, சட்டமன்றத்தில்!

இவரும் பாண்டியன் என்ற பெயருடையவர்தான்!

அவரோ - செல்லபாண்டியன்! அவசரப்படாமல் தீர்ப்பு வழங்கிய பாண்டியன் - அரசியல் மாண்பும், ஜனநாயக உணர்வும், சட்டத்தின் வரம்பும் உணர்ந்த பாண்டியன்!

அன்புடன்

மு.க.

04-12-1986

1480. நீயிருக்கிறாய்;
உன் நெஞ்சில் நானிருக்கிறேன்;
என் நெஞ்சில் அண்ணன் இருக்கிறார் -
என்ற உறுதியுடன்தான் களம் செல்கிறேன்!

உடன்பிறப்பே,

தமிழுக்கு அமுதென்றுபேர் - அந்தத்தமிழ்
இன்பத்தமிழ் எங்கள் உயிருக்குநேர்!

என்றார் புரட்சிக் கவிஞர்!

அந்தத் தமிழ் - அன்னைத்தமிழ் காத்திடும் அறப்போரில், தமிழனை இரண்டாம் தரக் குடிமகனாக்கும் இந்தி ஆதிக்கத்தின் முற்றுகையைத் தகர்த்தெறிய நடக்கும் இனமானப் போரில், இன்றுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறைக் கோட்டங்களில்!

மேலும் பல்லாயிரவர் டிசம்பர் 9ஆம் நாள் காலை 10 மணிக்கு அறப்போர்க் களம் புகுகின்றனர்!

அவர்களில் நானும் ஒருவன்! ஏறத்தாழ ஐம்பதாண்டு காலம் பொது வாழ்வில் - ஆம்! போராட்ட வாழ்வில் - இப்போது சிறை செல்வது எத்தனையாவது தடவை என்ற கணக்கு, எனக்கே தெரியாது!

இதைவிடப் பெருந்தியாகம் புரிந்து தமிழின உரிமையைக் காத்திட வேண்டும் என்ற துடிப்புடன்தான், இந்தப் போரில் ஈடுபடுகிறேன்!

தமிழனுக்குத் தன்மான உணர்வு ஊட்டிடத் தந்தை பெரியார், தனது வாழ்க்கையையே போர்க்களமாக்கிக் கொண்டார்!

அந்தப் பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட பேரறிஞர் அண்ணா, தமிழன் யாரையும் தாழ்த்தமாட்டான் - யாருக்கும் தாழான்! என்ற நிலை உருவாக அயராது உழைத்தார்!

அணிவகுத்தார்! களம் கண்டார்! அவரது அன்புத் தம்பிகளாக நம்மையெல்லாம் கொண்டார்!

எந்த இனத்துக்காக அண்ணாவும், அய்யாவும் அல்லும், பகலும் சிந்தித்தார்களோ, செயல்பட்டார்களோ - அந்த இனத்தில் முளைத்த வீடணர்களும், சுக்ரீவர்களும் - அவர்களுக்கு எதிராக நின்றனர்! எழுதினர், பேசினர், எழுத்தா அது? பேச்சா அது? ஏசல்! ஏசல்! அதற்கென அய்யாவும், அண்ணாவும் தங்களின் பணிகளை மூட்டைகட்டி மூலையில் போட்டு விடவில்லை.

வடலூர் வள்ளலாருக்குக் கூட விரக்தி ஏற்பட்டு, கடையை விரித்தோம் கொள்வாரில்லை என்று மொழிந்ததாகக் கூறுவர்!

திருந்தாத சமுதாயத்தை - திருத்த முடியாது அல்லது இயலாது - அஃதோர் முயற்கொம்பு! நாய் வாலை நிமிர்த்திடும் வேலை! என்று விரக்தியின் உச்சத்துக்குச் சென்று விடவில்லை, பெரியாரும் அண்ணாவும்!

அந்தப் பெரியாரின் மாணவனாக - அண்ணாவின் தம்பியாக - அவர்கள் வழிநின்று அலைகடற் புயலிலும் நிலைகுலையாப் பேராசிரியரின் உடன்பிறப்பாக - என் ஊனோடும், உதிர ஓட்டத்தோடும், உயிர் மூச்சோடும் கலந்துவிட்ட கழகத்தின் இதயத்துடிப்பனைய கண்மணியாம் உன்னோடு ஒன்றி விட்டவனாக, அறுபத்தி மூன்று அகவைக்குப் பிறகும் எஞ்சியுள்ள வாழ்நாளில் கெஞ்சிப் பிழைப்பதில்லை - கெடுமதியாளர்க்கு அஞ்சி ஒடுங்குவதில்லை - என்ற சூளுரையின் கனல் என்றும் தணியாமல் களம் காணுகிறேன் டிசம்பர் 9 காலை பத்து மணிக்கு!

பூமிப்பந்தில் எங்கோ ஒரு மூலையில் வாழுகின்ற தமிழ்ச்சாதியின் குலக்கொழுந்தேயாயினும் - அங்கிருந்து எனை நோக்கி அனுப்புகின்ற வாழ்த்து கண்டு பூரிப்படைகிறேன்!

அதேபோல் நானும் - வானத்தில் மிதந்து நீந்தும் காற்றே! என் வாழ்த்துகளை சுமந்து சென்று, திசைமாறி வீசியாவது என் உடன்பிறப்புகள் எங்கிருப்பினும் அங்கு கொண்டு சேர்த்துவிடு - என வேண்டுகிறேன்!

மொழிப்போரில் நாம் மேற்கொண்ட முறையில் சிறிதளவு மாறுபாடு கொண்டோர் கூட, சட்டமன்றத்தில் ஜனநாயகப் படுகொலை நடத்திய ஆளவந்தார் போக்கினைக் கண்டிக்கத்

தவறவில்லை! அவர்தம் மனத்தெழுந்த ஜனநாயக மாண்பு கண்டு மகிழ்கிறேன்.

அரசியல் பண்பாடு அறவே அழிந்துவிடவில்லை என ஆறுதல் கொள்கிறேன்.

சபாஷ் பாண்டியா! என்று சர்வாதிகார வெறியாட்டத்துக்குப் பறைகொட்டுவோர் மீது கூட பகையுணர்வு ஏற்படவில்லை - அது அவர்தம் வாடிக்கை என்பதால்!

கோடி கொடுக்கிறேன்! சட்டத்தில் எங்காவது எப்படியாவது தேடிப்பிடித்து - இயலாவிடிலோ, புதிதாக சோடித்தாவது - கழகத்தைத் தடை செய்திட மார்க்கம் காண்பீர் என்று, இந்தக் கழகத்தால் அன்று வளர்க்கப்பட்டவர்கள் - வேல் வடித்துத் தாரீர் என மேலிடத்தார் சிலரை வேண்டி நிற்கின்றனர் எனக் கேள்வியுற்று - ஆமாம் - ஆதாரப்பூர்வமாகக் கேள்வியுற்று - அதிர்ச்சி அடையவில்லை! துரோகம் தொடர்கிறது என எண்ணிக் கொள்கிறேன்! நீயிருக்கிறாய் - உன் நெஞ்சில் நானிருக்கிறேன் - என் நெஞ்சில் அண்ணன் இருக்கிறார் -

உடன்பிறப்பே! அந்த உறுதியுடன் தான் களம் செல்கிறேன்!

வீழ்வது நாமாக இருப்பினும்,

வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

வருகிறேன்!

அன்புடன்

மு.க.

08-12-1986

1481. கல்லறைகளில் கண்ணீர் மலர்கள்!

உடன்பிறப்பே,

அறுபது நாட்கள் இடைவெளிக்குப் பிறகு எழுதுகோலை இரத்தக் கண்ணீரில் நனைத்து மீண்டும் தொடங்குகிறேன் மடல்கள் தீட்டிட!

சோவியத் நாட்டுக் கவிஞன் அலிதொகம் பாயேவ்; யாத்துள்ள கவிதையொன்று பின்வருமாறு முழக்கமிடுகிறது.

புல்தரையினூடேயும் பூஞ்சோலைகளினூடேயும் புகைவண்டியில் போகும் பொழுது நாட்டுக்காகப் போரிட்டு மடிந்த வீரர்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. பீடும் பெற்றியும் வீரமும் திறமும் உறுதியும் உளத் தூய்மையும் கொண்டோரின் நினைவுச் சின்னங்கள் அவைகள்! தங்கள் நாட்டு மக்களுக்காக அவர்கள் தங்களை இழந்தார்கள். பின்னால் வரும் தலைமுறையினர்க்காகப் பெரும் போர் விளைத்த வீரர்களுக்கு மண்மாதா தனது மடியில் புகலிடம் தந்துள்ளாள். அந்த வீரர்கள் சாவுக்காக அஞ்சிடவில்லை. இறப்பிலே கூட எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை அவர்கள் இழக்கவில்லை. நிலத்தில் புதைந்தவர்கள் என்றென்றும் நமது நினைவில் பதிந்தவரே! எனவே அவர்க்கு நன்றியும் வணக்கமும் கூறிடுவோம்!

அந்தக் கவிஞனின் உணர்வோடுதான் இக்கடிதம் எழுதுகிறேன்.

வேற்று நாட்டினர் - வேறுபட்ட கொள்கையுடையோர் - அவர்களை எதிர்த்துக் களத்தில் வீழ்ந்துபட்டோர் கல்லறைகளை சோவியத் கவிஞன் காட்டுகிறான்; பாமாலை சூட்டுகிறான்.

ஆனால் - இங்கே; தமிழகத்தில் இந்த அறுபது நாட்களில் எழுந்த கல்லறைகளில் துயில்வோர் அந்நியரை எதிர்த்து ஆவிதுறந்தோர் அல்லர்! ஆதிக்கத்தை எதிர்த்தும் - ஆதிக்கத்துக்கு

ஆலவட்டம் பிடிப்போரை எதிர்த்தும் ஆருயிரைத் தியாகவேள்வியில் அர்ப்பணித்தோராவர்! மொழிப் பிரச்சினையில் எமது கொள்கையும் அதுவே தான் எனக் கூறிக் கொள்வோர் ஆட்சியில் மூச்சற்றுப் போன முத்துக்கள் அவர்கள்! அண்ணா வழி நின்ற மொழிப் போரில் ஈடுபட்ட காரணத்துக்காக அண்ணாவின் பெயர் சொல்லிக் கட்சி நடத்துவோர்; அண்ணாவின் கொள்கைகளையெல்லாம் படிப்படியாகத் தலைமுழுகியது போதாதென்று; இறுதியாக மொழிக் கொள்கைக்கும் முழுக்குப்போட்டு விட்டனர் என்பதற்கு அடையாளமாக நடத்திக் காட்டிய அடக்கு முறை அராஜக வெறியாட்டம் கண்டு சகிக்காது அண்ணா! அண்ணா! உன் பெயரையும் உருவத்தையும் திரையாகப் பயன்படுத்திக் கொண்டே தமிழ்க் குலம் அழிக்கத் தருக்கர்கள் நடத்தும் தர்பாரைப் பாரண்ணா! எனக் கதறியழுதவாறு கல்லறையாக மாறியவர்கள்!

ஐம்பது ஆண்டு கால இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் தாளமுத்து - நடராசன் எனக் களச் சாவு தொடங்கி - மீண்டும் சிங்கத் தமிழன் சின்னசாமி எனத் தொடர்ந்து தியாக வீரர்களின் பட்டியல் நீண்டது மட்டுமல்ல - இதோ அந்த மான மறவர்களின் வரிசையில்

கோவை பாலசுப்பிரமணியன்
போடி முருகன்
அல்லூர் முத்து
அரியலூர் புகழேந்தி
உளுந்தூர்பேட்டை பன்னீர்செல்வம்
மேலூர் ஜெகஜீவன்ராம்
என அறுவர் தீக்குளித்தும்;
நீடாமங்கலம் கோவிந்தராசன்
குளித்தலை சீனுவாசன்
என இருவர் நஞ்சருந்தியும்
சென்னை ஆறுமுகம்
காவல் துறையினர் தடியடிப் பிரயோகத்தாலும்;
கூடுவாஞ்சேரி சுப்பிரமணியம்
காட்டுமன்னார் கோயில் கலியபெருமாள்
சேலம் அருணாசலம்
மருதூர் மூக்கன்

கலைஞர் பித்தன்
ஆகியோர் சிறைக்கோட்டடங்களிலும்;
அருப்புக்கோட்டை மாரியப்பன்
சத்திரப்பட்டி வேதமாணிக்கம்

கடுங்காவல், கைதி உடை எனக்கேட்ட அதிர்ச்சியிலும் மாண்டு மறைந்து கல்லறைகளாக எழுந்து கம்பீரமாக நிற்கின்றனர்.

தீக்குளிப்பது, நஞ்சருந்துவது போன்ற செயல்கள் ஏற்கமுடியாதவை - பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை எனப் பலமுறை எடுத்துச் சொல்லியும்கூட தமிழ்மொழியெனும் குலக்கொடி பட்டுப்போகாமல் பாதுகாக்கப்பட, இதையாவது நான் செய்கிறேன் என்ற எண்ணமுடனன்றோ அந்த தமிழ் விளக்குகள் தங்களைத் தாங்களே அணைத்துக் கொண்டு நம்மைச் சோக இருட்சூழலில் தள்ளி விட்டிருக்கின்றன.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை; எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை எனப் போர்ப்பாட்டுப் பாடி சிறைபுகுந்த சிங்கஏறுகள் - பிணங்களாகவே பெற்றோர் உற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்ற செய்தி நமது செவியில் மாட்டிய செந்தேள்கள் ஆயிரத்துக்கு ஒப்பானதன்றோ?

உடன்பிறப்பே; சிறையில் ஏற்படும் தொல்லைகளை சகித்துக்கொள்ளும் உள்ள உணர்வுடன் சென்றோம் எனினும்; அடுக்கடுக்காக இத்தகைய துயரச் செய்திகளால் நான் எப்படித் துவண்டு போயிருப்பேன் என்பதை என்னை அறிந்த நீ உணர்ந்து கொள்ளாமலா இருப்பாய்!

கடுங்காவல் எனக்கேட்டுக் கலங்கவில்லை; நாடாள்வோரை நினைத்துச் சிரித்துக் கொண்டேன்! கைதி உடை அணியும் போதும் தயக்கம் காட்டவில்லை; நண்பரின் குரூரமனத்தின் எல்லை எது வரையிலோ? என என்னை நானே கேட்டுக்கொண்டு; எதையும் தாங்கும் இதயம் இதையும் தாங்குமென நிமிர்ந்தே நின்றேன்!

என் தலை குனிந்தது எதற்காக என்றால்; தமிழ் நாட்டில் - தமிழ் மொழியை, தமிழர் உரிமைகளை காத்திட நடத்தும் அறப்போருக்கு எதிராகத் தமிழர்கள் சிலரே; அதுவும் அண்ணாவின் அருகில் இருந்து அவர் உள்ளத்தை முழுமையாகப் புரிந்து கொண்டவர்களே; கேவலம் பதவியெனும் அற்பப்பெருமைக்காக ஆசைப்பட்டுத் தன்மானத்தையும், தமிழ் உணர்வையும்,

இனப்பெருமையையும் இழக்கும் நிலைக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டனரே என்பதை நினைத்துத்தான் என் தலை குனிந்தது!

அந்த இழிவை எண்ணி குனிந்த என் தலை; கல்லறைகளாக மாறிய வீரத்தமிழர்களுக்காகத் தாழ்ந்தது எனினும் - இவர்களை உடன்பிறப்புக்களாக பெற்றுள்ளோமே என்ற நினைவில் மீண்டும் நிமிர்ந்தது!

வீடணனை எண்ணித் தாழ்ந்த தலை; கும்பகர்ணன் அருகில்தானிருக்கிறான் என்ற மகிழ்ச்சியில் நிமிர்ந்திருக்கு மல்லவா; அதைப்போல!

அந்தப் பெருமித உணர்வோடு - ஆனால் சோகத்தால் கனத்துப்போயிருக்கும் இருதயத்தின் துடிப்புக்களோடு -

இந்தப் போர்முனையில்

உயிர்நீத்த

உண்மைத் தமிழர்களுக்கு;

அவர் தம் கல்லறையில்

கண்ணீர் மலர்களைத் தூவுகிறேன்!

அன்புடன்

மு.க.

10-02-1987

1482. அழைப்பு ஏற்றிடுக!
அணிவகுத்திட ஆவன செய்திடுக!

உடன்பிறப்பே,

அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி என்று தொடர்ச்சியாக நான்கு மாதங்களும் - பிப்ரவரியில் இன்னமுங்கூட இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப் போராட்டத்தில் கழகக் கண்மணியாம் நீ ஈடுபட்டு அந்தக் களைப்பு தீராத நிலையில் மற்றோர் களம் காண உன்னை நான் அழைக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மொழிப்போருக்கு முன்கூட்டி செயற்குழுவென்றும் பொதுக்குழுவென்றும் தலைமையின் அழைப்பையேற்று ஓடோடிவந்தாய். அடுத்து செயற்குழு பொதுக்குழுவில் எடுத்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போருக்கான ஆயத்தங்களில் ஆங்காங்கு அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளவும் அறப்போர் வீரர்கள் பட்டியல் தயாரிக்கவும் அலையாய் அலைந்தாய்.

கோவையில் நடைபெற்ற மாநாட்டுக்குள் பதினைந்தாயிரம் மொழிப்போர் வீரர் கொண்ட பட்டியலையும் அவர்கள் எந்த நாளில், எந்த இடத்தில், யாரார் தலைமையில் அறப்போரில் கலந்து கொள்கிறார்கள் என்ற விபரங்களையும் தந்தாக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். அது குறித்த விபர அறிக்கைகளைப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் அவர்களும் வெளியிட்டதற்கேற்ப கோவை மாநாட்டில் தெளிவான விபரங்களைக் கொண்டு வந்து குவித்தாய்.

பதினைந்தாயிரம் பேர் மொழிப் போரில் - இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்ற வாசகத்தைக் கொளுத்திட - முன் வந்துள்ளனர் என்று கோவை மாநாட்டில் நான் அறிவித்த போது பல லட்சக்கணக்கில் குழுமியிருந்த மக்களிடையே எழுந்த உணர்ச்சிப் பிரவாகத்தை இப்போது நினைத்துப் பார்த்தாலும் மெய்சிலிர்க்கிறது.

பட்டியல் பதினைந்தாயிரம் பேர் என இருந்தும் கூட இருபதாயிரம் பேர் சிறை புகுந்தனர் களம் கண்டு! இஃதன்னியில் முன் எச்சரிக்கையாகக் கைது என்றும், பொய் வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டும் சிறைகள் நிரம்பி வழிகிற அளவுக்கு மேலும் பத்தாயிரம் பேரை இந்த அரசின் காவல் துறையினர் கைது செய்து அடைத்து வைத்தனர்.

அவர்களுக்காக வாதாடவும், வழக்குகள் நடத்தவும் கழக வழக்கறிஞர்கள் பம்பரமெனச் சுழன்று பணியாற்றியதை ஏடுகளில் கண்டும் - பார்க்க வருவோர் சொல்லக் கேட்டும் சிறைச்சாலையில் பூரிப்புக் கொண்டேன்.

இந்தி ஆதிக்கத்தால் எதிர்காலத்தில் தமிழகத்தின் கலாச்சாரமே அறைகூவலுக்கு உள்ளாகும் என்பதையும் - தமிழ்நாட்டு மக்கள் இரண்டாந்தர குடிமக்களாக ஆகிவிடுவர் - உரிமை இழப்பர் - என்ற கொடுமைகளையும் குக்கிராமம் தொட்டு நகர்ப் புறங்கள் வரையிலே விளக்கிட நடைப் பயணங்களை மேற்கொண்டு நீ சிட்டாகப் பறந்த செய்தியினை சிறைச் சாலைக்குள்ளிருந்து கேட்டபோது என் சிந்தையெலாம் நீ உன் ஓயாஉழைப்பால் கொள்ளைகொண்டாய்!

கழகத்தைக் களங்கப்படுத்தும் நினைவுடன் - இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் திசை திருப்பும் நோக்குடன்; வன்முறைச் செயல்களில் உன்னைத் தொடர்பு படுத்தி - உன் வாயால் பொய்யான வாக்கு மூலங்களைத் திட்டமிட்டு ஜோடித்து வாங்குவதற்காக போலீஸ் கூடாரங்களில் உன் மீது சித்ரவதைத் தாக்குதல்களை நடத்தினர் என்கிற தகவல்கள் வந்த போது - துடித்துப் போனேன்!

துன்பங்கள் துணையோடு வரும் என்பதற்கேற்ப தீக்குளித்தனர் கழக உடன் பிறப்புகள் என்ற செய்தியும், சிறையில் மாண்டனர் தமிழ்ச் சிங்க ஏறுகள் என்ற செய்தியும், நஞ்சருந்தியும் அதிர்ச்சியுற்றும் மாண்டனர் அன்புக் கண்மணிகள் என்ற செய்தியும் என்னைத் துவள வைத்தன!

வேதனைத் தீயில் வாடிக் கிடந்த குடும்பங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்லவும் - ஆற்றவேண்டிய கடன்களை ஆற்றிடவும் நீ ஓடி ஓடி உழைத்தாய் என்ற செய்திகளைத் தாங்கிய ஏடுகளைக் கண்டு சற்றே மனத்தைத் தேற்றிக் கொண்டேன் எனினும்; வளர்த்து

வைக்கப்பட்டுள்ள குடும்ப பாச உணர்வு - பெரியார் அண்ணா காலத்திருந்து தொடங்கியதாயிற்றே; அதனால் காராக்கிருகத்தில் கண்கள் குளமாக நின்றிருந்தேன்!

இந்த நான்கைந்து மாத காலத்தில் உன் கால்கள் எத்தனை எத்தனை நீதிமன்றங்களின் படிகளில் ஏறி இறங்கியிருக்கின்றன! எத்தனை எத்தனை சிறைச்சாலைகளுக்குச் சென்று அடைபட்டிருந்தோரைக் கண்டு வந்திருக்கிறாய்!

நானும் பேராசிரியரும் இருந்த சென்னைச் சிறையிலேயே இரண்டாயிரம் பேர் மொழிப்போர் வீரர்கள்; சென்னை மாவட்டம் - செங்கை அண்ணா மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்!

அவர்களில் பலர் உள்ளேயிருக்கும்போது - வெளியில் தாயார் இறந்துவிட்டார் எனத் தந்தி வரும்! தந்தை இறந்துவிட்டார் எனத் தகவல் வரும்! அருமைத்துணைவி மரணமடைந்தார் என ஆள்வரும்! குழந்தையிறந்தது என்ற செய்தி கிடைக்கும்!

அப்போதும் ஜாமீனில் வெளியே போக மறுத்து உறுதியோடு சிறைக் கோட்டத்துக்குள்ளிருந்த தியாகச் செம்மல்களை நேரிலேயே கண்டோம் நாங்கள்! திருத்திக்கொள்க; தரிசித்தோம் நாங்கள்! ஆம்; அவர்கள் தரிசிப்பதற்குரியவர்கள்தான்! சென்னையில் மட்டுமல்ல; எல்லாச் சிறைகளிலுமே இது போன்ற சம்பவங்கள்! உறுதிகொண்ட உடன்பிறப்புகள்!

செந்தமிழ்க்கொரு தீமை வந்த பின்னும்
இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளையே கேள்விகளாகக் கேட்டுக் கொண்டிருக்கும் வீரர்கள், வீராங்கனைகள்; தமது குடும்பத்தார், உற்றார், உறவினர், பெண்டு பிள்ளைகள், பெற்றோர் இழப்புக்காக; கொண்ட கொள்கையில் இருந்து கலந்து கொண்ட களத்திலிருந்து பின்வாங்கிச் சென்றிடுவரோ?

போராட்டப் புயல் மழை முதற்கட்டமாக இப்போது ஓய்ந்துள்ள போதிலும்; தூறல் நிற்கவில்லை! அதற்கு எடுத்துக்காட்டே எம்.ஜி.ஆர். அரசின் போலீசார் புனைந்துள்ள வழக்குகள்! ஆடுகிற வெறியாட்டங்கள்! நாம்; ஐம்பதாண்டுக் காலமாக நடத்தி வருகிற மொழிப் போருக்கு முற்றுப் புள்ளி

வைக்கப் படவில்லை! தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக அமையவேண்டும் - அந்நிலை எய்தும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் - அதற்கு உறுதிமொழிகள் எனும் நீர் மேல் குமிழ்கள் போதாது; அரசியல் சட்டத்திருத்த மெனும் கல்மேல் எழுத்து வேண்டுமென்ற நமது கழகத்தின் மொழிக் கோரிக்கை நிறைவேறும் வரையில் நமது போராட்டம் ஓயப்போவதில்லை!

மொழிப் பிரச்சினை மட்டுமின்றி; தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுப் பிரச்சினை - அவர்களுக்கு நல்ல ஆட்சி, நல்ல நிர்வாகம், இவற்றையளிக்கும் பிரச்சினைகள் இருக்கவே இருக்கின்றன! அதற்குரிய தேவையான களங்களையும் தமிழக மக்களின் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் புறக்கணிப்பதற்கில்லை!

மொழிப்போருக்கிடையே - மிக அவசரமும் அவசியமுமான பெருங்கடமையொன்று நமக்கிருக்கிறது!

1958-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே நமது கழகம் அந்தக் கடமையைச் செய்து வருகிறது! இலங்கையில் தமிழ் இனத்துக்கு கொடுமை விளைவிக்கப்படும் பொழுதெல்லாம் தமிழ்நாட்டு மக்களின் குமுறலைக் கேடயமாக்கி - இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திடக் குரல் கொடுத்த சிறப்பான வரலாறு கழகத்திற்கு உண்டு!

உன்னை உடன்பிறப்பாகப் பெற்ற என்னைப் பொறுத்தவரையில் - ஐம்பதாண்டுகால மொழிப் போராட்ட வரலாற்றுடனும்; முப்பதாண்டுகால இலங்கைத் தமிழ் இனப்பாதுகாப்புப் போராட்ட வரலாற்றுடனும் இணைந்துள்ள பொதுவாழ்க்கை வரலாறு என்னுடையதாகும்!

இந்த இரண்டு வரலாற்றிலும் பெரியார் - அண்ணா இருவரின் தலைமைகளையேற்றும்; பிறகு எனது தலைமையிலும் நமது இயக்கம் கண்ட களங்களில் எத்தனைமுறை கைது செய்யப்பட்டேன்; சிறை சென்றேன் என்ற கணக்கை; ஆய்வு செய்துதான் எடுத்திட வேண்டும்!

நான் மட்டுமல்ல; என்னைப் போலவே நமது பேராசிரியர் - மற்றும் கழக முன்னணித் தலைவர்கள் - எமக்கும் மூத்த தலைவர்கள் இன்றும் நம்முடன் இருந்து சோதனைகளை வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சிறைக்கோட்டங்களை

நமது கொள்கை வளர்க்கும் தவக்கோட்டங்களாகவே ஆக்கிக் கொண்டுள்ளனர் என்ற பெருமைக்குரிய கழகம் தான் இது!

இந்தப் பெருமைக்கும் சிறப்புக்கும் உன் போன்ற தியாக மாமணிகள் பங்கு கொஞ்சமல்ல அறிவேன் நான்! நானறிவேன் என்பதை நீ உணர்ந்துள்ள காரணத்தால்தான் நம்மிடையே உள்ள பாசப் பிணைப்பை அறுத்திட மாற்றாரால் இயலவில்லை! இயலவே இயலாது!

இனப்பற்று - மொழிப்பற்று - நாட்டுப் பற்றுக்கு முரணானவை அல்ல! இந்த இருபற்றும் கொண்டிருக்கும் நாம்; நாட்டுப் பற்றில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதைச் சரித்திரம் கூறிக் கொண்டிருக்கிறது!

மொழிப்பற்று காரணமாக நடத்திய அறப்போரின் முதற்கட்டமே முடிந்துள்ள நிலையில்; இனப்பற்று காரணமாக இலங்கைத் தமிழனுக்காகக் கொடுத்துவரும் குரலை; மீண்டும் உயர்த்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1983-ல் இலங்கையில் இனப்படுகொலை என்றதும் கழகம் களம் கண்டது! பல்லாயிரம் பேர் சிறைப்பட்டோம்! எத்தனையோ போராட்டங்கள்! பேரணிகள்! நானும் சிறைப்பட்டேன்! அந்தப் போரின் உச்சகட்டமாக பதினாறு கழக உடன்பிறப்புகள் தீக்குளித்து ஒரு பெண்மணி உட்பட பத்துப்பேர் மாண்டு மடிந்தனர்! பிழைத்தோர் தீக்காயங்களுடன் உலவிக் கொண்டிருக்கின்றனர்; இலங்கைத் தமிழினத்துக்கான போரின் அடையாளச் சின்னங்களாக!

மத்திய மாநில அரசுகளின் மெத்தனத்தைக் கண்டு பேராசிரியரும் நானும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தோம்.

இப்போது இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தமைக்காக - அண்ணா வழி நின்று அறப்போர் நடத்தியதற்காக; பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைச் சட்டவிரோதமாகப் பறித்துள்ளனர்.

இலங்கைத் தமிழ் இனம் காத்திட எனது தலைமையில் டெசோ அமைப்பு உருவாயிற்று! தி.மு.கழகம், திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக்

ஆகிய இயக்கங்கள் கொண்ட அந்த அமைப்பின் சார்பில் தமிழகம் முழுதும் உருவாக்கிய எழுச்சியும் அதற்குச் சிகரம் வைத்தாற்போல் இந்தியாவின் தலைவர்கள் பலரை அழைத்து மதுரையில் நடத்திய மாநாடும் - இலங்கைத் தமிழரைக் காத்திட எடுக்கப்பட்ட ஈடு இணையற்ற முயற்சிகள்!

இடையில் சிறு தொய்வு! காரணம் உனக்குத் தெரியும்! விளக்கத் தேவையில்லை!

இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரையில் இன்று நம்முன் நிற்பது இன அழிவை எப்படியும் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்பது தான்!

மரத்திலிருக்கும் கழுகை வீழ்த்துவதுதான் குறிக்கோள் என்கிற போது; கணை தொடுப்பவன் கண்களுக்கு மரம் தெரியக் கூடாது; கிளை தெரியக் கூடாது; இலைதழை தெரியக் கூடாது; அம்பின் முனையும் - கழுகின் கழுத்தும்தான் தெரிய வேண்டுமென்று அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவாரே அதுபோல் - இலங்கைத் தமிழ் இனம்காக்கும் போரில் இடையிலேற்பட்ட பிரச்சினைகளால் உன்போன்றோர் மனச்சங்கட முற்றிருந்தாலும்; அவற்றை மறந்து விட்டு - அதோ; அல்ல - அல்ல - இதோ நமக்கு மிக அருகேயுள்ள தீவில் திகைத்துத் துடித்துத் தினந்தோறும் சிங்களக் கழுகுகளின் தாக்குதலால் அழியும் நமது இனங்காக்கும் கடமையுணர்வைத் தட்டிக் கழித்து விடமுடியாதல்லவா?

திராவிடக் கழகமும், காமராஜ் காங்கிரசும் தூத்துக்குடியில் வரும் இருபதாம் தேதி தளபதி வீரமணி, மாவீரன் நெடுமாறன் ஆகிய இருவரின் தலைமையில் மறியல் நடத்துவதாக அறிவித்துள்ளன!

நாம் வரும் 15-ஆம் நாளும், 16-ஆம் நாளும் தமிழகமெங்கணும் கழகப் பேரணிகளை நடத்துகிறோம்!

இரண்டு களங்களும் ஒரே குறிக்கோளுக்காகத்தான்!

இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திடும் குறிக்கோளுக் காகத்தான்!

அதற்கெனமத்திய அரசு உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்!

நாம் சென்னையிலும் மற்ற ஊர்களிலும் நடத்த இருக்கும் பேரணி சென்னையில் 10.2.87 அன்று கூடிய கழக நிர்வாகக்குழுவில் இலங்கைப் பிரச்சினை குறித்து நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் என்பதை நமது பேராசிரியர் விடுத்துள்ள அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்!

ஒரு குக்கிராமம்; அங்கு ஐம்பதுபேர்தான் பேரணிக்குத் திரளுவார்கள் என்றாலும்; அங்கேயும் 15 அல்லது 16-ஆம் தேதி பேரணி நடைபெற்றாக வேண்டும்! பேரணி முடிவில் தலைமை நிர்வாகக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தைப் படித்து மக்களுக்கு விளக்கம் கூறவேண்டும்.

உனக்கு நான் இந்த மடல் தீட்டிக் கொண்டிருக்கும்பொழுது; இலங்கையில் சிங்கள ராணுவம்; எத்தனை தமிழர்களின்மீது குண்டுகளைப் பொழிந்து அவர்தம் உயிர் பறித்திருக்குமோ தெரியாது!

மொழிப்போர் களைப்பு இன்னும் தீர்ந்திருக்காது; தெரியும் எனக்கு! இருந்தாலும் இனஅழிவைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதே!

காய்ச்சலில் படுத்திருக்கும் தாய்; கால் கை சோர்ந்துள்ள நிலையிலும் – தனது குழந்தையை விழுங்க வரும் மலைப்பாம்பை எதிர்த்திடப் பாயும் பொழுது; களைப்பு சோர்வு; ஏன் காய்ச்சல்கூட கணத்தில் பறந்து போய்விடுமல்லவா?

எனவே உடன்பிறப்பே; இலங்கைத் தமிழ்இனம் காக்க நமது பேரணிகள் எழுச்சியுடன் நடைபெற; ஆவன செய்திடுக! இந்த அழைப்பை ஏற்றிடுக!

அன்புடன்

மு.க.

13-02-1987

1483. நாடு முழுதும் நடக்கட்டும் பேரணிகள்!

உடன்பிறப்பே,

தமிழனைக் கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டு தமிழினத்தை அழிக்கும் வேலை; இலங்கையிலும் நடைபெறுகிறதாம்;

தமிழ் மக்களில் சிலரைக் கைப்பற்றியோ - அல்லது பணிய வைத்தோ - அல்லது துரோகப் பதுமைகளாக மாற்றியோ - அவர்களை முன்னே விடுத்து; சிங்கள ராணுவம் பின்னே அணிவகுத்துத் தாக்குதலை நடத்துவதால் போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்திடத் தயக்கம் காட்டும் நிலையேற்பட்டுள்ளதாக இரண்டு நாட்களாக இலங்கையிலிருந்து செய்திகள் வருகின்றன. ஏடுகளில் படிக்கிறோம்! துடிக்கிறோம்!

ஒவ்வொரு நாளும் நூறு தமிழர்கள் பலி! ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு தீவைக்கப்பட்டு சாம்பலாயின!

விமானங்கள் குண்டுகளைப் பொழிகின்றன! குண்டுவீச்சு; பீரங்கித் தாக்குதல் இவற்றால் அழியும் தமிழர்களே மட்டுமல்லாமல் - சிங்களப் படையினரின் வாள்வீச்சுக்கும் கத்திக் குத்துக்கும் பலியாகும் நமது தமிழின மக்கள் எண்ணற்றோர்!

கொல்லப்பட்ட தமிழ் மக்களின் பிணங்களை அக்கினித் திராவகம், டயர் போன்றவைகளைப் பயன்படுத்தி அந்தந்த இடங்களிலேயே எரித்துக் களிக்கின்றனர் ஜெயவர்த்தனாவின் சிங்களச் சேனையினர்!

அய்யோ; தமிழினம் பூண்டற்றுப்போய் - அது வாழ்ந்த இடம் புல் முளைத்த பூமியாக இலங்கைத் தீவில் மாறி விடும் நேரம் மிக அருகாமையில் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமையான நிலையிலும்; இந்தியப் பேரரசு இலங்கை அரசுக்குக் கோரிக்கை வைக்கும் செயலிலேயே தன்னை ஈடுபடுத்திக்

கொண்டிருக்கிறதே என எண்ணும் போது நமது மனம் பதறாமல் இருக்குமா?

அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தும் கொடுமையை நிறுத்த வேண்டும். இராணுவ நடவடிக்கையைக் கைவிட வேண்டும். யாழ்ப்பாணம் மீதான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும்.

இந்த வாசக அமைப்போடு இந்திய அரசின் கடிதம் இலங்கைக்குச் சென்றால் ஏதோ தயவு நாடுவோர் அனுப்பிய தபாலாகத் தானே அதனைச் சிங்கள அரசு கருதும்.

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த மத்தியஸ்தர் எனும் பொறுப்பை இந்திய அரசு வகிக்கப் போகிறது? இந்தியாவுக்கு வந்து குவிந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்காகவும் - இலங்கையில் நாசமாகிக் கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்காகவும் - அவர்கள் பக்கம் நிற்கும் நிலையெடுத்துச் செயல்பட இந்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன்?

அழிவது தமிழ் இனம் என்பதால்தானா? இந்தக் கேள்வி; கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுத் தமிழ்நாட்டில் இன்றைக்கு எழுந்துள்ளது!

பேச்சு வார்த்தையில் தீர்வு காணப்போவதாகச் சொன்னது மத்திய அரசு! எச்சரித்தோம்; அந்த இடைக் காலத்தை இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளுமென்று! எனினும்; குறுக்கே நிற்க விரும்பவில்லை - போராளிக் குழுக்களின் தலைவர்களைப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு கூறினோமே தவிர அதனைத் தடுத்திடும் சொல் ஒன்றும் சொன்னது இல்லை!

பேச்சு வார்த்தையின் ஒவ்வொரு கட்ட முடிவிலும்; போராளிகளின் குழுக்கள் இங்குள்ள மாநில அரசின் நெருக்கடிகளை, நிர்ப்பந்தங்களைத் தாங்கிட வேண்டியிருந்தது.

போராளிக் குழுக்களின் ஆலோசகர்களை நாடு கடத்தி விட்டால் நாம் சொன்னதை மற்றவர் கேட்டிடுவர் என நாடு கடத்தும் படலத்துக்கும் மாநில அரசு தனது அரிய யோசனையை வழங்கியது. அதனை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு செயல்பட்டது.

நாடு கடத்தப்பட்ட அடுத்த நாளே தமிழகம் போர்க்கோலம் பூண்டது! குமுறல்! கொந்தளிப்பு! அதனைத் தாங்கமுடியாத

நிலையில் நாடு கடத்தப்பட்டோர் மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர்!

அடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் - அதில் இலங்கை அரசின் சாகசத்துக்கு அடிபணிய மறுத்தனர் போராளிகள்!

தொடர்ந்து மிகத்திறமையாக சூழ்ச்சிவலை பின்னப்பட்டது! போராளிகளின் இயக்கங்களுக்கிடையே புகைச்சல் உருவாக்கப்பட்டது! போராளிகள் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ள உசுப்பி விடப்பட்டனர்!

விளைந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்திக் கொண்டு போராளிகள்மீது மாநில அரசு திடீர்த் தாக்குதல்! கைது! ஆயுதங்களைக் கைப்பற்றல்! அவர்களைக் கிரிமினல் கைதிகளைப்போல நடத்திய கொடுமை!

அதனைத்தொடர்ந்து பெங்களூருக்கு அழைத்து நீட்டிய இடத்தில் கையெழுத்து போடு என வலியுறுத்தல்! மறுத்த காரணத்தால்; அப்படியானால் உன் நாட்டுக்கே போய் விடு என உறுமல்! உத்திரவுக் குரல்!

இத்தனைக்கும் பிறகு; இலங்கை அரசுக்குத் துணிவு பிறக்காமல் இருக்குமா?

அந்தத் துணிவுக்குத் துரோகங்களின் துணையும் கிடைப்பதாக அறியும் போது; நெஞ்சே பிளந்து விடும் போலிருக்கிறது!

பட்டியல் போடுகின்றன பத்திரிகைகள்; நேற்று ஒரு நாள் மட்டும் பரந்தன், கங்காபுரம், ஜெயந்தி நகர், குமாரபுரம், உருத்திரபுரம் ஆகிய ஊர்கள் தரைமட்டமாகிப் பாலைவனம் போல் காட்சி தருகின்றனவாம்! கிளிநொச்சி என்ற இடத்தில் மட்டும் குண்டு வீச்சினால் நூற்றுஐம்பது தமிழர் கொல்லப்பட்டுள்ளனர்!

இனியும் இந்தியப் பேரரசு என்ன செய்யப் போகிறது?

தமிழ்நாட்டுக்குத் தமிழன் எவனுக்கும் உணர்ச்சியில்லை; நீங்கள் மொழியைத் திணித்தாலும் - அருகே ஒரு தீவில் தமிழினம் அழிவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலும் - இவனுக்கு உணர்ச்சி வராது! அப்படியே உணர்ச்சி வந்தாலும்; அதனைத் திசை திருப்ப எங்களுக்குத் தெரியும் - எனவே கவலையற்று இருந்திடுக!

என்று இங்குள்ள மாநில அரசு தரும் தவறான தகவலை நம்பி; இலங்கைத் தமிழ் இனத்தை அழியவிடப் போகிறதா?

இந்த வேதனை கலந்த வினாவை எழுப்பத்தான் இன்று 15-ந் தேதியும் அல்லது 16ந் தேதியும் தமிழக முழுவதும் கழகத்தின் பேரணிகள் நடைபெறுகின்றன!

சுயமரியாதை ரத்தத்தின் சூடுதணியாத தன்மானத் தமிழர்கள் நாம் என்பதையும் - சொந்த இனம் இலங்கையில் மாளும்போது இங்கே வெந்ததை தின்றுவிட்டு வெறுமனே கிடக்கும் சோற்றாலடித்த பிண்டங்களல்லர் நாம் என்பதையும் - எடுத்துரைக்க;

என்ன நடவடிக்கை எடுக்கப்

போகிறாய் இந்திய அரசே!

என உரிமையுடன் கேட்க - உரத்த குரலில் கேட்க - இலங்கையில் உயிருக்குப் போராடும் நமது உடன் பிறப்புக்களின் சார்பாகக் கேட்க -

நாடு முழுதும்
நடக்கட்டும் பேரணிகள்!

அன்புடன்

மு.க.

15-02-1987

1484. தமிழ்த்தாயின் போர்க்கோலம்!

உடன்பிறப்பே,

தாயின் அன்பு - பாசம் - இவை குறித்து நான் எழுதும்போதும், பேசும்போதும், பள்ளிப் பருவத்தில் படித்த கவிதையொன்றை அடிக்கடி நினைவூட்டியிருக்கிறேன்.

இப்போதும் அது பொருத்தமாக இருக்குமென்பதால் - எத்தனை முறை எடுத்துரைத்தாலும் தாய்ப் பாசம் அத்தனை முறையும் இதயத்துக்குச் சுகமளிக்கும் ஒன்று என்பதால் மீண்டும் இம்மடலில் அதனைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

வீரமகனைப் பெற்ற ஒரு அன்னை! அவனைப் பெற்றமைக்காகவே பெருமை கொண்டவள்! மாளிகையில் வாழ்ந்தவளல்ல! வெள்ளியால் தொட்டிலும், தங்கத்தால் பாலாடையும் செய்து மகனை வளர்க்கும் நிதிவளம் நிறைந்தவளல்ல! தாய்ப்பாலைவிட வலிவுள்ள உணவு வேறெது என்ற நம்பிக்கையுடன் ஏழைக்குடிசையிலே ஏணைகட்டி எழிலார் வீரமழலையை அந்தத் தாய் வளர்த்தாள்! சீராட்டினாள்! பாராட்டினாள்! திண்தோள் வீரனாக - அஞ்சா நெஞ்ச அடலேறாக அவனும் வளர்ந்தான்! ஏழைத் தாய் அவன் வாளனைய மீசை கண்டு வாஞ்சையோடு தழுவிக் கொள்வாள்! குன்றம்போல் தோளுடையான் நான் பெற்ற குமரன் எனக் குதூகலிப்பாள்! பகைவரைச் சாடும் வைரநெஞ்சுடையான் என்பாலருந்தி இதோ வேலேந்திக் களம் புகும் புதல்வன் எனப் பூரிப்பாள்!

அந்த இனிய சூழலில் தான்; வீரனின் அகன்ற மார்பின் மீதும் - மலைத்தோளின் மீதும் - கம்பீரத் தோற்றத்தின் மீதும் - அந்த நகரையாண்ட அரசின் விழிகள் பாய்ந்தன! சேனைக்குத் தலைவனாக்கினாள் அவனை! சில நாட்களில் கொஞ்சிட வருக எனச் சாடை காட்டினாள்! பழமே குலுங்கி வந்து வாயில் உரசும் போது; பருவக்காளை தானே - அதனால் அவன் தன்னையிழந்தான்!

வெறிகொண்ட அரசிக்கு வீணான ஓர் ஆசை! விஷநெஞ்சில் எழுந்த ஆசை! அதனை வெளியிட்டாள் அவனிடம்! அதுகேட்டு அதிர்ந்து போனான் முதலில்! என்ன ஆசை அது?

அன்பனே! இன்பமே! பாரி ஜாத மலர்கொண்டு வா எனப் பரந்தாமனிடம் பாமா கேட்டாள் - பவளக் கொடியினை அறுத்து வா எனப் பார்த்திபனிடம் ஒரு பாவை கேட்டாள் - இப்படிப் படித்திருக்கிறேன் பழைய கதைகள்! நான் அப்படியொன்றும் ஆகாத காரியத்தை உம்மிடம் கேட்கப் போவதில்லை! எளிதில் கிடைக்கக் கூடிய ஒன்றுண்டு! அதுதான் உமது தாயின் இருதயம்! எதிரிகளின் குலையறுத்த இந்த வாளால் உமது தாயின் உடலறுத்து - உடனே எடுத்து வருக அந்த இருதயத்தை! அதனை நான் வறுத்துச் சுவைத்துத் தின்ன வேண்டும் என்றாள்!

பதைத்தான்; திகைத்தான் வீரன்! பாதகியோ விடுவதா யில்லை! அவள் அரசி; அவனோ சேனாதிபதி இப்போது! எனவே ஆசை; ஆணையாயிற்றே! ஆகட்டும் எனக் கூறிப் புறப்பட்டான்!

பத்து மாதம் சுமந்து - பாலூட்டி - சீராட்டி பாசத்தைக் கொட்டி வளர்த்த தாயின் மீது வாளைப் பாய்ச்சினான்! நெஞ்சைப் பிளந்தான்! என்ன மகனே? என்று கேட்பதற்குள் அந்த ஏழை அன்னை வீழ்ந்து விட்டாள்! இருதயத்தைப் பெயர்த்துக் கையில் ஏந்திக் கொண்டு - ஏழடுக்கு மாளிகையில் இருக்கும் ஏந்திழையாளுக்குக் காணிக்கையாக்கிடத் துள்ளிக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

சிறிய குடிசைதானே! அதனால் வாசல் நிலைப்படியில் கால் தடுக்கியது! கீழே விழுந்தான்! கையிலிருந்த தாயின் இருதயம் தொலைவில் போய் மண்ணில் விழுந்தது!

விழுந்த வேகத்தில் அம்மாடியோவ் என்று அலறினான்! மண்ணில் கிடந்த மாதாவின் இருதயம் அவனைப் பார்த்துக் கேட்டது; மகனே காலில் காயம் பட்டுவிட்டதா கண்ணே? என்று!

உடன்பிறப்பே; அறுபட்ட இதயம்கூட; அன்பு மகன் - கீழே விழுந்ததைப் பார்த்து அலறிவிட்டது - அறுத்தவன் மகன் என்பதால்; இதயம், அன்னைக்குரியது என்பதால்!

அவனும் கூட இடறி விழுந்த போது; அம்மாடியோவ் என்று தான் கத்தினான்!

தாய்ப்பாசத்துக்கு இப்படியொரு கற்பனைக் கதை மூலம் விளக்கம்! படித்துப்பல ஆண்டாகிறது; நினைவில் இருந்ததால் எனது நடையில் எழுதினேன்!

தாயின் பாசத்துக்கு ஈடு இணையில்லை என்பதற்கு இந்தக் கதை! தாயின் உள்ளம் அன்பு நீரோடை! வாஞ்சை பொழியும் வற்றாத அருவி!

இனிய உடன்பிறப்பே; இமைகளை மெல்ல மூடிக் கொண்டு எண்ணத்தை விரிவாக்கு! தாயின் இடத்தில் தாய்த் தமிழ்நாட்டு மக்களாகிய நாம்!

அன்பு காட்டும் சேயாக - அருகாமையில் ஈழத் தமிழினத்தார்!

இதயத்தைக் குத்தி எடுத்த மகனுக்கே - கீழே விழுந்ததில் காயம்பட்டதோ எனக் கலங்கியது தாயின் இதயம் என்றால்;

அந்த இதயத்தின் பாசத்தை உணர்ந்த இலங்கைத் தமிழ் இனச் சேய்களுக்கு - இந்தத் தாய்த் தமிழகம் காட்டப் போகும் உணர்வுதான் என்ன?

தாயின் இடத்தில் நின்று தமிழகம்; சிங்கள ஆதிக்கமெனும் வெறி நாயை வீழ்த்தி - களம் நிற்கும் சேய்களின் கரங்களை வலுப்படுத்திட; கடமையாற்றத் தவறிடுமோ?

தாயின் பண்பை இழந்திடுமோ?
இல்லை!
இல்லை!
அப்படி நடக்காது!
நடக்கவே நடக்காது!

இலங்கையில் தமிழினம் அழிவதைத் தடுத்திட - அவர்தம் உரிமைகள் பறிப்பதை எதிர்த்து நிறுத்திட -

இதோ
எங்கள்
தமிழ்த்தாய்
போர்க்கோலம் பூண்டுவிட்டாள்!
அதன் அடையாளமாக
அமையட்டும் நமது பேரணி!

அன்புடன்

மு.க.

16-02-1987

1485. ஒடிந்த மன நிலையில் வரைந்திடும் மடலிது!

உடன்பிறப்பே,

திருச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம், மதுரையில் எழுச்சிமிகு நிகழ்ச்சிகள், ராஜபாளையம் செல்லும் வழிநெடுக ஏறத்தாழ ஐம்பது கல் தொலைவும் இருபுறமும் வழங்கப்பட்ட வரவேற்பு, அலைகடல் இங்கெப்படி வந்தது என அதிசயிக்கத் தக்கவிதமாக ராஜபாளையம் கூட்டம், அதனையடுத்து மேலூரில் மக்கள் வெள்ளம் - இவைகளைப்பற்றியும், இந்த நிகழ்ச்சிகளில் உடன்பிறப்புக்களின் அன்பு எல்லைகடந்து, ஆர்வம் கரையுடைத்து நான் பட்ட பாடுகள் பற்றியும் மடல்வரைந்து; எதிர்காலத்தில் நிகழ்ச்சிகள் எப்படி அமைக்கப்பட வேண்டுமென ஒரு கனிவான வேண்டுகோள் விடுத்திட வேண்டுமென எண்ணியிருந்தேன்.

ஆனால் மராட்டிய தலைநகரில் நமது கழகத்தின் மாணிக்கக் குன்றமாம் தியாகராசன் மறைந்து விட்ட செய்தியால் ஏற்பட்ட பதைப்பு தீராத காரணத்தால் எழுதவே மனம் ஓடவில்லை!

மகிழ்ச்சியும் உற்சாகமும் இருபத்திநான்கு மணி நேரம் நீடிப்பதில்லை; அதற்குள் ஏதாவது இதயத்தைத் தாக்கும் செய்தியொன்று ஈட்டியெனப் பாய்வதே எனக்குப் பழகிவிட்ட வாழ்க்கையென்று பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேனல்லவா; அதே போலத்தான் திருச்சியில் அண்மைக் காலத்து வரலாறு காணாத அளவில் கூடிய கழகக் கூட்டத்தில் பேசிவிட்டு, மறுநாள் 19.2.87 காலை மதுரையில் தம்பி தங்கபாண்டியன் இல்லத் திருமணத்துக்குச் சென்றேன்.

கழகக் குடும்ப மணவிழாவில் கலந்து கொண்டதிலும், கழக முன்னணியினர் பலருடன் அளவளாவுவதிலும் ஒரு தனி மகிழ்ச்சி

- ஆனால் மணவிழா நிறைவுற்றுத் தங்குமிடத்துக்கு வந்தவுடன் சென்னை அன்பகத்திலிருந்து தொலைபேசிச் செய்தி கிடைத்தது. அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் தழுதழுத்த குரலில் சொன்னார்; பம்பாய் தியாகராசன் மறைந்து விட்டதாக!

நம்பமுடியவில்லை! உண்மைச் செய்திதான் என்பதைப் பொற்கோவுடன் பேசி உறுதிப்படுத்திக் கொண்டதாக நீலநாராயணன் கூறினார். உடனே புறப்பட்டு பம்பாய் செல்லுங்கள் என்று அவரைக் கேட்டுக் கொண்டேன்.

பெரிய இழப்பு! பம்பாய்வாழ் தமிழர்களிடம் மட்டுமன்றி ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள், பெரு மக்கள் அனைவரிடமும் அன்புடன் பழகி அவர்தம் மனத்தில் இடம்பெற்றவர் தியாகராசன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து தமிழினத்தைத் தலைநிமிர வைத்திட ஏறுநடைபோட்ட தன்மானச்செம்மல் அவர்! நமதியக்கம் வளர்ப்பதில் தணியாத ஆர்வம் கொண்டவர். நம்பிக்கைக்குரியவர். நாணயமானவர். கட்சிப்பணி ஆற்றுவதிலும் கால்காசு ஆயினும் அந்தக் கணக்கை ஒழுங்காக வைப்பதிலும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அந்தப் பகுதியில் திகழ்ந்தவர். நெஞ்சை விட்டகலவில்லை; என்னை அவர் பலமுறை பம்பாய்க்கு அழைத்து கழகக் கூட்டங்கள் நடத்தியதும் நல் விருந்து அளித்ததும்!

இந்தச் சுற்றுப்பயணம் முழுதும் என்னுடன் இருந்த கழக உடன்பிறப்புகளிடம் தியாகராசனைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தேன். இன்னமும் மனப்புண்ணை ஆற்றிக் கொள்ள முடியவில்லை. வேதனை நிறைந்த உள்ளத்தோடு அந்த உடன் பிறப்பின் குடும்பத்தாருக்கும், நண்பர்கட்கும் என் இரங்கலை நீலநாராயணன் வாயிலாக முன்னரே தெரிவித்துக் கொண்டுள்ளேன் எனினும் இந்த மடல் மூலமும் மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்துகிறேன்.

பம்பாயில் பெருந்திரளாக மக்கள் கூடி, கட்சி வேறுபாடின்றி தியாகராசனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்பதையும், தம்பி தியாகராசனை இழந்த நமது கழக உடன்பிறப்புக்கள் திகைத்து நிற்பதையும் நீலநாராயணன் சொல்லக் கேட்டுத் துக்கம் மேலும் பெருகிடத் துடித்துப் போகிறேன்.

அந்த செயல்வீரனின் பிரிவால் இரண்டு நாட்களாக எழுதத் தடைப்பட்டிருந்த கடிதத்தை இன்று உனக்கு எழுதும் போது; நமது மாவட்டக் கழகச் செயலாளர்களின் கூட்டமும் சென்னையில் நடைபெறுகிறது.

கடிதத்தில் முதலில் எழுத எண்ணியிருந்ததை மாவட்டச் செயலாளர்களிடம் மனம்விட்டுப் பேசலாம் என்றிருக்கிறேன்.

எனது சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் ஒழுங்குற எப்படி அமைக்கப்படலாம் என்பது குறித்தும் - பல நிகழ்ச்சிகளில் ஏற்படும் எதிர்பாராத நெருக்கடி மிகுந்த அதிர்ச்சி தரும் தொல்லைகள் குறித்தும் - நானும் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் கலந்து பேசியிருக்கிறோம்.

தமிழகத்தில் கடுமையாகப் பரவியுள்ள வறட்சித் துயர் குறித்து மாவட்டச் செயலாளர்களிடம் கலந்துரையாடும் இந்த முக்கியமான கூட்டத்தில் எனது சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் முறையாக வகுக்கப்படுவது குறித்தும் முடிவுகள் எடுப்பது தேவையான ஒன்றாகி விட்டிருக்கிறது.

உதாரணத்துக்கு ராஜபாளையம் பொதுக் கூட்ட நிகழ்ச்சியொன்றே போதுமானது! கழகச் செயல்வீரர்கள் நிகழ்ச்சியை அருமையாக ஏற்பாடு செய்திருந்தனர்! ஆனால் கட்டுக் கடங்காத கூட்டம்! உணர்ச்சிப் பெருவெள்ளமென்றே கூறலாம்! நான் மட்டும் ஐம்பது நிமிடங்கள் பேசினேன் - பேசிவிட்டு மேடையை விட்டு இறங்க முடியாமல் சுற்றிலும் மாலைகள், கைத்தறி ஆடைகள், சுடர்கள் புகைப்படக்கருவிகள் முற்றுகை!

முடிந்தவரை சமாளித்தேன் - படிகளில் இறங்கும் போது; ஒரு குழுவினர் - இளைஞர்கள் தீபச் சுடர் கொண்டு மேடையேறி அதனை என் கையில் கொடுத்துப் புகைப்படமெடுக்க அலைமோதினர்! ஒரு படம் எடுக்கப்பட்டது! மேலும் ஒரு படம் என்றனர். அதற்குள் ஒருவர் பின்புறமிருந்து என் கழுத்தில் மாலையொன்றை அணிவித்தார்! அணிவித்தவர் கூட்ட நெரிசலில் தள்ளப்பட்ட காரணத்தால் நான் மாலையுடன் மல்லாந்து விழப் பார்த்தேன். அப்போது இளைஞர் அணியினர் வைத்திருந்த தீபச் சுடர் அவர்கள் கையை விட்டுச் சிதறி - எண்ணெயுடன் கலந்த தீக்கொழுந்துகள் என் மீது பரவின... தலையில் விழுந்து இருக்கின்ற கொஞ்சம் முடியும் கருகிடும் நிலையில்... தம்பிகள் கோபால்சாமியும்,

சீனிவாசனும் என்னை அப்படியே மேடையில் உருட்டிப் புரட்டித் தலையில் அடித்துப் பரபரப்புடன் செயல்பட்டிருக்காவிட்டால் பெரும் விபத்தாக முடிந்திருக்கும்! சட்டையில் நெருப்புப் பொறிகள் பட்டு பல பகுதிகள் சல்லடை கண்களாகிவிட்டன! கண்ணாடியும் கீழே விழுந்து கீறலாகிவிட்டதால் வேறு கண்ணாடி வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டிய நிலைமை! எப்படியோ அதற்குமேல் எதுவும் விபரீதமாகிவிடவில்லை!

ஒரு லட்சம் மக்கள் திரண்ட கூட்டம்! ராஜபாளையம் நகரமே திணறித் திக்கு முக்காடியது! ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய மிக மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட போலீசாரே பாதுகாப்புக்காக வந்திருந்தனர்.

நமது தொண்டர் அணியினர் திறம்படச் செயல்பட்டனர் - எனினும் கட்டுக்கடங்காத ஆர்வம்; அவர்களையும் புயல் வீசும் கடலில் தத்தளிக்கும் கட்டு மரங்களாக்கி விட்டது!

வறட்சி நிலை குறித்து விவாதிக்க இருக்கும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில்; வேறு பல பிரச்சினைகளோடு எனது சுற்றுப்பயண நிகழ்ச்சி குறித்தும் பேசிடுவதற்காக; முன்கூட்டியே நிறைய எழுத வேண்டுமென்றிருந்தேன்!

தம்பி தியாகராசனின் மறைவால் அது தடைபட்டுப் போயிற்று!

எனவே, எழுதியிருக்க வேண்டியவற்றை மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நேரிலேயே நானும் பொதுச்செயலாளரும் தெரிவித்து; அதற்காவன செய்திட; வழிவகைகள் அந்தக் கூட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்படும். அதனை பின்பற்றிச் செயல்பட உடன்பிறப்புக்கள் அனைவரையும் வேண்டுகிறேன்.

அன்புடன்

மு.க.

25-02-1987

1486. துயர் துடைக்கத் துணை நிற்போம்; வாரீர்!

உடன்பிறப்பே,

வானளாவக் கையை உயர்த்தி, வாய் கிழியப் பேசி, வாக்குறுதிகளை அள்ளிவீசித் தேர்தல் நேரங்களில் மக்களை ஏமாற்றுவதற்கு மிக நன்றாகக் கற்றுக்கொண்ட இந்த ஆட்சியில்; பல்வேறு மாவட்டங்களில் மக்களை வதக்கிப் பிழியும் வறட்சிக் கொடுமைகளைச் சமாளிக்கக்கூட அவசர நடவடிக்கைகள் எதுவும் எடுத்துக்கொள்ள ஆரம்பம் கூட செய்யவில்லை என்ற விரிவான விபரங்களை 25.2.87 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டதோடு ஆங்காங்கு வெளிவரும் தமிழ், ஆங்கில தினசரி ஏடுகளில் வறட்சிப் பகுதிகள் குறித்துப் படங்களுடன் வெளியிடப்பட்ட செய்திகளும் தொகுத்தளிக்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, ஆண்டிபட்டி வட்டாரங்களில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் பஞ்சம் பிழைப்பதற்காகத் தங்கள் ஊர்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். வறட்சியின் கொடுமை உச்சகட்டத்தை அடைந்து விட்டது என இப்பகுதியில் உள்ள விவசாயிகள் வேதனையை வெளியிடுகிறார்கள். விவசாயிகள், விவசாயத் தொழிலையே துறந்து விட்டு கல்லுடைத்தல், விறகு சேகரித்தல், போன்ற வேலைகளை நாடிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டியிலிருந்து தேனி செல்லும் வழியில் உள்ள ரங்கநாதபுரம் கிராமத்தில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பிழைப்புத் தேடி ஊரை விட்டுச் சென்று விட்டனர் எனக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்று பார்த்த போது பூட்டப்பட்டிருந்த வீடுகள்; மௌனமாகத் தங்கள் சோகக் கதையைக் கூறின! அந்தக் கிராமத்தையடுத்த நாச்சியார்புரத்தில் முன்னூறு பேர்,

ஊரைவிட்டுக் கிளம்பி பஞ்சம் பிழைக்க வெளியூர்களுக்கு ஓடி விட்டார்கள். ரங்கசமுத்திரம், குறும்பப்பட்டி, எஸ்.எஸ்.புரம், மாலைப்பட்டி, முத்தனம்பட்டி, தர்மத்துப்பட்டி, புள்ளிமான் கோம்பை, அய்யர் வட்டம், முதலிய பல கிராமங்களில் மாட்டுத் தீவனத்துக்கான சோள நாற்றுக் கூட விளையாமற் போனதால் உழவு மாடுகளையெல்லாம் விற்றுவிட்டு கிராமங்களை விட்டு வெளியேறி பஞ்சம் பிழைக்கப் போய்விட்டனர். வளமாக இருக்கும் என்று நம்பிச்சென்ற இடங்களிலும், கேரளா போன்ற பகுதிகளிலும்கூட வேலை கிடைக்காமல் அவர்கள் தவித்துத் தடுமாறுகின்றனர். ஆண்டிபட்டியை மிஞ்சும் அளவுக்கு உசிலம்பட்டி பகுதியில் உள்ள செல்லம்பட்டி, வாலாந்தூர், கருமாத்தூர், சொக்கத்தேவன்பட்டி, ஆரியப்பட்டி, உச்சப்பட்டி, நாட்டார்மங்கலம், அய்யம்பட்டி, அய்யனார்குளம், நடுப்பட்டி, சிந்துப்பட்டி, திடியன், அம்பட்டய்யன்பட்டி, மேட்டுப்பட்டி, ஆகிய கிராமங்களில் தீய்ந்து போன நெற்பயிர்கள், காய்ந்து மொட்டையாகி விட்ட தென்னை மரங்கள், வறட்சியால் வாடிடும் ஏழை எளிய மக்கள்தான் இன்றைக்கு நாம் காணும் காட்சி! மேக்கிழார்பட்டி, நடுப்பட்டி, திம்மனன் கிராமம், பாப்பாபட்டி, கல்லூத்து, உத்தப்பநாயக்கனூர், அல்லிகுண்டம், மானூத்து, சீமானூத்து, போத்தம்பட்டி, பகூரனி, ஜோதிநாயக்கனூர் ஆகிய கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறிவிட்டதால் ஊர்கள் வெறிச்சோடிக்கிடக்கின்றன!

உடன்பிறப்பே; மதுரையிலிருந்து வெளிவரும் தினமணி இதழில் வந்துள்ள வறட்சிபற்றிய விரிவான செய்தியைத்தான் சுருக்கமாகத் தந்துள்ளேன். குடிப்பதற்கு உப்புத் தண்ணீர் கிடைத்தாலும் பரவாயில்லையென்ற நிலையில் குடங்களுடன் காத்திருக்கும் தாய்மார்களின் படத்தையும்கூட தினமணி இதழ்தான் வெளியிட்டுள்ளது.

எனவே, ஏதோ அரசியல் காரணங்களுக்காக வறட்சி பற்றி மிகைப்படுத்திக் கூறுகிறோம் என்று அமைச்சர்கள் வாதிடுவதோ - கூட்டங்களில் பேசுவதோ எடுபடாது என்பதற்கு மேற்கண்ட செய்திகளே பதிலாக அமைந்துள்ளன!

வளங்கொழிக்கும் இயற்கைத் தொட்டில் போன்ற குமரி மாவட்டத்தில் நெல், வாழை, மரச்சீனி, தென்னை, ரப்பர் - இவையனைத்துமே வறட்சியால் பேரிழப்புக்கு உள்ளாகிவிட்டன

என்றும், விவசாய வருமானத்தில் இருபது கோடிக்கும் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றும், ஐந்தாறு கிலோ மீட்டர் ஒவ்வொரு நாளும் சென்றுதான் குடிநீரைத் தேடவேண்டியிருக்கிறதென்றும் நிலைமையை அந்த மாவட்டத்தின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டது.

மதுரை, மதுரை அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன், நெல்லை போன்ற மாவட்டங்களில் இப்போதே வறட்சி உச்சகட்டத்திற்குச் சென்று விட்டதென்றால் இனிவரும் மாதங்களில் எந்த அளவுக்கு அந்தக் கடுமை செல்லும் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

செங்கை அண்ணா, தஞ்சை, திருச்சி, சேலம், கோவை, வடஆற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் குடிநீருக்கும் மக்கள் அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு - அந்தத் துன்பம் பெருகிக் கொண்டே போகிறது என்ற விபரங்களும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் விவசாயக் கிணறுகளை முன்னூறு அடி ஆழம் தோண்டியும் கூட போதிய தண்ணீர் விவசாயத்துக்குக் கிடைக்கவில்லை. எழுபதாயிரம் ஹெக்டேர் பயிராக வேண்டியதற்குப் பதில் ஐம்பதாயிரத்துக்கும் குறைவான ஹெக்டேர் அளவே நெற்பயிர் செய்யப்பட்டு, அதுவும் போதிய நீர் இல்லாததால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

பசும்பொன் மாவட்டத்தில் நெல் சாகுபடியாகும் அறுபத்து ஏழாயிரம் ஹெக்டேர் நிலத்தில் எண்ணூறு ஹெக்டேர் கூட விளைவுக்கு வந்திருக்க முடியாது என்ற புள்ளிவிபரம் தரப்பட்டது. ஆனால் அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவரோ; மிகத் தவறாக தகவல்களைத் தந்து திசை திருப்புகிறார் என்பதற்கான சான்றுகளும் 25-ந் தேதியே கூட்டத்தில் தொகுத்தளிக்கப் பட்டன.

ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் தங்களின் மாவட்டம் குறித்த வறட்சி நிவாரணப் பணிகள் எவ்வாறு விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதையும்; இந்த அரசு காட்டும் மெத்தனத்தையும் நகராட்சிகள் ஒன்றியங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கி

இப்பணிகளை அரசு முடுக்கிவிட முன்வரவில்லை என்பதையும் - தெளிவாக எடுத்தியம்பினர்.

வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்கிடுக என்றும் ஆங்காங்கு ஜனநாயக முறையிலான ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் நடத்தவேண்டியிருக்கிறது.

நிவாரணப் பணிகள் தொடர்ந்தாலோ; அதில் இந்த அரசினர் விளைக்கும் ஊழல்களைத் தடுத்து நிறுத்தவும் குரல் கொடுக்கும் கடமை எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறது.

இவற்றுக்கிடையே ஒவ்வொரு மாவட்டத்திலும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கஞ்சித்தொட்டிகள் அமைத்தும், குடிநீர்த் தொட்டிகள் அமைத்தும், கழக அமைப்புக்கள் இயன்ற அளவுக்கு மக்களின் துயர்துடைக்க முன்வர வேண்டுமென்று மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை - விரைந்து, செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென கழக உடன்பிறப்புகள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தில் மக்களை வாட்டிடும் இத்தகு வறட்சி குறித்து; மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பித் தேவையான நிதியினைப் பெறுவதிலேகூட விரைவு காட்டாத இந்த அரசின் மக்கள் விரோதப் போக்கையும் - மக்களின் நலனைவிட; தங்களின் சொந்த சுயலாபக் கோலாகலக் கேளிக்கை விநோதங்கள், வேடிக்கை விளம்பரக் கூத்துக்களுக்காக அரசின் கருவூலத்தைக் காலியாக்கிக் கொண்டிருக்கும் சேட்டைகளையும் மேலும் மேலும் அம்பலத்திற்குக் கொண்டுவந்து; அலட்சிய - ஆணவ - அராஜக - ஊழல்மலிந்த - இவர்களுக்கு ஊராளும் தகுதி ஒரு சிறிதும் இல்லையென்பதை மெய்ப்பித்துக் காட்டுவதோடு; வாடிடும் மக்கள் பக்கம் நின்று அவர்களுக்காக வாதாடுவோம்! போராடுவோம்! நமது சக்திக்கேற்ப நமது மக்களுக்குத் துணைநின்று துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபடுவோம்!

அன்புடன்

மு.க.

27-02-1987

1487. சிங்கள ஜெயவர்த்தனே சிரித்து மகிழ்வார்!

உடன்பிறப்பே,

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் குறித்த வீடியோ படம் ஒன்றைப் பார்த்தேன். ஈழ விடுதலைக்காக ஜெயவர்த்தனேயின் கொடுங்கோலை எதிர்த்துப் போராடிய ஈழத்தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் சில இடங்களில் கைது செய்து அவர்களது கரங்களில் விலங்கிட்டு அழைத்துச் சென்ற காட்சியை அந்தப் படத்தில் நான் பார்த்தேன்.

இப்போது பொள்ளாச்சி இளைஞர் அணியினர் ஒரு புகைப்படத்தை அனுப்பியுள்ளனர்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போராட்டத்தை திசை திருப்பிக் கழகத்தின் மீது களங்கம் கற்பிப்பதற்காக எம்.ஜி.ஆர். ஆட்சியாளர்களே பல இடங்களில் வெடிகுண்டுப் பிரச்சினையை எழுப்பிக் கதைகள் கட்டினார்கள் அல்லவா; அந்தக் கற்பனைக் கதையில் தம்பிகள் எல். கணேசன், நாமக்கல் பழனிவேலன், திருச்சி மலர்மன்னன், பொன்மலை தினகரன் ஆகியோர் மட்டுமல்ல; கழக முன்னணியினர் பலரையும் இணைத்து ஒரு பெரிய சதி வழக்கே ஜோடிக்கும் முயற்சியில் இன்னமும் எம்.ஜி.ஆரின் போலீசார் ஈடுபட்டிருக்கிறார்கள்.

1963-ல் அரசியல் சட்டத்தில் திருத்தம்கோரி; மொழிப்பிரிவில் இந்திதான் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான மொழி என்ற பகுதியைத் தாளில் எழுதிக் கொளுத்த முற்பட்ட அண்ணா அவர்கள்; 1965-ல் நடைபெற்ற மொழிப் புரட்சியின் போது தொடரப்பட்ட பயங்கர கொலை வழக்குகள் அனைத்தையும் 1967-ல் முதலமைச்சரானவுடன் வாபஸ் பெறச் செய்தார். ஆனால் அவரது பெயரை ஆட்சிக்கும் கட்சிக்கும் வைத்துக் கொண்டு கொடியிலும் பொறித்துப் பறக்க விடுகிறவர்கள் - இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணா வழியில் போரிடும் நம்மீது பொய் வழக்குகளை அடுக்கடுக்காய் போட்டு வருகின்றனர்.

அப்படிப் போடப்படும் வெடிகுண்டு பொய் வழக்குகளில் ஒன்றுதான் கோவை மாவட்ட இளைஞர் அணித் தம்பிமார்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்காகும். கோவை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் உமாபதி, துணை அமைப்பாளர் தம்புராஜ், மற்றும் நவமணி, கார்த்தி, ராமமூர்த்தி, தங்கவேல் ஆகியோரைக் கைது செய்து பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாக்கி சிங்கள ஜெயவர்த்தனே எவ்வளவோ நல்ல மனிதன் என்பதை எம்.ஜி.ஆர். அரசினர் தமது செயல்மூலம் காட்டிக்கொண்டனர்.

திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், கோவை மாவட்டம், சென்னை ஆகிய இடங்களில் பொய்வழக்குக்காகக் கைதுசெய்யப்பட்ட கழகக் கண்மணிகள், இளைஞர் அணித் தம்பிமார்கள், மாணவச் செல்வங்கள், எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதைக் கேள்விப்படும் போது நெஞ்சு குலுங்குகிறது!

போலீசார் தங்களின் இஷ்டப்படி வாக்குமூலங்களைப் பெற வேண்டுமென்பதற்காக கைது செய்யப்பட்ட கழகத்தினரைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, முகத்தில் தண்ணீரை வாரி வாரி இறைத்து மூச்சுமுட்டச் செய்திருக்கின்றனர்.

கழகக் கண்மணியொருவனைக் கையையும் காலையும் கட்டி நிர்வாணமாக்கி - அவனது ஆண்குறி சிறுநீர்த்துவாரத்தில் கோணி ஊசியை நுழைத்துக் கொடுமை செய்து - தங்களிஷ்டத்துக்கு வாக்குமூலம் தருமாறு வற்புறுத்தியுள்ளனர்.

உடல் முழுதும் ஊமைக் காயங்களுடன் உள்ள இளைஞர்களையும் - மூட்டுக்குமூட்டு அடிபட்டு ரணவேதனை அனுபவிக்கும் வாலிபர்களையும் கண்டு கண்ணீர் வடித்தேன்.

கைது செய்யப்பட்ட நமது கழகத்தின் உடன்பிறப்புக்களைப் போலீசார் எப்படியெல்லாம் கொடூரமாகவும் இழிவாகவும் நடத்தியிருப்பார்கள் என்பதற்கு பொள்ளாச்சி இளைஞர் அணியினர் எடுத்து அனுப்பியுள்ள புகைப்படமே சரியான உதாரணமாகும்!

கோவை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் உமாபதியையும் மற்ற தம்பிமார்களையும், 20.2.87 அன்று நீதிமன்றத்துக்குப் போலீசார் அழைத்துச் செல்லும்போது இருவர் இருவராக விலங்கு கொண்டு பிணைத்து எம்.ஜி.ஆரின் தமிழ்

இனப்பற்று என்ன என்பதை நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறார்கள். மொழிப்போரில் ஈடுபட்ட தி.மு. கழகத்தை அடக்கி ஒடுக்க - இப்படியொரு அரசு; கைவிலங்கு போடுகிற அளவுக்கு வந்து - அண்ணாவின் மொழிக்கொள்கைக்கு கேடு சூழ்கிறதே நியாயமா? என்று யாராவது கேட்டால் உடனே நாவலர் கேட்பார் - ஏன் கையில் விலங்கு மாட்டினால் என்ன? அவர்கள் கைகளில் தங்கக் கடையமும் வைரக் காப்புமா போட்டிருந்தார்கள்? என்று!

என்னையே அவர் நீ என்ன தங்கத் தட்டிலா சாப்பிட்டாய்? சிறையில் அலுமினியத் தட்டு கொடுத்தால் என்ன குறைந்துவிட்டது? என்று கேட்கும் போது என் தம்பிகளின் கைகளில் விலங்குகளைப் பார்த்தால் அப்படிக் கேட்காமலா இருப்பார்!

எவரும் வெள்ளிக் கரண்டியை வாயிலே கவ்விக் கொண்டோ - தங்கப் பாலாடையை கையிலே ஏந்திக் கொண்டோ - வைர நெக்லசைக் கழுத்திலே அணிந்து கொண்டோ பிறந்தவர்கள் அல்ல!

வெள்ளையன் நாட்டை அடிமைப்படுத்தியிருந்த போது அரசியல் கைதிகளை நடத்தியது போலத்தான் உரிமைக்காகப் போராடுகிற அரசியல்வாதிகளையும் நாங்கள் நடத்துவோம். எங்கள் எஜமானர் எம்.ஜி.ஆரின் உத்திரவு அப்படித்தான்!

என்று நாவலர்கள் சொல்லிவிட்டுப் போனால் - அதை நாமும் ஏற்றுக் கொண்டு போய்விடுவோம்!

தங்கத் தாம்பாளத்திலா சாப்பிட்டாய்? என்று என்னைப்பார்த்து இதுவரையில் தடித்த நாக்கு படைத்த அரசியல்வாதிகள் கூடக் கேட்டதில்லை!

ஆனால் நாவலர் கேட்கிறார்; அதற்கு நான் சொல்லும் விளக்கம் மிகமிகச் சாமான்ய சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்தான் நான்; அதையே பெருமையாகக் கருதுபவன் நான் - நல்ல வேளையாக நாவலரைப்போல அரண்மனையிலே பிறந்து; ஐந்தாறு தாதிமார்கள் தாலாட்ட; மரகதத் தொட்டிலில் - மாணிக்கமிழைத்த கிலுகிலுப்பையை ஆட்டி மகிழ்ந்து - வெண்சாமரம் வீசப் பத்து பேர் - வெல்வெட்டுத் துணியால் நடைபாதை அமைத்து தவழவிட்டு விளையாட்டுக் காட்ட இருபது பேர் - என ஆள் அம்புகள் கொண்ட குபேரக் குடும்பத்துப் பிள்ளையாக நான் பிறக்கவில்லை.

என்னைப் போலத்தான் சாதாரண - அல்லது நடுத்தரக் குடும்பத்திலே - பிறந்து என்னைத் தங்களின் அன்பு உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டு - இந்தக் கழகத்தையும்; கழகத்திற்கென அண்ணா வகுத்த கொள்கைகளையும் உயிர் மூச்சாகக் கருதி - அதற்கென எந்தத் தியாகமும் செய்யத் தயார் என எனது உடன்பிறப்புகள் பல்லாயிரவர் இந்தப் பாசறையில் பயின்று வருகின்றனர்.

பொள்ளாச்சியில் இளைஞர் அணித் தம்பிமார்களுக்கு விலங்கு பூட்டி விட்டதால் - விலங்கோடு வீதியில் இழுத்துச் சென்று விட்டதால் - அவர்கள் ஒன்றும் அதற்கென அழுதுபுலம்பி, தலையைத் தொங்கவிட்டுக் கூனிக் குறுகிப்போய் விடவில்லை.

அடலேறுகள் என அவர்கள் விலங்கு பூட்டிய கரங்கள் விண்ணோக்கி உயர்த்தி - வீர நடை போட்டு - வெற்றிச்சிரிப்பு காட்டிக் கொண்டுதான் வீதியில் போலீசாரோடு செல்கின்றனர்! ஆம்; புகைப்படம் அந்தக் காட்சிக்கு சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது!

மணமேடையில் - புரோகிதத் திருமணத்தில் - மாப்பிள்ளையின் வேட்டி நுனியையும் பெண்ணின் சேலைத் தலைப்பையும் ஒன்றாக முடிந்து - வலம்வரச் செய்யும்போது அந்த மணமக்களின் முகத்தில் காணும் புன்முறுவலைத்தான் இந்தப் புலிக்குட்டிகளின் முகத்திலும் என்னால் காண முடிகிறது!

விலங்கொடிந்தது பாரத மாதாவுக்கு என்று வியந்து போற்றினர்! வாழ்த்துக் கூறினர்! ஆனால் அந்தப் பாரத மாதாவோ; தமிழன்னைக்குத் தளைபூட்டிக் களிக்கப் பார்க்கிறாள்!

அந்தத் தலையுடைக்கத் தடந்தோள் உயர்த்தும் தமிழின இளைஞர்களின் கைகளுக்கு விலங்கு பூட்டிக் களிக்கிறார்கள் இங்குள்ள தர்பார் சூரர்கள்! ஆம்; தாசானு தாசர்கள்!

விலங்கு உள்ளம் கொண்டோர்; விலங்கு அணிவித்தனர் நமது கரங்களுக்கு எனக்கருதி; விம்மட்டும் நமது தோள்கள்!

வீழட்டும் வீணர் துரைத்தனம்! வாழட்டும் தமிழர் உரிமை! வெல்லட்டும் ஜனநாயக மாண்பு!

அன்புடன்

மு.க.

28-02-1987

1488. கவர்னர் உரை; ஒரு கண்ணோட்டம் 1
குன்றம் சிறுத்துக் குப்பை மேடானது!

உடன்பிறப்பே,

1986ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் தேதி கவர்னர் குரானா அவர்கள் ஆற்றிய உரையில் 23ஆம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் மிகப்பெரிய திட்டத்தை அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆதிதிராவிட மக்கள், பழங்குடிமக்கள், நரிக்குறவர்கள் ஆகிய மக்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளும், வறுமைக் கோட்டுக்குக் கீழேயிருக்கிற ஏனைய குடும்பங்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படும். நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க இந்த நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது லட்சம் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டி முடித்துவிட வேண்டுமென்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்.

இவ்வாறு கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டது. அதாவது அரசாங்கம் எழுதித் தருவதை, கவர்னர் ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு - பின்னர் அவையில் வந்து கவர்னர் படிப்பதே கவர்னர் உரை நிகழ்த்துதல் எனப்படும் ஒரு சம்பிரதாயமாகும்.

1986 ஜனவரியில் மூன்றாண்டுகளில் நலிந்த பிரிவினருக்கு முப்பது லட்சம் வீடுகள் என்று அறிவித்தபோது - பிப்ரவரியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடக்க இருந்தன. அதை முன்னிட்டுத்தான் அந்த அறிவிப்பு என்பதை உள்ளாட்சிமன்றத் தேர்தலின்போது அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சார்பில் ஏடுகளில் பக்கம் பக்கமாக வெளியிடப்பட்ட விளம்பரங்களே மெய்ப்பித்துக்காட்டின.

1986 பிப்ரவரி 20, 21, 22 ஆகிய நாட்களில்
வெளிவந்த ஏடுகளில் செய்யப்பட்ட பிரம்மாண்டமான
விளம்பரங்கள்

இதோ :-

தாழ்த்தப்பட்டோர்
நரிக்குறவர்
நலிந்த பிரிவினர்
வாழ்வில் உயர்ந்திட வழி பிறக்கிறது
30 லட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்

இந்த விளம்பரத்தைக் கண்டு உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர்கள் ஏமாந்து விடவில்லை. அவர்கள் சிந்தித்துப் பார்த்தார்கள். தாழ்த்தப்பட்டோர், நரிக்குறவர் மற்றும் நலிந்த பிரிவினர் அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களுக்கு மூன்று வருடத்தில் முப்பது லட்சம் வீடுகள் என்றால் ஒரு வருடத்தில் பத்து லட்சம் வீடுகள் கட்டிமுடிக்க வேண்டுமே; முடிகிற காரியமா அது என சிந்தித்தனர்!

வீடு ஒன்றுக்கு இன்றுள்ள கட்டுமானப் பொருள்களின் விலைப்படி பத்தாயிரம் ரூபாய் என்று கணக்கிட்டால்கூட முப்பது லட்சம் வீடுகளுக்கு மூவாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் - ஓராண்டில் 1986-ல் பத்து லட்சம் வீடுகள் கட்ட ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் - அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

1986 - பிப்ரவரியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிந்து அ.இ.அ.தி.மு.க. தோல்வியைத் தழுவிக் கொண்டபிறகு; மார்ச் இறுதியில் நிதி நிலை அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கையுடன் இணைத்துத் தரப்பட்ட திண்டு, தலையணை போன்ற நிதி நிலை விபரங்கள் - ஒதுக்கீடுகள் - குறித்த எல்லா புத்தகங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தோம்.

மூன்றாண்டுகளில் முப்பது லட்சம் வீடுகள் என்ற திட்டத்துக்கு - அதுவும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ளவர்களுக்கு முப்பது லட்சம் வீடுகள் என்ற திட்டத்துக்கு - எந்தத் தலைப்பிலும் ஓராண்டுக்குத் தேவைப்படுகிற நிதி ஒதுக்கப்படவில்லை.

1986 நிதிநிலை அறிக்கையில் இரண்டு மாதத்திற்கு முன்பு கவர்னர் குறிப்பிட்ட முப்பது லட்சம் வீடுகள் என்ற சொற்றொடரே காணாமற் போய்விட்டது.

குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது.

ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது.

வீடு கட்ட ஏழைகளுக்குக் கடன் உதவி அளிப்பது.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மூலம் கட்டித்தர ஊக்குவிப்பது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் 1986 மார்ச் மாதம் படித்த நிதிநிலை அறிக்கை - இப்படி விளக்கெண்ணெயில் வெண்டைக்காய் தாளித்தது போல அமைந்து; உள்ளாட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்ட முப்பது லட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்! என்ற திட்டம் இரண்டே மாதங்களில் எங்கேயோ ஒரு மூலைக்குப் போய்ச் சேர்ந்து விட்டது.

இந்த ஆண்டு 1987 கவர்னர் நிகழ்த்தியுள்ள உரையில் - பெருமளவு வீடுகட்டும் திட்டத்தைச் செயல்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வாசகம் எவ்வளவு மோசடியானது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

கவர்னர் உரை இத்துடன் நிற்கவில்லை - கடந்த ஆண்டு உரையாற்றியபோது அறிவித்ததற்கு இணங்க அதனைச் செயல்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது என்று அடித்துச் சொல்லுகிறது!

கடந்த ஆண்டு கவர்னர் உரையில் குறிப்பிட்டது என்ன?

ஆதிதிராவிடர்
பழங்குடி மக்கள்
நரிக்குறவர்

ஆகியோருக்கு ஐந்து லட்சம் வீடுகள் 1986 நிதியாண்டில் கட்டித்தரப்படும். அஃதன்னியில் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள நலிந்த பிரிவினருக்கு ஐந்து லட்சம் வீடுகள் 1986 நிதியாண்டில் கட்டித் தரப்படும். ஆகமொத்தம் எளியோருக்கு ஒரு வருடத்தில் பத்து லட்சம் வீடுகள்! மூன்று ஆண்டுகளில் முப்பது லட்சம் வீடுகள்!

கவர்னர் உரையை 1986ஆம் ஆண்டுக்காக எழுதித்தந்த எம்.ஜி.ஆரின் அரசைக் கேட்கிறேன்; அல்லது நிர்வாகத்தில் புலியெனப் பெயர் பெற்றவரும் அந்த உரையை அப்படியே அவையில் படித்தவருமான மேதகு சுந்தரலால் குரானா அவர்களைக் கேட்கிறேன்; முப்பது லட்சம் வீடு கட்டும்பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது என்றால் கடந்த நிதியாண்டில் அதற்கென ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதா? அல்லது ஐநூறு கோடி ரூபாயாவது ஒதுக்கப்பட்டதா? அதுகூட வேண்டாம் அய்யா; இருநூறு கோடி ரூபாயாவது ஒதுக்கப்பட்டதா?

செயல்படுத்தும் பணி

ஏற்கெனவே

தொடங்கப்பட்டு விட்டது

அதாவது கடந்த

ஆண்டு அறிவித்த

வீடுகட்டும் திட்டம்

என்று கவர்னர் உரை எனும் பெயரால் யாருக்குக் காது குத்தப் பார்க்கிறார்கள்!

இந்த ஆண்டு கவர்னர் உரையில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக வாசக ஜாலம் செய்து; அந்தத் திட்டத்தின்படி 3 : 1 என்ற கடன் மூலதன வீதாச்சார அடிப்படையில் கடன் பெற்று தமது சொந்த உழைப்புடன் புதிய வீட்டைக் கட்டவோ அல்லது வீட்டை மேம்படுத்திக்கொள்ளவோ வேண்டும் என்று முப்பது லட்சம் வீடு கட்டும் திட்டச் சுமையைத் தூக்கி -

ஆதிதிராவிடர்

பழங்குடிமக்கள்

நரிக்குறவர்

வறுமைக் கோட்டுக்குக்

கீழேயுள்ள

நலிந்த பிரிவினர்

எனப்படும் மக்களின் தலையில் சுலபமாகப் போட்டு விட்டார்கள்.

இந்தப்புதிய அணுகுமுறைக்கும் மத்திய அரசின் உதவியையும், மத்திய அரசின் ஒப்புதலையும் எதிர்பார்க்கிறார்களாம்!

ஆக கடந்த ஆண்டு கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டு - உள்ளாட்சி மன்றத் தேர்தலின்போது உறுதிமொழியாக ஏடுகளில் ஒரு பக்க விளம்பரங்களாகத் தரப்பட்ட - முப்பது லட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்; ஏழை எளிய மக்களுக்கு! என்ற பிரகடனம் - இப்போது குன்றம் சிறுத்துக் குப்பைமேடு ஆன கதையாகப் போய் விட்டது என்பதை இந்த ஆண்டு கவர்னர் உரை மிகத் தெளிவாகத் தெரிவித்து விட்டது.

ஒரு அமைச்சர், வீட்டு வசதி வாரியம் கட்டுகிற வீடுகளையும் கூட்டுறவு சங்கங்கள் கட்டுகிற வீடுகளையும் கூட இந்தக் கணக்கில் சேர்த்து எண்ணிக்கையைக் கூட்டிக் காட்ட முயன்றுள்ள ஒரு தகவலை சில ஏடுகளில் கண்டேன்.

ஃஃ அந்த வீடுகள் எல்லாம் நலிந்த பிரிவினருக்கா? ஆதிதிராவிடருக்கா? பழங்குடி மக்களுக்கா?

ஃஃ 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கவர்னர் உரையில் என்ன சொன்னீர்கள்?

ஃஃ பிப்ரவரி மாதம் உள்ளாட்சி மன்றத் தேர்தலின்போது என்ன விளம்பரம் செய்தீர்கள்?

ஃஃ அவற்றை ஒருமுறை எடுத்து திரும்பப் படித்துப் பார்ப்பீர்களா?

ஃஃ அந்த அறிவிப்பிலேயிருந்து எவ்வளவு தூரம் நழுவி வந்திருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரிகிறதா?

உடன்பிறப்பே; இந்தக் கேள்விகட்கு நேரடியாகப் பதில் அளிக்க முடியாத நிலையில்தான் இந்த அரசை - இந்த அரசு தயாரித்த கவர்னர் உரை; கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது!

அன்புடன்

மு.க.

01-03-1987

1489. கவர்னர் உரை; ஒரு கண்ணோட்டம் 2 மயங்க வைக்கும் மாயாஜால வித்தை!

உடன்பிறப்பே,

ஏழ்மையை அகற்றும் திட்டங்கள் யாருக்காகத் தீட்டப் பட்டனவோ; அவை கடந்த காலத்தில் குறிப்பிட்ட மக்களைச் சென்றடையவில்லை. எனவே குறிப்பிட்ட மக்கள் பயன் பெறுவதை மத்திய மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்

இவ்வாறு மத்திய வரவு செலவுத்திட்ட அறிக்கை குறித்து - திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கருத்து கூறியிருப்பதை இன்று ஏடுகளில் படித்திருப்பாய்!

மத்திய அரசு நிதிநிலை அறிக்கை குறித்த கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்பு - தமிழகத்தில் கவர்னர் ஆற்றிய உரை குறித்த எண்ணங்களை; நேற்று எழுதிடத் தொடங்கியதை நிறைவு செய்து விடுவது முக்கியமல்லவா?

கவர்னர் உரையானாலும் நிதிநிலை அறிக்கையானாலும் - கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டே அமைந்திடல் வேண்டும்.

சோஷலிசம் என்பதை அரசியல் சட்டத்தில் அச்சியற்றி வைத்துக் கொண்டால் மாத்திரம் போதாது!

அரசியல் சட்டத்தில் சோஷலிசம் என்று கொட்டை எழுத்துக்களில் பொறித்துக் கொண்டு, தனியுடைமை வாதத்திற்கு தண்டனிடும் போக்கு மத்தியிலும் - தாசானுதாசனாக விளங்கிடும் செயல் முறை; இங்கே மாநில அரசியலும் வளர்ந்து கொண்டிருப்பதை சில கவர்ச்சிகரமான அறிவிப்புகளைக் காட்டியே மறைத்து விட முடியாது!

1987-88 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி செல்லும் சிறார்களுக்கும் கிராமங்களில் உள்ள ஏழைத் தாய்மார்களுக்கும்

இலவசமாகக் காலணிகளை வழங்கும் திட்டம் ஒன்றினை நிறைவேற்ற அரசு கருதியிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத்திட்டத்தினால் நேரடியாகப் பயனடையும் மிக ஏழை எளியோர் தவிர தோல் தொழிலாளர்களைக் கொண்ட காலணிகளைத் தைப்போர் கூட்டுறவு சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதின் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்பும் கிட்டும்.

இவ்வாறு இந்த ஆண்டு கவர்னர் உரை மூலமாக அரசு அறிவித்துள்ளது.

எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அடுத்த ஆண்டு; சென்னையில் ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்து - அந்தத் திட்டத் தொடக்க விழாவை மிக ஆடம்பரமாகவும் நடத்தினார்.

படித்துவிட்டு வேலையின்றித் தவிக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் என்று அதற்குப் பெயர். அதன்படி முதல் தொடக்கமாக சென்னை நகரில் காய்கறி விற்பனை செய்யும் மூன்று சக்கர வண்டிகள் ஐந்து பட்டதாரி இளைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

அந்த வண்டிகளில் அவர்கள் வீடு தேடிச்சென்று மலிவான விலையில் காய்கறிகளைத் தருவார்கள். தாய்மார்கள் மார்க்கெட்டுக்குச் செல்லும் சிரமமின்றி வீட்டு வாசலில் இருந்தே காய்கறிகளை வாங்கிப் பயன்பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத் தொடக்க விழாவில் முதலமைச்சர் உரையாற்றும் போது என்ன குறிப்பிட்டார் தெரியுமா?

தாய்க்குலம் இனி காய்கறி வாங்க அலைய வேண்டியதில்லை. வீடு தேடி நல்ல காய்கறிகள் தானாகவே வரும். பட்டதாரி இளைஞர்கள் ஐந்து பேருக்கு இன்று இந்தக் காய்கறி வண்டிகள் வழங்கப்படுகின்றன. மூன்று சக்கர சைக்கிள்போல இருக்கும் இந்த வண்டிகள் இப்போது வழங்கப்பட்டாலும் இன்னும் சிலமாதங்களில் சென்னையில் மட்டும் நூற்றி ஐம்பது வண்டிகள், பட்டதாரிகளுக்கு வழங்கப்படும். பிறகு ஒவ்வொரு நகரத்திலும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும். ஏராளமான வண்டிகள் இது போன்ற சைக்கிள் அமைப்பில் தேவைப்படும். அப்போது இந்த வண்டிகளைச் செய்ய ஒரு தொழிற்சாலை அமையும். அந்தத் தொழிற்சாலையில் பல

தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். அது மட்டுமல்ல - நகரத்தில் உள்ள இந்த தொழிற்சாலையில் உற்பத்தியாகும் காய்கறிச் சைக்கிள் வண்டிகளுக்கான சிறுசிறு உபகரணங்களை உபரிபாகங்களை கிராமத்திலே உள்ளவர்கள் உற்பத்தி செய்து அனுப்புவார்கள். எனவே கிராமத்தில் உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இவ்வாறு அந்தத் திட்டத்தின் சிலாக்கியம் குறித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விரிவாக ஆற்றிய உரை, இன்றும் நமது காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? சென்னையில் வழங்கப்பட்ட அந்த ஐந்து சைக்கிள் வண்டிகளும் என்ன ஆயின?

அவற்றைப் பெற்றுக் கொண்ட பட்டதாரி இளைஞர்கள் எங்கே போனார்கள்?

மார்க்கெட்டுக்குப் போகாமலே தாய்க்குலம் வீட்டில் இருந்தவாறு அந்தத் திட்டத்தின்படி காய்கறிகளை மலிவான விலைக்குப் பெற்றார்களா?

புதுவித காய்கறி சைக்கிள் வண்டித் தொழிற்சாலை உருவானதா?

அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய உபகரணங்களைச் செய்து வழங்கும் தொழில்கள் கிராமங்களில் அமைந்ததா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில்; கறிகாய் சைக்கிள் வண்டித் திட்டம் கருவிலேயே சிதைந்து போனது என்பதுதான்!

"One Job for each Family" அதாவது குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்ற திட்டம் 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று? அந்த திட்டம் அற்பாயுளில் - அதாவது தேர்தல் நேர வாக்குறுதியாக - காற்றோடு கலந்து போய்விட்டது!

கர்ப்பவதிகளுக்கு; பிரசவ காலத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்பு 150 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து பத்து ஆண்டுகள் ஆகப்போகின்றன. முதலில் அத்திட்டம் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில் தொடங்குமென்றனர். அந்தத் திட்டமும்

அறிவிக்கப்பட்ட வேகத்தில் கொட்டாவி விட ஆரம்பித்துப் பின்னர் குறட்டைவிட்டுத் தூங்கியது தூங்கியதுதான்; பாவம் எழவேயில்லை!

கிராமங்களில் பாம்புகடி வைத்தியர்கள் மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது! அதன் கதியும் அதோகதிதான்!

ஏழை எளியோர் உடனடியாகப் பயன்படுமாறு சில திட்டங்களை அறிவித்து - அவற்றை முறையாகச் செயல்படுத்தினால்; அதனை வரவேற்கலாம் என்றாலும் - அறிவிக்கப்படுகிற திட்டங்கள் அனைத்தும் மக்களை ஏமாற்றி ஓட்டுப்பறிக்கும் திட்டமாகவே இருப்பதும்; மக்களின் நிரந்தரமான நல்வாழ்வுக்கும்; அவர்களே தங்களது தேவைகளை நிறைவு செய்து கொள்கிற அளவுக்கும் - வளர்ச்சித் திட்டங்கள் பெருகாதிருப்பதும் ஒரு நாட்டின் நலிவு போக்கிடத் துணைபுரியாது என்பதைச் சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது!

மாநில அரசின் சார்பில் படிக்கப்பட்ட கவர்னர் உரை; மயங்கவைக்கும் மாயாஜால வித்தைகாட்டுகிறதே தவிர - மக்களின் நிலையான நல்வாழ்வை மனத்திற் கொண்டு தீட்டப்பட்ட உரையாகத் திகழவில்லை என்பது இந்த ஆட்சியாளர்களின் கடந்த கால அறிவிப்புகளுக்கு ஏற்பட்ட முடிவுகள் யாவை என்ற அனுபவத்திலிருந்து தெளிவாகிற உண்மையாகும்.

அன்புடன்

மு.க.

02-03-1987

1490. எத்தனை பட்ஜெட் வந்து என்ன பயன்?

உடன்பிறப்பே,

பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் நிதித்துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நிதிநிலை அறிக்கையைத் தரப்போகிறார் என்றதும்; ஒரு பெரும் எதிர்பார்ப்பு நாட்டில் இருந்ததில் வியப்பேதுமில்லை.

ஆனால் மார்ச் முதல் நாள் வெளிவந்த ஏடுகள் அனைத்திலும் மக்கள் மன்றத்தின் எதிரொலி என்ன என்பதைப் படித்தறிந்து கொள்ள முடிந்தது.

மத்திய அரசின் பட்ஜெட் சாமானிய மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் சலுகை எதுவும் இல்லாத பட்ஜெட் என்று பொதுமக்களின் பிரதிநிதிகள் கருத்தறிவித்தனர். கச்சா எண்ணெய்க்கு வரியை உயர்த்தியிருப்பது பொதுமக்களை பெருமளவுக்கு பாதிக்கும்.

சில வகை உணவுப் பொருள்களின் இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளதால் பாதகம் ஏற்படும்.

சிகரெட் மீதும் புகையிலை மீதும் வரியை உயர்த்தியிருப்பது சாதாரண மக்களை மிகவும் பாதிக்கும்.

வருமானவரிக்கான வருமான வரம்பு உயர்த்தப்படுமென்று மாதாந்திர சம்பளக்காரர்கள் பெரிதும் எதிர்பார்த்து; அது குறித்து எந்த அறிவிப்பும் இல்லாததால் நடுத்தர வர்க்கத்தினர் ஏமாற்றத்திற்காளாயினர்.

பட்ஜெட் வெளியான சில மணி நேரத்திற்குள்ளாகப் பொதுமக்களின் கருத்தை இவ்வாறு திரட்டி நாளேடுகள் மறுநாள் காலையில் வெளியிட்டன.

அஃதன்னியில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொருளாதார

நிபுணர்களும் - ராஜீவின் பட்ஜெட் குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு :-

இந்த பட்ஜெட் ஒரு மாயையானது! சுமார் 320 கோடி ரூபாய்க்குத்தான் வரிவிதிக்கப்பட்டுள்ளதாக தோற்றம் காட்டினாலும் கூட; பட்ஜெட் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பே 1780 கோடி ரூபாய் வரிச்சுமை மக்கள் தலையில் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என ஜனதா கட்சித் தலைவர் மது தண்டவதே கூறியிருக்கிறார்.

இது ஒரு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட்! நடுத்தரவர்க்கத்தினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் இப்படி விமர்சித்திருப்பவர் முஸ்லிம்லீக்கின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஜி.எம். பனாத்வாலா!

இது பணவீக்கத்தை ஏற்படுத்தும் பட்ஜெட்! பொருளாதார கொள்கையில் இந்த அரசுக்குள்ள சிந்தனைக் குழப்பத்தைப் பிரதிபலிக்கும் பட்ஜெட்டாகும் இது என்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வாஜ்பேயி கருத்தறிவித்துள்ளார்.

வறுமையை ஒழிக்க வழிகாணும் திட்டம் எதுவுமில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், பணவீக்கம் பெருகும்; விலைவாசி உயரும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், வெறும் வார்த்தையளவில் சோஷலிசம் என்றுரைத்து அந்தப் பக்கமே அடியெடுத்து வைக்காத பட்ஜெட் என்று தி.மு.கழகமும் - தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றன!

வளர்ந்துவரும் வேலையில்லாக் கொடுமையை சமாளிக்க இந்த பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் இல்லையென்று அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி கூறியுள்ளது.

இது, இந்த நாடு ஜீரணிக்க முடியாததும் கசப்புநிறைந்ததுமான பட்ஜெட் என்று லோக்தளப் பொதுச் செயலாளர் சத்யப்பிரகாஷ் மாளவியா தெரிவித்துள்ளார்.

விலைவாசி ஏறும் வகையில் பொதுமக்களைத் தவிக்கவிட்டுள்ள பட்ஜெட்டாகும் இது! என்று அசாம் ஆளுங்கட்சியைச் சார்ந்த தினேஷ் கோஸ்வாமி விமர்சித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணிகளுக்கு பயன்படக் கூடிய அந்நிய செலாவணியில் 15 சதவீத வரி உயர்த்தியிருப்பது வணிக

சமுதாயத்தை நேரடியாகப் பாதிக்கக்கூடியது என்று இந்திய பொறியியல் தொழில் சம்மேளனத் தலைவர் ஜிண்டால் கூறியிருக்கிறார்.

டெலிவிஷன் விலை உயர்ந்து, அந்தத் தொழிலும் இந்த பட்ஜெட்டினால் பாதிக்கப்படக்கூடும் என்று தென்னக ரேடியோ எலக்ட்ரானிக் தொழில் அதிபர்களின் சங்கத்து செயலாளர் சண்டிலியா அறிவித்துள்ளார்.

வரவு-செலவு திட்டத்தில் பெருமளவு துண்டு விழுந்திருப்பதும், வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதுமான அளவு ஒதுக்கீடு செய்யாததும், விலைவாசி உயர்வை உருவாக்கும் என்று டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா எச்சரித்துள்ளார்.

அரசு தரப்பில் செலவு செய்வது உட்பட அனைத்து செலவையும் ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர புதிய நடவடிக்கை மேற்கொள்ளா விட்டால் பட்ஜெட்டில் காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையின் காரணமாக பணவீக்கம் தவிர்க்க முடியாததாகிவிடும் என்று சி. சுப்ரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பட்ஜெட் வளர்ச்சிக்கு விரோதமானது - ஏழைமக்களுக்கு எதிரானது - எட்டாயிரம் கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது அதிர்ச்சியளிக்கக் கூடியது - இந்த பட்ஜெட் மக்களின் தலைமீது மேலும் பளுவைத்தூக்கி வைக்கக்கூடியது என்று ஆந்திர முதலமைச்சர் என்.டி. ராமராவ் நிருபர்கள் பேட்டியின் போது கூறியுள்ளார்.

ஆனால் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களோ; ஒரு பெரிய அறிக்கையேவிட்டு; ராஜீவ்காந்தியின் பட்ஜெட்டை எழுத்துக்கு எழுத்து அப்படியே வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்துள்ளார். பாராட்டுகிற நேரத்தில் - ஒரு சிறுகுறையை எடுத்துக் காட்டினாலும்; அதனால் என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற அச்சத்தில் - அடிக்கரும்பு மட்டுமல்ல; நுனிக்கரும்புக்கு மேலுள்ள தழைகூட இனிக்கிறது என்ற அளவில் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

கேரளாவில் காங்கிரசுடன் தோழமை பூண்டு தேர்தல் களத்தில் தோளோடு தோள் நிற்கின்ற இந்திய யூனியன் முஸ்லிம்லீக் கட்சியின் சார்பில் திரு. பனாத்வாலா அவர்கள்கூட;

இது ஒரு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட் - நடுத்தரமக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று கருத்துக் கூறும் உரிமையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

அவ்வளவு ஏன்; நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இப்படி வளைந்து நெளிந்து குனிந்து கும்பிட்டு இந்த பட்ஜெட்டை எழுத்து விடாமல் ஆதரித்து அறிக்கையே கொடுப்பார் என்பதை முன் கூட்டியே அறிந்துகொள்ளாத அ.தி.மு.க.வின் பாராளுமன்றக் குழுத்தலைவர் குழந்தைவேலு என்பவர்; மத்திய அரசிடமிருந்து மக்கள் நிரம்ப எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த எதையும் இந்த பட்ஜெட் தரவில்லை. கச்சா எண்ணெய் மீது வரியை உயர்த்தியிருப்பது ஏழை மக்களை மிகவும் பாதிக்கும் என்று கருத்தறிவித்து அதனை எல்லா ஏடுகளும் வெளிவிட்டு விட்டன!

ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களோ; மத்திய அரசு - தமிழகத் திட்டங்கள் பலவற்றைக் கிடப்பிலே போடுகிற அளவுக்கும், யானைப்பசிக்குச் சோளப் பொரி போல மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் கூடத் தனது கண்டனத்தையல்ல; மனக்குறையைக் கூட வெளியிட முடியாதவராக - அதே சமயம்; தனது கட்சி பாராளுமன்றக் குழுவின் சார்பாக பட்ஜெட் குறித்து வெளியிட்ட கருத்துக்கு முற்றிலும் மாறாக - ஒரு அட்சரம் கூடத் தவறில்லாத அருமையான பட்ஜெட் என்று ஆராதனை செய்துள்ளார் என்றால் சட்டவிரோதமாகப் பதவியில் இருப்பதற்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்த - செய்து வருகிற - மத்திய அரசுக்கு அவர் காட்டுகிற நன்றிவிசுவாசம் இது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்!

ஏழைகளின் பட்ஜெட் இது என்று வர்ணிக்கிறார் எம்.ஜி.ஆர்.!

ஆமாம்; 45 வகையான வைரங்களுக்கும் தங்க நகைகளுக்கும் சுங்கத் தீர்வை 35 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது ஏழைகளுக்காகவே சிந்தித்துச் செய்யப்பட்ட காரியமல்லவா?

கச்சா எண்ணெய் வரி உயர்வும் - சிகரெட் - புகையிலை - வரி உயர்வும்; சாதாரண நடுத்தர மக்களைப் பாதிக்காமல் - மாளிகை வாசிகளைத் தான் பாதிக்குமென்று எம்.ஜி.ஆர். சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்!

உறவுக்கு மாத்திரம்தான் கை கொடுப்பேன்; உரிமைக்குக் குரல் கொடுக்க மாட்டேன் - அதுவும் உதைத்தாலும் விரட்டினாலும் அந்த உறவை இழக்க மாட்டேன் என்று சபதம் செய்து கொண்டல்லவா; எம்.ஜி.ஆர். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

அதனால்தான் குறை குடத்தைக் கூட நிறைகுடமெனத் தூக்கி வைத்துக் கொண்டு அவர் கூத்தாடுகிறார்!

உடன்பிறப்பே; உதட்டளவு சமதர்மப் பேச்சு; ஒன்றுக்கும் உதவாது! அதனைச் செயல்படுத்தும் அரசுகள் - மத்தியிலும் மாநிலங்களிலும் அமைந்தாலன்னியில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற பாரதியின் கனவு நிறைவேறப் போவதில்லை!

இதை மறந்துவிட்டு எத்தனை பட்ஜெட்டுகளை - யார் தயாரித்தாலும்; பயன் எதுவும் விளையப் போவதில்லை!

அன்புடன்

மு.க.

03-03-1987

1491. பொறுப்போடு கடமையாற்றும் பொன்னான நேரம் குறையலாமோ?

உடன்பிறப்பே,

சட்டப்பேரவை காலை ஒன்பது மணியிலிருந்து பிற்பகல் ஒன்றரை மணி வரையில் கூடியபோது தினமும் குறைந்த பட்சம் நாலரை மணி நேர விவாதம் நடைபெற்று வந்தது. தற்போது காலை பத்து மணியிலிருந்து பிற்பகல் இரண்டு மணி வரை என்று மாற்றியமைக்கப்பட்டு விட்டதால் மக்கள் பிரதிநிதிகள் சட்டப் பேரவையில் ஆற்றவேண்டிய கடமையின் நேரம் நாலரை மணியிலிருந்து நான்கு மணி நேரமாகக் குறைகிறது

என்று தினமணி 3.3.87 சென்னைப் பதிப்பு முதல் பக்கத்திலேயே செய்தி வெளியிட்டு - தனது கவலையைத் தெரிவித்துவிட்டு;

சட்டப்பேரவை அடிக்கடி கூடவேண்டும்; கூட்ட நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்று சட்டப் பேரவை அங்கத்தினர்கள் ஒருபுறம் கோரிவரும் நிலையில் பேரவைக் கூட்ட நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது

என்றும் தனது அங்கலாய்ப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

சட்டப்பேரவையில் அலுவல் ஆய்வுக்குழு கூடித்தான் இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கும். அரைமணிநேரம் விவாதகாலம் குறைந்து, மக்களின் பிரதிநிதிகள் ஆற்றவேண்டிய கடமைக்குக் குந்தகம் ஏற்பட்டுவிட்டதேயென்று கவலைப்படுவதில் நியாயம் இருந்தாலும் கூட - அதனால் கப்பல் மூழ்கிவிட்டதைப் போன்று கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கண்கலங்க வேண்டிய அளவுக்கு துயரச்செய்தியாக இதனை யாரும் கருதிடத் தேவையில்லை. 1977 முதல் 1984 வரையில் முதலமைச்சர் நன்கு பேசி - நன்றாகச் செயல்பட்ட

அந்தக் காலகட்டத்தில் கூட, முதலமைச்சர் பொறுப்பில் உள்ள பல இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கேள்வி நேரத்தில் ஓரிரு தடவை தவிர மற்ற எந்தச் சமயத்திலும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பதில் அளித்ததாக வரலாறே இல்லை! இப்போது அது குறித்து சொல்லவே வேண்டியதில்லை!

அவர் உடல்நலத்தோடு இருந்த அந்தக் காலத்திலேகூட - கேள்விநேரம் எனப்படும் சட்டமன்றத்து முக்கியமான நிகழ்ச்சியில் - அந்த ஒரு மணி நேரம் இருந்தார் என்றோ; அவரது இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார் என்றோ; இன்னும் சொல்லப்போனால் அவரது இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகள் வினாத்தாளில் பெரும்பாலும் இடம் பெற்றன என்றோ எவராலும் கூறமுடியாது!

அந்தோ; நேரம் குறைந்துவிட்டதால் மக்கள் பிரதிநிதிகள் கடமையாற்றும் வாய்ப்பு குறைகிறது எனக் கவலைப்படும் அதே நேரத்தில் - அவையின் அலுவல் நேரம் நாலரை மணியாக இருந்த அந்தக் காலகட்டத்தில்; மக்களின் பிரதிநிதி எனப்படும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடமையாற்றும் பொறுப்பை எப்படியெல்லாம் தட்டிக்கழித்துள்ளார் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டுமல்லவா?

முதலமைச்சராக காமராஜர் அவர்கள் இருந்த போதும் - பக்தவத்சலம் அவர்கள் இருந்த போதும் - அண்ணா அவர்கள் இருந்த போதும், நானிருந்த போதும் - அவை தொடங்குவதற்கு இரண்டொரு நிமிடங்களுக்கு முன்பே வந்தமர்ந்து அவையின் அலுவல்கள் முடியும் வரையில் அவையில் இருந்து விட்டுத்தான் செல்வது வழக்கமாக இருந்தது!

இப்போது முதலமைச்சர் கோட்டைத் தலைமைச் செயலகத்துக்கு வருவதே ஒரு செய்தியாகி விடுகிறது; அதுவும் எட்டுகாலம் தலைப்புக் கொட்டை எழுத்துச் செய்தி!

முதலமைச்சர் மனுக்களை பெற்றுக் கொண்டார் என்பதே வானொலி, தொலைக்காட்சி, நாளேடுகளில் அதியச் செய்தியாக வெளி வருகிறது!

மக்கள் பிரதிநிதிகள் கடமையாற்றுவது குறித்தும் அதே நாளில் தினமணி சென்னைப் பதிப்பு ஒரு பெட்டிச் செய்தியை முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது. அது வருமாறு :-

இ.காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் மதுவிலக்குக் கொள்கையில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று குற்றம் சாட்டினார்.

வேஷம் போடுவதற்குக் கூட அழகான முகம் வேண்டும். அதிலும் இரட்டைவேஷம் போட மிக அழகான முகம் இருக்க வேண்டும். அந்த முகம் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்குத் தான் இருக்கிறது. காங்கிரஸ் அங்கத்தினருக்கு ஒரு வேஷம் போடுவதற்குக்கூட அழகான முகம் இல்லை என்று பலத்த சிரிப்புக்கிடையே அ.தி.மு.க. உறுப்பினர் சொன்னார்.

உடன்பிறப்பே; கள் சாராயக் கடைகளை மூடிவிட்டு - அதே சமயம் ஆயிரக்கணக்கில் பிராந்தி ஒயின்ஷாப்புகளைத் திறந்து - மதுவிலக்குக் கொள்கையில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று விமர்சித்தார் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்.

ஆனால் ஆளுங்கட்சி உறுப்பினர் உடனே முகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி; காங்கிரஸ் உறுப்பினர் முகம் அழகாக இல்லை என்றும் அது வேஷம் போடத் தகுதியற்றது என்றும் கூறினார்.

இந்தப் பதில் கேட்டு சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

மக்களின் பிரதிநிதிகள் அவையில் ஆற்றிடும் இத்தகைய பொறுப்புவாய்ந்த கடமைகளை நீண்ட நேரம் ஆற்றிட முடியாமல் அரை மணி நேரம் குறைத்து விட்டார்களே என்று ஆதங்கப்படுவது ஒருவகையில் நியாயந்தானே!

அன்புடன்

மு.க.

04-03-1987

1492. மத உணர்வும்;
மாநில உரிமை உணர்வும்!

உடன்பிறப்பே,

அரசியலில் மதம் நுழையக் கூடாது! அதைப் போலவே மாநில உணர்வுகளும் கூடாது!

இப்படியொரு கருத்தை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அடிக்கடி கூறி வருகிறார்.

சஞ்சய் காந்தி விமான விபத்தில் உயிரிழப்பதற்கு முன்பு வரையில் அரசியல் பக்கம் தலை வைத்துப் படுக்காமல் தானுண்டு தனது உத்தியோகமுண்டு என திறமை வாய்ந்த விமானியாகச் செயல்பட்ட ராஜீவ் அவர்களுக்கு; இப்போது அவர் கூடாது என குரல் கொடுக்கிற இரண்டு விஷயங்களிலும் காங்கிரஸ் மகாசபையும் சரி; அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியும் சரி; எத்தகைய அணுகுமுறையைக் கொண்டிருந்தன என்ற வரலாறு தெரிந்திருக்க நியாயமில்லை.

சரி; கடந்த காலம் பற்றி அவர் தெரிந்து கொள்ளும் வாய்ப்போ - அல்லது தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறையோ - இல்லாமலிருந்திருந்தாலும் கூட; இப்போது அவரது ஆட்சிக் காலத்திலேயே கூடாது என்று அவர் கூறுகிற அந்த இரண்டு விஷயத்திலும் அவரது கட்சி ஒரு நாணயமான போக்கைக் கடைப்பிடித்ததாக அவரால் அடித்துக் கூறமுடியுமா என்றால் நிச்சயமாக முடியாது!

ஒரிசாவில் கணதந்திரபரிக்ஷத் என்ற மதவாத அமைப்புடன் காங்கிரஸ் கட்சி தேர்தல் உடன்பாடு செய்து கொண்ட கடந்த காலத்தை வேண்டுமானால் ராஜீவுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்; காஷ்மீரில் பரூக் அப்துல்லாவுடனும் - அவரது மாநிலக் கட்சியான தேசிய மாநாட்டுக் கட்சியுடனும் இப்போது

ராஜீவின் காங்கிரஸ் கட்சி கொண்டுள்ள உறவும், தேர்தல் உடன்பாடும் மதமே கலக்காத அரசியல் என்றும், மாநில உணர்வே என்றும் ராஜீவ் காந்தி அவர்களால் வாதிட முடியுமா?

ஒருவேளை அப்படி அவர் வாதிட்டாலும் அந்த வாதத்தில் அவர் வெற்றிபெற முடியுமா? நேற்றைக்கு பரூக் அப்துல்லாவின் அமைச்சரவையைக் கவிழ்த்து அவரது மைத்துனர் ஷாவை முதலமைச்சராக்க காங்கிரஸ் எம்.எல்.ஏக்களை முட்டுக்கொடுக்க வைத்தபோது; பரூக் அப்துல்லா மதவெறியராகவும் - தேசவிரோதியாகவும் - பிராந்திய உணர்வு கொண்டவராகவும்; இந்திரா காங்கிரஸ் தலைமையினால் விமர்சிக்கப்பட்டார்! இன்றைக்கோ; ஷாவைக் கவிழ்த்துவிட்டு - பரூக் அப்துல்லாவை காஷ்மீர் முதல்வராக்க மிக மும்முரமாகப் பின்னணியில் நின்றதோடு; இப்போது நடக்க இருக்கும் தேர்தலிலும் பரூக்கின் கட்சியோடு உடன்பாடு செய்து கொண்டு பரூக் அப்துல்லாவை பத்தரைமாற்றுத் தங்கமென வர்ணிக்கிறது காங்கிரஸ் கட்சி!

மேற்கு வங்கத்தில் டார்ஜலிங் பகுதியில் சுபாஷ் கெயிசிங் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு கோர்க்கா மாநிலம் அமைக்க வேண்டுமெனப் போரிடுவது தேசவிரோதமானது எனக் கூறிட முன்வராமல்; அந்த வட்டார உணர்வுக்கு வக்காலத்து வாங்கி - மாநில அந்தஸ்து கோருவது தேசவிரோதமானதல்ல என்று பிரதமரால் வாதிட முடிகிறது - காரணம் மேற்கு வங்க மாநிலம் மார்க்சிஸ்ட் கட்சியின் ஆட்சியின் கீழ் இருப்பதால்!

திரிபுராவில் மார்க்சிஸ்ட் கட்சியை எதிர்க்க உபஜாதி சமிதி என்ற திரிபுராவில் உள்ள ஒரு வட்டாரக்கட்சியுடன் இ.காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு கொண்டதை ராஜீவ் காந்தியினால் வசதியாக மறந்து விடமுடிகிறது.

மாநில சுயாட்சி கேட்பதில் தி.மு.கழகத்தைப்போலவே குரல் கொடுத்த அகாலிதளத்தை - ஆம்; பஞ்சாப் மாநில உணர்வுடன் இயங்கும் அந்தக் கட்சியைப் பிளக்கவும் - ஒடுக்கவும், அன்றையதினம் இந்திரா காங்கிரசுக்கு பிந்தரன்வாலே என்ற சீக்கியத் தீவிர மதவாதி தேவைப்பட்டார்! அவரை பீடத்தில் அமர வைத்து டெல்லி வீதியிலே ஊர்வலம் விட்ட போது; சஞ்சய் காந்தி அவரை வணங்கி வரவேற்ற செய்திகள் எல்லாம் இன்னமும் நினைவில் நிழலாடிக் கொண்டுதானிருக்கின்றன!

அந்தப் பிந்தரன்வாலேயின் ஆதரவும் தேர்தல் உறவும் 1980-இல் இந்திரா காங்கிரசுக்குப் பஞ்சாபில் தேவைப்பட்டது! அன்று அகாலிதளத்தை வீழ்த்த; மதவாதத்தை துணைக்கழைத்ததும் இந்திரா காங்கிரஸ்தான். இன்று அரசியலில் மதம் நுழையக் கூடாது என்று மார்தட்டி; அகாலிதள ஆட்சியைக் கைப்பற்ற துணைநிற்பதும் இந்திரா காங்கிரஸ்தான்!

லோங்கோவாலுடன் ராஜீவ் காந்தி செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன ஆயிற்று? ஏன் அப்படி ஆயிற்று? சண்டிகார் தலைநகரம் பஞ்சாபுக்கு என்றும், பஞ்சாபில் உள்ள இந்தி பேசும் சில கிராமப்பகுதிகள் அரியானாவுடன் இணைக்கப்படுவது என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டதா இல்லையா?

மொழி, வட்டார உணர்வுகள் எல்லாம் குறுகிய மனப்பான்மை கொண்டவை என்று இ.காங்கிரஸ் கட்சி செய்யும் வாதத்தில் நேர்மை இருக்குமானால் இந்தி பேசும் பகுதிகள் பஞ்சாபில் சில இருந்துவிட்டுப் போகட்டுமென்று விட்டுக் கொடுக்க மனமின்றி; அதிலே தகராறு செய்து நிலைமையை இந்த அளவுக்கு மோசமாக்கிடக் காரணமாக இருந்தது அரியானா அரசுதானே!

அரியானாவில் இருப்பது இந்திரா காங்கிரஸ் அரசு தானே?

அங்கு மட்டும் மொழி உணர்வு - வட்டார உணர்வு வரலாமா?

ஆயிரம் சதுர அடிகள் அரியானாவில் இருந்தால் என்ன; பஞ்சாபில் இருந்தால் என்ன; என்று தேசியப் பரந்த நோக்கம் அரியானாவின் இந்திரா காங்கிரஸ் அரசுக்கு ஏற்படாதது ஏன்?

ஒருவேளை இந்தி மொழிக்காரர்கள் என்றால் மொழி உணர்வு - வட்டார உணர்வு - இவற்றுக்கெல்லாம் விதிவிலக்கோ?

மிஜோரம் லால்டெங்கா வட்டார உணர்வுடன்தானே செயல்பட்டார்! அந்த உணர்வை ஊக்கப்படுத்துகிற வகையில்தானே - அவரையே முதலமைச்சராக ஆக்கி; அவருடன் கூட்டணி ஆட்சி நடத்தியது இந்திரா காங்கிரஸ்!

இன்று மிஜோரமில் இந்திரா காங்கிரஸ் தோல்வியைத் தழுவிக்கொண்டது! ஆனால் தேர்தல் நேரத்தில் ராஜீவ் காந்தி அந்தச் சிறிய மாநிலத்தில் பிரச்சாரம் செய்தபோது என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தார்? மிஜோரமின் தனித்தன்மையும், அந்த மாநில மக்களின் கலாச்சாரமும் பாதுகாக்கப்படும் என்று

ராஜீவ் கூறவில்லையா? மாநில அந்தஸ்து தரப்படும் என கூறவில்லையா? அந்தப் புதிய மாநிலத் தொடக்கவிழாவுக்கு நாள் குறிக்கவில்லையா? ராஜீவ் அதில் கலந்துகொள்ள வில்லையா?

மிஜோரம் போலவே இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனியாய் மொழி - இனம், கலாச்சாரம் என்று வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுமே தவிர; வேற்றுமைகளை வீழ்த்துகிறேன் என்று தேசிய இனங்களின் மொழி, கலாச்சாரம், மாநில உரிமைகள் மீது கை வைத்தால் ஒருமைப்பாடு என்பது வெறும் கனவாகிவிடும் என்பதும் நாட்டின் ஒற்றுமையின் மீது அக்கறையிருப்போர் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்!

கேரளாவில் இந்திய யூனியன் முஸ்லிம்லீக் - இந்திரா காங்கிரசுடன் உறவு கொண்டிருக்கும் போது; அந்தக் கட்சி சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற இயக்கம் என்று இந்திரா காங்கிரசார் விளக்கமளிப்பதும்; தங்களுடன் உறவு இல்லாதபொழுது - அது ஒரு மதவாத இயக்கம் எனக் குற்றம் சாட்டுவதும் கடைந்தெடுத்த சந்தர்ப்ப வாதமல்லவா?

இந்திய யூனியன் முஸ்லிம்லீக்குடன் தி.மு.கழகம் தேர்தல் உறவு கொண்டிருக்கும் நிலையிலும் - இடையில் ஒருநேரம் அந்த உறவில் தொய்வு ஏற்பட்டிருந்த நிலையிலும் - அது சிறுபான்மை மக்களின் நலனுக்காகக் குரல் உயர்த்துகிற இயக்கம் என்பதுதான் கழகத்தின் கணிப்பே தவிர; உறவு இருந்தால் மதவாதக் கட்சியில்லை - உறவு இல்லாவிட்டால் மதவாதக் கட்சி என்ற இரட்டை நிலையைக் கழகம் என்றைக்கும் எடுத்ததில்லை!

தி.மு.கழகம் ஒரு மாநிலக் கட்சியாக இருந்தாலும் - இந்தியாவின் ஒருமைப்பாடு; பாதுகாப்பு; இவற்றில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்ட இயக்கம் என்று தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் தேர்தல் உடன்பாடு இருந்த நேரத்தில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே பலதடவை குறிப்பிட்டதில்லையா?

அரசியலில் மதம் நுழையக் கூடாது என்பதை நூற்றுக்குநூறு கழகம் ஏற்றுக் கொள்கிறது! ஆனால் மதம் - கடவுள் - சாமியார்கள் - யாகம் - வழிபாடு - இவற்றையெல்லாம் பயன்படுத்தி, விளம்பரம் செய்து, பிரச்சாரம் நடத்தி, மக்களின் ஒரு பகுதியினரை

ஏமாற்றி வாக்குகளைப் பறிக்கும் சூழ்ச்சி இன்று அரசியலில் சர்வ சாதாரணமாகி விட்டதா இல்லையா? இதற்குக் காங்கிரசும் உடந்தையாக இருக்கிறதா இல்லையா?

ஒன்றை மட்டும் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்; அரசியலில் மதம் கூடாது என்பதும் வட்டார உணர்வு கூடாது என்பதும் ஒரே விதமாக ஏற்கக் கூடிய கருத்துக்கள் அல்ல!

அரசியலில் மதம் நுழையக் கூடாது; ஆமாம் - சரி; ஏற்றுக்கொள்கிறோம்!

வட்டார உணர்வு கூடாது என்பது அப்படியல்ல!

இந்தி ஆதிக்கத்தைப் பரப்புவோம்; அதனை எதிர்த்தால் அது வட்டார உணர்வாகக் கருதப்படும்! காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரையில் ஒன்று போல் இருக்க வேண்டுமென்கிறோம்; தனித்தனி மொழிகளும் கலாச்சாரங்களும் உள்ள மக்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் - ஒன்றுபோல் இருப்பது இயலாது; என்று கூறினால் அது வட்டார உணர்வாகக் கருதப்படும்.

இது இந்திரா காங்கிரசின் வாதம்; இதனை நாம் ஏற்பதற்கில்லை!

அரசியலில் மதம்

நுழையக் கூடாது!

வட்டார உணர்வு

கூடாது!

இந்தக் கருத்தில் இந்திரா காங்கிரஸ் நிலையான கொள்கையோ - செயல்பாடோ கொண்டதா என்றால் கடந்த காலத்திலும் சரி; நிகழ்காலத்திலும் சரி; முன்னுக்குப் பின் முரண்பாடுகள்தான் ஏராளம்!

அன்புடன்

மு.க.

06-03-1987



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022